
கலைஞரின்
கடிதங்கள்



36

06.07.2003 - முதல்
19.01.2004 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 36

06.07.2003 - 19.01.2004

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

Gowra Puthaga Maiyam

9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

Available @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

Gowra Agencies

No : 1 Samy Street,
Sai Baba Temple Back Side
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

Kalaignarin Kadithangal


விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : கலைஞர்
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

Author : Kalaignar
Editors:
K. Shanmuganathan M.com BGL
Dr K. Rajamanikam IAS
Subject : Epistle
© Rights :
Publisher :
S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Edition :
1st Edition - 2022
Published @ :
Seethai Pathippagam
6A/4, Parthasarathi Samy Street,
Triplicane,
Chennai-600 005.
Pages : 400
Typeset by : JaiJeena
Printed @ :
Classic Printers, Chennai - 2.
ISBN :

A2243
கி.894-8116
கருணா.36

தி.மு.க. அறக்கட்டளை
பொதுநிதியம்
அண்ணாஅறிவாலயம்
சென்னை-18



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2941. “சாணக்கியன் ” சொல்லே சாட்சி!	06-07-2003	23
2942. அயோத்திப் பிரச்சினை!	08-07-2003	27
2943. இது உறுதிமொழி! இழந்ததைப் பெறுவோம்!	10-07-2003	30
2944. வேடிக்கை - விபரீதம் - விஷம மூளை !	12-07-2003	37
2945. தேர்தல் நிதியும், என் சுற்றுப்பயணத் திட்டமும்!	14-07-2003	41
2946. வெந்த புண்ணில் வேல் !	15-07-2003	46
2947. தனி மனிதன் வாழ்வல்ல அவர் வாழ்வு!	16-07-2003	50
2948. பொன்மொழியும் பொய்மொழியும்!	17-07-2003	55
2949. கா.கா. வின் கதைகளுக்கு மு.க.வின் விளக்கம்!	19-07-2003	59
2950. திரித்துக் கூறாதீர் ; திருத்திக் கொள்வீர்!	20-07-2003	64
2951. சொன்னதைச் செய்தோம்; சொல்வதைச் செய்வோம் !	24-07-2003	69
2952. பணம்படைத்த பழைய வலம் பக்கிரி!	2-8-2003	74
2953. அய்யத்தைப் போக்க வேண்டியது பிரதமரின் கடமை!	03-08-2003	77

2954. கடமை தொடரக் காஞ்சி வழி நடப்போம்!	05-08-2003	82
2955. யார் வைத்த தீயால் வீடு பற்றி எரிந்தது?	8-08-2003	86
2956. அவதாரமா அல்லது மனிதனா?	10-08-2003	93
2957. தமிழ் செம்மொழியென அறிவிக்கத் தயக்கம் எதற்கு?	11-08-2003	96
2958. பூட்டப்பட்ட சீரணி அரங்கில் புன்மைச் செயல் எப்படி?	12-08-2003	100
2959. ஒரு நாடகம் நடக்குது நமது நாட்டிலே!	13-8-2003	104
2960. விழுப்புரம் அழைக்கிறது! விரைந்து தயாராகுக!	15-8-2003	107
2961. விளைச்சலும் புகைச்சலும்!	16-8-2003	111
2962. உலகத் தமிழ் இணைய மாநாடு, ஒரு பார்வை!	23-8-2003	114
2963. தமிழகம் கிழக்கு நோக்கிக் காத்திருக்கிறது!	28-09-2003	119
2964. பாஷாணத்தில் விளைந்த பயிர்!	29-8-2003	124
2965. விமோசனமா? அல்லது மேலும் விசனமா?	30-08-2003	126
2966. காந்திய வழியில் கையைச் சுட்டுக் கொண்டவன்!	31-8-2003	131
2967. பொன்முடி அழைக்கிறார்; புறப்பட்டு வருக!	09-09-2003	134
2968. வரையறுத்தது; வழங்கியது; வரவேண்டியது!	11-09-2003	139

2969. மலையேறிய பிறகும் சாமியாடும் மாமி!	15-09-2003	144
2970. மகா ராணியும், மகா ஞானியும்!	19-09-2003	149
2971. தாயும் நானனே, தந்தையும் நானே, இது தந்திரம்தானே!	20-09-2003	154
2972. தொடர்பணி இருக்கிறது; தொடங்கிடுவோம்!	24-09-2003	159
2973. இனிய நாள் - இரு விழாக்கள்!	26-09-2003	163
2974. முதல்வர் முதலில் சொன்னதை மீண்டும் படியுங்கள்!	4-10-2003	167
2975. தெரிந்த உண்மையைத் திட்டமிட்டு மறைக்காதீர்!	5-10-2003	172
2976. கருவூலம் சொல்லும் கடந்தகால வரலாறு!	6-10-2003	177
2977. உன் உழைப்பை நினைத்து ஓராயிரம் வாழ்த்து!	12-10-2003	182
2978. காவிரிப் பிரச்சினை; காதில் பூ சுற்றமுடியாது!	16-10-2003	187
2979. முன்னுரையாக எழுதிய என்னுரை!	23-10-2003	192
2980. வாரியார் வழங்கும் கம்பன் கவிநயம்!	24/10/2003	198
2981. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 1 தமிழுக்கு முதன்மையிடம்; தடைக்கல்; ஏன்? எதனால்?	26-10-2003	203

2982. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 2 தடைக்கற்களைத் தாண்டி தமிழ் வளர்ப்போம்!	27-10-2003	209
2983. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 3 மத்திய ஆட்சி மொழி - செம்மொழி- மாறன் தீர்மானம்!	28-10-2003	215
2984. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 4 நடப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும்!	29-10-2003	222
2986. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 5 குதிரை; குழியும் பறிக்கிறது!	30-10-2003	229
2986. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 6 களமேவிடத் தயாராகின்றனர் கழகக் கண்மணிகள்!	31-10-2003	236
2987. அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பரே!	5-11-2003	242
2988. தள்ளாடுவது யார்? தடுமாறுவது யார்?	7-11-2003	249
2989. பழனிசாமியும் ஜெயலலிதாவும் படிப்பதற்காக!	08-11-2003	255
2990. நவ. 12. மாநிலமுழுதும் மனிதச் சங்கிலி!	09-11-2003	261
2991. கூண்டு கண்டேன் ; குதூகலம் கொண்டேன்!	09-11-2003	264
2992. மகாசமுத்திரமாகட்டும்; மனிதச் சங்கிலி!	10-11-2003	268
2993. பாவம் ஓரிடம்; பழி ஓரிடமா?	11-11-2003	276

2994. காட்டாட்சி வீழ்ந்திட கரம் கோத்து நிற்போம்	12-11-2003	281
2995. மகா சமுத்திரமல்ல; மகாமகா சமுத்திரம்!	14-11-2003	287
2996. உண்மையில் கடவுள் உண்டெனில்.....!	26-11-2003	293
2997. உன்னால் முடியுமா ? முடியவே முடியாது !	27-11-2003	297
2998. நீதிமன்றம் சென்று வந்தேன்!	28-11-2003	300
2999. பா.ஜ. க. அறிக்கையும் தி.மு.க. கருத்தும்!	29-11-2003	304
3000. அனைத்துப் பிரிவு மக்களுக்காக ஓர் அறப்போர்!	3-12-2003	310
3001. திருமயத்துத் தீரர்கள்- திருவிடத்து வீரர்கள்!	5-12-2003	314
3002. இமயமளவு எழுதிக் குவிக்க வேண்டும்!	06-12-2003	317
3003. அறிவாயுதம் ஏந்தி அகிலத்தை வென்றிடுக!	07-12-2003	321
3004. உச்ச மன்றம் உரைத்தது! உறைத்திட வேண்டாமா?	08-12-2003	326
3005. விண்முட்ட முழங்குக! வீரமாக, தீரமாக, திடமாக!	10-12-2003	331
3006. எங்கு சுற்றினாலும் அங்குதான் வருவோம்!	11-12-2003	335
3007. உனக்கு என் வாழ்த்துகள்!	12-12-2003	340
3008. மாசு துளியும் வராமல், மாவட்டங்களில், வட்டங்களில் மறியல் அறப்போர்!	14-12-2003	343

3009. மீண்டும் உடன்பிறப்பே, உன்னை வாழ்த்துகிறேன்!	15-12-2003	347
3010. உண்மையான தம்பிகள் அனைவருக்கும் பொருந்தும்!	23-12-2003	348
3011. உடன்பிறப்புகளின் மடல்கள் உணர்த்துவதென்ன?	24-12-2003	352
3012. விருதுநகர் - நமது அணியின் வெற்றித் திருநகர்!	27-12-2003	358
3013. பத்திரிகை சுதந்திரமும் பத்திரிகா தர்மமும்!	29-12-2003	362
3014. தோள் உயர்த்தி, சூள் உரைப்போம்!	2-1-2004	366
3015. வளர்பிறை எழுத்தழகர்கள் வளர்க வாழ்க!	09-01-2004	370
3016. உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!	15-1-2004	375
3017. தமிழ் இயக்கம் வளர்த்த தன்மானச் சுடர்!	17-1-2004	378
3018. அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்த கலைப்புரட்சி!	18-01-2004	382
3019. சமுதாய விழிப்புணர்வும், சமத்துவ சமதர்மமும்!	19-1-2004	392

2941. "சாணக்கியன்" சொல்லே சாட்சி!

உடன்பிறப்பே,

இன்று 5-7-2003 தேதியிட்ட 'தினத்தந்தி' இதழில் மூன்றாம் பக்கத்தில் ஒரு படமும்; படத்துடன் ஒரு கருத்துரையும் வெளியிடப்பட்டுள்ளது. "சாணக்கியன் சொல்" என்ற அந்த இதழின் வழக்கமான தலைப்புடன் "அண்ணாந்து படுத்தபடி எச்சில் துப்பமாட்டான் புத்திசாலி" என்றும் அந்தப் படத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அதைவிடப் பாராட்டத்தக்க அம்சம் என்னவென்றால் அந்தப் படத்தையொட்டி; வெளியிடப்பட்டுள்ள ஜெயலலிதாவின் திருவள்ளூர் அரசு விழா பேச்சு இடம் பெற்றிருப்பதுதான்.

தெரிந்து செய்திருக்கமாட்டார்கள்; ஆனால் அவர்கள் எதார்த்தமாக செய்தது மிகப் பொருத்தமாக அமைந்து விட்டது.

"மல்லாந்து படுத்துக்கொண்டு, மார்பில் எச்சிலை துப்பிக் கொள்கிறான்" என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. -

அதாவது ஒருவன்; அவன் செய்த குற்றங்களையே; அல்லது செய்து வரும் குற்றங்களையே; தன் எதிரியின் மீது சுமத்தி - அதை ஊரார் புரிந்து கொண்டு - அவர்கள் அவனையே எள்ளி நகையாடுவதற்கு இடம் கொடுத்து விடுவான். அதைத்தான் "மல்லாந்து படுத்துக் கொண்டு மார்பிலே எச்சில் துப்புவது" என்று கிராமியப் பழமொழி கூறிக் கேலி செய்வார்கள்.

அதையே "தினத்தந்தி" சாணக்கியன் சொல்லில்; "அண்ணாந்து படுத்தபடி எச்சில் துப்பமாட்டான் புத்திசாலி" என்று வெளியிட்டிருக்கிறது.

இதோ அந்தப் படமும் படத்துடன் இணைந்த கருத்துரையும் காண்க:

படத்துக்குப் பக்கத்தில்தான் ஜெயலலிதா திருவள்ளூர் அரசு விழாவில் பேசிய பேச்சின் ஒரு பகுதி பளிச்சென வெளியிடப்பட்டிருக்கிறது.

"நாம் திட்டினால் இந்த உலகம் நம்மைத் திட்டுகிறது. நாம் வாழ்த்தினால் இந்த உலகம் நம்மை வாழ்த்துகிறது. முதிர்ந்த வயதிலும் இதைக் கூடத் தெரிந்து கொள்ளாத தலைவர்கள் இன்றும் இருக்கிறார்கள்"

இப்படித் தன்னுடைய பேச்சைத் துவக்கிய ஜெயலலிதா; தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூறிய குறை குற்றங்களுக்கு நானும் ஒவ்வொன்றாகப் பதில் தருகிறேன்.

"அந்த முதிர்ந்த வயதுத் தலைவர்கள்..... நீதிமன்றம் போனால் நீதிபதிகள் சரியில்லை என்பார்கள்"
(இது ஜெயலலிதா பேச்சு)

சட்டமன்றத்திலேயே நீதிபதிகளைப் பற்றி இதே ஜெயலலிதா, முதலமைச்சர் என்ற நிலையில் 2-9-2001 அன்று என்ன பேசினார்?

"உயர்நீதிமன்றம், நிலக்கரி இறக்குமதி செய்ததில் அளித்த தீர்ப்பை ரத்து செய்து விட்டு, மீண்டும் வழக்கை விசாரிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது, இந்த உத்தரவை எப்படி பெற்றார்கள்? தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பெற்றார்களா என்பதை அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும்"

இப்படி முதல் நாள் தவறாகப் பேசிவிட்டு மறுநாள் விளக்கம் என்ற பெயரால்; அதுவும் தானே வலிய முன் வந்து தன்னிலை விளக்கம் ஒன்றை எழுதிப் படிக்கவில்லையா?

முதிர்ந்த வயதுத் தலைவர்கள் நீதிமன்றம் சென்று நீதிபதிகள் சரியில்லை என்று சொன்னதற்கு ஜெயலலிதா, என்ன ஆதாரம் காட்டுகிறார்?

வாலிப வயதுடைய ஜெயலலிதா அல்லவா நீதிபதிகளை வம்புக்கிழுத்துவிட்டு மறுநாள் தன்னிலை விளக்கம் தந்து தடுமாறியவர்!

அடுத்து;

"அந்த முதிர்ந்த வயதுத் தலைவர்கள் பேட்டி கொடுத்தால் பத்திரிகையாளர்கள் சரியில்லை என்பார்கள்"
(இதுவும் ஜெயலலிதா பேசியதுதான்)

உடன்பிறப்பே,

எந்த முதிய தலைவராவது பத்திரிகையாளர்களை ஜெயலலிதாவைப் போல் என்றைக்காவது அலட்சியப்படுத்தியது உண்டா? அவர்களுக்கு ஆங்கிலமும் தெரிய வில்லை. தமிழும் தெரியவில்லையென்று ஜெயலலிதா கிண்டல் செய்ததுபோல் செய்தது உண்டா? அவர்களைக் கால் கடுக்க நிற்கச் செய்து காத்திருந்தவர்களைக் கடைசியாகப் பேட்டி இல்லை என்று கூறி காக்கை குருவிகளை விரட்டியது போல் விரட்டியதாவது உண்டா?

எந்த முதியவர் ஆட்சியிலாவது பத்திரிகையாளர்கள், பத்திரிகைகள் மீது இரண்டே ஆண்டுகளில் முப்பதுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடுத்தது உண்டா?

எந்த முதியவர் ஆட்சியிலாவது எந்தப் பத்திரிகை யாளரையாவது பொடா போன்ற கொடிய சட்டத்தின்கீழ் சிறையிலே அடைத்து வைத்தது உண்டா?

எந்த முதியவராவது "பத்திரிகைகள் மீது நான் என்றைக்கும் நம்பிக்கை வைத்ததில்லை, இப்போதும் வைக்கவில்லை" என்று பேரவையிலேயே சொன்னதுண்டா?

அடுத்து,

"மருத்துவமனைக்குப் போனால் டாக்டர்கள் சரியில்லை என்பார்கள். வெளியே வந்தாலோ மருத்துவமனையே சரியில்லை என்பார்கள்"

(இதுவும் ஜெயலலிதா பேச்சுதான்)

"அய்யோ நானிருந்த மருத்துவமனையில் கபாலி கோயில் பிரசாதம் என்று ஒரு பொட்டலத்தைக் கொடுத்து - அதில் விஷத்தைக் கலந்து கொடுத்தார்கள், அதைப் பூனை சாப்பிட்டு செத்து விட்டது"

இப்படிச் சொல்லி மக்களை ஏமாற்றி அனுதாபம் சம்பாதிக்கத் திட்டமிட்ட ஒருவர்; முதிர்ந்த வயதுத் தலைவர்கள் மருத்துவமனை சரியில்லை என்பார்கள் - மருத்துவர்கள் சரியில்லை என்பார்கள் என்று சொன்னதாகப் புளுகியிருக்கிறார்.

மருத்துவமனை சரியில்லை என்றோ, மருத்துவர்கள் சரியில்லை என்றோ எந்த முதிர்ந்த வயதுத் தலைவரும் சொல்லவில்லை, சிகிச்சை முறையில் தவறு இருக்குமோ என்று தான் ஆராய்ந்திடச் சொன்னார்கள். அந்தக் கவலைகூட

இருக்கக்கூடாது என்கிற கல் நெஞ்சர்களைப் பற்றி என்ன நினைப்பது?

அடுத்து அதே உரையில் ஜெயலலிதா -

“சட்டசபைக்குப் போனால்.....” என்று ஆரம்பித்து;
“சட்டசபைக்குத்தான் போவதே இல்லையே”

என்றும் ஏளனம் செய்திருக்கிறார். 1989ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினரானவர் - என்னவோ தினந் தோறும் சட்டசபைக்குப் போனவர் போலவும் - தாழ் வாரம் வரை வந்து கையெழுத்து மட்டும் போட்டு விட்டுப் போகாதவர் போலவும் - வயது முதிர்ந்த தலைவரை வசைபாடுகிறாராம் இந்த வாலிப வயது முதலமைச்சர்!

அத்துடன் நிறுத்தினாரா? முதிர்ந்த வயது தலை வரை ‘அகராதிப் பண்டிதர்’ என்கிறார் - ‘அசூயை மனிதர்’ என்கிறார், அந்த அரசு விழா உரையில்! ஆம்; “தனது செல்வாக்கையும் புகழையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் எம்.ஜி.ஆர். தன் மீது அசூயைப்படுகிறார்” என்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஆங்கிலத்தில் தன் கைப்படக் கடிதம் எழுதியவர் அல்லவா; அதனால் அவருக்கு எம்.ஜி.ஆர். மட்டுமல்ல, வயது முதிர்ந்த தலைவர் யாரைக் கண்டாலும், “அசூயை கொண்டவர்” என்று அர்ச்சிக்கத்தான் தோன்றும்!

அதனால்தான் அவர் எந்தக் குற்றங்குறைகளுக்கு ஆளானாரோ, அந்தக் குற்றம் குறைகளைப் பிறர் மீது சுமத்தி;

“சாணக்கியன் சொல்”லான அண்ணாந்து படுத்தபடி எச்சில் துப்பமாட்டான் புத்திசாலி”

என்ற கருத்துரைக்கு
நேர் மாறாக - இந்த அம்மையார்;
பிறர் மீது சுமத்தும் குற்றம் குறைகள் அனைத்தும்
தனக்கே உரியவை என்பதை மறந்து
அண்ணாந்து படுத்தபடி எச்சில் துப்புகிறார்!

அன்புள்ள,

மு.க.

06-07-2003

2942. அயோத்திப் பிரச்சினை!

உடன்பிறப்பே,

அயோத்தி பிரச்சினை நீதி மன்றத்தில் இருக்கிறது. இதற்கிடையே கடந்த ஆண்டு இதில் ஒரு சமரசம் காண்பதற்காக சங்கராச்சாரியார் டெல்லி வரை சென்று முயற்சி எடுத்து அதிலே ஒரு முடிவு காணப்படும் என்ற நிலை ஏற்பட்டபோது, செய்தி யாளர்கள் என்னைச் சந்தித்து கருத்து கேட்டனர்.

"அயோத்தி பிரச்சினையிலே இரு சாராரும் ஒரு நல்ல முடிவுக்கு வருவதை நாங்கள் பாராட்டி வரவேற்போம். தற்போது இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த முயற்சியின் காரணமாக, இரு சாராரும் அதாவது இஸ்லாமிய சமுதாயத் தலைவர்களும், வி.எச்.பி. தொடர்பான தலைவர்களும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு சுமுகமான முடிவுக்கு வருவார்களேயானால் அதை நாங்கள் பாராட்டி வரவேற்போம். எங்களுடைய முக்கியமான பிரச்சினை அயோத்தி தகராறை வைத்து மக்கள் பலர் பலியாவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான். அதற்கேற்ப இரு சார்பு தலைவர்களும் கலந்து பேசி அவர்கள் எந்த முடிவெடுத்தாலும் அது இரு சாராரும் ஏற்றுக் கொள்ளத்தக்க முடிவாக இருக்குமானால் அது பாராட்டுக்குரிய தும் வரவேற்கத்தக்கதுமாகும்" என்று அறிவித்தேன். ஆனால் சங்கராச்சாரியார் முயற்சி அப்போது வெற்றி பெறவில்லை.

தற்போது மீண்டும் அவர் அந்த முயற்சியிலே ஈடுபட்டு, ஒரு சமரசத் திட்டத்தை அறிவித்துள்ளார். அந்தத் திட்டம் முதன்முதலாக நேற்றுதான் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

1. சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நிலத்தில் கோவில் கட்ட முஸ்லிம் தனி நபர் சட்ட வாரியம் தடையில்லா சான்றிதழ் வழங்க வேண்டும். இது பற்றி அந்த வாரியம் பரிசீலிக்க வேண்டும்.

2. சர்ச்சைக்குரிய நிலம் பற்றி சில காலம் கழித்து விவாதித்து ஒரு சமரசத் தீர்வை கோர்ட்டில் தெரிவிக்கலாம். அதன் அடிப்படையில் கோர்ட்டு தீர்ப்பு வழங்க முடியும்.

3. சர்ச்சைக்குரிய இடத்தை பாதுகாக்க அதைச் சுற்றி ஒரு தடுப்புச் சுவர் எழுப்பலாம்.

4. சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நிலம் குறித்த இறுதித் தீர்வை நாம் எட்டினால் அதன் பிறகு இந்த விஷயத் தில் எந்தவித கோரிக்கைகளையும் இரு தரப்பிலும் உள்ள மற்ற யாரும் எழுப்பக் கூடாது. அதற்கான ஆதரவை நாம் உறுதி செய்ய வேண்டும்.

5. நமக்குள் ஒரு சுமுக முடிவு ஏற்பட்ட தும் அதை உறுதியாக அமல்படுத்த இருவரும் சேர்ந்து மத்திய அரசை அணுகலாம்.

இந்தச் சமரச திட்டம் குறித்து நேற்றைய தினம் முஸ்லிம் சட்ட வாரியம் விவாதித்து, இறுதியாக சங்கராச்சாரியாரின் சமரச முடிவை ஏற்க முடியாது என்று அறிவித்திருக்கிறார்கள்.

அப்போது செய்தியாளர்களிடம் கூறும்போது, இந்தப் பிரச்சினை குறித்து சங்கராச்சாரியாரிடமிருந்து இரண்டு கடிதங்கள் தங்களுக்கு வந்ததாகவும், முதல் கடிதத்தில் சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நிலத்தில் கோவில் கட்ட முஸ்லிம் சட்ட வாரியம் தடையில்லா சான்றிதழ் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் இரண்டாவது கடிதம் அதற்கு நேர்மாறாக இருந்தது என்றும், அதில் முஸ்லிம் சட்ட வாரியத்தின் தடையில்லா சான்றிதழுக்கு அவசியமே இல்லை என்றும், ஏற்கனவே தெரிவித்திருந்த 5 யோசனைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதாக இருந்தது என்றும் கூறியிருக்கிறார்கள். மேலும் பாபர் மசூதி இடத்தை முஸ்லிம்கள் நிபந்தனை இன்றி நன்கொடையாகத் தரவேண்டும் என்றும், காசி, மதுராவில் உள்ள மசூதிகளையும் இந்திய முஸ்லிம்கள் தாங்களே விட்டுத் தர தயாராக வேண்டும் என்று மறைமுகமாக மிரட்டுவது போல் இரண்டாவது கடிதம் இருந்தது என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

சங்கராச்சாரியார்; கடிதம் மூலமாக தெரிவித்திருந்த சமரசத் திட்டத்தில் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் அல்லது வேறு இடத்தில் ராமர் கோவிலும், அதைத் தாண்டி சிறிது தூரத்தில் மசூதியும் கட்டலாம் என்றும், பின்னர் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தை முஸ்லிம்கள் நல்லெண்ண அடிப்படையில் இந்துக்களிடம் நன்கொடையாகக் கொடுத்துவிடலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

எனவே சங்கராச்சாரியார் சூன் மாதம் 20ந்தேதி யன்று முஸ்லிம் சட்ட வாரியத்திற்கு எழுதிய கடிதத்திற்கும், பிறகு சூலை 1ந்தேதி எழுதிய கடிதத்திற்கும் மாறுபாடுகள் இருப்பதாக முஸ்லிம் சட்ட வாரியம் கூறியிருக்கின்றது. அந்த வாரியத்தின் துணைத் தலைவர் மௌலானா கல்பே சாதிக் "காஞ்சி சங்கராச்சாரியார் எமது வாரியத்தின் தலைவர் மௌலானா ராபே ஹசன் நத்விக்கு எழுதிய முதல் கடிதம் அங்கீகரிக்கத் தக்கதாக இருந்தது. ஆனால், அடுத்து வந்த கடிதம் மிகவும் தரம் குறைந்ததாக இருந்தது. சங்பரிவாரம் மற்றும் வி.எச்.பி.யின் நிர்ப்பந்தம் அந்தக் கடிதத்தில் இருந்தது" என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆண்டு சங்கராச்சாரியார் சமரசத் திட்டத்திற்கான முயற்சியில் ஈடுபட்ட போது, அவர் இரு தரப்பினருக்கும் பொதுவாக இருந்து கருத்து தெரிவித்து, மற்றவர்களை சமாதானப் பாதைக்குக் கொண்டு வருவதைப் போலத் தெரிந்தது. ஆனால் இன்றைய தினம் ஏடுகளில் வெளி வந்துள்ள அவரது திட்டத்தைப் படிக்கும்போது, அவரே ஒரு தரப்பினராக இருப்பதைப் போல தெரிகிறது. இந்த நிலையில் இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவு காண முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதாக உள்ளது.

சங்கரர் முயற்சி சமரசத்தில் முடியுமா? சங்கடத்தில் கொண்டு போய் விடுமா? என்ற கேள்விகளுக்குப் பதில் காண்பதில் நேரத்தைச் செலவிடுவதை விட நீதி மன்ற முடிவுக்கே விட்டு விடுவது ஒன்றே பிரச்சினை தீர உரிய வழியாகும்.

அன்புள்ள,

மு.க.

08-07-2003

2943. இது உறுதிமொழி!
இழந்ததைப் பெறுவோம்!

உடன்பிறப்பே,

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஜெயலலிதா ஆட்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் சித்திரவதைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதிலே முதல் இடத்திலே இருப்பவர்கள் விவசாயிகளா? நெசவாளர்களா? தொழிலாளர்களா? அரசு அலுவலர்களா? மாணவர்களா? வணிகர்களா? பத்திரிகை யாளர்களா? என்பதற்கு ஒரு பட்டிமன்றமே நடத்தலாம். தற்போதுள்ள சூழ்நிலையில் அரசு அலுவலர்கள்தான் தாங்கொணா துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதற்கு முன்பு தமிழகச் சரித்திரத்தில் அரசு அலுவலர்கள் பல முறை போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள், ஆனால் எந்தவொரு ஆட்சியிலும் இந்த அளவிற்கு அராஜகத்திற்கு ஆளாகியிருக்க மாட்டார்கள். ஒவ்வொரு முறையும் அரசு அலுவலர்கள் பல கோரிக்கைகளை, பல சலுகைகளை புதிது புதிதாக முன்வைத்து போராடுவதும், அரசு; அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசி பத்து கோரிக்கைகளை வைத்தால் அவற்றில் நான்கைந்து கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதிமொழி கூறி, அதனையேற்று அவர்கள் போராட்டத்தை திரும்பப் பெறுவதும் வழக்கமாக இருந்து வந்தது.

ஆனால் தற்போது ஜெயலலிதா ஆட்சியிலேதான் அரச அலுவலர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த சலுகைகள், உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்கள் அவற்றைத் திரும்ப வழங்கிட வேண்டுமென்று போராடுகிறார்கள்.

இடையிலே ஒருமுறை அரசாங்கம் அவர்களை அழைத்துப் பேசி சில கோரிக்கைகளுக்கான முடிவு களை அறிவித்து, அவற்றின்

பேரில் அரசாணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை.

இறுதியாகத்தான் அரசு அலுவலர்களின் பல்வேறு சங்கத்தினர் பலமுறை கூடிப் பேசிய பிறகு ஜூலை 2ந்தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு பல மாதங்களுக்கு முன்பே செய்யப்பட்ட பிறகும், அரசாங்கம் அவர்களை அழைத்துப் பேசவில்லை. கடைசியாக ஜூன் 27ந்தேதியன்று முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார். அப்போதும் போராட்ட அறிவிப்பைச் செய்த அனைத்துச் சங்கங்களையும் முறையாக அழைக்காமல், தங்களுக்கு வேண்டிய சில சங்கங்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பினார்கள். முக்கிய சங்கங்களான ஜேக்டோ ஜியோ, கோட்டா ஜியோ போன்ற கூட்டமைப்புகள் தங்களுக்கு முறையான அழைப்பு தராவிட்டால் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில்லை என்று 26ந்தேதி முடிவெடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் 27ந் தேதி காலையில் நடை பெறும் பேச்சுவார்த்தைக்கு 26ந்தேதி இரவு 7.30 மணிக்கு அழைப்பு அனுப்பினார்கள்.

27 ஆம் தேதியன்று முதலமைச்சருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சங்கத்தினர் திருப்தி அடையாமல் போராட்டம் அறிவித்தவாறு நடைபெறும் என்று தெரிவித்தனர்.

எனினும் போராட்டத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அலுவலர் சங்கத்தினர் அரசு மீண்டும் தங்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. போராட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தால்தான் பேச்சுவார்த்தை என்றது அரசு.

ஆனால் போராட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே 30ந்தேதி நள்ளிரவில் அலுவலர் சங்கத்தின் முக்கிய தலைவர்களையெல்லாம் அரசு கைது செய்தது. எல்லோரையும் அப்படி கைது செய்து விட்டால் பேச்சுவார்த்தை நடத்தக்கூட தலைவர்கள் யாரும் இருக்க மாட்டார்களே என்ற நிலையை நான் எடுத்துச் சொல்லி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதற்குப் பதிலாக எஸ்மா சட்டத்தின் கீழ் அரசின் நடவடிக்கை தொடர்ந்தது.

எஸ்மா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அரசு அலுவலர்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்து, அந்த அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால், அதைத் தவிர்ப்பதற்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர் களை உடனடியாக டிஸ்மிஸ் செய்ய டெஸ்மா என்ற அவசரச் சட்டத்தையும் இந்த அரசு கொண்டு வந்தது. எஸ்மா சட்டம் கொண்டு வந்தபோது, குடியரசுத் தலைவர் வரை சென்றுதான் அது அமலுக்கு வந்தது. ஆனால் டெஸ்மா அவசரச் சட்டத்திற்கு இந்த அரசு ஆளுநர் அளவிலேயே ஒப்புதல் பெற்றது. எனவே அது செல்லுமா என்பது ஐயத்திற்குரியது. மேலும் இந்த டெஸ்மா சட்டத்தை பல மாதங்களுக்கு முன்பே அமலுக்கு வந்ததாக முன்தேதியிட்டு அவசரச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு. இதுவும் பிரச்சினைக்குரியது.

கைது செய்யப்பட்ட அலுவலர் சங்கத்தினர் மீது எஸ்மா சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும், பிறகு நிர்வாக ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பணியிலிருந்து நீக்கப்படு வார்கள் என்றும் அரசு முதலில் அறிவித்தது. ஆனால் அதற்கு மாறாக டெஸ்மா சட்டத்தைக் காட்டி, உடனடியாக அரசு அலுவலர்களை நேரடியாக டிஸ்மிஸ் செய்ய வழி வகுத்தது.

எந்த ஒரு சாதாரண அலுவலராக இருந்தால்கூட அவர்கள் ஏதாவது தவறு செய்தால், அவர்களை டிஸ்மிஸ் அல்ல, அவர்களுக்கு சாதாரண தண்டனை ஒன்று வழங்க வேண்டுமென்றால்கூட, அவர்களை முதலில் தற்காலிகப் பதவி நீக்கம் செய்துவிட்டு, பிறகு அவர்களிடம் இத்தனை நாட்களுக்குள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுப் பெற்று, அதனை ஆய்வு செய்த பிறகுதான் டிஸ்மிஸ் செய்யவேண்டும். இது எத்தனையோ ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிமுறையாகும். இது அரசாங்கத்திலே பணியாற்றும் ஒவ்வொரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கும் தெரிந்துள்ள விதிமுறை. இந்த அடிப்படை விதிக்கே மாறாக தற்போது 3 இலட்சம் பேரை அரசு டிஸ்மிஸ் செய்துள்ளது. இது ஏற்கப்படுமா என்பது நீதிமன்றங்களின் விசாரணையில் தெரியும்.

அது மாத்திரமல்ல, அரசு நிர்வாகத்திலே இத்தனை ஆண்டு வரலாற்றில் ஒரே நேரத்தில் மூன்று இலட்சம் அரசு அலுவலர்களை டிஸ்மிஸ் செய்த நிகழ்ச்சி நடைபெற்றது உண்டா? ஒரு வார காலமாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அரசு அலுவலர்கள் சிறையிலே வாடிக்கொண்டிருப்பதைப் பற்றி இந்த அரசு கவலைப்படுகிறதா?

ஒரு வார காலமாக அரசுப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. ஆனால் அரசோ அவர்களைப் பழிவாங்குவதிலேதான் குறியாக உள்ளது. ஜெயலலிதா என்ற ஒரு பெண்மணியின் பிடிவாதம் காரணமாக இவ்வளவு அராஜகங்களும் தமிழகத்திலே நடைபெறுகின்றது. இதுவரை எத்தனை பேர் இந்தப் பிரச்சினையில் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள்?

இந்த ஆட்சியின் டிஸ்மிஸ் பட்டியலைப் பார்த்து விட்டு தஞ்சை மாவட்டத்தில் பேராவூர்ணிக்கு அருகே தலைமை ஆசிரியை ரேணுகா பெரியராசன், அந்தியூரைச் சேர்ந்த குமாரசாமி, கொடுமுடியில் உதவி தலைமை ஆசிரியை சரோஜினி, தொடக்கக் கல்வி உதவி அதிகாரி அழகம்மாள், டெங்கனிக் கோட்டை செங்கோட்ராஜ், கல்லூரி கல்வி இயக்கக ஊழியர் சோலையப்பன், வில்லிவாக்கம் பச்சையப்பன், புள்ளம்பாடி அஞ்சுகம் என்று உயிரைப் பறிகொடுத்தவர்களின் பட்டியல் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது.

கணவர் சிறையிலே இருக்கிறார். எங்கே இருக்கிறார் என்றே தெரியாத நிலை. வீட்டிலே பிள்ளைகளோடு இருக்கும் தாய்மார்களிடம் சென்று அரசு வீட்டை உடனடியாக காலிசெய்யும்படி கூறுகின்ற மனிதாபிமானமற்ற செயலை வேறு எந்த அரசிடமாவது காணமுடியுமா? பகல் என்றும், இரவு என்றும் பாராமல் இந்த அரசுக்காக பணியாற்றியவர்கள் அவர்கள். ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள் கூட மூன்று மாதங்களுக்கு அந்த அரசு வீடுகளிலே குடியிருக்கலாம் என்கிறபோது பணியிலே இருந்தவர்களை இப்படி அவசர அவசரமாக டிஸ்மிஸ் செய்து விட்டு வீட்டைக் காலி செய்துவிட்டு போ என்று கூறுவது எத்தகைய கொடூரமான செயல்?

மேலும் ஒரு கொடுமையாக அலுவலர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு, அதுகுறித்த வழக்கிலே என்ன தீர்ப்பு வருமோ என்று கூடக் காத்திருக்காமல் புதிதாக 15,500 பேரை வேலைக்கு எடுப்பதாகக் கூறி, அதிலே ஒரு பெரிய குழப்பம். அரசுப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு நடத்தித்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி எதுவும் முறைப்படி செய்யாமல் கட்சிக்காரர்களின் பரிந்துரைப்படி தேர்வு செய்வதாக கூறப்படுகிறது. நாளைக்கு நீதிமன்றத்தில் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்ப்பு கூறப்பட்டால், தற்போது அவசர அவசரமாக பணிக் குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் கதி என்னவாகும்? அது மாத்திரமல்ல, பல ஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் பணி செய்பவர்களுக்குப் பதிலாக புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் அந்தப் பணியினை ஆற்ற முடியுமா? எத்தனை குழப்பங்கள் ஜெயலலிதா ஆட்சியினரால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது?

நேற்றுவரை கைது செய்யப்பட்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்களில் 72 பேர் பெண்கள் என்று கூறப்படுகிறது. ஒரு பெண் முதல் அமைச்சராக இருக்கும்போது அரசுப் பணியாற்றும் பெண்களை சிறையிலே அடைத்திருப்பது நியாயம்தானா? இதிலே எத்தனைப் பெண்கள் தாங்கள் பெற்ற மழலைகளை வீட்டிலே நிர்க்கதியாக விட்டுவிட்டு சிறையிலே வாடுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல தீர்வுகாண வேண்டும் என்பதற்காக நீதிபதி தினகரன் அவர்கள், அரசு தேவையில்லாமல் கால தாமதம் செய்கிறது என்பதற்காக ஒரு தீர்ப்பை அறிவித்தார். அந்தத் தீர்ப்பைக் கேட்டு அரசு அலுவலர்கள் மாத்திரமல்லாமல், தமிழகமே மகிழ்ச்சி பெருமூச்சு விட்டது. மீண்டும் மீண்டும் மேல் முறையீடு என்ற பெயரால் முதலில் கிடைத்த நல்ல தீர்ப்புக்கு மாறாக அரசு அலுவலரைப் பாதிக்கக் கூடிய தீர்ப்பைப் பெற இந்த அரசு முயற்சிப்பது எவ்வளவு கொடுமை? இது எந்த அளவிற்கு நியாயம்? அரசு அலுவலர்கள் என்ன, அரசியல் கட்சித் தொண்டர்களா? அவர்களால் எத்தனை நாட்களுக்கு சிறையிலே

இருக்க முடியும்? இந்த அளவிற்கு வாட்டினால் அவர்களை அடக்கி விட முடியும் என்ற ஆணவம்தானே?

இவ்வளவு கொடுமைகளையும் செய்து, அவர்கள் மீது பழிதீர்த்துக் கொண்டால் அது எத்தனை நாட்களுக்கு செல்லும். இந்த ஆட்சி என்ன காருள்ள அளவும், கடல் நீருள்ள அளவும் நீடிக்கப் போகின்ற ஆட்சியா? அடுத்த தேர்தல் வரை இந்த ஆட்சி, அதற்குப் பிறகு வருகின்ற ஆட்சியில் அது எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அரசு அலுவலர்களுக்கு தற்போது இழைக்கப்படும் தீங்குகள் களையப்பட்டே தீரும். கழக ஆட்சியிலே நான் முதல்வராக இருந்த போது, அதற்கு முன்பு நடைபெற்ற ஆட்சியிலே பழி வாங்கப்பட்ட எத்தனை அலுவலர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது? உதாரணமாக மாதவரம் பால் பண்ணையிலே வேலையிலிருந்து நீக்கப்பட்ட 1085 ஊழியர்களை கழக ஆட்சிதான் படிப்படியாக மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொண்டது என்பதையும், அதுபோலவே கடந்த ஆட்சியினால் தண்டிக்கப்பட்டிருந்த; தலைமைச் செயலகச் சங்கப் பணியாளர்களின் துயரங்கள் கழக ஆட்சியிலே சரி செய்யப்பட்டன என்பதையும், இன்று இந்த ஆட்சியில் வேலை யிழப்பு என்ற தவிப்புக்கு ஆளாகியிருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அரசு அலுவலர்கள் வாட்டி வதைக்கப்பட்ட அவர்களுடைய வாழ்வில் மீண்டும் வசந்தம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இருக்குமாறு இழந்த வேலையைத் திரும்பப் பெற வாய்ப்பளித்த ஆட்சிக்குத் தலைவனாக இருந்தவன் என்ற முறையில் இந்த உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன். -

அரசு அலுவலாகளை; ஆணடான அடிமையை நடதது்வது போல அடாவடித்தனமாகக் காவல் துறையினர் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளுவதும் - கை கால்களைப் பிடித்து தரதரவென்று தரையில் இழுத்துச் சென்று போலீஸ் வண்டியில் ஏற்றுவதும் - ஓர் அரசின் நாகரிக நடவடிக்கையா? அல்லது நாச காரியங்களின் உச்சகட்டமா? என்று நாடு திகைக்கிறது. நல்லோர் பெருமூச்சு விடுகின்றனர். தாய்மார்கள் சாபங்கொடுக்கின்றனர். வாய் திறக்கப் பயந்து கண்ணீரால் தம் துயரத்தை எழுதிக் காட்டுகின்றனர்!

இந்தச் சர்வாதிகார தர்பாரில் அரசு அலுவலர்களுக்கும், அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்பட்டுள்ள சங்கடங்கள் விரைவில் விலகி, இருள் தொலையுமென்று எதிர்பார்ப்போமாக! இல்லையேல், அடுத்து வரும் ஆட்சியில் இந்த அடிமைத் தளைகள் உடைக்கப்பட்டு அக்கிரமச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இன்று சோக வாழ்வு பெற்றிருப்போர், சுகவாழ்வு பெறுவதற்கான திருப்பம் ஏற்பட்டே தீரும் என்ற உறுதியுடன் நடை போடுவோம்.

அன்புள்ள,

மு.க.

10-07-2003

குறிப்பு :- கழக அமைப்புகள் இதனை துண்டு அறிக்கையாக வெளியிடுமாறு வேண்டப்படுகின்றன.

2944. வேடிக்கை - விபரீதம் - விஷம மூளை !

உடன்பிறப்பே,

கடந்த ஏப்ரல் 25ஆம் நாளன்று தர்மபுரி மாவட்டம் ராயக்கோட்டை என்ற ஊரில் தி.மு.கழகப் பொதுக் கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது, அக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் முல்லை வேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர் செங்குட்டுவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் நவாப் மற்றும் ஆர்.கே. முருகேசன், மோகன சுந்தரம், சின்ன பையன், அரியப்பன், குரல்முரசு செல்லப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். வழக்கமாகக் கூட்ட நிகழ்ச்சிகளில் சில ஊர்களில் பட்டாசு வெடிப்பது போல் அந்தக் கூட்டத்திலும் பட்டாசு வெடித்ததில் தஸ்தகீர் என்பவர் படுகாயமுற்று இறந்து விட்டார்.

இதே செய்தியைத்தான் வார்த்தை மாறாமல் நேற்று ஆளுங்கட்சியினர் நடத்தும் தனியார் தொலைக்காட்சியிலும் சொல்லியிருக்கிறார்கள், அதற்கான ஆதாரம் இருக்கிறது. -

உண்மை இதுதான் - கழகம் கூட்டம் நடத்தியது, ஆர்வத்துடிப்பால் சிலர் பட்டாசு வெடித்து வாண வேடிக்கை கொண்டாடினர். அதில் ஒருவர் இறந்தார்.

அதற்கு முல்லைவேந்தனும், செங்குட்டுவனும் மற்றும் ஐந்து பேரும்தான் காரணமென்று கூறி; கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தவர்களைக் கைது செய்யப் போலீசார் தேடினர்.

அவர்களோ நீதிமன்றத்தில் வலியச் சென்று ஆஜராயினர். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. ரிமாண்டு கைதிகளாகச் சேலம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

முல்லைவேந்தன் அமைச்சராக இருந்தபோது ஒரு வழக்கு காரணமாக கழகத்திலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தவர்; அண்மையில்தான் அந்த வழக்கில்

விடுதலை பெற்று - மீண்டும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டிருப்பவர். அதற்கு முன்பு அவரை அ.தி.மு.க.வுக்கு வருமாறு வலியுறுத்தினர். அவர் மறுத்துவிட்டு; கழகத்திற்கே வந்துவிட்ட காரணத்தால் அவரைப் பழிவாங்கும் வெறி ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டது.

அதைச் செயல்படுத்த சேலம் சிறையில் ஒரு சிறை அதிகாரியும் - ஓர் ஆயுட் கைதியும் கிடைத்தார்கள். அதனால் அவர்கள் ஆளுங்கட்சியினரின் அந்தரங்க ஆணைப்படி முல்லைவேந்தனுக்கு சிறையில் தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்தனர். குட்டி அதிகாரியுடன் கூடிக் கொண்டு அநாகரிக வார்த்தைகளால் அர்ச்சித்தனர். இதற்கு உச்சகட்டமாக; முல்லைவேந்தன் உடல் நலக் குறைவுக்காக சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அந்த ஆயுட் கைதியைப் பயன்படுத்தி அவரைக் கழுத்தின் நரம்பைத் துண்டித்துக் கொன்று விடவும் துணிந்து வன்முறைப் பாய்ச்சலை அந்தச் சிறை மருத்துவமனையிலேயே நடத்தினர்.

முல்லைவேந்தன் உடல் வலிமை படைத்தவர். என்பதால் அந்த வஞ்சகர் சூழ்ச்சிக்கு இரையாகி மாண்டு விடாமல்; அந்த வெறிச் செயலைத் தடுத்து நிறுத்திக் காயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.

இதற்கிடையே செய்தி கேள்வியுற்று சேலம் மாவட்டச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகமும், துணைச் செயலாளர் சிவலிங்கமும், சிறைச் சாலைக்கு விரைந்தனர். ஆனால் அதற்குள் முல்லை வேந்தனை சேலம் அரசுப் பொது மருத்துவமனைக்கு அதிகாரிகள் கொண்டு போய்விட்டனர். அங்கும் அவரைப் பார்க்க முயன்றபோது; அரசு மருத்துவமனையிலிருந்து மீண்டும் சிறைச்சாலைக்கே கொண்டு போய்விட்டனர். இந்த அநியாய சூழ்ச்சியைத் தட்டிக் கேட்ட காரணத்திற்காகப் போலீசார் தடியடி - மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் சிவலிங்கத்துக்கு பலத்த காயங்கள்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலினும், கழக முன்னணியினரும் சேலம் சென்று; பாதிக்கப்பட்ட கழகக் கண்மணிகளுக்கு ஆறுதல் கூறி வந்தனர். ஆனால் ஸ்டாலின் சிறைக்குள் அனுமதிக்கப்படவில்லை. “என்னை

அனுமதிக்கமாட்டீர்கள்; ஆட்களைக் கொல்லும் ஆயுதங்களை மட்டும் எப்படி அனுமதித்தீர்கள்?" என்று ஸ்டாலின் அதிகாரி களைப் பார்த்து கேட்ட செய்தி ஏடுகளில் வந்ததை அறிவாய்!

முல்லைவேந்தன் குடும்பத்தினரும், சேலம் கழகத் தினரும், கழகத் தலைவர் என்ற முறையில் நானும் அவரை சேலத்திலிருந்து வேறு சிறைக்கு - அவரது பாதுகாப்புக்காக மாற்றிட வேண்டுமென்று அரசின் உள்துறை செயலாளருக்கும், சிறைத்துறை ஐ.ஜி.க்கும் அவசரத் தகவல் அளித்தோம்.

அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை - ஆனால் தேன்கனிக்கோட்டை நீதிமன்றம்; தனது உத்தரவில் முல்லைவேந்தனை கோவை சிறைச் சாலைக்கு மாற்ற வேண்டுமென்றும், தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டது.

நியாயமாக ஓர் அரசு; தானே முன்வந்து செய்திருக்க வேண்டியதை நீதிமன்றம் செய்து முல்லை வேந்தனைப் பாதுகாத்தது. இப்போது அவர் ஜாமீனிலும் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருடன் மாவட்டக் கழகச் செயலாளர் செங்குட்டுவனும் மற்றவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பொதுக் கூட்டத்தில் - வாண வேடிக்கை; அது விபத்தாக உருவெடுத்து அதில் ஒருவர் இறந்து விடுகிறார். அதற்காக கூட்டத்தில் கலந்து கொள்ளப் போனவர்கள் கைது! அவர்கள் மீது வழக்கு! சிறையில் அடைப்பு! அங்கேயும் ஏவப்படுகிறது வன்முறைக் கொடுமை! கொடுமை புரிந்த ஆயுள்தண்டனைக் கைதி அ.தி.மு.க. வைச் சேர்ந்தவன் என்று 'தினமலர்' இதழே செய்தி வெளியிட்டுள்ளது. அந்த ஆள்தான் நமது கழக வழக்கறிஞர் சண்முகசுந்தரம் அவர்கள் டான்சி வழக்கு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது; அவரைக் கொலை செய்ய அவர் உடலில் 80 இடங் களில் வெட்டிக் காயப்படுத்தி, அவரை ரத்த வெள்ளத் தில் மிதக்கவிட்டவன்.

உடன்பிறப்பே; ஒன்றைக் கற்பனை செய்து பார்! 1991 ஆம் ஆண்டு தேர்தலின்போது ராஜீவ் காந்தியைக் கொன்று குவித்தார்களே; அந்தக் கொடிய வன்முறை வெறியில் அவர் சிக்காமல்; தாணுவின் தற்கொலை குண்டில் போலீஸ் அதிகாரிகள் சிலர் மட்டும் மாண்டிருந்து ராஜீவ் காந்தி தப்பியிருந்தால்; குண்டு

வெடித்த கூட்டத்தில் கலந்து கொண்டார் என்பதற்காக ராஜீவைக் கூடக் கைது செய்து வழக்கு தொடுத்திருப்பார்களோ; என்னவோ! அந்தச் சமயம் கவர்னர் ஆட்சிக்குப் பதிலாக ஒருவேளை ஜெய லலிதா ஆட்சியில் இருந்திருந்தால்; அப்படியும் நடந்திருக்கும்.

அதுதானே இப்போது தர்மபுரி ராயக்கோட்டை கழகக் கூட்டத்தில் பட்டாசு வெடித்ததையொட்டி நடந்திருக்கிறது.

ராஜீவைக் குறி வைத்து நடந்த திருப்பெரும்புதூர் நிகழ்ச்சி வேண்டுமென்றே திட்டமிட்டு நடத்தப்பட்ட கொடுமை - ஆனால், ராயக்கோட்டை கூட்டத்தில் வெடித்த பட்டாசு; விழா கொண்டாடியவர்களின் ஆர்வக் கோளாறு! அதற்கும் இதற்கும் ஒப்புவமை இல்லவே இல்லை - ஆனாலும் கூட்டத்தில் யாராவது பட்டாசு வெடித்தால் அது அந்தக் கூட்டத்தில் பேசப் போனவர்களையும் குற்றவாளியாக்கும் குதர்க்க மதி இப்போது இங்கே கோலோச்சுபவர்களுக்கே உண்டு,

வேடிக்கை நிறைந்த வேதனையான அரசாங்கம் - விபரீதபுரியின் விநோதமான அதிகாரிகள் - வேறென்ன சொல்வது இந்த விஷம மூளை படைத்தவர்களைப் பற்றி?

அன்புள்ள,

மு.க.

12-07-2003

2945. தேர்தல் நிதியும், என் சுற்றுப்பயணத் திட்டமும்!

உடன்பிறப்பே,

கழக அமைப்புகளுக்கான 12வது பொதுத் தேர்தல் தலைமைக் கழகம் உள்ளிட்டு நடை பெற்று நிறைவுற்று - புதிய பொதுக் குழுவின் கூட்டத்தில் என் கருத்தையும், வேண்டுகோளையும் ஏற்று கழகத்தின் தேர்தல் நிதியாக 25 கோடி ரூபாய் திரட்டுவதென்று அறிவித்து, அதற்கான வழி வகைகளை அடுத்து நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் விவாதித்து வகுத்துக்கொண்டு; நிதி திரட்டுவதற்கென தலைமைக் கழகம் அச்சியற்றிக் கொடுத்துள்ள நன்கொடைச் சீட்டுகளும் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு, மாவட்டச் செயலாளர்களும், கடமையுணர்ச்சியுடன் உடனடியாக ஒன்றிய, நகர அமைப்புகள் உள்ளிட்ட செயல்வீரர்கள் கூட்டங்களை நடத்தி நன்கொடைச் சீட்டுகளைப் பிரித்துக் கொடுத்து; நிதி திரட்டும் பணி தொடங்கப்பெற்று தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அன்று 1967 தேர்தலுக்கு அண்ணாவின் ஆணை யேற்று 11 லட்சம் ரூபாய் நிதி திரட்டுவதற்காக - எத்தனை சிற்றூர் பேரூர்களில் கொடியேற்று நிகழ்ச்சி - நிதியளிப்புக் கூட்டம் - எத்தனை ஊர்களில் சிறப்புக் கூட்டங்கள், எத்தனை நாடக நிகழ்ச்சிகள் - இவ்வளவுக்கும் பிறகு விருகம்பாக்கம் கழக மாநில மாநாட்டில் அண்ணாவின் கரங்களில் நான் தேர்தல் நிதியாக 11 லட்சத்தை வழங்கியபோது அவர் கொண்ட மகிழ்ச்சியின் அடையாளமாகத்தான், வேட்பாளர்களின் பெயர்களை அவர் பட்டியலிட்டுப் படித்தபோது சைதாப்பேட்டை தொகுதியில் என் பெயரையே “11 லட்சம்” என்று குறிப்பிட்டார். அப்போது மாநாட்டில் கரவொலி இடியோசையாயிற்று - என் விழிகளில் மழையும் பொழிந்தது.

அப்போது 11 லட்சத்துக்கே அந்த மகிழ்ச்சி - அந்தத் துள்ளல் - இன்ப துன்பம் இரண்டையும் அளவோடு வெளிப்படுத்தும் இயல்புகொண்ட அண்ணாவே பரவசத்தின் எல்லைக்குச் சென்று விட்டார். ஆம்; அப்போது அது பெருந்தொகை, -

"தூக்கு மேடை" நாடகம் நான் எழுதிக் கொடுத்து நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களுடன் நடித்த சமயத்தில் பெரியார் தலைமையில் ஒரு நாள் ஆயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை பெரியார் கையாலேயே எனக்கு வழங்குவதாக நடிகவேள் கூறிய போது; பொற்கிழிப் பையை என்னிடம் அளித்த பெரியார், "ஏ, அப்பா! அந்தக் காலத்தில் மகாராஜாக்கள் கூட இவ்வளவு பணம் அளிக்க மாட்டார்கள்" என்று பெருமிதத்துடன் எம்.ஆர்.ராதா அவர்களைப் பாராட்டினார் என்றால் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு 1944ல் ஆயிரம் ரூபாய் என்பது அவ்வளவு பெரிய தொகை. அதைப் போலவே சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு 11 லட்சம் என்பது மிகப் பெரிய தொகை.

1960ஆம் ஆண்டுகளில் தமிழகத்தின் நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் பேரவையில்; தான் சதம் அடிக்கப் போவதாகக் குறிப்பிட்டு, படித்த நிதி நிலை அறிக்கையின் மொத்த மதிப்பே நூறு கோடி ரூபாய்தான். தற்போது இந்த 2003-2004ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்ச் செலவு மட்டும் 26 ஆயிரம் கோடி ரூபாய்.

எனவே பணத்தின் மதிப்பு கால ஓட்டத்தில் எப்படி வேறுபடுகிறது என்பதற்கு இப்போது தேர்தல் நிதியாக 25 கோடி ரூபாய் திரட்ட வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதே ஓர் எடுத்துக்காட்டு.

எதிர்வரும் மூன்றாண்டு கால அளவுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் களத்திலும் - அடுத்து சட்டமன்றத் தேர்தல் களத்திலும் நமது கழகம் ஜனநாயகக் கடமையை ஆற்றிட இப்போதே ஆயத்த மாகிறது - அதன் ஒரு கட்டமே தேர்தல் நிதி திரட்டும் பணி.

இப்பணி மட்டுமல்ல; கழகப் பணி எதுவாயினும் கடிதில் அதனை நிறைவேற்றிட மணி மணியாகப் பலர், அமைப்புகள் அனைத்திலும் தேர்வு செய்யப்பட்டு உழைத்து வருகிறார்கள்.

மாவட்டக் கழகச் செயலாளர்களான மூத்த தளகர்த்தர்களும் - இளங்காளையரும் - முறையே தங்கள் அனுபவங்களையும்

ஆர்வத்தையும் பகிர்ந்து கொண்டு ஆற்றிடும் பணி, என்னை மலைக்க வைக்கிறது.

ஒன்றியங்களோ ஒன்றுக்கொன்று கடும் போட்டியிட்டுக் கொண்டு வரிந்து கட்டி தேர்தல் நிதி வசூலில் இறங்கிடும் செயல்வீரர்களின் தொண்டினால் என் சிந்தையை குளிர வைக்கின்றன.

சிற்றூர் - பேரூர் - நகரம் - மாநகரம் ஒன்றை விட ஒன்று சளைத்ததல்ல என்று நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நிற்கின்றன.

கழக முன்னோடிகளும், முன்னணியினரும், தலைமைக் கழக நிர்வாகிகளும், அணிச்செயலாளர்களும், தேர்தல் பணிச் செயலாளர்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் நமது செயல்வீரர்களின் பெருங்கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன்; தனது சுற்றுப் பயணத்தில் கண்ட கழகத்தினரின் சுறுசுறுப்பையும் - அவர்களின் தேர்தல் நிதி திரட்டும் ஆர்வத்தையும் - அவர்களுக்கு இவர் உற்சாகமூட்டி மேலும் விரைந்து பணிபுரியச் செய்துள்ளதையும் - என்னிடமும், பொதுச் செயலாளரிடமும், பொருளாளரிடமும் கூறி எம்மைப் பூரிப்பு கொள்ளச் செய்கிறார்,

தேர்தல் நிதி திரட்டும் தீவிரத்தை முதலிலேயே தெளிவுபடுத்தி விட்டது - காஞ்சி மாவட்டம்!

முதல் நிகழ்ச்சியாக அந்த மாவட்டச் சார்பில் காஞ்சியில் நடைபெற்ற கடல் பெருக்கனைய மகத்தான நிதியளிப்பு விழா பொதுக் கூட்டத்தில் என்னிடத்தில் பதினெட்டு லட்ச ரூபாய் வழங்கினார்கள். இன்று மாலையில் (13-7-2003) இருபத்திரண்டு லட்ச ரூபாய் அடுத்த தவணையாக; அண்ணா அறிவாலயத்திற்கே வந்து வழங்குவதாக காஞ்சி மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார். திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் அண்ணா அறிவாலயத்திற்கே வந்து என்னிடம் பத்து இலட்ச ரூபாய் முதல் தவணையாக அளித்துள்ளார்கள்.

தமிழக முழுவதுமிருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் தலைமைக் கழக அலுவலகத்திற்கு வந்து நேரில் என்னிடம் தேர்தல் நிதி வழங்கிய வகையில் வரவு வந்தது 8,88,917 ரூபாய். -

துணைப் பொதுச் செயலாளர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் தனித்தனியே கழகத்தினர் வழங்கிய தேர்தல் நிதி 1,71,588 ரூபாய். பல மாவட்டங்களில் நடந்த நிதியளிப்புக் கூட்டங்களில் மேலும் ஸ்டாலினிடம் வழங்கப்பட்ட தொகை 1,82,90,000 ரூபாய். இரண்டும் சேர்ந்து 1,84,61,588 ரூபாய். இத்துடன் என்னிடம் தரப்பட்ட நிதியையும் சேர்த்தால் தலைமைக் கழகத்திற்கு இதுவரை கிடைத்துள்ள தேர்தல் நிதி 243,50,505 ரூபாய் ஆகும்.

எனவே இதுவரை இரண்டரைக் கோடி ரூபாயை எட்டியிருக்கும் தேர்தல் நிதி, நாம் எதிர்பார்க்கும் 25 கோடி ரூபாயை நெருங்குவதற்கு இன்னும் பல படிக்கட்டுகள் ஏறவேண்டும்.

அதற்குத்தான் தேர்தல் நிதி திரட்டுவதற்கான ஒரு பயணத் திட்டத்தை அறிவித்து; அதனை உன் போன்ற உடன்பிறப்புகள் உதவியுடன் வெற்றிபெற வைக்கலாம் என நம்புகிறேன்.

அத்திட்டம் வருமாறு:

மாவட்டத் தலைநகர் ஒன்றில் நான் கலந்து கொள்ளும் நிதியளிப்பு விழாக் கூட்டம். அதற்காக ஆகஸ்ட் 16 முதல் இடையிடையே சிறிது ஓய்வெடுத்து 8 நாட்கள் அந்த நிதியளிப்பு விழாக்களில், 8 நகர்களில் கலந்துகொள்ள முடிவு செய்திருக்கிறேன்.

அதன்படி ஆகஸ்ட் 16ஆம் நாள் சனிக்கிழமை அன்று தஞ்சையில் நடைபெறும் நிதியளிப்பு விழா நிகழ்ச்சியிலும், ஆகஸ்ட் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை அன்று திருச்சியில் நடைபெறும் நிதியளிப்பு விழா நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறேன். தஞ்சை நிகழ்ச்சியில் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களின் சார்பிலும், மறுநாள் திருச்சியில் நடை பெறும் நிகழ்ச்சியில் திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் சார்பிலும் தேர்தல் நிதி வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டமும் தலைமைக் கழகம் ஏற்கனவே நிர்ணயித்து அறிவித்தவாறு தேர்தல் நிதியை வழங்கும்.

மற்றும் எந்தெந்த நகரங்களில், எந்தெந்த நாட்களில் நிதியளிப்பு விழாக் கூட்டம்; எந்தெந்த மாவட்டங்கள் அந்த விழாவில் கலந்து கொள்கின்றன; - கலந்துகொண்டு அந்த ஒரே

விழாவில் நிதியளிக்கின்றன என்ற விபரங்கள் ஓரிரு நாட்களில் விளக்கமாக அறிவிக்கப்படும்.

குறிப்பிட்ட ஒரு மாவட்டத் தலைநகரில் இந்த நிதியளிப்புக் கூட்டம் என்றால் அந்தக் கூட்டத்தில் அருகில் உள்ள மாவட்டங்களும் இணைந்து கொள்ளும் அளவுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

மேலும் விபரங்கள் வேண்டுமெனில் துணைப் பொதுச் செயலாளர் மு.க. ஸ்டாலினிடமும், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகனிடமும் கலந்துபேசி அறிந்துகொள்ள வேண்டுகிறேன்.

என் விருப்பம், செப்டம்பர் 15ஆம் நாள் அண்ணா பிறந்த நாள் விழாவுக்கு முன்பே 25 கோடி ரூபாய் தேர்தல் நிதி திரட்டும் பணி நிறைவுற வேண்டும் என்பதாகும்.

ஒத்துழைப்பீர்!
உறுதுணையாவீர்!

அன்புள்ள,

மு.க.

14-07-2003

2946. வெந்த புண்ணில் வேல் !

உடன்பிறப்பே,

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் தங்கள் தேவைக்கேற்ற வசதிகளைக் கோரிப் போராடக்கூடிய தீவிர சமதர்மக் கொள்கையை முன் வைத்துக் கொடி உயர்த்தாமலே; தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் உரிய சலுகைகள் இவற்றுக்காக மட்டுமே கோரிக்கை வைத்துப் போராடுவதையே; ஏதோ பெரிய குற்றமென்றும் - தேவையற்ற கூக்குரல் என்றும் - பொது மக்களிடத்திலே விமர்சனப் பிரச்சாரம் செய்கிற ஒரு சிலர் இருக்கிறார்கள்.

அந்தச் சிலர் பத்திரிகைக்காரர்களாக இருக்கலாம் - அரசியல்வாதிகளாக இருக்கலாம் - போராட்டங்களால் அசௌகரியங்களுக்கு ஆட்படுபவர்களாக இருக்கலாம் - அரசு ஊழியர் - ஆசிரியர் - தொழிலாளர் என்போர் எந்தத் துறையை அல்லது எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயினும் அவர்கள் மீது ஓர் ஒவ்வாமையை (Allergy) மக்களில் ஒரு பகுதியினரிடம் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

உழைக்கும் வர்க்கத்தினர் கோரிக்கைகளுக்காகப் போராடும் பொழுது அவர்களை விமர்சிக்க ஏதோ ஓரிரு குறைகளைப் பூதாகரப்படுத்தி மொத்தமாகவே அந்தச் சமுதாயத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் நிலைமையையும் நான் அறியாதவனல்ல! அதற்காகப் பல லட்சக்கணக்கான அரசு அலுவலர், ஆசிரியர், பல்வேறு துறை மற்றும் பிரிவுகளின் தொழிலாளர்கள் அனைவரும் ஒருவர் பாக்கியில்லாமல் அத்தனைப் பேரும் பத்தரை மாற்றுத் தங்கம் என்று நான் வாதிட விரும்பவில்லை. சந்திரனில் களங்கம் என்பதற்காக நிலவொளியையே வெறுத்து விடுவது உண்டா? அதேபோல அரசு

ஊழியராயினும் - ஆசிரியர்களாயினும் - தொழிலாளர்களாயினும்; அவர்களிலே நூறு பேரில் ஒருவர் இருவர் - அதிகமெனில் ஐந்து அல்லது ஆறு பேர் தங்களுக்குரிய கடமையைச் சரிவரச் செய்யா திருக்கக்கூடும். அதற்காக மொத்தப் பேரும் மோசம் என்று அவர்களைக் கடுமொழிக்கும் சுடுமொழிக்கும் ஆளாக்கிட முனைவது; அவசரத்தை மட்டுமல்ல; அசூயையும் வெளிப்படுத்துகிற காரியமாகும்.

அதேபோல சங்கங்கள் என்ற பெயரால் இயங்கத் தொடங்கித் தங்கள் நலன்களை மட்டுமே முன் வைத்து, தோற்றத்திற்கு; உழைப்போர்க்கு உற்ற நண்பனாகவும் - திரைமறைவில் காட்டிக் கொடுக்கும் கயவர்களாகவும் உள்ள தொழிற்சங்கத் தலைவர்களும் உண்டு என்பதை 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் "திரும்பிப் பார்" திரைப்படத்தில் "பரந்தாமன்" என்ற பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறேன்.

அத்தகைய ஒன்றிரண்டு உலுத்தர்களையும் ஒதியமிலார்களையும் வைத்து - உழைப்போர்க்கான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிடப் போராடும் சங்க அமைப்புகளையும் அந்த சங்கங்களின் நேர்மையான தலைவர்களையும் எடை போடுவது என்பது எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல!

அமைப்பு ரீதியாகவோ - அமைப்பு சார்ந்து இல்லாமலோ உழைக்கும் வர்க்கத்தை உதாசீனப்படுத்தாமல் அந்த வர்க்கத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது என்பது அடுத்த கட்டமாக இருப்பினும்; முதல் கட்டமாக அந்த உணர்வுகளைக் காலில் போட்டு மிதிப்பது என்பதை அனுமதிப்பதைவிட அவமானகரமான செயல் வேறெதுவும் இருக்க முடியாது - அதனை அனுமதிக்கவும் முடியாது. இன்று தவறினால் நாளை; நாளை தவறினால் நிச்சயம் ஒரு நாள்; கூனனும் நிமிர்வான் - குருடனும் கண் திறப்பான் - நொண்டியும் நடப்பான் - முடவனும் முஷ்டியை உயர்த்துவான்!

மிஞ்சினால் கெஞ்சுவான் என நம்பி; மிடுக்குடன் தற்காலிகமாகத் தர்பார் நடத்த முடியுமே தவிர - அவன் எதற்கும் அஞ்சிடாமல் அணிவகுத்துக் கிளம்பி விட்டால்; எரிமலையையே மத்தாப்புக் கொளுத்துவான்! என்பதை வரலாறு கூறுகிறது; அதை வசதியாக மறந்து விடக் கூடாது!

அவன் என்ன; கொடுக்கும் ஊதியத்தை இனி இரட்டிப்பாக்குக என்றா கேட்டான் - புதிதாகவா போனஸ் கேட்டான் - ஓய்வூதியப் பயன்களை ஒன்பது மடங்கு உயர்த்துக என்றா கேட்டான் - சரண்டர் விடுப்பு சலுகை என ஒன்றை அறிமுகம் செய்திடுக என்றா கோரினான் - அய்யோ ; பாவம் அவன் எதையும் புதிதாகக் கேட்கவில்லையே!

ஏற்கனவே பெற்றுவந்த உரிமைகளையும் சலுகைகளையும் பறித்துக் கொண்டீர்களே, அதைத் திரும்பக் கொடுங்கள் என்றுதான் அறப்போர் வியூகம் வகுத்தான். இழந்ததைப் பெறத்தான் போராடினான் - இருப்பதையும் இழப்போம் என அவன் எதிர்ப்பார்க்க வில்லை.

நாடு வாழ்வதற்கு நாளெல்லாம் பாடுபடும் அந்த வர்க்கத்தின் வீடு வாசல் கூட விடப்படவில்லை - மாடு மனைகள் பெண்டு பிள்ளைகள் - காவல் துறையினர் கரங்களில் சிக்கித் தவித்தனர் -

விலை இவ்வளவு கொடுத்தும்கூட இந்த அரசிடம் அவர்கள் வேண்டியது கிடைக்கவில்லை - உலகில் எந்த நாட்டிலும் நடைபெறாத கொடுமையாக ஒரே வீச்சில் சுமார் நான்கு லட்சம் அரசு ஊழியர் பணி நீக்கம் செய்யப்பட்டனர் - ஆயிரக்கணக்கானோர் சிறைப்பட்டனர் - அதிர்ச்சி மரணம் - தற்கொலைச் சாவு - எண்ணற்றவை ஆயின!

யாராவது அவனைப் பார்த்து - அவனுக்கு ஏற்பட்டுள்ள அவலத்தைப் பார்த்து - "அவனுக்கு இது வேண்டிய தண்டனைதான்" என்று சொன்னால்; அப்படிச் சொல்லுகிற 'புண்ணியவான் தன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும்; அவர்; அந்த உழைக்கும் வர்க்கத்தில் ஓர் அங்கமாக இருந்தால் - இதே நிலைக்கு அவர் ஆட்பட நேர்ந்தால் - இருந்தவைகளை இழந்ததையும் - அப்படி இழந்தவற்றைத் திரும்பக் கேட்டதற்குச் சிறை என்றும் - தடியடி என்றும் - டிஸ்மிஸ் என்றும் - தண்டனைக் கிடைத்ததையும் வயிறு கொஞ்சம்கூட எரியாமல் வரவேற்று மகிழ்ந்திருப்பாரா?

உயிர்வாதை அடைந்தோர் - ஒடுக்குமுறைக்கு உள்ளானோர் - ஒருவரா இருவரா? - லட்சக்கணக்கானோர் அன்றோ?

அந்த லட்சோப லட்சம் துடிக்கும் இதயங்களின் காயங்களிலே கண்ணீரை மருந்தாக்க வேண்டுமே தவிர, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சாதீர் என்பதே என் வேண்டுகோள்!

அன்புள்ள,

மு.க.

15-07-2003

2947. தனி மனிதன் வாழ்வல்ல அவர் வாழ்வு!

உடன்பிறப்பே,

மறைந்த தலைவர்கள், மற்றும் சான்றோர்கள் யாராயினும் அவர்களுக்கும் நமக்கும் எவ்வளவு கொள்கை வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவர்களின் சிறப்புகளையும், சீலமிகு செயல்களையும், செயற்கரிய மக்கள் பணிகளையும், தியாகங்களையும், ஆற்றலையும், என்றைக்கும் நாம் மறந்ததில்லை. நன்றி உணர்வோடு அவர்களை நினைவூட்டும் வகையில் அழியாச் சின்னங்கள் பலவற்றை கழக ஆட்சியின் சார்பாக அமைத்திருக்கிறோம்.

எடுத்துக்காட்டாக, இன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாள். அவர் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடப்படுகிறது. நூற்றாண்டு தொடக்க விழாவிற்கு முரசொலி வெளியிட்ட , காமராஜர் சிறப்பு மலர்; அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்டு, போற்றப்பட்ட பரந்த மனப்பான்மைக்கும் கழகத்தின் அரசியல் பண்பாட்டிற்கும் உரிய உதாரணமாகும்.

முதன் முதலாக தமிழகத்திலே காமராஜர் அவர்களுக்கு சிலை அமைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்த சென்னை மாநகராட்சியைச் சேர்ந்ததாகும். அண்ணாவிற்கு சிலை வைக்க அந்நாள் சென்னை மேயர்களாக இருந்த முனுசாமியும், அ.பொ. அரசும் நாங்களும் ஆவலோடு அண்ணாவிடம் அனுமதி கோரியபோது அண்ணா , தனக்கு சிலை வேண்டாம், காமராஜருக்கு சிலை எடுங்கள் என்று கட்டளையிட்டார். அதனை யேற்று மாநகராட்சி சார்பாக சிலை நிறுவும் முயற்சியிலே ஈடுபட்டோம். சிலையைத் திறந்து வைக்க பிரதமர் பண்டித நேரு அழைக்கப்பட்டார். உயிரோடு இருப்பவர்களுக்கு சிலை வைப்பதை ஏற்றுக் கொள்ளாத நேரு

அவர்கள் விதிவிலக்காக, காமராஜர் சிலையைத் திறந்து வைக்க ஒப்புக் கொண்டார்.

ஒப்புக் கொண்டவர் டெல்லியில் இருந்தவாறே சென்னையிலே இருந்த காமராஜருடைய சிலையைத் திறந்து வைக்கவில்லை. சென்னைக்கே வந்து விழாவிலே கலந்து கொண்டு காமராஜர் சிலையை நேரு பிரான் திறந்து வைத்தார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடன், அவர் ஆளுங்கட்சியில் நாங்கள் எதிர்க்கட்சியில் என்ற நிலையிலும் பழகியிருக்கிறோம். நாங்கள் ஆளுங் கட்சி, காங்கிரஸ் எதிர்க்கட்சி என்ற நிலையிலும் பழகியிருக்கிறோம். காவேரிப் பிரச்சினை, நெருக்கடி கால நிலை என்பன போன்றவற்றில் ஒவ்வொரு முடிவிற்கு முன்பும் அவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் ஆயிற்றே என நினைக்காமல், மூத்த அரசியல் தலைவர் என்ற முறையில் அவரை நான் அணுகி அவருடைய வீட்டிற்கே சென்று அவருடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு அவ்வாறே செயல்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்து நடத்திய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது அண்ணா அவர்கள் தலைமையில் இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகீர் உசேன் மாநாட்டினைத் திறந்து வைத்தார் என்றால், மாநாட்டிற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றி அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் காமராஜர் அவர்கள்தான்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்திலிருந்து குமரி முனை கடற்கரையிலே அனுமதிக்கப்படாத இடத்தை , தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் வலியுறுத்தி, வாதாடிப் பெற்று அந்த இடத்தில் காமராஜருக்கு ஏற்றமிகு மணி மண்டபம் நான் எழுப்பியதை எவர்தான் மறந்திட இயலும்?

சென்னை கடற்கரை சாலை, கழக ஆட்சியில் காமராஜர் சாலை ஆயிற்று. மீனம்பாக்கம் உள்நாட்டு விமான நிலையம் காமராஜர் பெயர் தாங்கி நிற்பதற்கு காரணம் கழக ஆட்சி பிரதமர் திரு. வி.பி. சிங் கலந்து கொண்ட சென்னை கூட்டத்தில் நான் வேண்டுகோள் விடுத்த அடுத்த வினாடியே அந்தப் பெயரை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது என்பதும் நாடறிந்த உண்மை.

விருதுநகரில் காமராஜர் பிறந்த இல்லத்தை நினைவகம் ஆக்கியது, சென்னையில் அவர் உடலை அடக்கம் செய்ய அண்ணல் காந்தி அடிகளின் பெயரால் உள்ள மண்டபத்திற்குப் பக்கத்திலேயே இடம் தேடி அங்கே எழிலார் நினைவகம் அமைத்தது, தமிழகத்தின் பல ஊர்களில் அவருக்கு சிலை வைத்தது, இவையும் இன்னும் பலவும், கர்ம வீரர் காமராஜர் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஆற்றிய தொண்டுக்கு கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட எளிய காணிக்கைகளாகும்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு காமராஜரின் தாயார் பெயர் நிலைக்கும் வகையில் "அன்னை சிவகாமி அம்மையார் வளாகம்" என்று பெயர் சூட்டியதும், அரசின் "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு சிவகாமி அம்மையார் பெயரைச் சூட்டி அதை நடைமுறைப்படுத்தியதும், காமராஜரின் ஊழியராக பணியாற்றிய ஒருவரை சென்னை காமராஜர் நினைவகத்தில் வழிகாட்டியாக அரசு ஊதியத்தில் அமர்த்தியதும், அவர் குடியிருக்க அரசு குடியிருப்பில் வீடு வழங்கியதும் கழக ஆட்சிதான். காமராஜரின் சகோதரி திருமதி நாகம்மாள் அவர்களை என் சகோதரியாகவே கருதி, அந்த வழி செல்லும் போதெல்லாம் அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். காலம் எல்லாம் மக்களுக்கென உழைத்த அந்தக் கர்ம வீரரின் நினைவை நன்றியோடு போற்றியது கழகம் என்பதற்கு இவையும் எடுத்துக்காட்டுகளாகும்.

என் அருமை அன்னையார் அஞ்சுகம் அம்மையார் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 27-1-1963 அன்று இயற்கையெய்தியபோது அவரது உடல் என் வீட்டிற்கு வந்து சேருவதற்கு முன்பே அப்போது முதல் அமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எனக்கு நேரில் ஆறுதல் கூறுவதற்காக எனக்கு முன்பே என் இல்லத்திற்கு வந்து காத்திருந்தது என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

மு.க. ஸ்டாலின் திருமணத்தின்போது நேரில் சென்று அவரை அழைத்தேன். உடல் நலிவைக் காரணம் காட்டி வரஇயலாதே என்று வருத்தப்பட்டார். அவர் வரவேண்டும் என்பதற்காகவே திருமண மண்டபத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அவர் வரும் கார், மேடைக்கே வந்து அவர் மேடையிலேயே இறங்குவதற்கு

ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவரும் வந்திருந்து வாழ்த்தியது எனக்கும் ஸ்டாலினுக்கும் என்றும் பசுமையான நினைவாகும்.

நெருக்கடி கால நிலைமையின் போது காமராஜரை நான் சந்தித்து, ஆட்சியை விட்டு விலகி அவர் தலைமையிலே எமர்ஜன்சியை எதிர்த்துப் போராடவும் தயாராக இருக்கிறேன் என்று கூறியதும், அவ்வாறு செய்யக் கூடாது என்று அவர் என்னைத் தடுத்ததும் மறக்க முடியாத நிகழ்ச்சிகளாகும்.

இந்தக் கடிதத்தை முடிப்பதற்கு முன் காமராஜர் பிறந்த நாளையொட்டி 15-7-1976இல் நான் எழுதிய ஒரு கவிதை, கடந்த ஆண்டு முரசொலி காமராஜர் மலரில் வெளி வந்ததை இத்துடன் இணைத்துள்ளேன், ஒருவருக்கொருவர் நாங்கள் கடுமையாகத் தாக்கிக் கொண்டாலும், கனிவாகத் தழுவிக் கொண்டாலும், "தமிழ்க் குலம்" என்ற உணர்வு தழைத்தோங்கி இருந்தது என்பதற்கு நான் எழுதிய இந்தக் கவிதை சான்றாக விளங்குகிறது.

"பெருந்தலைவ;
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் - கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!
விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைந்த தலைவனாய் நின்றாய்!
சிறையின் கொடுமையும் சித்ரவதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி
ஆயிரம் உண்டு கருத்து மோதல் - எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப்போமோ?
தமிழ்நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!
கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும் - நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!
கதராடை மேனிதனை அலங்கரிக்கும் -
கதறுகின்ற ஏழைகனைக் கரம் அணைக்கும்.
கட்சிகளை நோக்கி நீ கடுமொழிகள் தொடுத்திடுவாய் - பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால் துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர், மூதறிஞர் மறைந்த போதும் உன் கண்ணீர் !
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!

பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ?
தனி மனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்
குமரிமுதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ !
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம்
வாஞ்சையும் காட்டினாய். உன் -
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும்
நிலை நாட்டினாய்
இன்றைக்கு உன்றன் பிறந்த நாள் -
என்றைக்கும் அது சிறந்த நாள்!

அன்புள்ள,

மு.க.

16-07-2003

2948. பொன்மொழியும் பொய்மொழியும்!

உடன்பிறப்பே,

சிதம்பரம் என்றாலே ஒற்றைக் காலில் நிற்கும் நடராஜப் பெருமானின் நினைவுதான் பக்தர்களுக்கு வரும் - இன்றைக்கு ஒரு சிதம்பரம் தமிழ்நாட்டில் காமராஜர் ஆட்சியை அமைத்து, அந்த ஆட்சியின் முதல் அமைச்சராக அவரே வந்துவிட வேண்டு மென்றும் - வந்து விடப் போவதாகவும் - ஒற்றைக் காலில் நின்று கொண்டிருக்கிறார் என்பதை அவர்; மதுரையில் நடைபெற்ற காமராஜர் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய பேருரையின் மூலம் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

> “2004ல் பார்லிமெண்ட் தேர்தலில் சோனியா காந்தி தலைமையில் ஆட்சி அமைந்திட காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை துணை நிற்கும். 2006ல் இளைய தலைமுறையின் கீழ் ஆட்சி அமைய எங்களுக்குக் காங்கிரஸ் துணை நிற்க வேண்டும்”

என்று அந்தக் கூட்டத்தில் நண்பர் ப. சிதம்பரம் அவர்கள்; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களான திரு. சோ. பாலகிருஷ்ணன், சிதம்பரம் அவர்களை விட வயதில் இளையவரான காங்கிரஸ் செயல் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அவர் காமராஜர் ஆட்சியை அமைக்கட்டும்; அவரே அந்த ஆட்சியின் தலைவராக வரட்டும்; அதற்குக் காங்கிரஸ் கட்சியும், அவர் வேண்டுகோளையேற்று துணை நிற்கட்டும் - அது அவருக்கும் காங்கிரஸ் கட்சிக்குமிடையே ஏற்படும் உடன்பாட்டைப் பொறுத்தது - நாம் அதைப் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. அதனால் நமக்கு எந்தக் கவலையும் இல்லை!

ஆனால் அவர் அத்துடன் நிறுத்தாமல் தேவையின்றி தி.மு.க.வை ஏன் வம்புக்கு இழுத்திருக்கிறார் அந்தக் கூட்டத்தில்

என்பதுதான் வியப்பாயிருக்கிறது. தி.மு.க.வை வம்புக்கு இழுத்திடக் கூடாது என்று நான் கூறவில்லை; அதனைச் சந்திக்கும் ஆற்றலற்றவர்கள் அல்லர், தி.மு.க.வினர் என்பதை அவரே நன்கு உணர்வார்.

எதிர்க்கட்சி மேடைகளில் பொதுவாக ஆளுங்கட்சியின் குற்றம் குறைகளை, மக்கள் விரோதப் போக்குகளை, ஜனநாயகத்திற்குப் புறம்பான சர்வாதிகார அடாவடித்தனங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதுதான் முதன்மையானதாக இருக்கும் - இருக்க வேண்டும் - அதை விடுத்து ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வை விமர்சிப்பதுடன் நிறுத்தாமல் எதிர்க்கட்சிகளில் ஒன்றான தி.மு.க.வை; அ.தி.மு.க.வுடன் ஒப்பிட்டு இரண்டும் ஒன்றுதான் என்று பேச வேண்டிய முகாந்திரம் சிதம்பரம் அவர்களுக்கு என்ன வந்தது?

அதிலும் உதயசூரியன் சின்னத்திலே நின்று வெற்றிபெற்ற புரசைவாக்கம் நண்பர் ரங்கநாதன், காட்டுமன்னார்கோவில் டாக்டர் வள்ளல்பெருமான் போன்றவர்கள் இன்னமும் சட்டமன்ற உறுப்பினர்களாக வீற்றிருக்கும் நிலையில் - அவர்களும் காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையில் இடம் பெற்றுள்ள இளைஞர்கள் தான் என்கிறபோது; தி.மு.க. வுடன் மோதுகிற; தேதி - மாதம் - வருடத்தையாவது, சற்று தள்ளி வைத்துக் கொள்ளக் கூடாதா?

உடன்பிறப்பே; எனக்குத் தெரியும் - வழக்கமாக நடப்பதுதான் - திரு. சிதம்பரம் இப்படி எதையாவது தி.மு.க.வைப் பற்றிப் பேசிவிடுவது; மறுநாள் நண்பர் ரங்கநாதன் என்னையோ, நமது பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியையோ பார்த்து "அதை யெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" என்பது - இது ஒரு விநோதமான விவகாரமாகவே இருந்து வருகிறது.

ஆனால் மதுரை விழாவில் அருமை நண்பர் சிதம்பரம் அளவு மீறிவிட்டார் என்பதை சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது.

"தி.மு.க.வுக்கு மாற்று அ.தி.மு.க; அதற்கு மாற்று தி.மு.க. என்றுள்ளது. இதுவல்ல மாற்றம். இரண்டு பேரும் ஊழல், வன்முறை, பழிவாங்கல் போன்ற வற்றில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல"

இது ப.சி. அவர்கள் மதுரையில் பாடிய பாட்டு.

சிதம்பரம் அவர்கள் தி.மு.க.வும் ஊழல், வன்முறை, பழிவாங்கல் முறையில் ஆட்சி நடத்தியது என்று குற்றம் சுமத்தியுள்ளதற்கு, விரிவான பதில் அளிப்பதற்கு அதிக நேரம் ஆகிவிடாது.

அவர் தி.மு.க.வை நோக்கி ஒரு விரலை நீட்டும் போது எஞ்சியுள்ள அவரது நான்கு விரல்கள் அவரை நோக்கித்தான் நீட்டப்பட்டிருக்கின்றன என்பதை அவரே நினைத்துப் பார்த்துக்கொள்ளலாம். தேவைப்பட்டால் தி.மு.க.வின் கிளைக் கழகச் செயலாளர் ஒருவரே அவற்றை அவருக்கு நினைவூட்டும் திறமை பெற்றவராக இருப்பார். நினைவூட்டத் தவற மாட்டார்.

ஏன்; சிதம்பரம் அவர்களே கூட 2001 பொதுத் தேர்தலிலே அவரால் இன்று அ.தி.மு.க.வுடன் இணைத்து இழித்துரைக்கப்படுகிற இதே தி.மு.க.வின் தலைமையிலான கூட்டணிக்குத்தானே ஆதரவு தந்தார் - அந்தக் கூட்டணியில்தானே அவரும் இருந்தார் - 2001ல் அந்தத் தேர்தல் முடிந்து இந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் தி.மு.க. எப்படி அவருக்கு கசந்து போய் விட்டது? மாயமா? மந்திரமா?

மாசறு பொன்னாக விளங்கிய தி.மு.க. ; இன்று சிதம்பரத்தின் ஆராய்ச்சியில் அ.தி.மு.க.வுடன் இணைந்த மண்ணாங்கட்டியாக ஆகிவிட்ட மர்மம் தான் என்ன?

“இந்தியப் பிரதமர் யார் என்பதை வேட்டி கட்டிய இரு தலைவர்கள் முடிவு செய்வார்கள்’’ என்று அடியெடுத்துக் கொடுத்து அதையே அரசியல் பொன்மொழியாக்கிய சிதம்பரமா; இப்போது; முதலில் கூறியது பொய் மொழி என்று ஆக்குவது?

விவாதம் என்று வந்து விட்டால்; எல்லாம் விரிவாக எடுத்துரைக்கத்தான் வேண்டியிருக்கும் - தி.மு.க. என்றால் தீ மிதித்தவர் போலத் தாண்டிக் குதித்து தாறுமாறாகப் பேசிடும் தறிகெட்டப் போக்கினர்க்கு இருபது ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியையும் சற்றுத் திரும்பிப் பாருங்கள் என்று சொல்லும் உரிமை நமது கழகத்திற்கு உண்டு.

பஞ்சாப் முதல்வர் கெய்ரோனில் தொடங்கி - பக்கத்து டி.டி.கே. வரையிலே - பக்தவத்சலனார் ஆட்சியில் மொழிப் புரட்சி முதற்கொண்டு நெருக்கடி காலத்து ஆர்.வி. - சி.எஸ். வரையிலே எத்தனையோ விரிவான சரித்திரச் சம்பவங்கள்! அவற்றை இப்போது

சுருக்கமாகக் கூடக் குறிப்பிட விரும்பவில்லை ; காரணம் கர்மவீரர் காமராஜரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவிலே அதெல்லாம் வேண்டாமென்று கருதுகிறேன். அதனால் நண்பர் சிதம்பரம் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியவைகளை இன்றைக்கு இத்துடன் நிறுத்துகிறேன். தேவையெனில் அப்போது விரிவாக!

அன்புள்ள,

மு.க.

17-07-2003

2949. கா.கா. வின் கதைகளுக்கு மு.க.வின் விளக்கம்!

உடன்பிறப்பே,

நாமக்கல்லில் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொண்டு கதைகள் சொன்ன அரசு விழாவில் சபா நாயகர் காளிமுத்துவும் தன் பங்கிற்கு மூன்று கதைகளை மூட்டை கட்டிக் கொண்டுபோய் விழாவில் அவிழ்த்திருக்கிறார். அவர் சொன்ன கதைகள் மூன்றையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, கா. காளிமுத்துவின் கதைகளுக்கு அதாவது காகா வின் கதைகளுக்கு இந்த மு.க.வின் விளக்கங்களைத் தருகிறேன்.

(1) "ஒரு செம்மறி ஆட்டின் முதுகில் ஒரு காகம் நீண்ட நேரம் உட்கார்ந்து சவாரி செய்து வெகு தூரம் சென்றது. அதனால் பொறுமை இழந்த ஆடு "என் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்கிறாயே, உன்னால் ஒரு புலியின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்ய முடியுமா" என்று காகத்தைப் பார்த்து ஆடு கேட்டது. அதற்கு அந்தக் காகம், "யார் முதுகில் சவாரி செய்தால் பிரச்சினை வரும், யார் முதுகில் உட்கார்ந்தால் பிரச்சினை வராது என்று எனக்குத் தெரியும்" என்று கூறியது.

அதுபோல் முன்பு சாதிக் கலவரங்களைத் தூண்டிய தலைவர்கள் இப்போது அடக்க ஒடுக்கமாக இருக்கிறார்கள்."

அவர் சொன்ன இந்தக் கதையில் செம்மறியாடு யார்? காகம் யார்? புலி என்று எவரைக் குறிப்பிடுகிறார் என்று புரியவில்லை. எப்போதும் அருமையாக உவமைக் கதைகளைச் சொல்லி அற்புதமாக அந்தக் கதாபாத்திரங்களுடன் தற்கால அரசியல்வாதிகளையோ ஆட்சியாளர்களையோ பொருத்திக் காட்டும் திறன் பெற்ற தீரராகிய காளிமுத்து அவர்கள்;

புலிக்கு, ஆட்டுக்கு, காக்கைக்கு யாரையும் பொருத்தமான உவமையாக இந்தக் கதையில் காட்ட முடியவில்லையோ அல்லது காட்ட விரும்பவில்லையோ தெரியவில்லை. "சாதிக் கலவரங்களைத் தூண்டிய தலைவர்கள் இப்போது அடக்க ஒடுக்கமாக இருக்கிறார்கள்" என்கிறார். கண்ட தேவி தேரோட்டம் நின்றிருக்கும் நேரத்தில்; இன்னமும் அந்தப் பேத உணர்வுகள் தலைதூக்கிக் கொண்டுதானே இருக்கின்றன என்று எல்லோருமே தலைகுனிய வேண்டிய நிலைமை இருக்கும்போது; பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் ஆகிய கிராமங்களில் ஊராட்சிமன்றத் தேர்தலே எக்காலத்திலும் நடக்க முடியாமல் - நடந்தாலும் நிலைக்க முடியாமல் இருப்பது கண்டு கட்சிகளுக்கு அப்பாற்பட்டுக் கவலையுடன் நாணமும் கொள்ள வேண்டிய நிலை தொடரும்போது ஆடாவது; புலியாவது; காக்கையாவது; கழுகாவது யார் முதுகில் உட்கார்ந்தால் பிரச்சினை வரும் என்பதை சுட்டிக் காட்டிவிட்டு; அது புலி முதுகிலா? அல்லது ஆட்டின் முதுகிலா என்பதைச் சபாநாயகர் சொல்லாமலே விட்டு விட்டால் எப்படி?

எனவே; சிம்மாசனத்தில் செம்மறியாடு இருந்தா லும் - சீறிடும் புலி இருந்தாலும் - கண்டதேவிகளும் உலவுகின்றன! பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலங்களும் காக்கைகளாகத்தான் இருக்கின்றன! சமத்துவப் புறாக்களாகவோ, ஜனநாயக வானம்பாடி களாகவோ ஆகவில்லை! அங்ஙனம் ஆவதற்கு புலி மிரட்டல் பயன்படாது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்; எல்லோருமே!

(2) இனி காளிமுத்து அவர்களின் இரண்டாவது கதையைப் பார்ப்போம்.

"முதல்வர் ஜெயலலிதா எந்தெந்த திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தெரிந்து வைத்து அதற்கு ஏற்றாற்போல் முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றி வருகிறார். தினமும் காலையில் வீட்டு வாசலில் கோலம் போடச் செல்லும் பெண்களுக்கு தங்கள் கோல டப்பாவில் கோல மாவு எவ்வளவு இருக்கிறது என்று தெரியும். அதற்கு ஏற்றாற்போல்தான் அவர்கள் புள்ளியை வைத்து கோலம் போடுவார்கள். கோல மாவுக்குத் தகுந்தாற் போல் புள்ளி வைக்கவில்லை என்றால் கோலம் பாதியில் நின்று விடும்.

புரட்சித் தலைவியும் அதுபோல கோலம் போடத் தெரிந்து வைத்து ஆட்சியில் திருக்கோலம் போட்டு வருகிறார். ஆனால் கடந்த கால ஆட்சியில் வெறும் அலங்கோலங்கள்தான் நடந்தன."

எந்த எந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று ஜெயலலிதாவுக்குத் தெரிந்திருக்கிறதாம். அடடா! ஆமாம். அவைத் தலைவர் சொல்வது சரிதான் - வீராணம் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் எதிர்ப்பையும் மீறி; 720 கோடி ரூபாய் வீராணம் திட்டத்தை சென்னையில் நிறைவேற்ற முன்வந்துள்ளதும் - இப்போதே தலைமைச் செயலகத்துக்குப் பொருத்தமான இடமாக செயின்ட் ஜார்ஜ் கோட்டை இருந்தும் - அதை விடுத்து 500 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீட்டில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க இராணி மேரிக் கல்லூரியை இடிக்க முனைவதும் - காளிமுத்து சொல்கிறாரே கடந்த ஆட்சியில் அலங்கோலம்; இந்த ஆட்சியில் அழகுக் கோலம் என்று - என் செய்வது; ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 593 பேருக்கு வழங்கியதும் - பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் நூறுக்கு மேல் அமைத்ததும் - எங்கணும் உழவர் சந்தைகள் உருவாக்கியதும் - நியாய விலைக் கடைகளில் அரிசி விலையைக் குறைத்ததும் - மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியதும் - பல முனை வரியை ரத்து செய்து ஒரு முனை வரி ஆக்கியதும் - இலவச மின்சாரம் வழங்கியதும் எல்லாமே கடந்த ஆட்சிக் காலத்து அலங்கோலங்கள்தான் அவைத் தலைவர் கூற்றுப்படி! இந்தச் சாதனைகளையெல்லாம் அழித்துவிட்டு அம்மையார் புதுக்கோலம் பூண்டிருக்கிறாரே, அதிலும் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், வியாபாரிகள், அரசு ஊழியர்களை எதிர்த்துப் பூண்டிருக்கிறாரே போர்க்கோலம் - அது அவைத் தலைவருக்கு அலங்கோலமாகத் தெரியவில்லை! அழகுக் கோலமாகத் தெரிகிறது.

(3) அடுத்து அவரது மூன்றாவது கதை :

"அரசு அலுவலர்களை நினைத்தவுடன் எனக்கு ஒரு குட்டிக் கதை நினைவுக்கு வருகிறது. ஒரு மனிதனின் கையில் விளக்கு இருந்தது, அதை அவன் தேய்க்க அவன் முன்பு பூதம் தோன்றியது. அந்தப் பூதம், என்னால்

உன்னுடைய மூன்று விருப்பங்களை நிறைவேற்ற முடியும். ஒவ்வொன்றாக இடைவெளி விட்டுகூடப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறியது.

உடனே அந்த மனிதன், நான் பம்பு செட்டுகள், நிலங்களுடன் கூடிய மிகப் பெரிய வசதியான விவசாயியாக மாற வேண்டும் என்று தன் முதல் விருப்பத் தைக் கூறினான். உடனே பூதமும் அவனை பெரிய விவசாயியாக மாற்றியது. அதன் பிறகு அவனுக்கு பல கவலைகள் ஏற்பட்டன. அதனால் விவசாயம் வேண்டாம், வியாபாரம்தான் சரி என்று முடிவு செய்தான். உடனே பூதத்தை அழைத்தான். "நான் பெரிய வியாபாரி ஆக வேண்டும்" என்று 2வது விருப்பத்தைத் தெரிவித்தான்.

அதன்படி பூதமும் அவனை வியாபாரியாக மாற்றியது. அப்போதும் அந்த மனிதனுக்கு பல கவலைகள் ஏற்பட்டன. உடனே அவன் மீண்டும் பூதத்தை அழைத்தான். பூதம் வந்ததும், அவன் தன்னுடைய 3வது விருப்பமாக, "நான் வேலையில் இருக்க வேண்டும், ஆனால் எனக்கு அதில் வேலைகள் இருக்கக் கூடாது" என்று கூறினான்.

ஒரு நிமிடம் யோசித்த பூதம், உடனே அந்த மனிதனை அரசு ஊழியராக மாற்றி விட்டது.

அரசு ஊழியர்களைப் பற்றி இப்படி ஒரு கதை சொல்வார்கள். இந்தக் கதையைச் சொல்வதால் அரசு ஊழியர்கள் என் மீது கோபப்படக் கூடாது. அரசு ஊழியர்கள் எதை, யாரிடம் கேட்க வேண்டுமோ அவர்களிடம் கேட்க வேண்டும். புரட்சித் தலைவி நினைத்தால்தான் உங்களால் பெற முடியும்.

பெருமாள் நினைத்தால்தான் நாம் வளம் பெறமுடியும், பிரம்மன் நினைத்தால்தான் ஆயுள் பெற முடியும் என்பது போல புரட்சித் தலைவி நினைத்தால்தான் நீங்கள் பெற முடியும்.

தாயே, நீங்கள் தான் நாட்டைக் காப்பாற்ற முடியும். நீங்கள் வாழ்ந்தால் தான் நாடு வாழும்"

இந்தக் கதையின்படி விவசாயிகளையும், வியாபாரிகளையும் பேராசைக்காரர்கள் என்றும் - கடைசியாக அரசு ஊழியர்களை வேலை செய்யாத சோம்பேறிகள் என்றும் வர்ணிப்பதில் சபாநாயகருக்கு ஒரு திருப்தி!

என் செய்வது? சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போது சபாநாயகராக வேண்டும் என்று ஆசை - சபாநாயகராக இருக்கும்போது அமைச்சராக வேண்டுமென்று ஆவல் - வரக் கூடாது என்று தடுக்க முடியுமா?

விவசாயி ஆகி - விவசாயி வியாபாரி ஆகி - வியாபாரி அரசு ஊழியர் ஆனது போல -

அவைத் தலைவர் அமைச்சராக ஒரு

விளக்கு கிடைக்குமா? பூதம் வருமா?

இதோ அவரது முதல் கதையில் அவரே சொன்ன காக்கை வருகிறது.

“பெருமாள் நினைத்தால்தான் நாம் வளம் பெறமுடியும், பிரம்மன் நினைத்தால்தான் ஆயுள் பெற முடியும் என்பது போல புரட்சித் தலைவி நினைத்தால்தான் நீங்கள் பெற முடியும்.

தாயே, நீங்கள்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும். நீங்கள் வாழ்ந்தால்தான் நாடு வாழும்” தம்பி; இனி தவம் பலிக்கும்! வரம் கிடைக்கும்!

அன்புள்ள,

மு.க.

19-07-2003

2950. திரித்துக் கூறாதீர் ; திருத்திக் கொள்வீர்!

உடன்பிறப்பே,

நான் நிருபர்கள் பேட்டியில் சொன்னதைத் திரித்து மாற்றிக் கொண்டும் - சொல்லாததைச் சொன்னதாக இட்டுக் கட்டிக் கற்பனை செய்து கொண்டும்; என்னைத் தாக்கியோ அல்லது கேலி செய்தோ கருத்து கூறுவதற்காகவே சிலர் இருக்கிறார்கள். அதாவது அவர்கள் பதில் அளித்து என் கருத்தை மறுத்து ஏதாவது சொல்வதற்காக நான் நிருபர்களிடம் குறிப்பிட்டதாக ஒன்றைக் கற்பித்துக் கொள்கிறார்கள்.

உதாரணமாக; எத்தனையோ சொல்ல முடியும்; இன்று ஒன்றை மட்டும் சொல்கிறேன்.

அரசு ஊழியர்கள் எந்தக் கோரிக்கையும் புதிதாக வைக்கவில்லை - ஏற்கனவே அவர்களுக்கு இருக்கும் உரிமைகளையும் - அவர்கள் அனுபவிக்கும் சலுகைகளையும் இன்றுள்ள அரசு பறித்துக் கொண்டதை திரும்பத் தர வேண்டுமென்றுதான் கேட்டார்கள், கேட்கிறார்கள். அதைக் கண்டே ஆத்திரம் கொண்டு அடக்குமுறைச் சட்டங்களாலும், அராஜக நடவடிக்கைகளாலும் அவர்களைப் பல விதத்திலும் பழிவாங்குகிற காரியம் நடைபெற்றால்; எதிர்க்கட்சிகள் அப்போதும் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைப்பது ஜனநாயகத்திற்கு எள் முனையளவுகூட ஒத்துவராத ஒன்றாகும். தமிழக மொத்த மக்கள் தொகையில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 2 சதவீதம்தான் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அரசு விழாக்களில் பேசி வருவது குறித்து நிருபர்கள் என்னைக் கேட்டார்கள். அப்போது நான் சொன்ன பதில் பின்வருமாறு:

> "அரசு அலுவலர்கள் மொத்த மக்கள் தொகையில் இரண்டு சதவிகிதம்தான் என்றும், எனவே அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றும் ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?"

"70 கிலோ, 80 கிலோ எடையுள்ள எண் சாண் உடம்பில் மூளை அரை கிலோ அல்லது ஒரு கிலோ எடைதான். அதனால் அதை எடுத்து விட முடியுமா?"

இப்படித்தான் நிருபர்கள் கேள்வியும், என்னுடைய பதிலும் அமைந்தது.

உடம்புக்கு ரத்தம் தேவையே இல்லை. எல்லா ரத்தமும் மூளைக்கே போக வேண்டும், என்று நான் சொல்லவே இல்லை. அதைப் போல மூளைக்கு மட்டும் தனிக் கவனம் செலுத்தி, உடலின் மற்ற உறுப்புக்களை ஒதுக்கி வைத்துவிட வேண்டு மென்றும் சொல்லவில்லை.

எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்று பழைய நாள் முதல் சொல்லி வருகிறவர்களை நான் பைத்தியக்காரர்கள் என்று எண்ணிடாத காரணத்தால்; விகிதாச்சார அளவை வைத்து மூளையின் தேவையை அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்ற கருத்தைத்தான் சொன்னேன். சீரான நிர்வாகம் அமைந்த உடம்பு என்ற அரசாங்கத்திற்கு; தலைமைச் செயலகமாக (செகரட்ரியேட்) மூளைதான் விளங்குகிறது என்று மருத்துவ மேதைகள் சொல்வதையும் - எழுதியதையும்; கேட்டதால், பார்த்ததால் அந்த நினைவு, உடனே வந்து, அப்படியொரு பதிலைப் பத்திரிகை நிருபர்களிடம் கூறிட நேரிட்டது.

இதனை மூளைக்கும் அறிவுக்கும் முக்கியத்துவம் தரக் கூடிய அறிவியக்கப் பற்றாளர்கள், அறிவியக்க முன்னோடிகள் சிலர்கூட எடுத்த எடுப்பில் ஏளனம் செய்வதுதான் ஏன் என்று எனக்குப் புரியவில்லை .

"எல்லா உறுப்புகளையும் ஒதுக்கி வைத்து விட்டு மூளைக்கு மட்டும் தனிக் கவனம் செலுத்த முடியாது" இப்படி ஒருவர் - வெடுக்கெனப் பதில் அளித்திருக்கிறார்.

உடன்பிறப்பே! நான் அளித்த நிருபர்கள் பேட்டியை மீண்டும் ஒரு முறை படித்துப் பார். "உடலின் எல்லா உறுப்புகளையும் ஒதுக்கி வைத்து விட்டு - மூளைக்கு மட்டும் தனிக் கவனம் செலுத்த வேண்டும்" என்று நான் அந்தப் பேட்டியில் குறிப் பிட்டிருக்கிறேனா? இல்லை! இல்லவே இல்லை!

மூளையும் உடலின் ஒரு பாகம்தான் - அது அளவில் சிறிதாக இருக்கிறதே என்பதற்காக ஒதுக்கிவிட முடியாது - எடுத்துவிட முடியாது என்பதுதானே நான் அளித்த பேட்டி!

"மூளைக்கே எல்லா ரத்தமும் போக வேண்டும்" என்று நான் சொன்னதாக அதீதக் கற்பனை செய்து கொண்டு, "அப்படி அனைத்து ரத்தமும் மூளைக்கே சென்றால் மனிதன் செத்து விடுவான்" என்று யாருக்கும் தெரியாத ரகசியத்தை ஒருவர் வெளியிட்டிருக்கிறாரே, அவராவது மூளைக்குத்தான் எல்லா ரத்தமும் செல்ல வேண்டும் என்று நிருபர்களிடம் நான் கூறியதாக நிரூபிக்க முடியுமா?

நான் சொல்வதும் - எதிர்க்கட்சிகள் சொல்வதும் அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கையாக இருப்பதும் என்ன?

மூளைக்கு எல்லா உறுப்புகளின் ரத்தமும் போவதற்கு மடை கோல வேண்டாம் - ஏற்கனவே மூளைக்குப் போய்க் கொண்டிருக்கும் ரத்தத்தை நிறுத்தி விடாதீர்கள்.

இந்தக் கோரிக்கை - இந்த வேண்டுகோள் - அதற்கான அறவழிப் போராட்டம் - இதைப் புரிந்து கொண்டும்கூட புரியாதவர்களைப் போல; எதையும் புரிந்து கொள்ளும் மூளை வலிவும் அறிவுத் திறனும் கொண்டவர்களா; நான் சொன்ன கருத்தைக் கொச்சைப்படுத்த முனைவது?

உடலின் வேறு உறுப்புக்களைக் கவனிக்கவே கூடாது - ஒதுக்கி வைத்து விட்டு மூளையை மட்டுமே கவனிக்க வேண்டும் - உடலின் ரத்தம் அனைத்தும் மூளைக்கே செல்ல வேண்டும் என்று கூறுகிற அளவுக்கு; நான் மூளையில்லாதவனல்லன் என்பதை என் கருத்தைக் கேலி புரிந்துள்ள மூளையுள்ள நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே திருத்திக் கொள்ள வேண்டுகிறேன். திரித்துக் கூறாதீர் என கேட்டுக் கொள்வதோடு 1956இல் திராவிட நாடு இதழில் அண்ணா எழுதிய தலையங்கத்தில் ஒரு பகுதியை நினைவூட்டுகிறேன்.

"என்.ஜி.ஓக்களின் அவல நிலையையும், அரசாங்கத்தின் அலட்சியத்தையும் ஊன்றிக் கவனித்து வருகிற

காரணத்தால்தான் திருச்சி தி.மு.க. மாநில மாநாட்டில், "இந்திய அரசியலாரின் நிர்வாகத்தின்கீழ் பணிபுரியும் கெஜட் பதிவற்ற அலுவலர்கட்கும், சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலியவற்றைப் போலவே; சென்னை அரசியலாரின் நிர்வாகத்தின்கீழ் பணிபுரியும் கெஜட் பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும் சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை முதலிய ஊதியங்களை சென்னை அரசியலார் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது" எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மனம் வெதும்பி, என்.ஜி.ஓக்கள் இருக்கும் இச்சமயத்தில், இத்தீர்மானத்தை அரசின் பார்வைக்குக் கொண்டு வருகிறோம்."

இவ்வாறு அண்ணா எழுதிய தலையங்கத்திற்கேற்ப தி.மு. கழக ஆட்சியில் நான் முதலமைச்சராக இருந்தபோது படிப்படியாகவும் 1996இல் முழுமையாகவும் நிறைவேற்றும் வகையில், மத்திய அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட ஊதியத்தையே மாநில அரசு ஊழியர்களுக்கும் தருவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசு ஊழியர்களுக்கு பெரும் விலங்காக இருந்த ரகசிய குறிப்பேட்டு முறையை ஒழித்ததற்காகப் பாராட்டி தந்தை பெரியார் வெளியிட்ட கருத்தையும் இத்துடன் இணைக்கிறேன்.

"இரகசிய குறிப்பேட்டு முறையை ஒழிக்க நான் சொல்லியும், கண்டிச்சும்கூட பிரயோசனம் இல்லே. செவிடன் காதிலே சங்கு ஊதின மாதிரி யாரும் கவனிக்கலே. தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. நாம சொல்றதுக்கு மரியாதை கொடுத்து கவனிக்க ஆரம்பிச்சாங்க. இப்போது இருக்கிற தலைமைச் செயலாளரும், அரசு செய்யற இந்தக் காரியத் திற்கு தைரியம் கொடுத்து அரசாங்கமும் துணிந்து ரகசியக் குறிப்பு முறையை நீக்கி இருக்கிறார்கள். தி.மு.க. அரசுதான் இந்த மாதிரி பல சீர்திருத்தமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவங்க எப்படிப்பட்ட – நல்ல காரியங்கள் செய்திருக்கிறாங்க

என்ப தற்கு அவங்களுக்கு எதிரிங்க எங்கெங்கே, எப்படிப்பட்டவங்க இருக்காங்க என்பதில் இருந்தே தெரியும்" **(பெரியார் - 1972)**

அண்ணா வழியில் இயங்கி, பெரியாரின் பாராட்டுகளைப் பெற்ற தி.மு. கழக ஆட்சிக்கும், இன்று அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் அடக்குமுறை சவுக்கால் அடிக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் உணரலாம்.

அண்ணா வகுத்த நெறியில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்க்கும் அன்புடன் பரிவு காட்டி அய்யா பெரியார் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றது. தி.மு.க. ஆட்சி என்ற பெருமிதத்துடன்தான் அரசு ஊழியர்களை மூளைக்கு ஒப்பிட்டேன் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ளாவிடினும் மாசற்ற என் உடன்பிறப்பே, நீ புரிந்து கொண்டால் போதும். அதுவே எனக்கு மகிழ்ச்சி!

அன்புள்ள,

மு.க.

20-07-2003

2951. சொன்னதைச் செய்தோம்; சொல்வதைச் செய்வோம் !

உடன்பிறப்பே,

அரசு அலுவலர், தொழிலாளர், இன்னபிற உழைக்கும் வர்க்கத்தினர், தங்கள் உரிமைகளுக்காக இழந்துவிட்ட சலுகைகளை மீண்டும் பெறுவதற்காக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்களைப் பழிவாங்கத் துடிக்கிறதே இந்த அரசு - அதற்கு இதயமற்ற சிலரும் "ஆமாம் பாட்டு" பாடுகிறார்களே - இதோ; தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் - ஆளுங்கட்சியாக அமர்ந்த போதும் அந்த உழைக்கும் வர்க்கத்திற்கு அளித்த வாக்குறுதி என்ன, அதனை நிறைவேற்றிய வாய்மை எத்தகையது என்பதற்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் நடத்திய 55வது மாநில மாநாட்டு மலரில் வெளிவந்துள்ள எனது இரண்டு சொற்பொழிவுகளிலிருந்து சில பகுதிகளை இங்கே குறிப்பிடுகிறேன்.

4-6-1988 அன்று தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சி முடிந்து ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அரசு அலுவலர் ஒன்றியத்தின் சிறப்பு மாநாடு ஒன்று சென்னை தேனாம்பேட்டையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு ஆற்றிய உரையில் ஒரு பகுதி வருமாறு:

"அரசு ஊழியர் வைத்துள்ள கோரிக்கைகள் மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம்; ஒரு மாத ஊதியம் போனசாக அளிக்க வேண்டும்; தொழில் வரி ரத்து செய்யப்பட வேண்டும்; தொகுப்பூதியம், மதிப் பூதியம், தினக்கூலி பெறுவோர் நிரந்தர அரசு ஊழியராக ஆக்கப்பட வேண்டும் என்ற இந்த நான்கு கோரிக்கைகளாகும்.

வெகு விரைவில் இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும், நிறைவேற்றப்படும் என்கின்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவையிலே நிருபர்களின் கூட்டத்திலே மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்க தி.மு.க. ஆட்சி அமைந்தால் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டார்கள்.

நான் அவர்களிடம், சென்னையில் 30ந்தேதி நடைபெறுகின்ற மக்கள் நலக் கோரிக்கை மாநாட்டில் அத்தகைய தீர்மானத்தை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம். அந்த மாநாட்டின் கோரிக் கைகளிலே அது ஒன்றாக இருக்கும் என்று அப்போது சொன்னேன்,

அந்த மாநாடு நடைபெற்றது உங்களுக்குத் தெரியும். சென்னைக் கடற்கரையில் நானும், தோழர் ஈ.எம். எஸ். அவர்களும், தோழர் ராஜேஸ்வரராவ் அவர்களும் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியரும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் இரு பொதுச் செயலாளர்களும் அந்த மாநாட்டிலே உரையாற்றினோம்.

அந்த மாநாட்டிலே எடுக்கப்பட்ட 13 தீர்மானங்களில் ஒரு தீர்மானமாக மத்திய அரசு ஊழியர்களுக்கு தரப்படுவது போன்ற ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டது என்பதை நினைவு படுத்துகிறேன்.

ஒரு மாநாடு கூட்டி உங்களுக்கு முன்பே இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்ட நாங்கள் ஒருவேளை ஆட்சிக்கு வந்தால் - அப்படிப்பட்ட வாய்ப்பை நீங்கள் எங்களுக்கு அளித்தால் மாநாடு மூலமாக இந்த மாநிலத் திற்கு எடுத்துச் சொன்ன இந்த வாக்குறுதியை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றியே தீருவோம்.

உங்களுடைய பிரச்சினை இந்த நான்கோடு முடிந்து விடவில்லை. எத்தனையோ பழிவாங்கப்பட்ட அதிகாரி கள், அரசு அலுவலர்கள், எத்தனையோ பழிவாங்கப்பட்ட காவல்துறை நண்பர்கள், காவல்துறைக்காக சங்கம் வைத்ததற்காக பழிவாங்கப்பட்டவர்கள் எல்லாம்

உண்டு. அவர்களையெல்லாம் கூட நாங்கள் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்கள் வீணாக, அநியாயமாக பழி வாங்கப்பட்டிருப்பார்களேயானால், அவர்கள் அரசு ஊழியர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், காவல்துறை நண்பர்களாக இருந்தாலும் அந்தப் பழிவாங்கும் படலத்திலேயிருந்து நிச்சயமாக விடுவிக்கப்படுவார்கள் என்ற உறுதியை இந்த மாநாட்டிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்."

உடன்பிறப்பே, இந்த மாநாட்டில் தரப்பட்ட உறுதி மொழிகள் காப்பாற்றப்பட்டதா என்பதற்கு, 30-6-1989 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் நடைபெற்ற 53வது மாநில மாநாட்டில் நான் ஆற்றிய உரையே தக்க சான்றாகும். அந்த உரையின் சில பகுதிகள் வருமாறு :-

"கழக அரசின் சார்பில் உங்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் மாத்திரமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் - அலுவலாளர்கள், ஆசிரியர்கள் மீது போடப்பட்டிருந்த வழக்குகள் ஏறத்தாழ 90 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன.

அதனால் - அந்த வழக்குகளிலே தொடர்புபடுத்தப்பட்டு, இன்றைக்குப் பயன்பெற்றவர்கள் 4,800 பேர். இது தவிர இலாகாபூர்வமான நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் 1,180 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். ஆக மொத்தம் ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் வழக்குகள், தண்டனைகள், நடவடிக்கைகள் இவைகளால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த ஐந்து மாதக் காலத்திலே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சிவ.இளங்கோ படித்துக் காட்டிய கோரிக்கைகளில் ஏழாவது கோரிக்கையிலிருந்து ஒன்பதாவது கோரிக்கை வரையில் 82ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தை துவக்கி வைத்து தேனாம்பேட்டை வளாகத்தில் 13-10-82 அன்று ஆற்றிய சொற்பொழிவுக்காக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளராக

இருந்த எபனேசரை, அவர் ஓய்வு பெறுவதற்கு முன் தற்காலிக பணி நீக்கம் செய்து, ஐந்தாண்டுக் காலத்துக்குப் பிறகு தண்டனை வழங்கியதன் விளைவாக அவர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் 1-1-83 முதல் 15-7-83 முடிய முழுச் சம்பளம் வாங்கியதை ஓய்வூதியத்தில் பிடித்துக் கொள்ள உத்தரவிடப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து, குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொண்டு 16-7-1983 முதல் ஓய்வு பெறும் ஆணை வழங்க வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1978இல் நடந்த வேலை நிறுத்த காலந்தொட்டு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் உறுப்பினர்களில் சிலர் மறைமுகமாக பழிவாங்கப்பட்டார்கள். -

சிவபூஷணம், தமிழரசு அச்சகத்திலே பணிபுரிந்தவர். பணி நீக்கம் செய்யப்பட்டு, மேல்முறையீட்டில் உத்தரவு ரத்து செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீதான குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொண்டு அவரைப் பணியிலே சேர உத்தரவிட வேண்டுமென்று ஒரு கோரிக்கை இங்கே வைக்கப்பட்டுள்ளது. அதுவும் நிறைவேற்றப்படுகின்றது.

போஸ்கோராஜ் என்ற இளநிலை உதவியாளர், இதயம் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தார் என்ற காரணத்தை வைத்து ஐந்தாண்டுகளுக்கு ஊதிய உயர்வை தள்ளிப் போடும் தண்டனையும் ரத்து செய்யப்படுகின்றது.

நெல்லை மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியத் தலைவர் விசுவாசம் அவர்களின் சங்கப் பணி காரணமாகவும், அப்போதுள்ள நிர்வாகச் சிக்கல் காரணமாகவும் அவர் மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது. அந்தப் பழிவாங்கும் நடவடிக்கை கழக அரசினால் ஏற்கனவே ரத்து செய்யப்பட்டு விட்டது. அதுபோல விசுவாசம் மீதுள்ள

வழக்கைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விசுவாசம் மீது யாரும் வழக்கு போட மாட்டார்கள். எனவே அப்படி ஒரு வழக்கு இருந்தால் அது திரும்பப் பெறப்படும்.

1981 ஆம் ஆண்டு வணிக வரிப் பணியாளர் போராட்டத்தின்போது 3-9-1981 முதல் 20-9-81 வரை 13 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த காலம் சம்பளம் இல்லா விடுப்பாகப் போடப்பட்டது. இதைப் பரிசீலனை செய்து ஈட்டிய விடுப்பாக ஆணை பிறப்பிக்குமாறு அரசை இந்த மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வேண்டுகோளும் நிறைவேற்றப்படும்.

கோ. அண்ணாவி, க. கருணாநிதி முதலிய 13 சங்கத் தலைவர்களுக்கு 2 முதல் 3 ஆண்டுகளுக்கு போராட்டத்தை ஒட்டி ஊதிய உயர்வு நிறுத்தப் பட்டது. இந்தத் தண்டனைகளை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த மாநாட்டில் சிவ. இளங்கோ கேட்டுக் கொண்டார். ரத்து செய்யலாம். இதிலே கருணாநிதி என்ற பெயரும் இருக்கின்ற காரணத்தால் அதற்காக ரத்து செய்ததாக எண்ணாதீர்கள். இருந்தாலும் ரத்து செய்யப்படுகின்றது.”

உடன்பிறப்பே! அன்று நான் ஆற்றிய இந்த இரண்டு உரைகளிலிருந்தும் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அரசு ஊழியர்களுக்குக் கொடுத்த உறுதிமொழியை, ஆட்சிக்கு வந்தபிறகு எந்த அளவிற்கு நிறைவேற்றியது என்பதைப் புரிந்து கொள்ளலாம். கடந்த காலத்தில் நான் கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்றிய வரலாற்றை நினைவு படுத்துவதின் மூலம் இப்போது நிகழ்காலத்தில் அளிக்கப்படும் உறுதிமொழிகளும் எதிர்காலத்தில் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை வீண்போகாது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-07-2003

2952. பணம்படைத்த பழைய வலம் பக்கிரி!

உடன்பிறப்பே,

பழைய வலம்
பாட்டாளித் தோழர்கள்,
கூட்டம் கூட்டமாய்க்
கொடிபிடித்துப் பவனி வந்தனர்.
பதாகைகள் அவர்தம் கரங்களில்;
பளபளக்கும் எழுத்துக்கள் அந்தப் பதாகைகளில்!
பணம் படைத்த பக்கிரியே வருக! வருக!

பழைய பம்பாயாம் புதிய மும்பை வாழ் - நல்ல குணம் படைத்த நாயகனே வருக!

பக்கத்து ஊர்ப் பட்டிக்காட்டு வேலன் கேட்டான்:

பக்கிரியா? யாரப்பா அது? பணம் படைத்தவனா? பத்து நூறு கோடி தேறுமா? பல லட்சம் ரூபாய் பாங்குக் கணக்கின்றி பதுக்கல் ஆளா? படத்துறை வருமானமா? பம்பாயில் பழைய கதை

பாம் வைத்துப் பல பேரைக் கொலைபுரிந்து சம்பாதித்ததா? கொள்கையில்லா அரசியல் கட்சி ஏதேனும் ஆரம்பித்து மதத்தை ஜாதியை வளர்க்கிறேன் என்று மலை போலக் குவித்த செல்வமா? பின் எப்படி மனிதன் இவன்; பணம் படைத்தவன் எனும் புகழ்ச்சிக்கு உரியவன் ஆனான்? புரியாமல்தான் கேட்டான் பட்டிக்காட்டான்!

பழைய வலத்துக்காரன்
படித்துப் படித்துச் சொன்னான்:

கோடீஸ்வரன், லட்சாதிபதி குட்டிக் குபேரன் மிட்டா மிராசு எவனாயிருந்தாலும் அவன்; இவனை மிஞ்சிய பணம் படைத்தவனல்ல; இவனேதான் உச்ச கட்டம்!

பட்டிக்காட்டு வேலன் விடவில்லை;
பளீர் எனக் கேட்டு விட்டான்.

அப்படியானால் ஆண்டிக்கோலம் பூண்டிருந்து அடி தொழ வருகின்ற பெண்களுக்குப் பிள்ளை வரம் தருவதாக ஏமாற்றி அடித்த கொள்ளையா? பிறகு எப்படி அவன் பெரும் பணம் படைத்த வள்ளல் ஆனான்? நினைத்தது நடக்குமென்று நம்ப வைத்து திருநீறு துளசித் தீர்த்தம் கையில் தந்து ஏய்த்து திரவியத்தைத் திறமையாகக் குவித்தவனா? தெரிந்து கொள்ளத்தான் கேட்கின்றேன்; காலி மனை வாங்கி விற்றுக் காசு சேர்த்தவனா? கவர்ன்மெண்டை கையில் போட்டுக் கொண்டு கனதனவான் ஆனவனா? மஞ்சத்தில் பாவைகளை வாடகைக்கு விட்ட பணமா? லஞ்சத்தைத் தொழிலாய்க் கொண்டு மிஞ்சிய வருமானமா? பழைய வலத்தானே; பகர்ந்திடு எனக்கு! பக்கிரி தான் பம்பாய் நகரில் பணம் படைத்தவன் ஆனது எப்படி? முறையாகப் பணம் சேர்ப்போரை விரல் விட்டு எண்ணும்காலத்தில் மோசடியாய்ப் பணம் சேர்த்தே இவன் பணம் படைத்தவன் ஆகியிருக்கக்கூடும்.

பைத்தியமே! என்று பழையவலத்தான் சிரித்துக் கொண்டே சொன்னான்;

பணம் படைத்தவன் என்பதற்கு விளக்கம் புரியாமல் பரபரப்பு அடையாதே! ஒன்று கேள்! உலகில் உயிரினங்களைப் படைப்பது யார்? பழைய புராணங்கள் சொல்வதென்ன? பக்தி சிரத்தையுடன் பதில் சொல்வாய்; பரந்த உலகைப் படைத்தது கடவுள்; பிறந்த உயிர்களை யெல்லாம் படைத்தது பிரமன் சிறந்த பதில் என்று இதைத் தானே சொல்வாய்?

ஆமாம்; ஆமாம்; அதிலென்ன சந்தேகம்? அவன்தான் அனைத்துயிரையும் படைத்தவன்

பலே! பலே! பட்டிக்காட்டு வேலா! படைத்தவன் என்பதற்கு உடையவன் என்று மட்டுமல்ல; உருவாக்கியவன் என்றோர் பொருளும் உண்டு. பக்கிரி; பம்பாய் எனும் மும்பாயில் நாணயத் தொழிற்சாலையில் நான்காண்டுக்கு முன் வேலையில் சேர்ந்துழைத்து நாள்தோறும் படைத்தளிக்கும் நாணயப் பணம் தான் நம் கையில் நமது நிலைக்கேற்பப் புழங்குகிறது. பணம் படைத்த அந்தப் பக்கிரி தான் - நமது பாட்டாளித் தோழர் சங்கத்துப் பழைய தலைவன் - அவன் பம்பாய் விட்டு கொல்கொத்தா நாணயச் சாலைக்கு நாலு நாள் முன்னே மாற்றல் பெற்று நடுவிலே நம்மையெல்லாம் சந்திக்க பழைய ஊர்ப்பாசம் மறவாமல் பார்க்க வரும்போது பணம் படைத்த அந்தப் பாட்டாளி பிர்மாவை வாழ்த்தி வரவேற்க வேண்டாமோ?

அன்புள்ள,

மு.க.

2-8-2003

2953. அய்யத்தைப் போக்க வேண்டியது பிரதமரின் கடமை!

உடன்பிறப்பே,

படுத்துக் கொண்டிருந்த வேங்கை பசி வெறியோடு எழுந்துநின்று, வேட்டைக்கு தயாராவதைப் போல அயோத்தி பிரச்சினை மீண்டும் எழுந்து நிற்கிறது. அயோத்தி ராம ஜன்ம பூமி அறக்கட்டளை தலைவர் ராமச்சந்திர பரமஹம்சர் அவர்களின் மறைவை யொட்டி நடைபெற்ற இறுதிச் சடங்கில் இந்திய பிரதமர் திரு. அடல் பிகாரி வாஜ்பய் அவர்களும், துணைப் பிரதமர் திரு. அத்வானி அவர்களும் ஆற்றிய உரைகள் நாடு முழுதும் ஒரு திகைப்பை ஏற்படுத்தியிருப்பதால் அந்தத் திகைப்புக்கு ஆட்பட்ட நாமும் சிலவற்றை பின்னோக்கித் திரும்பிப் பார்த்து அவற்றை நினைவில் நிறுத்த வேண்டியவர்களாகிறோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதான வரிசையில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க.வின் இரு பெரும் தலைவர்கள் பரமஹம்சர் அவர்களின் இறுதிச் சடங்கில் என்ன பேசியிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

பிரதமர் வாஜ்பய் அவர்களின் உரையில் முக்கிய பகுதி வருமாறு :-

பரமஹம்சரின் இறுதி ஆசையை நாங்கள் நிறைவேற்றுவோம். ராமஜன்ம பூமியில் பிரமாண்டமான ராமர் கோயிலைக் கட்டுவோம். அதற்குத் தடையாக இருக்கும் அனைத்து முட்டுக் கட்டைகளும் நீக்கப்பட்டுவிடும் என்பதில் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். கோயிலைக் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்போருக்கும் மன மாற்றம் ஏற்படும். நாம் ஒன்றுபட்டு பரம ஹம்சரின் கனவை நனவாக்குவோம். அவரது இறுதி ஆசையை நிறைவேற்ற ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். பிரதமருக்கு முன்பு பேசிய துணைப் பிரதமர் அத்வானி உரையின் முக்கிய பகுதி வருமாறு :- அயோத்தியில் ராமஜன்ம பூமியில் ராமருக்கு கோயில் கட்டவேண்டும் என்னும் ராமச்சந்திர பரமஹம்சரின்

கனவு நிறைவேறுவதை யாராலும் தடுக்க முடியாது. நிச்சயமாகக் கோயில் கட்டி முடிக்கப்படும். ராமர் கோயில் பிரச்சினைக்கு நீதிமன்றத் தீர்ப்பு - பேச்சு வார்த்தை மூலம் தீர்வு - சட்டம் இயற்றுவதன் மூலம் தீர்வு ஆகிய மூன்று வழிகள் உள்ளன. ஆனால் ராமஜன்ம பூமியில் ராமர் கோயில்தான் கட்டப்பட வேண்டும். வேறு எதுவும் கட்டப்படக் கூடாது என்ற நாட்டு மக்களின் விருப்பத்தை அனைத்துப் பிரிவினரும் வகுப்பினரும் ஏற்றுக்கொள்வதுதான் சிறந்த வழியாகும்.

உடன்பிறப்பே,

இந்த இரண்டு உரைகளையும் காணுகின்ற நேரத்தில் என் மனதில் நிழலாடும் பழைய நினைவுகளையும், நிகழ்வுகளையும் எடுத்துரைக்க விரும்புகிறேன். அயோத்தி பிரச்சினை 54 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகும். 1949ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாள் நள்ளிரவில் இதே ராமச்சந்திர பரமஹம்சரின் தலைமையில் ஒரு ஐம்பது அல்லது அறுபது பேர் அயோத்தியிலுள்ள பாபர் மசூதியிலே பூட்டை உடைத்துவிட்டு, உள்ளே நுழைந்து ராமர் சிலை, லட்சுமணர் சிலை, சீதை சிலைகளையெல்லாம் வைத்து விட்டதை எதிர்த்து மறுநாள் காலையிலே அங்குள்ள போலீஸ் நிலையத்தில் முஸ்லிம் பெரியவர்களால் புகார் கொடுக்கப்பட்டது.

அந்தப் புகாரில் 49ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் நாள் இரவு ஐம்பது அறுபது பேர் கொண்ட கும்பல் ஒன்று பாபர் மசூதியின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து ராமர் சிலையை வைத்துவிட்டார்கள். தகாத முறையில் நுழைந்து - தகாத காரியத்தைச் செய்ததன் மூலம் மசூதியின் புனிதத்தையே கெடுத்துவிட்டார்கள் என்று போலீஸ் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்பட்டது. டிசம்பர் 26ந்தேதியே அன்றைய இந்திய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், உத்தரப் பிரதேச முதலமைச்சராக இருந்த கோபிந்த வல்லப பந்த் அவர்களுக்கு ஒரு தந்தி கொடுக்கிறார். அந்தத் தந்தியிலே இப்படிப்பட்ட அபாயகரமான காரியங்கள் மோசமானதும், விபரீதமானதுமான விளைவுகளை உருவாக்கும் அல்லவா என்று கேட்கிறார்.

1950 ஜனவரியில் ஆக்கிரமிப்பு அல்லது மிரட்டல் போன்றவற்றின் மூலம் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்வதை

சகித்துக் கொள்ளவே முடியாது என்று அன்றைய உள்துறை அமைச்சர், சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் உத்தரப்பிரதேச முதல்வர் வல்லப பந்திற்கு கடிதம் எழுதுகிறார்.

அதற்குப் பிறகும் பண்டித நேரு சும்மாயிருக்க வில்லை. நானே நேரில் வந்து அயோத்தி நிலைமைகளைப் பார்வையிட விரும்புகிறேன். எப்போது வரலாம் என்று சொல்லுங்கள் என்று நேரு, வல்லப பந்திற்கு எழுதுகிறார். அதற்கு, பந்த் அவர்கள் நேருவுக்கு எழுதிய கடிதம் பல பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் வருமாறு :-

அன்புள்ள நேரு அவர்களே, இந்த நிலையில் நீங்கள் அயோத்திக்கு வரத் தேவையில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன். நிலைமை சரியான பிறகு நானே தங்களை அழைப்பேன். நான் கடந்த முறை தெரிவித்திருந்த நிலைமைதான் அப்படியே இருக்கிறது. முஸ்லிம்கள் இதுதொடர்பான வழக்கை மாவட்ட நீதி மன்றத்திலிருந்து உயர் நீதி மன்றத்திற்கு மாற்ற முயற்சிக்கிறார்கள். ராம்பூரி தலைமைக் கமிஷனர் ஜெய்கிரண் சிங்கை அயோத்திக்கு கூடுதல் கமிஷனர் பொறுப்பிலே நியமித்திருக்கிறோம். ஏனெனில் அயோத்தியில் இருந்த போலீஸ் அதிகாரிகள் சரியாக இல்லை. மேலும் அங்கிருந்த வேறு பல அதிகாரிகளும்கூட சரியாக இல்லை. அங்கே ஒரு நல்ல கமிஷனர் இருக்கவேண்டும் என்பதற்காக ராம்பூரி தலைமைக் கமிஷனர் ஜெய்கிரண் சிங் என்பவரை அயோத்திக்கு கூடுதல் கமிஷனர் பொறுப்பிலே நியமித்திருக்கிறோம். அவர் அனுபவம் மிக்கவர். விவேகத்தோடு செயல்படக் கூடியவர். நம்பகமானவர். பிரச்சினையை திருப்திகரமாக தீர்த்துவிட முடியும் என்றும், ராமர் விக்ரகத்தை பாபர் மசூதிக்குள்ளிருந்து, அமைதிக்கு பங்கமின்றி அகற்றிவிட முடியும் என்றும் நம்பி காரியம் ஆற்றுகிறார் என பந்த் பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பண்டித நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும், உத்தரப் பிரதேச முதல்வராக இருந்த வல்லப பந்த்தும் ராமருடைய சிலை, தேவை இல்லாமல் ஒரு சர்ச்சையை உருவாக்குவதற்காக பாபர் மசூதியில் இரவோடு இரவாக வைக்கப்பட்டு விட்டது, அது தகாது, எனவே அந்தச் சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டும், என்பதிலே மிகவும் முனைப்பாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்தக் கடிதப் போக்குவரத்துகள் தக்க சான்றாகும். எனவே பல ஆண்டுக் காலமாக தீர்க்கப்படாமல் இருந்த இந்தப் பிரச்சினை

1992ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6ஆம் நாள் கரசேவை என்ற பெயரால் வன்முறை வடிவெடுத்து, நீண்ட காலமாக அங்கு நின்றிருந்த பாபர் மசூதியை தரைமட்டமாக்கியது.

கரசேவை நடத்தி மத வெறியர்கள் இத்தகைய வன்முறைத் தீயை வளர்க்க எண்ணுகிறார்கள் என்பதை உணர்ந்து கரசேவைக்கென குறிப்பிட்ட நாளுக்கு முன்பே 26-11-1992 அன்று சென்னை சிங்கண்ணச் செட்டித் தெருவில் தி.மு.க. சார்பில் கரசேவையைக் கண்டித்து ஒரு மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தினோம். பின்னர் அதே ஆண்டு டிசம்பர் 6ந்தேதி கரசேவை என்ற பெயரால் அயோத்தியில் பாபர் மசூதி அடியோடு இடிக்கப்பட்ட அக்கிரமத்தைக் கண்டித்து, மறுநாளே டிசம்பர் 7ஆம் நாள் சென்னை மாணிக்கச் செட்டித் தெருவில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தினோம்.

அயோத்திப் பிரச்சினையில் கழகத்தைப் பொறுத்த வரையில் அப்போது நாம் எடுத்த நிலை இன்று வரையில் தொடருகிறது என்பதற்கு அடையாளமாகத்தான் கழகத்தின் சார்பில் நான் தெரிவிக்கும் கருத்துகள் அமைகின்றன என்பதை நீயும் நாடும் தெளிவாக உணரலாம். 1999ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைந்து அந்தக் கூட்டணியில் ஒரு அங்கமாக திராவிட முன்னேற்றக் கழகமும் இடம் பெற்றபோது, அந்த அணியின் சார்பாக வெளியிடப்பட்ட செயல் திட்டத்தில் முக்கிய ஒரு பகுதி பின்வருமாறு அமைந்தது. அது வருமாறு :- அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும். சாதி மத அடிப்படையில் யாரும் நடத்தப்படமாட்டார்கள். நீதியும் நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும். யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ நாங்கள் செயல்படமாட்டோம் என்ற உறுதியினை அளிக்கிறோம். சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளே! திறந்த மனதுடன் இதயபூர்வமாக உங்களுடன் நட்பார்ந்த முறையில் நடந்து கொள்ள வாய்ப்பளியுங்கள் என்று வேண்டுகோள் விடுத்திட விரும்புகிறோம். நவீன இந்தியாவை, சீரமைக்கப்பட்ட நல் இந்தியாவை உருவாக்கிட நாம் கரம் கோத்து இணைந்து நடை போடுவோம். பழைய தப்பு அபிப்பிராயங் களையெல்லாம் தூக்கி எறிவோம். மன வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். தகராறுகளை உருவாக்கும் பிரச்

சினைகளை தள்ளி வைப்போம். பரஸ்பர நம்பிக்கை, நட்புணர்வு இவற்றால் நம்மை நாமே பிணைத்துக் கொள்வோம். இந்திய நாட்டு மக்கள் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளிப்போம். சிறுபான்மை மக்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்போம்.

இந்தச் செயல் திட்டத்திலிருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி வழுவிடவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் 2002 மார்ச் திங்களில் அயோத்தியில் விசுவ இந்து பரிட்சத் அமைப்பினர் மார்ச் 15ந்தேதியன்று பூமி பூஜை நடத்தப் போவதாக அறிவித்த போது, பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை அமைந்தது. அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருந்ததாவது :- அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரை எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ள அனுமதிக்க மாட்டோம். இது தொடர்பான வழக்கு உச்சநீதி மன்றத்தில் வருகிற 13ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது. அப்போது நீதிமன்றம் கூறும் தீர்ப்பின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுவரை வேறு எந்த நடவடிக்கையையும் சர்ச்சைக்குரிய இடத்தில் மேற்கொள்ள அனுமதி கிடையாது. இந்தப் பிரச்சினையில் நீதி மன்றத்திற்கு வெளியே சமரசம் செய்து கொள்ள ராமஜென்ம பூமி அறக்கட்டளை ஒருவேளை முடிவு செய்தால், இரு தரப்பினரிடையேயும் சமரசம் ஏற்படக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அவை எப்போதும் தயாராகவே உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு; ஒன்று சமரசப் பேச்சு வார்த்தையில் ஏற்பட வேண்டும் அல்லது நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வரவேண்டும். இதில் அரசு தெளிவாகவே உள்ளது.

உடன்பிறப்பே, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல் திட்டமும், தொடர்ந்து பிரதமர் நாடாளுமன்றத்திலே 2002ஆம் ஆண்டு அளித்த உறுதிமொழியும், நேற்றையதினம் அயோத்தியில் பிரதமர் அவர்களுடைய பேச்சிற்குப் பிறகு மாறுபடுகின்றனவோ என்ற அய்யத்தை உருவாக்கியிருக்கிறது. இந்த அய்யத்தைப் போக்க வேண்டியது பிரதமரின் கடமை.

அன்புள்ள,

மு.க.

03-08-2003

2954. கடமை தொடரக் காஞ்சி வழி நடப்போம்!

உடன்பிறப்பே,

தி.மு.க. அறிவித்த தேர்தல் நிதி திரட்டும் களத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் அந்த மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ஒரு கோடி ரூபாயை வழங்கி, நிதி வழங்கிடும் மாவட்டங்களில் முதல் மாவட்டம் என்ற பெருமையைப் பெற்று விட்டது. இனி இந்த மாவட்டத்தை வென்றிட வேண்டுமானால் வரிசையில் முக்கிய இடம் பிடிக்க, தலைமைக் கழகம் நிர்ணயித்துள்ள தொகையைவிட அதிகமாக வசூலித்த மாவட்டம் என்கிற நிலையில்தான் சாத்தியமாகும்.

அதாவது அதிகம் வசூலித்த மாவட்டங்களில், எது, எதனை மிஞ்சி நிற்கிறது என்பதுதான் இனி இந்தப் போட்டிக்கே விறுவிறுப்பு ஊட்டக் கூடிய விஷயமாகும்.

முதலில் தனது கடமையைச் செய்து முடித்துத் தலைமைக் கழகத்தின் பாராட்டுதலைப் பெற்றுள்ள காஞ்சி மாவட்டச் செயலாளர் தம்பி தா.மோ. அன்பரசனை என் நெஞ்ச அருவியிலிருந்து பொழியும் வாழ்த்துகளால் நனைத்து மகிழ்கின்றேன். அருவியிலே ஒருவர் மட்டும்தானா? அவருடன் சேர்ந்து மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக, நகரக் கழக, கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் செயல்வீரர்கள் அனைவருமே குதூகலக் குளியல் நடத்துதற்குத் தகுதி பெற்றவர்கள்தான்.

காஞ்சிபுரம் பொதுக்கூட்டத்திலும், நமது தலைமைக் கழக அலுவலகத்திலும் அவர்கள் முறையே 18 லட்சம், 22 லட்சம் என மொத்தம் 40 லட்ச ரூபாய் நிதியை என்னிடத்தில் அளித்தபோதே, காஞ்சி மாவட்டத்தினர் இந்தக் கடமையாற்றும் பணியில் முழு வெற்றியை முதன்மை வெற்றியாகப் பெறுவார்கள் என்று நான் நம்பிக்கை கொண்டேன். அந்த நம்பிக்கை வீண் போகாமல் தங்கம் நிகர் என் தம்பிமார்கள் அன்பரசன் தலைமையில், தளராதுழைத்து

எஞ்சியிருந்த 60 லட்ச ரூபாய் துணைப் பொதுச் செயலாளர் மு.க. ஸ்டாலினிடம் காஞ்சி மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்திலே வழங்கப்பட்டு அதனைத் தலைமைக் கழகத்திடம் சேர்த்திருப்பது, அந்தக் காலத்து (1967) தேர்தல் நிதி 11 லட்சம் ரூபாயுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கிறது.

கழகத்தின் வேண்டுகோளையேற்று கழகத் தேர்தல் நிதி திரட்டுவதற்குச் சென்றிடும் நமது உடன்பிறப்புகளிடம் எத்துணை ஆர்வத்துடன், அன்பு ததும்பிட அளிக்கிறார்கள் கணிசமான நிதியை என்பதைக் குதூகலத்துடன் தம்பிமார்கள் கூறும்போது, இந்த வசூல் கண்டு வயிற்றிலும், வாயிலும் அடித்துக் கொண்டு நம்மீது சேறு வாரி வீசுகிற சில வார ஏடுகளையும், நாளேடுகளையும் கண்டு நமக்குப் பரிதாபமே ஏற்படுகிறது. பாவம்! அவர்களுக்கு தி.மு.க. நல்வாய்ப்புகளைப் பெறுகிறது என்றாலும் - நன்மக்கள் ஆதரவு நம் பக்கம் திரளுகிறது என்றாலும் - ஜனநாயக முறையிலோ, சட்டரீதியாகவோ நமக்கு வெற்றிகள் கிடைத்திடுகிறது என்றாலும், அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது. அதற்கு ஏதாவது அவதூறு கற்பித்து அதில் ஆனந்தம் கொள்வார்கள். நமது இயக்கத்திற்கோ அல்லது இயக்கத்தில் முக்கியமாக எவருக்கோ தற்காலிகமாக ஒரு சோதனை - வேதனை எனில், அதைத் தம்பட்டமடித்து வெளிப்படுத்தி, தலைவிரித்துக் கொண்டு ஆடுவார்கள். அப்படியொரு அசூயை அவர்களுக்கு நம்மீது! சோதனை, வேதனையென்ன? நமக்கு ஒரு நோய் வந்தால்கூட அவர்களுக்குக் கொண்டாட்டம்தான்!

எடுத்துக்காட்டாக ஒன்று போதுமே - தம்பி முரசொலி மாறனுக்கு உண்மையிலேயே உடல் நிலை சரியில்லைதான் - அதற்காகச் சிகிச்சை பெற அமெரிக்கா வரை செல்ல நேரிட்டுள்ளது - உடல் நிலை கெடுவதும், அபாயக் கட்டங்களை நெருங்குவதும்; உலகில் யாருக்கும் இயற்கையான ஒன்றுதான். ஆனால், மாறனைப் பற்றி ஒரு மாதத்திற்கு முன்பே எவ்வளவு பயங்கரமான செய்தியை முடிவாகவே வெளியிட்டு மகிழ்ந்தார்கள், சில செய்தி நிறுவனத்தினர் என்பதை நீ அறிவாய். ஆனால், அப்படி வந்த செய்தி கற்பனையானது - வேண்டுமென்றே - வெளியிடப்பட்டது என்பதைப் பின்னர்தான் புரிந்துகொள்ள முடிந்தது. நேற்றையதினம்கூட ஒரு நாளிதழ் (தினமலர்) முரசொலி மாறன் கோமாவில் இருக்கிறார் என்று, டீக்கடையை சாராயக்கடையாக

மாற்றிக் கொண்டு செய்தி பரப்பியுள்ளது. அதைப் பார்த்தவுடன், திடுக்கிட்ட மாறன் குடும்பத்தினரும், நானும் அந்தப் பத்திரிகையாளரை எமது செயலர்கள் மூலம் தொடர்புகொண்டு, உடல் நலம் மிகவும் திருப்திகரமாக இல்லையென்பது உண்மைதான் - ஆனால் அவர் கோமா நிலையில் இல்லை என்பதை விளக்கியும் கூட, அந்த ஏடு அதற்கான திருத்தத்தை வெளியிடவில்லை. காரணம் என்ன? கழகத்திற்கு நல்லவை குவியும் போது அதனை நாசம் என்று சிலரது நடுங்கா நாக்குகள் நவில்கின்றன. அல்லவை கடுகளவு வந்தாலே அவர்கள் களிப்புற்று அகமகிழ்ந்து, அதனைப் பிரசுரித்து ஆடிப் பாடுகின்றனர். அவர்கள் ஆசைப்பட்டது நடக்கிறது என்ற உற்சாகத்தில்! (வாழ்க அவர்கள் என்று வாழ்த்துவோமாக!).

இப்படிப்பட்ட பிறவிகள், உன் போன்ற உடன்பிறப்புகள் கழகத் தேர்தல் நிதி திரட்டுவதற்கு ஒன்றுபட்டு உழைப்பதையும் - பொது மக்களும், வணிகப் பெருமக்களும் - பல்வேறு உழைக்கும் வர்க்கத்து உத்தமர்களும் - சிறிதும் தயக்கமின்றி தங்களாலியன்ற நிதியினைத் தாராளமாக வழங்குவதையும் பார்த்துப் பதறுகின்றனர்.

தங்களுக்கே மட்டும் பழக்கமான பாஷை கொண்டு நமது முயற்சியை விமர்சிக்கின்றனர்.

ஆனால் நீயோ! ஆயிரம் இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு - எண்ணற்ற எதிர்ப்புகளைத் தூசெனத் தள்ளி விட்டு - காரியமே கண் எனக் கருதி - கழகத் தேர்தல் நிதி திரட்டும் கடமையை ஆற்றி வருகிறாய்!

தனியார் பஸ் முதலாளிகளிடம் வாகனம் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் குறைந்த பட்சம் தந்தாக வேண்டுமென்று, குரல்வளையைப் பிடித்துக் கேட்போர் - அவர்களின் அருகே வாழ்த்துப் பாடி, வால் குழைத்து நிற்போர் - கொண்டு வா ஒரு கோடி இரு கோடி நீயே தனியொருவனாக என்று ஆணையிடுவோர் - அவருக்கு அடங்கி மடங்கிக் கிடப்போர் - இது நமது எதிர் அணியினரின் இலக்கணம் என ஆகிவிட்ட நிலையில்,

நாம் நமது பழைய இலக்கணத்தை மீறாமல், நமது கழகத்தின் தேர்தல் நிதியைத் திரட்டுகிறோம்.

இதற்கு மாவட்டங்களுக்கிடையே நடைபெறும் ஆரோக்கியமான போட்டிகளையும் - ஒன்றிய, நகர - மற்றும் கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கிடையே நடைபெறும் அதே விதமான போட்டிகளையும் கேள்விப்படும்பொழுது - நேரிலே காணும்பொழுது -

என் இதயத்தில்
பரபரப்புடன்
துடித்துக் கொண்டிருக்கும்
எத்தனையோ
துன்பமயமான
நாடித் துடிப்புகளுக்கிடையே

இது இன்பம் பொழியத்தான் செய்கிறது- உன் இனிய முகத்தைக் கண்டு

என்னையறியாமலே வாழ்த்துகீதம்

என்னையும் மீறிக் கொண்டுதான்

கிளம்புகிறது! -

ஆம், இப்போது நாம் ஏற்றுக் கொண்டுள்ள கடமைக்கு காஞ்சி, ஒரு கோடி தந்து வழி வகுத்திருக்கிறது.

வாழ்த்துவோம்!
பாராட்டுவோம் -
கடமை தொடரக்
காஞ்சி வழி நடப்போம்!

அன்புள்ள,

மு.க.

05-08-2003

2955. யார் வைத்த தீயால் வீடு பற்றி எரிந்தது?

உடன்பிறப்பே,

உயர்சாதியில் பிறந்த வைதீகர் வைத்தினாதர் - அவர் மனைவி உத்தமி - பெயரே உத்தமிதான் - இவர்களின் பெண் பிரேமா - பிரேமாவுக்கு பெரியாண்டி என்ற வாலிபன் மீது பிரேமை! அவர்கள் காதலைத் தீய்க்கும் கட்டுப்பாட்டின் உருவமாக வைத்தினாதர் விளங்கினார். உயர்சாதிப் பெண், கீழ் சாதிக்காரனை மணப்பதா என உறுமினார். காதலர்கள், தடையை மீறிச் சென்று மணம் புரிந்து கொண்டு கணவன் மனைவியானார்கள். ஒரு குழந்தையும் பிறந்தது. அதற்கு உரிமை என்று பெயரும் சூட்டினார்கள். அந்தத் தம்பதியை தந்தை கரித்துக் கொட்டிக் கொண்டேயிருந்தார்.

ஒருநாள் அவர்களின் குழந்தை, தாத்தாவின் மடியில் வந்து விளையாட முனைந்தபோது, தாத்தா வைத்தினாதர் தடியொன்றால் அதன் தலையில் அடித்து, குழந்தையின் தலையிலிருந்து ரத்தம் கொட்டியது. அதைத் திரும்பிப் பார்க்காமலே அவர் வெளியே போய்விட்டார். பிரேமா, குழந்தை அபாயக் கட்டத்திலிருப்பதைத் தன் தாய் உத்தமியிடம் கூறி அழுதாள். உடனே தாயார் உத்தமி, குழந்தையை மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டுபோய் சிகிச்சை செய்வித்து, குழந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லையென்றதும், வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு வந்தாள். வைத்தினாதர் மிகவும் கோபமாக மனைவி உத்தமியைப் பார்த்து, ஏண்டி! நாம் மேல் ஜாதி! கீழ் ஜாதிக்காரனுக்குப் பிறந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாயா? நமது ஆச்சாரப்படி அந்தக் குழந்தையைத் தொடலாமா? நமது சாஸ்திரத்துக்கு இது விரோதமல்லவா? என்று சீறினார்.

அதற்கு அவர் மனைவி உத்தமி சொன்னாள் - ஆமாம் - ஆச்சாரப்படி குற்றம்தான் - சாஸ்திர சம்மதமில்லைதான் - உங்கள் சட்டம், சம்பிரதாயம் இதை யெல்லாம் விட மனிதாபிமானம் என்று ஒன்று இருக்கிறதே - அதன்படித்தான் நான் நடந்து கொண்டேன். இப்படி அவர் மனைவி உத்தமி சொன்னதும், வைத்தினாதர்

வாயை மூடிக்கொண்டு, மேசையில் கிடந்த நாளிதழைப் படிக்கத் தொடங்கினார்.

அதில் தலைப்புச் செய்தியாக வேலை நிறுத்தம் சட்ட விரோதம் - நீதிமன்றத் தீர்ப்பு என்ற கொட்டை எழுத்துச் செய்தியைப் படித்தார். தொடர்ந்து படித்தார். இப்போது அவரும் நீயும் படிப்பது, அதை வைத்து நான் எழுதியுள்ள கடிதம்! அது வருமாறு :- அரசு அலுவலர் அடுக்கடுக்கான பல கட்டப் போராட்டங்களுக்குப் பிறகுதான் ஜூலை 2ந்தேதி முதல் வேலை நிறுத்தம் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரால், சூன் 30ஆம் தேதி இரவே எஸ்மா சட்டத்தின்கீழ், அலுவலர் சங்கத் தலைவர்கள், முன்னணியினர், அலுவலர் ஆகியோரைக் கைது செய்தது. இந்தக் கைதினைக் கண்டித்து ஜூலை 1ந்தேதியன்று தலைமைச் செயலகப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களையெல்லாம், சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் அலுவலர்களை அரசு எஸ்மா, டெஸ்மா அவசரச் சட்டம் ஆகியவற்றின் கீழ் டிஸ்மிஸ் செய்தது.

இதுகுறித்து உயர்நீதி மன்றத்தில் நீதிபதி பி.டி. தினகரன் முன் வழக்கு சென்றபோது, 5-7-2003 அன்று அரசு ஊழியர் சங்கங்களின் நிர்வாகிகள் பலர் போராட்டத்தைக் கைவிடுவதாக நீதிபதி முன்னிலையிலேயே தெரிவித்தனர். நீதிபதி அதனைப் பாராட்டிய தோடு, அரசு அலுவலர்களை நள்ளிரவில் கைது செய்ததைக் கண்டித்து, கைதான அனைவரையும் அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும், டிஸ்மிஸ் செய்ததை திரும்பப் பெறுவது குறித்து 7-7-2003 அன்று மதியத்திற்குள் முடிவினைத் தெரிவிக்க வேண்டுமென்றும் உத்தர விட்டார்.

அந்த விசாரணையின்போது நீதிபதி பி.டி. தினகரன் அவர்கள் அரசு வழக்கறிஞரிடம் தெரிவித்த, அரசு நிர்வாகம் தொடர்ந்து செயல்பட வேண்டும், மக்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறேன், ஆனால், அரசு நிர்வாகம் என்ற சக்கரத்தைச் செயல்படவிடாமல் அதற்கு முட்டுக்கட்டை போடுகிறீர்கள். அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதாக நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளனர். ஆனால், அரசு

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தயக்கம் காட்டுகிறது என்ற கருத்துகள் முக்கியமானவை.

இந்தத் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு அரசு செயல்பட்டிருந்தால் 5ந் தேதியோடு பிரச்சினையே முடிந்து போயிருக்கும். இரவு 7 மணி அளவில் நீதிபதி தினகரன் அவர்கள் அளித்த இந்தத் தீர்ப்பினை ஏற்காமல் தமிழக அரசு இரவோடு இரவாக சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியை அணுகி, நீதிபதி தினகரன் அவர்களின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை பெற்று பிரச்சினையைத் தொடர்ந்தது.

தலைமை நீதிபதி தலைமையிலான பெஞ்ச், இந்த வழக்கினை விசாரித்தபோது அவரும் சில கருத்துகளை, தீர்ப்பு அளிப்பதற்கு முன்பு தெரிவித்தார். அந்தக் கருத்துகள் வருமாறு :-

அரசு ஊழியர்களை ஒட்டுமொத்தமாக டிஸ்மிஸ் செய்வதற்காகவா எஸ்மா அவசரச் சட்டம் முன் தேதியிட்டு அமல்படுத்தப்பட்டது? விசாரணையின்றி அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்தது சரியா? ஏன் விளக்கம் கோரவில்லை? பணி நீக்கம் செய்யப்பட்ட குடும்பத்தினரைக் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றினால் அவர்கள் எங்கே போவார்கள்? இவ்விஷயத்தில் அரசு பரந்த மனப்பான்மையுடன் நடந்திருக்கலாம். பணிக்குத் திரும்பிய ஊழியர்களை அரசு அனுமதிக்க வில்லையே? பணி விதி, நடத்தை விதி போன்றவை இருக்கும்போது ஏன் அவசரச் சட்டம்?

இந்த அளவிற்கு கருத்துகளைத் தெரிவித்த உயர்நீதி மன்றத்தின் பெஞ்ச் தனது தீர்ப்பில், சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களை உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்ட போதிலும், டிஸ்மிஸ் செய்யப்பட்டிருந்த ஒரு லட்சத்து 70 ஆயிரம் அலுவலர்கள் பற்றி தீர்ப்பாயம் விசாரிக்கும் என்றும், அரசு பிறப்பித்த எஸ்மா அவசரச் சட்டம் காரணமாக எந்த அடிப்படை உரிமையும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் தீர்ப்பளித்த காரணத்தால் இது உச்ச நீதி மன்றத்திலே மேல் முறையீட்டிற்கு உள்ளானது.

இந்தத் தீர்ப்பு பற்றி நான் கருத்து எதுவும் கூறாமல், உச்ச நீதி மன்றத்திலே இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சென்னை உயர்நீதி மன்றத்தின் கருத்து பற்றி தங்கள் தீர்ப்பிலே கூறியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஸ்டிரைக்கில் ஈடுபட்ட இலட்சக்கணக்கான ஊழியர்கள் டிஸ்மிஸ் என்பது ஒரு அசாதாரணமான சூழ்நிலை. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு சென்னை உயர்நீதிமன்றம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டோரின் மனுக்களை விசாரணை செய்திருக்க வேண்டும். அப்படியில்லாமல், இந்த மனுக்களை ஏற்க முடியாது என்றும், பாதிக்கப்பட்டோர் மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தை அணுகலாம் எனவும் உயர்நீதி மன்றம் கூறியது மிகவும் நியாயமற்றதாகத் தோன்றுகிறது. இதற்கு முன்பு, உச்ச நீதிமன்றத்தில் சந்திரகுமார் என்பவர் தொடுத்த வழக்கில் மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் இன்றி செயல்பட்டால், அரசு ஊழியர்கள் நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுகலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கையில், தமிழகத்தில் ஸ்டிரைக் நடத்தியதற்காக பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஊழியர்களை மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தை நாட வேண்டும் என்று கூறியது சரியான செயல் அல்ல.

இவ்வாறு உச்சநீதிமன்றமே தனது தீர்ப்பில் கூறியுள்ளது. எனவே சென்னை உயர்நீதிமன்றம், அப்போதே இந்த வழக்கினை விசாரித்து தீர்ப்பு தந்திருந்தால் இந்தப் பிரச்சினை இத்தனை நாட்கள் நீடித்திருக்காது. ஜூலை 10ஆம் தேதிக்கு முன்பே முடிந்திருக்கும். நீதிபதி பி.டி.தினகரன் வழங்கிய தீர்ப்பையாவது தமிழக அரசு ஏற்றிருந்தால் ஜூலை 5ந்தேதியே பிரச்சினை தீர்ந்திருக்கும். அப்படி தீராத காரணத்தினால்தான் தொ.மு.ச. மற்றும் சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யு.சி. உள்ளிட்ட தொழிற் சங்கங்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட வேண்டியது தவிர்க்க முடியாததாகி, பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல நேரிட்டது. உச்ச நீதிமன்றம் இதனை விசாரித்து குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளான 2,200 பேர் மீது மட்டும் விசாரணை நடத்தி, அவர்களை பணியில் சேர்ப்பது குறித்து முடிவெடுக்கலாம், மீதமுள்ள டிஸ்மிஸ் செய்யப்பட்டோரை மீண்டும் பணியிலே சேர்க்க வேண்டுமென்ற கருத்தினை 21-7-2003 அன்று தெரிவித்தது. ஆனால், உச்ச நீதிமன்றத்தின் இந்தக் கருத்து தமிழக அரசினால் உடனடியாக ஏற்கப்படவில்லை. 25ந்தேதியன்றுதான் உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு சார்பில், அன்று முதல் அவர்களுக்கு வேலை தரப்படும் என்ற உறுதி தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு உறுதியளித்த போதிலும், 14 ஆயிரம் பேர் மீது முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு பணி வழங்க இயலாதென்றும் அரசு தெரிவித்தது. இந்த 14 ஆயிரம் பேரையும் பணியிலே சேர்க்க வேண்டுமென்று மீண்டும் தொ.மு.ச. மற்றும் தொழிற்சங்கங்கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு தரப்பட்டது. இந்த மனு 31-7-2003 அன்று உச்சநீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு, மீண்டும் பணியிலே சேர அனுமதி மறுக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. மேலும் ஜூலை 2ந்தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்பட மாட்டாது என்று அரசு அண்மையில் அவசர அவசரமாக பிறப்பித்த உத்தரவையும் ரத்து செய்து உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கூறியது. இந்தத் தீர்ப்பிலே கூறப்பட்ட 5000 பேருக்கு மேல் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை செல்லக் கூடாது என்ற கருத்தினையும், தமிழக அரசு ஏற்றுக் கொண்டதா என்றால் இல்லை. மாறாக 6,072 பேரை பணியிலே சேர்க்க முடியாது என்று உச்ச நீதிமன்றத்திலே கருத்து தெரிவித்தது.

தமிழக அரசின் இந்தக் கருத்தையும் உச்ச நீதி மன்றம் ஏற்றுக்கொண்டு, மீதமுள்ள 6,072 பேரும் தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள அரசினால் நியமிக்கப்படும் மூன்று முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதிகள் முன் முறையிட்டுக் கொள்ளலாம் என்றும், இவர்களில் 2,749 பேர் டிஸ்மிஸ் என்பதற்குப் பதிலாகத் தற்காலிகப் பணி நீக்கம் என்ற பட்டியலிலே வைக்கப்படுவார்கள் என்றும், அந்த நீதிபதிகள் ஒரு மாத காலத்திற்குள் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்றும் தனது இறுதித் தீர்ப்பிலே தெரிவித்திருக்கிறது. இந்த நீதிபதிகள் இந்தப் பிரச்சினையை விசாரிக்கும்போது அதனை எஸ்மா அவசரச் சட்டப் பிரிவுகளின்படி விசாரிக்கக் கூடாது என்றும், அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளின்கீழ்தான் விசாரிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் நேற்றைய தீர்ப்பிலே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. உடன்பிறப்பே,

இந்தக் கடிதத்தின் தொடக்கத்திலே நான் குறிப்பிட்ட கதையில் வரும் உத்தமி கதாபாத்திரமாக உச்சநீதிமன்றமும் - வைதீக வைத்தினாதராக அ.தி.மு.க. அரசும் - பிரேமாவாக அரசு ஊழியர்களும் விளங்குவது உனக்கு விளங்குகிறதா? மற்றவை உன் மனச்சாட்சிக்கே விட்டு விடுகிறேன்.

அடுக்கடுக்கான இத்தனை நிவாரணங்களையும் உச்சநீதிமன்றம் வழங்கிவிட்டுத்தான், வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதம் என்ற தனது கருத்தினையும் கூறியிருக்கிறது. அரசு அலுவலர்களின் வேலை நிறுத்தம் சட்டவிரோதம் என்று, உச்ச நீதிமன்றம் இரக்கத்திற்கே இடமின்றி எண்ணியிருந்தால், இத்தனை சலுகைகளையும் அவர்களுக்கு அளித்திருக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும் இந்த வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரை அரசு அலுவலர்கள் புதிதாக எந்தச் சலுகைகளையும் கேட்டுப் போராடவில்லை, எடுத்த எடுப்பிலேயே நாளையே வேலை நிறுத்தம் என்றும் செய்து விடவில்லை என்பதெல்லாம் மனதில் கொள்ளத்தக்கனவல்லவா?

தமிழகத்திலே நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில், இதற்கு முழுக் காரணம் அரசு அலுவலர்களா அல்லது அரசாங்கமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசு அலுவலர்கள் ஏற்கனவே அனுபவித்துவந்த சலுகைகளையும், உரிமைகளையும் திடீரென்று ரத்து செய்தது யார்? அவர்கள் பலமுறை போராட்ட அறிவிப்புகளைச் செய்தபோதெல்லாம், அவர்களை அழைத்துப் பேசிடத் தவறியது யார்? வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு முன்பே இரவோடு இரவாக சமூக விரோதிகளைப் போல நள்ளிரவிலே கைது செய்தது யார்? ஓரிரு நாட்களோடு வேலை நிறுத்தம் முடிந்திருக்கின்ற சூழ்நிலையில் அதனை முடியவிடாமல் செய்தது யார்? அவசர அவசரமாக எஸ்மா அவசரச் சட்டம் பிறப்பித்தது யார்? அந்தச் சட்டத்தையும் கடந்த ஏப்ரல் முதலே அமலுக்கு வரும் என்று முன்தேதியிட்டு அறிவித்தது யார்? எந்த வித விசாரணையும் இன்றி, எடுத்த எடுப்பிலேயே டிஸ்மிஸ் என்று அறிவித்தது யார்? அலுவலர் சங்கத்தினர் நீதிபதி முன்பே தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்த போதிலும், அதனை ஏற்றுக்கொள்ள முன்வராதது யார்? பணிக்குத் திரும்பி வருகிறோம் என்று எத்தனையோ நாட்கள் அலுவலகங்களுக்கு வந்தபோதிலும், அவர்களை ஏதோ சமூகவிரோதிகளைப் போல உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தி வீட்டிற்குத் திருப்பி அனுப்பியது யார்? நீதிமன்றமே பலமுறை தங்கள் தீர்ப்பின் மூலமும், கருத்துகளின் வாயிலாகவும் தெரிவித்தவைகளையெல்லாம் கேட்க மறுத்து விடாப்பிடியாக, அவர்களைப் பழிவாங்கியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டது யார்? என்.ஜி.ஓ.சங்கத் தலைவர்

மூன்று முறை மன்னிப்புக் கடிதம் எழுதியும் கூட, அவரைப் பார்க்க இன்று வரை அனுமதி தராதது யார்? அரசு அலுவலர்களைப் பழிவாங்குவதற்காக உயர்நீதி மன்றத்திலே மேல் முறையீடு செய்தது யார்? பரந்த மனப்பான்மையோடு அரசு நடந்துகொள்ள வேண்டுமென்ற நீதிபதியின் கருத்துக்கு கேளாக் காதினராக இருந்தது யார்? யார் வைத்த தீயால் வீடு பற்றி எரிந்தது?

இதற்கெல்லாம் ஒரே பதில் தமிழக அரசுதான்! அரசு கூட அல்ல, முதலமைச்சர் ஜெயலலிதா என்ற ஒரே பெண்மணிதான்! ஆனால் உச்சநீதிமன்றம், இவ்வளவு சலுகைகளையும் அரசு அலுவலர்களுக்கு வழங்கியபோதிலும், இவ்வளவிற்கும் காரணமாக இருந்த அரசைப் பற்றி குறை கூறாமல், அரசு ஏதோ இத்தனை நாட்களுக்குப் பிறகு இந்த அரசு அலுவலர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொண்டதைப் பாராட்டி சில வார்த்தைகளைக் கூறியிருப்பதும், அதேபோல பாதிக்கப்பட்ட அரசு அலுவலர் சங்கங்கள் அரசுக்கு நன்றி கூறியிருப்பதும் நாகரிகத்தையும், நமது பண்பாட்டுப் பெருந்தன்மையையும் காட்டுகின்றது.

அன்புள்ள,

மு.க.

8-08-2003

2956. அவதாரமா அல்லது மனிதனா?

உடன்பிறப்பே,

கம்பனின் தமிழ் இனிமை போற்றும் விழாவுக்கு
கம்பனடிப்பொடி காரைக்குடி கணேசனாரும்,
நேர்மைமிகு நீதியரசர் இஸ்மாயில் அவர்களும்
அழைத்தென்னைச் சிறப்பித்த பொழுதெல்லாம்
கூர் மழுங்காக் கொள்கை உறுதியுடன் நான்
பார் புகழும் கம்பன் தமிழைப் பாராட்டிப் பேசியுள்ளேன்.
கதைக்கல்ல; கவிதைக்குக் கடலாழத்தையும்
கற்பனைக்கெட்டா அவன் கவிநயத்தையும்

ஒப்பிட இயலாதென்றுரைத்து ஒல்காப் புகழ் படைத்தோன்
என

செப்பியது நான் மறந்திடவில்லை.
ஆயினும் எங்கோ ஓர் முலையில் என் நெஞ்சில்
ஆரிய திராவிடப் போராட்டம்தான்
இராமாயணமென்று

ஆசியாவின் ஜோதி பண்டித நேரு,

அவர் எழுதிய உலகம் புகழ் புத்தகத்தில் ஆதாரத்துடன்
எடுத்துச் சொல்லியுள்ள உண்மையினை

அடியேனால் எளிதில் மறக்க முடியவில்லை....
இந்நிலையில்
கம்பன் கழகம் எடுத்த விழா வொன்றில்
கவிப்பேரரசு வைரமுத்து விடுத்த கேள்வியொன்று,
இராமன் அவதாரமா அல்லது மனிதனா?
இதற்குப் பதிலை நான் சொன்னால்,
இராமசாமிப் பெரியாரின் சீடனன்றோ

இப்படித்தான் சொல்வான் என்பர்!
இந்த வம்பில் இந்த நேரம் நான் புகுந்து
எதற்காகச் சிக்கிட வேண்டுமென்று

என்றைக்கோ படித்த நினைவில் இன்றைக்கு எடுத்துப் பார்க்கலாமென்று

இராஜாஜி எழுதிய தொடரோவியமாம்
சக்கரவர்த்தித் திருமகனைப் படித்துப் பார்த்தேன்.
அதில்

முதறிஞர் எழுதியுள்ள முகவுரையில்
வால்மீகி ரிஷியின் காவியத்தில்
இராமனின் நடவடிக்கைகளை

ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை. இங்குமங்கும் சில சுலோகங்களில்,

அவதார விஷயத்தைச் சொல்லி வந்தாலும்
மொத்தத்தில் வால்மீகியின் இராமன்
சிறந்த ராஜகுமாரன்; வீர புருஷன்;
அபூர்வமான தெய்வீக குணங்கள் கற்றவன்
அவ்வளவே தவிர,
அவன் கடவுளாக வேலை செய்யவில்லை என்று

பட்டு கத்தரித்தாற்போல்
திட்டவட்டமாகத் தீட்டியுள்ளார்.
பாரதத்தை வியாசர் விருந்தென்றும்,
இராமாயணத்தை சக்கரவர்த்தித் திருமகன் என்றும்
படைத்தளித்துள்ள முதறிஞர் – சில
படிப்பினைகள் மனித வாழ்வுக்குத் தேவை என்ற மனப்
பக்குவம் போதிக்க முனைந்தாரேயன்றி,
படை திரளட்டும் இருபுறமும்

பாபர் மசூதி இடிப்பதற்கும், இராமர் கோயில் எழுப்புதற்கு மென்று

எண்ணினாரில்லை.
அந்நூலின் இறுதியிலே இன்னும்
எத்தனை இராமாயணங்கள் உள்ளன,
எப்படிக் கதாபாத்திரங்கள் மாறியிருக்கின்றன
என்பதையும் எடுத்துக்காட்டி,
பணியற்ற வாழ்வு கதியற்றுப் போகுமென்றுரைத்து
பணிகளால் மட்டுமே வாழ்க்கையை சகிக்க
முடியுமென்கிறார்

எப்பணி அது?
அதுதான் நாட்டுக்கேற்ற நற்பணி!

நம் மக்களே ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளாத நட்பு போற்றும் பணி!

குறிப்பு :- I Vaalmeeks work Raama is portrayed as a great and unique man, ot as a carnato of God. True, some chapters there are references to m as a avataar of God, but, the ody of the narrative the Raama pictured by Sage Vaalmeek is ot God myself but a great price endowed with divine qualities- RAMAYANA write by RAJAJI (page 15)

அன்புள்ள,

மு.க.

10-08-2003

2957. தமிழ் செம்மொழியென அறிவிக்கத் தயக்கம் எதற்கு?

உடன்பிறப்பே,

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை பற்றி மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. முரளி மனோகர் ஜோஷி அவர்களை 9-8-2003 அன்று சென்னையிலே செய்தியாளர்கள் கேட்டபோது, அது குறித்து மத்திய அரசு கல்வியாளர்களுடன் பரிசீலனை செய்து வருகிறது என்று பதில் அளித்திருக்கிறார்.

கடந்த ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள் நான் கலந்து கொண்ட தமிழ்மொழி அகாதெமியின் சார்பில் நடைபெற்ற ஒரு விழாவில் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளில் முதல் கோரிக்கையே, தமிழ் மொழியை இந்திய அரசின் செம்மொழிப் பட்டியலில் அரபு, பாரசீகம், சமஸ்கிருதத்தைச் சேர்த்ததைப் போல் சேர்க்கவேண்டும் என்பதாகும். தமிழகத்தின் சார்பில் இந்த வேண்டுகோள் பல ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து மத்திய அரசுக்கு வைக்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியில் நானும், தமிழ்த் துறை அமைச்சரும் பிரதமருக்குக் கடிதங்கள் விரிவாக இதுபற்றி எழுதியிருக்கிறோம். அண்மையில் கூட தமிழ்நாட்டு முதல் அமைச்சரும் ஒரு கடிதம் எழுதியிருப்பதாக ஏடுகளிலே செய்தி வந்தது. ஒரு மொழி செம்மொழி என்று அழைக்கப்பட 11 தகுதிப்பாடுகள் வேண்டுமென்று மொழியியல் வல்லுநர்கள் வரையறுத்துள்ளார்கள். மொழியின் தொன்மை, தனித்தன்மை, அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு, நடுநிலை, பல மொழிகளுக்குத் தாயாக இருக்கக் கூடிய தகுதி, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமிலாத் தனித்தன்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனைக் கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு, மொழிக் கோட்பாடு என்ற இந்த 11 சிறப்புகளும் ஒரு மொழியைச் செம்மொழி என்று அறிவிக்கக்கூடிய

தகுதிகளாகும். இந்த 11 தகுதிகளும் முற்றிலும் பொருந்தக்கூடிய மொழி தமிழ் மொழி.

உலக மொழிகளில் முக்கியமான மொழிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 600. இதில் இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் சுமார் 300. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறு தான். அவை, தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹிப்ரூ, கிரீக் ஆகியனவாகும். இவற்றில் லத்தீனும் ஹிப்ரூவும் ஏறத்தாழ இறந்த மொழிகள் என்று கருதப்படக்கூடியவை. ஆனால், இஸ்ரேல் அரசால் ஹிப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, ஓரளவிற்கு அதிலே வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

சமஸ்கிருதம் என்றுமே பேச்சு வழக்கு மொழியாக இருந்ததில்லை. அது எழுத்து வழக்குக்கு மாத்திரம்தான் பயன்படுகிற மொழி. ஆனால் இந்தியாவிலே உள்ள மூத்த மொழிகளிலே, ஒரு மொழி வடமொழியான சமஸ்கிருதம் என்பதை மறுப்பதற்கில்லை. சீன மொழியை எடுத்துக் கொண்டால் அது பட எழுத்துகள், சித்திர எழுத்துகளைக் கொண்ட மொழி. தமிழ் மொழி ஒன்றுதான் மனித சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளை பிசிறில்லாமல், அழுத்தம் திருத்தமாக, துல்லியமாக உணர்த்தும் ஆற்றல் கொண்ட மொழி என்று நானல்ல, மொழியியல் தந்தை என்று போற்றப்படுகின்ற டாக்டர் எமினோ கூறியிருக்கிறார். ஐரோப்பாவை மொழிவழியிலே அறிந்து கொள்ள வேண்டுமேயானால் இலத்தீன், ஹிப்ரூ, கிரீக் மொழிகளின் துணை தேவைப்படுவதைப் போல, இந்தியாவை அறிய தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளின் துணை தேவை. இந்திய மொழிகளுக்குத் தாயாக இந்த இரண்டு மொழிகள்தான் உளளன.

இந்தத் தமிழ் மொழியைத்தான் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று நாம் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகிறோம். தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்டால் அதனால் என்ன பயன் என்று கேட்பவர்களும் உண்டு. மத்திய அரசு தமிழைச் செம்மொழி என்று அறிவித்தால் உடனடியாக இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு அதனை ஏற்கும். அதன்பின் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறை

தனித் துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழ்க் கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும்.

இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு தமிழை செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும். உலகப் பல்கலைக் கழகங்களில் இப்போது கீழ்த்திசை மொழிகளில் ஒன்றாக தமிழ் இருந்து வரும் நிலைமை மாறி, தனியே தமிழ்த் துறைகள் உருவாக்கப்படும்.

மத்திய அரசு சமஸ்கிருத ஆண்டாக அறிவித்ததைப் போல, தமிழ் ஆண்டு என்று அறிவிக்க வாய்ப்பு ஏற்படும். சமஸ்கிருத ஆண்டைக் கொண்டாட 15 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியது போல, தமிழுக்கும் ஒதுக்கி கொண்டாடும் நிலை உருவாகும்.

தமிழரின் கலை, இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புகளை விவரிக்கும் கலைக் களஞ்சியத் தொகுதிகள் 10 உருவாக்கப்பட வாய்ப்பு ஏற்படும். தமிழ் மொழி - ஆங்கில அகராதிகள் பல வெளியிடலாம். அதற்கான செலவு மத்திய அரசு ஏற்கலாம்.

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேகமூட்டும் வகையில் மேலும், பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது, ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்புகளும் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

தமிழைச் செவ்வியல் மொழியாக ஆக்குவதற்கான முயற்சி 1918ஆம் ஆண்டிலேயே சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய மகாநாட்டிலேயே, தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பிறகு கரந்தை தமிழ்ச் சங்க சார்பில் 1919லும், 1920லும் இதே போன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் ஒரு முறை பேசும்போது, உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் என் தாய் மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கழக ஆட்சியின்போது மணவை முஸ்தபா, பொற்கோ, ஜான் சாமுவேல், வ.செ. குழந்தைசாமி ஆகியோரைக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் கருத்துரையைப் பெற்று, அந்தக் கருத்தும்

அப்போதே மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டது. மத்திய அரசு அந்தக் கருத்துரையை மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திற்கு அனுப்பியது. தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன் அந்தக் கருத்துரை மத்திய அரசை அடைந்தது. எனவே, தமிழைச் செம்மொழியாக்குவது பற்றி மத்திய அரசு இனியும், எந்தவிதமான பரிசீலனையும் நடத்தத் தேவையில்லை. ஏற்கனவே, பரிசீலனைகள் எல்லாம் நடைபெற்று பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன என்பதை மத்திய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், தமிழ் மொழியைச் செவ்வியல் மொழியாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நாடாளுமன்றத்திற்கு முன்பு நமது தமிழ் அறிஞர்கள் பலர் உண்ணாவிரதம் இருப்பதென்று தமிழ் செவ்வியல் மொழிப் போராட்டக் குழு முடிவு செய்து, வரும் 18-8-2003 அன்று திங்கட்கிழமை அந்தப் போராட்டத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து பல ஆண்டு காலமாக வைக்கப்பட்டு வரும் இந்தக் கோரிக்கையினை மத்திய அரசு உடனடியாக ஏற்று அறிவிக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே மத்திய அமைச்சர் ஜோஷி அவர்கள் பரிசீலிக்கப்படுகிறது என அறிவித்ததைத் தொடர்ந்து, பிரதமரோடு அவர் கலந்துபேசி உடனடியாக தமிழ் செம்மொழியாகிவிட்டது என்ற தித்திப்பான செய்தியை வழங்குவார் என்று தமிழகமே எதிர்பார்க்கின்றது.

அன்புள்ள,

மு.க.

11-08-2003

2958. பூட்டப்பட்ட சீரணி அரங்கில் புன்மைச் செயல் எப்படி?

உடன்பிறப்பே,

கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் என்ற பெயரால், அழகாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த சீரணி அரங்கத்தை ஜெயலலிதா அரசின் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ள நல்ல நேரம் எனப்படும் நள்ளிரவில் அடியோடு இடித்து, அந்தச் சீரணி மேடை இருந்த இடம் தெரியாமல் ஆக்கி விட்டார்கள். பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள் யாரும் நுழைய முடியாமல் தடுத்து நிறுத்தி அடித்து விரட்டி, கள்வர் உலவும் இருட்டில் எப்படிக் கண்ணகி சிலையை அகற்றினார்களோ, அதைப் போல அரசாங்கத்தின் இயந்திரங்களைப் பயன்படுத்தி, போலீசாரும் அதிகாரிகளும் புடை சூழ இந்தப் புண்ணிய காரியத்தை (?) செய்து முடித்து விட்டார்கள்.

என்ன அண்ணா இது அநியாயம்? நீங்கள் அமைத்த சீரணி - அந்த அழகான மேடையை இரவோடு இரவாக மணல் மேடாக்கி விட்டார்களே! என்று அண்ணாவைப் பார்த்து, ஒரு தம்பி நின்று கேட்பது போல, ஒரு கம்பி மட்டும்தான் தனியாக விடப்பட்டிருக்கிறது அல்லது தப்பித்து நிற்கிறது அந்த இடத்தில்!

தி.மு. கழக ஆட்சியில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட பயனுள்ள திட்டமாம் நமக்கு நாமே என்ற திட்டம், அறிஞர் அண்ணா நடைமுறைப்படுத்திட அறிவித்த சீரணித் திட்டத்தின் மறு பதிப்பாகவே அமைந்து மக்களின் பேராதரவைப் பெற்றது.

நாமே முன்னின்று - நாமே சிந்தித்து - நாமே திட்டமிட்டு - நமது உழைப்பை நல்கி - நமது முயற்சியால் - உருவாக்கப்படும் திட்டங்களை, நமக்கு நாமே திட்டமென்றுரைத்துச் செயல்படுத்தி னோம். அத்திட்டத்தின் தொடக்கக் கட்டமான சீரணியின் செயல்பாடுகளில் ஒன்றுதான் சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கம். இன்னும் பல ஆரம்பப் பள்ளிகள், சிறிய அளவு மருத்துவ மனைகள், இவற்றின் தொகுப்புத் திட்டமாகத்தான் அரசும்

42243
கூ 894 - 8116
கி.நூ.ரூ.36

தி.மு.க. அறக்கட்டளை

பங்கேற்று நடத்தப்பட்ட நமக்கு நாமே திட்டம் - அனைவரும் புகழ்ந்த திட்டம். அந்தத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் அரும்பியதே சீரணித் திட்டம் - அண்ணாவின் சிந்தனையில் விளைந்தது - அவரும், அவர் போன்ற பெரிய தலைவர்கள் பலரும் முழங்கிய சென்னைக் கடற்கரையில் நிரந்தர மேடையொன்று அமைய வேண்டுமென விரும்பினார். அவர் விருப்பத்தை சீரணியினர் நிறைவேற்றிக் காட்டினர்.

அந்த மேடை இடிக்கப்பட்டதற்குப் பத்திரிகைகளில் அரசின் சார்பில், காரணங்கள் பக்கம் பக்கமாக வெளியிடப்பட்டுள்ளன. அண்ணா ஆட்சியில் அமைக்கப்பட்ட கண்ணகி சிலையை அகற்றினார்கள். அவளும் நீதி கேட்டுக் கேட்டு அலுத்துப் போய், அருங்காட்சியகத்துக்குள் முடங்கிப் படுத்து விட்டாள். கண்ணகி சிலை காரிருளில் காணாமற் போனதற்கு லாரி மீது பழி போட்டார்கள். பாவம்! அந்த லாரி அந்தப் பக்கமே வரவில்லையென்று பலத்த சாட்சியங்கள் இருந்தும், பத்தினியின் வழக்கு பலிக்கவில்லை. என் செய்வது! தமிழன் இன்னும் விழிக்கவில்லை.

இதோ அண்ணாவின் சீரணி அரங்கம்! அழித்து, அகற்றப்பட்டதற்கானக் காரணத்தை இந்த அரசாங்கமே இடித்து முடித்த பிறகு ஏடுகளில் வெளியிட்டிருக்கிறது. அது வருமாறு :- சென்னை மெரினா கடற்கரையில் சீரணி அரங்கம் சிதிலமடைந்து வருவதும், சமூக விரோதிகளின் நடவடிக்கைகள் அங்கு நடைபெற்று வருவதும் முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பொதுப்பணித் துறையின் கருத்தின் படி, சீரணி அரங்கம் கடல் அலைக்கு அருகிலும், கடல் காற்றால் பாதிக்கப்படுகின்ற வகையிலும் இருப்பதால், அதனுடைய கூரையில் உள்ள இரும்பு துருப்பிடித்து மேலும் சிதிலமடைந்து வருவதுடன், காங்கிரீட்டின் அடிப் பகுதி பெரும்பாலான இடங்களில் கடல் காற்றாலும், கட்டிடத்தின் பழமை காரணமாகவும் பெயர்ந்து போய்க் காணப்படுகிறது. தரைப் பகுதியும் சேதமடைந்து உள்ளது. கட்டிடத்தில் விரிசல்கள் காணப்படுகின்றன. இந்தக் கட்டிடம் மெரினா கடற்கரையினுடைய அழகையே பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. சமூக விரோதச் செயல்கள் சீரணி அரங்கிலும், அரங்கைச் சுற்றிலும் நடைபெற்று வருகின்றன. இனிமேல் அங்கு பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதை தடை

செய்யலாம் என்றும், சீரணி அரங்கக் கட்டிடத்தை அகற்றி விடலாம் என்றும் சென்னை மாநகராட்சி ஆணையரும் கருத்து தெரிவித்தார். சட்டம் ஒழுங்கு கண்ணோட்டத்திலும், குற்றத்தடுப்பு கண்ணோட்டத்திலும், சீரணி அரங்கத்தைப் பொதுக் கூட்டங்களை நடத்தும் இடமாக அனுமதிக்கக் கூடாது என்று சென்னை மாநகர காவல் துறை ஆணையரும் கருத்து தெரிவித்தார். அதன் அடிப்படையில் 9-8-2003 அன்று சீரணி அரங்கக் கட்டிடம் அகற்றப்பட்டது.

சீரணி அரங்க மேடை இடிக்கப்பட்டதற்காக அரசு கூறும் காரணங்களில் ஒன்று, சமூக விரோதச் செயல்கள் சீரணி அரங்கிலும், அரங்கைச் சுற்றிலும் நடைபெறுகின்றன என்பதாகும்.

இதைச் சொல்லக் காவல்துறையினர் கடுகளவு வெட்கமாவது படவேண்டாமா? தமிழகத்தின் தலைநகரில், காவல்துறையின் தலைமை அதிகாரி (டி.ஜி.பி.) வீற்றிருக்கும் நகரத்தில் - அவரது ஆற்றல், திறமை, அக்கறை இவற்றையெல்லாம் மீறி, அது மட்டுமின்றி சென்னை நகரில் சமூக விரோதிகளுக்கு சிம்ம சொப்பனமாகவும், கடமையைக் கண்ணியமுடன் நிறைவேற்றுபவராகவும் இருக்கின்ற காவல் துறை ஆணையரையும் கடந்து, சீரணி அரங்கில் சமூக விரோத சில்லறைத்தனங்கள் எப்படி நடந்தன? நம்ப முடியவில்லையே! நடந்தன என்றால், தடுப்பதற்கும் எடுப்பதற்கும் நடவடிக்கைகளுக்கா பஞ்சம்? கதவு பூட்டப்பட்டுள்ள சீரணி மேடையில் சமூக விரோதச் செயல்கள் புரிய கை கொடுத்தது யார்? எப்படி? என்ன வேதனையான வேடிக்கை!

கழகம் ஆட்சியில் இல்லாத ஒரு கால கட்டத்தில், வள்ளுவர் கோட்டத்திலேயே சமூக விரோதச் செயல்கள் நடைபெற்று, அவை வார ஏடுகளில் படங்களாக வெளி வந்தன. அதற்காக வள்ளுவர் கோட்டத்தை இடித்து விட்டோமா? கழக ஆட்சியில் அச்செயல்கள் தடுத்து நிறுத்தப்பட்டன என்பது தானே உண்மை!

அடுத்து ஒரு காரணம், கடல் அலைக்கு அருகிலும், கடற்காற்றால் பாதிக்கப்படுகிற வகையிலும், அரங்கம் இருப்பதால்,கூரையும் கட்டிடமும் துருப்பிடித்து சிதிலமடைந்து வருகிறது என்பது போன்றவைகளாகும். அதே கடற்கரையில்தான் இன்னும் கூட, மிக உயரமாக கலங்கரை விளக்கம் இருக்கிறது.

அண்ணா, எம்.ஜி.ஆர். நினைவிடங்கள் கூட இருக்கின்றன.

அந்தக் கடற்காற்று வீசக் கூடிய இடத்தில்தான் பிரமாண்டமான சிலைகள்கூட இருக்கின்றன. இன்னும் அகற்றாமல் விடப்பட்ட சிலைகளைச் சொல்லுகிறேன். இவற்றைக் கடற்காற்று அரிப்பு பாதிக்காமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை, சீரணி அரங்கைப் பாதுகாக்க எடுக்கப்படாதது யார் குற்றம்?

இந்தக் கடற்கரையை விட, இன்னும் அருகிலேயே கன்னியாகுமரிக் கடற்கரையில் விவேகானந்தர் மண்டபம் - அய்யன் வள்ளுவர் சிலை - பெருந் தலைவர் காமராஜர் மணி மண்டபம் - காந்தி மண்டபம் - எல்லாம் இருக்கின்றன. அவற்றின் மீது துரு ஏறியோ, உப்பங்காற்றால் சிதிலமடைந்தோ வள்ளுவர் சிலையோ, வண்ணமிகு காமராஜர் மணி மண்டபமோ பாழடைந்து விடாமல் இருக்க வேண்டுமானால், அங்குள்ள விவேகானந்தர் மண்டபம் பாதுகாக்கப்படுவது போல, இவற்றையும் பாதுகாக்க வேண்டும்.

ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையாவது Poly-Silicon (பாலி-சிலிகான்) என்ற கலவைப் பூச்சு பூசப்பட வேண்டுமென, சிலை வைக்கப்படும்போதே - மணி மண்டபம் கட்டப்படும்போதே - சிற்ப வல்லுநர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் சிற்பிகளின் அந்த எச்சரிக்கை, இந்த ஆட்சியில் ஏற்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கடற்காற்றின் காரணமாகச் சீரணி அரங்கம் சீர்குலைந்தது என்று அதனைத் தகர்த்தவர்கள், குமரி முனை அய்யன் வள்ளுவர் சிலைக்கும் - பெருந்தலைவர் மணி மண்டபத்திற்கும் - இப்படிக் காரணங்களை அடுக்குகிற காலம் வந்து விடக் கூடாது என்பதற்காக, அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டிய அவசியத்தை இந்த நேரத்தில் நினைவுபடுத்தி,

சீரணி அரங்கிற்கு ஏற்பட்ட முடிவுக்காக என் இரங்கலையும் - கண்டனத்தையும் தெரிவித்து, அரசு வெளியிட்டுள்ள பொருந்தாக் காரணங்களையும் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

12-08-2003

2959. ஒரு நாடகம் நடக்குது நமது நாட்டிலே!

உடன்பிறப்பே,

அண்ணா, எம்.ஜி.ஆர்.!
நினைவிடங்களை அகற்றிடுக!
கடற்கரை அழகைக் கெடுக்கிறது!
மந்தி யொன்று மயிலைப் பார்த்து
இப்படிச் சொன்னதும்,
எப்படிப் பொறுப்பான்
எங்கள் உடன்பிறப்பு?
உணர்ச்சி மேலிட்டு
உடன் கொதித்தெழுந்து கொளுத்தி வீசினான்.
உத்திரவிட்டது தலைமை என்று
உளறும் நாக்கு
உண்மையை மறைக்கும் போக்கு!
ஆம் இதோ ஆணையிடுகிறது தலைமை!
அக்கினிக்கு இரையாக்க வேண்டாம்!
அந்த முறை இனி கடைப்பிடிக்கக் கூடாது!
அண்ணாவின் தம்பி என்பதும்,
அன்புள்ள என் உடன்பிறப்பு என்பதும்
அட்டியின்றி மெய்யானால்,
எட்டியென அவ்வேட்டினை எண்ணி
ஏறெடுத்துப் பாரனே
எனச் சபதம் செய்க!
எங்கே அதில் காட்டுக
பொங்கும் உன் மான உணர்வை!

★

நாய் குரைத்தது!
கள்வர் நடமாட்டமோ என
கதவைச் சாத்தி வைத்தேன்.
மீண்டும் குரைத்தது!
கதவைத் திறந்து
காவல்காரனை கூப்பிட்டேன்.
அவனேதான் குரைத்துக் கொண்டிருந்தான்,
குடிவெறியில்!

★

ரஷ்ய அதிபர் ஸ்டாலின் – அவர் இறந்த பிறகு அவர் உடல்

பதப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டது.
அடுத்து அதிகாரத்துக்கு வந்தார் குருஷேவ்
அவர் ஸ்டாலின் உடலை அகற்றி
கண்ணுக்குக் காட்சியாக இருந்ததை
மண்ணுக்குள் புதைக்கச் செய்தார்.
சில ஆண்டுகளுக்குப் பிறகு,
ரஷ்யத் தேர்தல் ஒன்றில்
கவனிப்பாரற்ற ஒரு மனிதர்,
கியூவில் நின்று ஓட்டுப் போட்டார்!
கண்டுபிடித்து விட்டார்கள் நிருபர்கள்,
அவர் தான் குருஷேவ் என்று!

★

அரசு ஊழியர் என்றால் ஓர் அலட்சியம் – வெறுப்பு!
அவர் அதிக ஊதியம் பெறுகிறாராம்.

அவரை விட அதிக ஊதியம் வாங்குபவர் சொல்கிறார்.
அவர்களில் சில பேர் லஞ்சம் வாங்குகிறார்களாம்.

கொடுக்கும் சில பேர் தான் கூறுகிறார்கள் அப்படி!
வேலை நிறுத்தம் கூடாதாம், உரிமை இல்லையாம்.

வேலை செய்து காணும் பயன்; டிஸ்மிஸ் – சஸ்பென்ட்!
காலைப் பிடித்துக் கெஞ்சினாலும் கருணையில்லை.

கடமை செய், கருணை பிறக்கும் - இப்படிக்
காஞ்சி மடத்தில் தேன் கொட்டியது!

கடைசியில் சங்க அங்கீகாரம் ரத்து!
கருணை என்பது தேளாய்க் கொட்டியது.

குட்டக் குட்டக் குனிந்தபடியால்
முதுகே வில்லாய் வளைந்து போனது

அந்த வில்லில் இருந்து
அம்பாவது புறப்படுமா?

அதற்கும் நாண் கட்டுவது யார்?
அய்யோ பாவம்! அதுதான் தெரியவில்லை!

★

படிதாண்டா பத்தினியென்று யாரோ
பரிகசித்து விட்டது போல்,
பத்துப் படியை ஒரே பாய்ச்சலில் தாண்டிட
அத்துபடி எப்படி ஆயிற்று அந்தப் பெண்ணுக்கு?
கோர்ட்டுக்குக் கூப்பிட்டுப் போகும்போதெல்லாம்
குதித்துக் குதித்து நடக்குமாறு - காலை
மிதித்து மிதித்துக் கட்டளையிடுகிறார்.
கஞ்சா வழக்கன்றோ.....

பாவைக்குப் பயத்தில் தள்ளாட்டம் - தடுமாற்றம்!
ஆள்வோர்க்கு அதிகார போதையிலே ஆர்ப்பாட்டம்!

அன்புள்ள,

மு.க.

13-8-2003

★★★

2960. விழுப்புரம் அழைக்கிறது! விரைந்து தயாராகுக!

உடன்பிறப்பே,

நமது தி.மு.கழகத்திற்கேயுரிய தனிச்சிறப்பு யாதெனில், கழக முன்னணியினர் - முன்னோடிப் பேச்சாளர்கள், பல்வேறு பயனுள்ள சமுதாய - பொருளாதார - அரசியல் தலைப்புகளில் ஆற்றிடும் சொற்பொழிவைக் கேட்பதற்கு மக்கள் நன்கொடைக் கட்டணம் செலுத்தி, சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொள்வது. அதே போல ஒருநாள், இருநாள், சில சமயம் மூன்று நாட்கள் கூட நன்கொடைக் கட்டணம் செலுத்தி மாவட்ட மாநாடுகளிலோ அல்லது மாநிலப் பொது மாநாடுகளிலோ பெருவாரியான அளவில் திரண்டிடுவது என்பதாகும்.

அண்ணா காலத்திலிருந்து இடைவெளியில்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த மாநாடுகள், சிறப்புக் கூட்டங்கள் போன்றவை, 1998 செப்டம்பர் 17, 18 ஆகிய நாட்களில் நெல்லையில் நடைபெற்ற தி.மு.க. பொன்விழா சிறப்பு மாநாட்டுக்குப் பிறகு நடைபெறாமல் பெருந்தொய்வு ஏற்பட்டு விட்டதையும், அதற்கு எதிர்பாராத பல காரணங்கள் தடைகளாக அமைந்தன என்பதையும் நீயும், நானும் நன்கறிவோம்.

தடைகள் இனி பல வரினும் அவற்றையும் தாண்டி, நமது கழகத்தின் தனிச் சிறப்புக்குரிய மாவட்ட மாநாடுகளையும், மற்றும் சிறப்பு பொது - மாநில மாநாடுகளையும் நடத்திட வேண்டுமென்பதில் நான் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் உடையவனாக இருக்கிறேன். தமிழ்ப் பெருமக்களிடத்திலே நமது கழகக் கருத்துகளை விதைப்பதற்கும், நல்விளைவு கண்டு, நாடு செழிப்பதற்கும், நாம் அந்த மாநாடுகளில் எடுத்து வைக்கும் விளக்கங்கள் - முழங்கிடும் முரசங்களாக அதிர்ந்திடும் என்பது மட்டுமல்ல. நமது கழகக் குடும்பங்களின் சந்திப்புச் சங்கமங்களாகவும் அவை பயன்படக் கூடியவை என்பதை இடைக் காலத்தில் நாம் சற்றே அலட்சியப்படுத்தி மறந்து விட்டோம். மறதி போக்கி, அசதி விலக்கி ஆகா என்றெழுந்தது பார் அண்ணாவின்

சேனை! என ஆர்த்தெழும் காட்சிகளை இனி மாநாடுகள், சிறப்புக் கூட்டங்கள் வாயிலாக உருவாக்கிட வேண்டுமென்று திட்ட மிட்டுள்ளது தி.மு.க. தலைமை!

இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுமென்பதற்குத் தொடக்கமாகத்தான், சுமார் ஐந்தாண்டு காலமாக முடங்கியிருந்த உத்வேகம், இதோ முண்டா தட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறது. புறநானூற்றுத் தமிழனின் பெருமையை நினைவூட்டி, அவன் புதிய சமுதாயம் காணும் தமிழனாக எழுந்து நிற்க வேண்டுமென்று, அந்த மறுமலர்ச்சியை எடுத்துக் காட்டிட விழுப்புரம் அழைக்கிறது.

வரும் செப்டம்பர் 20, 21 சனி, ஞாயிறு நாட்களில் மாவட்ட மாநாடு விழுப்புரத்தில் - அதனைத் தொடர்ந்து பல மாவட்டங்களில் மாநாடுகளும், அந்தத் தொடர் மாநாடுகளின் தொடர்ச்சியாக மாநில மாநாடும்!

இன்னும் ஒரு மாத இடைவெளிதான் இருக்கிறது விழுப்புரம் மாநாட்டுக்கு! நலிவுற்றேன் எனினும், நானும் புறப்பட்டுவிட்டேன் தேர்தல் நிதி திரட்டும் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்கு! நாளை 16-8-2003 தஞ்சையிலும், 17-8-2003 அன்று திருச்சியிலும், 19-8-2003 அன்று சென்னையிலும், 23-8-2003 அன்று திருநெல்வேலியிலும், 24-8-2003 அன்று பரமக்குடியிலும், 25-8-2003 அன்று மதுரையிலும், 31-8-2003 அன்று திருவண்ணாமலையிலும், 6-9-2003 அன்று திருப்பூரிலும், 7-9-2003 அன்று சேலத்திலும் நடைபெறும் நிதியளிப்பு விழா நிகழ்ச்சிப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றேன். நமக்கு நாமே என்று அண்ணா சொன்னதை அரசின் திட்டமாக அறிவித்தோம் என்பது மட்டும் போதுமா? நமக்கு நாமேயென்று சூளுரைத்துச் சுடர் முகம் தூக்கி, சுயமரியாதை கொண்ட சமுதாயத்தை முழுமையாகக் காணும்வரையில் மூடலாமா நம் கண்கள்? இறவாப் புகழைச் சாவில் நட்டான், சமுதாய மானத்தை மீட்டான் என்று தானே நம் ஒவ்வொருவர் சரித்திரமும் அமையவேண்டும். அதில் நான் மட்டுமென்ன விதிவிலக்கா? அதனால்தான் நாம் என்று கூறுகிறேன். நமக்கு நாமே என்று அழுத்தம் திருத்தமாக உச்சரிக்கிறேன்.

இப்படிப் பல செய்திகளை விழுப்புரம் மாநாட்டில் நானும், நமது பொதுச் செயலாளர் பேராசிரியரும், கழக முன்னணித் தளகர்த்தர்களும் - முன்னோடிப் பேச்சாளர்களும்-

கழகக் கலைஞர்களும் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு வாட்களாகவும், கேடயங்களாகவும் வழங்க இருக்கிறோம். திராவிட இயக்கப் பூமியில் திரிசூலம் வழங்குகிற மதவெறிச் செயலுக்கு மாறாக, நம்மிடமுள்ள திரிசூலம் எது என்பதை, அது அண்ணா வழங்கிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை முன்பே கூறியிருக்கிறேன். மீண்டும் கூறுகிறேன். கூறிக் கொண்டேயிருப்பேன் உன் மத்தியிலிருந்து! உன் மத்தியிலிருப்பதை விட எனக்கு மகிழ்ச்சியோ, மன ஆறுதலோ வேறு ஏது?

தம்பி பொன்முடி வந்தார். அவர் தான் விழுப்புரம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர், மாவட்டச் செயலாளர் என்ற முறையில்!

வரவேற்புக் குழுவினர் மாவட்டக் கழகத்தினர் - அந்தப் பட்டியலை பொன்முடி, என்னிடமும், பொதுச் செயலாளரிடமும் தந்தார். மாநாட்டு வரவேற்புக் குழுவினரின் கருத்துக்களைத் தொகுத்து எடுத்து வந்து கொடுத்தார்.

தலைமைக் கழகத்தின் ஒப்புதலைப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்ட அந்தப் பட்டியல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் தலைமை ஏற்கிறார்.

மாநாட்டுத் திறப்பாளராக தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன், கழகக் கொடியேற்றுபவர் மகளிர் அணி மாநிலச் செயலாளர் திருமதி சங்கரி நாராயணன், மாநாடு நடைபெறும் திடல் பகுதிக்கு பேரறிஞர் அண்ணா நகர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பசும்பொன் தா. கிருட்டிணன் - பந்தல்
பண்ருட்டி மணி - மாநாட்டு அரங்கம்
விருதாசலம் செல்வராஜ் - கழகக் கொடி மேடை
பொன். சொக்கலிங்கம் - நுழைவுவாயில்
வானூர் முத்துவேல் - முகப்பு

மற்றும் -

சின்னசேலம் வாசுதேவன், கச்சிராப்பாளையம் மாரியப்பன், வடக்கனந்தல் நெடுமாறன், அரசம்பட்டு முத்தையன், விழுப்புரம்

கோபால், திண்டிவனம் மிசா துரை, மேல்மலையனூர் பவுணன், சிதம்பரம் துரை. கிருஷ்ணமூர்த்தி, கெடார் பாண்டுரங்கன் ஆகிய மறைந்த கழக மாணிக்கங்களின் பெயரால் தோரண வாயில்கள்.

செப்டம்பர் 20ந்தேதி காலை 9 மணிக்கு மாநாட்டுக்கான பேரணியை கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி எம்.ஆர். கே. பன்னீர் செல்வம் தொடங்கி வைக்கிறார்.

மாநாட்டுப் பணிக்கான குழுக்களையும், குழுக்களின் பொறுப்பாளர்கள் பெயர்களையும், ஏனைய விளக்கங்களையும் -

மாநாட்டு நுழைவுக் கட்டண நன்கொடைச் சீட்டுகள் பற்றிய விபரங்களையும் -

சிறப்புச் சொற்பொழிவாளர்கள், அவர்கள் ஆற்றிடும் சிறப்புச் சொற்பொழிவுக்கான தலைப்புகள் பற்றிய விபரங்களையும் - மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பாக, வரவேற்புக் குழுத் தலைவர் பொன்முடி விரைவில் அறிவிப்பார்.

மாதம் ஒன்றே இடையில் இருக்கிறது மாநாட்டுக்கு!
நீண்ட நாளைக்குப் பிறகு நடைபெறுகிற மாநாடு!
இப்போதே தயாராகிட வேண்டுகிறேன் -
உள்ளம் துடிக்கிறது, என் உடன்பிறப்புகளை
விழுப்புரத்தில் கண்டிட!
அடுத்தடுத்துத் தொடுத்திடுவேன்
கடிதக் கணைகள்!

அன்புள்ள,

மு.க.

15-8-2003

2961. விளைச்சலும் புகைச்சலும்!

உடன்பிறப்பே,

இந்திய சுதந்திர தினத்தையொட்டி முன்னும் பின்னுமாக இரண்டு குரல் ஒலிகள் கேட்கும் வாய்ப்பை மக்கள் பெற்றுள்ளார்கள். ஒரு குரல், ஓரிரு நாட்களுக்கு முன்பு தமிழகத் தலைநகரில் கேட்ட குரல்! மற்றொரு குரல் இந்தியத் திருநாட்டின் தலை நகராம் டெல்லியில் கேட்ட குரல்!

இராமனுக்குக் கோயில் இந்தியாவில் கட்டாமல் அதுவும் அயோத்தியில் கட்டாமல் வேறெங்கே கட்டுவது? இப்படிக் கேள்வியாக எழுந்த குரல் தான் அந்தக் குரல்! ஒருவேளை தமிழகத்திற்கு அசோக் சிங்கால் விஜயம் செய்து, அவர் எழுப்பிய குரலோ என்று ஐயுறுதல் வேண்டாம். தமிழக முதலமைச்சர், ஜெயலலிதா அவர்கள் முழங்கிய குரல் ஒலிதான் அது!

இராமனுக்குக் கோயில் அயோத்தியில் கட்டியே ஆகவேண்டும் - அதற்கெனச் சட்டம் கொண்டு வந்தால் அதை அ.தி.மு.க. ஆதரிக்கும். இந்தியாவில் அதுவும் அயோத்தியில், இராமனுக்குக் கோயில் கட்டாமல் வேறெங்கே கட்டுவது? இப்படியொரு கேள்வியை பஜ்ரங் தளத்துத் தலைவர்களோ - விசுவ இந்து பரிட்சத் தலைவர்களோ - ஆர்.எஸ்.எஸ். தலைவர்களோ கூட கேட்கவில்லை. ஜெயலலிதாதான் கேட்டிருக்கிறார்.

இந்தக் காலகட்டத்தில் கொண்டாடப்படும் சுதந்திர தின விழாவையொட்டி, குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள செய்தி ஜெயலலிதா உள்ளிட்ட மதவாத அரசியல் தலைவர்களுக்கும் - நேரடியாகவே மதவாதம் நடத்துகிறவர்களுக்கும் - மத வெறியைத் தூண்டுபவர்களுக்கும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ள அறிவுரையாகவும், அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது எனலாம்.

மதத்தை மையமாகக் கொண்ட அரசியல் கூடாது. இந்தத் தலைமுறையில் புதிதாக எத்தனை மசூதிகள், கோயில்கள்,

குருத்துவாராக்கள், தேவாலயங்கள் கட்டினோம் என்று பார்த்து வரலாறு நம்மை நினைவில் வைத்துக் கொள்ளாது. வளமான பாதுகாப்பான இந்தியாவை உருவாக்குவதின் மூலமே எதிர்காலச் சந்ததியின் மனத்தில் நாம் என்றென்றும் நினைவில் நிற்போம்.

குடியரசுத் தலைவர் உரையின் மேற்கண்ட இந்தப் பகுதி, அயோத்திப் பிரச்சினையை மீண்டும் எழுப்பி அமளியை மூட்டிவிடத் திட்டமிடுகிறவர்களுக்கும், அவர்களுக்குத் துணை போகிறவர்களுக்கும் விடுத்துள்ள விவேகமிக்க எச்சரிக்கையாகும்.

மதச்சார்பற்ற நிலை என்ற சொற்றொடருக்கு உண்மையான பொருளாக - உயிர் கொடுக்கும் பொருளாக - குடியரசுத் தலைவரின் உரையின் இந்தப் பகுதி அமைந்திருக்கிறது.

ஏற்கனவே பல மதங்கள் -

அந்த மதங்களுக்கான எத்தனையோ வழிபாட்டுத் தலங்கள் - இருந்திடும்போது மேலும் மேலும், அத்தகைய வழிபடுமிடங்கள் தேவை என்ற பெயரில், வீணான பிரச்சினைகளுக்கு வழி வகுத்திடக் கூடாது என்பதே மேதகு குடியரசுத் தலைவரின் மேன்மைமிகு அறிவுரையாகும். இந்த அறிவுரையை அச்சுறுத்த லாகவும் எடுத்துக் கொண்டு, மதச்சார்பற்ற நிலையில் நின்று அவர் விடுத்துள்ள வேண்டுகோளை, மதங்களிடையே நல்லிணக்கம் காண விரும்புவோர் - மனத்தூய்மையுடன் செயல்படுத்தி நிறைவேற்றிட முன்வரவேண்டும்.

மதச்சார்பற்ற நிலை என்பது, எந்த மதத்தையும் சாராது இருப்பது! அந்த நிலை, பல மதங்கள் இருக்கின்ற ஒரு நாட்டைப் பரிபாலிக்கும் பொறுப்பேற்றுள்ள அரசினர், முற்றாகக் கடைப்பிடிக்க வேண்டியது. அந்நிலையைக் கடைப்பிடித்தே நமது குடியரசுத் தலைவர், எதிர்காலத் தலைமுறையை எண்ணிப் பார்த்து இச்செய்தியை வழங்கியிருக்கிறார்.

இருக்கின்ற மதங்களுக்குள் நல்லிணக்கம் வேண்டும் - எத்தனை மதங்கள் இருப்பினும் - ஆளுகின்ற அரசினர் மதச்சார்பற்ற நிலை எடுத்திட வேண்டும் - கழகச் சார்பில் தொடக்க கால முதல் தொடர்ந்து கூறி வரும் கருத்து இதுவேதான்!

பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் மதம் - சிறுபான்மை மக்கள் பின்பற்றும் மதம் - இவற்றில் பெரும்பான்மை என்பது

சிறுபான்மையை வெல்லும் வலிமை பெற்றது என்பதற்காக, பெரும்பான்மை மதத்தினர், சிறுபான்மையினரை அழுத்தி வைக்க முனைவது அனுமதிக்கப்பட்டால் - வெற்றி, மத உணர்வுக்குக் கிடைக்குமேயல்லாமல் - மனித நேயத்திற்குக் கிடைக்காது!

ஆனால் மதத்தை மையமாகக் கொண்டு, அதனால் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அரசியல் வெற்றி காணலாம் என மனப்பால் குடிப்பவர்கள் யாராயினும் அவர்களுக்கு, குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் உரை - மதவெறியை மாய்த்து - மதப் பூசலுக்கு விடை கொடுத்து - மனித நேயம் பழகிக் கொள் - மத நல்லிணக்கம் கற்றுக் கொள் எனப் போதிக்கின்ற மதச்சார்பற்ற - மாசற்ற உரையாகும்.

கட்டியவை போதும் - கோயில்களோ, மசூதிகளோ, தேவாலயங்களோ, குருத்துவாராக்களோ கட்டியவை போதும் என்று உரைத்திடுவது, இனியாவது கடமையை உணர்ந்து கடும்பணியாற்றி எதிர்காலச் சந்ததியைக் காப்போம் என்ற நல்லெண்ணத்தின் விளைச்சல்!

இந்தியாவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது இராமருக்குக் கோயில் என்பது - அயோத்தியில் கட்டியே தீர வேண்டும் என்பது -

அமைதியை அழிக்கக் கிளம்பும் புகைச்சல்!

சுதந்திர தினத்தையொட்டி, முன்னும் பின்னும் ஒலித்த இரு குரல்களின் வேறுபட்ட அறிவிப்புகள் இவை என அறிவோம்!

அன்புள்ள,

மு.க.

16-8-2003

2962. உலகத் தமிழ் இணைய மாநாடு, ஒரு பார்வை!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் இணைய மாநாட்டினை அ.தி.மு.க. அரசின் சார்பில் நடத்தப் போவதாக விலையுயர்ந்த அழைப்பிதழ் ஒன்று எனக்கு வந்துள்ளது. மிக அழகான அழைப்பிதழ். ஒன்றின் விலையே 25 ரூபாய் இருக்கும். அந்த அழைப்பிதழில் முதலமைச்சர் ஜெயலலிதா குத்துவிளக்கேற்றி, விழாவைத் தொடங்கி வைத்து, விழா மலரை வெளியிட்டு, பேருரை ஆற்றுவார்கள் என்று அச்சடிக்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான்! அதற்குக் கீழே விழாவிற்கு அழைக்கும் துறையின் அமைச்சர் மற்றும் இரண்டு அதிகாரிகள் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இதைத் தவிர, அந்த மாநாட்டிற்கு தலைமையேற்பவர் யார்? வரவேற்புரை ஆற்றப் போவது யார்? சிறப்புரையாற்றப் போவது யார்? கலந்து கொண்டு வாழ்த்தப் போவது யார்? என்று எந்தப் பெயரையும் அந்த அழைப்பிதழிலே காணவில்லை. ஏடுகளில் அந்த மாநாடு மூன்று நாட்கள் நடைபெறப் போவதாக செய்தி வந்திருக்கின்றது.

அந்த விவரமும், அந்த அழைப்பிதழில் காணவில்லை. பாவம்! அம்மா ஒருவரே குத்துவிளக்கேற்றி, விழாவைத் தொடங்கி வைத்து, விழா மலரையும் அவரே வெளியிட்டு, பேருரையையும் ஆற்றவிருக்கிறார். மற்ற அமைச்சர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? அம்மாவே அத்தனை பணிகளையும் சுமக்க வேண்டியிருக்கிறதே? ஓகோ! மற்ற அமைச்சர்கள் வெளியூர் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் மக்கள் பணியாற்ற சென்றிருப்பார்களோ? அதுவும் கிடையாது. அனைத்து அமைச்சர்களும் அம்மாவின் விழாவிற்கு வந்து மேடைக்கு எதிரே முன் நாற்காலிகளில் மட்டும் அமர்ந்து அம்மாவின் உரைக்கு கைதட்டுவார்கள்.

இந்த அழைப்பிதழை நான் கண்ட போது என் நினைவு 1999ஆம் ஆண்டிற்குச் சென்றிடத் தவறவில்லை. ஆம், அப்போது, கழக ஆட்சியில் பிப்ரவரி 7, 8 ஆகிய நாட்களில்

சென்னை மாநகரில் உலகத் தமிழ் இணையம்-99 கருத்தரங்க மாநாடு நடை பெற்றது. அந்த மாநாட்டிற்குச் சென்னை மாநில ஆளுநராக இருந்த பாத்திமா பீவி தலைமை தாங்கினார். அந்த மாநாட்டிற்கு வரவேற்புக் குழு தலைவராக, தமிழகத்திலே தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு செயற்பட்ட, தம்பி முரசொலி மாறன் பொறுப்பேற்று வரவேற்புரையாற்றினார். தமிழக முதல் அமைச்சர் என்ற முறையில் நான் மாநாட்டினைத் தொடங்கி வைத்தேன். தமிழகக் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் தொடக்கவுரை ஆற்றினார். அந்த மாநாட்டில் மலேசிய அரசின் பொதுப்பணித் துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமுவேலு, இலங்கை அரசின் கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சர் தொண்டைமான், புதுவை மாநில முதலமைச்சர் ஆர்.வி.ஜானகிராமன் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றினர்.

வேர்ல்ட் டெல் நிறுவனத்தின் தலைவர் சாம் பிட்ரோடா அவர்களும், அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு உரையாற்றினார். தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் நன்றி கூறினார். இரண்டு நாட்கள் அந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அந்த உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டினை வாழ்த்தி இந்தியக் குடியரசுத் தலைவர் திருமிகு கே.ஆர். நாராயணன், துணைக் குடியரசுத் தலைவர் திருமிகு கிருஷ்ணகாந்த், பிரதமர் திருமிகு வாஜ்பாய் ஆகியோர் கடிதங்கள் அனுப்பியிருந்தனர். குறிப்பாக, பிரதமர் வாஜ்பய் அவர்கள் அந்த மாநாட்டிற்கு அனுப்பியிருந்த வாழ்த்து இந்த நேரத்தில் நினைவு கூர்ந்திடத்தக்கது. அது பின் வருமாறு:-

Tamil is a classical language, whose rcness is eaced manifold by its ability to adapt itself to the challenges of the modern era. Tamil Nadu as produced a large number of highly successful Information Technology professionals and entrepreneurs, who are today operating both India and abroad.

(தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழியாகும். தற்காலத்தில் எழுகின்ற பல்வேறு அறைகூவல்களையும் எதிர்கொள்ளும் வகையில், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கி, அவற்றைத் தன்வயப்படுத்திக் கொள்வதில் தமிழ் மொழிக்குள்ள ஆற்றலின் வாயிலாக அதன் செழுமை பன்மடங்கு உயர்கிறது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் துறையில், தொழில்

கல்வித் தகுதி பெற்றவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் தோன்றி, மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்கள். இவர்கள் இந்தியாவிலும் மற்றும் உலகெங்கும் உள்ள நாடுகளில் பரந்து செயல்பட்டு வருகிறார்கள்)

தி.மு.கழக ஆட்சியில் தகவல் தொழில் நுட்பத்தினைத் தமிழகத்தில் சீராக வளர்ப்பதற்கு வழிகாட்டத் தக்க வகையில் என்னுடைய தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில் நுட்பப் பணி முனைப்புக் குழு (State Level Task Force on Information Technology) ஒன்று 8-10-1998 அன்று அமைக்கப்பட்டது. அதே நாளில் தமிழ்நாடு மாநில உயர் கல்விக் குழுவின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், தமிழ் மென்பொருள் தொழில் வளரவும், பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத் திட்டத்தை உருவாக்கவும், தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் கணினியைப் பயன்படுத்துவதற்கான வழிவகையை கண்டிடவும் உதவுகின்ற ஒரு துணைக் குழுவும் அமைக்கப்பட்டது. தமிழக அரசின் சார்பில் 99ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உலகத் தமிழ் இணைய மாநாட்டிற்கு திரு. அனந்த கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய பணி மறக்கத்தக்கதல்ல. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலே இருந்து குறிப்பாக மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மொரிஷியஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, அயர்லாந்து, குவைத் ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் எல்லாம் அந்த மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் அந்த இரண்டு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கிலே கலந்து கொண்டு, பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எல்லாம் படித்தார்கள். அவர்கள் அனைவரும் கூடியெடுத்த முடிவுதான் உலகம் முழுவதிலும் கடைப் பிடிக்கக் கூடிய ஒரேவகையான தமிழ் விசைப் பலகையை உருவாக்கியதாகும். மாநாட்டின் தொடக்க விழா நிகழ்ச்சியிலும், நிறைவு நிகழ்ச்சியிலும் நானும், மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டோம். கழக ஆட்சியில் எடுத்த முயற்சியின் காரணமாகத் தான் தமிழ்நாடு, தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் வளர்ச்சியை எய்தியது. தகவல் தொழில் நுட்பத்திற் கென்றே தலைமைச் செயலகத்திலே தனியாக ஒரு துறையே மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையிலே உருவாக்கப்பட்டு 5-10-1998 முதல் செயல்படத் தொடங்கியது.

தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் நாடிச் சென்று தேர்வு செய்யும் முதல் நிலை நகரம் சென்னை என்று தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (நாஸ்காம்) அப்போது அறிவித்தது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்னணு ஆளுமை (e-Governance) ஆகியவை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட முதல் அமைச்சருக்கு ஆலோசகராக டாக்டர் அனந்த கிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். இந்தியாவிலேயே தனியாக தகவல் தொழில் நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்கி, ,அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என்ற பெருமையும் கழக ஆட்சிக்கு உண்டு. 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென் பொருள் பூங்கா சென்னையில் தரமணியில் உருவாக்கத் திட்டமிட்டு, அந்தக் கட்டிடப் பணிகள் நடைபெற்ற போது பலமுறை நானே அங்கே சென்று கண்காணித்து, அதன் காரணமாக விரைவில் அதன் பணிகள் முடிவுற்று, 4-7-2000 அன்று பிரதமர் வாஜ்பய் அவர்களை அழைத்து வந்து அதனைத் திறக்கச் செய்தேன். இந்த டைடல் பூங்கா சுமார் 12 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். இந்த டைடல் பூங்காவிற்கு கிடைத்த வரவேற்பை எண்ணிப் பார்த்து, இரண்டாவது டைடல் பூங்காவும் கழக ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. ஆனால், கழக ஆட்சி தொடராததால் இன்னமும் இரண்டாவது டைடல் பூங்கா வரப்பெறவில்லை. 1996 மே மாதத்திற்கு முன்பு வரை தமிழ்நாட்டில் 34 மென்பொருள் நிறுவனங்களே இருந்தன. ஆனால் இந்த எண்ணிக்கை, கழக ஆட்சியில் 666 மென்பொருள் நிறுவனங்கள் என்ற அளவிற்கு உயர்ந்தன. 1994-95 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு ரூ.12.17 கோடி 1999-2000 ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1,914 கோடி ரூபாய் என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், எந்த அளவிற்கு கழக ஆட்சியின் செயல்பாடுகள் இருந்தன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

7-2-2000 தேதிய எகனாமிக் டைம்ஸ், சென்னை நகரம் தேவையான மனித வளத்துடன், உரிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால் உலகின் மிகப் பெரிய மென்பொருள் நிறுவனங்களின் முக்கியத் தளமாக விளங்கி வருகிறது என்று எழுதியது.

கம்ப்யூட்டர் வார இதழான தி டி. க்யூ வீக் 6-3-2000 தேதியிட்ட இதழில், மத்திய நிதியமைச்சர் சின்கா தனது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறி விட்டாலுங்கூட, தமிழ்நாடு முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறி நின்று சென்னையில் நிகழ்த்தி வரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னைதான் என்று எழுதியிருந்தது.

12-12-2000 தேதிய தினமணி தனது தலையங்கத்தில் பழைய மாமல்லபுரம் சாலை தமிழகத்தின் தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக உருவெடுக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என எதிர்பார்க்கலாம். தகவல் தொழில் நுட்ப அறிவுத் திறனின் ஊற்றுக்கண்ணாகத் தமிழகம் திகழ்கிறது என விப்ரோ மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் பிரேம்ஜி வர்ணித்திருப்பது மிகவும் பொருத்தமே. ஆக, கணினி மென்பொருள் உற்பத்தித் தொழிலில், முதலீடு செய்வதற்கு ஏற்ற இடமாகத் தமிழகம் கருதப்படுவதில் வியப்பில்லை என்று பாராட்டியிருந்தது.

கழகம் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருந் திருக்குமேயானால், தகவல் தொழில் நுட்பத்திலே மேலும் எத்தனையோ வளர்ச்சிகளை இதற்குள் கண்டிருக்க முடியும். எனினும், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் தமிழகத்திலே முன்னேற்றம் ஏற்பட, அப்போது கழக அரசு தீட்டிய திட்டங்களும், அமைத்த அடிப்படையும்தான் காரணம் என்று சென்னையிலே உலகத் தமிழ் இணைய மாநாடு, தமிழ் இணையம்-2003 நடைபெறும் நேரத்தில் நாம் எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

அன்புள்ள,

மு.க.

23-8-2003

2963. தமிழகம் கிழக்கு நோக்கிக் காத்திருக்கிறது!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில், ஒவ்வொரு நாள் காலையிலும் ஏடுகளைப் புரட்டினால் தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு அறிவிப்பு வந்து கொண்டிருக்கின்றது. அந்த அறிவிப்பினால் நாளும் ஒவ்வொரு வகையிலே தமிழக அரசு தமிழ்நாட்டு மக்களை வதைக்கின்ற // கொடுமையைக் காண முடிகின்றது. அரசு அலுவலர் களை வாட்டி வதைத்து, அவர்களை எந்தெந்த வகையில் எல்லாம் வஞ்சம் தீர்க்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஆணைகளைத் தொடர்ந்து பிறப்பித்துக் கொண்டிருக்கின்றது. இன்று அரசு அலுவலர்கள் வாயைத் திறக்கக்கூட பயந்து கொண்டுள்ளார்கள்.

விவசாயிகள் நிலையோ கேட்க வேண்டியதில்லை. மூன்றாண்டு காலமாக விளைச்சல் இல்லை. இதிலே 5000 ரூபாய்க்கு மேல் மாத வருவாய் உள்ளவர் களுக்கு இலவச ரேஷன் கிடையாதென்று ஓர் அறிவிப்பு. இதுவரை 30 கிலோ இலவச அரிசி பெற்று வந்தவர்கள் இனிமேல் கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய் கொடுத்து வாங்கவேண்டுமென்று மற்றொரு அறிவிப்பு.

சென்னை மாநகரில் குடிநீர் கிடைக்கவில்லை . மத்திய தர வகுப்பினர் 8 ஆயிரம் லிட்டர் கொண்ட ஒரு லாரி குடிநீர் வாங்க வேண்டுமென்றால் 600 ரூபாய் பணம் கட்டித்தான் பெறுகிறார்கள். அதைக் கொடுத்து வாங்க முடியாதவர்கள் எப்போது குடிநீர் லாரி வரும் என்றுாலையில் அல்லாடிக் கொண்டிருக் கின்றார்கள். அந்த லாரி வருவதற்கும் இடையூறாக இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்ட நேரத்தில் மட்டு நான் குடிநீர் லாரிகள் வரலாம் என்று அரசு ஓர் அறிவிப்பினை செய்துள்ளது.

இந்த நிலையில் ஜெயலலிதாவும் அவருடைய அரசும் ஒவ்வொரு வீட்டிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்கவேண்டுமென்றும், இத்தனை நாட்களுக்குள் அந்தத்

தொட்டியை அமைக்கா விட்டால் அந்த வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும் என்றும் மிரட்டலான கண்டிப்பு! ஒரு வீட்டில் மழைநீர் சேகரிப்பு தொட்டி வைக்கப்பட வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 5,500 ரூபாய் செலவாகிறது. இந்தத் தொகையில் ஒரு பகுதி கூட அரசாங்கம் வழங்குவதில்லை. அவரவர்களும் இந்தத் தொட்டிக்காக செலவிட பணத்திற்கு எங்கே போவார்கள்? ஒவ்வொருவர் வீட்டிலும் அந்தத் தொட்டி வைப்பது என்பது தனிப்பட்டவர் உரிமை அதிலே எப்படி அரசு இப்படி நிபந்தனை விதிக்க உரிமை உண்டோ தெரியவில்லை . மக்கள் மீது இந்த அரசு திணித்துள்ள கிடுக்கிப்பிடி இது.

இந்த வரிசையிலே இன்றைய ஏடுகளில் ஒரு புதிய அறிவிப்பு வந்துள்ளது. அதாவது வீடுகளுக்கு உபயோகிக்கும் மின்சாரக் கட்டணத்தின் மீது வரி விதித்துள்ளது அ.தி.மு.க. அரசு. சில மாதங்களுக்கு முன்புதான் மின் கட்டணத்தை வீடுகள் உட்பட அனைத்துப் பிரிவுக்கும் இரண்டாவது முறையாக இந்த இரண்டாண்டு ஆட்சியிலே உயர்த்தியது. (தி.மு.கழக ஆட்சியிலும் மின் கட்டணம் உயர்த்தப் பட்டது உண்டு. ஆனால் ஏழையெளியவர்களைப் பாதிக்காத அளவிற்கு மின் கட்டணம் உயர்த்தப் பட்டது.

உதாரணமாக 17-2-1997 அன்று தி.மு.கழக ஆட்சியில் மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டது, ஆனால் அப்போது 50 யூனிட் வரை மின்சாரம் பயன் படுத்தும் ஏழையெளியவர்களுக்கு கட்டணத்தை உயர்த்தவே இல்லை . 51 யூனிட் முதல் 100 யூனிட் வரை மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு கழக ஆட்சியில் 5 பைசா அளவிற்குத்தான் கட்டணம் உயர்த்தப்பட்டது. 101 முதல் 200 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துவோருக்கு 20 பைசாவும், 201 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு 30 பைசா வும்தான் தி.மு.கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது.

தி.மு. கழக ஆட்சியில் இந்த அளவிற்கு குறைவாக மின் கட்டணம் உயர்த்தப்பட்டதற்கே, அப்போது ஜெய லலிதா விடுத்த அறிக்கையில், "முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மின்கட்டணம் உயர்ந்துள்ளது. ஏற்கனவே பொருளாதார சுமையாலும், விலைவாசி ஏற்றத்தாலும் நலிந்துபோன மக்களின் வாழ்வில் இன்னும் மிகக் கடுமையான தாக்கத்தை உருவாக் கும்" என்றார்.

97ஆம் ஆண்டு அப்போதே விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை நிறுத்துவது பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு நான், "விவசாயிகளிடமிருந்து மின் கட்டணம் கண்டிப்பாக வசூலிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தங்கள் இருந்தாலும், விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவது என்று அரசு முடிவு செய்திருக் கிறது" என்று கூறினேன். அந்த உறுதி மொழி; கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த வரை நீடித்தது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

20-7-1998 அன்று கழக ஆட்சியில் இரண்டாவது முறையாக மின் கட்டணம் 'உயர்த்தப்பட்டபோதுகூட வீடுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 10 காக முதல் 25 காக வரைதான் உயர்த்தப்பட்டது. மேலும் 1 முதல் 50 யூனிட் வரை பயன்படுத்தும் ஏழையெளியவர்களுக்கு கட்டண உயர்வு கழக ஆட்சியில் கிடையாது. 51 முதல் 100 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு 1.20 என்ற கட்டணம் 1.30 என்றும், 101 முதல் 300 யூனிட் வரை 1.80 என்பது 1.95 என்றும், 301 யூனிட்டுக்கு மேல் 2.50 ரூபாய் என்பது 2.75 ரூபாய் என்றும்தான் கழக ஆட்சியிலே உயர்த்தப்பட்டது. இந்த அறிவிப்பு செய்யப்பட்ட போதே, விவசாயத்துக்கும், கிராமப்புறங் களில் உள்ள குடிசைகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும் என்றும், தெரு விளக்குகள், பொதுக் குடிநீர், குடிசைத் தொழில்களுக்கு கட்டண உயர்வு இல்லை என்றும் உறுதியளிக்கப்பட்டது.

இதற்கே அப்போது ஜெயலலிதா தி.மு.க. ஆட்சியைத் தாக்கிக் காரசாரமாகக் கண்டன அறிக்கைகள் வெளியிட்டார். ஆனால் இப்போது அவரது ஆட்சியில் மின் கட்டண நிலை என்ன? உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு கழக ஆட்சியில் மின் கட்டண உயர்வு 15 சதவிகிதம்தான். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் 25.6 சதவிகிதம் உயர்வு.

உயர்மின் அழுத்தக் கமர்ஷியல் நிறுவனங்களுக்கு தி.மு.க. ஆட்சியில் 15.14 சதவிகிதம் உயர்வு. அ.தி.மு.க. ஆட்சியில் 23.3 சதவிகிதம் உயர்வு,

குறைந்த மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு கழக ஆட்சியில் 11.97 சதவிகிதம் உயர்வு. அ.தி.மு.க. ஆட்சியில் 14.04 சதவிகிதம் உயர்வு.

குறைந்த மின் அழுத்தக் கமர்ஷியல் நிறுவனங் களுக்கு கழக ஆட்சியில் 4.24 சதவிகிதம்தான் கட்டண உயர்வு, அ.தி.மு.க. ஆட்சியில் 15.6 சதவிகிதம் உயர்வு. -

கல்விக் கூடங்களுக்கு கழக ஆட்சியில் 15.6 சதவிகிதம் கட்டண உயர்வு, ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் 30.67 சதவிகிதம் மின் கட்டண உயர்வு.

தி.மு.கழக ஆட்சியில் 1 யூனிட் முதல் 25 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துவோருக்கு யூனிட் ஒன்றுக்கு 75 பைசா கட்டணம். இது அ.தி.முக. ஆட்சியில் யூனிட் ஒன்றுக்கு 110 பைசாவாக உயர்ந்துள்ளது. 26 முதல் 50 யூனிட் வரை மின்சாரம் உபயோகிப்போருக்கு கழக ஆட்சியில் யூனிட் ஒன்றுக்கு 85 பைசா. அது தற்போது யூனிட் ஒன்றுக்கு 130 பைசாவாக உயர்த்தப் பட்டுள்ளது. 51 முதல் 100 யூனிட் வரை கழக ஆட்சியில் யூனிட் ஒன்றுக்கு 150 பைசா. அது தற்போது 260 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 101 முதல் 300 யூனிட் வரை கழக ஆட்சியில் மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 220 பைசா. இது அ.தி.மு.க. ஆட்சி யிலே 350 பைசாவாக உயர்ந்துள்ளது. 301 யூனிட்டுக்கு மேல் மாதம் ஒன்றுக்கு கழக ஆட்சியில் கட்டணம் 305 பைசா. அது ஜெயலலிதா ஆட்சியிலே 475 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அளவிற்கு மின் கட்டணத்தை உயர்த்திய பிறகும் இந்த ஆட்சி திருப்தியடையவில்லை . மின்சாரத்தைப் பயன்படுத்தும் அனைவருக்கும் புதிதாக வரி ஒன்று போடப்பட்டுள்ளது. ஏற்கனவே அதிக அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவோ ருக்கு மட்டும் வரி போடப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஆனால் அப்போது வீடுகளுக்கு பயன்படுத்தும் மின்சாரத்திற்கு வரி கிடையாதென்று கூறினார்கள். தற்போது வீடுகள் உட்பட மின்சாரம் பயன்படுத்தும் அனைவருக்குமே வரி போடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7ந்தேதியன்று அரசு பிறப்பித்த ஆணையின்படி வீட்டு உபயோகத்துக்குப் பயன் படுத்தப்படும் மின்சாரத்துக்கும் 5 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

யானைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அரசாணை பிறப்பிக்கும் முதலமைச்சர் சாதாரண ஏழையெளிய மக்களைப் பாதிக்கும் இப்படிப்பட்ட ஆணைகளைப் பிறப்பித்து அவர்களையெல்லாம் வாட்டி வதைப்பது மட்டும் நியாயமாகுமா? தொடரும் இந்தக் கொடுமைகளுக்கு எப்போதுதான் விடிவு காலம் வருமோ?

விடியலை எதிர்பார்த்துத் தமிழகம், கிழக்கு நோக்கிக் காத்திருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

28-09-2003

2964. பாஷாணத்தில் விளைந்த பயிர்!

உடன்பிறப்பே,

குண்டு வெடித்ததிலே மும்பையிலும்
கும்பமேளாக் குளியலிலே நாசிக்கிலும்
குலைகுலையாய் உயிரிழந்தோர் எண்ணிக்கை
கொடுமையடா; ஒரு நூறைத் தாண்டுமென்கின்றார்.
பண்டு நம் பெரியோர்கள் தடுத்தும் கேளாமல்
பழமைவாதிகள் மதவெறிப் பயிர் வளர்த்தார்.
பாஷாணத்தில் விளைந்த பயிர் என்பதாலே
பாம்புக் குட்டிகளின் களஞ்சியமாயிற்று பாரதத்
திருநாடு!

பாசம், நேசம் அற்றுப் போனால்
பழி வாங்கும் தொற்று நோய் பரவத்தான் செய்யும் –
உயிர்ப்
பலிகளின் எண்ணிக்கை பெருகத் தான் செய்யும்.
எலிகளால் பிளேக் நோய் வருமென்று சொல்வார்.
எனவே எலிகளைத்தான் விரட்டியடித்துக் கொல்வார் –
அந்த
மனித நேயப் பகை எலிகளைப் பகுத்தறிவாளர் மட்டுமே
வெல்வார்.

ஏழ்மையின் உயரம் இந்தியாவில்
இமயம் போல் இருக்கின்ற காரணத்தால் – சாதுக்கள்
எட்டி வீசி எறிந்த காசுகளைப் பொறுக்குதற்கு
எளியோர் பலர்
முட்டி மோதி நதிக்குள்ளே முழ்கி ஜல சமாதி
ஆகிவிட்டார்.

குடிசைகளில் நரகத்தில் உழன்றோர்க்குக் கும்பமேளாத்
திருவிழா;

கோதாவரி நதியில் நேரடி சொர்க்கத்தின் திறப்பு விழா!

மராட்டியத்து நாசிக்கில் மத நம்பிக்கையால் விளைந்தது
ஒரு நாசம்!

மதவெறியாலே மும்பைப் படுகொலையோ முழு
மோசம்!

(25-8-2003 அன்று மராட்டிய மாநிலம் மும்பையில் இரண்டு கார் குண்டு வெடித்ததில் 60க்கு மேற்பட்டவர்களும், 27-8-2003 அன்று நாசிக் நகரில் கும்பமேளா நெரிசலில் சிக்கி 40க்கு மேற்பட்டவர்களும் பலியானதையொட்டி தலைவர் கலைஞர் 28-8-2003 அன்று எழுதிய கவிதை)

அன்புள்ள,

மு.க.

29-8-2003

2965. விமோசனமா? அல்லது மேலும் விசனமா?

உடன்பிறப்பே,

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் தலைவர் சூரியமூர்த்தி இன்று ஓர் அறிக்கை விடுத்துள்ளார். இந்த அறிக்கை எந்த அடிப்படையிலே வெளியிடப்படுகிறது, அந்த அறிக்கையின் காரணமாக, அந்தத் தனி ஒருவருக்கு என்ன ஆதாயம் என்பதையெல்லாம் விரிவாக விளக்க விரும்பவில்லை. அவரது அறிக்கையின் முதல் பகுதியில், 26-8-2003 தேதியில் தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆணையின்படி, தலைமைச் செயலக ஊழியர்களைப் பொறுத்தவரை, 2-7-2003 முதல் 24-7-2003 வரை, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காலத்தை சம்பள மில்லா விடுப்பாகவும், 25-7-2003 முதல் மீண்டும் பணியில் சேர்ந்த நாள் வரையான காலத்தை, தகுதியுள்ள விடுப்பாகவும் கணக்கிட்டு ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அரசின் இந்த ஆணை உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணாக இருப்பதாக பல சங்கங்களும், அமைப்புகளும் கருத்து தெரிவித்து, மீண்டும் நீதிமன்றம் செல்ல முயற்சிப்பதாக அறிகிறோம் என்று குறிப்பிட்டிருப்பதோடு, யாரும் நீதிமன்றம் செல்லவேண்டாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அரசு அலுவலர் ஒன்றியத்தின் தலைவராக இருக்கும் சூரியமூர்த்தியிடம் நாம் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் 26ந்தேதி அரசு வெளியிட்டுள்ள அரசாணை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருக்கிறதா? இல்லையா? உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு என்ன? தமிழக அரசு பணியிலே சேர்த்துக் கொள்வதாக ஒப்புக் கொண்ட 8,063 பேரையும், 25ந்தேதி முதலே பணியிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தானே உத்தரவிட்டது? (The remang 8,063 employees would be reinstated service with effect from July 25-The Hindu) அதற்குப் பிறகும், அவர்களைப் பணியிலே சேர்க்காமல் இருந்திருந்தால் அது அரசின் குற்றம்தானே? இதற்கு மாறாகத்தானே தற்போது 25ந்தேதிக்குப்

பிறகு அவர்கள் பணியில் சேராத நாட்கள் தகுதியுள்ள விடுப்பாகக் கருதப்படும் என்றால் அது உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணானதுதானே? அதைக் கூடக் கேட்கக்கூடாது என்கிறாரா சூரியமூர்த்தி? பணிநீக்கம் செய்யப்பட்ட ஒரு லட்சத்து 70 ஆயிரம் அலுவலர்க்கு ஜூலை 25ந்தேதி முதல் வேலை என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே கிடைத்த பயன்தானே! இதை சூரியமூர்த்தி மறுக்கிறாரா? மீண்டும் வேலையிலே சேர்க்கப்படுவோருக்கு 25 ஜூலை முதல் சம்பளம் கிடைக்கும் என்பதும், 25-7-2003 அன்று உச்ச நீதிமன்றத்திலே கூறப்பட்ட தீர்ப்பினால் கிடைத்த நன்மைதான். பணியிலே சேர்க்கப்படாத 6,072 அலுவலர்களின் மீதான மூன்று நீதிபதிகள் கொண்ட விசாரணை, உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறிய ஒரு வாரத்திற்குள் தொடங்கப்பட வேண்டும் என்றும், ஒரு மாதத்திற்குள் விசாரணை நடத்தப்பட்டு முடிக்கப்பட வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு கூறப்பட்டதா இல்லையா? ஒரு வாரத்திற்குள் தொடங்கப்பட வேண்டிய விசாரணை மூன்று வாரங்களுக்குப் பிறகுதான் தொடங்கப் போகிறது என்றால், அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணானதுதானே?

சூரியமூர்த்தி தனது அறிக்கையில் அரசு அலுவலர் பிரச்சினைக்காக நீதிமன்றம் சென்றதே தவறு என்று குறிப்பிடுகிறார்.

பத்திரிகைகளில் வெளிவந்துள்ள ஒரு புள்ளி விபரத்தைப் பார்த்தாலே நீதி மன்றத்தினால் கிடைத்துள்ள பயனைத் தெரிந்துகொள்ள முடியும். முதலில் பணி நீக்கம் (டிஸ்மிஸ்) செய்யப்பட்டவர்கள் சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் பேர். அவர்களில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்ட சுமார் 1 லட்சத்து 56 ஆயிரம் பேர் தவிர்த்து பணியில் சேர்க்கப்படாத அரசு ஊழியர் எண்ணிக்கை இறுதி வரையில் 14,135 பேர் என்பதாக இருந்தது. அவர்களில் 8,063 பேர் பணியில் சேர வாய்ப்பு ஏற்பட்டது நீதிமன்றத்திற்குச் சென்றதால்தானே! எனவே, பணி மறுக்கப்பட்டிருப்பவர்கள் சுமார் 6,072 பேர்தான். இவர்களிலே கூட பணி இடைநீக்கம் (சஸ்பென்ஷன்) செய்யப்படுவோர் எண்ணிக்கை 2,749 என்றும், பணி நீக்கம் (டிஸ்மிஸ்) செய்யப்பட்டிருப்போர் சுமார் 3,323 பேர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதைக் காணும்போது, இலட்சக் கணக்கானோர் என்ற எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டதற்கு

மாறாக, 3,323 பேர்தான் முழுமையாக தற்போது பணி நீக்கத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றால் இதுவும் நீதிமன்றத்தினால் கிடைத்த பயன்தானே? எனினும் இதற்குமோர் பரிகாரமாக பணி இடை நீக்கம் (சஸ்பென்ஷன்) செய்யப்பட்டவர்களும் - பணி நீக்கமே செய்யப்பட்டவர்களுமான மொத்த எண்ணிக்கை சுமார் 6,000 பேர்களை அவர்களது மறு பரிசீலனை மனுக்களை ஏற்று, ஓய்வுபெற்ற மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆய்வு செய்து ஒரு மாதத்திற்குள் முடிவு அறிவிக்க வேண்டுமென்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. இதுவும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் கிடைத்த பயன் அல்லவா? அதுவும் அரசியல் கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் உச்ச நீதிமன்றத்திலே மனு செய்து கொண்டதால் ஏற்பட்ட விளைவு அல்லவா?

இவ்வளவு விபரங்கள் - விளக்கங்கள் - சிக்கல்கள் - சிக்கல் தீர்க்கும் புள்ளிக்கணக்குகள் என்ற எந்தத் தொல்லையுமின்றி, தொடக்கத்திலேயே அரசு ஊழியர்களின் பிரதிநிதிகளுடன் அமர்ந்து பேசி ஓரிரு மணி நேரம் செலவிட்டாலும் பரவா யில்லையென்று ஓர் உடன்பாட்டை எட்டுவதற்கு இந்த அரசு முன்வந்திருக்குமானால், வேலை நிறுத்தமா, அதற்குப் பரிசு பழிவாங்குதல்தான் என்ற முடிவுக்கு வராமலிருந்திருக்குமானால் - இத்துணை நிர்வாகக் குழப்பங்களும், பொதுமக்களுக்குத் தொல்லைகளும், அரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பும் ஏற்பட்டிருக்குமா? நல்லவேளை தொ.மு.ச., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி ஆகிய தொழிற்சங்கங்கள் நீதிமன்றங்களுக்குச் சென்றதன் மூலம் இந்த அளவாவது ஒரு நல்ல முடிவை எட்டிட முடிந்தது!

ஜூலை 2ஆம் தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியப் பலன்கள் நிறுத்தப்படக் கூடாது என்பதும், வேலை நிறுத்த காலம் பணி முறிவாக (சர்விஸ் கட்) கருதப்படக் கூடாது என்பதும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் அரசு அலுவலர்களுக்கு கிடைத்த பயன்கள்தானே? நடவடிக்கைக்கு உட்படுவோர் சுமார் 5 ஆயிரம் பேருக்கு மேல் இருக்கக் கூடாது என்று வரம்பு கட்டியதும் உச்ச நீதி மன்றம்தானே! மூன்று முன்னாள் நீதிபதிகள் விசாரணை நடத்தும்போது எஸ்மா அவசரச் சட்டப் பிரிவுகளின்படி விசாரிக்காமல், அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளின்கீழ் விசாரிக்க வேண்டுமென்ற பரிந்துரையும் நீதிமன்றத்திற்குச் சென்றதால் கிடைத்த பயன்தானே!

அம்மாவிற்கு ஆதரவாக தற்போது திரும்பத் திரும்ப அறிக்கை விடும் சூர்யமூர்த்தி, இதுவரை மூன்று முறை கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற மனுவைக் கொடுப்பதற்காக நேரம் கேட்டு அலைந்தாரே?

அதற்கான நேரமாவது தெய்வத்தாயிடமிருந்து கிடைத்ததா? மேலும் மேலும் அரசு அலுவலர்களைப் பாதிக்கும் ஆணைகள்தானே தொடர்ந்து, அன்னையினால் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன! இன்னும் சொல்லப்போனால், இந்தச் சூரியமூர்த்தி தலைவராக உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் உட்பட, 240க்கு மேற்பட்ட அரசு அலுவலர் சங்கங்களின் அங்கீகாரம் எந்தவிதமான விசாரணையுமின்றி ரத்து செய்யப்பட்டதுதானே சூரியமூர்த்தி போன்றவர்கள் கண்ட பலன்!

இதே சூரியமூர்த்தி சூன் 28ந்தேதி என்ன சொன்னார்? முதல்வர் ஜெயலலிதா பேச்சுவார்த்தைக்கு அழைத்து எந்தச் சலுகை அறிவிப்பையும் அதில் சொல்லாமல் அவமதித்து அனுப்பியது வேதனை அளிக்கிறது. அரசு அலுவலர், ஆசிரியர்களை அலட்சியப்படுத்தும் வகையில் முதல்வர் தன்னிச்சையாக சில அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். முதல்வர் தனது முடிவை மறுபரிசீலனை செய்து அரசு ஊழியர்களைப் பாதிக்கும் அனைத்து அரசு ஆணைகளை ரத்து செய்ய வேண்டும். பறிக்கப் பட்ட சலுகைகள், சரண் விடுப்பு சலுகையை வழங்க வேண்டும். இதற்காக வருகிற ஜூன் 30ந்தேதிக்குள் முதல்வர் மீண்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இல்லாவிட்டால், வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி 2ந்தேதி முதல் நடைபெறும். இதை அடக்குமுறை மூலம் தடை செய்ய நினைத்தால் எதிர்கொள்ளத் தயார். எஸ்மா உள்ளிட்ட எந்தச் சட்டமும் எங்களைக் கட்டுப்படுத்தாது. இப்படியெல்லாம் வீரமுழக்கமிட்ட சூரியமூர்த்தியின் கருத்திலே ஏதாவது ஒன்றாவது ஏற்றுக் கொள்ளப்பட்டதா?

சென்னையில் உயர்நீதி மன்ற நீதிபதி தினகரன் தீர்ப்பு அளித்த ஜூலை முதல் வாரத்திலேயே அரசு ஏற்றுக் கொண்டிருந்தால் அரசு அலுவலர்களுக்கோ, அரசுக்கோ இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்குமா? அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல், இரவோடு இரவாக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம்

பிரச்சினையை எடுத்துக் கொண்டு சென்றது யார்? அரசாங்கம் தானே? எனவே, அரசு தானே இந்தப் போராட்டம் நீடிப்பதற்கு காரணமாக இருந்திருக்கின்றது.

அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையிலே இறங்க என்ன காரணம்? அரசியல் கட்சிகள் எல்லாம் மீண்டும் ஒரு முறை அரசு அலுவலர்களை அழைத்துப்பேசி, சுமுகமான முடிவுகாண வேண்டுமென்று தானே முதலில் அறிக்கை விட்டன. அதற்குப் பிறகு அரசாங்கம் காவல் துறையை ஏவிவிட்டு நள்ளிரவிலே அரசு அலுவலர்கள் வீடுகளைத் தேடிச் சென்று கைது செய்த பிறகுதானே, அவர்களைச் சிறையிலே தள்ளிய பிறகு தானே, அவர்களின் இல்லங்களுக்குச் சென்று அங்கிருந்த பெண்டு பிள்ளைகளிடம் அரசு வீடுகளை உடனடியாக காலி செய்துவிட்டுப் போக வேண்டுமென்று மிரட்டிய பிறகுதானே, அரசியல் கட்சிகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் வேறு வழியின்றி உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல நேரிட்டு, அதன் காரணமாக மேலே நான் எழுதிய நன்மைகள் எல்லாம் அரசு அலுவலர்களுக்கு கிடைத்தன. அதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, சூரிய மூர்த்தி, முதல் அமைச்சரின் கருணைமிக்க ஆணையின் வாயிலாக விரைவாக நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று விரும்புவதாக தெரிவித்திருக்கிறார். அப்படி ஏதாவது அம்மையாரிடமிருந்து விமோசனங்கள் பிறந்தாலும், அவை அரசு அலுவலர் சார்பாக நீதிமன்றங்களுக்குச் சென்றதால் ஏற்பட்ட அடிப்படை விளைவுகள்தான் என்பதை சாதாரண அறிவுடையோரும் மறுக்கமாட்டார்கள். பார்ப்போம்! விமோசனம் பிறக்கிறதா? மேலும் விசனங்கள் பிறக்கிறதா என்பதை!

அன்புள்ள,

மு.க.

30-08-2003

2966. காந்திய வழியில் கையைச் சுட்டுக் கொண்டவன்!

உடன்பிறப்பே,

வாயில்லா ஜீவன்களின் மாநாடு என்று
கோயில்கள் தோறும் சுற்றுப் பிரகாரங்களில்
வண்ண வண்ணச் சுவரொட்டிகள் காணப்படவே
வாய்பிளந்து ஊர்வன, நடப்பன, பறப்பன எல்லாமே
வாருங்கள் எல்லோரும் பேரணியாய்ப்
புறப்படலாமென்று
வரிந்து கட்டிக் கொண்டு ஓரணியாய்க் கிளம்பினவாம்.
அணிவகுப்பு ஊர்வலமென்றால் அரசு அனுமதி
வேண்டுமே
அதைப்பற்றி அவைகளுக்கு அணுவளவு
கவலையுமில்லை.

ஆறறிவு மனிதனுக்குத்தான் அந்தக் கட்டுப்பாடு, தடைகள் எல்லாம்!

அதற்கும் கீழ் அறிவுள்ள ஜீவன்கள், நடுத்தெருவில் காமலீலை கூட நடத்தலாமே!

அவ்வளவு சுதந்திரம் அவைகள் பெற்றிருக்கும்
காரணத்தால்
எவ்வளவு சலுகைகள் இருந்தும் போதவில்லை யென்று
எதற்கும் தமக்குள் ஒற்றுமை வேண்டுமென உணர்ந்து
எல்லோரும் கூடிவிட்டார்; ஏ! அப்பா! பந்தல்
கொள்ளாக் கூட்டம்.
மாநாட்டு முதல் தீர்மானத்தை முன் மொழிந்து
கோமாதா எனும் பசுமாட்டுப் பிரதிநிதி,
பசுவதைத் தடைச் சட்டத்தை இன்னமும்

பாராளுமன்றத்தில் நிறைவேற்றவில்லை எனக் குறைபட்டுக் கொள்ள,

கூடியிருந்த மற்ற பிராணிகள் அனைத்தும்
உரக்கக் குரலெழுப்பி ஓங்கி முழக்கமிட்டு,
உங்கள் உயிர் தான் உயிரா?
எங்கள் உயிர் என்ன அவ்வளவு மலிவா?
உயிர் வதையே கூடாதென ஒரே தீர்மானம்
போடுங்கள்.

இல்லையேல், ஒத்திவையுங்கள் பசுவதைத் தடை தீர்மானத்தை!

தயிர் கடையும் மத்தாகச் சுழன்று
தனியாகப் பிரித்து வெண்ணை எடுப்பது போல்,
உயிர்களிலே பிரிவினை செய்து
ஒரு ஜீவன் பசுவுக்கு மட்டும் கருணைகாட்டி
ஓரவஞ்சனை செய்யாதீர்!
உடனே தீர்மானத்தைத் திரும்பப் பெறுவீர் எனப்
பெருங்கூச்சல் எழுந்ததாலே
பெற்றுவிட்டார் வாபஸ் பசுவதைத் தீர்மானத்தை!
அடுத்தொரு தீர்மானம் இங்குள்ள அரசினரின்
அறிவிப்பைப் பாராட்டி முன்மொழியப்பட்டவுடன்,
பிராணிகளின் பிரதிநிதிகள் வகைவகையாய் எழுந்து
நின்று

அரசைப் பாராட்ட அதிலென்ன புதுமை இருக்கின்றதெனக் கேட்டன.

ஆடு, மாடு, கோழிகளை ஆலயங்களில் அநியாயமாய்ப் பலியிடுதல் கூடாதென அரசு ஆணை கூறுவதை அறியீரோ? என

ஆர்ப்பரித்துக் கொண்டு கேட்கலானார் அவைத் தலைவர்.

அறிவோம் தலைவரே! அறிவோம் அது ஆணையல்ல, 1950ஆம் ஆண்டுச் சட்டம். அப்போதிருந்த அரசு அந்தச் சட்டத்தை அறிவித்து அமலாக்கிய பெருமைக்குரியது!

மதுவிலக்குச் சட்டம் போல் அது மங்கிப் போனதால், புதிதாக ஓராணை போட்டுள்ளது இந்த அரசு.

விளக்கம் இப்படிக் கிடைத்தவுடன் அவைத் தலைவர், எதற்கும் ஒரு பாராட்டுத் தீர்மானம் இந்த அரசுக்கும் போடலாம் என்றார்.

நன்று நன்று எனக் கேட்டது ஓர் ஈனக் குரல்
நாலா திசையும் உற்றுப் பார்த்தன நால்வகைப்
பிராணிகளும்!

எங்கிருந்து வந்தது இந்த ஈனக்குரலென
எல்லா விழிகளும் மொய்த்தன அக்குரலைத் தேடி!
முலை யொன்றிலிருந்து
முக்காடு போட்டுக் கொண்டு
காலை நொண்டி ஒரு பிராணி அங்கே வந்து
ஆலையிட்ட கரும்பாக நொந்து நின்றது.
இரு கால் பிராணி இது! இங்கு எப்படி வந்தது?
நன்றி சொல்லும் மாநாட்டுக்கு நான் வருதல் கூடாதா?
நலிவுற்ற குரலில் அந்த மெலிவுற்ற உருவம்
வினவிடவே,

முதலில் யார் நீ?; அதைச் சொல்
மொத்த கூட்டமும் எழுந்து கேட்டது!

வாயில்லா ஜீவன்களான உம்மைவிட வலுவிழந்து போனவன் - என் வசமிருந்த உரிமைகளைப் பறிப்பதற்கும் என் வாழ்க்கையினைக் குலைப்பதற்கும் வஞ்சகர் வகுத்த திட்டத்தை - காந்திய வழியில் எதிர்த்துக் கையைச் சுட்டுக் கொண்டவன். பசுவதைத் தடுப்புக்கு பாராட்டோ, பலி கொடுப்பதைத் தடுப்பதற்கு நன்றியோ, எந்தத் தீர்மானம் வேண்டுமானாலும் போடுங்கள்! அப்படியே இந்த அரசு ஊழியனுக்காக - அன்புள்ள பிராணிகளே, உங்கள் மாநாட்டில் அனுதாபத் தீர்மானம் ஒன்றையும் போடுங்கள் என்றான்.

அன்புள்ள,

மு.க.

31-8-2003

2967. பொன்முடி அழைக்கிறார்; புறப்பட்டு வருக!

உடன்பிறப்பே,

இடையில் பத்து நாட்கள்தான் இருக்கின்றன; என் பாசமிகு உடன்பிறப்புகளாம் உங்களையெல்லாம் ஒரு சேரக் காணும் காட்சியை என் விழிக்கு விருந்தாக்கி, செயல்படும் வலிமை சேர்க்க மருந்தாக்கி, மகிழப் போகும் விழுப்புரம் மாநாட்டுக்கு!

அன்று 1956ல் அண்ணா எழுதினார் "அன்பில் அழைக்கின்றார்" என்று; அது மாநில மாநாடு - வரவேற்புக் குழுத் தலைவராக திருச்சி மாவட்டத் தளகர்த்தர் அன்பில் தர்மலிங்கம். அந்த மாநாட்டு அழைப்புக் கடிதம்தான் "திராவிட நாடு" இதழில் -அன்பில் அழைக்கின்றார்" என அண்ணா அவர்களால் தீட்டப் பெற்றது.

இது; விழுப்புரத்தில் மாவட்ட மாநாடுதான்; ஆனாலும் ஏற்பாடுகளும் எழுச்சியும் மாநில மாநாடு அளவுக்கு இருக்கும் என்பது என் கணிப்பு - அதனால் "பொன்முடி அழைக்கிறார்; புறப்பட்டு வருக!" என்று என் கடிதத்திற்குத் தலைப்பிடுவது பொருத்தமாகவே அமைகிறது.

பொன்முடி என்பது மென்மையான சொல் எனினும்; அந்தச் சொல்லை போர்முரசின் ஒலிபோலக் கருதிக் கிலிகொண்டிருக்கும் அரசினை இன்று இங்கே காண்கிறோம்.

புழுத்த அரிசி என்று செய்தியாளர்களிடம் ஒரு பொய் நாடகம் நடித்து முதலமைச்சர் ஜெயலலிதா புரட்டு" செய்ததையொட்டி, விழுப்புரம் கிடங்கிற்குச் சென்று - செய்தியாளர்களின் மத்தியில் இந்தச் செல்வியின் முகமூடியைக் கிழித்துக் காட்டியதற்காகப் பொன்முடி மீது அடுக்கடுக்காக பழிவாங்கும் படலம் - கைது - சிறைச்சாலை - இப்படிப் பல அடக்குமுறைகள்!

அனைத்தையும் தாங்கிக்கொண்டு அயராது பொதுப்பணியாற்றும் அடலேறுதான் அருமைத் தம்பி பொன்முடி!

அவர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்துகிறார் மாநாடு!

அது மாவட்ட மாநாடு என்றாலும், மாநில மாநாட்டுக்குரிய விளம்பரத்தைப் பெற்றுவிட்டது - அரசினர் அடாவடித்தனத்தினால்!

“பேரணிக்கு அனுமதி மறுப்பு” எனும் அதிகாரத் தடபுடல் வாயிலாக ஆர்ப்பரித்தனர் அரசினர். மீறுவது பெரிதல்ல; நமக்குப் புதிதுமல்ல!

பேரணி என ஒன்று மட்டுமே நடத்துவதாயிருப்பின் நடத்தியே இருப்போம்; தடையை மீறி!

அதுவும் சர்வாதிகார ஆட்சியின் தடை ஆணையைக் கண்டித்து ஜனநாயகத்தைத் தாங்கிப் பிடிக்க பல முற்போக்குக் கட்சிகளின் தலைவர்கள் அறிக்கைகள் விடுத்து முன் வந்த நிலையில் - தடை மீறும் போர் அணி”யாக பேரணி மாறியிருக்கும்.

நமக்கு மூன்று நாட்கள் நடைபெறும் மாநாடும் - அங்கே வழங்கப்படும் கருத்துகளும்-மக்கள் விரோத அரசின் மாய்மாலங்களை அம்பலப்படுத்தும் விளக்கவுரைகளும் முக்கியம்!

அதனால் காவல் துறை அதிகாரி ஆயினும் - அவர்களின் துறையில் பணிபுரியும் காவலர்களாயினும் - அவர்கள் பாவம்; ஏவப்பட்டுள்ள கணைகள்தான்; எய்தவர் இருக்க அம்பை நோவானேன் என்று சிறு உரசலுக்கும் இடமின்றி, நாமே ஒதுங்கிக் கொள்வோம் என முடிவெடுத்து - நானும், பொதுச் செயலாளரும் பொன்முடியுடன் கலந்து பேசி; ஒப்புக் கொள்ளச் செய்து, பேரணி நிகழ்ச்சியை ஒத்திவைத்து விட்டு - பேரணியை அணிவகுப்பு என மாற்றி அமைத்து; மாநாட்டு வளாகமாம் பேரறிஞர் அண்ணா நகருக்குள்ளேயே - பசும்பொன் தா.கிருட்டினன் பந்தலைச்சுற்றி, விருத்தாசலம் செல்வராஜ் கொடி மேடையை நோக்கி வருகிற கட்டுப்பாடுமிக்கதாக அந்த அணி வகுப்பு கம்பீரமாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது நமது கண்ணியத்தையும் - யாருடனும் வீண் மோதுதல் வேண்டாம் எனும் கட்டுப்பாட்டுணர்வையும் - வாய்மையுடையோர் நாம்;

வலிய வம்புக்குச் செல்ல விரும்பிடோம் - எனும் நமது கழக மாண்பினையும் உணர்த்தக் கூடியதாக இருக்கும்.

உடன்பிறப்பே, அண்மையில்தான் குமரி மாவட்டம் உள்ளிட்ட தென் பகுதி மாவட்டங்களில் தொடங்கி; நிறைவாகச் செம்மாந்து நின்று சிறப்புற விழா எடுத்து கழகத் தளகர்த்தர்களில் ஒருவராம் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் எல்லா மாவட்டங்களையும் மிஞ்சிய நிதி அளித்த சேலம் மாவட்டம் வரையில் தேர்தல் நிதி திரட்டச் சென்று வந்தேன்.

அட்டா, ஒவ்வொரு கூட்டமும் அலைபாயும் கடல் தான் - அந்தந்த மாவட்டத்தின் மகிமை வாய்ந்த திருவிழா தான் - ஏறத்தாழ ஓராண்டு காலமாக எனக்கும் கழகத்திற்கும் என் அன்புத் தம்பிமார்களுக்கும் எத்தனை எத்தனை சோதனைகள், எத்தனை எத்தனை வேதனைகள்!

இவற்றுக்கிடையேதான்; நான் உள்ளுக்குள் அழுது கொண்டும் - வெளியே சிரித்துக் கொண்டும் - உன் போன்ற உடன்பிறப்புகள் சோர்ந்து விடக் கூடாதேயென்று ; தம்பி முரசொலி மாறனின் உடல் நலிவினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்பது என்னை உணர்ந்த தம்பிமார்கள் அறியாததல்ல!

ஒரு வாரமா? ஒரு மாதமா? ஓராண்டு காலமாக மாறனுக்கு இந்த உபாதை! என் செய்வது எனக்கு பத்து வயதாக இருந்த காலந்தொட்டு பச்சிளங் குழந்தையாக இருந்த மாறனை மடியிலும் தோளிலுமிட்டு வளர்த்தவனாயிற்றே நான் - படிப்பு கற்றுக் கொடுத்தவனாயிற்றே நான் - அந்தப் பாசம் யாரைத்தான் விட்டு விடும் என்னை மட்டும் விட்டு விட!

ஆனாலும் அந்த வேதனையையும் ஒருபுறத்தில் அடக்கிக் கொண்டுதான், நமது கழகத்தின் 12வது பொதுத் தேர்தலை கிளைக் கழகம் முதல், தலைமைக் கழகம் வரை நடத்தி முடித்திருக்கிறோம்.

ராணி மேரிக் கல்லூரியில் முதலமைச்சர் ஜெயலலிதா வீணாக மோதிக்கொண்டு, அந்தப் பழியை இளைஞர் அணிச் செயலாளர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட சில சட்டமன்ற உறுப்பினர்கள் மீது சுமத்தி, அவர்களைக் கைது செய்து அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற கிளர்ச்சிகள் - பல்லாயிரம் பேர் கைதான போராட்டம் - இந்த ஆட்சி வந்ததும் வராததுமாக கழகச் சட்டமன்ற உறுப்பினர் தம்பி பரிதி இளம்வழுதியை ஒருமுறை கைது செய்ததோடு,

மீண்டும் சட்டமன்ற நடவடிக்கையைக் காரணமாகக் காட்டி மறுபடி ஒருமுறை கைது செய்ததுடன் சுமார் இரண்டு மாத காலம் அவை நடவடிக்கைகளிலே கலந்து கொள்ளாமல் செய்ததும், அதன் காரணமாக கழகமே பேரவை நடவடிக்கைகளைப் புறக்கணித்தது மான போராட்டம் - பட்டினி கிடந்த நெசவாளர் பசி போக்க கழகச் சார்பில் மதுரையில் கஞ்சி வழங்கிய நிகழ்ச்சியில் காவல் துறையினரே கலவரத்தில் ஈடுபட்டு கழக மாமணிகள், மாவட்டச் செயலாளர்கள், தா.கி. உள்ளிட்ட தம்பிமார்கள் தடியடிக்காளான நிகழ்ச்சியும் கைதுகளும் நடைபெற்றன - கழகத் தளகர்த்தர் கண்மணி தா.கி. கொலையால் ஏற்பட்ட அதிர்ச்சி - அத்துடன் கற்பனை செய்யவும் முடியாத ஒரு கல்லில் இரு மாங்காய் எனப் பழிவாங்கும் நடவடிக்கையாகப் பொய் வழக்குப் போட்டு மு.க.அழகிரியும், இன்னும் பல கழகக் கண்ம ணி களும் கைது, சிறை! கழகத்தில் மீண்டும் தன்னை இணைத்துக்கொண்ட ஒரே காரணத்திற்காக முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன் மீது வழக்கு, கைது, சிறை, சிறையிலே கொலை முயற்சித் தாக்குதல்.

ஏன், நேற்று திருச்சி சட்டமன்ற உறுப்பினர் தம்பி பரணிகுமார் உள்ளிட்ட பலர் மீது வேண்டுமென்றே தொடரப்பட்ட பொய்வழக்கு - மதுரை சிறையிலே அடைப்பு.

கண்களைக் கலங்க வைக்கும் இந்த நிகழ்ச்சி களுக்கிடையேதான், இந்த எள் உடல்நிலையுடன் உனைக்காண ஊர் ஊராக வந்து உன் உழைப்பின் அறுவடையாக நீ வழங்கிய தேர்தல் நிதியினைப் பெற்றுக் கொண்டு வந்துள்ளேன்.

அதிலும் நிறைவு நிகழ்ச்சியாக சேலம் நிகழ்ச்சிக்கு செல்லும் வழியில் திருப்பூரிலிருந்து சேலம் வரை சுமார் 15 இடங்களில் சாலையில் கார்களை நிறுத்தி சென்னைக்கும் டெல்லிக்கும் தொலைபேசித் தொடர்பு கொள்ள வேண்டிய எதிர்பாராத அதிர்ச்சி நிறைந்த தொல்லையையும் சமாளிக்க வேண்டியிருந்தது. அதை என்னுடன் இருந்தோர் அறிவார்கள். மற்றவர்கள் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. என் செய்வது அமெரிக்காவில் மாறன் விமானத்தில் ஏற்றப்படுகிறார். நான் திருப்பூர் சேலம் சாலையில் திகைத்த நிலையில், இப்படி ஒரு சோதனை மிக்கப் பயணம். இத்தனை இன்னல்களுக்கிடையிலேயும், ஆங்காங்கு நான் கண்ட எழுச்சியின் மொத்த வடிவத்தை விழுப்புரத்தில்

காணப்போகிறோம் என்பதிலே - ஆகா! என்னே எதிர்பார்க்கும் துடிப்பு தெரியுமா?

ஏன் உனக்குந்தான்; இருக்காதா என்ன? எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன ஒரு மாநாட்டுப் பந்தலிலே நாம் சந்தித்து அந்த ஏக்கம் தீர்ந்திடும் என்ற எதிர்பார்ப்பில் என் வேதனைகள் எல்லாம் என்னை விட்டு சற்றே விலகியிருக்குமல்லவா? என் வேதனை கிடக்கட்டும் - உன் வேதனை கிடக்கட்டும் - இந்தத் தமிழ் இனத்தின் வேதனையைத் தீர்க்கும் வேலைதானே நமக்கு முதன்மையான வேலை! அந்தக் கடமையை முதலில் நிறைவேற்றப் புறப்படுவோம்; 'புறப்படுக" என்று அதற்காகத் தான் வேண்டுகிறேன் - பொன்முடியும் என்னுடன் சேர்ந்து வேண்டுகிறார். புறப்பட்டு வருக புறப்பாட்டே வருக!

அன்புள்ள,

மு.க.

09-09-2003

2968. வரையறுத்தது; வழங்கியது; வரவேண்டியது!

உடன்பிறப்பே,

1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக அப்போது கழகப் பொருளாளராக இருந்த நான்; பொதுச் செயலாளர் அண்ணா அவர்களிடம் பத்து லட்சம் ரூபாய் நிதி திரட்டித் தர முடியும் என்று வாக்களித்தேன்.

நாடகங்கள் நடத்தியும்,
கூட்டங்களில் பேசியும்,
சிறப்புக் கூட்டங்கள் ஏற்பாடு செய்தும்,
உண்டியல் எடுத்தும்,
ஒரு இடத்தில் கழகக் கொடியேற்றிட
இவ்வளவு நிதி என நிர்ணயித்தும்,
கழகத் தோழர்கள் இல்லத்தில் சிற்றுண்டி
அருந்த - உணவு அருந்த -
கட்டணமாக நிதி வசூலித்தும்

இப்படி சேர்ந்ததுதான் 11 லட்சம் ரூபாய். விருகம்பாக்கம் கழகப் பொது மாநாட்டில் அதைப் பெற்றுக் கொண்டு பேசிய அண்ணா அவர்கள்; "தம்பி உன் பெற்றோர் முன்கூட்டியே தெரிந்துதான் உனக்கு நிதி" என்று பெயரிட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

இப்போது என் சுற்றுப் பயணத்தில் திருப்பூர் தேர்தல் நிதிக் கூட்டம் பிரமாண்டமாக நடைபெற்று, தம்பிகள் பொங்கலூர் பழனிசாமி, கோவை ராமநாதன், என்.கே.கே., ஆகியோர் விடுதியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது; இராமநாதன் பழைய நிகழ்ச்சி பொன்றை நினைவூட்டினார்.

நிதி திரட்டிக் கழகம் வளர்ப்பதில் நான் எவ்வளவு ஆர்வமுடையவன் என்பதற்கு அந்த நிகழ்ச்சி; அது போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

1967 பொதுத் தேர்தல் நிதி திரட்டக் கோவை மாவட்டத்தில் பத்து நாட்கள் சுற்றுப்பயணம். அன்றைய மாவட்டச் செயலாளர் உறுதிவாய்ந்த கொள்கையாளர் உடுமலை நாராயணன், அவர் என்னை கூட்டங்களுக்கு அழைத்துச் செல்கிறார். பல கொடியேற்று விழாக்கள், ஒவ்வொரு கொடி யேற்றவும் நூறு ரூபாய், இரு நூறு ரூபாய் எனப் பெற்றுக் கொண்டு வருகிறேன். கொளுத்தும் வெயில், வழியில் "குளுகுளு என ஒரு வேப்ப மரத்து நிழல். இளைப்பாறுவதற்காக அங்கே மரத்தடி யில் அமர்ந்தோம். அந்தக் கிராமத்து மக்கள் ஆண்களும், பெண்களுமாக ஐம்பது அறுபது பேர் கூடி விட்டனர். தாகம் தீர இளநீர் சாப்பிடுங்கள் என்று உபசரித்தார்கள். என்னுடன் வந்தவர்கள் வாங்கிச் சாப்பிட்டார்கள். என்னிடம் இளநீர் நீட்டப்பட்டபோது நான் சொன்னேன் "தேர்தல் நிதி" நூறு ரூபாய் கொடுத்தால்தான் இந்த இளநீரைக் குடிக்க முடியு மென்று!

பிறகு ஒரு மூதாட்டி, அருகிலிருந்த அவர் வீட்டுக்குச் சென்று நூறு ரூபாய் எடுத்துவந்து கொடுத்த பிறகுதான் இளநீரே என் வயிற்றில் இறங்குவேன் என்று சொல்லிவிட்டது.

இந்த நிகழ்ச்சியைத்தான் தம்பி இராமநாதன் நினைவூட்டினார். அந்தப் பழைய கதையை நான் இப்போது சொல்வதற்குக் காரணம்; கழகத்திற்கு நிதி வசூலிப்பதில் நான் கண்டிப்பானவன் என்பதை உனக்கு ஞாபகப்படுத்திடத்தான்,

அன்று 11 லட்சத்தைத் திரட்டிடப் பட்ட பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் - இன்று 25 கோடி ரூபாய் என அறிவித்து; இதுவரையில் 26 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நிதி திரட்டியிருப்பதும்; அதற்கு எடுத்துக் கொண்ட காலமும் - பொதுமக்களும் வலிய முன் வந்து வாரி வழங்கியிருப்பதும் நம்மை மகிழ வைப்பது மட்டுமல்ல; மலைத்திடவும் வைக்கிறதா இல்லையா?

எல்லா மாவட்டங்களையும் மிஞ்சுகிற வகையில் சேலத்தில் நிதி அளித்த தம்பி வீரபாண்டி ஆறுமுகம் யார் - யார் - எவர் - எவர் - அவரை அழைத்து எவ்வளவு நிதி வழங்கினர், எப்படி நிதி வழங்கினர் என்ற விபரங்களைத் தனித்தனியாக விவரித்து அனைத்தையும் அந்தக் கூட்டத்தில் தொகுத்துச் சொன்னபோது எனக்கு எவ்வளவு பெருமிதமாக இருந்தது தெரியுமா?

பஞ்சம் புகுந்து வாட்டுகிற தஞ்சைத் தரணியில் கூட தம்பி கோ.சி. மணியின் பம்பரச் சுழற்சிப் பணி யினால் அந்த மாவட்டத்திற்கு நிர்ணயித்த ஒரு கோடி ரூபாய் நிதிக்கு மேலாக 11 லட்சம் அதிகமாக வழங்கப் பட்டிருக்கிறது. பெருநிதி - பெரு மழை - பேச முடியாமற்போனதே எனும் பெருங்குறை; அந்தப் பெருங் கூட்டத்திற்கு!

ஆர்க்காடு வீராசாமியின் அரவணைப்பும், தம்பி துரைமுருகனின் துணை வலிவும் கொண்டு திருவண்ணாமலையில் மற்றுமொரு தீபத் திருவிழா வையே தி.மு.க. கூட்டமென்ற பெயரால் தம்பி எ.வ. வேலு நடத்தியென்னை இன்புறச் செய்தார்.

திருச்சி நேருவும், மீண்டும் ஒரு திருப்புமுனை மாநாடு நடத்திக்காட்டினார்.

தொடக்கத்தில் தென்சென்னை மாவட்டத்தின் சார்பில் சிறப்பானதொரு கூட்டத்தை நடத்தி தம்பிகள் அன்புவும், பலராமனும் பெரு நிதி வழங்கினர்.

திண்டுக்கல் மாவட்ட பெரியசாமி, ஈரோடு என்.கே.கே.பி. ராஜா, வேலூர் சண்முகம் ஆகியோர் வரையறுத்ததை விட அதிக நிதி வழங்கி அகமகிழச் செய்தார்கள்.

நிர்ணயித்த நிதிக்கு சற்று குறைவாகத் தந்தனர் எனினும் நெல்லையில்தான் என்ன; ஐந்தாண்டுக்குப் பிறகு மீண்டும் ஒரு பெரிய மாநாடே நடத்திவிட்டனர் தம்பி ஆவுடையப்பன் தலைமையில்!

பரமக்குடியில் வைகையாற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது, ஆம்; மக்கள் வெள்ளம் - எஞ்சியுள்ளது கொஞ்சம் நிதிதான்; அது வந்துவிடும் - தங்கிவிடாமல் தம்பி தங்கவேலன் தந்து விடுவார்.

தூத்துக்குடி பெரியசாமி - தேனி மூக்கையா - மதுரை வேலுசாமி - விருதுநகர் கே.கே.எஸ். எஸ் ஆர் ஆர். குமரி சுரேஷ்ராஜன் - இவர்கள் எல்லாம் விறுவிறுப்புடன் எஞ்சிய தொகையை வசூலித்து, மற்றுமுள்ள மாவட்ட நிதிகளும் சேர்ந்துவிட்டால்; நான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேனே இதுவரை 26 கோடி ரூபாய்" என்று அது 30 கோடியாக விழுப் புரம் மாநாட்டில் அறிவிக்கப்படக்

கூடிய வாய்ப்பை என் தம்பிமார்கள் - அதாவது மாவட்டக் கழக நிர்வாகிகள் எனக்கு வழங்காமலா இருந்து விடுவார்கள்?

இதற்கிடையே பல மாவட்டங்களில் இந்த 26 கோடி ரூபாய் மொத்தத் தொகையில் கணிசமான அளவு பெருந்தொகை துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் கூட்டங்களில் அவரிடம் வழங்கப் பட்டிருக்கிறது.

குறிப்பாக கடலூர் மாவட்டச் செயலாளர் தம்பி எம். ஆர்.கே. பன்னீர்செல்வம்; வரையறுக்கப்பட்ட முழுத் தொகை ஒரு கோடியையும் ஸ்டாலினிடம் நிதி யாக வழங்கிவிட்டு; விழுப்புரம் மாநாட்டிலும் என்னிடம் கணிசமாகப் பெருமளவு தொகை தருவதாக வாக்களித்துள்ளார். துணைப் பொதுச் செயலாளரிடம் ஒரு கோடி ரூபாய் வழங்கிவிட்டு; தலைவரிடம் வழங்குவது அதைத் தாண்டுவதாக இருந்தால்தான் பெற்றுக் கொள்வேன் என்று உறுதி யாகக் கூறியிருக்கிறேன்.

பார்ப்போம் பன்னீரா; வெந்நீரா என்பதை!

உடன்பிறப்பே; இக்கடிதம் படித்து - ரசித்து முடித்து விட்டால் பயனில்லை - உன் மாவட்டத்தில் நிதி தர வேண்டியது பாக்கியிருந்தால், மாவட்டக் கழக நிர்வாகிகளை உசுப்பிவிடு

நிதி தா மக்கள் தயாராக இருக்கிறார்கள், சென்று வாங்குகிற சிரமத்தை ஏற்றுக் கொண்டால் போதும்!

நீ மட்டுமல்ல; என்னிடம் விழுப்புரத்தில் வந்து என்னைச் சந்திப்பதாக உறுதியளித்துள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், உன்னோடு இணைந்து - அல்லது நீ அவர்களோடு இணைந்து; நான் எதிர்பார்த்து அறிவித்துள்ள முப்பது கோடி ரூபாய் நிதியை முழுமையாக்கிட ஒருவரையொருவர் முந்திக் கொண்டு முயற்சி மேற்கொள்வீர்!

குறிப்பு :

தேர்தல் நிதி சில மாவட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் என்றும் சில மாவட்டங்களுக்கு 50 லட்சம் ரூபாய் என்றும் வரையறுக்கப்பட்டது.

அவற்றில் இதுவரை வழங்கப்பட்டுள்ள நிதி விவரம் வருமாறு:

மாவட்டம்	வரையறுத்தது	வழங்கியது	வழங்க வேண்டியது
தென்சென்னை	1.00 கோடி	1.50 கோடி	-
வடசென்னை	1 கோடி	1 கோடி	-
திருவள்ளூர்	1 கோடி	1.01கோடி	-
வேலூர்	1 கோடி	1.25 கோடி	-
திருவண்ணாமலை	1 கோடி	1.75 கோடி	-
கடலூர்	1 கோடி	1.01 கோடி	-
தஞ்சை	1 கோடி	1.11 கோடி	-
நாகப்பட்டினம்	50 லட்சம்	51 வட்சம்	-
திருவாரூர்	50 லட்சம்	51 லட்சம்	-
திருச்சி	1 கோடி	1 கோடி	-
பெரம்பலூர்	50 லட்சம்	55 லட்சம்	-
கரூர்	50 லட்சம்	54 லட்சம்	-
புதுக்கோட்டை	50 லட்சம்	50 லட்சம்	-
சேலம்	1 கோடி	2.25 கோடி	-
நாமக்கல்	50 லட்சம்	51 லட்சம்	-
தர்மபுரி	1 கோடி	1.06 கோடி	-
கோவை	1.50 கோடி	1.80 கோடி	-
ஈரோடு	1 கோடி	1.32 கோடி	-
நீலகிரி	50 லட்சம்	50 லட்சம்	-
திண்டுக்கல்	1 கோடி	1.20 கோடி	-
சிவகங்கை	50 லட்சம்	50 லட்சம்	-
மதுரை	1 கோடி	80 லட்சம்	20 லட்சம்
தேனி	50 லட்சம்	21.5 லட்சம்	28.5 லட்சம்
ராமனாதபுரம்	50 லட்சம்	32.35 லட்சம்	17.65 லட்சம்
விருதுநகர்	1 கோடி	50.10 லட்சம்	49.90 வட்சம்
நெல்லை	1 கோடி	65 லட்சம்	35 லட்சம்
தூத்துக்குடி	1 கோடி	60 லட்சம்	40 லட்சம்
கன்யாகுமரி	50 லட்சம்	27 லட்சம்	23 லட்சம்

அன்புள்ள,

மு.க.

11-09-2003

நீலகிரி

2969. மலையேறிய பிறகும் சாமியாடும் மாமி!

உடன்பிறப்பே,

"டங்கு - டக்கடி - டங்கு -டக்கடி - டங்கு"

இப்படி தப்பட்டை முழங்கும்!

"பிப்பிடபிபிபிபிபிப்பி...-பிபிபிபி"

இப்படிக் குழல் வாத்தியம் ஓங்கி ஒலிக்கும்! ஒரு புறம் கரக ஆட்டக்காரன் - இன்னொரு புறம் தீச்சட்டிக் கப்பரை ஆட்டக்காரன் - தாளம் தப்பாமல் ஆடிக் கொண்டிருப்பார்கள்!

நடுவில் சாமியாடும் பெண் - ஒருத்தி தலைவிரிகோலமாக நின்று கொண்டிருப்பாள். நெற்றி நிறைய திருநீறு - அதன் மீது அப்பிய குங்குமம் - கணுக்கையில் சுற்றிய பூச்சரம்.

"பீலி சூலி பிர்மராட்சசி! காத்து - கறுப்பு - காட்டேரி - மோட்டேரி - உலகத்தை ஆளவந்த தேவி! இதோ 'காளி' நமஸ்கரிக்கிறேன், உன் காலை நீட்டு தாயே!"

தாரை, தப்பட்டைகளின் ஓசை! ஆயிரம் நாமங்கள் சொல்லி அம்பாளுக்குத் தோத்திரம் வாத்திய ஒலிகள்!

இந்த நிலையில் சாமியாடிப் பெண்ணுக்குப் பூமியில் காவ் பதியாது - முதலில் கால் பெருவிரலைத் தூக்குவாள் மணலில் கோடு கிழிப்பாள் அந்த விரலினாலேயே!

வாத்தியங்களின் சப்தம் வானத்தை முட்டிடவே; சாமியாடியின் வாய்திறக்கும் - அப்போது உள்ளங்கையில் ஒரு கற்பூரத்தை எரிய விடுவார்கள். அதை அந்தச் சாமியாடி அப்படியே விழுங்கி விடுவாள், அது வாய்க்குள் போனதும் அணைந்துவிடும் என்பதால் சுடவே சுபாது

ஆகூ! ஓகா! என்று கத்தி; சுற்றி நிற்போரை அதிர வைப்பாள். உடுக்கு அடிப்பவனும், பம்பை அடிப்ப வனும் போட்டி

போட்டுக்கொண்டு; எல்லா வாத்தியங்களின் முழக்கத்தையும் மீறிச் சப்தம் கிளப்புவார்கள்.

சாமியாடிப் பெண்; பூமியை ஓர் உதை உதைத்துக் கொண்டு, "டேய்! கொண்டாடா எலுமிச்சம் பழத்தை! என்று கூச்சல் போடுவாள்.

அதை வாங்கி, ஒரு கத்தியால் வெட்டுவாள். இரண்டு துண்டாகும் எலுமிச்சை! இரண்டையும் இரு வேறு திக்குகளில் வீசுவாள் !

பம்பை, உடுக்கு, தவுல், தப்பட்டை, குழாய் வாத்தியங்கள் -"அம்மே! அம்மே! தாயே! தயாபரீ" என்ற கூச்சல்களில் சாமியாடிக்கு முழு ஆவேசமும் வந்துவிடும். ஆடுவாள் - ஆடுவாள் - ஆவேசத்தின் எல்லைக்கே சென்று ஆடுவாள்!

"பம்பை பிறந்ததம்மா; பழையனூர் காட்டுக் குள்ளே !" -

"உன் உடுக்கு பிறந்ததம்மா; உத்திராட்சப் பூமியிலே!"

"உன் சூலம் பிறந்ததம்மா சுக்கிரவாரக் கோட்டையிலே!"

"உன் சிலம்பு பிறந்ததம்மா செருக்களத்துச் சீமையிலோ!

இந்தக் கோரஸ் பாட்டில் சாமியாடிப் பெண்; ஆடி ஆடி ஆடித் தீர்ந்து அசந்துபோய் சாய்ந்துவிட - ஆறு ஏழு பேர் அவளைப் பிடித்துக் கொள்வார்கள். ஒருவன் உரக்கக் கத்துவான்; "சாமி, மலையேறி விட்டது" என்று !

அதாவது சாமி மலையேறி விட்டால் அதன் பிறகு ஓங்காரக் கூச்சல் போடாது - உரத்த குரல் எழுப்பாது - "ஓ போடு" பாட்டுக்கு நடனம் ஆடுவது போல ஆடாது. அப்படியே சப்தமின்றி கண்களை மூடிக் கொண்டு கரடுமுரடான இடத்தில் கூடப் படுத்து விடும்.

ஆடும் வரை ஆடிவிட்டு, அள்ளும் வரை அள்ளி விட்டு, அருகில் உள்ள உண்டியல் நிரம்பும் வரை ஆவேசக் கூச்சல் போட்டுவிட்டு, அதற்கு மேல் சாமியாடிப் பெண்ணுக்கு உடல் இடங்கொடுக்காத காரணத்தால்; அவள் சாய்ந்து, ஓய்ந்து, சரிவு நாற்காலியில் சயனிக்கும் வரையில் "சபாஷ் கரகோஷம்" செய்து கொண்டிருந்தவர்கள்;

சாமுண்டீஸ்வரி !

சகலகலாவல்லிய !

சதியேறத் துணிந்தவளே!

உனைக் கண்டு

பொறாமை கொண்டார்

பொன்மனச் செம்மல் என்று

அன்னையின் அருமைப் புதல்வனுக்கு

அன்றைக்கே ஓலை அனுப்பிய

ஆங்காரி !

ஓங்காரி!!

ரீங்காரியா !!!

என்று துதி பாடிக் கொண்டிருந்தவர்கள், சாமியாடி சரிவு நாற்காலியில் அமர்ந்தது கண்டு - "ஆகா! சாமி மலையேறி விட்டது" என்று அமைதியாக அலறினார்கள்.

உடன்பிறப்பே; பொதுவாக "சாமி மலையேறி விட்டது" என்றால் ஆவேசமடங்கி அமைதியாகி விட்டது என்ற பொருளில் தான் சொல்வது வழக்கம்

ஆனால் இங்கே ஒரு சாமி; மலையேறிய பிறகு தான் மகா ஆவேசங் கொண்டு குதித்திருக்கிறது.

அரசு விழாக்களில் கட்சி அரசியல் பேசக் கூடாது என்ற கட்டுப்பாட்டையும் - மரபையும் - அரசியல் நாகரீகத்தையும் மீறி - இந்த ஊட்டி மலை ஏறிய சாமி போட்டி போட்டுக் கொண்டு, பாட்டிக் கதைகள் சொல்லி நேரடியாகவே என்னையும், தி.மு. கழகத்தையும் தாக்கிக் கூச்சல் கிளப்பியிருக்கிறது! கூப்பாடு போட்டிருக்கிறது!

இதோ பார் மலையேறிய பிறகும் அந்த சாமியாடும் மாமி; ஆவேசங் கொண்டு அள்ளித் தெளித்த அநாகரிக வாசகங்களை

"கருணாநிதி மீது ஊட்டி அரசு விழாவில் ஜெயலலிதா தாக்கு"

என்று தலைப்பு கட்டிச் சில ஏடுகள் வெளி யிட்டிருக்கிற; எவரோ எழுதிக் கொடுத்த எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற வசனங்களைப் படிப்பதற்கே உன்னைப் போன்ற

உடன்பிறப்புகளுக்கு கண் கூசும்; "வைரம்" திரைப்படத்தைப் பார்ப்பது போல் இருக்கும்!

- கோடி கோடியாய்க் கொட்டி வைத்திருக்கும் கஞ்சப் பிரபு.
- எச்சில் கையால் காக்கையைக் கூட விரட்டாத மனிதர்.
- ஏழை எளியவர்களிடம் கட்சி நிதி வாங்குகிறார்.
- வியாபாரிகளிடம் அடாவடித்தனமாய் பணம் பறிக்கிறார்.
- புத்தக வியாபாரம் நடத்தி வேடிக்கைப் பிச்சையெடுத்து வீட்டுக்குப் பணம் சேர்க்கிறார்.
- என்ன செய்தாலும் அவர் இயல்பான குணத்தை மாற்ற முடியாது. -
- அவர் தன்னை உலக மகா அறிவாளி என்ற நினைப்பில் இருக்கிறார்.
- அவர் மக்களால் தூக்கி எறியப்பட்ட சாய்வு நாற்காலி அரசியல்வாதி.
- அவர் ஒரு தீயசக்தி.
- அவர் பேனாவினால் இந்த ஆட்சிக்கு முடிவு கட்ட முடியாது.

இவைகளும் இன்னமும் உதவாக்கரைகள் சிவரால் அரசு விழாவுக்கென எழுதிக் கொடுக்கப்பட்ட கதைகளும் வசனங்களுமாகும்.

பதிலுக்கு இவர்களைப் போலக் கற்பனைக் கதைகளை யல்ல; உண்மைக் கதைகளையே ஆதார பூர்வமாக எழுத முடியும்.

தடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் அக்கறையும் தடித்த நாக்குப் படைத்துள்ள வர்களுக்கே இருக்க வேண்டும்.

தி.மு. கழகம் தேர்தல் நிதி திரட்டுவது பற்றி அவர் கூறியுள்ள அவதூறு அபாண்டமானது என்பதை அந்த நிதியை அளித்தவர்களே அறிவார்கள்.

புதிய தலைமைச் செயலகம் என்ற பெயரால் நூறு கோடிக்குக் குறையாமல் இலாபம் பெறத் திட்டம் தீட்டியிருப்பவர்கள் யார் என்பது நாட்டுக்குத் தெரியாமலா போய்விடும்.

புத்தகம் எழுதியவன் விற்கிறான்; இவர் ஏன் காந்தாரி போல அம்மிக் கல்லால் அடிவயிற்றில் குத்திக் கொள்கிறார். தொல்காப்பியப் பூங்காவில் வந்த வருமானம்; திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையிடம் சுமார் 40 இலட்சம் ரூபாய் ஒப்படைக்கப்பட்டு, இதுவரை 480 பேருக்கு - நலிந்த கழகத் தோழர்களுக்கு உதவிப் பணமாக வழங்கப்பட்ட விபரம் அவர்களின் முகவரியுடன் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தும் கூட, விஷமத்தன விமர்சனமா?

இது என்ன அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தேர்தலில் பத்தாயிர ரூபாய் வீதம் பலரிடம் கட்டாய வசூல் நடத்திய கறுப்புப் பணமா?

அல்லது தேர்தல் அதிகாரியே 'ஜெ'வுக்காக வேட்டி மனு தாக்கல் செய்த வேடிக்கை விநோதமா?

அல்லது அந்தப் போட்டியே இல்லாத தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறி கட்சியின் அதிகாரபூர்வ இதழுக்கு ஒரே நாளில் 74 பக்கங்களுக்கு விளம்பரம் செய்து அதன் மூலம் வசூலான தொகையா?

உடன்பிறப்பே; இன்று இத்துடன் போதும் - தொடர்ந்தால் தொடருகிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-09-2003

2970. மகா ராணியும், மகா ஞானியும்!

உடன்பிறப்பே,

“அன்பர் பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும்
பராபரமே!”

தாயுமானவரின் இந்தப் பாடல் வரிகளைத் தமிழக முதலமைச்சர் ஒரு திருமணத்தில் சொல்லி; “தாயும் நானே, தந்தையும் நானே” என்று பெருமையடித்துக் கொண்டு பிள்ளைகளை வளர்க்கத் தெரியாத திருத ராஷ்டிரனைப் போன்ற தந்தையல்ல அவர் என்றும்; கிருஷ்ணர்கள் கூடப் பலியாகும் மகாபாரதக் கதையொன்றை மாற்றிச் சொல்லப் போகிறேன் என்றும் கூறி; அந்தப் பேச்சை அவரது ராஜ்யத்தின் “ஆஸ்தானப் பத்திரிகைகள்” - “கருணாநிதி மீது ஜெயலலிதா தாக்கு” என்று பெருந்தலைப்பு கட்டி, பெருமையுடன் வெளியிட்டிருக்கின்றன.

தாயுமானவர் கதை எனக்கு முன்பே தெரிந்திருந் தாலும் - எதற்கும் முழுமையாகத் தெரிந்து கொள்வதற்காக, நமது அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள பேராசிரியர் ஆய்வு நூலகத்திலிருந்து தாயுமானவரைப் பற்றி அறிஞர் கா.சு. பிள்ளை மற்றும் வெள்ளையாம்பட்டு சுந்தரம் ஆகியோர் எழுதிய நூல்களையும் எடுத்துப் படித்துவிட்டு இக்கடிதம் எழுதுகிறேன். மகாபாரதம் எல்லோருக்கும் தெரிந்த கதையென்பதால்; அதை முதல் அமைச்சர் ஜெய லலிதா மாற்றிச் சொல்லியிருப்பது பற்றியும் குறிப்பிட வேண்டியது என் கடமையாகிறது.

முதலில் தாயுமானவர் பற்றிப் பார்ப்போம் - திருமண விழாவில் முதலமைச்சர் குறிப்பிட்டிருப் பதைப் போல - அல்லது அவருக்குக் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்திருப்பது போல - தாயுமானவர், தமிழகத்தின் ஒப்பற்ற ஞானிகளில் ஒருவர் என்பதில் என் முனையளவு சந்தேகமும் இல்லை .

இப்போது அவரது வரலாற்று விசித்திரத்திற்கு வருவோம். அவரது தந்தை கேடிலியப்பர் என்பவர் மதுரையில் கி.பி. 1608ல் பட்டத்துக்கு வந்த முத்து வீரப்ப நாயக்கர் என்ற மன்னனிடம் பெருங் கணக்கராக இருந்தவர். அந்த மன்னர் காலத்தில் தலை நகரம், மதுரையிலிருந்து தற்காலிகமாக திரிசிரபுரம் என்ற திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது.

கேடிலியப்பருக்குப் பிறந்த மகன்தான் தாயுமானவன், கல்வி கேள்வியில் சிறந்து விளங்கி - தந்தை கேடிலியப்பர் போலவே அரண்மனையில் அனைவரது பாராட்டுக்களையும் பெறுகிற அளவுக்குத் திறமைசாலியாகத் திகழ்ந்து "தாயுமானவர்" என்று எல்லோரும் மரியாதையுடன் அழைக்கும் தகுதியும் பெற்றார். பின்னர் தந்தையை இழந்தார்.

"வாலிப வனப்பும் வசீகரமும் வற்றாத அறிவும் கொண்ட தாயுமானவரை தரணியாளும் மன்னன் நேசித்தான், அவரது அறிவாற்றலுக்காக! அரசி மீனாட்சியும் நேசித்தாள் அவரது அழகிற்காக என்று எழுதுகிறார் நூலாசிரியர் அரசன் சொன்னான்; சிவநெறிச் செல்வர் தாயுமானவர் தூய்மையான நெருப்பு என்று ஆனால் பட்டத்தரசியோ அவரைக் குளிர்நிலவாகக் கருதினாளாம்; ஆம் நூலாசிரியர் தான் இப்படி வர்ணிக்கிறார்.

அரசனும் அழகிலோ ஆற்றலிலோ அள்ளி வழங்கும் கொடையிலோ குறைந்தவனல்லன்; இருப்பினும் அவன் மனைவியாம் அந்த மகாராணியின் மனம் தாயுமானவர் மீது தறி கெட்டுத் தாவிற்று. எப்படியும் அவரை அடையவேண்டுமெனத் தவங் கிடந்தாள் அரசி.

இந்நிலையில் கி.பி. 1625ஆம் ஆண்டு மன்னன் மரணமுற்றான். அந்த மன்னன் முத்துவீரப்ப நாயக்கருக்கு புத்திரப் பேறு இல்லை. அது அவன் குற்றமா, அரசியின் குற்றமா தெரியவில்லை. முத்துவீரப்பருக்குப் பின் ஆட்சி நடத்த சந்ததியார் எவருமில்லாததால் அவர் மனைவி மீனாட்சியே, உடன்கட்டை ஏறாமல் தானே உயிருடன் இருந்து ஆட்சியை ஏற்று நடத்தினார்..

தன் கணவரிடம் பணிபுரிந்த தாயுமானவர் தன்னிடமும் அதே பணியில் தொடர வேண்டு மென்று அரசி மீனாட்சி வலியுறுத்தவே தாயுமான வரும் அரசியின் உள்நோக்கம் புரியாமல் ஒப்புக் கொண்டார். இதற்கடுத்துள்ளவற்றை நான் எழுதினால்;

அது என் கற்பனையோ எனச் சிலர் எண்ணக்கூடும். எனவே வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் புத்தகத்தில் உள்ள வரிகளையே அப்படியே தருகிறேன்.

> “தாயுமானவருக்கு வயது சுமார் பதினெட்டு ஆயிற்று. கட்டிளங் காளைப் பருவத்தினராக இருந்தார். திரண்ட தோள்களும் பரந்த மார்பும் ஒளி வீசும் முகமும் கொண்டவராகத் திகழ்ந்தார். காண்போரைக் கவரும் தனிக் கவர்ச்சி யும் அவரிடம் நிறைந்திருந்தது. நிகரற்ற ஆணழகராக விளங்கினார். அவருடன் பல சமயங்களிலும் பழகிய அரசியாரின் மனம் அவர் அழகில் வசப்பட்டது. தாயுமானவரின் பேரழகில் பட்டத்தரசி மயங்கலானார்.
>
> பண்புமிக்க பக்திமானாக விளங்கிய தாயுமானவரிடம் அனைவரும் அன்பும் மரியாதையும் செலுத்திப் போற்றி வந்தார் கள். ஆனால் நாடாளும் அரசியோ அளவுக்கு மீறிய அன்பும் ஆசையும் கொண்டார். அதிகார பீடம் அவருக்குச் சந்தர்ப்பத்தை வழங்கியது. அதனால் பெண்மையின் புனித நெறியை மறந்தார். வரம்பு மீறலானார்.
>
> அன்பு, தென்றலாக வீச வேண்டும். ஆனால் புயலாக வீசியது. அரசியார் தாயாக இருக்க வேண்டியவர்; நீதியைக் காப்பாற்ற வேண்டியவர்: தகாத முறையில் தொல்லை தர முற்பட்டார். மீனாட்சியம்மையின் மனப் போக்கைத் தாயுமானவர் ஓரளவு உணர்ந்து மனம் வருந்தினார்.
>
> ஒருநாள் ராணி, தாயுமானவரை அரண்மனை அந்தப்புரத்திற்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு செய்தி சொல்லி அனுப்பினார். அரசியாரின் அந்தச் செய்தி வழக்கத்திற்கு மாறாக மாலை நேரத்தில் வந்தது. அதுவரை அப்படிப் பட்ட நேரத்தில் அவர் அழைக்கப்பட்டதில்லை . அதனால் தாயுமானவர் மனம் குழப்பமடைந்தது. ஒரு கணம் தயங்கினார். பிறகு சிந்தித்து, ‘ஏதேனும் அவசர காரியம் இருக்கலாம்; அதற்காக அவ்வேளையில் அழைத்திருக்கலாம்‘ என்று

எண்ணலானார். மாலைக் கடன் களை முடித்துக் கொண்டு, இறைவனை நெஞ்சில் துதித்தவாறு அரண்மனைக் குப்புறப்பட்டார்.

அரண்மனை மேன்மாடத்தில் அரசி தாயுமானவரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவரும் அங்கு வந்து சேர்ந்தார். அரசியின் உள்ளம் அவரைக் கண்டதும் பொங்கிப் பூரித்தது. அகமும் முகமும் மலர் அவரை வரவேற்றார் அரசியார்.

இலக்கியச் சுவையை எடுத்துக் கூறும்படி வேண்டினார் அரசி. மறுக்காமல் விளக்கினார் தாயுமானவர். காவியநயங்களைத் திறம்பட மொழிந்தார். பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பல கருத்துக்களையும் எடுத்துரைத்தார். அரசியோ அவற்றை அப்போது விரும்பவில்லை .

பெண்மையின் பெருஞ்சிறப்பையெல்லாம் அவர் பெருமைப்படப் பேசினார். அந்தப் பெண்ணரசியோ தன்னைப் பற்றி அவர் ஏதும் பேசவில்லையே என்று ஏங்கி னார். அவர் பேச்சின் இடையிடையே அரசி குறுக்கிட்டுத் திசை மாற்றிப் பேச லானார். அவர் அது கண்டு திகைத்தார். அவர் கலக்கத்தை மாற்றிக் களிப்பூட்ட அரசி முனைந்தார். இனி பொறுமை கூடாது என்று கருதிய தாயுமானவர் அரசியின் வெறியாசையை அடக்கி ஒழிக்கத் திட்டமிட்டார்.

உடனே அரசியிடம் தாயுமானவர் அறிவுரைகளை ஆணித்தரமாகக் கூற லானார். கற்பின் பெருமையை நெஞ்சில் பதியுமாறு விளக்கினார். தாய்க்குலத் தின் பண்பினைத் தரமாக எடுத்துரைத் தார்.

பட்டத்தரசிக்கு அவருடைய பண்பான பேச்சுக்கள் திருப்தியளிக்கவில்லை. தாயுமானவருக்கோ அரசியின் மனப்போக்கு பிடிக்கவில்லை. இடத்தை விட்டு எழுந்தார். வெருட்டென நடந்து சென்றார். தன்னை மதிக்காமல் அவ மதித்துவிட்டுப் போகிறார் என்றெண்ணிய, அரசியார் அவமான உணர்ச்சி அடைந்தார்; அதே சமயம் கோபம் கொண்டார். தோல்வியால் புகைந்தார். தாயுமானவர் ஒரு நொடியில் காற்றாய்ப் பறந்தார். அரசியின் பார்வை யிலிருந்து மறைந்தார்.”

எவ்வளவு பெருமையும் புகழும் பெற்ற மன்னன்; அவனிருக்கும்போதே தன்னிடம் மையல் கொண்டு - அவன் காலமான பிறகு கூட அதற்காகக் கண்ணீர் சிந்தாமல் என்னைக் கட்டிலறைக்கு அழைக்கிறாளே, காமாந்தகாரி, என்று எண்ணியவராய் தாயுமானவர் அந்த நகரை விட்டே நீங்கிவிட்டார். தரணி புகழும் தாயுமானவர் ஆனார். நமது முதல் அமைச்சர் குறிப்பிட்டது போல தமிழகத்தின் ஒப்பற்ற ஞானிகளில் ஒருவரானார். அந்த வேல்விழி மீனாட்சி அரசி தன் வெம்மை தீர்க்க; அவரை விரட்டி விரட்டிப் பிடிக்கத் துணியாமல் இருந்தால் தமிழகத்திற்கு ஓர் ஒப்பற்ற ஞானி கிடைத்திருப்பாரா?

நகரைத் துறந்து தாயுமானவர் சென்ற பிறகும், நாடாளும் ராணி அவரை விடவில்லை. திக்கெட்டும் ஆட்களை அனுப்பி அவரைத் தேடிப் பிடித்து வரச் சொன்னாள். “உத்திரவிட்டு அழைப்பதால் அஞ்சி ஓடி வருபவரல்ல; தாயுமானவர். வாழ்வில் ஆசையும் பிடிப்பும் இருப்பவருக்குத்தான் அரசாட்சியும் ஆணையும் பயத்தைத் தரும். தாயுமானவரோ பகட்டை வெறுத்தவர். பதவியைத் துச்சமென மதித்தவர்”.

இவ்வாறு தாயுமானவருக்கு புகழாரம் சூட்டுகிறார், நூலாசிரியர் சுந்தரம் அவர்கள்.

எனவே எல்லாம் பச்சை நிறம்தான் என்றாலும்; பச்சைக் கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் வித்தியாசம் தெரிந்த விவேகியாம் தாயுமானவர்; அரசியார் விரித்த வலையில் அகப்பட்டுக் கொள்ளாமல் அவரது ஆத்திரத்துக்கும் அவதூறுப் பேச்சுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆட்படாமல், தப்பித்துக் கொண்டார் என்பதுதான் தாயுமானவர் எனும் அந்தத் தத்துவ ஞானியின் வரலாறு!

உடன்பிறப்பே, இன்றைய கடிதம்; “மகா ராணியும், மகா ஞானியும்” எனும் தலைப்புக்குரியதாயிற்று.

நாளைய கடிதம்; இதன் தொடர்ச்சியாக-”தாயும் நானே.... தந்தையும் நானே” எனும் தலைப்பில் நீ படிக்கலாம்

அன்புள்ள,

மு.க.

19-09-2003

2971. தாயும் நானனே, தந்தையும் நானே, இது தந்திரம்தானே!

உடன்பிறப்பே,

தாயுமானவர் பற்றித் திருமண விழாவில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதாவைத் தொடர்ந்து அந்தக் கதையின் முக்கிய பகுதியை நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன். அதே திருமண விழாவில் தொடர்ந்து பேசிய ஜெயலலிதா, பின்வரும் வாசகங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

“இன்றைக்கும் ஒரு திருதராஷ்டிரர் இருக்கிறார். அவருடைய அரண்மனை மில்; ஒன்றுக்கு மேற்பட்ட துரியோதனர் கள் இருக்கிறார்கள். அவர்களின் பதவிப் போரில் கிருஷ்ணர்கள்கூட பலியாகிறார்கள். இது ஒரு புதுவகை யான மகாபாரதம்“

இப்படி ஜெயலலிதா அம்மையார் மகாபாரத காலட்சேபத்தை மாற்றியமைத்து, மணவிழாவில் உரை நிகழ்த்தியுள்ளார்.

அவருக்கு உதவியாக நானும் அந்தக் கதையை மாற்றித் தர விரும்புகிறேன்.

“பகவான்” கிருஷ்ணனைக் கொல்ல எத்தனையோ முயற்சிகள் அவன் பாலப் பருவத்தி’ பயே நடக்கின்றன. அவற்றில் ஒன்று தான் அ னுக்குப் பால் கொடுப்பதுபோலப் பாதகி பூதகி என்பவள் வந்து மடிந்து போகிற படலம். பூதகி கொல்லப் படுகிறாள். கிருஷ்ணன் தப்பி விடுகிறான். இது புராணம். ஆனால் ஜெயலலிதா இப்போது மாற்றிப் பேசியுள்ள மகாபாரதத்தில் கிருஷ்ணன்தான் கொல்லப்படுகிறான் என்கிறார். அதைத்தான் “அது எப்படி?” என்று கற்பனை செய்து பார்த்தேன். அந்தக் கற்பனையும்கூட ஒரு கதையாகத்தான்; அதுவும் “கவர்ச்சி”க் கதையாகவே அமைந்து விட்டது. அந்தக் கற்பனை இதோ.

பாந்தமிகு பாவையாக - காந்தச் சிலையாக - கவர்ச்சிப் பதுமையாக - காண்போர் மயங்கும் கட்டழகியாக - கிருஷ்ணனிடம் வந்தாள் பூதகி!

வீங்கிய உடலும் - விகார நடையும் - விநாயகர் வயிறும் கொண்ட அந்த அரக்கியின் அலங்கோலம் எப்படி மாறியது? எப்படி அழகு மயிலானாள்?

எல்லாம் ஒரு காரியத்துக்காகவே! கிருஷ்ணனை தீர்த்துக் கட்ட அந்தக் கள்ளி பூதகி எடுத்த ஓவிய உருவம் அது!

கிருஷ்ணனுக்குப் பால் கொடுக்கும் இளந்தாய் போல வந்தாள். கிருஷ்ணனுக்குப் பசிக்கும் நேரம் பார்த்து தனது இளநீர்க் கொங்கையை அவன் இதழ்களின் இடுக்கில் வைத்தால், அவன் காம்பைக் கவ்வி உறிஞ்சத் தொடங்குவான். கள்ளியின் தனங்களில் தாய்ப்பாலுக்குப் பதிலாகப் பேய்ப் பாலாம் விஷப்பால் ஊறி, அனைவரும் வியப்பால் மூர்ச்சித் திட கிருஷ்ணன் கிறுகிறுத்துப் போய் செத்து விடுவான். இதுதான் கிருஷ்ணனைக் கொல்லப் பூதகியின் திட்டம்.

“இந்த மகாபாரதப் பதவிப் போரில் கிருஷ்ணர்கள் கூடப் பலியாகிறார்கள்” என்று திருமண விழாவில் முதலமைச்சர் பேசியிருப்பதைப் போல; பூதகியின் பால் அருந்தி அந்தக் கிருஷ்ணன் மாண்டு போகிறான்.

சரி; கிருஷ்ணனைக் கொலை செய்து முடித் தாயிற்று; அந்தப் பழியை யார் மீது போடுவது?

இப்போதுதான் பூதகி; ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கப் பார்த்து - “அய்யோ! அய்யோ! நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பலராமன்; பாலகன் கிருஷ்ணனின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டான்” என்று கதறுகிறாள். நீலிக் கண்ணீர் விட்டுப் புலம்புகிறாள். ஆயர்பாடியில் உள்ள அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள். பூதகியின் பொய்ப் புலம்பலை நம்பி; யசோதையும் நந்தகோபனும் ஒரு பாவமும் அறியாத பலராமனைப் பிடித்து இம்சித்து ஆயர் பாடிச் சிறையில் அடைத்து வைக்கிறார்கள். இறுதியாக “நமோ நாராயணா” என்று பாடிக் கொண்டு - நாரத முனிவர் அங்கே வந்த பிறகுதான், அவரது ஞான திருஷ்டியினால் பூதகிதான் இந்தக் கொலை சூழ்ச்சிக்குக் காரணம் என்ற உண்மை வெளிப்படுகிறது. எல்லோரும் தங்களின் தவறுக்காக வருந்தி

பலராமன் மீது போட்ட பழியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு; நாரதர் உதவியால் கிருஷ்ணனும் உயிர் பெற்று எழுந்திடவே "சர்வமங்களம்" பாட்டுடன் கிருஷ்ண லீலாவின் அந்த அத்தியாயம் அத்துடன் முடிகிறது.

உடன்பிறப்பே, முதலமைச்சராக இருக்கிற ஒருவருக்கு என்ன பேசுகிறோம்; எங்கே பேசுகிறோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். யாரோ எழுதிக் கொடுத்ததையெல்லாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் "வாந்தி" எடுத்து வைக்கக் கூடாது. அது வகையாக மாட்டிக் கொள்ளத்தான் வழி வகுக்கும்.

> "ஒரு தனிப்பட்ட குடும்பத்தின் அட்டுழியங்களின் அட்டவணையே ஒரு கட்சியின் வரலாறு என்ற பரிதாப நிலை இருக்கிறது. இதை நாமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம் - நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்"

இதுவும் ஜெயலலிதா, அதே திருமண விழாவில் - திருவாய் மலர்ந்தருளியதுதான்,

ஆமாம்; இவர் இந்தப் பேச்சின் மூலம் யாரைத் தாக்கியிருக்கிறார் ? தன்னையே அல்லவா தாக்கிக் கொண்டுள்ளார்?

இந்தப் பேச்சையும் நினைவில் வைத்துக் கொண்டு, 1996 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு, 8-5-1995 அன்று இவர் வெளியிட்ட ஒரு அறிக்கையையும், இவரது கட்சி 1996 பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்தவுடன் இவரே வெளியிட்ட மற்றொரு அறிக்கையையும் படித்துப் பார்!

செல்வி ஜெயலலிதா 8-5-1995 அன்று வெளியிட்ட அறிக்கை:

> "தேவையற்ற முறையில் சிறிதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இனி யாரேனும் என்னுடைய உடன்பிறவா சகோதரி திருமதி சசிகலா மீது நியாயமற்ற விமர்சனத்தையும், அநியாயமான அவதூறுகளையும் கூற முற்படுவார் களேயானால், அத்தகையவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

செல்வி ஜெயலலிதா தேர்தல் தோல்விக்குப் பிறகு 27-8-1996 அன்று வெளியிட்ட அறிக்கை :

"கடந்த மூன்று மாதங்களாக ஆயிரக் கணக்கான கழக உடன்பிறப்புக் களையும், நூற்றுக்கணக்கான கழக முன்னணியினரையும், பத்திரிகை நண்பர்களையும், அரசியல் விமர்சகர் களையும், நண்பர்களையும் மற்றும் என் நலம் விரும்புபவர்களையும் நேரிடை யாகச் சந்தித்து உரையாடியதன் மூலம் கழகத்தின் தோல்விக்கான காரணங் களை துல்லியமாக ஆராய்ந்து உணரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஆச்சரியப்படத்தக்க விதத்தில் தேர்தல் தோல்விக்கான காரணங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒருமித்த ஒரு கருத்தையே அனைவரும் ஒரேவிதமாக எனக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

கழகச் செயற்குழு கூட்டத்தில் விளக்கமான எனது உரையில் தோல்விக்குக் காரணமாக நான் குறிப்பிட்டிருந்த சில காரணங்களுள் முக்கியமானதொரு காரணமாக ஒட்டு மொத்தமாக எல்லோராலும் கூறப்படும் காரணம், எனக்கும் சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினருக்குமிடையே இருந்த தொடர்பேயாகும். சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் ஒரு அதிகார மையமாகவும், சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அதிகார வட்டமாகவும் செயல்பட்டு வந்துள்ளார்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் பற்றி பத்திரிகைகள் ஏராளமாக எழுதியுள்ளன.

பொதுமேடைகளிலும் தெருமுனை களிலும் இக்குடும்பத்தைப் பற்றி பல விஷயங்கள் பேசப்பட்டுள்ளன. இவற்றில் சில உண்மைச் சம்பவங்களும் செய்திகளும் உண்டு.

எனவே கட்சி பெரிதா? அல்லது சசிகலாவுடனான தொடர்பு பெரிதா? என்று நான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என கழக உடன்பிறப்புகள் வற்புறுத்துவதால்

அனைவரது விருப்பத் திற்கேற்ப சசிகலாவோடும் அவரது குடும்பத்தினரோடும் எனக்கு இருந்த தொடர்புகள் அனைத்தையும் இந்த நாள் முதல் விலக்கிக் கொள்கிறேன் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். கழக உடன்பிறப்புகளின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க சசிகலாவிடமிருந்தும், சுதாகரனிட மிருந்தும் என்னை முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டிய கட்டாயமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது"

உடன்பிறப்பே, 27-8-1996 அன்று ஏடுகளில் வெளிவந்த ஜெயலலிதாவின் அறிக்கை இது - "ஒரு குடும்பத்தின் அட்டூழியம்" என்று இப்போது ஜெயலலிதா குறிப்பிட்டிருப்பது; அவர் அப்போதோ தனது குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிட்ட நூற்றுக்கு நூறு உண்மையான விஷயமல்லவா?

"தாயும் நானே! தந்தையும் நானே!" என்ற தந்திரச் சொல்லுக்குப் பொருளும் புரிகிறதல்லவா? ஆகட்டும்; அந்த அட்டுழியம் தொடர்ந்து கொண்டேயிருக்கட்டும்

அது அவரது குடும்பத்தைப் பற்றிய அட்டூழியம் என்பது அகில இந்தியாவுக்கும் விளங்கட்டும்!

விலங்கு உடையட்டும்!

"தாயும் நானே தந்தையும் நானே" என்ற தந்திரத்தில் அடங்கியுள்ள மூடு மந்திரம் முழுமையாக

எல்லோர்க்கும்

நல்லோர்க்கும்

தெளிவாகட்டும்.

அன்புள்ள,

மு.க.

20-09-2003

2972. தொடர்பணி இருக்கிறது; தொடங்கிடுவோம்!

உடன்பிறப்பே,

“உள்ளத்தால் ஒருவரே; உடலினால் பலராய்க் காண்பர்” என்று புரட்சிக் கவிஞர் உணர்ந்துரைத்து உவகை பூத்திட எழுதிய கவிதை வரிகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த விழுப்புரம் மாநாடு, 119, 20, 21 என மூன்று நாட்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டு; 18ந்தேதியன்று விழுப்புரத்தில் பெருமழை இரண்டு மணி நேரம் இடைவேளையே இல்லாமல் பொழிந்து; மாநாடு எப்படி நடைபெறும் என்று மனத்திற் கலக்கம் கொண்டிருந்த நிலையில் - 1/19 ஆம் நாள் அணி வகுப்பும், 20, 21 ஆகிய நாட்களில் மாநாட்டு நிகழ்ச்சிகளும் எவ்விதக் குந்தகமுமின்றி நடைபெற்று; மாநாட்டு நிறைவுரையை நான் பேசி முடித்து, போராட்டத் தீர்மானத்தை அறிவிக்கும் வரையில் காத்திருந்து; மாநாடு முடிந்து மக்கள் அனைவரும் கலைந்து சென்ற பிறகு நமது நன்றிக்குரிய மழை, நள்ளிரவு தொடங்கி சுமார் மூன்று மணி நேரம் பெய்து, அந்த வட்டாரத்தையே குளிர வைத்திருக்கிறது.

என் நெஞ்சமும் குளிர்ந்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் என்னைத் தாக்கும் கவலைகள்; துளைத்திடும் ஈட்டி முனைகள் போன்றவை எனினும் - அக்காயங்களுக்கும் ஒத்தடம் கொடுத்திடத் தவற வில்லை அந்த உற்சாகம் என்று நான் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

மாநாட்டுச் செய்திகளை நீயும் மற்றும் மாநாட்டுக்கு வராதகன் பிறப்புகளும் ஏடுகளில் கண்டிருப்பீர்கள். அந்த ஏடுகளைக்கூட சென்னையில் கண்டிருக்கக் கூடாது. காரணம், அச்சம் தவிர்” எனும் பாரதியின் ஆத்திச்சூடிக்கு இலக்கணமாகத் திகழும் பத்திராதிபர்கள் (?) பலரும் சென்னையைப் பொறுத்தவரையில் விழுப்புரம் மாநாட்டுச் செய்தி களை வெளியிடும்போது அளவுக்கு மீறி அடக்கியே வாசித்திருக்கிறார்கள். இதை எழுதும்போது என்

கையில் விழுப்புரம், கடலூர், புதுவை, வேலூர், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் வெளி வந்த நாளேடுகள் இருக்கின்றன. அவற்றில் முதல் பக்கத் தலைப்புச் செய்திகள் - பக்கம் பக்கமாகப் படங்கள் - விழுப்புரம் குலுங்குகிறது என்று செய்திகள் எல்லா ஏடுகளுமே முரசொலி, தினகரன் போலவே விழுப்புரம் மாநாடு குறித்து வெற்றிப் பேரிகை முழக்கிக் கொண்டிருந்தன.

ஆனால் அதே தேதியிட்ட ஏடுகள் பலவற்றைச் சென்னைக்கு வந்ததும் நான் எடுத்துப் பார்த்தால் - மாநாட்டுச் செய்தி எங்கோ ஒரு மூலையில் - கண்டும் காணாதது போல - மின்மினிப் பூச்சிகளைப் போல மினுக்கிக் கொண்டிருக்கின்றன.

வெளியூரில் விழுப்புரம் மாநாட்டுக்குக் கோடி சூரியப் பிரகாச வெளிச்சம் போட்டு விற்பனையைப் பெருக்கிக் கொண்ட அந்த ஏடுகள், சென்னையில் மட்டும் தேடிப் பிடிக்க வேண்டிய அளவுக்கு அந்த மாநாட்டுச் செய்திகளை வெளியிட்ட மர்மம் நமக்குப் புரியாமல் இல்லை .

ஆளவந்தார் கண்களில் அவை பட்டுவிட்டால், அனல் பொழிவார்களே - கனல் கக்குவார்களே - அரசு விளம்பரம் நின்று விடுமே - வழக்கு வேறு வருமே - அதனால்தான் "அச்சம் தவிர்" என்ற பாரதியின் முழக்கத்தைத் தவிர்த்துவிட்டார்கள், தந்திரசாலிகள்தான்!

இத்தனைக்குமிடையே உடன்பிறப்பே; விஷ மூளை கொண்ட வித்தகர் ஒரிருவர்; தங்களின் பத்திரிகை அனுபவ வித்தையைக் காட்டுகிறேன் பார் என்பது போல - காலை 10 மணிக்கு மாநாடு ஆரம்பம் என்றால் - எட்டு மணிக்குப் பந்தலில் ஒரு பகுதியைப் படமெடுத்து - கூட்டமே இல்லையென்று குதூகலித் தனர் - இது அவர்களின் குதர்க்க வேலை மட்டுமல்ல - குலதர்மம்! அவ்வளவுதான்! எவ்வளவு நீரில் அமுக்கி அழித்தாலும் "கோவேறு குதிரை"களின் கோடுகள் அழியாது அல்லவா; அது போல - இவர் களின் சுபாவங்களையும் மாற்றுவது என்பது முயற்கொம்பேயாகும்.

நேரில் கண்டவர்களும், தொலைக்காட்சிகளில் பார்த்தவர்களும் உயிரோடு இருக்கும்போதே; இப்படி பொய்ச் செய்தி பரப்புகிறவர்களைப் பற்றி அவர்களின் மனச்சாட்சியே என்ன கூறும்? எப்படி சபிக்கும்? மன்னிக்கவும்; மனச்சாட்சி என ஒன்று இருந்தால் தானே, இந்தப் பிரச்சினை!

மாநாட்டுச் சொற்பொழிவாளர்கள், தலைப்புகளில் உரையாற்றித் தனி முத்திரை பதித்ததையும்; தீர்மானங்களின் பொருள் பொதிந்த எழுச்சிக் கருத்துக்களையும், கலை, இசை, நாடக நிகழ்ச்சிகள் தென்றலாகப் புயலாக வீசியதையும், அடலேறுகளாம் கழக மாமணிகள் கட்டுப்பாடு குலையாமல் அந்த அண்ணா நகருக்குள் அணி வகுத்து வந்ததையும், அந்த அணி வகுப்பே சோர்வு சிறிதுமின்றி நான்கு மணி நேரம் நடைபெற்றதையும் - அறப் போராட்டத் தீர்மானத்திற்கு அடியேன் அளித்த விளக்கவுரை ஒன்றரை மணி நேரத்தை எடுத்துக் கொண்டதையும் - ஒரு விநாடி கூடத் தவற விடாமல் உடன்பிறப்பு களாம் உங்களுடன் நான் ஒன்றிக் கலந்து உணர்வு களைப் பரிமாறிக் கொண்டதையும் - எவர் மறப்பினும், என்னால் எப்படி மறக்க முடியும்! உன்னால்தான் எப்படி மறக்க முடியும்!

எனவே; விழுப்புரம் மாநாடு - ஒவ்வொரு மாநாட்டுக்கும் ஒரு வரலாறு இருப்பது போல; தனக்கென ஒரு தகைசால் வரலாற்றைப் பெற்ற மாநாடாகும்

விழுப்புரம் வெற்றிக்குப் பாடுபட்டவர்கள் - பணி பொற்றியவர்கள் அனைவருக்கும் - என் இதயமார்ந்த பாராட்டுகள் - பாராட்டவும் சற்று தயக்கமாக இருக் கிறது; ஏன் என்றால் இன்னும் பல நற்பணிகளை நான் அவர்களிடம் எதிர்பார்க்கும்போது, என் பாராட்டு, அவர்களை "இது போதும் நமக்கு!" என எண்ணிடச் செய்து மெத்தனமாக்கி விடக்கூடாது என்பதிலே எனக்கு அக்கறை அதிகம். இன்னும் பணியாற்றிட வேண்டும் - இதுவரையில் ஆற்றியுள்ள பணியை வென்றிடும் விதமாக ஆற்றிட வேண்டும் - அதுதான் இயக்கத்தின் ஆரோக்கியத்தை வளர்த்திடும் ஒளடதம் என்பதை மறந்திடலாகாது! .

இதோ அடுத்த பணி - தொடர் பணி தொடங்கி விட்டதே! - வரும் செப்டம்பர் 30ஆம் நாள் காலையிலும், மாலையிலும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இரு விழாக்கள்.

காலையில் "கலைஞர் கருவூலம் - திராவிட இயக்க வரலாறு திறப்பு விழா"வை; நமது இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் அறிஞர் பெருமகனார் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் நடத்தி வைக்கிறார். அறக் கட்டளை சார்பாக அவ்விழா நடைபெறுகிறது.

அன்று மாலையில் நமது பேராசிரியர் தலைமையில் தி.மு.க. நடத்தும் முப்பெரும் விழா - அய்யா, அண்ணா , கழகம் பிறந்த நாளைக் கொண்டாடும் விழா - அந்த விழாவில் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியாக பெரியார் விருது தம்பி நாமக்கல் மு. பழனிவேலனுக்கும், அண்ணா விருது தம்பி அருப்புக்கோட்டை ப.பெ.ந. நல்லதம்பிக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது தம்பி கவிச்சுடர் கவிதைப்பித்தனுக்கும், கலைஞர் விருது தம்பி நடிகர் சந்திரசேகருக்கும் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் தேர்தல் நிதி திரட்டிய மாவட்டக் கழகங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு மற்றும் சிறப்புப் பரிசுகள் எனப் பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

டிசம்பர் முதல் நாள் மத்திய - மாநில அரசு அலுவலகங்களின் முன்பு; விழுப்புரம் மாநாட்டு 16 தீர்மானங்களின் அடிப்படையில் நடைபெற இருக்கும் சிறை நிரப்பும் மறியல் போராட்டத்திற்கான அறவழி ஆக்கப் பணிகளைப் பற்றி ஆலோசனை நடத்திட அக்டோபர் முதல் தேதியன்று கழக மாவட்டச் செயலாளர்களின் கூட்டம் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற இருக் கிறது.

எனவே செப்டம்பர் 30ந்தேதி இரு விழாக் களுக்கும், அக்டோபர் முதல் தேதி மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கும் வரும்போது;

அண்ணா அறிவாலயம் எப்படி வசதி மிக்கதாய் வனப்புடன் மாறியிருக்கிறது என்பதையும் - நமது திராவிட இயக்க வரலாறு எத்தகைய எழுச்சி மயமானது என்பதையும் - அதனை உருவாக்கி யுள்ள விதத்தையும் - தலைமைக் கழக நிர்வாகிகள் பணியாற்றும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள அலுவல் அறைகளையும் - அங்கே அவர்கள் அமர்ந்து பணியாற்றுவதையும் காணும் வாய்ப்பைப் பெறலாம். அது கண்டு உன் போன்றோர் வழங்கும் பாராட்டுகளைக் கேட்டு மகிழும் வாய்ப்பையும் நான் பெறலாம். எனவே விழுப்புரம் மாநாடு நிறைவற்றாலும்;

தொடர் பணி இருக்கிறது; நாட்டின்

இடர் களைய நாம்தானே முன்வரவேண்டும்.

அன்புள்ள,

மு.க.

24-09-2003

2973. இனிய நாள் - இரு விழாக்கள்!

உடன்பிறப்பே,

அண்ணா அறிவாலயம், கலைஞர் கருவூலத்தில் திராவிட இயக்க வரலாற்றுக் காட்சியகத்தை திறந்து வைக்குமாறு விடுத்த அன்பான வேண்டுகோளை இந்தியக் குடியாக முன்னாள் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் ஏற்றுக் கொண்டு எழுதியுள்ள கடிதம் வருமாறு:

ஆங்கிலத்திலும், அதன் தமிழாக்கமும் தரப்பட்டுள்ளது.

Dear Thiru Karunanidhi,

Thank you for your letter dated September 117,2003 invitingme to inaugurate the Exhibition

depicting the history of the Dravidian Movement, Tin Anna Arivalayam, Chennai, on 30th September 12003. As you have explained in your letter, the exhibition will be devoted mainly to the social transformation in Tamil society brought about by the Dravidian movement launched by the great social reformers like the great Periyar, the leaders Jof the Justice Party and others from 1916 onwards through the Dravidian movements in Madras Presidency and Tamil Nadu & leading to the transformation of the Backward classes and the Scheduled Castes & the Tamil society as a whole.

I shall be glad to accept the invitation and shall inaugurate the exhibition at 11.00 A.M. on 30th September 2003.

With regards,

Yours sincerely,
K.R. Narayanan.

அன்புள்ள திரு.கருணாநிதி அவர்களுக்கு,

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் இத்திங்கள் 30ஆம் தேதியன்று, திராவிட இயக்க வரலாற்றினை விளக்கிடும் கண்காட்சியினை திறந்து வைத்திட எனக்கு அழைப்பு விடுத்து தாங்கள் அனுப்பியிருந்த, செப்டம்பர் 17, 2003 தேதியிட்ட மடலுக்கு நன்றி.

தாங்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு; தமிழகத்திலும் சென்னை மாகாணத்திலும் 1916ஆம் ஆண்டு முதற்கொண்டு மாபெரும் சமூக சீர்திருத்த வாதியான தந்தை பெரியார் அவர்களும் மற்றும் நீதிக் கட்சியின் தலைவர்களும், மற்றவர்களும் திராவிட இயக்கங்கள் மூலமாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் மேன்மைக்கும் மற்றும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த சமூக மாறுதலுக்கும் ஆற்றிய அரும் பணிகளை விளக்கிடும் வண்ணம் இந்த "திராவிட இயக்க வரலாற்றுக் கருவூலம்' அமைந்திடும் என்று அறிகிறேன்.

இந்தக் காட்சியகத்தை திறந்து வைக்க தாங்கள் விடுத்த அழைப்பினை ஏற்று, செப்டம்பர் திங்கள் (30ஆம் நாள் காலை 11 மணிக்கு நான் திறந்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நல்வாழ்த்துக்கள்!

தங்கள் உண்மையுள்ள,
கே.ஆர்.நாராயணன்

உடன்பிறப்பே, அறிவாலயத்தின் முதன் மாடிக்கு இடைக் காலத்தில் சின்னாட்கள் வராமல் இருந்து; இப்பொழுது வந்து 30ந்தேதியன்று பார்க்கும்போது; அண்ணா அறிவாலயம்தானா என்ற ஐயப்பாடு ஏற்படாமல் இருக்காது.

சாதி மத பேதங்கள் ஒழிந்து சமத்துவ சமதர்ம சமுதாயம் காணச் சலியாது தொண்டாற்றிய தலைவர்கள், உழைத்திட்ட செம்மல்கள், உணர் வூட்டிய அறிஞர் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்ட திராவிட இயக்க சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள், படங்களாக அமைக்கப்பட்டு, புது எழுச்சி பூத்துக் குலுங்குகிறது.

முரசொலியில் வெளியிட்ட வேண்டுகோளை மதித்து இந்த வரலாற்றுக் காட்சியகத்திற்குப் பலரும், பழைய நிகழ்ச்சிப் படங்களை அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்ப துடன்; மேலும் அத்தகைய பழைய நிகழ்ச்சிகள் அடங்கிய படங்களிருப்பின் அவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உலக வரலாற்றினைத் தெளிவாகத் தெரிந்த உத்தமரும் - அறிவாற்றல் நிரம்பப் பெற்றவரும் - அமைதியே உருவானவரும் - பழகுதற்கினிய பண்பாளருமான இந்திய நாட்டின் முன்னாள் குடி யரசுத் தலைவர் மேதகு நாராயணன் அவர்கள் வருகிறேன் என்று ஒப்புதல் கடிதம் அனுப்பியது மாத்திரமல்ல; 1916லிருந்து திராவிட இயக்கம், எத்தகைய சமுதாய சீர்திருத்தங்களை வகைப் படுத்திச் செய்துள்ளது என்பதையும் குறிப்பாக - பிற் படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் திற்கான தூய தூதுவனாகத் தொண்டாற்றி வருகிறது என்பதையும் நன்கு உணர்ந்தவராவார்.

காலையில் அவர் கலந்து கொள்ளும் விழா நிறை வற்ற பிறகு, மாலையில் தி.மு.க. வழக்கமாக நடத்தும் முப்பெரும் விழா அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நமது இனமானப் பேராசிரியர் தலைமையில் நடைபெற இருக்கிறது. அத்துடன் முரசொலி அறக் கட்டளை விழாவும் நடைபெறுகிறது.

மாலை நேர விழாவில் -

மெழுகுவத்தி போல் ஒளியும் வழங்கி உடலும் வதங்கிய நிலையிலும் இந்த இயக்கத்தை உயிர் மூச்சாகக் கருதி உழைக்கும் உன்னதத் தொண்டன் நாமக்கல் மு. பழனிவேலன் -

அரிமா என ஆர்த்தெழுந்து அன்னைத் தமிழ் காத்திடும் அண்ணன் கண்ட கழகத்திற்காக கால மெல்லாம் பாடுபடும் அருப்புக்கோட்டை நல்லதம்பி -

“புலியொன்று புறப்பட்டதோ குகையிலிருந்து?” என ஐயுறும் வண்ண ம் புல்லர்கள் நடுநடுங்கப் புயல் வேகக் கவிதை கொட்டும் புதுக்கோட்டை கவிதைப் பித்தன் -

தமிழ்ப் பேச்சிலும் தடுமாற்றமில்லை; தான் கொண்ட கொள்கையிலும் தடுமாற்றமில்லை யென்பதைத் தொடர்ந்து நிலைநாட்டி வரும் தூய கலைஞன் சந்திரசேகர் -

ஆகியோர்; முறையே பெரியார், அண்ணா , பாவேந்தர், கலைஞர் விருதுகளைப் பெறுகிறார்கள்.

அத்துடன் 25 ஆயிரம் ரூபாய்க்கான பொற்கிழியும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. இதே விழாவில் முரசொலி அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படுவதைப் போலவே இந்த ஆண்டும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நடந்தப்பட்ட பாவேந்தர் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோர் 396 பேருக்கு பொத்தமாக 7 இலட்சத்து 75 ஆயிரத்து 500 ரூபாய் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அதுபோலவே முரசொலி அறக்கட்டளை சார்பில் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கு 2003ஆம் ஆண்டிற்கான விருதுகள் 10 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் பணமுடிப்பும், சான்றிதழும், பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

இதே விழாவில், விழுப்புரம் மாநாட்டுத் தேதியை எல்லையாக வைத்து தேர்தல் நிதி திரட்டி அளித்துள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கு திரட்டிய நிதிக்குத் தக்கவாறு பரிசுகள் வழங்கப்பட இருக்கிறது. -

மாலை நிகழ்ச்சிக்கு கழகப் பொருளாளர் ஆர்க்காடு நா, வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் தம்பி மு.க. ஸ்டாலின், தம்பி பரிதி இளம்வழுதி, திருமதி சற்குணப் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் வரவேற்புரையாற்றுகிறார். தம்பி சீர்காழி சிவ சிதம் பரத்தின் இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்குகிறது.

30ந்தேதி காலையிலும், மாலையிலும் நடைபெற விருக்கின்ற இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்பது உன் கடமை என்பதை நினைவூட்டவே; அதற்கான அழைப்பு விடுக்கும் என் கடமையை இக்கடித வாயிலாக நிறைவேற்றி யுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

26-09-2003

2974. முதல்வர் முதலில் சொன்னதை மீண்டும் படியுங்கள்!

உடன்பிறப்பே,

2002ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் அ.தி.மு.க. அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சராக இருந்த மோகன் சட்டப் பேரவையில் ஒரு மசோதாவை அறிமுகம் செய்தார்.

அந்த மசோதாவில் என்ன கூறப்பட்டிருந்தது என்றால், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட பொருட்கள் சுற்றுப்புறச் சூழலை அபாயத்திற்கும், சுகாதாரக் கேட்டிற்கும் உள்ளாக்குவதில் முக்கிய காரணமாக விளங்குகிறது. பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை நிலத்தில் போடும்போது, நிலத்தடி நீரை மாசுபடுத்தி கடுமையான சுகாதாரக் கேட்டினை விளைவிக்கின்றன. இதனால் மழை நீர் நிலத்திற்குள் செல்வது தடுக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் மேம்படுவதைப் பாதிக்கிறது. இச்சட்டத்தின்படி யாரும் மறுபயன்பாடு இல்லாத பிளாஸ்டிக் கைப்பைகள், கோப்பைகள், டம்ளர்கள், தட்டுகளை விற்கவோ, சேமித்து வைக்கவோ, ஏற்றிச் செல்லவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது. உணவு நிறுவனம் எதிலும் பிளாஸ்டிக் பொருள் எதையும் பயன்படுத்த அனுமதிக்க இயலாது. சட்டத்தை மீறி பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவோர், விற்பனை செய்வோர் தண்டனைக்கு ஆளாவர். கடைகளில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இதை 25 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கலாம். பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு 100 ரூபாய்க்குக் குறையாமல் அபராதம் விதிக்கப்படும். இது 500 ரூபாய் வரை நீடிக்கலாம். ஓட்டல்களில் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்தப்பட்டால் 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இதை 50 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கலாம். மீறி தொடர்ந்து பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தினால் குற்றத் தண்டனைக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் ரூபாய் வரை கூடுதல் அபராதம் விதிக்கப்படும்.

இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்த போது அறிமுக நிலையிலேயே சில கட்சிகள் எதிர்ப்பதாக அவையில் அறிவித்தன.

இந்த மசோதா 8-5-2002 அன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு (செலக்ட் கமிட்டிக்கு) அனுப்ப வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தன. அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா அவையிலே பேசிய சில ஆணித்தரமான கருத்துகள் வருமாறு :-

பிளாஸ்டிக் பொருட்கள் அழிவதில்லை. மக்கிப் போவதில்லை. அப்படியே மண்ணில் கிடக்கின்றன. பிளாஸ்டிக் பொருட்களை கைப்பை, கயிறு, தம்ளர், தட்டு, கோப்பை போன்ற பொருட்களை உபயோகித்தபின் தூக்கி வீசி எறியப்படுகின்றன. அவை மலை போல குவிந்து கிடக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகளில் மட்டுமின்றி எங்கு பார்த்தாலும் உபயோகித்த பிளாஸ்டிக் பொருட்கள்தான் குவிந்து கிடக்கின்றன. நான் கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைப்பகுதிகளுக்குச் செல்லும்போது அழுகையே வந்து விட்டது. அந்த அளவு எங்கு பார்த்தாலும் உபயோகித்த பிளாஸ்டிக் பொருட்கள் மலை போல குவிந்து கிடந்தன. சுற்றுலா மையங்கள், கோவில்கள், புண்ணியஸ்தலங்கள் என்று எங்கு நோக்கினும் உபயோகித்த பிளாஸ்டிக் பொருட்கள்தான் கிடக் கின்றன. மேலை நாடுகளில் உபயோ கித்த பிளாஸ்டிக் பொருட்களை அதனதன் அண்டை நாடுகளில் கொட்டி விடுகின்றனர். இதனால் சுகாதாரக்கேடு விளைகிறது. இரு நாடுகளிடையே சண்டையும் ஏற்படும் நிலையும் வருகிறது. உபயோகித்த பிளாஸ்டிக்கை குவிப்பதால் ஒருவித விஷவாயு ஏற்படு கிறது. இதனால் தீவிர நோய் பரவுகிறது. நோயைக் குணப்படுத்த இன்னும் மருந்து கூட கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த விஷவாயு மனித ஆயுளைக் குறைக்கக் கூடியது. ஆபத்தானது. உபயோகித்த பிளாஸ்டிக் பொருட்களினால் ஏற்படும் சுகாதாரக் கேடால் மனித உயிர் மட்டுமின்றி மிருகங்களும் கால்நடை களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. உபயோகித்த பிளாஸ்டிக் பைகளை சாப்பிட்ட ஆடு, மாடுகள் சில சமயங் களில் இறந்துள்ளன.

இவ்வாறு பேரவையிலே மிக உருக்கமாகவும் உறுதிபடவும் கருத்து தெரிவித்த முதலமைச்சர் ஜெயலலிதா இறுதியாக இந்த

மசோதாவினை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப ஒப்புதல் அளித்து, அவ்வாறே மசோதா செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப் பட்டது.

இதற்கிடையே தமிழகத்தில் பல பகுதிகளில் உள்ளாட்சித் துறையினர் வணிகர்களின் கடைகளில் புகுந்து அங்கிருக்கும் பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்தனர். அதனைக் கண்டித்து வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் வெள்ளையன் செய்தி யாளர்களுக்கு பேட்டியளித்தார்.

திடீரென்று 2003ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் அமைச்சர் வைத்தியலிங்கம் 30-1-2003 அன்று தாக்கல் செய்த அறிக்கையில் இதே பொருள் குறித்து சட்டமன்றப் பேரவையில் புதிய சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யவிருப்பதால் தற்போது குழுவின் ஆய்விலே உள்ள 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்ட முன் வடிவினை திரும்பப் பெறுவதற்கு குழு பரிந்துரை செய்கிறது என்று தெரிவித்து, அந்த சட்ட மசோதா நிறைவேறாமலே காணாமல் போய் விட்டது.

இடையில் நடந்தது என்னவோ யாமறியோம் பராபரமே!

இந்த அறிக்கையிலே தெரிவித்ததுபோல இதே பொருள் குறித்து புதிய சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

பேரவையிலே பிளாஸ்டிக் பொருட்களினால் வரும் தீங்குகளைப் பற்றி அம்மையார் வடித்த கண்ணீர் என்னவாயிற்று?

சுகாதாரக் கேடு வரும் என்றார்களே என்ன வாயிற்று?

மிருகங்கள் எல்லாம் இறந்து விடும் என்றார்களே, என்னவாயிற்று?

உடன்பிறப்பே;

இதோ இப்போது செப்டம்பர் 29 என்று தேதியிட்டு பத்திரிகைகளில் வந்த செய்தியைப் படித்து பார்த்தால் நம் மனத்தில் எழும் பல சந்தேகங்களுக்கு விளக்கம் கிடைக்கும்.

என்ன செய்தி அது? சென்னை பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய செய்திதான் அது!

அது வருமாறு:-

1. சென்னை பிளாஸ்டிக்ஸ் உற்பத்தி யாளர்கள் மற்றும் வியாபாரிகள் சங்கம் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. எனவே, சங்கத் தின் இரண்டாம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழக கிராமப்புறங்களில் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் பிளாஸ்டிக் தார்ச் சாலை அமைக்க உத்தரவிட்ட முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

2. தமிழக அரசால் கொண்டு வரப்பட்ட பிளாஸ்டிக் தடை சட்ட மசோதா பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய சமயத்தில் சங்கத்தின் கடும் முயற்சியின் பயனாக அந்த மசோதா செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. செலக்ட் கமிட்டிக் கூட்டத்தில் பிளாஸ்டிக்கை தடை செய்யக் கூடாது என்பது பற்றி சங்கத்தின் கருத்தை ஆணித்தரமாக முன் வைத்து; இதன் பலனாக, இறுதியில் அந்த மசோதா திரும்பப் பெறப்பட்டது. மேலும் பிளாஸ்டிக் பொருட்களையும் கழிவுகளையும் தார்க் கலவையும் சேர்த்து பிளாஸ்டிக் தார்ச் சாலையாக அமைக்க சென்னை மாநகராட்சி மற்றும் தமிழக அரசும் உத்தரவு பிறப்பித்துள்ளது. இது சங்கத்தின் முக்கிய சாதனைகளில் ஒன்றாகும்.

உடன்பிறப்பே;

இந்த சாதனையை அவர்கள் எப்படி பெற்றார்கள் என்றெல்லாம் யாரும் கேட்கக் கூடாது.

சுற்றுச் சூழலுக்கே ஆபத்து - உயிர்களுக்கே ஆபத்து - பிளாஸ்டிக் குவியலைப் பார்த்தவுடன் எனக்கு அழுகையே வந்து விட்டது என்றெல்லாம் சொன்னவர்கள் இப்போது அதே பிளாஸ்டிக் கழிவு களைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கிறோம் என்கிறார்கள் என்றால்;

பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களின் சாமர்த்தியத் தையும் - அவர்களின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியையும் - அந்த வெற்றி ஒரு வீராங்கனை(?) வடித்த கண்ணீருக்கே சவாலாக

அமைந்து விட்டதையும் எண்ணி எண்ணிப் பெரு மூச்சு விடத் தோன்றுகிறதல்லவா?

தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலைகள் கிராமங்களுக்கு வேண்டாமென்றவர்கள் இப்போது பிளாஸ்டிக் சாலைகள் போடுகிறார்களாம் - இவர்களின் திறமைக்கு ஒரு சபாஷ் போட்டு ஓ போடலாம்! சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாதது தான் இந்தச் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சி என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம் என்று உரைத் திடலாம் அல்லவா?

பிளாஸ்டிக்கே! உன்னைப் பார்த்து அழுதவர்; இப்போது சிரிக்கிறார்! ஏன்? ஏன்? என்ன காரணம்?

உஸ்! இரகசியம்; பரம இரகசியம்!

8-5-2002 அன்று இதே முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் பேசியதை இக்கடிதத்தின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்; அதை மீண்டும் படித்தால் எல்லாமே புரியும்.

அன்புள்ள,

மு.க.

4-10-2003

2975. தெரிந்த உண்மையைத் திட்டமிட்டு மறைக்காதீர்!

உடன்பிறப்பே,

அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில் வெளியிடப்பட்ட அரசு ஆணையில் தமிழ் என்று குறிப்பிடாமல் வட்டார மொழி என்று குறிப்பிட்டது தவறு என்று; தமிழுக்காகக் குரல் கொடுக்கக் கிளம்பியிருக்கும் சிலர் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாவம்; இவர்கள் என்னமோ இந்தி ஆதிக்க ஆபத்திலிருந்து தமிழ் மொழியையும் தமிழர்களையும் காப்பாற்றப் போர் முனையில் நின்றவர்கள் போலவும், சிறைபுகுந்து வாடியவர்கள் போலவும், திராவிட இயக்கத்துக்கு தமிழ் வளர்க்கும் உணர்வு இல்லாதது போலவும் - அதற்காக இவர்கள் புதிய அவதாரம் எடுத்திருப்பது போலவும் தோற்றம் காட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போதுதான் பரிதாபமாக இருக்கிறது.

யாராயினும்; அவர்கள் இன்று திருந்தி தமிழ்மொழி ஏற்றமும் கொற்றமும் பெற்றிடல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட வருவதைப் பார்த்து அவர்களைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டுள் ளோம்.

ஆனால் அவர்கள்; ஏற்கனவே இதற்காகப் பாடு பட்டவர்கள், பணியாற்றியவர்கள்; தியாகம் செய்த வர்கள், களமிறங்கிப் போரிட்டவர்கள், சிறைப்பட்ட வர்கள் எல்லாம் தமிழ்மொழி மேலோங்கி நிற்க வேண்டும் என்ற எண்ணமில்லாததோடு அதற்கான முயற்சியிலும் ஈடுபடாதவர்கள் என்று திராவிட இயக்கத்தினரையே குற்றம் சாட்டும்போதுதான்; அவர்களின் தவறான பிரச்சாரத்தில் தமிழ் மக்கள் ஏமாந்து போகாமல், அவர்களுக்குத் தெளிவுபடுத்திட வேண்டிய கடமை நமக்கு இருப்பதை உணர்ந்து சில விளக்கங்களை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது.

1967-ல் வந்த ஆட்சியானது இந்திக்குப் பதில் தமிழை முதல் மொழி ஆக்கவில்லை என்றும், தமிழுக்காகவே வாழ்கிறோம், தமிழரின் உயர்வுக்காகவே உழைக் கிறோம், என்றெல்லாம் பல்வேறு அரசியல் கட்சியினர் முழங்கி னாலும், தமிழக பள்ளிகளில் தமிழை முதல் மொழியாக்க அவர் கள் எவ்வித முயற்சியும் எடுத்த தாகத் தெரியவில்லை. எடுக்கவும் போவதில்லை

என்றும் திரு. பா. இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் அண்மையில் தஞ்சையில் சி.பா. ஆதித்தனார் முத்தமிழ்ப் பேரவை சார்பில் முன்னாள் துணை வேந்தர் திரு. அறவாணன் அவர்களின் முன்னிலையில் பேசியதாக அக்டோபர் 2ஆம் நாள் ஏடுகளில் வெளிவந்துள்ளதைப் படித்தேன்.

தமிழுக்கு முதலிடம் எதிலும் எங்கும் இருக்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருப்பதை நான் உணர்ந்து பாராட்டினாலும்; அதற்கு எதிராகத் திராவிட இயக்கம் (தி.மு.க. உட்பட) இருப்பது போல அவர் கற்பனை செய்து கொண்டு பேசியுள்ளதும் - அதில் அக்கறையற்று இருப்பதாகவும் அவர் குறை கூறியுள்ளதும் மிக வேதனையளிக்கக் கூடியதாகும்.

அறிஞர் அண்ணா மறைந்த பிறகு 1969ல் முதலமைச்சர் பொறுப்பையேற்ற நான்; கல்லூரிக் கல்வி வரையில் தமிழ் பயிற்றுமொழி (கூயஅடை ஆநனரைஅ) என ஆணை பிறப்பித்ததையும் - அதை எதிர்த்து மாணவர்கள் பெருங்கிளர்ச்சியில் ஈடு பட்டதையும்; அவ்வாறு மாணவர்கள் தூண்டிவிடப் படுவதற்கு எந்தத் தலைவர்கள் காரணமாக இருந் தார்கள் என்பதையும் திரு. இராமச்சந்திர ஆதித்த னார் அவர்கள் அறியாதவரல்ல.

அந்த மாணவர் கிளர்ச்சியை அமைதிப்படுத்து வதற்காக குன்றக்குடி அடிகளாரும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் என்னை சந்தித்து, அவர்களிருவரின் கருத்துப்படி தமிழ் பயிற்று மொழி பற்றிப் பரிசீலித்துப் பரிந்துரை செய்திட திரு. ஏ.எல். முதலியார் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு; அக்குழு சில பரிந்துரைகளை வழங்கி, அதன்பிறகு அந்தக் கிளர்ச்சி நின்றதும் அனைவரும் அறிந்த செய்தியாகும். அப்போதே ஏடுகளில் வெளிவந்த உண்மையுமாகும்.

அந்த மாணவர் கிளர்ச்சிக்குப் பின்னாலிருந்த அரசியலையும் - அதன் காரணமாகவே தமிழ்ப் பயிற்று மொழி திட்டம் பின்னடைவுக்குள்ளானதை யும் - இப்போது விவாதித்துப் பயனில்லை. எப்படியோ தமிழ்ப் பயிற்று மொழி (கூயஅடை ஆநனரைஅ) திட்டம் விறுவிறுப்புடன் முன்னேற இயலாமற் போயிற்று; அந்த மாணவர் கிளர்ச்சியினால்!

தஞ்சை விழாவில் இராமச்சந்திர ஆதித்தனார் பேசியுள்ளது போலவேதான்; தமிழ் அறிஞர்களில் ஒருவரான திரு. தமிழண்ணல் அவர்கள் அண்ணா அவர்கள் ஆட்சியில் 1968-ல் வெளியிடப்பட்ட அரசாணையில் இந்திக்குத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இடமில்லை என அறிவித்தபோது அந்த ஆணையில் தமிழ் என்று குறிப்பிடாமல், வட்டார மொழி என்று குறிப்பிட்டது தவறு எனக் கூறியிருந்தார். அதுபற்றி நான் விளக்கமளித்தபோது;

வட்டார மொழி என்றாலே தாய் மொழியாம் தமிழ்மொழியைக் குறிப்ப துடன், சிறுபான்மை மக்கள் பேசும் அவர்களின் தாய்மொழியையும் குறிக்கும் என்பதால்தான் அண்ணா ஆட்சியில் அந்தச் சொற்றொடர் வட்டார மொழி என்று பயன்படுத்தப் பட்டுள்ளது என்றும்; காமராசர் ஆட்சிக் காலத்திலேயே அரசு ஆணையில் வட்டாரமொழி என்றுதான் இருக்கிற தென்றும்; அண்ணா ஆட்சியில் அரசாணையில் இந்தி கட்டாயமில்லை என்று ஆக்கியதுதான் முக்கிய மென்றும் - அந்த அரசாணை வெளி யிடப்பட்ட போது திரு. சி.பா. ஆதித்த னார் அவர்கள்தான் சபாநாயகராக இருந்தார் என்றும்; குறிப்பிட்டிருந் தேன்.

அத்துடன் தமிழுக்கு ஆக்கமளிக்கும் நமது முயற்சிகள் நின்று போய்விடவில்லை. மேற் கொண்டும் அந்த முயற்சியில் தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் ஈடுபட்டே வருகிறது.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாகத்தான் 1999ஆம் ஆண்டு மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரையில் தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகச் செயற்படுத்த என்னுடைய தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் நீதியரசர் திரு. மோகன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் தமிழறிஞர் கள் வா.செ. குழந்தைசாமி, தமிழண்ணல், ச. முத்துக் குமரன், புலவர் இளங்குமரன் ஆகியோர் உறுப்பினர்கள்.

அந்தக் குழு 1999ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் தேதியன்று தனது பரிந்துரைகளை அளித்தது.

19-11-99 அன்று அந்தப் பரிந்துரைகள் மீது அரசாணை வெளியிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண். 324, பள்ளிக் கல்வித் துறை). அந்த ஆணையின் முக்கிய பகுதிகள் வருமாறு :-

அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மாநில அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறாத ஏற்பளிக் கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை அனைத்து மெட்ரி குலேஷன் மற்றும் மாநில அரசு பாட முறை பின்பற்றும் பள்ளிகளில் தமிழ் அல்லது தாய்மொழி மட்டுமே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும்.

மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் தமிழ் அல்லது தாய்மொழியைப் பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும். 2000-2001 ஆண்டு முதல், முதல் வகுப்பில் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்கவேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகளுக் கும் பயிற்றுமொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மெட்ரிகுலேஷன் வாரிய விதிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் தாய்மொழியும் பயிற்று மொழியாகச் சேர்க்கப்படும். இதற் கான மெட்ரிகுலேஷன் பள்ளி களின் விதிகளுக்கு திருத்தங்கள் தனியாக வெளியிடப்படும்.

இந்த அரசாணை வெளியிடப்பட்டபோது திரு. தமிழண்ணல் அவர்கள் தமிழ் வழிக் கல்விக்கு விடிவெள்ளி என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் முக்கிய பகுதிகளாவன வருமாறு:-

பள்ளிகள், கல்லூரிகளில் முதற்பிரிவுப் பாடமாக வட்டார மொழி அல்லது தாய்மொழி என விதி இருப்பதை மாற்றி இம்முதற்பிரிவு மொழி, தமிழ் அல்லது தாய்மொழியாக இருக்க வேண்டும் எனப் புதிய ஆணை கூறுகிறது. இதனால் தமிழையே படிக்காமல், ஒருவர் பட்ட வகுப்பு முடிய படித்து வெளியேற

முடியாது: தமிழை ஒரு பாடமாகப் படித்தே ஆகவேண்டும். நடுவணரசுப் பள்ளிகளும் தமிழை ஒரு பாடமாக வைத்தே தீர வேண்டும்.

தமிழக அரசு எடுத்துள்ள இம்முடிவுகள், 21ஆம் நூற்றாண்டில் தமிழ் வழிக் கல்வி, உரிய இடத்தைப் பெறுவதற்கான விடி வெள்ளியை தோற்றுவித்துள்ளன. இதை உணர்ந்து, அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு தருவதே நிலையான கல்வி வளர்ச்சிக்கு வழி கோலும்.

இந்த அரசாணையை எதிர்த்துத்தான் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சங்கம், தமிழ்நாடு மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்; போராட்டம் நடத்தி, 99ஆம் ஆண்டு டிசம்பரில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. அந்த வழக்கு இப்போது உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வருவது அனைவருக்கும் தெரியும். எனவே அண்ணா அவர்களின் காலத்திற்குப் பிறகு வட்டார மொழி என்பதை தமிழ்மொழி அல்லது தாய்மொழி என்று மாற்றுவதற்கான முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது என்பதும்; தமிழக பள்ளிகளில் தமிழை முதல் மொழியாக்கிட எவ்வித முயற்சியும் நாம் எடுக்கவில்லை என்று கூறுவது; தெரிந்த உண்மையைத் திட்டமிட்டு மறைப்பதாகும் என்பதும் இந்த விளக்கத்திற்குப் பிறகு தெளிவாகும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

5-10-2003

2976. கருவூலம் சொல்லும் கடந்தகால வரலாறு!

உடன்பிறப்பே,

இயல்பாகவே அண்ணா அறிவாலயம் என்று உச்சரித்த மாத்திரத்தில் ஒரு புத்துணர்ச்சி - நேரில் வந்து கண்டுவிட்டாலோ ஓர் எழுச்சி - விழி நோய் தீர்க்கும் வெற்றிச் செல்வி அன்பழகன் கண் மருத் துவமனை - விழிகளுக்கு விருந்தாக அமைந்து; செவிகளுக்கும் சிந்தனைக்கும் கூட விருந்தளிக்கும் வாய்ப்பாக கலைஞர் அரங்கம் - விவேகபுரிக்கு அழைத்துச் செல்லும் பேராசிரியர் ஆய்வு நூலகம் - இந்த நவமணி மாலையில் கண்கவர் பதக்கமாகக் கலைஞர் கருவூலத்தில்; திராவிட இயக்க வரலாற்றுக் காட்சியகம்; இன உணர்வூட்டி, இலட்சிய வெற்றி பெறுதற்கேற்ற சரித்திரக் குறிப்புகள் - அந்த சரித் திரம் படைத்த நாயகர்கள் - மறைந்தும் மறையாத திராவிட இயக்கத் தீரமிகு மாணிக்கச் சுடர்கள் - அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அவர்களைப் பற்றிய குறிப்புகள் இத்தனையும் காணும்பொழுது களிப்பில் ஆடும் கான மயிலாகிறது உள்ளம்.

இந்த எழுச்சிமிகு இன உணர்வுக் காட்சியகத்தை இந்தியத் திருநாட்டின் குடியரசு முன்னாள் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் 30-9-2003 அன்று காலையில் திறந்து வைத்து, இந்தப் பழம் பெரும் சமுதாயத்தின் கீர்த்திமிக்க வரலாற்றினை நினைவு கூர்ந்ததுடன், அந்த வண்ணமிகு வரலாறு தொடர்ந்திடவும் - சமுதாயப் புரட்சியில் வாகை சூடிடவும் - காலமெல்லாம் உழைத்த தந்தை பெரியாரின் பணியினையும் - அறிஞர் அண்ணாவின் தொண்டினையும் - அவர்களைப் பின்பற்றிக் கழக அரசு புரிந்த சாதனைகளையும் பாராட்டி வாழ்த்தி யிருப்பது நமக்குக் கிட்டிய பெரும் பேறாகும். மேலும் நமது பயணம் தொடர்ந்திட ஊட்டப்பட்ட உற்சாகப் பெருக்குமாகும்.

இந்தக் கருவூலமும் காட்சியகமும் அமைந்திடப் பொறுப்பேற்று அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் தம்பி மு.க.ஸ்டாலின்; அவருக்குத் துணையாக இருந்து அரும்பணி புரிந்த தன்மானச் செம்மல் தஞ்சைத் தோழர் இரா. இரத்தினகிரி, கொள்கைக் குன்று தம்பி கோவை மா. உமாபதி ஆகியோர் இந்த மகிழ்ச்சியில் பங்குபெற உரிமையுடையவர்களாவர்.

ஒவ்வொரு நாளும் பார்வையாளர்கள் காலை முதல் மாலை வரையில் வந்து கொண்டேயிருக்கிறார்கள்.

காட்சியகத்தில் அவர்கள் காணும் நிறை குறை களை நெஞ்சம் திறந்து; அங்குள்ள கையேட்டில் எழுதி வைத்துள்ளார்கள்.

இதோ அவற்றில் சிலவற்றை இக்கடிதத்தில் குறிப்பிடுகிறேன்.

மீண்டும் நீண்ட காலத்திற்குப் பிறகு தொடங்கப் பட்டுள்ள குடியரசு இதழின் ஆசிரியர் தம்பி இள வேனில் இந்தக் கருவூலம் பற்றியும் திராவிட இயக்க வரலாறு பற்றியும் புரட்சியின் மகரந்தம் இங்கே பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று பார்வையாளர் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

பழனியைச் சேர்ந்த சிந்தனையாளர் மன்றத்து நண்பர் பன்னீர் செல்வம் என்பார், மீண்டும் திராவிட இன எழுச்சி பெற இதைக் காணும் இளைய தலை முறை, தன்னைக் கூர்தீட்டிக் கொள்ளும் உலைக் களமாக விளங்குகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது கண்காட்சியல்ல; காலப்பெட்டகம் என்று திருப்பூரைச் சேர்ந்த தே. சத்தியராசு எழுதியுள்ளார்.

எம். நரேஷ் என்பவர் ரத்தினச் சுருக்கமாகவும் ரசிக்கத்தக்க வண்ணமும் மூன்றே சொற்களில் என் மறந்த நாழிகை என எழுதியுள்ளார்.

அறந்தாங்கி கா. கிருஷ்ணன், என் வாழ் நாளில் கோயிலைக் கண்டு வியந்ததில்லை; கருவூலம் கண்டேன்! தலைவா! திரும்பத் திரும்பக் காண ஆவல் என எழுதுகிறார்.

தர்மபுரி தமிழ்ச் செல்வன் எம்.ஏ., பி.எட்., கருவூலம் பற்றிக் குறிப்பிடும் போது கலைஞர் கருவூலம் காலக் கருவூலம். வரலாற்று யாத்திரைத் தலம் எனப் பெருமிதம் கொள்கிறார்.

அத்திப்பட்டு ச. சாம்ராஜ் எழுதிய குறிப்பில்; தியானத்துக்கு விவேகானந்தர் பாறை - மனித நேயத்திற்கு வள்ளுவர் கோட்டம் போல் திராவிடத்துக்கு கலைஞர் கருவூலம் என்கிறார்.

முப்பெரும் விழா காணச் சென்றாயோ, இளவேனில்? அப்புறம் உனைக் காணவில்லையே தோழி? எப்புறம் பார்க்கிலும் கலைஞர் கருவூலம்! அழகு சித்திரமாய்த் தெரியுதடி கயல்விழி!

என்று குன்றிமணி எனும் பெண்மணி கவிதையே எழுதி அனுப்பியுள்ளார்.

முத்துப்பேட்டை கார்த்திக் பேரூர் கழகச் செயலாளர், அவர் எழுதியிருக்கிறார் கருவூலத்திற்கு உள்ளே வரும் போது மனிதனாக வந்தேன்; வெளியே செல்லும் போது திராவிடனாகச் செல்கிறேன் என்பதாக!

கருவூலத்தில் இயக்க வரலாற்றுக் குறும்படம் பார்ப்பதற்கு சிறிய திரையரங்கும் இடம் பெற்றுள்ளது.

குறிப்பெழுதும் புத்தகத்தில் குறைகள் ஒன்றிரண்டும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக 1997-இல் சேலத்தில் நடந்த கழகச் சிறப்பு மாநாட்டுப் படம் காணப்படவில்லையே என்று, கே. சசீதரன், கே. சுரேஷ் என்ற உடன்பிறப்புகள் குறை கண்டுள்ளனர்.

இந்தப் படம் கேட்டு சேலம் மாவட்டச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்துக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. இக்காட்சியகத்துக்குப் பயன்படக் கூடிய பழைய படங்களை அனுப்பிவைக்கும் பொறுப்பை மற்ற மாவட்டச் செயலாளர்களும் முன்னோடித் தோழர்களும் முனைந்து நிறைவேற்ற முன் வரலாம்.

குறைந்த காலம் நிறைந்த பணி என்பதால் இன்னும் சில நிகழ்ச்சிப் படங்களும், மறைந்த முன்னணி வீரர்கள் படங்களும் இடம்பெறவில்லை எனினும் அவற்றையும் நிறைவு செய்திட பெருமுயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இன்று வேறு கட்சியிலிருக்கும் திராவிட இயக்க ஆர்வலர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், மற்றும் இயக்கத்திலிருந்து வேறு இடம் சென்றவர்கள்; ஒரு வேளை அவர்கள் இயற்கை எய்தியிருந்தால் - அவர்களின் மார்பளவுப் படங்கள் இந்த திராவிட இயக்க வரலாற்றுக் கருவூலத்தில் அவர்கள் ஆற்றிய பணி கடந்த காலத்தில் இந்த இயக்கம் வளர எருவாக இருந்தது என்பதை நன்றியுடன் நினைத்து - அவர்களின் நினைவு போற்றும் வகையில் இயன்ற அளவு இடம் பெறுகின்றன.

வரலாற்றை கட்சிக் கண்ணோட்டம் கருதி மறைத்திடக் கூடாது - மாற்றிடவும் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

அதில் சிறு குறை கண்டாலும் பார்வையாளர்கள் விடமாட்டார்கள் என்பதற்கு இதோ ஒரு உதாரணம் -

கருவூலத்தில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். படங்கள் சில நிகழ்ச்சிகளில் இருக்கின்றன. ஆனால் இரண்டு தம்பிகளுக்கு; அவர் படம் தனியாக - மறைந்த முன்னோடிகளுடன் இல்லையே என்று ஆதங்கம். அந்த ஆதங்கத்தைப் பின் வருமாறு பார்வையாளர் புத்தகத்தில் எழுதியுள்ளார்கள்.

நாற்பதாண்டு கால நட்பை இறைக்காமல்; தெளித்தது ஏனோ?

எம். மனோகரன் - செல்வராஜ் கோயமுத்தூர் ராஜவீதியைச் சேர்ந்த இவர்களின் கேள்வி; இனியதோர் புதுக்கவிதை போல இருக்கிறதல்லவா?

உடன்பிறப்பே,

கருவூலம் பற்றியும் திராவிட இயக்க வரலாறு பற்றியும் பார்வையாளர்கள் எழுதியுள்ள கருத்துகள், படிப்படியாக ஆனால் நிச்சயமாக நிறைவேற்றப்படு மென உறுதியளிக்கப்படுகிறது; இக்கருவூலத்தை கவின்மிகு சிறப்புடன் உருவாக்கிய மு.க.ஸ்டாலின் பொறுப்பில் உள்ள குழுவினரால்!

கடிதத்தில் நிறைவாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் - சேத்துப்பட்டு கி.வே. கார்த்திகேயன் என்ற தம்பி பார்வையாளர் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

கலைஞர் கருவூலத்தில் கசந்தவற்றையும் அறிந்துகொள். வீழ்ச்சி; தோல்வியல்ல! பாடமே! கற்றுக் கொள்... இனியும் வீழ்ந்தால் இனியொரு பெரியார் இனியொரு அண்ணா இனியொரு தலைவர் வரமாட்டார்; புரிந்து கொள்

நான்; அந்தக் கார்த்திகேயனுக்குச் சொல்லு கிறேன்; தம்பி இனியொரு தலைவர்; ஏன் வரமாட்டார்? வருவார்! உன்னைப் போன்ற வைரம் பாய்ந்த உள்ளத்தினர் வரிசையாக நின்றால்; கட்டாயம் வருவார்! இந்தக் கருவூலம் சொல்லுகிற கடந்த கால வரலாறு அதுதான்!

அன்புள்ள,

மு.க.

6-10-2003

2977. உன் உழைப்பை நினைத்து ஓராயிரம் வாழ்த்து!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்துள்ள உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் கட்சிகளின் சார்பாக சின்னங்களில் போட்டியிட்ட இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

தலைவர் பதவிக்கு என்ற அளவில் முக்கியமாக பெரம்பலூர், மதுக்கரை, காகிதபுரம் ஆகிய மூன்று பேரூராட்சித் தலைவர் பதவிகளுக்கான தேர்தலில், மதுக்கரையிலும், பெரம்பலூரிலும் முறையே 7,485 வாக்குகளும், 5,965 வாக்குகளும் பெற்று தி.மு.கழகம் வெற்றிவாகை சூடியிருக்கிறது. காகிதபுரத்தில் மட்டும் 1,621 வாக்குகள் பெற்று அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. 85 வாக்குகள் வித்தியாசத்தில்தான் இங்கே கழகம் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது. பெரம்பலூர், மதுக்கரை ஆகிய இரண்டு பேரூராட்சி களில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் ஆயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளதை யும், தி.மு.க. வேட்பாளர் கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் வெறும் 85 வாக்கு வித்தியாசத்தில் மட்டுமே தோல்வி யுற்றதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இனி வருங்காலத்தில் என்னதான் 'காகிதபுரங்கள் 'கரன்சிபுரங்களாக உருவெடுத்தாலும் கழகக் காளையரிடம் பலிக்காது என்பதை மணியடித்துச் சொல்வதாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாநகராட்சி வார்டு கவுன்சிலருக்காக திருச்சியில் ஒரு இடத்திற்கும், மதுரையில் ஒரு இடத்திற்கும் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க.வுக்கு திருச்சியிலும், அ.தி.மு.க.வுக்கு மதுரையிலும் தலா ஒரு இடத்தில் வெற்றி கிடைத்துள்ளது.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் ஆஸ்தானப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக உள் பக்கங்களில்தான்

அ.தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி என்று வெளியிட முடிந்ததே தவிர; அந்தத் தலைப்புகளுக்குக் கீழே தி.மு.க. வெற்றி பெற்ற இடங்கள்தான் பிரதானமாகப் பளிச்சிடுகின்றன. அந்த அளவுக்கு உண்மையை மறைக்க முடியாமல்; பாவம், அந்தப் பத்திரிகைகள் திண்டாடியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. ஆங்கில நாளிதழ் இந்து அ.தி.மு.க., தி.மு.க., இரண்டும் வெற்றியைப் பங்கிட் டுக் கொண்டன என்றுதான் செய்தி வெளியிட் டுள்ளது. மூன்று பேரூராட்சிகளில் இரண்டு பேரூராட்சி களின் தலைவர் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றதையும், அ.தி.மு.க. ஒரே ஒரு காகிதபுரம் பேரூராட்சித் தலைவர் தேர்தலில் அதுவும் சொற்ப ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதையும் சரியாகக் கணக்கிடாமல் சமமாக வெற்றியைப் பங்கிட்டுக் கொண்டதாக இந்து ஏடு சொல்வதுகூட; எதற்காக நமக்கு மேலும் மேலும் வம்பு என்ற அலுப்பினாலோ அல்லது அச்சத்தினாலோ ஏற்பட்ட விளைவுதானே!

மிகப் பெரும்பாலான இடங்களில் வெற்றிக் கொடி நாட்டி; வீராப்பு பேசலாம் என்றும், அரசு விழாக்களில் அவதூறுக் கதைகள் சொல்லலாம் என்றும் நினைத் திருந்த ஆளுங்கட்சியின் ஆசை நிராசையாகிவிட்ட காரணத்தால் அந்த எண்ணிக்கையைத்தான் காட்ட முடியவில்லை; இதோ இந்த எண்ணிக்கையையாவது காட்டி திசை திருப்பலாம் என்று மூன்று ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த கலையுலக விருதுகள் 91 என்று அறிவித்து அந்த 91 பேர் விருதுகளும் பரிசுகளும் பெறுகிறார்கள் என்று விழா ஏற்பாட்டு விளம்பரத்தை; பத்திரிகைகளில் அவசர அவசரமாக வெளியிடுமாறு செய்திருக்கிறார்கள்.

ஆகா; என்னே கலையுலகத்தைப் பற்றி - திரை யுலகத்தைப் பற்றி திடீர் அக்கறை; சர்க்கரைப் பொங்கலாக விடிந்ததும் விடியாததுமாக விளம்பர வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது. மூன்றாண்டு களாக வராத விருது வழங்கும் நினைப்பு - பட்ட மளிக்கும் பரிவு - இப்போது முட்டிக்கொண்டு பீறிடுவதற்குக் காரணமே; உடன்பிறப்பே! உன் உழைப்பாலும் மக்களின் விழிப்புணர்வினாலும் உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் பெரம்பலூர், மதுக்கரை பேரூராட்சிகளின் தலைவர் தேர்தலில் பெற்றுள்ள வெற்றியும் - பெரும்பாலான நகராட்சி வார்டுகளில் ஆளுங்கட்சி ஆட்டம் காணுமளவுக்கு அடைந்துள்ள கணிசமான

இடங்களின் எண்ணிக் கையும்தான் ஆளும் தரப்பினருக்குக் கலக்கத்தை விளைவித்து, அதை மறைக்க அகோ; வாருங்கள் கலைஞர் பெருமக்காள்! மூன்றாண்டு ஆட்சியில் முடங்கிக் கிடந்த விருதுகளை தூசி துடைத்து வழங்குகிறோம் என்ற பளபளப்பான பரபரப்பான அறிவிப்பு.

உடன்பிறப்பே, நீ எவ்வளவு பொல்லாதவன்; பொதி பொதியாய் பணத்துடன் மந்திரிமார்கள் முகாமிட்டு மோதிய போதும் - போலீஸ் துறையை எதற்குத்தான் பயன்படுத்துவது என்றில்லாமல் அவர்களைக் கொண்டு அச்சுறுத்திய போதும் - கடமையே கண்ணாகிக் கழக வெற்றியே குறிக்கோளாகி காணும் திசையெலாம் உதயசூரியனை வென்றிட வைத்து எம்மைக் களிப்பில் ஆழ்த்திவிட்டாய்.

பெரம்பலூரும், மதுக்கரையும் பேரூராட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல்கள் அல்லவா - பெரம்பலூரில் 1301 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி; மதுக்கரையில் 3,288 வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி. அ.தி.மு.க. அரசின் இயந்திரங்கள் அனைத்தும் நமக்கு எதிராகச் சுழன்றும்கூட இந்த வெற்றியைத் தடுக்க முடியவில்லை.

இராமநாதபுரம் நகராட்சி வார்டுகள் தேர்தல்களில் நமது கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றது மட்டுமல்ல; அ.தி.மு.க.வை இரண்டு இடங்களிலும் டெபாசிட்டையும் அல்லவா இழக்கும்படி செய்திருக்கிறார்கள். (9வது வட்டத்தில் தி.மு.கழகம் 586 வாக்குகள்; அ.தி.மு.க. 182 வாக்குகள். 24வது வட்டத்தில் தி.மு.கழகம் 441 வாக்குகள்; அ.தி.மு.க. 139 வாக்குகள்).

மாநாடுதான் நடத்த முடியும் இவர்களால்; மக்களிடம் வாக்குப்பெற முடியுமா? என்று விழுப்புரத்தில் வெள்ளமெனத் திரண்டவர்களைப் பார்த்து விகடம் செய்தவர்கள்; இப்போது அந்த விழுப்புரம் மாவட்டத்தில் 5க்கு 4 இடங்களைக் கழகம் கைப்பற்றியிருக்கிறது வார்டு தேர்தல்களில்; என்கிறபோது எத்துணை வியப்படைவார்கள்! விருது பெறும் கலைஞர்களை வாழ்த்துவது ஒரு புறம் - அதற்காக வெற்றிபெற்ற கழக வேட்பாளர்களை விழாத்திரை போட்டு திசை திருப்பி மறைத்துவிட முடியாதல்லவா!

வேண்டுமானால் விழுப்புரம் தி.மு.க. நகராட்சித் தலைவர் தம்பி பன்னீர்செல்வம், பாராட்டத்தக்க வகையில் பணியாற்றுகிறார் என்பதற்காக - அந்த நகராட்சி மன்றத்தையே நிர்வாகம் செய்ய முடியாமல் முடக்கிப் போட்டிருக்கிறதே இந்த அரசு; அது போன்ற மக்கள் விரோத - ஜனநாயக விரோத முயற்சிகளில் ஈடுபடுவதைக்கூட ஒரு தொடர்பணியாக நடத்திட மாற்றுக்கட்சியிடம் இருக்கிற உள்ளாட்சி அமைப்புகள் மீது பாய்ச்சல் நடத்திடக் கூடும்.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்; அவை கிராமப் பஞ்சாயத்து எனினும் - ஒன்றியம் - நகரம் - மாநகரம் எனினும் - பெரும்பாலானவற்றில் மக்கள் பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் - அல்லது கவனிக்கப்பட முடியாமல் - தடுக்கப்படுவதற்கும், நல்லவை எதுவும் நடக்க முடியாமல் தாமதப்படு வதற்கும் இந்த அரசும் - அரசின் அதிகாரிகள் பலரும் - காரணகர்த்தாக்களாக இருக்கிற வரையில், குடியாட்சி என்பது பெயரளவில்தான்; நடப்பதென்னவோ முடியாட்சி போலக் கூட இல்லாமல் தடியாட்சியாகத்தான் இருக்கிறது.

இந்த உண்மையைத் தமிழகத்தில் பல பிரிவு மக்களுக்கும் உணர்த்தி அந்த மக்களை அமைதி யான ஜனநாயகப் புரட்சிக்கு ஒன்றுதிரட்டத்தான் தி.மு.க. களமிறங்கி மத்திய - மாநில அரசுகளின் அலுவலகங்களின் முன்னால் அறப்போர் மறியலுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

பொதுமக்களின் மாபெரும் சக்தியை அமைதி வழியில் திரட்டி நடத்த இருக்கும் போராட்டத்திற்கு வாழ்த்து வழங்கி - வெற்றி மாலை அணிவிப்பதற்கு அடையாளமாகத்தான் இந்த உள்ளாட்சி இடைத் தேர்தல் வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம்.

இது வரப்போகிற பெரும் வெற்றிகளுக்கு முன்னுரை! முன்னுரை எழுதிவிட்டுப் பிறகு, புத்தகத்தை எழுதிட யாரும் ஆரம்பிக்கமாட்டார்கள்.

புத்தகத்தை எழுதி முடித்து விட்டுத்தான் முன்னுரை எழுதுவார்கள். அணிந்துரை வாங்கி இணைப்பார்கள்.

நான் இப்போதே இந்த வெற்றியை முன்னுரை என்று சொல்வதற்குக் காரணம்; பொது மக்களும் வாக்காளப்

பெருமக்களும் புத்தகத்தை ஏற்கனவே எழுதி முடித்து வெளியிடுவதற்குத் தயாராக வைத்திருக்கிறார்கள்.

புத்தகத்திற்குத் தலைப்பும்கூடத் தந்து விட்டார் கள்; ஜனநாயக வெற்றி அல்லது சர்வாதிகாரத்தின் வீழ்ச்சி! என்பதாக!

அதற்கான முன்னுரையாகத்தான் உள்ளாட்சி இடைத்தேர்தலில் நீ உழைத்துத் தந்துள்ள இந்த வெற்றி அமைகிறது.

இன்னும் பல வெற்றிகளை நாம் பெற வேண்டி யிருக்கிறது; போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பது இதற்குப் பொருந்தாது! மேலும் மேலும் உழைத்திடுவோம்! உழைப்பது போல் காட்டி னால் போதாது! உண்மையாக உழைத்திடுவோம்! ஆளுங்கட்சியினர் அதிகாரத்தைப் பயன்படுத்தி - பணத்தை வாரி இறைத்து - செல்வாக்கைப் பாய விட்டு - உள்ளாட்சிகளை வென்று அவற்றை உதைபந்துகளாக ஆக்கிட எண்ணினர். அந்த எண்ணத்தில் மண்ணைப் போட்ட உன் ஓய்வற்ற உழைப்புக்கு நன்றி - அடுத்தடுத்து நீ உழைக்கப் போவதை நினைத்து ஓராயிரம் வாழ்த்து!

அன்புள்ள,

மு.க.

12-10-2003

2978. காவிரிப் பிரச்சினை; காதில் பூ சுற்றமுடியாது!

உடன்பிறப்பே,

சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்திடக் கடமைப்பட்டவர் முதலமைச்சர் என்பதை மறந்துவிட்டு; சட்டம் ஒழுங்கை மீறுகிற செயலைத் தூண்டிவிடும் காரண கர்த்தாவாக மாறி; மேடையிலேயே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரிடம் சவால்விட்டு - சண்டமாருத முழக்க மிட்டு - சண்டைக்கிழுத்து - நாகப்பட்டினம் அரசு விழாவில் பேசிய ஜெயலலிதா வழக்கம்போல் நம்மிடமும் வம்புக்கு வரத் தவறவில்லை.

காவேரிப் பிரச்சினை பற்றி கவலையேபடாதவர் கருணாநிதி என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்; அந்தக் கூட்டத்தில்! விவசாயிகளின் துயர் துடைக்க துரும்பைக்கூட எடுத்துப் போடாதவர்கள் தி.மு.க. வினர் என்றும், அவர் தான் தமிழகத்தின் உரிமையைப் பெறுவதற்காக அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்தார் என்றும் பேசியிருக்கிறார். இந்தச் செய்தியை ஓரிரு பத்திரிகைகள் தவிர மற்றவை வெளியிட வில்லை. இது; உண்மையற்ற செய்தி என்று தெரிந் திருந்த காரணத்தால்! இந்தக் குற்றச்சாட்டை அவர் இப்போது மட்டும் கூறவில்லை. கீறல் விழுந்த இசைத்தட்டு ஒலிப்பதைப் போல காவேரிப் பிரச்சினை பற்றி அவர் எப்போது பேச முற்பட்டாலும் நம்மீது புகார்க் காண்டம் படிக்கத் தவறுவதில்லை. அவ்வப்போது அதற்கு நாம் விரிவாக விளக்கம் கொடுத்த போதிலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து அந்த அம்மையார் புகார் சொல்வதன் காரணமாக நாமும் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய கடமையை ஆற்றிடும் பொறுப்பில் இருக்கிறோம்.

காவேரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் ஒன்று அமைத்திட வேண்டுமென்று 17-2-1970ல் தி.மு.கழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது.

8-7-1971 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி கழக ஆட்சியிலேதான் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1989இல் தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்களிடம் நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தி சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

90ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்கில் மத்திய அரசின் கருத்தை நீதிமன்றம் கேட்டபோது, பிரதமர் வி.பி.சிங் தொலைபேசியிலே என்னுடன் தொடர்பு கொண்டு என்ன சொல்லலாம் என்றார். நடுவர் மன்றம்தான் வேண்டும் என்றோம். அவ்வாறே மத்திய அரசும் நீதிமன்றத்தில் தெரிவித்து நடுவர் மன்றம் அமைய முழு முதற் காரணமாக இருந்தது தி.மு.கழக ஆட்சிதான்.

நடுவர் மன்றத்தின் மூலம் இடைக்காலத் தீர்ப்பு ஒன்று வழங்க வேண்டுமென்று 28-7-1990இல் தி.மு.கழக ஆட்சியில்தான் கேட்டுக் கொண்டோம்.

இடைக்காலத் தீர்ப்பு தர தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் தெரிவித்தபோது, கழக ஆட்சியில் 10-1-1991 அன்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, அதன் விளைவாக அதிகாரம் உண்டு என்ற தீர்ப்பு கிடைத்தது.

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது 9-6-1992 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துவது பற்றி தமிழக முதல் அமைச்சருக்கு ஒப்புதல் வேண்டி கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்திற்கு 9 மாதங்கள் கழித்துத்தான் ஜெயலலிதாவின் பதில் ஆமையின் முதுகில் ஏறிக் கொண்டு போகிறது. இப்படிப்பட்டவர் தான் காவேரிக்காக தான்தான் பாடுபட்ட தாக தஞ்சைத் தரணியில் தம்பட்டம் அடித்துள்ளார்.

இவ்வாறு 9 மாதங்கள் கழித்து ஒப்புதல் அளித்தவர்தான் பிறகு அந்தக் குழுவை ஏன் அமைக்கவில்லை என்று கேட்டு 18-7-93 அன்று தான் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தார். பிரதமர் கர்நாடக முதல்வருக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க கட்டளையிட்டால்தான் உண்ணாவிரதத்தை

நிறுத்துவேன் என்றார். ஆனால் அந்தக் கட்டளை இடப்படாமலே உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு அளித்தது 1991ஆம் ஆண்டு. அதற்குப் பின் ஐந்தாண்டுகள் ஆட்சியிலே இருந்தது ஜெயலலிதா. இடைக்காலத் தீர்ப்பினை இந்த ஐந்தாண்டுகளில் ஓர் ஆண்டாவது நிறைவேற்றிக் கொடுத்தாரா ஜெயலலிதா? கிடையாது.

1996இல் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாகத்தான், 1998ஆம் ஆண்டு கர்நாடக அரசு நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஒப்புக்கொண்டு, ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தர முன்வந்தது. அத்துடன் காவேரி ஆணையத்தையும், கண்காணிப்புக் குழுவையும் அமைத்திட முடிவெடுக்கப்பட்டது. இதற்குத் தமிழகத் தின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அனுமதியும் பெறப்பட்டது. 98ஆம் ஆண்டு ஒன்பது மணி நேரம் இடை விடாமல் பிரதமர் வாஜ்பய் அவர்கள் இரண்டு மாநில அரசுகளுடனும் பேசி இந்த முடி வினை, அப்போது தனது தோழமைக் கட்சி யாக இருந்த அ.தி.மு.க.வின் மிரட்டலைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் எடுத்ததாக அப்போது ஏடுகள் செய்தி வெளியிட்டன.

இந்த ஒப்பந்தம் குறித்து தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து ஏடுகளும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் பாராட்டி, வரவேற்று அறிக்கைகள் விட்டார்கள் என்பது உலகறிந்த உண்மை. அதையெல்லாம் மறைத்துவிட்டு, நாகப்பட்டினத்திலே சென்று காவேரிக்காக நாம் ஒன்றுமே செய்ய வில்லை என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டி யிருக்கிறார். அது அவரது இயல்பு!

நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாட காவில் அவர்களாகவே அணையைத் திறந் தால்தான் காவேரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும் என்று 21-3-1991இல் கூறிய ஜெய லலிதாதான் காவேரிப் பிரச்சினையில் நம்மைக் குறை கூறுகிறார்.

அ.தி.மு.க. சார்பில் பிரதமர் வி.பி. சிங் அவர்களிடம் கொடுத்த மனு ஒன்றில் காவேரி ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டோடு முடிந்து விட்டது என்று கர்நாடக அரசின் வாதத்தை அப்படியே எடுத்து வைத்து எழுதிக் கொடுத்ததும் ஜெயலலிதாவுக்கு

காவேரிப் பிரச்சினையில் எவ்வளவு அக் கறை உள்ளது என்பதை எடுத்துக்காட்டும்.

2001ஆம் ஆண்டு தி.மு.கழகம் வெற்றி வாய்ப்பையிழந்து, ஜெயலலிதா பொறுப்பேற்ற பிறகு 9-9-2001 அன்று காவேரிப் பிரச்சினையிலே நான் கருத்து கூறும்போது, காவேரிப் பிரச்சினையில் தி.மு.க. ஆட்சிக்கு அ.தி.மு.க. ஒத்துழைப்பு தர மறுத்ததுபோல் இல்லாமல் ஒட்டுமொத்த தமிழகத் தின் இந்தப் பிரச்சினையில் தி.மு.க. தனது ஒத்துழைப்பை நல்கும் என்று தெரிவித்தேன். ஆனால் ஜெயலலிதா எப்படி நடந்து கொண்டார் என்பதை நாடறியும்.

2-4-2002 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறும்போது, செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம், அந்த ஆணையத்தை ஏற்கா மல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறி னோம், மத்திய அரசு சொன்னதை ஏற்றுக் கொண்டு காவேரிப் பிரச்சினையில் துரோகம் விளைவித்தது தி.மு.க. அரசுதான் என்று தேவையில்லாமல் தி.மு.க. மீது வசைபாடினார்.

காவேரி ஆணையத்தைப் பல் இல்லாத ஆணை யம், செயல்படாத ஆணையம் என்றெல்லாம் குறிப் பிட்ட ஜெயலலிதா 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27இல் டெல்லியில் நடைபெற்ற காவேரி ஆணையக் கூட்டத் திலே கலந்து கொண்டார். ஆனால் அங்கே அனை வருடனும் சுமூகமாகப் பேசி தண்ணீரைப் பெறுவதற் கான வழிவகை காணாமல், அவருக்குள்ள முன் கோபம் காரணமாக இடையிலே வெளி நடப்பு செய்வ தாகக் கூறிவிட்டு வெளியே வந்துவிட்டார். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்னவோ தமிழ் நாட்டு விவசாயிகள்தான். ஆனால் இப்போது அந்த விவசாயிகளிடம் போய்த்தான் காவேரிக்காக பாடுபடுகிறேன் என்கிறார்.

7-9-2002 அன்று செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது, கர்நாடக மாநில முதல்வர் அடிக்கடி அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி காவேரிப் பிரச்சினையிலே முடிவெடுப்பதைப் போல தமிழக முதல்வர் கூட்டுவதில்லையே என்று கேட்ட போது, யாருடைய துணையும் இல்லாமல் தன்னால் செயல்பட முடியும் என்ற நம்பிக்கையுடைய முதல் அமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்றுதான் கூறினேன். 29-11-2002

அன்று பிரதமர் தலைமையில் காவேரி ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. கர்நாடக முதலமைச்சர் முதல் நாளே டெல்லி சென்று விட்டார். ஆனால் காவிரி நீர் தேவைப்பட்ட நமது மாநில முதல் அமைச்சர் கடைசி நிமிடம் வரை டெல்லி செல்வதாகச் சொல்லிவிட்டு, பிறகு பயணத்தையே ரத்து செய்து விட்டார். அதனால் யாருக்கு நட்டம்? முதல் அமைச் சருக்கு அல்ல, நமது மாநில விவசாயிகளுக்குத்தான்.

காவேரி ஆணையத்தின் தலைவர் பிரதமர். அவரே நடுநிலை தவறிவிட்டார் என்று ஜெயலலிதா கூறவில்லையா? பின்னர் உச்சநீதிமன்றம் கண்டித்த பிறகு நான் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெறுகிறேன் என்று கூறவில்லையா? மருத்துவமனைக்கு முரசொலி மாறனைப் பார்க்க வந்த பிரதமரிடம் காவேரி ஆணையத்தை உடனடி யாகக் கூட்ட வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். ஆனால் பொறுப்பிலே உள்ள தமிழக முதல் அமைச்சர் பிரதமர் வருகின்ற நேரம் பார்த்து ஊட்டியிலே போய் உட்கார்ந்துகொண்டு, நான் வேண்டுகோள் விடுத்த பிறகு காவேரி ஆணை யத்தைக் கூட்டுமாறு கோரி பிரதமருக்கு முதல்வர் டெல்லிக்குக் கடிதம் எழுதுகிறார். கடிதம் எழுதியதோடு தன்னுடைய பொறுப்பு முடிந்து விட்டதாக நினைத்து நாகப்பட்டினம் சென்று அவர்தான் காவேரிக்காகப் படாதபாடுபடுவதாகவும், தி.மு.க. கடுகளவுகூட எதுவும் செய்யவில்லை யென்றும் இந்த அம்மையார் கதாகாலட்சேபம் நடத்துவதின் மூலம் காவேரிப் பிரச்சினையில் ஆதி முதல் அக்கறை கொண்டு கவனித்து வருகிற தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் காதுகளில் பூ சுற்றிவிட முடியாது என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

16-10-2003

குறிப்பு:- இதனைத் துண்டு அறிக்கை யாக தி.மு.க. விவசாய அணி அமைப்புகள் ஆங்காங்கு அச்சியற்றி விநியோகிக்கலாம்.

2979. முன்னுரையாக எழுதிய என்னுரை!

உடன்பிறப்பே,

ஓராண்டுக்கு முன்பு கோவா சென்று தொல்காப்பியப் பூங்கா 1-9-2002இல் தொடங்கி, 3-10-2002இல் சென்னையில் நிறைவு செய்து - பல்லாண்டு கால என் உழைப்புக்கான பயனைப் பெற்றேன்.

11-1-2003 அன்று வெளியிடப்பட்ட இந்த நூல் ஓராண்டு முடிவதற்குள் 12 பதிப்புகள் அச்சியற்றப் பட்டு இதுவரை மொத்தம் 14,000 புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன. நூலின் விலை ரூபாய் 500 என்பதையும், நூலின் பெயர் தொல்காப்பியப் பூங்கா என்பதையும் எண்ணுமிடத்து இத்தனை புத்தகங்கள் விற்பனையாகியிருப்பது வியப்புக்குரியது மட்டுமல்ல; இலக்கியத்தின்பால் தமிழ் மக்கள் கொண்டுள்ள விருப்பத்தையும் காட்டுவதாகும்.

அத்துடன் தமிழ்க்கனிப் பதிப்பகத்தின் சார்பில் புத்தக விற்பனையில் கிடைத்திடும் ஆதாயத்தில் இதுவரை சுமார் 40 இலட்சம் ரூபாய் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டு கழகத்தில் நலிவுற்றுள்ள எளிய தொண்டர்கள் குடும்ப நிதியாக ஏறத்தாழ 500 பேருக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

அந்த நிதியைப் பெற்றிடும் கழகக் கண்மணிகள் காட்டிய புன்னகையை நினைத்தவாறு; அதனால் குளிர்ந்திடும் நெஞ்சுடன் –

தொல்காப்பியப் பூங்காவுக்கு நான் எழுதிய பூங்கா புகு முன் எனும் முன்னுரையை மீண்டும் நினை வூட்டுகிறேன்.

காலத்தால் மூத்த காப்பியம் தொல்காப்பியம். அது தொடங்குவது கடவுள் வாழ்த்துடன் அன்று என்பது அதன் தனிச் சிறப்பு. தொல்காப்பியருடன் சேர்ந்து கற்ற ஒரு சாலை

மாணவரான பனம்பாரனார் பாடியதே பாயிரமாக நின்று அந்த அற்புதக் காப்பியத்திற்குக் கட்டியம் கூறுகிறது. எல்லை யினைத் தமிழ் நிலத்துக்குச் சுட்டிக்காட்டி, எல்லை யில்லாப் பெருமை கொண்ட தமிழ் மொழிக்கு இலக் கணத் தோரணம் கட்டும் இந்தக் காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தாலே நாம் நம்மையும் அறியாமல் செம்மாந்து நிற்போம்.

வட வேங்கடம் தென் குமரி ஆ இடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல் நிலம் தரு திருவின் பாண்டியன் அவையத்து அறம் கரை நாவின் நான் மறை முற்றிய அதங் கோட்டு ஆசாற்கு அரில் தபத் தெரிந்து மயங்காமரபின் எழுத்து முறை காட்டி மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல் புகழ் நிறுத்த படிமை யோனே

எனப்பாடி; வட வேங்கடம் தென்குமரியைத் தமிழகத்தின் எல்லையென எடுத்துக்காட்டி; எழுத்து, சொல், பொருளுக்கு இலக்கணம் இயம்பும் இந்நூல் நிலம் தரு திருவின் பாண்டியன் முன்னிலையில், புலவர்கள் கூடிய பேரவையில் ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர் எனும் தூயவரால் அதங்கோட்டா சானின் வாழ்த்துரையுடன் அரங்கேற்றப்படுகிறது எனப் பாராட்டும் இந்தப் பாயிரத்தைப் படிக்கப் படிக்க பலாச்சுளையின் சுவையின்பம் கிட்டுகிறது!

திருக்குறள் 1330க்கும் உரையெழுதி வெளியிட்ட போது, இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன் என்று முகவுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது தொல்காப்பியத்தைத் தொடுவதற்கே தயங்கித் தயங்கி, மலர் வனத்தில் நுழைந்த ஒரு மங்கை ஆங்கு பூத்துக் கமழும் அனைத்து மலர்களையும் சூடிக் கொள்ள ஆசைப்படினும்; தன் தலை தாங்கும் அளவே ஆய்ந்து மலர்களைப் பறிப்பது போலவே நானும் பறித்தெடுத்து சூடிக் கொள்ளச் சுழன்று சுழன்று தொல்காப்பியத் தோட்டத்திற்குள் குறிப்பாக சில நூறு மலர்களைக் கொய்திடவும் அதனால் இன்பம் எய்திடவும் விரும்புகிறேன்.

1330 குறளுக்கும் உரை எழுதினேன் எனினும்; குறளோவியம் எனுமோர் புதுமையான எழுத்தோவியம் தீட்டிட ஏறத்தாழ முன்னூறு குறட்பாக்களையே பயன்படுத்திக் கொண்டேன். அதைப்போலவே தொல்காப்பியத் தோட்டத்திலும் செய்யுள் எனும் செழுமலர்களைத் தேர்ந்தெடுத்து வழங்கிடவும், முயற்சி மேற்கொள்கின்றேன்.

வழங்கிடப் போகிறாயா? நீ சூடியதைக் கொடுக்கப் போகிறாயா என்பீர்! சூடிக் கொடுத்த நாச்சியார் செயலை இறைவனே ஏற்றுக்கொண்ட கதை உலவும் நாட்டில்; நான் ஏட்டில் தானே சூடிக் கொடுக்கப் போகிறேன்; எனவே எனைப் பொறுத்து ஏற்றிடலாகாதா!

இடைக்காலத்தே ஒரு பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டபோது பழந்தமிழ் நூல்கள் மீண்டும் கற்கப்படத் தொடங்கின. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர் போன்ற சான்றோர் பலர் தொல்காப்பிய மூலத்தையும் காத்து, உரை விளக்கமும் தந்துள்ளனர். அவர்கள் ஏற்றி வைத்த விளக்கு சுடர் விட்டு ஒளி வீசியது எனினும்; மீண்டும் நம் காலத்தே தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போலும் பழந்தமிழ் நூல்கள் மக்களால் பயிலப்படத் தொடங் கின. இவற்றுள் தொல்காப்பியம் அதற்குரிய சிறப் பினைப் பெற்று இன்னும் தமிழ் மக்களிடையே உரிய அளவு பரவவில்லை

எனும் கருத்தமைந்த கவலையை பெருமதிப்புக் குரிய தமிழறிஞர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் எழுதிய தொல்காப்பிய அணிந்துரையொன்றில் குறிப் பிட்டிருக்கிறார். அவர் அணிந்துரை இடம்பெற்ற அந்த நூல்; தொல்காப்பியம் தெளிவுரை என்ப தாகும். அதனை எழுதியவர் முனைவர் திரு. ச.வே. சுப்பிரமணியன் அவர்களாவார். அவர் கேரளப் பல் கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி ஆற்றியவர். பேராசான் பெருந்தகை வ.அய். சுப்பிரமணியனார் வழியில் தமிழ் ஆய்வு நடாத்தி, புதிய நெறிகளில் மொழி இயல் பார்வைகளில் வளர்த்திட்ட பெருமைக் குரியவர்.

இந்தத் தெளிவுரை உள்ளிட்ட நல்லறிவாளர்கள் தீட்டிய உரைகள் அனைத்தையும், ஆய்வுகள், ஆக்க பூர்வமான

கட்டுரைகள் அனைத்தையும் துணைக்கு வைத்துக் கொண்டுதான் துணிந்து நுழைந்தேன், தொல்காப்பியத் தோட்டத்திற்குள்!

பலாப்பழத்தின் முள்; மேல் பகுதியிலிருக்கும். குத்திக் கிழிக்காது, ஆனால் கரடுமுரடு! தொல் காப்பியப் பலாக்கனியில் அந்தக் கரடுமுரடுதான் எழுத்ததிகாரம் எனலாம்!

சொல் உருவாக்க எழுத்து வேண்டுமே; வெறும் ஒலி மட்டும் போதாதே!

சொல்லாரம் பூட்டினால்தான் பொருள் இலக்கண மெனும் நல்லாரம் கிடைக்கும்!

சுளை போலப் பொருளதிகாரத்தை எடுத்துச் சுவைத்திட இடையே சொல்லதிகாரத்தை எட்டிப் பார்த்தால் பலாச்சுளையைப் பாதுகாக்கும் பொறுப்பை அது ஏற்றிருப்பது புரியும்!

இரண்டையும் கடந்து கைவரிசை காட்டினால்; இலக்கியத் தேனில் நனைந்த இலக்கணச் சுளை களைக் காணலாம். ஆம்; அதுவே பொருள் இலக்கணம்!

பொருள் இலக்கணம் சொல்வதற்காகத்தான், சொல் இலக்கணத்தையும், எழுத்திலக்கணத்தையும் தொல்காப்பியர் சொன்னார் என்று உரைக்கின்றார் ச.வே. சுப்பிரமணியனார்.

உலகத்தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, வளர்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கை முறைகள், அவற்றுள் வீட்டில் வாழும் அகவாழ்வு நெறி, சமுதாயத்துடன் பொருந்தி வாழும் புறவாழ்க்கை முறை, ஆடவர்க்கும், பெண்டிர்க்குமுரிய பண்புகள், அவர்களுக்குரிய குணநலன்கள், தேவையற்ற செயல்கள் போன்றவற்றை தொகுத்துக் கூறுகிறது; பொருளதிகாரம், பொதுவாக மனித இன வளர்ச்சி பற்றி தொல்காப்பியம் விளக்குகிறது.

இன்று முகிழ்த்துள்ள சமுதாய முற்போக்குப் பேரொளியில் சங்க காலத்திற்கு முன்பு தமிழ் மக்கள் கடைப்பிடித்த வாழ்க்கை முறையில் பிற்போக்கு நிழல் படிந்தது போன்ற தோற்றம் காணப்படும். ஏற்க இயலுமா என்ற கேள்வி எழக்கூடும். இன்றைக்கு திருத்தம் செய்து கொள்ளப்பட வேண்டிய பழைய பண்பாடுகள், வாழ்க்கை முறைகள், ஆடவர் பெண்டிர் உரிமைகள் பல இருப்பினும் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்த நமது

சமூக அமைப்பின் பண் பாட்டு அடிப்படையை அறிந்து கொள்ளத் துடிப்பதை தொல் பொருள் ஆய்வில் காட்டும் ஆர்வம் போன்றது எனக் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்.

அணைகள் கட்டுகிறோம், ஆலயங்கள் எழுப்பு கிறோம்; அவை புதிய பாணியில் நவீன மிடுக்குடன் காட்சியளித்து நம்மைக் கவர்ந்த போதிலும்; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சைக் கோயிலும், கரிகால் சோழன் எழுப்பிய கல்லணையும் புறந்தள்ளக் கூடியவைகளா; இல்லையே!

அப்படி எண்ணிக் கொண்டுதான் தொல்காப்பியப் பூங்காவுக்குள் நுழைய வேண்டுமென அழைக் கின்றேன்.

தமிழ் மொழிப் போராளிகளில் ஒருவரான தமிழ் ஆசான் முனைவர் இலக்குவனார் அவர்கள் தொல்காப்பிய ஆராய்ச்சி நூலில் பின்வருமாறு குறிக்கிறார்.

நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பல்துறை பற்றி அறிவதற்குத் துணை புரிவதாகும். இதனைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமே தோவு கருதிக் கற்று வருகின்றனர். இது இலக்கண நூல் தான் என்றாலும் ஏனைய மொழிகளில் உள்ள இலக்கண நூல் போன்றதன்று! அண்மை நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து வரும் மொழி ஆராய்ச்சியும், மேலை நாட்டவரால் விரும்பிப் போற்றப்பட்டு வரும் இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக் கலைகளாம் உயிரியல், உளவியல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது.

..... ஆகவே தொல்காப்பியர் வழி நின்று எழுத்தும் சொல்லும் பொருளும் (இலக்கியமும்) ஆராய்ந்து தமிழகத்தின் ஏற்றம் காண்போம்.

இலக்குவனாரைத் தொடர்ந்து என்னைத் தமிழாற்றலால் வயப்படுத்திய மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள், தொல்காப்பியத்தைத் தமிழரின் உயிர் நூல் எனக் கூறுகிறார்.

தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் இந்திய மொழிகளிலோ, ஏன், உலக மொழிகளிலோ அதுபோன்ற ஒரு நூல் தோன்றியதில்லை என்பது ஆன்றோர் கருத்து. நூல்கள் தோன்றியிருக்கலாம், ஆனால் தொல்காப்பியம் போல் தோன்றியதில்லை. எனவே நமக்கு,

காலத்தால் மூத்ததும் கடித்துத் தின்றால் மட்டுமே சுவை வழங்கும் கரும்பனையதும் எளிதாகவும் இனிப்பு தரக் கூடிய கனிக்குவியல் கொண்டதும் தொல்காப்பியம் எனலாம்.

அருந்தமிழாற்றல் உடையவனாக எனக்கு உற்சாகமூட்டிய பேரறிஞர் அண்ணாவுக்கும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் அவர்கள் துயிலும் திக்குநோக்கித் தொழுது வணங்கி, நலங்கிள்ளி நெடுங்கிள்ளிக்குப் பிறகு நாடும் ஆண்டு தமிழ் ஏடும் ஆண்டு வருகிறேன் என எழுதி எனக்கு ஊக்கம் பெருக்கிய அறிஞர் மு. வரதராசனார்க்கு நன்றி நவின்று என் தமிழ் ஆசிரியர்கள் மகா வித்துவான் தண்டபாணி தேசிகர், முத்துகிருட்டின நாட்டார், இராசகோபால் பிள்ளை ஆகியோரை நினைவு கூர்ந்து, முதலில் எழுத்தை நெருங்குகிறேன். தொடர்ந்து சொல் மலர், பொருள் பூங்கொத்து மணம் நுகர மனங்கனிந்து என்னுடன் வாருங்கள்!

அன்புள்ள,

மு.க.

23-10-2003

2980. வாரியார் வழங்கும் கம்பன் கவிநயம்!

உடன்பிறப்பே,

இலக்கியம் சார்ந்த கடிதம் ஒன்று நேற்று எழுதி யிருந்தேன். இன்று இலக்கியம் சார்ந்ததல்ல; இதிகாசம் புராணம் சார்ந்த ஒரு கடிதம் எழுதும் வாய்ப்பு கிட்டியது.

அண்மையில் மதுரை வழக்கறிஞர் தம்பி குபேந் திரன் என்பார் நூல் ஒன்றினை வழங்கினார்; மாலை, சால்வை இவற்றுக்குப் பதிலாக!

அதைப் படித்தேன் - எழுதத் தோன்றியது; எழுது கிறேன்.

இராமாயணத்தில் கொடியவளாக சித்திரிக்கப்படு கிற சூர்ப்பநகையை இராவணனுடைய சோதரி யென்றுதான் இராமாயணப் படைப்பாசிரியர்கள் கூறியுள்ளனர்.

இராவணன் தீய குணம் உடையவன் என்றும்; அதனால் சூர்ப்பநகையைப் பற்றிக் குறிப்பிடும்போது அவளை இராவணனின் தங்கையென்றும்; அவள் இராம இலக்குமணரால் அவமானப்பட்டபோது அண்ணன் இராவணனிடம் சென்று முறையிட்டாள் என்றும்; அவளை இராவணனின் தங்கை என்று மட்டுமே எல்லா இராமாயணங்களும் அழைக்கும் போது; அருணகிரிநாதர் அவளை விபீஷண சோதரி என்று குறிப்பிட்டிருப்பதாக திருமுருக கிருபானந்த வாரியார்; அவரது கம்பன் கவிநயம் என்ற நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தவத்திரு வாரியார் அவர்களின் தமிழையும், தமிழாற்றலையும் நான் விரும்பி ஏற்றுக் கொண்டு பாராட்டுகிற அளவுக்கு அவரது புராணிகக் கருத் துக்களை நான் ஏற்றுக் கொண்டவனல்லன்

எனினும்; அவர் அந்த நூலின் வாயிலாக வெளிப்படுத்தும் ஒரு புதிய கதையை நான் படித்ததுடன் நில்லாது அதை உன் கவனத்துக்கும் கொண்டு வருகிறேன்.

சகோதர பாசம்

புத்திர வாஞ்சை

பிறர்மனை விரும்பும் தீமை

களச்சாவை வேண்டிப் பெறுகிற வீரம்

காம உணர்வைக் கட்டுப்படுத்தாமையினால் ஏற்படும் கடும் விளைவு

போன்ற பல அறிவுரைகளை உள்ளடக்கியவை இராமாயணம் முதலிய இதிகாசங்களும், புராணங் களும் எனக் கூறப்படுகின்றன. அதில் நமக்குள்ள கருத்து வேறுபாடு என்பதே; அன்புரை, அறிவுரை, பண்புரை இவையனைத்தும் ஓர் இனத்துக்கு மட்டுமே உரியவை எனப் பொய்யுரை புனைந்து திராவிட இனத்தை இந்தப் பண்பு நலன்களுக்கெல்லாம் பகையாக விளங்குவது போலக் கதை கட்டியுள்ளதை எப்படி ஏற்க முடியும் என்பது தான். இந்த நம் கருத்து ஆணித்தரமாக அப்படியே இருக்கும்போது; அதை இப்போது விவாதப் பொருளாக்கிட விரும்பாமல்; தவத்திரு கிருபானந்த வாரியார் அவர்கள் விபீஷண சகோதரி என்று சூர்ப்பனகையை அருணகிரி நாதர் குறிப்பிட்டதின் காரணத்தை விளக்குவது; புராணத் தில் நமக்குக் கிடைத்துள்ள புதிய தகவலாக இருப்ப தால் அதை உன்னுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

எனவே தவத்திரு வாரியார் அவர்களின் நூலில் உள்ள விபீஷண சோதரி என்ற தலைப்பில் கூறப்பட் டுள்ளதை அப்படியே வரி பிறழாமல் வழங்குகிறேன்.

சூர்ப்பநகைதான் இராவணன் அழிவிற்கும் மற்றும் கரன் மாரீசன் முதல் பல்லாயிரக்கணக்கான நிருதர் சேனைகளின் அழிவிற்கும் காரண மானவள். தீய குணங்களின் கோட்டையாகவும், கொடிய அரக்கி யாகவும் வாழ்ந்து வந்த இவளைப் பற்றிச் சமரச ஞானி அருணகிரிநாதர் ஒரு பாடலில் குறிப்பிடுவதை ஈண்டு நோக்குவோம்.

மூக்கறை மட்டைம காபல காரணி சூர்ப்பந கைப்படு மூளிஉ தாசனி மூர்க்ககு லத்துவி பீஷண சோதரி (திருப்புகழ்)

மூக்கறை மட்டை மகாபல காரணி சூர்ப்பநகைப் படுமூளி உதாசனி மூர்க்க குலத்து விபீஷண சோதரி

என்ற திருப்புகழின் அடிகள் சூர்ப்ப நகையைப் பற்றிப் பேசுகின்றன.

சூர்ப்பநகையைத் தீயவனான இராவணனுடைய சோதரி என்று கூறாமல், விபீஷண சோதரி என்று திரிகால ஞானியாகிய அருணகிரி நாதர் கூறியதன் காரணம் என்ன?

தீயவளைத் தீயவனுடைய சகோ தரி என்றால்தானே அவளது தீமை நன்கு வலியுறும்? அதனை விடுத்து உத்தமன் என்று கம்பர் பெரு மானால் விளிக்கப்பெற்ற தூய வனாகிய விபீஷணனை அருணகிரிப் பெருமான் கூறியதன் நுட்பந்தான் என்ன? சிறந்த வரலாறு ஒன்று அதனுள் இருக்கிறது. அவ்வரலாறு வருமாறு :- சத்திய விரதன் என்ற அரசனின் அருமந்த மைந்தன் சங்க சூடணன். ஆனந்தகுரு என்பவரிடம் கல்வி பயின்று வந்தான் அவன். அக் குருவினுடைய பெண் சுமுகி என் பாள் சங்க சூடணனிடம் காதல் கொண்டிருந்தாள். அவனோ இதனை அறியாதிருந்தான்.

ஒருநாள் குருவிடம் பாடம் கேட்க அவன் வந்தபோது குரு அங்கு இல்லை. சுமுகி தனித்திருந்தாள். தன் எண்ணத்தை அவனிடம் வெளிப் படுத்தினாள் அவள்.

சங்கசூடணன் அதற்குச் சற்றும் இணங்கவில்லை. நீ எனக்குத் தங்கை. குருவின் பெண்ணாகிய உன்னை மனதாலும் தீண்டேன். ஏழேழ் பிறவிக்கும் நீ எனக்குத் தங்கைதான் என்றான் அவன்.

சுமுகி அதனைப் பொறாது அவன் மீது கற்பழித்தான் எனத் தவறான பழிமூட்டி அரசனைக் கொண்டு அவனது கைகால்களைத் துண்டித் தாள்.

முடமாகி விட்ட சங்கசூடணன் தர்மதேவதையை நோக்கிப் புலம்பி னான். அவ்வளவில் பூமியைப் பிளந்துகொண்டு வெளிப்பட்ட ஆதி சேஷன், உன்னைத் துன்புறுத்திய சுமுகியை

மறுபிறப்பில் யான் துன் புறுத்துவேன் என்று ஆறுதல் கூறி மறைந்தான்.

அந்தச் சுமுகிதான் சூர்ப்பநகை யாகப் பிறந்தாள். சங்க சூடணன் விபீஷணனாகப் பிறந்தான். ஆதி சேஷ அவதாரமாகிய இலட்சுமணன் சூர்ப்பநகையை உறுப்பு அரிந்து இடர்ப்படுத்தினான்.

சூர்ப்பநகை முற்பிறப்பிலும் கொடியவள். விபீஷணனுக்குச் சகோதரியாக முன்வினையால் பிறந்தவள் என்ற இந்த உயர்ந்த உள்ளீட்டைப் புலப்படுத்தவே விபீஷண சோதரி என்று கூறியருளினார் அருணகிரி நாதர்.

வாரியார் வழங்கியுள்ள இந்தக் கதையில் நாம் காணும் சூர்ப்பநகை; இராமனிடம் மோகம் கொண்டு, இராமனில்லையேல் இலக்குமணன் என்று வெறி கொண்டலைந்தது மட்டுமல்ல; அவளது கடந்த ஜென்மத்தில் ஆனந்தகுரு என்பவரின் மகளாக இருந்து அவளின் ஆசைக்கு இணங்காத அரச குமாரன், தன் கற்புக்கே களங்கம் விளைவிக்கத் துணிந்தான் என்று பழியும் சுமத்தியவள். அவள்தான் அடுத்த பிறவியில் சூர்ப்பநகை! அவளுக்கென ஓர் ஆளன் வித்யுத் ஜுஂபா என்ற பெயருடையான் இருக்கும்போதே காம வெறி பிடித்து அலைந்தவள் - கடந்த கால வரலாறே அவளுக்கு அப்படி! அந்த அரச குமாரன் சங்கசூடணன்தான் மறு பிறவியில் விபீஷணனாகப் பிறந்தவன். இந்தக் கதையின் அடிப்படையில்தான் அருணகிரிநாதர் சூர்ப்பநகையை விபீஷண சோதரி என்று அடையாளம் காட்டுகிறாரே தவிர; அவள் நல்லவள் என்று குறிப்பிடுவதற்காக அல்ல என்று கிருபானந்த வாரியார் அவர்கள் அளிக்கிற விளக்கம்; ஒரு கிளைக் கதை இப்படியும் இருக்கிறது இராமாயணத்தில் என்ற புதிய தகவலைத் தருகிறது.

பொதுவாக இராமாயணத்தில் காணப்படும் பாத்திரப் படைப்புகள் - பண்டித நேரு கூறியவாறு ஆரிய திராவிடப் போராட்டத்தில் எழுந்த கதையான இராமாயணம் என்ற அடிப்படையில் பார்க்கும்போது; அனைத்தும் கற்பனைப் படைப்புகளேயாகும்.

அத்தகைய இராமாயணத்தில் திரு. வாரியார் அவர்களின் நூலில் காணப்படும் இந்தப் புதிய கிளைக்கதையின் வாயிலாக நாம் தெரிந்து கொள்ளக் கூடியது -

கொடியவன் ஒருவனின் கொடிய சகோதரியை நல்லவன் ஒருவனின் சகோதரி என்று கூறுவதால் அவள் நல்லவளாகி விட மாட்டாள் என்பதாகும்.

இதையேதான் அருணகிரி நாதரும், அவரைப் பின்பற்றி அடி களார் கிருபானந்தவாரியாரும் சுட்டிக்காட்டுகிறார்கள் எனலாம்.

அன்புள்ள,

மு.க.

24/10/2003

2981. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 1

தமிழுக்கு முதன்மையிடம்; தடைக்கல்; ஏன்? எதனால்?

உடன்பிறப்பே,

விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி, டிசம்பர் 1ஆம் தேதி மத்திய- மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் நாம் நடத்தவிருக்கின்ற மறியல் அறப்போருக்கான ஆதரவைத் திரட்டவும், அதற்கான விளக்கங்களை அளிக்கவும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற கழகப் பொதுக் கூட்டங்களில் விரிவான விளக்கங்களை அளிப்பதற்காகப் பயன்படும் என்ற எண்ணத்துடன், அந்தத் தீர்மானங்களைப் பற்றிய கருத்துக்களைப் பொழிப்புரை போல் நான் தொடர்ந்து எழுதும் கடிதங்கள் வாயிலாக எடுத்துரைக்க இருக்கிறேன். அந்த வரிசையில் இது முதல் கடிதம்.

விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்களில் தமிழை மத்திய ஆட்சி மொழியாக ஆக்குவது, செம்மொழியாக அறிவிப்பது என்பவை மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானங்கள் ஆகும்.

தமிழ் காக்கும் மொழிப் போராட்டத்தில் 1938 முதல், 1965 மொழிப் புரட்சி வரையில் திராவிட இயக்கத்தின் பங்கும், குறிப்பாக தி.மு. கழகத்தின் பங்கும் தியாகமும் நாடறிந்த ஒன்றாகும். இப்போது விழுப்புரம் தீர்மானங்களையொட்டி தமிழ் மொழிக்கு முதன்மையிடம் மத்திய அளவிலும், மாநிலத்திலும் போதுமான அளவுக்கு அமையாமைக்குத் தடைக்கல் எது? - என்ற பிரச்சினை பற்றி அறிந்து கொள்வதற்கு முன்பு, பாண்டிச்சேரியில் அண்மையில் அறிவிக்கப் பட்டுள்ள தமிழ் கட்டாயப் பாடம் என்ற அரசாணை குறித்து முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

புதுவை மாநிலத்தில் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை தமிழ் கட்டாயப் பாடம் என்று அறிவித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தச் செய்தியை அறிந்ததும் அதுபற்றிய முழு விவரமறிய

புதுவை மாநில தி.மு.கழக அமைப்பாளர் தம்பி ஆர்.வி. ஜானகிராமன், புதுவை சட்டமன்ற உறுப்பினர் தம்பி எஸ்.பி. சிவக்குமார் ஆகியோரிடம் அந்த அரசாணை யுடன் வருமாறு கூறியிருந்தேன். அந்த அரசாணை நகலையும், அறிமுகத் தமிழ் என்ற புத்தகத்தையும் வாங்கிவந்து தந்துள்ளார்கள்.

இதற்கு முன்பே புதுவை மாநிலத்தில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு பாடமாக பயிற்று விக்கப்படுகிறது. ஆனால் தமிழை முதல் மொழியாக எடுத்துக் கொள்ளாமல் வேறு மொழிகளை முதல் மொழியாக எடுத்துக் கொண்டு புதுவை, காரைக்கால் பகுதிகளில் பயிலும் மாணவர்களுக்கு இனிமேல் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயமாக கற்க வேண்டுமென்று புதுவை மாநில அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணையையும் திட்டத்தையும் அங்கேயுள்ள தி.மு.க. உட்பட பல கட்சிகளும் பாராட்டியிருக்கின்றன. தமிழை முதல் மொழியாக எடுத்துக் கொள்ளாமல், வேறு மொழிகளை முதல் மொழியாக எடுத்துக் கொண்டு அங்கே பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 8 ஆயிரம் பேர்தான் இருக்குமென்றும், அவர்களும் தமிழைப் படிக்க இந்த ஆணை உதவும் என்றும் கூறப்படு கிறது. புதுவை அரசின் ஆணையிலே தமிழை கற்பது என்பது கட்டாயம் என்ற போதிலும் மாணவர்களின் தேர்வுக்கு இது எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்று குறிப்பிட்டிருப்பது எந்த அளவிற்கு துணை புரியுமென்ற ஐயப்பாட்டினைத் தோற்றுவிக்காமல் இல்லை. இந்த நிலையிலே தமிழகத்தில் உள்ள மொழிக் கொள்கை என்ன?

இங்கே என்ன நடைமுறை பின்பற்றப் படுகின்றது? தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது என்ன செய்தது? தற்போது ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அ.தி.மு.க. அரசு என்ன செய்தது?

என்பதனை விளக்குவதற்காக சில கருத்துக்களை முன் வைத்திட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு 9-3-2002 அன்று தமிழக சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அரசின் சார்பில் ஆளுநரால் படிக்கப்பட்ட உரையில்,

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி களிலும் பாடத் திட்டங்களில் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின்மீது எந்த நடவடிக்கையும் அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் எடுக்கப்படாமலிருந்து 2003ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையில் பள்ளிகளில் அனைவரும் பயில ஏதுவாக 1 முதல் 5 வகுப்புகளில் அறிவியல் தமிழ் பாடம் கற்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஜெயலலிதா அரசின் இந்த அறிவிப்பு பரவலாக அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்பதைப் போலத் தோற்றமளித்தாலும், அந்த அரசாணையினைப் பெற்று படிக்கும்போது நமக்குச் சில சந்தேகங்கள் எழுகின்றன. அந்தச் சந்தேகங் களாவன. அரசாணையின் முதல் பாரா வருமாறு :- தமிழகத்தில் பள்ளிகளில் பின்பற்றப்படும் இரு மொழிக் கொள்கை கீழ்க்கண்டவாறு கடைப்பிடிக்கப் படுகிறது.

பகுதி அ : வட்டார மொழி அல்லது வட்டார மொழியிலிருந்து மாறுபடும் போது தாய்மொழி.

பகுதி ஆ: ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத பிறமொழி. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது 24-1-1968இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 105இல் உள்ள வார்த்தைகளைத் தான் அப்படியே குறிப்பிட்டு, அதே கொள்கைதான் தற்போதும் கடைப்பிடிக்கப்படுகிறது என்று ஜெயலலிதா அரசின் 21-4-2003 தேதியிட்ட அரசாணை தெரிவிக்கின்றது.

ஆனால் தி.மு.கழக ஆட்சி இருந்தபோது 27-12-1999 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 354ன்படி, 24-1-1968 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண். 105இல் உள்ள வட்டார மொழி அல்லது தாய்மொழி என்ற வார்த்தைகள் தமிழ் அல்லது தாய்மொழி என்று திருத்தப்பட்டது. இருமொழி கொள்கைக்கான அரசாணையில் தமிழ் என்ற வார்த்தை இடம் பெறவில்லை என்ற சில தமிழ்ச் சான்றோர்களின் மனக்குறை தி.மு.கழக ஆட்சியில் 1999இல் பிறப்பித்த இந்தத் திருத்தத்தின் வாயிலாக நீங்கியது. அதைத் தமிழ்ச் சான்றோர்கள் பாராட்டி இருள் நீங்கி விடி வெள்ளி முளைத்தது என்று கூறியது நினைவிற்கொள்ளத் தக்கது.

ஆனால் ஜெயலலிதா கடந்த ஏப்ரலில் பிறப்பித்த அரசாணையில் கழக ஆட்சியில் இருமொழி குறித்த அரசாணையில் வட்டார மொழி என்பதை தமிழ் மொழி என்று திருத்தியதைப் பற்றியே கவனத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டில் 68ஆம் ஆண்டு பிறப்பித்த ஆணை அப்படியே நடைமுறையில் இருப்பதைப் போலக் கருதிக் கொண்டு அரசாணை பிறப்பித்திருக்கிறார்களா என்பதுதான் நம்முடைய முதல் சந்தேகம்!

21-4-2003 அன்று அ.தி.மு.க. அரசு பிறப்பித்த அரசாணையின் பாரா 2 வருமாறு :- எந்த ஒரு குழந்தையும் தமிழ் மொழி கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாது என்பதை உணர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும், தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என முடிவெடுத்து, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி களின் பாடத் திட்டங்களிலும் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப் படுகிறது உறுதி செய்யப்படும் என 2002ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, 2003-2004ஆம் ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும், 1 - 5 வகுப்பு களில் பகுதி இல் கணிதம், அறிவியல், சமூகவியல் பாடங்களுடன், அறிவியல் தமிழ் (Scientific Tamil) என்ற பாடத்தைக் கற்பிக்க அரசு ஆணையிடுகிறது. இப்பாடம் 2003-2004ல் முதலாம் வகுப்பில், 2004-2005ல் இரண்டாம் வகுப்பில், 2005-2006ல் மூன்றாம் வகுப்பில், 2006-2007ல் நான்காம் வகுப்பில் மற்றும் 2007-2008ல் ஐந்தாம் வகுப்பில் என்று படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஜெயலலிதா அரசு ஏப்ரல் 2003இல் பிறப்பித்த அரசாணையில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை அறிவியல் தமிழ் என்ற பாடத்தைக் கற்பிக்க ஆணையிடப் படுகிறது என்று தெரிவித்த போதிலும், 2003-2004ஆம் கல்வியாண்டில் முதலாம் வகுப்பிற்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும், அதற்கடுத்த வகுப்புகளுக்கு படிப்படியாக ஒவ்வொரு ஆண்டாக நடைமுறைப்படுத்தப்படும் என்றுதான் அரசாணை தெரிவிக்கின்றது. எனவே இந்தக் கல்வியாண்டில் முதல் வகுப்பிற்கு மட்டுமே இந்த அரசாணை செல்லும்.

அதுவும் பள்ளிகள் திறந்து பல மாதங்கள் ஆகியும் இதுநாள் வரை 1ஆம் வகுப்புக்கு அறிவியல் தமிழ் தொடங்கப்பட்டதாகவோ, அதற்கான புத்தகங்கள் வழங்கப்பட்டதாகவோ தெரியவில்லை.

அது மாத்திரமல்ல; வேடிக்கை என்னவென்றால் இந்த ஆண்டு விடுதலை நாளில் தலைமைச் செயலகக் கோட்டையிலே கொடியேற்றி முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரையிலே என்ன சொன்னார் தெரியுமா?

2003-2004 கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும், 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை படிப்படியாக அறிவியல் தமிழ் என்னும் பாடத்தைக் கற்பிக்க ஏற்கனவே எனது அரசு, ஆணை பிறப்பித்துள்ளது என்று கூறிவிட்டு, ஆனால் அதற்கு மாறாக ஜெயலலிதாவே அதே நிகழ்ச்சியில் இந்த ஆண்டிலிருந்தே அதாவது 2003-2004லேயே தமிழ்நாட்டில் உள்ள அனைத்துவகைப் பள்ளிகளிலும், எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் அறிவியல் தமிழ் என்னும் பாடத்தைக் கற்பிக்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை சுதந்திர திருநாளில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் படிப்படியாகச் செய்யப்படும் என்று முதலில் கூறி, அரசாணையையும் பிறப்பித்து விட்டு, அதே முதலமைச்சர் இந்தக் கல்வி ஆண்டிலேயே எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் அறிவியல் தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்று கூறியது, வானத்தை வில்லாக வளைக்கச் சொல்லியிருக்கிறேன் என்ற உத்தரவுக்கு உவமையாக விளங்கக் கூடியதல்லவா?

ஜெயலலிதா அரசு ஏப்ரலில் பிறப்பித்த இந்த அரசாணையின் 3வது பாராவில் மேலும் ஒரு பாடம் சேர்ப்பதால் இளம் சிறார்களுக்கு பாடச்சுமை கூடுதலாக்கப்படக் கூடாது என்பதற்காகவும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் அதனைக் கற்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை தர ஒரு குழு அமைக்கப்படுகிறது என்று அறிவித்து, அந்தக் குழுவின் தலைவரையும், உறுப்பினர்கள் பெயரையும் குறிப்பிட்டுள்ளது. குழுவின் தலைவராக முனைவர் பொன்னவைக்கோ, துணை வேந்தர், தமிழ் இணையப் பல்கலைக் கழகம், சென்னை என்று அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நமக்குத் தெரிந்தவரையில் திரு. பொன்னவைக்கோ அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இயக்குநராகத்தான் இருந்தாரே தவிர துணைவேந்தராக

இதுவரை நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தி.மு.கழக ஆட்சி இருந்த காலத்திலிருந்து தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக யாரையும் நியமிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.க. ஆட்சியில்கூட முனைவர் பொன்னவைக்கோ இயக்குநராகப் பணியாற்றினாரே அல்லாமல், துணைவேந்தராக நியமிக்கப்பட்டதாக அவரே கனவுகூட கண்டிருக்க மாட்டார். இந்த ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டதின் அழகு இது.

சரி, அது போகட்டும். அரசாணையில் 2003-2004 ஆம் ஆண்டிலேயே அறிவியல் தமிழ்ப் பாடம் அமலுக்குவர ஏதுவாக அறிக்கையினை அளிக்குமென்று குறிப்பிடப்பட்டுள்ளதே, ஆனால் பள்ளிகள் திறக்கப்பட்டு பல மாதங்கள் கழிந்த பிறகும் அதற்கான எந்த முயற்சியும் முளை விடக்கூட இல்லையே? அரசாணையின் கதி இதுவென்றால், தமிழகச் சட்டப் பேரவையிலே கல்வி அமைச்சர் சொன்ன பதிலின் லட்சணம் என்ன என்பதையும், மத்திய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிக்கவும், மத்திய ஆட்சி மொழியாக்கிடவும் வலியுறுத்தி நாம் இதுவரை எடுத்த தொடர் முயற்சிகள் பற்றியும் நாளைய கடிதத்தில் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-10-2003

2982. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 2

தடைக்கற்களைத் தாண்டி தமிழ் வளர்ப்போம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு பள்ளிகளில் தமிழ் இடம் பெறுகிறது என்பதைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு எத்தனை விதமான பள்ளிகள் நடைபெறுகின்றன என்பதை விளக்கிடுகிறேன்.

- மாநில அரசுப் பாடத்திட்டப் பள்ளிகள்
- மழலையர் பள்ளிகள்
- மெட்ரிகுலேஷன் பள்ளிகள்
- சி.பி.எஸ்.சி., என்று கூறப்படும் மத்திய அரசுப் பாடத் திட்டப் பள்ளிகள்
- ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள்
- ஐ.எஸ்.சி.ஈ., (International School Certificate Examination)
- ஓ.எஸ்.எல்.சி., (Oriental School Leaving Certificate)

இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான பாடத் திட்ட முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

மாநில அரசு பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பள்ளிகள் என்று பார்க்குமிடத்து,

- அரசுப் பள்ளிகள்;
- அரசிடம் நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகள்;
- அரசிடம் நிதி உதவி பெறாத ஆனால் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்

இந்த மூன்று வகைப்பட்ட பள்ளிகளிலேதான் தமிழகத்திலே பெரும்பாலான மாணவர்கள் மாநில அரசின் பாடத்திட்ட முறையிலே கல்வி பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளிகளில் தொடக்கப் பள்ளிகள் ஐந்தாம் வகுப்பு வரையிலும், நடுநிலைப்

பள்ளிகள் எட்டாம் வகுப்பு வரையிலும், உயர்நிலைப் பள்ளிகள் பத்தாம் வகுப்பு வரையிலும், மேல்நிலைப் பள்ளிகள் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் மாணவர்கள் பயிலுகிறார்கள்.

தனியாரால் நடத்தப்படும் Nursery and Primary Schoolகளைப் பொறுத்தவரை அங்கே அனைத்தும் ஆங்கிலத்திலேதான் நடத்தப்படுகின்றன.

அதுபோலவே தனியாரால் நடத்தப்படும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் ஆங்கிலத்திலே மட்டும் அனைத்து பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளைப் பொறுத்தவரை அங்கேயும் அனைத்துமே ஆங்கிலம்தான்.

1973இல் தமிழ்நாட்டில் 33 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மட்டுமே இருந்தன. தற்போது 2003இல் மொத்தம் 3450 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உள்ளன. மக்களுக்கு ஆங்கில மொழியின்பால் ஏற்பட்ட மோகம் காரணமாகவும், வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற தவறான கணிப்பின் அடிப்படையிலும் இப்பள்ளி களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை

ஆர்வமாகச் சேர்த்தனர். 2002-2003ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரப்படி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலுவோர் 14 லட்சத்து 51 ஆயிரம்; மத்திய அரசுப் பள்ளிகளில் பயிலுவோர் ஒரு லட்சத்து 16 ஆயிரம்; ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலுவோர் 54 ஆயிரம்.

அடுத்து, துவக்கப் பள்ளி முதல் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திலும், அது அரசினால் நடத்தப்பட்டாலும், உதவி பெற்று தனியாரால் நடத்தப்பட்டாலும், உதவி பெறாமலே தனியாரால் நடத்தப்பட்டாலும் அங்கெல்லாம் பயிற்று மொழி தமிழ் அல்லது தாய்மொழி. இதுதான் இன்றைய நிலை.

2002-2003ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரப்படி தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 25 லட்சத்து 63 ஆயிரம் ஆகும். இதிலே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 9 இலட்சத்து 42 ஆயிரமாகும். ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்து

21 ஆயிரம். அதாவது 125 லட்சம் மாணவர்களில் 16 லட்சம் மாணவர்கள்தான் தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்களும் தமிழறிவுப் பெற்றவர்களாக விளங்கிட வேண்டும் என்பதுதான் தமிழ் உணர்வாளர்களின் விருப்பம்.

2003-2004 ஆம் ஆண்டிற்கான ஜெயலலிதா ஆட்சியின் கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதம் சட்டப் பேரவையில் 4-4-2003 அன்று நடைபெற்றது. அப்போது காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை சார்பில் பேசிய திரு. வள்ளல்பெருமான்,

> "அரசு ஆணை 56இன் மூலமாக தமிழ் மீடியம் வகுப்புகளை மூடவும், ஆங்கில மீடியத்திற்கு இணையாக தமிழ் மீடியம் கோரிக்கைகள் ஏதாவது வந்தால் அதைத் தடுக்கவும் வழி வகுத்திருக்கிறார்கள்"

என்ற ஒரு புகாரை அரசாங்கத்தின் மீது சுமத்தியபோது, பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து; எந்த ஆண்டு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று வள்ளல்பெருமானிடம் கேட்டார். ஆனால் அதற்கு வள்ளல்பெருமான் பதில் கூறுவதற்கு முன்பாக, கல்வி அமைச்சர் திரு. செம்மலை குறுக்கிட்டு,

> "மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த அரசாணை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே போடப்பட்டது. இதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு தமிழ் மீது எவ்வளவு அக்கறை இருந்தது என்பது புலனாகிறது"

என்று ஆளுங்கட்சியினரின் பலத்த கரவொலிக்கிடையே பதிலளித்தார்.

சட்டப் பேரவையிலே அமைச்சர் தெரிவித்த இந்தப் பதில் சரிதானா? அவையில் தவறான தகவல் தந்தால் அது உரிமைப் பிரச்சினைக்கு உரிய ஒன்றாகும்; ஜனநாயக முறைப்படி நடக்கும் பேரவையில்! அமைச்சர் அவையிலே தெரிவித்த பதில் உண்மைதானா? உண்மை இதோ ஒளி விடுகிறது!

வள்ளல்பெருமான் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி சுட்டிக்காட்டிய அரசாணை எண். 56 என்பது, 12-9-2002 அன்று ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியிலே பிறப்பிக்கப்பட்டதாகும். அதை அப்படியே புரட்டி, தி.மு.க. ஆட்சியிலேதான் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டதாக பேரவையிலே கல்வி அமைச்சரே கூறினார்.

அந்த அரசாணையிலே மேலும் கூறப்பட்டிருப்பது என்னவென்று தெரியுமா?

"சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே ஏற்கனவே தமிழ் வழி கல்விப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருப்பதால், அவற்றைப் படிப்படியாக மூடுவதற்கான நடவடிக்கை களை மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இயக்குநர் எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் அறிவுறுத்துகிறது. எதிர்காலத்திலும் இணையாக தமிழ் வழிக் கல்விப் பிரிவுகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே தொடங்க வேண்டுமென்ற வேண்டுகோள் வந்தால் அவற்றை மறுத்திட வேண்டும்"

உடன்பிறப்பே; பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது என்பது அ.தி.மு.க. அரசின் மேற்கண்ட ஆணையின் மூலமாக அம்பலமாகிறது அல்லவா?

ஆனால் இதற்கு மாறாக, தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்வழிக் கல்விக்காக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை தெளிவாக்குகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் 28-8-1997 அன்று தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுப்பிய

கடிதத்தில், மாணவர்கள் தங்கள் இளம் வயதில் தாய்மொழியிலே படிப்பதன் மூலம் எந்த அளவிற்குப் பயன்பெறுவார்கள் என்பதை பள்ளிகளின் நிர்வாகத்திற்கு அறிவுறுத்தும்படி பணிக்கப்பட்டார்கள்.

27-11-1998இல் அரசாணை எண். 421இன்படி அனைத்து நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக அறிமுகப்படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அதனை அமல் படுத்துவோருக்கு பதிவுக் கட்டணம் போன்றவற்றில் 150 சதவிகித சலுகையும் அறிவிக்கப்பட்டது.

13-1-1999இல் அரசாணை எண். 6இன்படி தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு நடத்திடும் நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் கணக்கு, விஞ்ஞானம், சமூகவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களை தமிழிலே நடத்தும் பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் புதுப்பிக்கப்படும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த அரசாணையை எதிர்த்து பல சங்கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையில் இருக்கும்போதே; 3-5-1999இல் அரசாணை எண். 117இன்படி கழக அரசு நீதிபதி எஸ். மோகன் அவர்கள் தலைமையில் நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை, நர்சரி வகுப்பு முதற்கொண்டு உயர்நிலைப் படிப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுவரவேண்டு மென்று தமிழ்ச் சான்றோர்கள் கொடுத்த கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக நியமித்தது.

உயர்நீதி மன்றம் 7-6-1999 அன்று அளித்த தீர்ப்பில் அரசாணை செல்லும் என்று தெரிவித்ததோடு, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு அந்த ஆணை பொருந்தாது என்றும் தீர்ப்பளித்தது.

நீதிபதி எஸ். மோகன் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 19-11-1999 அன்று அரசாணை எண். 324 பிறப்பிக்கப்பட்டது. அதன்படி

(1) அரசின் பயிற்று மொழிக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள் செல்லும் என நீதிமன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால், அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகள் பற்றிய ஆணைகள் தொடர்ந்து அரசாணைகள் மூலமே அறிவிக்கப்படும்.

(2) அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன், அரசுப் பள்ளிகள், உதவி பெறும், உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்) முதல் மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(3) மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசுப் பள்ளிகளில் பயிற்று மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(4) 2000-2001 முதல் மூன்றாண்டுக் காலத்திற்குள் தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழி என்பது முடிவடைய வேண்டும்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 27-12-1999 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 354இன்படி, 24-1-1968 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 105இல் உள்ள வட்டார மொழி அல்லது தாய்மொழி என்ற வார்த்தைகள் தமிழ் அல்லது தாய்மொழி என்று திருத்தப்பட்டது.

அதே 27-12-1999 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 355இன்படி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு

முதல் 5ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழியாக இருக்கும். 6ஆம் வகுப்பு முதல்; தமிழ், தாய்மொழி அல்லது ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும்.

27-1-2000 அன்று அரசாங்கம்; 7-6-1999 அன்று சென்னை உயர்நீதி மன்றம்; தமிழை தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு ஆதரவாக பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில்; 13-1-1999 அன்று வெளியிட்ட அரசாணைக்கு ஒரு திருத்தம் வெளியிட்டது. அதிலே பயிற்று மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி என்று இருக்கலாம் என்று கூறியது.

நீதிபதி மோகன் அவர்களின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்கம் 19-11-1999ஆம் தேதி பிறப்பித்த அரசாணை 324ஐ எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் பல்வேறு சங்கத்தினர் ரிட் மனுக்களை முதல் பெஞ்சில் தாக்கல் செய்தார்கள். உயர்நீதிமன்றத்தின் முழு பெஞ்ச் ரிட் மனுக்களை ஏற்றுக் கொண்டு அரசாணையை ரத்து செய்தது. தீர்ப்பில் கல்வி கற்பது என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்று என்றும், பயிற்று மொழியைத் தேர்ந்தெடுப்பதும் அதிலே அடங்கும் என்றும், பிள்ளைகளுக்காக அதனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோர்களுக்கு உண்டு என்றும் நீதிபதிகள் தெரிவித்தார்கள்.

உயர்நீதிமன்ற முழு பெஞ்சின் தீர்ப்புக்கு எதிராக தி.மு.கழக ஆட்சியில் தமிழக அரசின் சார்பில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அங்கே விசாரணையிலே இருந்தபோதே; பொதுத் தேர்தலில் இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனவே இந்த வழக்கில் ஒரு நல்ல தீர்ப்பினைப் பெறுவதற்கு தற்போதுள்ள அ.தி.மு.க. அரசு விரைந்து செயல்படவேண்டியது முக்கியமான ஒன்றாகும் என்பதுடன், தடைக்கற்களைத் தாண்டி தமிழ் வளர்ப்பது நமது தலையாய கடமையாகும் என நினைவூட்டுகிறேன். டிசம்பர் 1ஆம் தேதி மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் நாம் நடத்தவிருக்கும் மறியல் அறப்போர் குறித்த விளக்கப் பொதுக் கூட்டங்களில் எடுத்து வைக்க வேண்டிய கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

அன்புள்ள,

மு.க.

27-10-2003

2983. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 3

மத்திய ஆட்சி மொழி - செம்மொழி- மாறன் தீர்மானம்!

உடன்பிறப்பே,

சிலவற்றை திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி எழுதிக்கொண்டோ, பேசிக்கொண்டோ இருந்தால்தான் அவற்றுக்கான மக்கள் எழுச்சியை உருவாக்க முடியும் என்பதுடன்; அவற்றைக் குறித்து மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகிற அரசினரின் கவனத்தையும் திருப்பி; வெற்றிகாண முடியும் என்பதால்; மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழையும் ஆக்கவேண்டும் என்றும், தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை நீண்ட காலமாக வலியுறுத்திக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

தி.மு. கழகத்தின் மாநாடுகளில் தீர்மான வடிவில் - நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் எடுத்துக் கூறியுள்ள நிலையில் - இந்தியப் பிரதமருக்கு தி.மு.க. ஆட்சி வாயிலாகவும் - கழகச் சார்பிலும் கடிதங்கள் மூலமாக - தொடர்ந்து வற்புறுத்தி வருகிற இந்தக் கோரிக்கை குறித்து விழுப்புரம் மாநாட்டில்தான் என்றல்ல; 1996ஆம் ஆண்டு ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில் திருச்சியில் என்னுடைய தலைமையில் நடைபெற்ற மாநில மாநாட்டில், நான் நிறைவுரை ஆற்றுவதற்கு முன்பு தம்பி முரசொலி மாறன் சிறப்புத் தீர்மானம் ஒன்றை முன்மொழிய, அந்தத் தீர்மானத் தினை கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் வழி மொழிந்தார். அந்தச் சிறப்புத் தீர்மானம் வருமாறு :-

இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம்வரை மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கும்; பிறமொழி மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்னும் நேருவின் வாக்குறுதி தொடர்ந்து மீறப்படுகிறது. மத்திய அரசின் மக்கள் தொடர்பு (Mass Media) துறைகளான தொலைக்காட்சி - வானொலி ஆகியவற்றில் இந்தி

ஆதிக்கம் வளர்க்கப்படுகிறது. பிற மொழி மாநிலங்களில் உள்ள மைய அரசு அலுவலகங்களில் இந்தித் திணிப்பு தொடர்கிறது. இந்நிலையில் அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளும் (all the offcial languages of the States) மைய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுவது ஒன்றுதான் இதற்குத் தீர்வு என்று தி.மு. கழகம் கருதுகிறது. அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குவது உடனடியாக இயலாது என்று மைய அரசு கருதுமாயின் முதல் கட்டமாக இந்தியுடன் தொடர்பற்ற திராவிடக் குடும்ப மொழிகளில் ஒன்றான, இலக்கியப் பண்பாட்டு வளம் நிறைந்த தமிழ் மொழியையும் உடனடி யாக இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்க வேண்டும் என்றும்; அதற்கேற்ப அரசமைப்புச் சட்டம், ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

1996ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற அந்த மாநாடு வரை, தி.மு. கழகம் என்ன சொல்லி வந்தது என்றால், அரசியல் சட்டத்தின் 8வது அட்டவணை யில் இருக்கின்ற மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள் என்பதாகும். அதனை மாற்றி திருச்சி மாநில மாநாட்டில் மாநிலங்களின் ஆட்சி மொழிகளை இந்தியாவின் ஆட்சி மொழி களாக ஆக்குங்கள் என்று கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றினோம்.

சின்னஞ்சிறிய சுவிட்சர்லாந்தில் 3 மொழிகளும், பெல்ஜியம் நாட்டிலே 2 மொழிகளும் ஆட்சி மொழி களாக இருக்கின்றன. கனடாவில் 10 மாநிலங்கள். அங்கே பிரெஞ்சு மொழி பேசப்படுவது கியூபெக் என்ற ஒரு மாநிலத்தில்தான். அங்கே ஆட்சிமொழிகள் எது என்று கேட்டால் ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் ஆகும். இலங்கையிலே தமிழ் ஆட்சி மொழி. சிங்கப்பூரில் தமிழ் ஓர் ஆட்சி மொழி. மலேசியாவில் தமிழ் ஆட்சி மொழி.

திருச்சி மாநில மாநாட்டுக்கு முன்பே 1965ஆம் ஆண்டு மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா அவர்கள் மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்பது பற்றிப் பேசியது, நம் நெஞ்சில் என்றும் அழியாத ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இதோ மாநிலங்களவையில் அண்ணா முழங்கி யதைக் கேட்போம்:-

மிகத் தொன்மையான மொழியான தமிழை தாய் மொழியாக நான் பெற்றிருக்கிறேன் என்பதை நான் மறந்து விட முடியாது.

எனது முன்னோர்கள் பேசிய அந்த மொழி - எமது கவிஞர்கள் அரும்பெரும் அறிவுரைகளையும், தத்துவங்களையும் யாத்துக் கொடுத்த அந்த மொழி - அள்ள, அள்ளக் குறையாத அறிவுக் களஞ்சியங்களும், காவியங்களும், இலக்கியங்களும் நிறைந்த அந்த மொழி - அது தான் எமது தமிழ் மொழி - அம்மொழி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறும்வரை நான் ஒரு போதும் திருப்தியடைய மாட்டேன். அந்தி இழைக்கப்படாமல் இருப்பதற்காக என்னுடைய மொழியாகிய தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்குக. அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும். உயர்தனிச் செம்மொழி யாகிய தமிழ் என் தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது. அந்தத் தமிழ் மொழி மற்ற எந்த மொழிக்கும் தாழாத வகையில் ஆட்சி மொழி என்ற தகுதி தரப்படும்வரை நான் அமைதி பெற மாட்டேன்.

இவ்வாறு அண்ணா அவர்கள் 1965ஆம் ஆண்டு மாநிலங்கள் அவையில் பேசியதையும், 1996இல் திருச்சி மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் பின்பற்றிக் கழக ஆட்சியில் நான் முதல்வராக இருந்தபோது அதனை வலியுறுத்தி; பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு 3-3-2000 அன்று எழுதிய கடிதத்தில்,

தமிழையும், ஏனைய மொழிகளையும், இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் ஆட்சி மொழிகளாக ஆக்குவதற்கு ஏற்ற வகையில், அரசியல் சட்டத்தில் மத்திய அரசு இன்னும் திருத்தம் செய்ய வில்லை என்ற மனக்குறை தமிழக அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் உண்டு. தமிழக மக்களின் இந்த உண்மையான உணர்வுகளை நீங்கள் நிச்சயம் புரிந்து கொள்வீர்கள். எனவே நீண்ட கால கோரிக்கையை நிறை வேற்றக் கூடிய வகையில் இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய் வதற்குத் தேவையான நடவடிக்கை களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுகிறேன்

என்று கேட்டுக் கொண்டேன்.

கழகத்தின் இந்த முக்கியமான மொழிக் கோரிக் கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானம். அதே தீர்மானத்தில் தமிழ் மொழியை மத்திய அரசு செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையும் பல

ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் சார்பாக தி.மு. கழகத்தின் வாயிலாக கூறப்பட்டு வருகின்றது.

ஒரு மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட எத்தனை தகுதிப்பாடு தேவை என்பது குறித்தும், அவை அத்தனையும் பொருந்திய மொழி தமிழ் என்பது குறித்தும், மாநாட்டிலேயே நான் தெளிவாக விளக்கி உரையாற்றியிருக்கிறேன். உலகத்திலே உள்ள முக்கியமான மொழிகள் என்று எடுத்துக் கொண்டால் சுமார் 600 மொழிகள் இருக்கின்றன. அதிலே இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் சுமார் 300. இதிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறு. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹிப்ரூ, கிரீக். இதிலே லத்தீனும், ஹிப்ரூவும் செத்துப்போன மொழிகள். இஸ்ரேல் அரசாங்கம் ஹிப்ரூ வுக்கு உயிரூட்டும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. கிரீக் மொழி தற்போது புது வாழ்வு பெற்று வருகிறது.சமஸ்கிருதத்துக்கு என்றுமே பேச்சு வழக்கு இருந்ததில்லை, எழுத்து வழக்கு மட்டுமே. தி.மு.கழக ஆட்சியில் இதுகுறித்து கருத்து அறிவிக்க திருவாளர்கள் அகத்தியலிங்கம், வ.செ. குழந்தைசாமி, பொற்கோ, ஜான் சாமுவேல், மணவை முஸ்தபா ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் கருத்துரையைப் பெற்று அது மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டது. மத்திய அரசு அந்தக் கருத்துரையை மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திற்கு அனுப்பியது. அந்த நடுவண் நிறுவனம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன் அந்தக் கருத்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியது. 1998இல் சென்னைப் பல்கலைக் கழகமும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும், கழக ஆட்சிக் காலத்தில், தமிழ், செவ்வியல் மொழி என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். இன்னும் சொல்லப் போனால் 1918ஆம் ஆண்டில் சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய மாநாட்டிலேயே தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரந்தை தமிழ்ச் சங்கம், 1919லும், 1920லும் இதேபோன்ற தீர் மானங்களை நிறைவேற்றியது.

இந்த ஆண்டு ஏப்ரல் 8ஆம் நாளன்று தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற

உறுப்பினர்கள் பிரதமர் வாஜ்பய் அவர்களைச் சந்தித்து தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்று கோரி மனு கொடுத்தனர்.

நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும், எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோதும் இந்தக் கோரிக்கைக்காக பிரதமருக்கு பல கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்.

தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர்கள், புலவர் பெருமக்கள் டெல்லியில் இந்த ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் நாடாளுமன்றம் முன்பாக தமிழ் மொழியை செவ்வியல் மொழியாக அறிவிக்கக் கோரி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். டெல்லியில் நடந்த அந்த உண்ணா விரதத்தை தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ளன. நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் திங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப் பட்டபோது பேசிய மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு, இந்தக் கோரிக்கை குறித்து வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

தமிழ் செவ்வியல் மொழியாக ஆக்கப்படுவதால் தமிழகத்திற்கு என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதையும் விளக்கிட விரும்புகிறேன்.

மத்திய அரசு தமிழை செம்மொழி என்று அறிவித்தால் உடனடியாக இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு அதனை ஏற்கும். அதன்பின் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறை தனித் துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழக கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும்.

இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு தமிழை செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும்.

தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் உலக அளவில் தன்மதிப்பு உயரும்.

பன்னாட்டு மொழிக் கலைக் களஞ் சியங்களில் - தமிழ் இலக்கியங்கள், கட்டுரைகள், வரலாறு, பண்பாட்டுக் கருத்துகள் இடம் பெறும்.

பல்கலைக்கழகங்களில் தற்போது தமிழ் மொழி கீழ்த்திசை மொழி என்று கருதப்படுகிறது. இந்நிலை மாறி இந்தியப் பல்கலைக் கழகங்களிலும், உலகப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழிக் குத் தனி இருக்கை நிறுவப்பெறும். அத்துறைகள் தனித்தன்மையுடன் செயற்பட வாய்ப்பு ஏற்படும்.

சமஸ்கிருதத்திற்கு இந்திய அரசு, நேரடியாக 40 கோடி ரூபாயும், அரசு சார்பு நிறுவனங்கள் வாயிலாக 100 கோடி ரூபாயும் ஒதுக்கி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவி வருவது போல் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் பரந்து விரிந்து கிடக்கும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையப்படுத்தியே ஆராயப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் மொழியை மையப்படுத்தி உண்மையான வரலாற்று பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேக மூட்டும் வகையில் மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழி களில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும். எனவே மொழிப் பிரச்சினையிலே உள்ள பல்வேறு குறிப்புகளை இந்தக் கடிதங்களில் விரிவாக விளக்கி யிருக்கிறேன். டிசம்பர் 1ந்தேதி மத்திய- மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் அறப்போர் எதற்காக என்பதை பொதுக்கூட்டங்களில் விளக்கும் கழகச் சொற்பொழிவாளர்கள் இந்தக் குறிப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

முக்கிய குறிப்பு :-

மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ கழக இளைஞர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி ஆகிய அணிகளின் அமைப்பு நிர்வாகிகள் கொண்ட கருத்தரங்குகளை கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர்கள் முன்னின்று நடத்துவதும் அவற்றில் இயன்ற அளவு கழகச் சொற்பொழி வாளர்கள் கலந்துகொள்வதும் பயனு டையதாக இருக்கும். மொழிப்பிரச்சினை யில் முழுமையான விபரங்களைப் பெற்றிடவும் உதவும்.

அன்புள்ள,

மு.க.

28-10-2003

2984. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 4

நடப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும்!

உடன்பிறப்பே,

டிசம்பர் 1ஆம் நாள் மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் தி.மு.க. நடத்த இருக்கின்ற மறியல் அறப்போராட்டத்திற்குக் காரணமாக அமைகிற தீர்மானங்களில் ஒன்று காவிரிப் பிரச்சினை குறித்ததாகும்.

காவிரிப் பிரச்சினைக்கு இன்றைக்கு வயது 35. 1968இல் அண்ணா முதல்வராக இருந்தபோது இந்தப் பிரச்சினைக்காக தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தை, அங்கும் இங்கும் மத்திய மாநில ஆட்சிகள் மாறி மாறி வந்த போதிலும் இன்னும் முற்றாக முடிந்தபாடில்லை.

கர்நாடக அரசு அங்குள்ள எல்லா எதிர்க் கட்சிகளையும் அரவணைத்து ஆதரவு பெற்று - அந்தக் கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் மதிக்கக் கற்றுக் கொண்டு; ஒரே குரலில் அந்தப் பிரச்சினையில் ஒற்றுமையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்க; இங்கே மட்டும் ஜெயலலிதா எதிர்க் கட்சியில் இருக்கும்போது ஏட்டிக்குப் போட்டியாக நடந்துகொண்டும் - ஆட்சியில் இருக்கும்போது ஏனோதானோவென்று செயல்பட்டும்; காவிரிப் பிரச்சினையில் பெருங் குழப்பத்தையே உருவாக்கிக் கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சிகளை, குறிப்பாகத் தி.மு.கழகத்தை பொறுப்பற்ற முறையில் பொல்லாங்கு கூறி குற்றம் சாட்டுவதே; ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் நடத்தும் கைங்கர்யமாக இருந்து வருகிறது.

நேற்றையதினம் நடந்த அரசியல் (?) அரசு விழா ஒன்றில்கூட இவர்கள் ஆட்சி நடத்துவார்கள், எதிர்க் கட்சிக்காரர்கள் சென்று காவிரித் தண்ணீரைக் கொண்டு வர வேண்டுமா? என்பது கருணாநிதியின் கேள்வி. அப்படியானால் இவரிடம் ஆட்சிப் பொறுப்பை கொடுத்தால்தான் தண்ணீரைக் கொண்டு வருவாரா?

இல்லையென்றால் அதைப் பற்றிப் பேசக் கூட மாட்டார் என்று இந்த அம்மையார் நஞ்சை குலுங்கி அழும் தஞ்சையில் பேசியிருக்கிறார்.

சென்னைக்கு தம்பி முரசொலி மாறன் உடல்நிலை விசாரிக்க மருத்துவமனைக்கு வந்த பிரதமர் வாஜ்பயிடம் நான் முக்கியமாக வைத்த கோரிக் கையே காவேரி ஆணையத்தை உடனே கூட்டுங்கள் என்பதுதான். அந்தக் கோரிக்கையை நான் வைத்த போது; பிரதமரைச் சந்திப்பதைப் புறக்கணித்து குளுகுளு ஊட்டிக்குப் போயிருந்த ஜெயலலிதா வுக்கு; இப்போது தஞ்சையில் போய் இப்படிப் பேச எந்தத் தகுதியும் கிடையாது. இதுபோன்ற முக்கிய பிரச்சினைகள், பொதுப் பிரச்சினைகள் என்பதும் ஆளுங்கட்சிதான் முன் நின்று முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்பதும் ஆட்சி நிர்வாகத்தின் அரிச்சுவடி படித்தவர்கள்கூட அறிந்த உண்மை யாகும்.

ஆனால்; ஆடத் தெரியாதவர்கள் மேடையைக் குறை சொல்வது போல ஆட்சி செய்யத் தெரியாத ஜெயலலிதா அடுத்துள்ள மாநிலங்களுடன் கடைப் பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளைக் கூட அறிந்து கொள்ளாமல்; ஆணவம் கொண்டு அலைவதால்; வளமார் தஞ்சைகூட இன்று வரட்சியின் பிடியில் சிக்கியது என்பதை தனது வாய்ஜாலத்தினால் மறைக்கப் பார்க்கிறார். அதுதான் அவரது நஞ்சுமிழும் தஞ்சைப் பேச்சாகும்.

எதிர்க் கட்சியில் தி.மு.க. இருந்தாலும்; பிரதமரிடம் காவேரி ஆணையத்தைக் கூட்டுக என்று நான் கேட்ட பிறகுதான்; ஊட்டியிலிருந்த முதலமைச் சருக்கு தன் டூட்டி அது என்று புரிகிறது. பிறகு அவரும் பிரதமருக்கு அங்கிருந்து ஒப்புக்குச் சப்பாணியாக ஒரு கடிதம் எழுதுகிறார்; காவேரி ஆணையத்தைக் கூட்டுக என்று!

எதிர்க்கட்சிக்குள்ள அக்கறை ஆளுங்கட்சிக்குத் தாமதமாக வந்ததை சுட்டிக் காட்டினால்; அது ஒரு குறையா? குற்றமா? இவருக்கு ஊட்டியில் டூட்டி! சென்னைக்கு வந்த பிரதமரைச் சந்திக்காமல்கூட அங்கே ஓடி விடுவார்; ஆணையத்தைக் கூட்டுக என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன. அதை நான் சொன்னால் அதற்கு இவரது கேலி கிண்டலுக்கு ஒன்றும் குறைவில்லை.

பலமுறை பேசி பயனளிக்காத காரணத்தால், இப்பிரச்சினைக்காக நடுவர் மன்றம் ஒன்றை மத்திய அரசு

அமைத்திட வேண்டுமென்று முதல் கடிதம் எழுதப்பட்டதும், மத்திய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையிலே முதன் முதலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், 1989இல் வி.பி. சிங் பிரதமராக இருந்த போது நடுவர் மன்றம் கோரி மீண்டும் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதும் கழக ஆட்சியிலேதான்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நடுவர் மன்றம் குறித்து மத்திய அரசின் கருத்தை நீதிமன்றம் கேட்டது. அது குறித்து பிரதமர் வி.பி. சிங் அவர்கள் தமிழக அரசின் கருத்தைக் கேட்டார். அப்போது பேச்சுவார்த்தை பயனில்லை, எனவே நடுவர் மன்றம்தான் தேவை என்று நாம் தெரிவித்த கருத்தை, பிரதமரும் ஏற்று நீதி மன்றத்திற்கு அதனைத் தெரிவித்த காரணத்தால் தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

நடுவர் மன்றத்தில் இடைக் காலத் தீர்ப்பு ஒன்றினை அளித்திட வேண்டுமென்று கோரிக்கை வைத்ததும் கழக ஆட்சியில்தான்.

இடைக்காலத் தீர்ப்பு வழங்கிட தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் தெரிவித்த போது, கழக ஆட்சியில் உச்ச நீதிமன்றத்தை அணுகி, இடைக்காலத் தீர்ப்பினை வழங்கலாம் என்று அனுமதியைப் பெற்றுத் தந்ததும் நாம்தான்.

அந்தத் தீர்ப்புக்குப் பிறகு ஐந்தாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த ஜெயலலிதாவினால் அதன் பரிந்துரைகளை அமல்படுத்தச் செய்ய முடியவில்லை. அந்தத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ளக் கூட முன்வரவில்லை.

1996இல் மீண்டும் தி.மு.கழக அரசு ஏற்பட்ட பிறகு தான் பிரதமரை பல முறை வலியுறுத்திய காரணத் தால் 1998ஆம் ஆண்டு காவேரி பிரச்சினையில் ஒரு ஒப்பந்தம் காணப்பட்டது. அப்போதுதான் கர்நாடக அரசு, நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. காவேரி ஆணையம் என்ற ஓர் அமைப்பே அப்போதுதான் ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் அந்த ஒப்பந்தத்தை வரவேற்றன. ஏடுகள் பாராட்டி தலையங்கங்கள் எழுதின.

ஆனால், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையின் தொடக்கமே, The Cauvery River Authority

headed by the Prime Minister is a very big fraud perpetrated of the farmers of the Cauvery delta Tamil Nadu என்பதாகும்.

இதைத் தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையிலே காவேரி ஆணையம் என்பது பல் இல்லாத ஆணையம் என்றும், செயல்பட இயலாத வாரியம் என்றும் விமர்சித்தார். அதன்பிறகு அந்த ஆணையக் கூட்டங்களில் தமிழ்நாடு அரசு கலந்து கொள்ளாது என்றார். பிறகு அவரே சென்று கலந்து கொண்டு கூட்டத்திற்கு நடுவே வெளிநடப்பு செய்தார். காவேரி நீரை நமக்குத் தர வேண்டிய பொறுப்பிலே உள்ள கர்நாடக அரசின் முதல்வரையும் அமைச்சர்களையும் தனிப்பட்ட முறையில் தாக்கி விமர்சித்தார்.

இத்தகைய பொறுப்பற்ற காட்டுக் கூச்சல்களை பொருட்படுத்தாமல்; காவேரி பிரச்சினையிலே கழக அரசும், கழகமும் எந்தெந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனை முயற்சிகளையும் எடுத்துள்ளது. அந்த வகையில் ஜெயலலிதா அரசு எப்படி முரண்பாடாகச் செயற்பட்டாலும், மத்திய அரசும், குறிப்பாக காவேரி ஆணையத்தின் தலைவராக இருக்கின்ற பிரதமர் வாஜ்பய் அவர்களும் தமிழ்நாட்டிலே உள்ள காவேரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் வளம் சேர்த்திட இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல தீர்வு ஏற்படுத்த ஒத்துழைப்பு தர வேண்டும்.

அடுத்து, தமிழக வாணிபம் செழிக்க, பொருளாதார வளம் பெருகிட, சேது சமுத்திரத் திட்டப் பணிகளை விரைவுபடுத்துக என்பது விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பில் இருந்த போதே 23-7-1967 அன்று எழுச்சி நாள் நடத்தி, சேலம் இரும்பாலை, தூத்துக்குடி துறைமுகம் முதலியவற்றை மத்திய அரசு நிறைவேற்றக் கோரிக்கை வைத்தார். அந்தத் திட்டங்களின் வரிசையில் ஒன்றுதான் சேது கால்வாய்த் திட்டம். பாக். ஜலசந்தியையும், மன்னார் விரிகுடாவையும் இணைத்து ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்படும் கால்வாய்தான் சேது கால்வாய் திட்டம். இத்திட்டத்தை 1860 ஆம் ஆண்டில் ஆங்கிலேய கப்பல் படையைச் சேர்ந்த டெயிலர் என்பவர் உருவாக்கினார். அப்போதே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் அரசுக்கு 50 லட்சம் ரூபாய் தான் செலவாகியிருக்கும்.

ஆங்கிலேய அரசு இந்தத் திட்டம் பற்றி ஆராய 1945ல் ஒரு குழுவை அமைத்தது. ஆனால் இக்குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. இந்தியா விடுதலை பெற்ற பிறகு, ஏ. ராமசாமி முதலியார் தலைமையில் 1955இல் அரசு ஒரு குழுவை நியமித்தது. இந்தக் குழு சேது கால்வாய்த் திட்டம் நிறைவேறினால், கிழக்கு கடற்கரையோரம் கப்பல் போக்குவரத்து எளிதாக இருக்குமென்றும், இத்திட்டத்திற்கு 9.98 கோடி ரூபாய் செலவாகும் என்றும் தெரிவித்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டும் நிறைவேற்றப்பட வில்லை.

இறுதியாக எச்.ஆர். இலட்சுமி நாராயணன் தலைமையில் ஐவர் குழு ஒன்று மத்திய அரசால் 1981-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு தமிழகமெங்கும் சென்று இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பு கருத்துக்களையும் கேட்டறிந்தது.

1. இத்திட்டத்தை செயல்படுத்தினால் இந்து மகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்பு ஏற்பட்டு, கடல் வழிப் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும்.

2. தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சி அதிகரிக் கும். தூத்துக்குடியிலிருந்து சென்னை துறைமுகத் திற்கு 434 மைலும், விசாகப்பட்டினம் துறைமுகத் திற்கு 376 மைலும், கல்கத்தா துறைமுகத்திற்கு 340 மைலும் குறையும். நேரமும் குறையும்.

3. கப்பலின் எரிபொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவின் அன்னியச் செலாவணி செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும்.

4. இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

5. பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுதும் வளர்ச்சி பெறும்.

6. மீன்பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெறும். மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.

7. நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், வற்றல், பருத்தி போன்ற பொருட்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்கு கொண்டு செல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

நான் முதலமைச்சராக இருந்தபோது இத்திட்டத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறேன். இறுதியாக 8-5-2002 அன்று பிரதமருக்கு திரும்பவும் கடிதம் எழுதினேன். அதன் பிறகு, மத்திய அரசு 200 கோடி ரூபாய் அந்தத் திட்டத்திற்காக செலவு செய்ய அனுமதி அளித்திருப்பதாக செய்தி வந்தது.

தி.மு.க. சார்பில் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக மத்திய அரசில் திரு. டி.ஜி. வெங்கட் ராமன் இருந்தபோது இத்திட்டத்தை நிறைவேற்ற பல ஆய்வுகள் நடத்தி திட்டத்திற்கான மதிப்பீடுகள் செய்தார். 30-4-1982ஆம் ஆண்டிலேயே மாநிலங்களவை யில் நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது கழகத்தின் சார்பில் உரையாற்றிய தம்பி வைகோ, 1963 செப்டம்பர் 12ஆம் நாள் மத்திய அரசின் அமைச்சரவை கூடியது. அந்த மந்திரி சபைக் கூட்டத்திலேயே சேது சமுத்திரத் திட்டத்தை அனுமதித்து துரித நடவடிக்கைக்குரிய பட்டியலில் சேர்க்க முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவிற்கேற்ப திட்டத்தைச் செயல் படுத்துவதற்கான விரிவானதோர் ஆய்வறிக்கை தயாரிப்பதற்கு ஒரு மேல் மட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு திட்டவட்டமான அறிக் கையையும், மதிப்பீட்டையும் 1968ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு சமர்ப்பித் தது. 1968ஆம் ஆண்டில் சேது சமுத் திரத் திட்ட வேலையை தொடங்க வேண்டிய மத்திய அரசு ஏன் தொடங்க வில்லை என்பதுதான் மிகப் பெரிய மர்மமாகும் என்றார்.

இந்தத் திட்டத்தினால் ஏற்படும் பயன்களை யெண்ணி இதனைத் தொடர்ந்து விரைவுபடுத்தி முடித்துத் தரவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி நாம் மறியல் அறப்போர் நடத்துவதை தமிழக மக்களுக்கு விளக்கிட வேண்டுகிறேன். காவிரியில் குழப்பங்களும் - சேது சமுத்திரத் திட்டத் தில் கால தாமதமும் பிரச்சினைகள் ஆகிவிட்டன.

இவை நடந்தவைகள்! இனி நடப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

29-10-2003

2986. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 5

குதிரை; குழியும் பறிக்கிறது!

உடன்பிறப்பே,

விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானம், பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற பழி வாங்கும் பாசிச சட்டங்களைத் திரும்பப் பெறுக என்பதாகும். இதில் பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கும், எஸ்மா, டெஸ்மா சட்டங்களைத் திரும்பப் பெறும் பொறுப்பு தமிழக அரசுக்கும் உரியதாகும். வேடிக்கை என்னவென்றால், மத்திய அரசு பொடா சட்டத்தின் கொடுமைகளைப் புரிந்துகொண்டு, அது மாநில அரசுகளால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் தெரிந்துகொண்டு அதிலே குறைந்த பட்சம் திருத்தமாவது கொண்டுவருகிறார்கள். ஆனால் கருணைக்குப் பெயர்போன தாய்க் குலம் ஆளுகின்ற தமிழக அரசு பொடா சட்டம் திருத்தப் படுவதையே எதிர்ப்பதுடன்; டெஸ்மா சட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து, தொழிலாளர் களையும், அரசு அலுவலர்களையும் எப்படியெல்லாம் வதைக்கலாம் என்று வழிவகைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டிற்கு மேலாக தம்பி வைகோ, நண்பர் பழ. நெடுமாறன், பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், மற்றும் நண்பர்கள் எல்லாம் பெற்றோர், மனைவி, மக்களைப் பிரிந்து சிறையிலே வாடிக்கொண்டிருக் கின்றார்கள். பயங்கரவாதத்தை ஒழிக்கும் சட்டத்தின் பெயரால் இவர்கள் எல்லாம் கைது செய்யப் பட்டுள்ளார்கள். ஒரு கட்சியின் தலைவராக, நாடாளுமன்றத்தில் பல ஆண்டு காலம் புகழ்மிக்க பணியினை ஆற்றிய தம்பி வைகோ பயங்கர வாதியா? அவர் செய்த தவறு என்ன? ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு கூட்டத்தில் பேசியது தானே? ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எந்தக் கட்சிதான் பேசவில்லை? இதே ஜெயலலிதா தீவிரமாகப் பேசியது கிடையாதா? பேட்டியளித்தது கிடையாதா?

அப்படியிருக்க இவரை மட்டும் ஓராண்டு காலமாக சிறையிலே வைக்கக் காரணம் என்ன? அ.தி.மு.க. இவருடன் கூட்டணி வைத்துக் கொண்டிருந்தது கிடையாதா? பொடா சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதை அனைத்து இந்தியா விலே உள்ள அனைவரும் முழு அளவில் திருப்தி யோடு வரவேற்காவிட்டாலும், ஓரளவாவது விமோசனம் கிடைக்காதா என்று நினைக்கின்ற நேரத்தில், அதிலே திருத்தம் கூடக் கொண்டுவரக் கூடாது என்று அறிக்கை விட்டுள்ளவர் தமிழக முதல் அமைச்சர் ஒருவர்தானே? இவரா தாய் உள்ளம் கொண்டவர்! பழிவாங்கும் போக்கிற்கு எல்லையே கிடையாதா?

சட்டத்தைக் கொண்டுவருபவர்கள் நல்ல உள்ளத் தோடு கொண்டுவந்தாலும், அது எப்படிப்பட்டவர் களால் கையாளப்படுகின்றது என்பது தானே முக்கியம்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியலுக்கான சர்வதேச உடன்பாட்டில் கையெழுத் திட்டு அதற்கு ஒப்புதலும் வழங்கிய நாடு இந்தியா. விசாரணை நடந்து முடியும் வரை ஒருவரை சிறையிலே அடைப்பது கூடாது என்கிறது இந்த ஐ.நா. உடன்பாட்டின் 9 (3)வது பிரிவு. ஆனால் பொடா சட்டமோ பிணை தருவதையே மறுக்கிறது.

1985இல் நாடாளுமன்றத்தில் அன்றைய பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட தடா சட்டம், 1995 வரை ஐந்து முறை நீட்டிக்கப்பட்டது. பொடா சட்டத்தை நாடாளுமன்றத்தில் தற்போது கொண்டுவந்த பா.ஜ.க.1994இல் தடா சட்டத்திற்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு :-

The Act granted power to the executives that were found to be misused. Political parties ave bee targeted by the States, whc ave tended to misuse the law (இந்தச் சட்டம், நிர்வாகத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்குகிறது. அவைகள் முறைகேடாகப் பயன்படுத்த வழிவகுக்கின்றது. அரசியல் கட்சிகள் மாநில அரசுகளால் குறிவைக்கப்படு கின்றன. மாநிலங்கள் சட்டத்தைத் தவ றாகப் பயன்படுத்த தூண்டப்படுகின்றன)

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு வரப்பட்ட தடா சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப் பட்ட காரணத்தால் 1994 வரை 76 ஆயிரம் பேர் பொய் வழக்குகளில் கைது

செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார்கள். இதில் ஒரு சதவிகித வழக்கு களில் கூட, குற்றம் நிரூபிக்கப்படவில்லை. குஜராத் மாநிலத்தில் மட்டும் இச்சட்டத்தின்கீழ் 18,584 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் குற்றம் நிரூபிக்கப் பட்டு, தண்டிக்கப்பட்டவர்கள் 174 பேர் மட்டுமே!

குற்றங்கள் நிரூபிக்கப்படாதவரை ஒருவர் நிர பராதியே என்ற குற்றவியல் கோட்பாடு பொடாவிற் குப் பொருந்தாது. தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்கு கால அவகாசம் தர மறுக்கின்றது இந்தச் சட்டம். பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கப்போவதாகத் தகவல் தெரிந்த ஒருவர் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது இச்சட்டப்படி கட்டாயமாகும். ஒரு பத்திரிகையாளர் தனது பத்திரிகைக்காக சேகரிக்கும் தகவலை, காவல்துறையிடம் தெரிவிக்காவிட்டால் பத்திரிகை யாளரும் ஒரு பயங்கரவாதியாகக் கருதப்பட்டு கைது செய்யப்படுவார்.

பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கும், துணைப் பிரதமர் அத்வானி அவர்களுக்கும் நான் இந்தச் சட்டம் திரும்பப்பெறப்பட வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறேன். அனைத்துக்கட்சித் தலைவர் களும் கடந்த ஏப்ரல் திங்கள் துவக்கத்தில் கலந்துபேசி தீர்மானம் நிறைவேற்றி அதனை துணைப் பிரதமருக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கு திரு. அத்வானி அவர்கள் 7-4-2003 அன்று எனக்கு எழுதிய பதில் கடிதத்தில், பொடா சட்டத்தை மாநிலங்கள் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற் காக ஆய்வுக் குழு அமைத்திருப்பதை நினைவூட்டி யிருந்தார். தற்போது அவர்களே அந்தக் குழுவிற்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு, குழுவிற்கு மேலும் அதிகாரம் அளிக்கக் கூடிய வகையில் திருத்தம் கொண்டு வந்துள்ளனர். எது எப்படியிருந்த போதிலும், பொடா சட்டம் மத்திய அரசினால் திரும்பப்பெற வேண்டும் என்பதே நமது கோரிக்கை. தமிழகத்திலே அந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி சிறையிலே அடைக்கப்பட்டுள்ள தம்பி வைகோ, பழ. நெடுமாறன், நக்கீரன் கோபால் போன்றவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

அடுத்து, தமிழக அரசின் சார்பில் பிறப்பிக்கப் பட்டுள்ள எஸ்மா, டெஸ்மா சட்டம். தொழிலாளர் களையும், அரசு அலுவலர்களையும் அடக்குமுறைக் கொடுமையால் கட்டுப்படுத்துவதற்காகவே கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

அதிலும் குறிப்பாக எஸ்மா சட்டத்திற்கும், டெஸ்மா சட்டத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடே, எஸ்மா சட்டத்தின்கீழ் விசாரணை இல்லாமல் ஒரு தொழிலாளரை டிஸ்மிஸ் செய்வதற்கு அதிகாரம் கிடையாது. விசாரணையே இல்லாமல் டிஸ்மிஸ் செய்வதற்கான அதிகாரம் சேர்க்கப்பட்டதுதான் டெஸ்மா. அதுமட்டுமல்ல; இந்த டெஸ்மா சட்டம் முன்தேதியிட்டு அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டது.

இயல்பாகவே முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு தொழிலாளர்கள் என்றாலும், அரசு அலுவலர்கள் என்றாலும் ஓர் அலர்ஜி. 25-7-2001 அன்றே, அதாவது ஜெயலலிதா பதவிக்கு வந்த சில நாட்களிலேயே அரசின் மொத்த வருமானத்தில் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களின் ஊதியமாக வழங்கப்படுகின்றது என்றார். தமிழக அரசின் மொத்த வருவாயில் 2000-2001இல் 47.50 விழுக்காடும், 2001-2002இல் 46.37 விழுக்காடும், 2002-2003இல் 43.82 விழுக்காடும்தான் அரசு அலுவலர்களின் ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றுக் காக செலவாயிற்று.

பலமுறை வேண்டுகோள்கள், சந்தித்துப் பேசுவதற் கான முயற்சிகள், ஏடுகள் வாயிலாக அறிக்கைகள் என்பனவற்றுக்குப் பிறகே அரசு அலுவலர்களுக் கான அனைத்துச் சங்கங்களும் சேர்ந்து 2-7-2003 அன்று முதல் வேலை நிறுத்தம் என்று அறிவித்தன. ஆனால் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே அரசு அலுவலர்கள் எல்லாம் காவல்துறையினரால் வேட்டையாடப்பட்டார்கள். ஜூலை 4ந்தேதியன்று எஸ்மா சட்டத்தில் திருத்தம் செய்து டெஸ்மா அவசரச் சட்டம் 23-4-2003ஆம் தேதியிலிருந்தே அமலுக்கு வந்ததாக அறிவித்து, ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தார்கள். இலட்சம் பேருக்கு மேற் பட்ட அரசு அலுவலர்களை ஒரே நேரத்தில் டிஸ்மிஸ் செய்த கொடுமை எங்கேயாவது நடைபெற்ற துண்டா?

தமிழக அரசு கொண்டுவந்த அவசரச் சட்டத்தை யும், அரசின் சட்ட விரோத நடவடிக்கைகளையும் எதிர்த்து தொ.மு.ச. உள்ளிட்ட பல தொழிற் சங்கங்கள் உயர்நீதிமன்றத்திலும் பிறகு உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்தன. தொழிலாளர்களுக்கு அரசியல் சாசனச் சட்டம் பிரிவு 309ன் கீழ் இயற்றப் பட்ட விதிகளுக்குப் புறம்பாகவும், பிரிவு 311ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள உத்தரவாதங்களுக்கு முரணாகவும் பிறப்பிக்கப்பட்ட இந்தச்

சட்டம், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகவும், அடக்கு முறையின் உச்சக்கட்டமாகவும் அமைந்துள்ளதோடு, இயற்கை நியதிகளுக்கு மாறானதாகவும் இருந்த போதிலும்; அவசரச் சட்டம் பற்றிய முடிவு எதுவும் நீதி மன்ற வாயிலாக இதுவரை வராதது குறிப்பிடத் தக்கது.

எஸ்மா சட்டம், டெஸ்மா அவசரச் சட்டம் ஆகியவற்றின் பிரிவுகள், இந்திய அரசியல் சட்டம், பிரிவு 14, 20, 309, 311 ஆகியவற்றுக்கு எதிரானது. பிரிவு 311(2)ன்படி, ஒரு ஊழியருக்கு அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்காமலும், அதனை அவர் மறுத்து விளக்கம் தர வாய்ப்பு தராமலும், அவரை வேலை நீக்கம் செய்யவோ, அவரைப் பதவி இறக்கம் செய்யவோ கூடாது.

தண்டனை தருகின்ற சட்டத்தை முன்தேதியிட்டு அமலுக்கு வந்ததாக அறிவிப்பது சட்டத்திற்குப் புறம் பானது. ஆனால் டெஸ்மா சட்டம் பல மாதங்களுக்கு முன்தேதியிட்டு நிறைவேற்றப்பட்டதாக அவசரச் சட்டம் கூறுகிறது.

தமிழகத்திலே அரசு அலுவலர்களுக்கு ஏற்பட் டுள்ள இந்தத் துன்பகரமான நிலை குறித்து, 7-7-2003 அன்று பிரதமர் அவர்களுக்கு விரிவாக ஒரு கடிதம் எழுதி, மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு அவர்கள் மூலமாக கொடுத்தனுப்பினேன். பிரதமரும் அவரிடம்; தமிழகத்திலே நிலவும் மோசமான நிலை குறித்து அறிவேன் என்றும், உரிய நடவடிக்கையை மேற்கொள்வேன் என்றும் உறுதியளித்தார். மீண்டும் ஒரு முறை 17-7-2003 அன்று பிரதமருக்கு இந்தப் பிரச்சினையை நினைவூட்டி ஒரு கடிதம் எழுதினேன்.

ஜெயலலிதா அரசின் பிடிவாதமான இந்தப் பழி வாங்கும் போக்கு காரணமாக அரசு அலுவலர்கள் இதுவரை 25க்கு மேற்பட்டவர்கள் தங்கள் இன்னுயிரை பலி கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும் இதுவரை முதல்வர் ஜெயலலிதாவிற்கு அரசு அலுவலர்கள்பால் கருணை பிறக்கவில்லை.

அரசு அலுவலர்களில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தவறு செய்யலாம். ஆனால் 95 சதவிகிதம் பேர் மாதந்தோறும் பெறுகின்ற ஊதி யத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள்தான். அந்தந்த மாதம் பெறுகின்ற ஊதியத்திலிருந்துதான் வீட்டு வாடகை, குழந்தைகளுக்கான

பள்ளிக் கட்டணம், வாழ்க்கையை நடத்துவதற்கான அத்தியாவசியச் செலவுகளுக்குக் கொடுக்க வேண்டும். நான்கு மாதமாக ஊதியமே கிடையாது என்று மறுக்கப்பட்ட நிலையில் அந்தக் குடும்பத்தினர் விடுகின்ற கண்ணீர் இந்த அரசை நிச்சயமாக சும்மாவிடாது என்பது மட்டும் நிச்சயம். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் பற்றி அய்யன் வள்ளுவர் கொடுங்கோன்மை என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனைக்கும் அந்த அரசு ஊழியர்கள் செய்த குற்றம் என்ன? அரசு சொத்தைக் கொள்ளையடித்து கோடி கோடியாகச் சேர்த்துத் தோட்டம் துரவு வாங்கினார்களா? ஏற்கனவே தாங்கள் பெற்று வந்த சலுகைகளையும், உரிமைகளையும் மீண்டும் வேண்டு மென்று கோரிக்கை வைத்தார்கள். அதற்காகவா இந்தத் தண்டனை? அவர்களுக்காகப் பாடுபடக் கூடிய சங்கத் தலைவர்களின் அறிவுறுத்தல்படி வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். ஜெயலலிதா எதிர்க்கட்சியிலே இருந்தபோது தொழிலாளர்களைப் போராட்டத்தில் ஈடுபடும்படி கூறியதே கிடையாதா? போக்குவரத்து தொழிலாளர்களுக்கும், மின்வாரியத் தொழிலாளர்களுக்கும் தி.மு. கழக அரசு 20 சதவிகிதம் போனஸ் என்று அறிவித்தபோது 25 சதவிகிதம் தரவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவர்கள் போராட்டத்தில் குதிப்பார்கள் என்றும் ஜெயலலிதா அறிவிக்கவில்லையா? தற்போது தி.மு.கழகம் கொடுத்த 20 சதவிகிதம் போனஸ் அல்ல; வெறும் 8.33 சதவிகித போனஸ் மட்டுமே கொடுப்பேன் என்று பிடிவாதம் காட்டும்போது தொழி லாளர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? பாவம்; இரண்டு ஆண்டுகளாக ஏற்றுக் கொண்டு தான் வருகிறார்கள் - அதாவது குனிந்து குனிந்து குட்டுப்படுகிறார்கள்.

உச்ச நீதிமன்றத்திலே தொ.மு.ச. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பாக தொடுக்கப்பட்ட வழக்கிலே இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டபோது, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியால் நியமிக்கப்படுகின்ற மூன்று ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள் 6072 பணியாளர்களைப் பொறுத்த வழக்குகளை விசாரித்து ஒரு மாதத்தில் தீர்ப்பு கூற வேண்டும். அப்போது டெஸ்மா அவசரச் சட்டத்தின் பிரிவுப்படி அல்லாமல் அரசு ஊழியர்கள் நெறிமுறை விதிகளின்படிதான் விசாரணை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு மாதம் முடிந்து எத்தனையோ நாட் களாகின்றன. இன்னும் வழக்குகள் முடிந்து தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. உச்ச நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பை மீறுகின்ற வகையில் செயல்கள் இங்கே நடைபெறுகின்றன. மேலும் உச்ச நீதி மன்ற நீதிபதி இந்த வழக்குகளை டெஸ்மா அவசரச் சட்டத்தின் பிரிவுப்படி விசாரணை நடத்தக் கூடாது என்று தெரிவித்திருப்பதின் வாயிலாக டெஸ்மா சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான் தெளிவாகின்றது. அதையும் மீறி அ.தி.மு.க. அரசு டெஸ்மா சட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதாக அறிவித்திருப்பது குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல், குழியும் பறித்த கதையல்லவா? அதனால்தான் பொடா மட்டுமல்ல; எஸ்மா, டெஸ்மா சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் டிசம்பர் 1ந்தேதி மத்திய-மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல் அறப்போர் நடத்துவதற்காக திட்டமிட்டுள்ளோம் என்பதையும் மக்களுக்கு விளக்கிட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

30-10-2003

2986. மறியல் அறப்போர் தீர்மான விளக்கம் 6

களமேவிடத் தயாராகின்றனர் கழகக் கண்மணிகள்!

உடன்பிறப்பே, இன்று நான் எழுதுவது; டிசம்பர் 1ஆம் தேதி கழகம் களமிறங்கி நடத்த இருக்கும் மத்திய மாநில அரசு அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் அறப் போருக்கான அடிப்படையாக நிறைவேற்றப்பட்டுள்ள விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்களைக் குறிப்பிடும் 6வது கடிதமாகும்.

தமிழ் ஆட்சி மொழி - செம்மொழி;

காவேரி ஆணையம்;

சேது சமுத்திரத் திட்டம்;

பொடா - எஸ்மா - டெஸ்மா சட்டங்கள்;

இவை பற்றி விளக்கக் கூட்டங்களில் நமது கழகச் சொற்பொழிவாளர்கள் இன்னும் பல விபரங்களை அறிந்து கொள்ளத்தக்க வகையில் ஐந்து கடிதங்கள் இதுவரையில் தொடர்ந்து எழுதியுள்ளேன்.

இவற்றையன்னியில்,

அரசுத் தொழில்கள், அரசு சார்புடைய தொழில்களைத் தனியார் வசம் ஒப்படைப் பதைக் கைவிடுக!

தி.மு.க. ஆட்சியின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு மூடுவிழா நடத்தியதுடன், விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்திலும் குழப்பங்களும், குளறுபடி களும் செய்வதை உடனே நிறுத்திடுக!

கௌரவ ரேஷன் கார்டு என்ற பெயரால் ஒரு கோடியே 15 லட்சம் நடுத்தர மக்களை நடுத்தெருவுக்குத் துரத்தியுள்ள அநியாய ஆணையை திரும்பப் பெறுக!

வணிகர்களை வாட்டும் பல முனை வரியை ரத்து செய்து; மீண்டும் ஒரு முனை வரியைக் கொண்டு வருக!

சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், கூட்டுறவுப் பணியாளர் கள் என வேலை நீக்கம் செய்யப்பட்ட 40 ஆயிரம் பேரை மீண்டும் பணியில் அமர்த்துக!

மத மாற்றத் தடைச் சட்டம் - அயோத்தியில் அதே இடத்தில் இராமர் கோயில் கட்டுவோம் என்ற திட்டவட்ட அறிவிப்பு - இவற்றைத் திரும்பப் பெற்றிடுக!

ஆடு, கோழிகளை உண்பதற்கு அனுமதித்துவிட்டு, அவற்றை நேர்த்திக் கடனுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பழைய கலாச் சாரத்திற்கு எதிராக தலைவிரித்தாடும் தடையாணைகளை நிறுத்திக் கொள்க!

ஒப்பந்தப் புள்ளிகள் ஊழல் புள்ளிகளாக உருவெடுத்துள்ளதையும், ஆளும் தரப் பினர் நடத்தும் மணல் திருட்டு போன்ற மாபெரும் பகல் கொள்ளைகளையும் உடனடியாக தடுத்து நிறுத்துக.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் நடுத்தர மக்கள் வீட்டுப் பிள்ளைகள் திணறித் தவிக்கும் அளவுக்கு கல்விக் கட்டணங்களை உயர்த்தி - இலவச பஸ் பாஸ் போன்ற சலுகைகளையும் ரத்து செய்துள்ளதை திரும்பப் பெற்றிடுக.

நெல்-கரும்பு விவசாயிகள், நெசவாளர் கள், வணிகர்கள், மீனவர்கள், தொழி லாளர்கள், மாணவர்கள், அரசு அலுவலர் கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பல பிரிவினரின் தீர்க்கப்படாத பிரச்சினை கள் பல இருக்கும்போது, நிதிப் பற்றாக்குறை எனக் கூறிக் கொண்டே பல கோடி ரூபாய் செலவில் புதிய தலைமைச் செயலகம், 18 ஆயிரம் கோடி ரூபாய்ச் செலவில் சென்னை புனர் நிர்மாணம் என்ற தொடர் அறிவிப்புகளை நிறுத்திக் கொள்க. மக்கள் வரிப் பணத்தில் நடைபெறும் அரசு விழாக்களில் எதிர்க் கட்சித் தலைவர் களை ஏசிப் பேசும் ஜனநாயக விரோதச் செயலுக்கு அணையிட்டுத் தடுத்திடுக.

ஆளுங்கட்சியின் நிகழ்ச்சிகளை, விதி களை மீறி நடத்திக் கொண்டு - அதே சமயம் விதிகளுக்கேற்ப நடத்த முன்வரும் எதிர்க்கட்சி நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்து, நிபந்தனை விதித்து

பேச்சுரிமை, எழுத்துரிமையைப் பறிப் பதையும் பத்திரிகைகள் மீது எண்ணற்ற வழக்குகள் தொடர்வதையும் நிறுத்திக் கொள்க.

எனும் தீர்மானங்கள் அடங்கிய துண்டு அறிக்கை, பல்லாயிரக்கணக்கில் அச்சியற்றப்பட்டு கழக அமைப்புகளுக்கு தலைமைக் கழகச் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாநாட்டில் நான் ஆற்றிய நிறை வுரையும் புத்தக வடிவில் இந்த விளக்கங்களைத் தாங்கி வெளியிடப்பட்டு; கழக முன்னணியினருக் கும், சொற்பொழிவாளர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது.

அறப்போராட்டத்திற்கான பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் மக்கள் மத்தியில் எடுத்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகளை வரைமுறைப்படுத்தவும் - வகைப்படுத்திடவும் - பேச்சாளர்களுக்கு இவை பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன்.

மாநாட்டில் தலைமைக் கழக உயர்நிலைச் செயல் திட்டக் குழுவிலே எடுத்த முடிவுக்கேற்பவும் - குழுமியிருந்த லட்சக்கணக்கான தமிழ்ப் பெரு மக்கள் முன்னிலையில் அறிவித்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றதற்கேற்பவும் - என் உயிரினுமினிய உன் போன்ற உடன்பிறப்புகள் உறுதி படைத்த நெஞ்சினராய் கை உயர்த்திக் காட்டி - களங் காணத் தயார் எனக் கர்ச்சனை புரிந்ததற்கேற்பவும் - இதோ அறப்போர் முரசின் ஒலி கேட்கத் தொடங்கி விட்டது.

ஆங்காங்கு கழகத்தின் முன்னணி நிர்வாகிகள் - அமைப்புகளின் செயல் வீரர்கள் - அணிகளின் ஆற்றல் மிகு தீரர்கள் - எப்பக்கமிருந்து புகுந்து வரும் அடக்குமுறை; அது எத்தனை பட்டாளம் கூட்டி வரும்? என விழிகளை வினாக்குறிகளாக்கிக் கொண்டு கனல் கொட்டி வரும் அதிகார வர்க்கத்தைக் கண்டு கலங்காமல்; கள மேவிடத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர் கழகக் கண்மணிகள்.

ஆங்காங்கு அந்தப் பாசறை வீரர்களின் பட்டியல் தயாராகிறது - நமது கழகம் ஈடுபடும் எந்தவொரு அறப்போராட்டத்திலும், ஒளிவு மறைவு என்பதோ, ரகசியத் திட்டம் தீட்டுவதோ கிடையாது. பெரியார் தலைமையில் களம் பல கண்ட போதும் அண்ணா தலைமையில் அறப்போர்களில் ஈடுபட்ட போதும் அவர்களின் வழி நின்று அமைதிப் பாதையே நாம் களம் செல்லும் பாதையாக

அமைந்து வருகிறது. இப்போதும் அவ்வாறே அமையும், அமைய வேண்டும்.

ஆழ்ந்து சிந்தித்து சிந்தித்து வேறு வழியின்றி எடுத்த முடிவு இந்த அறப் போராட்டம் என்பதை அனைவரும் அறிவார்கள். மிதிபட மிதிபடப் புழுக் கூட தலைதூக்கி எதிர்ப்பைக் காட்டும் என்கிற போது - இங்கே இம் என்றால் சிறைவாசம் - ஏன் என்றால் வனவாசம் எனுமளவுக்கு ஜார் ஆட்சியின் கொடுமைகள் கொலு வைக்கப்படுவதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்.

ஜனநாயகத்திற்குப் பிரேத பரிசோதனை - சர்வாதிகாரத்திற்குப் பிரமோற்சவம் என்றால் - நாம் வாழ்வது நாட்டிலா? காட்டிலா? என்ற கேள்விக்கு விரைவில் விடை காண ஒரு வழி காண வேண்டாமா? அந்த வழிதான் டிசம்பர் முதல் நாளன்று நாம் ஈடுபட இருக்கிற மறியல் அறப்போர்! போராட்டங்களைத் தேடிப் போகிறவர்களுமல்ல; வந்த போராட்டங்களை விட்டு விட்டு ஓடிப் போகிறவர்களுமல்ல - என்று நமது தலைவர் அண்ணா முழங்கிடுவாரே; அந்த முழக்கத்தின் எதிரொலிதான்; இதோ டிசம்பர் முதல் நாள் கேட்க இருக்கிற முரசொலி!

ஏழை மேலும் நலிகிறான் - எந்நாளும் பாடுபடும் தொழிலாளி மெலிகிறான் - உழவன் உயிர்வாதை அடைகிறான் - அன்றாடம் அரசு ஊழியம் - ஆசிரியர் பணி - அட்டியின்றிச் செய்து பெற்றிருந்த உரிமை களையும், சலுகைகளையும் பறிகொடுத்துப் பரதவிக்கும் பராரி போல ஒரு கூட்டம்; ஆம் - படித்துப் பணியேற்ற கூட்டம் - இவர் அவர் என்றில்லாமல் எல்லோர் கண்களிலும் நீர் - ஆமாம்; இரத்தக் கண்ணீர்!

பித்தம் பிடித்து ஆட்சி நடத்துவோர்க்கு நாளொரு திட்டம், பொழுதொரு சட்டம் என்று கூட அல்ல; மணிக்கு மணி ஒரு முடிவு - மறுபடியும் நிமிஷத்தில் அதை மாற்றும் மன நோய் - மதுக் கொள்கையோ ஒரே கிறுகிறுப்பு - திடீரென அரசு வணிகம் என ஒரு சுறுசுறுப்பு - ஏன்? ஏன்? அரசுடைமையில் அவ்வளவு அக்கறை வந்து விட்டதா? எல்லாம் பாசமுள்ள உடன்பிறவாச் சோதரம் ஏகபோகமாகச் சம்பாதிக்கப் போட்டுள்ள படப்பை திட்டம்.

இதோ ஒரு தடைச் சட்டம் - பிளாஸ்டிக்; மனிதனைக் கொல்லும் பேய்! அதைப் பார்த்து நான் அழுது புலம்பினேன்

- இப்படி ஒப்பாரி - அடுத்த நாளே வர வேண்டியது வந்ததும் பிளாஸ்டிக்கிலேயே சாலை! காரணம்; முளைத்து விட்டது கரன்சி சோலை!

உழைத்தவன் கேட்டான் ஊதியம்; ஒரு காசு இல்லை - போனசுக்கும் பெப்பே - உனக்கும் பெப்பே - ஆனால் 400 கோடியில் ஒய்யார உப்பரிகை - நிர்வாகத்தை நரகமாக்கிக் கொண்டு நிர்வாகத் துக்கு ஆயிரம் கோடியில் ஒரு நகரமாம்; கெட்டக் கேடு - எதற்கோ பட்டுக் குஞ்சம் என்பார்களே; அதைப் போல!

தொன்னையை குப்புறக் கவிழ்த்தது போன்ற குடிசைகளில் எண்ணெயற்ற தலையர்களாய் ஏங்கிக் கிடக்கும் ஏழைகளை விரட்டி விட்டு; சென்னையை அழகுபடுத்த இருபதாயிரம் கோடியில் ஒரு புதிய திட்டமாம்!

ஆடம்பரம், கேளிக்கை நடத்துகிறது - அடக்கு முறை, அட்டகாசம் புரிகிறது - 'எட்டுப் பேர், பத்துப் பேர் என்று என்கவுண்டர் நடக்கிறது - காஞ்சி மடமே போற்றுகின்ற பண்ணையார்கள் கூட பலியாகிறார் கள் - கயமைச் செயல்களுக்கு அளவே இல்லை என்றாகி விட்டது.

அண்ணாவையும்

பெரியாரையும்

என்றோ ஒரு நாள் நினைத்துக் கொண்டு பெயர் சொல்லி - அயோத்தியில் கோயில் கட்ட ஆதரவு தேடும்; அப்பட்டமான கொள்கைக் கொலை - மதவெறிக்கு எரு. உரம்; தஞ்சைக்குத் தண்ணீர் இல்லாவிடினும் மத நஞ்சைப் பெருக்கிட எல்லா உதவிகளும் - இப்படியொரு ஆட்சியின் கோணங்கித் தனங்களை - கோமாளிச் சேட்டைகளை - கொடுமைச் செயல்களை - இன்னும் எத்தனை நாள் இந்த மக்கள் தாங்குவது?

எதிர்ப்பின் வலிமையைக் காட்ட வேண்டாமா? அறவழியில்! அமைதி வழியில்! அண்ணா வழியில்!

அதற்கான அணி வகுப்பு

பட்டிதொட்டி முதல் பட்டினக் கரைகள்

வரையில் அமையட்டும் -

அறப்போர் வெல்லட்டும் -

அன்பு உடன்பிறப்பே தயாராகு!

அன்புள்ள,

மு.க.

31-10-2003

2987. அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பரே!

உடன்பிறப்பே,

வேறு கட்சிகளில் உள்ளவர்களானாலும் கருத்து மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு என்னிடத்தில் தனிப்பட்ட முறையில் பற்றோடும் பாசத்தோடும் பழகுகின்ற நண்பர்கள் பலர் உண்டு. அப்படிப்பட்ட வர்களில் காங்கிரஸ் இயக்கத்தின் முன்னோடிகளான பீட்டர் அல்போன்சும், கோபண்ணாவும் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள். அவர்கள் எழுதிய இரண்டு நூல்களை நான் வெளியிட வேண்டுமென்று அவர்கள் விரும்பியதற்கேற்ப அந்த வெளியீட்டு விழா காமராஜர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அந்த விழாவில் ஒரு நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றிய நண்பர் சிதம்பரம் அவர்கள் காமராஜரின் சாதனைகளையெல்லாம் குறிப்பிட்டார். எப்போதும் பெருந்தலைவர் காமராஜரின் சாதனைகளைப் பொறுத்தவரை தி.மு.கழகம் குறைத்து மதிப்பிட்டதே கிடையாது. தமிழகத்தில் கல்விக் கண் திறந்தவர் அவர் என்பதும், ஏழைக் குழந்தைகளுக்கு பள்ளிகளில் மதிய உணவு அளித்தவர் அவர் என்பதும், அணைக்கட்டுகள் பலவற்றை தமிழகத்திலே உருவாக்கியவர் அவர் என்பதும் யாராலும் மறுக்கக் கூடியவைகள் அல்ல. எளிய வாழ்வு, தியாக வாழ்வு என்பது காமராஜரை நினைவுபடுத்தும் வரலாற்று உண்மைகளாகும். இதுபற்றியெல்லாம் தி.மு.கழகத் திற்கு மாற்றுக் கருத்தே கிடையாது.

நான் அந்த விழாவிலே பேசும்போதுகூட காமராஜரின் பெருமைகளைப் பற்றியும், அண்ணா அவர்கள் காமராஜர் பற்றி எழுதிய கட்டுரைகளைப் பற்றியும் மற்றவர்களை விட அதிகமாகவே பட்டிய லிட்டுக் காட்டியிருக்கிறேன். ஆனால் நண்பர் சிதம்பரம் அவர்கள் பேசும்போது தமிழ் நாடு என்ற பெயரை காமராஜர்தான் வைத்தார் என்று பேச்சினிடையே குறிப்பிட்டார்.

நம்முடைய மாநிலத் திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தது யார் என்று தமிழகத்திலே உள்ள யாரைக் கேட்டாலும் அண்ணா என்று பதில் சொல்வார்கள். அப்படியிருக்க கழகத் தைச் சேர்ந்த, ஏன் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் எல்லாம் அந்த விழாவிலே அமர்ந்திருக்கும்போது, கழகத்தின் தலைவரான நானும் அந்த மேடையிலே இருக்கும்போது, தேவை யில்லாமல் ஒரு பிரச்சினையை உண்டாக்கக் கூடிய வகையிலே ப. சிதம்பரம் அவர்கள் தமிழ்நாடு என்று இந்த மாநிலத்திற்குப் பெயர் சூட்டியவர் காமராஜர் என்று கூறும்போது அதைப்பற்றி நானும் கருத்து எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்து விட்டால் சிதம்பரத்தின் அந்தக் கருத்தை நானும் ஏற்றுக் கொண்டவனாகிவிடுவேன் அல்லவா? அது ஒரு சரித்திரப் பிழையாகி விடுமே. அதனால்தான் நண்பர் சிதம்பரம் அவர்கள் தெரிவித்த கருத்திலே உள்ள உண்மை என்ன என்பதைப் பற்றி அங்கே விளக்கிட நேர்ந்தது.

காமராஜர் ஆட்சியிலே நமது மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டிருக்குமே யானால் காங்கிரஸ் ஆட்சியில் 1964ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி சட்டப் பேரவையில் தி.மு.க. உறுப்பினர் சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென்று ஒரு தனியார் தீர்மானத் தையே கொண்டு வந்திருக்கவே தேவையில்லாமல் போயிருக்கும். அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கப்பட்டு 23-7-1964 அன்றும் தொடர்ந்த போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய திருமதி சி. குழந்தையம்மாள் குறிப்பிட்ட சில வரிகள் வருமாறு :-

“இந்தத் தீர்மானத்தை எதிர்த்து ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற பெயரை மாற்றி விட்டு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். கன்னட நாடு என்று வைத்திருக்கிறார் களா? தெலுங்கு நாடு என்று வைத் திருக்கிறார்களா? மலையாள நாடு என்று வைத்திருக்கிறார்களா? நீங்கள் மட்டும் மொழி அடிப்படையில் வைக்க வேண்டும் என்று ஏன் சொல்ல வேண்டும்? இந்தத் தீர்மானத்தினால் நாட்டு மக்களுக்கு எந்தவித பிரயோச னமும் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு என்று பெயர் வைத்து விட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குமா? எல்லோரும்

படித்து விடுவார்களா? எல்லோருடைய வறுமையும் நீங்குமா? வீடு வருமா? இது ஒரு சாதாரணப் பிரச்சினை. உண்மையான பிரச்சினைகள் நாட்டிலே பல இருக் கின்றன. அதைக் குறித்துப் போராடுங் கள் பார்ப்போம். வெற்றி பெறுங்கள் பார்ப்போம்”

அந்த காங்கிரஸ் உறுப்பினர் மாத்திரமல்ல; அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன்; அரசின் சார்பில் இந்தத் தீர்மானம் தேவையில்லை என்று மறுத்துரைத்தார். அப்போது அவர் கூறும்போது கூட,

“இந்தத் தீர்மானத்தின் மூலமாக அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்வது வாதம் இல்லாத ஒரு விவாதமாகத்தான் இருக்கும் என்றுதான் நான் சொல்ல முடியும். அப்படியிருக்கும் நிலையில் திடீரென்று தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டிய காரணம் என்ன ஏற்பட்டிருக்கிறது? கான்ஸ்ட்டிடியூ ஷனில் (அரசியல் சட்டத்தில்) மாற்றக் கூடிய அளவுக்கு என்ன ஏற்பட்டிருக் கிறது? தமிழ்நாடு என்று சொல்லு வதனால் எல்லோருக்கும் சந்தோஷ மாகத்தான் இருக்கிறது. அதே மாதிரி மெட்ராஸ் ஸ்டேட் என்று சொல்லும் போதும் சந்தோஷமாகத்தான் இருக் கிறது. உலகத்தில் எங்கு போய் பார்த்தா லும் சரி மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு எப்போதும் நல்ல பெயர், பெரிய ‘குட்வில்’ இருக்கிறது. அதை எதற்காக இப்போது போய் கெடுக்க வேண்டும்?”

என்றெல்லாம் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் பேசியது அவைக் குறிப்பில் இன்றைக்கும் இடம் பெற்றுள்ளது.

இப்படியெல்லாம் பேசி தி.மு.கழகத்தின் சார்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் காங்கிரஸ் ஆட்சியில் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டது.

அதன்பிறகு, 1967ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் 18-7-1967 அன்று சட்டப் பேரவையில் அரசினர் தீர்மானமாக பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

“இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம்மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் “தமிழ்நாடு” என்று மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதி யாகக் கருதுவதுடன், இது குறித்து அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள்

அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இப்பேரவை பரிந்துரைக்கின்றது”

இந்தத் தீர்மானத்தின் மீது அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. பி.ஜி. கருத்திருமன் அவர்களின் பேச்சின் சுருக்கம் வருமாறு :-

“முதலமைச்சர் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கு எந்த விதத்திலும் ஆட்சேபணை இல்லை என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஏற்கனவே இந்தச் சட்ட மன்றத்திலே (தி.மு.க. உறுப்பினரால்) கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஆகும். இருந்தாலும்கூட அப்போது சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, அப்போதிருந்த அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தத் தீர்மானத்திலே இதில் பெயர் சூட்டு வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை; இருந்தாலும்கூட நமது தமிழ் நாட்டினுடைய பெயர், தமிழ்நாட்டிலே, தமிழிலே மட்டும் ‘தமிழ்நாடு’ என்று இருக்கலாம் என்றும், ஆங்கிலத்தில் ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்றிருக்கலாம் என்றும் குறிப்பிட்டுக் கூறினார்கள். அடிக்கடி வெளி நாடு சென்று வந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், வெளி நாடுகளிலே, உலக நாடுகளில் எல்லாம் எப்படி பெயர் குறிக்கப்படுகின்றது என்று சொன்னார்கள்.”

இவ்வாறு கூறிவிட்டு திரு. கருத்திருமன் அவர்கள் முடிவாக தீர்மானத்தை வரவேற்பதாகத் தெரிவித்தார். இந்தப் பேச்சுக்களை முழுவதும் படித்தாலே வெங்கட்ராமன் போன்றவர்கள் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கு எதிர்ப்பாக இருந் திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தச் செய்தியை மனத்திற்கொண்டுதான் நான் அன்றையதினம் சிதம்பரம் அவர்களின் பேச்சுக்கு மறுப்பாகக்கூட அல்ல; ஒரு விளக்கமாக உண்மை என்னவென்பது உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அங்கே சொல்ல நேரிட்டது.

அது மாத்திரமல்ல; நண்பர் சிதம்பரம் அவர்கள் அந்த விழாவிலே பேசும்போது கருணாநிதிதான் வழி காட்ட வேண்டும் என்ற விதமாகவும், தமிழகத்திலே தி.மு. கழகம், காங்கிரஸ் என்ற இரண்டு பெரிய கட்சிகள்தான் இருக்க வேண்டுமென்றும் குறிப் பிட்டதைப் பற்றிக்கூட நான் எடுத்துக் கூறி, அந்த விழாவிற்கு

முன்பு அவர் பேசியதாக பத்திரிகை களிலே வந்த அவருடைய பேச்சுக்களில் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டும் ஒன்றுதான், திராவிட கட்சிகளே இருக்கக் கூடாது என்பதாக வெளி வந்தவைகளையும் நான் சுட்டிக் காட்டி, இதிலே இன்றைக்கு நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் பேசியது தான் அவருடைய உண்மையான பேச்சு என்றும், அதற்கு முன்பு பத்திரிகைகளிலே வந்த அவருடைய பேச்சுக்கள், பத்திரிகைக்காரர்களின் விருப்பம்போல் வெளியிடப்பட்ட பேச்சுக்கள் என்றும் இப்போது உணர்ந்து கொள்வதாக நண்பர் சிதம்பரம் அவர்களைப் பாராட்டித்தான் பேசினேன்.

அவர் தமிழ்நாடு என்று பெயர் அதிகாரப் பூர்வமாக அரசியல் சட்ட ரீதியாக அண்ணா அவர்களால் தான் சூட்டப்பட்டது என்பதை மறைத்து விட்டு தேவை யில்லாமல் ஒரு பெரிய தலைவரான காமராஜர் அவர்களின் பெயரை அவ்வளவு பெரிய விழாவில் வம்புக்கு இழுத்து விட்ட காரணத்தால்தான் வெண்ணெயிலே ஊசியை ஏற்றுவதைப் போல அவர் பேசியதாக நான் குறிப்பிட வேண்டியதாயிற்று.

இதுபற்றியும் அவர் நான் செய்தது நையாண்டி என்று அவரிடம் பேட்டி எடுத்து வெளியிட்டுள்ள ஆனந்தவிகடன் இதழிலே கூறி அதனை மிகுந்த அக்கறையோடு வெளியிட்டுள்ள ஆனந்தவிகடன் இதழும் "நையாண்டி பேச்சால் கலைஞர் நண்பர் களை இழக்கிறார்" என்று ஒரு பெரிய தலைப்பிட்டு அதனை பிரசுரித்திருக்கின்றது.

நையாண்டிக் கலையிலே எல்லோரையும் மிஞ்சக் கூடிய பெருமை வாய்ந்தது ஆனந்தவிகடன் என்பது நமக்கெல்லாம் தெரியும். உதாரணமாக 1967 ஆம் ஆண்டு தேர்தலின் போது அண்ணாவையும், ராஜாஜியையும், காயிதே மில்லத்தையும், பி.ராம மூர்த்தியையும், ம.பொ.சி.யையும் ஒரு கழுதையிலே உட்கார வைத்து கார்ட்டூன் போட்டு "இந்தக் கழுதை கோட்டை போய்ச் சேருமா?" என்ற கருத்துப்பட நையாண்டி செய்த ஆனந்த விகடனுக்கு நான் நாகரிகமாகப் பேசியது நையாண்டியாகத் தோன்றி அதனை அக்கறையுடன் வெளியிட்டிருக்கின்றது.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான் - தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேதான் தமிழ்நாடு பெயர் மாற்றத்

தீர்மானம் நிறைவேறியது என்பதற்கு இதோ அந்தத் தீர்மானத்தின் மீது சிலம்புச் செல்வர் ம.பொ.சி,. அவர்கள் 18-7-1967 அன்று பேசிய பேச்சின் முக்கியப் பகுதிகளே சான்று பகரும்.

"முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக அல்ல; என்னுடைய உணர்ச்சி பூர்வமாக, உயிர் பூர்வமாக ஆதரிக்கிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்க வேண்டிய புண்ணிய காரியம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிற வரையில் காத்திருந்தது என்கிறபோது இது கடவுளின் கட்டளை என்றே நம்புகிறேன். காங்கிரஸ் கட்சித் தலைவர் தீர்மானத்தை ஆதரித்தது கண்டு பூரிக் கிறேன்.இந்த உணர்வு பத்து ஆண்டு களுக்கு முன்பே இருந்திருந்தால் காங்கிரஸ் கட்சியின் நிலை இன்று வேறாக இருந்திருக்கும் என்பதை பூர்வ நண்பர் என்ற முறையில் அவருக்கு நினைவூட்டிக் கொள்கிறேன்.

தமிழ் இலக்கியங்களில்கூட தமிழ்நாடு என்றில்லை என்றெல்லாம் முன்பு இந்தப் பேரவையில் சொல்லப்பட்டது. அப்படியில்லை. தமிழ் இலக்கியங்களில் தமிழ்நாடு என்று சொல்லப்பட்டதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியத்திற்கு சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனார் என்ற புலவர், "வட வேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். புறநானூற்று பாடல் ஒன்றிலே "வையக வரைப்பின் தமிழகம்" என்றுள்ளது. சிலப்பதிகாரத்தில் "இமிழ் கடல் வரைப்பில் தமிழகம்" என்று இளங்கோவடிகள் கூறியிருக்கின்றார்."

இவ்வாறு சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பேசிய பிறகு, இறுதியாக அண்ணா அவர்கள் உரையாற்றி தீர்மானம் ஒருமனதாக அவையில் நிறைவேறியது. அந்த நாள்தான் 18-7-1967. இந்த உரைகள் அனைத்தும் தமிழகச் சட்டப் பேரவையின் அவைக் குறிப்பிலே இடம் பெற்றுள்ளன. வேண்டுமானால் பேட்டி கொடுத்த திரு. ப. சிதம்பரம் அவர்களும், பேட்டி எடுத்த விகடன் ஆசிரியரும் சட்டப் பேரவை நூலகத்திலே அவையின் நடவடிக்கை குறிப்புப் புத்தகங்களை வாங்கிப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். தீர்மானம் நிறைவேறிய பிறகு அண்ணா அவர்கள் எழுந்து நின்று உறுப்பினர்களை நோக்கி விடுத்த வேண்டுகோள், "நான் தமிழ்நாடு என்று கூறுவேன், நீங்கள் வாழ்க என்று கூற

வேண்டும்" என்று கோரி அவ்வாறே அண்ணா அவர்கள் மூன்று முறை அவையிலே முழங்கி அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் (காங்கிரசார் உட்பட) வாழ்க வாழ்க என்று முழங்கினார்கள். இதுவும் அவை நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெற்றுள்ளது.

இதன்பின்னர் 17-8-1968 அன்று குடியரசு தலைவர் அவர்கள் இந்திய அரசியல் அமைப்பின் 3வது பிரிவின்படி, அட்டவணையில் விவரிக்கப் பட்டிருக்கும் 'சென்னை மாநில (பெயர் மாற்ற மசோதா) 1968' என்ற தலைப்புள்ள நாடாளுமன்ற மசோதா, தமிழகச் சட்டப் பேரவையில் விவாதிக்கப் பட்டு, அதன் பிறகு தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதற்கான விழா வினை உடல் நலிவுற்றிருந்த நிலையிலும் அண்ணா அவர்கள் மருத்துவர்களுடைய சொல்லைக் கேட் காமல் இன்றைய கலைவாணர் அரங்கம், அன்றைய பாலர் அரங்கத்தில் விழா எடுத்து கொண்டாடி, உணர்ச்சி மிக்கதோர் உரையையும் ஆற்றினார். இவையெல்லாம் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத் திலும் நாளேடுகளிலும் வந்த ஆதார பூர்வமான செய்திகளாகும்.

தமிழக மக்கள் அனைவரும் அறிந்த நிகழ்ச்சி இது என்பதால்தான், காமராஜர் பெயரால் ஒரு சரித்திரத் தவறு நடந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இத்தனை விளக்கங்களையும் கூறாமல் சுருக்கமாக சிதம்பரத்தின் பிழையைத் திருத்தினேன். காமராஜரின் புகழைப் பாட எத்தனையோ தகவல்கள் இருக்கும்போது தேவையில்லாமல் பிரச்சினையை அன்றைக்கு நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் எழுப்பிய காரணத்தால் நான் மறுத்திட நேரிட்டதே தவிர யாரையும் நையாண்டி செய்ய வேண்டும் என்பது, என்னுடைய நோக்கம் அல்ல! இந்தப் பிரச்சினை அந்த விழாவுடன் நிறைவுற்றது என்று எண்ணிக் கொண் டிருந்தேன். மீண்டும் ஆனந்த விகடன் இதழில் நண்பர் சிதம்பரம் அவர்கள்தான், அவர் அளித்த பேட்டியிலே நினைவூட்டி; "நான் நண்பர்களை இழக்கிறேன்" என்று வருந்தியிருப்பதால்; என்னைப் பொறுத்தவரையில் எனது நண்பர்கள் யாரையும், சிதம்பரம் உட்பட யாரையும் இழக்க விரும்பமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

5-11-2003

2988. தள்ளாடுவது யார்? தடுமாறுவது யார்?

உடன்பிறப்பே,

1991ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப் பேற்றதும், தி.மு.கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்து வந்த 'மலிவு விலை மது' திட்டத்தை பாபகரமான காரியம் என்பதற்காக ரத்து செய்வதாகக் கூறி; அதுதான் தன்னுடைய முதல் கையெழுத்து என்று ஜெயலலிதா விளம்பரமும் செய்து கொண்டார்.

ஆனால் அவரே "ஊரகப் பகுதிகளில் பல உயிர்களைப் பலி கொண்ட கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதைத் தவிர்க்கும் எண்ணத்துடன் 1-1-2002 முதல் மீண்டும் மலிவு விலை மது விற்பனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்" என்று அறிவித்தார். அதாவது ரத்து செய்ததை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.

அப்படி அறிமுகப்படுத்திய காரணத்தினால் இரண்டு மாதங்களில் 50 கோடி ரூபாய் இழப்பு என்றும் தெரிவித்து, மலிவு விலை மது விற்பனைத் திட்டத்தை 2002ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதியிலிருந்து நிறுத்தி விடுவதாகவும் ஆணை பிறப்பித்தார்.

அதைக் கொண்டு வரும் போது ஊரகப் பகுதிகளில் கள்ளச்சாராயம் அருந்தி பல பேர் சாவதைத் தடுக்கத்தான் என்று தெரிவித்தார்களே, அந்தச் சாவுகள் தொடர்ந்தாலும் பரவாயில்லை என்று மீண்டும் அதை நிறுத்தி அறிவித்தார்களா என்று தெரியவில்லை.

1991ஆம் ஆண்டு மலிவு விலை மதுவினை ரத்து செய்து விட்டு, 1992ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் தேதி முதல் ஜெயலலிதா ஆட்சியிலே பார் நடத்துவதற்கான அனுமதியினை வழங்கினார்கள்.

1993ஆம் ஆண்டு, அதே ஜெயலலிதா ஆட்சியில் ஜூன் திங்கள் முதல் தமிழ்நாட்டில் பார் ஒழிக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

தற்போது கடந்த ஆண்டு, 2002இல் அதே ஜெயலலிதா ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் மீண்டும் பார்களை வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்தார்கள்.

அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா என்ன சொன்னார் தெரியுமா?

"மது அருந்துவோரும், பொதுமக்களும் வைத்த வேண்டுகோளையேற்று, பார்களை வைத்துக் கொள்ள அனுமதிக்கிறோம்" என்றார்.

அப்படியென்றால் 93ஆம் ஆண்டு பார்களை ஜெயலலிதா மூடினாரே, அப்போது மது அருந்துவோரும், பொதுமக்களும் பார்களை மூட வேண்டாமென்று கோரிக்கை வைக்கவில்லையா?

மது அருந்துவோரின் வேண்டுகோளையும் மற்றும் விற்பனையாளர்களின் கோரிக்கையையும் ஏற்று பார்களை வைத்துக் கொள்ள அனுமதி அளித்த ஜெயலலிதா, இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டாமென்ற விவசாயிகளின் கோரிக்கையையும், பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கும் அரசு அலுவலர்களின் கோரிக்கையையும் மாத்திரம் ஏற்க மாட்டார்; அதனால் அவருக்கு என்ன இலாபம்?

ஒருவேளை மது விற்பனையாளர்கள் கோரிக்கை வைத்ததைப் போல, விவசாயிகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் கோரிக்கை வைக்கத் தெரிய வில்லையோ என்னவோ? பாவம்; தெரிய வில்லையோ; அல்லது வறுமைத் தொல்லையோ?

1992ஆம் ஆண்டு பார்களையெல்லாம் ஜெய லலிதா திறக்க முடிவு செய்தார்.

1993ஆம் ஆண்டு ஜூன் திங்களில் பார்களை யெல்லாம் ஜெயலலிதா மூடினார்.

2002ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மீண்டும் பார்களைத் திறக்க ஜெயலலிதா அனுமதித்தார்.

இது மதுக் கொள்கையிலே தள்ளாட்டமா? அல்லது தடுமாற்றமா? ஜெயலலிதாதான் விளக்க வேண்டும்.

1993ஆம் ஆண்டு பார்களை ஜெயலலிதா மூடியபோது என்ன சொன்னார் தெரியுமா?

"பொதுமக்களின் எதிர்ப்பு இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பல இடங்களில் இவற்றால் குறிப்பாக பெண்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்கள் குறித்து பல புகார்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய மது அருந்தும் இடங்களில் கள்ளத்தனமாக தயாரிக்கப் பட்ட மதுவகைகள் பரிமாறப்படுவதும் தெரியவந்தது. எனவே பொதுமக்களின் பொதுவான கருத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் அரசு பார் உரிமங்களை 1-6-1993 முதல் வழங்குவதில்லை என்று முடிவு செய்துள்ளது. இத்தகைய நடவடிக் கையால் அரசின் அனுமதி பெற்ற இடங் களில் கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்ட மது விற்பனை செய்யும் நிலை அறவே ஒழிக்கப்படும்"

என்று கூறினார். பொது மக்களின் கோரிக்கையையேற்று பார்கள் ஒழிக்கப்பட்டு விடும் என்று 1993ஆம் ஆண்டு கூறிய ஜெயலலிதா, கடந்த 2002ஆம் ஆண்டு பார்களைத் திறக்க எப்படி அனுமதியளித்தார்? இப்போது சொல் உடன்பிறப்பே; யாருக்குத் தடுமாற்றம்? யாருக்குத் தள்ளாட்டம்?

மேலும் 93ஆம் ஆண்டு பார்களை மூடும்போது, பார்களை மூடுகின்ற இந்த முடிவில் இனி எவ்வித மாற்றமும் கிடையாது என்றாரா இல்லையா? அதற்குப் பிறகு கடந்த ஆண்டு எப்படி இந்த வீராங்கனை(?) - வைராக்கிய மாதா (?) மீண்டும் பார்களுக்கு அனுமதி கொடுத்தார்?

அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு கழக ஆட்சிக் காலத்தில் ஏலத்தின் மூலம் லைசென்ஸ் வழங்கப்பட்டு வந்தது. அது முறையாக எந்தவிதமான குழப்பமும் இன்றி நடந்தது. கழக ஆட்சியில் மது சில்லறை விற்பனைக்கு வழங்கிய லைசென்ஸ் 31-5-2001ஆம் தேதியோடு முடிவடையவிருந்ததால், அந்தக் கடைகளுக்கு மறு ஏலம் விடுவதற்கான தேதி 19-5-2001 முதல் 23-5-2001 வரை என்று குறிப்பிடப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்ட

நிலையிலேதான் ஆட்சி மாறி, ஜெயலலிதா ஆட்சி 14-5-2001இல் பொறுப்புக்கு வந்தது.

பொறுப்புக்கு வந்ததும், நான்கே நாட்களில் 18-5-2001 அன்று மதுக்கடைகள் ஏலத்தை உடனடியாக நிறுத்திட வேண்டுமென்றும், அப்போதிருந்த லைசென்ஸ் காலத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

பின்னர் ஏல முறையை மாற்றி, குலுக்கல் முறை யில் லைசென்ஸ் வழங்குவதென்று முடிவெடுத்து அவ்வாறே வழங்கினார்கள். ஜெயலலிதா நேற்றைய தினம் அவையிலே படித்த அறிக்கையில் அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆண்டு கொண்டு வந்த முறையின் காரணமாக அரசுக்கு அதிக வருவாய் கிடைத்ததாகவும், கடந்த ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட குலுக்கல் முறை முந்தைய நடை முறையை விட மிகவும் மேம்பட்டதாகும் என்றும் பாராட்டிக் கொண்டார். ஆனாலும் அந்த முறையை தற்போது மாற்றுகிறார் என்றால் என்ன காரணம்? அந்த மதுபான சில்லறைக் கடைகளை நடத்தி வந்தவர்கள், அதாவது அந்தச் சிற்றரசர்கள் முறையாகக் கப்பம் கட்டவில்லையோ?

2001-2002ஆம் ஆண்டு ஜெயலலிதா கொண்டு வந்த புதிய குலுக்கல் முறையின் மூலம் 6000 மது பான கடைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. அந்த லைசென்ஸ் மூன்றாண்டுகளுக்குத்தான் என்றும் கூறப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கும்போது, 15 சதவிகிதம் கடந்த ஆண்டை விட அதிகமாக அவர்கள் உரிமத் தொகையாக கட்ட வேண்டும் என்றும் அந்த ஆணையில் தெரிவிக்கப் பட்டது. ஓராண்டு காலம் முடிந்ததும் 2002ஆம் ஆண்டு மீண்டும் ஓராண்டு காலத்திற்கு தங்கள் உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்காக விண்ணப்பம் செய்தார்கள். ஆனால் ஜெயலலிதா அரசு கடந்த ஆண்டு அந்த உரிமங்களை புதுப்பிக்க முடியாது என்று மறுத்ததோடு, அவர்களின் உரிமங்களை திடீரென்று ரத்து செய்தது.

உரிமங்களை ரத்து செய்ததையொட்டி, மதுபான சில்லறை வியாபாரிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து அரசின் ஆணைக்கு இடைக்காலத் தடை பெற்றார்கள். மேலும் நீதிபதி லைசென்ஸ் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு அப்பீல் செய்தது. இதில் மேலும்

ஓராண்டு காலத்திற்கு உரிமத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று ஆணையிட்டதோடு, இந்தப் பிரச்சினையில் ஏற்பட்ட கால தாமதத்திற்கு அரசுதான் காரணம் என்று நீதிபதிகள் குற்றஞ்சாட்டினர்.

இந்தத் தீர்ப்பையும் எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றம் 30-7-2002 அன்று வழங்கிய தீர்ப்பில் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க மறுத்து விட்டது. ஆகஸ்ட் திங்கள் இறுதியில் வழங்கிய தீர்ப்பிலும் தமிழக அரசின் ஆணை செல்லாது என்று தெரிவித்ததோடு, கடைகளின் எண்ணிக்கையை அரசு உயர்த்தியதையும், குறுமத் தொகையை உயர்த்தியதையும் மட்டும் ஏற்றுக் கொண்டது.

தள்ளாட்டமும், தடுமாற்றமும் யாருக்கென்று சட்டப் பூர்வமாக விளங்கி விட்டதல்லவா?

மதுபான சில்லறை வியாபாரிகள் உச்சநீதிமன்றம் வரை சென்று வெற்றி பெற்றதுதான் ஜெயலலிதா அரசின் இன்றைய முடிவுக்குக் காரணமே தவிர வேறல்ல. இந்த முறையும் மதுபான சில்லறை வியாபாரிகள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக் கிறார்கள். இடையில் நமக்குக் கிடைத்த ஒரு செய்தி; கடைகள் தோறும் 20 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யத் திட்டமிட்டு, பிறகு அது வசூலிக்கப்படாமலே விடப்பட்டு விட்டதாகவும், ஆனால் அரசின் தற்போதைய முடிவிற்குப் பிறகு கடைகள் தோறும் 50 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப் போவதாகவும் சொல்லப்படுகின்றது.

இப்போது ஜெயலலிதா அரசு; அரசே மது வியாபாரம் செய்வதாகச் சட்டமே கொண்டு வந்த பிறகு இந்த முடிவிலிருந்து பின் வாங்கப் போகிறதா என்று தெரியவில்லை. எது எப்படியிருந்த போதிலும், கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் ஜெயலலிதா அரசு மது விற்பனைக் கொள்கையிலே எப்படி யெல்லாம் தள்ளாடியிருக்கிறது என்பதை இந்த ஆதாரபூர்வ விளக்கத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம்; இதெல்லாம் மறந்து போய் இருக்கும் என்று எண்ணிக் கொண்டுதான் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவை யிலே மதுக் கொள்கையில் யாருக்குத் தள்ளாட்டம் என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

மதுவிலக்கை முதலில் ரத்து செய்தது தி.மு.கழக ஆட்சிதான் என்றெல்லாம் ஜெயலலிதா மறைமுக மாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். தி.மு.கழக ஆட்சி யில் அந்த முடிவெடுப்பதற்கு முன்பு கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில் பேசிய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அப்போதிருந்த சூழ்நிலையில் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து நீண்ட நேரம் பேசியதும், அதற்குப் பிறகு "ஆனந்தவிகடன்" வார இதழில் அவர் எழுதிய "நான் ஏன் பிறந்தேன்" என்ற தொடரில் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டியதின் அவசியம் குறித்து எழுதியதும் அப்போது இந்த அம்மையாருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

அது மாத்திரமல்ல, அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது தமிழகத்திலே மதுவிலக்கு கொள்கை என்னவாயிற்று? எம்.ஜி.ஆர் ஆட்சியில் தமிழகத்திலே 9,541 கள்ளுக்கடைகளும், 5,067 சாராயக் கடைகளும், 1,208 பிராந்தி கடைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன, என்ற புள்ளி விபரத்தை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நானே 9.3.1982 அன்று சட்டப்பேரவையில் விளக்கிப் பேசியிருக் கிறேன்.

தி.மு.கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நல்ல திட்டங்களுக்கெல்லாம் மூடு விழா நடத்திய ஜெயலலிதா, மது வணிகத்தைத் தொடராமல் மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதை யார் தடுக்கிறார்கள்? செய்ய வேண்டியதுதானே?

தான் பேசுவதெல்லாம் அனுமதிக்கப்படும், எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கின்ற பதில்கள் எல்லாம் அகற்றப்படும் என்ற ஒரே தைரியத்தில் மனம்போன போக்கில் ஜெயலலிதா பேசுவது; ஆட்சி தடுமாறு கிறது; தள்ளாடுகிறது என்பதைத்தான் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இதுதான் உண்மை.

அன்புள்ள,

மு.க.

7-11-2003

2989. பழனிசாமியும் ஜெயலலிதாவும் படிப்பதற்காக!

உடன்பிறப்பே,

ஒரே நாளில் ஒரே பிரச்சினையில் இருவிதமான வேறுபட்ட கருத்துக்களையோ, முரண்பட்ட செய்திகளையோ தெரிவிப்பதில் ஜெயலலிதாவுக்கு இணை ஜெயலலிதாவேதான்.

"புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் கர்நாடக அரசுடன் பல முறை பேச்சுவார்த்தை நடத்தினார். அதனால் எந்தப் பலனும் இல்லை. அதற்குப் பிறகு 1996 முதல் 2001வது ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில் இருந்த போது அன்றைய முதல் அமைச்சர் கருணாநிதி பல முறை கர்நாடக முதல் அமைச்சருடன் பெங்களூர் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார்"

என்று 6-11-2003 காலையில் சட்டமன்றப் பேரவையில் கூறி, கர்நாடக அரசின் மீதும், காங்கிரஸ், ஜனதா தள கட்சி, பாரதிய ஜனதா கட்சி ஆகியவற்றின் மீதும் கடுமையாகக் குற்றஞ்சாட்டி, அந்த மூன்று கட்சிகளையும் தேர்தல் நேரத்தில் தமிழக மக்கள், குறிப்பாக காவேரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் விரட்டியடிப்பார்கள் என்றும் பேசியது ஜெயலலிதாதான்.

காவேரிப் பிரச்சினையில் தி.மு.கழகமும், கருணாநிதியும் தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்து விட்டார்கள் என்று அதே நாளில் பேரவையில் கூறியதும் ஜெயலலிதாதான்.

இவ்வாறு உரையாற்றியுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும், "தி.மு.க.வும் காவேரிப் பிரச்சினையில் அரசியல் நடத்துகிறது, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறி விட்டது" என்று நம்மையும், அ.தி.மு.க.வுடன் இணைத்துப் பேசுவதில் ஏதோ ஒரு இன்பம் எப்போதும் காணுகின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் ஜி பழனிச்சாமி

போன்றவர்களுக்கும் எத்தனை முறை விளக்கம் சொன்னாலும்; அவர்கள் நம்மீது கொண்டுள்ள காழ்ப்பின் காரணமாக; திரும்பத் திரும்ப அதையேதான் சொல்லிக் கொண்டிருப்பார்கள் என்றாலுங்கூட கள்ளங் கபடமற்ற தமிழக விவசாயப் பெருங்குடி மக்களையும், பொதுமக்களையும் இவர்கள் விரிக்கும் வலையிலிருந்து காப்பாற்றுவதற்காக நான் ஏற்கனவே குறிப்பிட்டு எழுதியுள்ள விளக்கங்கள் சிலவற்றை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினைக்கு இன்றைக்கு வயது 35. 1968இல் அண்ணா முதல்வராக இருந்தபோது இந்தப் பிரச்சினைக்காக தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தை, அங்கும் இங்கும் மத்திய மாநில ஆட்சிகள் மாறி மாறி வந்த போதிலும் இன்னும் முற்றாக முடிந்தபாடில்லை.

கர்நாடக அரசு அங்குள்ள எல்லா எதிர்க்கட்சிகளையும் அரவணைத்து ஆதரவு பெற்று - அந்தக் கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் மதிக்கக் கற்றுக் கொண்டு; ஒரே குரலில் அந்தப் பிரச்சினையில் ஒற்றுமையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்க; இங்கே மட்டும் ஜெயலலிதா எதிர்க்கட்சியில் இருக்கும் போது ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டும் - ஆட்சியில் இருக்கும்போது ஏனோதானோவென்று செயல்பட்டும்; காவிரிப் பிரச்சினையில் பெருங் குழப்பத்தையே உருவாக்கிக் கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சிகளை, குறிப்பாகத் தி.மு.கழகத்தை பொறுப்பற்ற முறையில் பொல்லாங்கு கூறி குற்றம் சாட்டுவதே; ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் நடத்தும் கைங்கர்யமாக இருந்து வருகிறது.

சென்ற மாதம், சென்னைக்கு தம்பி முரசொலி மாறன் உடல்நிலை விசாரிக்க மருத்துவமனைக்கு வந்த பிரதமர் வாஜ்பயிடம் நான் முக்கியமாக வைத்த கோரிக்கையே காவேரி ஆணையத்தை உடனே கூட்டுங்கள் என்பதுதான். இதுபோன்ற முக்கிய பிரச்சினைகளில், பொதுப் பிரச்சினைகளில் ஆளுங் கட்சிதான் முன் நின்று முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது ஆட்சி நிர்வாகத்தின் அரிச்சுவடி படித்தவர்கள்கூட அறிந்த உண்மையாகும்.

ஆனால்; ஆடத் தெரியாதவர்கள் மேடையைக் குறை சொல்வது போல ஆட்சி செய்யத் தெரியாத ஜெயலலிதா அடுத்துள்ள மாநிலங்களுடன் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளைக்கூட அறிந்து கொள்ளாமல்; ஆணவம் கொண்டு அலைவதால்; வளமார் தஞ்சைகூட இன்று வறட்சியின் பிடியில் சிக்கியது என்பதை தனது வாய் ஜாலத்தினால் மறைக்கப் பார்க்கிறார்.

ஆயினும்; எதிர்க்கட்சியில் தி.மு.க. இருந்தாலும்; பிரதமரிடம் காவேரி ஆணையத்தைக் கூட்டுக என்று நான் கேட்ட பிறகுதான்; ஊட்டியிலிருந்த ஜெயலலிதா, அவரும் பிரதமருக்கு அங்கிருந்து ஒரு கடிதம் டெல்லிக்கு எழுதுகிறார்; காவேரி ஆணையத்தைக் கூட்டுக என்று!

எதிர்க்கட்சிக்குள்ள அக்கறை; ஆளுங்கட்சிக்குத் தாமதமாக வந்ததை சுட்டிக்காட்டினால்; அது ஒரு குறையா? குற்றமா? அல்லது சிலர் விமர்சிப்பது போல அரசியலா? சென்னைக்கு வந்த பிரதமரைச் சந்திக்காமல்கூட ஊட்டிக்கு அவர் ஓடி விடுவார்; ஆணையத்தைக் கூட்டுக என்று எதிர்க்கட்சிகள் கேட்கவேண்டும்.

காவேரி பிரச்சினையில் ஜெயலலிதா அடிக்கடி இப்படி முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்த போதிலும், அதைப்பற்றி நாம் கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல், நமக்கென்ன வந்தது என்று நினைக்காமல் விழுப்புரம் மாநாட்டில் முதல் தீர்மானமாகவே காவேரி ஆணையத்தை செம்மையாகச் செயல்படுத்தி தமிழக விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்திடுக என்று மத்திய அரசை வலியுறுத்தி யிருக்கிறோம்.

பலமுறை பேசி பயனளிக்காத காரணத்தால், இப் பிரச்சினைக்காக நடுவர் மன்றம் ஒன்றை மத்திய அரசு அமைத்திட வேண்டுமென்று முதல் கடிதம் எழுதப்பட்டதும், அதற்காக மத்திய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையிலே முதன்முதலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், 1989இல் வி.பி. சிங் பிரதமராக இருந்தபோது நடுவர் மன்றம் கோரி மீண்டும் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதும் கழக ஆட்சியிலேதான்.

உச்சநீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நடுவர் மன்றம் குறித்து மத்திய அரசின் கருத்தை நீதிமன்றம் கேட்டது. அது குறித்து பிரதமர் வி.பி.

சிங் அவர்கள் தமிழக அரசின் கருத்தைக் கேட்டார். அப்போது பேச்சுவார்த்தை பயனில்லை. எனவே நடுவர் மன்றம்தான் தேவை என்று நாம் தெரிவித்த கருத்தை, பிரதமரும் ஏற்று நீதிமன்றத்திற்கு அதனைத் தெரிவித்த காரணத்தால்தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

நடுவர் மன்றத்தில் இடைக்காலத் தீர்ப்பு ஒன்றினை அளித்திட வேண்டுமென்று கோரிக்கை வைத்ததும் கழக ஆட்சியில்தான்.

இடைக்காலத் தீர்ப்பு வழங்கிட தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் தெரிவித்த போது, கழக ஆட்சியில் உச்ச நீதி மன்றத்தை அணுகி, இடைக்காலத் தீர்ப்பினை வழங்கலாம் என்று அனுமதியைப் பெற்றுத் தந்ததும் நாம்தான்.

அந்தத் தீர்ப்புக்குப் பிறகு ஐந்தாண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த ஜெயலலிதாவினால் அதன் பரிந்துரைகளை அமல்படுத்தச் செய்ய முடியவில்லை. அந்தத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்றுக் கொள்ளக்கூட முன்வரவில்லை.

1996இல் மீண்டும் தி.மு.கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் பிரதமரை பலமுறை வலியுறுத்தி 1998ஆம் ஆண்டு காவேரி பிரச்சினையில் ஒரு ஒப்பந்தம் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. காவேரி ஆணையம் என்ற ஓர் அமைப்பே அப்போதுதான் (7-8-1998) ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்தில் உள்ள எதிர்க் கட்சிகள் எல்லாம் அந்த ஒப்பந்தத்தை வரவேற்றன. ஏடுகள் பாராட்டி தலையங்கங்கள் எழுதின.

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையிலே காவேரி ஆணையம் என்பது பல் இல்லாத ஆணையம் என்றும், செயல்பட இயலாத வாரியம் என்றும் விமர்சித்தார். அதன்பிறகு அந்த ஆணையக் கூட்டங்களில் தமிழ்நாடு அரசு கலந்து கொள்ளாது என்றார். பிறகு அவரே சென்று கலந்து கொண்டு கூட்டத்திற்கு நடுவே வெளிநடப்பு செய்தார். காவேரி நீரை நமக்குத் தர வேண்டிய பொறுப்பிலே உள்ள கர்நாடக அரசின் முதல்வரையும் அமைச்சர்களையும் தனிப்பட்ட முறையில் தாக்கி விமர்சித்தார்.

இத்தகைய பொறுப்பற்ற காட்டுக் கூச்சல்களை பொருட்படுத்தாமல்; காவேரி பிரச்சினையிலே கழக அரசும், கழகமும் எந்தெந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ

அத்தனை முயற்சிகளையும் எடுத்துள்ளது. அந்த வகையில் ஜெயலலிதா அரசு எப்படி முரண்பாடாகச் செயற்பட்டாலும், மத்திய அரசும், குறிப்பாக காவேரி ஆணையத்தின் தலைவராக இருக்கின்ற பிரதமர் வாஜ்பய் அவர்களும் தமிழ்நாட்டிலே உள்ள காவேரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் வளம் சேர்த்திட இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல தீர்வு ஏற்படுத்த ஒத்துழைப்பு தர வேண்டும் என்பதையும் வலியுறுத்தியே டிசம்பர் 1ந்தேதி மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல் அறப்போர் நடத்தவிருக்கிறோம்.

இவ்வளவு விபரங்கள் இருக்கும்போது; அவற்றைத் தனக்கு வசதியாக மறைத்துக் கொண்டு ஜெயலலிதா தி.மு.க.வுக்கு "துரோகப் பட்டம்" வழங்குகிறார். தன்மீது எம்.ஜி.ஆர்.; தனது செல்வாக்கு கண்டு பொறாமைப்படுவதாக அன்றைய பிரதமர் ராஜிவ் காந்திக்கு தன் கைப்பட கடிதம் எழுதிய இந்த "மகராசி"க்கு துரோகத்திற்கு அர்த்தம் தெரியாது போலும்; செயலில் காட்டத்தான் தெரியும் போலும் - அதுவும் அவர் கைப்பட எழுதிய கடித ஆதாரத்தின் மூலம்!

அதைப்போலவே வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற வகையில் பேசக் கூடியவராக, தி.மு.க. என்றாலே ஓர் ஒவ்வாமை (அலர்ஜி) யுடன் வெறுப்புப் பார்வை வீசக் கூடியவராக; நண்பர் பழனிசாமி, எம் எல்.ஏ., அவர்களும்; தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது அனைத்துக் கட்சிகளைக் கலந்து பேசி, அரும்பாடுபட்டு அமைந்திட்ட "காவேரி ஆணையம் குறித்து அவரது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு 9.8.98 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தை இப்போது ஒரு முறை படித்துப் பார்ப்பது நல்லது.

அந்தத் தீர்மானம் வருமாறு:

"நீண்ட காலமாகத் தீர்வு ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழியில் ஒரு மைல் கல்லாக இம்முடிவு ஏற்பட்டுள்ளது, வரவேற்கத் தக்கது. இரு மாநில விவசாயிகள் நலனும் பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்ப்பை அமலாக்கக் காவிரி நதி நீர் ஆணையம் ஏற்பட்டுள்ளது. 205டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நடுவர் மன்றத்தின்

இடைக்காலத் தீர்ப்பை , கர்நாடக அரசு அங்கீகரிக்காமல் இருந்தது. இந்த முடிவின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக் கொண்டிருப்பது தமிழக விவசாயிகளின் சாகுபடிக்கு உத்தரவாதமளிப்பதாக அமைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ்நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சி மேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும் தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வரவேற்கிறது" (இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றிய செயற் குழுவில் பழனிச்சாமி அவர்களும் இடம் பெற்றிருப்பார் என்று நம்புகிறேன்)

உடன்பிறப்பே;

இத்தனைக்கும் பிறகு ஒன்று சொல்லுகிறேன்; உண்மையில் தூங்குபவர்களைத்தான் எழுப்ப முடியும்; தூங்குவது போல பாசாங்கு செய்பவர்களை எழுப்பவே முடியாது.

அன்புள்ள,

மு.க.

08-11-2003

2990. நவ. 12. மாநிலமுழுதும் மனிதச் சங்கிலி!

உடன்பிறப்பே,

* 125வது ஆண்டு நிறைவு விழாவை அண்மையில் கொண்டாடிய 'இந்து' ஏடு - 61 ஆண்டுகள் நிறைவு பெற்ற 'முரசொலி' ஏடு; இரண்டும் ஜனநாயக விரோத ஆட்சியின் கழுகுக் கண்களுக்கும், கரடி நகங்களுக்கும் இரையாகித்தான் தீர வேண்டுமென்று பழிவாங்கும் முரட்டுக் கயிறு வீசப்பட்டிருக்கிறது.

* இயக்கத்தின் ஈட்டி முனையாக இருந்து மறைந்த இளம்பரிதியின் செல்வன், எனக்குயிரான உடன்பிறப்புகளில் ஒருவன் பரிதி இளம்வழுதி கூண்டில் அடைக்கப்பட்டுவிட்ட செய்தி.

* ஒருபுறத்திலே ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலமாக உயிரைக் கேள்விக்குறியாக்கிக் கொண்டு என் உள்ளத்தை உருக்கித் துடிதுடிக்கவிட்டவாறு மருத்துவமனையில் இருக்கின்ற என் அன்புக் கண்மணி, நான் தூக்கி வளர்த்த பிள்ளை முரசொலி மாறன்,

* இன்னொருபுறத்திலே என் பாசமுள்ள தம்பி பசும்பொன் தா.கிருட்டிணன் உயிரைச் சதிச் சூழ்ச்சி செய்து மாய்த்துவிட்ட மாபாவிகள்; ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது போல அவர்கள் இட்டுக் கட்டிய பொய் வழக்கில் சிக்க வைக்கப்பட்டு நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்க வைக்கப் பட்டுள்ள அன்பு மகன் அழகிரி,

* இவை போதாதென்று; ஏற்கனவே 1992இல் சட்டப் பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்ட இன்னொரு இனிய மருமகன் முரசொலி செல்வத்துக்கு மீண்டும் சிறைத் தண்டனை, அதற்காக அந்த செல்வத்தைத் தேடி போலீஸ் குழு பெங்களூர் புறப்பாடு.

* இப்படி என்னொருவனின் குடும்பத்திற்கும் -

* என்னையும் இணைத்துக் கொண்டுள்ள கழகக் குடும்பத்து உடன்பிறப்புகளுக்கும் -

* ஜனநாயகப் பூங்காவில் நம்முடன் நண்பர்களாக உலவிய 'இந்து' போன்ற இதழாளர்கள் பலருக்கும்;

* குறிப்பாக நக்கீரன் கோபாலுக்கும்;

* இவர்களுக்கு முன்னரே எழுச்சிமிகு இனிய தம்பி வைகோ மற்றும் அவரைச் சார்ந்தோர்

* அன்பு நண்பர் பழ. நெடுமாறன், அவரைச் சார்ந்தோர் எனப் பலருக்கும் கடுஞ்சிறை - கொடுஞ் சிறை

* நாடாளுமன்ற உறுப்பினர், மணிசங்கர அய்யர் அரசு விழாவில் அவமானப்படுத்தப்பட்டு தாக்கப்பட்ட அவலம்.

இத்தனையும் என் மனத்தில் புயல் நேரத்து அலைகளாகப் பாய்ந்துகொண்டிருக்கும் நிலையில்தான் இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன்.

தமிழ்நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்றே தெரியவில்லை! எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் திகைத்துப் போய் நிற்கின்றனர்; சர்வாதிகாரம் நகைத்துப் பேயாட்டம் போடுகிறதே. என் செய்வது எனக் குழம்பிப் போய் நிற்கின்றனர்.

* நியாயம் - நேர்மை - நன்னெறி அனைத்தையும் பகைத்து நிற்கும் ஓர் ஆட்சியின் ஆணவத்தை அடக்க; தயக்கத்தை உதைத்துத் தள்ளி; தடந்தோள் உயர்த்தி நிற்கும் நாள்; எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு மட்டுமல்ல; எம் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமே வந்துவிட்டது என்பேன்.

அந்த நாள்தான் அநியாய ஆட்சியை - அக்கிரம ஆட்சியை - அராஜக ஆட்சியை - சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து முழங்கிடும் நாள்.

நவம்பர் 12ஆம் நாள் - தமிழக முழுதும் மாவட்டத் தலைநகர்களில் - மற்றும் நகராட்சி மன்றங்கள் அமைந்த முக்கிய நகர்களில்; மனிதச் சங்கிலி மனிதச் சங்கிலி கறுப்பு சின்னமணிந்து; கருங் கடலாய்க் காட்சி தரக் கூடிய மனிதச் சங்கிலி!

அணிவகுத்திடும் அந்த மனிதச் சங்கிலியில்
அனைத்துக் கட்சித் தலைவர்களும்,
செயல்வீரர்களும்,
உடன்பிறப்புகளும்,

ஆங்காங்கு அமைதியாக நடத்திட -
கட்டுப்பாடு காத்து நடத்திட -
கயமைத்தனம் ஆட்சி புரியும் காலத்தை அகற்றிட -
கண்ணியம் காத்து நடத்திட முன்வாரீர் என
அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க

09-11-2003

2991. கூண்டு கண்டேன்;
குதூகலம் கொண்டேன்!

1992ஆம் ஆண்டு இதே ஜெயலலிதா ஆட்சியில் முரசொலி மீது உரிமைப் பிரச்சினை என்ற பேரால் முரசொலி ஆசிரியர் செல்வம் அவர்களை சட்டமன்றத்தில் - கூண்டு செய்து கூண்டில் நிறுத்தி - தண்டனை வழங்கப்பட்டது. அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம் இது.

உடன் பிறப்பே,

"சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லை யென்றாலும்

பொங்குற்றே சிங்கம் மடிந்ததென்றால் நரிமனம் பூரிக்காதா?"

இப்படிப் புரட்சிக்கவிஞர் ஏக்கமுற்று இதயம் குமுறிகண்ணீர் சிந்தினார்.

தந்தை பெரியார் தவித்துப் போனார். கண்ணீர்க் கடலானார்.

அறிஞர் அண்ணா எழுத்திலே அவரது இதயத்திலிருந்து கசிந்த இரத்தக் கண்ணீரைக் கண்டோம்.

"கோமானே யாம் அழுதழுது வடித்த கண்ணீர்
ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றிகொள்ளும்"

என நானும் இரங்கல் கவிதை வரிகளைத் தீட்டினேன்.

இந்தியாவின் ஆலோசகராக இங்கிலாந்து அரசின் வேண்டுகோளின்பேரில் இலண்டன் மாநகருக்குச் செல்ல அனிபால் எனும் விமானம் ஏறி, நீதிக்கட்சியின் தன்னேரில்லாத் தளபதி சரி, ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் பயணம் செய்தபோது அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து, தமிழர்களின் செல்வத்தை - திராவிடர்களின் செல்வத்தை நம்மிடமிருந்து பிரித்துத் தொலைத்தது.

1940ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள்தான் இந்தத் தாங்கமுடியாத சோகம் தமிழ் மக்களை நிலைகுலையச் செய்தது. காணாமற் போனதாகச் சொல்லப்பட்ட அனிபால் விமானம்; எங்கேயாவது ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுப் பன்னீர்செல்வம் பத்திரமாக உயிரோடிருக்கிறார் எனச் செய்தி வராதா என்று வானொலிப் பெட்டிகள் இருக்குமிடங்களில் எல்லாம் செய்தியை எதிர்பார்த்து திரள் திரளாகக் காத்திருந்தவர்களில் நானும் ஒருவன்.

தமிழ்நாட்டுச் செல்வம் மட்டும் அல்லவே அவர், எங்கள் திருவாரூருக்கு அடுத்த பெரும் பண்ணையூரில் பிறந்து வாழ்ந்த செல்வமும் ஆயிற்றே!

இலண்டன் பயணத்தை முன்னிட்டு அவருக்கு ஆரூரில் தேநீர் விருந்தளித்து, அண்ணன் அழகிரிசாமி அவரைப் பாராட்டி வழியனுப்பி வைத்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு களிப்பற்ற இளைஞர்களில் நானும் ஒருவனாயிற்றே!

1940 மார்ச்சில் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும் போதுதான்

அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந்தாலும், மனத்தில் நிறைந்திருக்கும் பன்னீர்செல்வத்தின் நினைவாக அவனுக்கு நான் பன்னீர் செல்வம் என்று பெயரிட்டேன்.

அந்தப் பன்னீர்செல்வம்தான் கடந்த 21ஆம் நாள் சட்டப்பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்!

செல்வம் பிறந்தபோதே, என் தாயார் என்னைப் பார்த்து, உனக்கு ஒரு பெண் பிறந்தால் அதற்கு செல்வி என பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டுமென்று அன்புக்கட்டளை பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறைவேறியது. ஆனால் அதை அந்த அன்புப் பாட்டியிருந்து பார்க்கவில்லை.

அண்ணா தலைமையில், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமக்களை வாழ்த்தினர்.

அந்த மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்தபோதுகூட எனக்கு அத்தனை மகிழ்ச்சியில்லை!

புதுக்கோட்டை, திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும்போது தாம்பரம் ரயிலடியில் வாங்கிப் படித்த ஆங்கிலம், தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டப்பேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்தபோதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால்; என்னகம் வாடிப்போயிருக்கும்; அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்; படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு படத்தை அரசாங்க செய்தித் துறையே எடுத்து, அந்தத் துறையே அல்லவா எல்லா ஏடுகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது!

இது, மேலும் பூரிப்பு வழங்கும் தகவல் அல்லவா!

உடன்பிறப்பே! அந்தப் படத்தை உற்றுப் பார்த்தேன். செல்வம் நிற்கும் கூண்டுக்கு அருகே அறிஞர் அண்ணாவின் படம், நான் முதல்வராக இருந்தபோது பிரதமர் அன்னை இந்திராகாந்தியை அழைத்து திறந்து வைக்கப்பட்ட படம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற எழுத்துக்கள் ஒளிவிடுகின்றன பார்த்தாயா!

உச்சநீதிமன்ற ஆணையை மதிக்கமாட்டேன் என்று ஆரவாரம் செய்யாமல்; உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்று - செல்வம், அந்தக் கூண்டுக்குள் நிற்கும்போது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணாவின் மொழிகள் செல்வத்தின் செயலைப் பாராட்டுவது போலவே அமைந்து ஒளிவிடுகின்றன அல்லவா?

அண்ணா, செல்வத்தை - மிகச் செல்லமாக "செல்வா'' என்றுதான் அன்பொழுக அழைத்து முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுவார்.

அடையாறு மருத்துவமனையில் அண்ணாவுக்கு இறுதியாக ஓர் அறுவை சிகிச்சை அவசியம் தேவை என முடிவு செய்யப்பட்டபோதுகூட, அண்ணா அவர்கள் அந்த உடல் நலிவுடனும் "செல்வா எங்கே?" என அழைத்து, செல்வம் அவர் அருகில் சென்றதும் "செல்வா வீட்டில் உள்ள பிள்ளைகளை

அழைத்து வா நான் பார்க்க வேண்டும்” என்று கூறியதை எப்படி மறக்க முடியும்.

அந்தப் பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கண்டு! செல்வம். மன்றத்தில் ஜனநாயகம் போற்றிய பல தலைவர்களின் படங்கள்!

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்”

எனக் குறள் கூறிய வள்ளுவரின் படமும்கூட!

செல்வத்தை இன்று ஆசிரியராகப் பெற்றுள்ள முரசொலிக்கு வயது ஐம்பது!

இந்த முரசொலி 1942இல் தொடங்கப்பெற்று 1949இல் முதல் ஆண்டுவிழா கொண்டாடியபோது வருகைதந்து வாழ்த்தியவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் பேராசிரியர் அன்பழகனார் அவர்களும்!

இன்று அந்த முரசொலியைக் கூண்டிலேற்றியது சரியென்று வாதாடுகிறார்; பேரவையில் நாவலர் நெடுஞ்செழியன்!

இது பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் பழி வாங்கும் செயல் என்று கண்டித்துக் கறுப்புச் சட்டை அணிந்து திருச்சி வீதியிலே மனிதச் சங்கிலி அறப்போருக்குத் தலைமையேற்று கொளுத்தும் வெயிலில் நிற்கிறார் பேராசிரியர்!

என்னே அரசியலின் விசித்திரம்!

“எல்லோரையும் தாங்கிட ஒரு தாயின் வயிறு போதாத காரணத்தால் தனித்தனித் தாய்களின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்”

எனப் பெருமையுடன் கூறிப் பெருமிதம் கொண்ட அண்ணா அவர்கள், இன்றில்லாதது அவர் வரையில் அவருக்குக் கிடைத்த பேறுதானே!

இல்லையா உடன்பிறப்பே! எப்படியோ கூண்டு கண்டேன், நான் குதூகலம் கொண்டேன்.

அன்புள்ள,

மு.க.

09-11-2003

2992. மகாசமுத்திரமாகட்டும்; மனிதச் சங்கிலி!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பொறுப் பேற்றவுடன் தமிழ்நாட்டை முதல் இடத்திற்குக் கொண்டு வரப் போகிறேன் என்று சொன்னார். எல்லாவற்றிலும் நான் தான் முதலிடம், முதலிடம்! என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தவர்; உண்மையில் முதல் இடத்துக்கு வராவிடினும் மோதல் இடத்துக்கு வந்து விட்டார். அவர் முதல் இடத்திற்கு கொண்டு வந்தது எவை என்பது குறித்து சிறு பட்டியல் இதோ!

வந்ததும் வராததுமாக ஒரு முன்னாள் முதலமைச்சர் வீட்டில் நள்ளிரவில் நுழைந்து, காவல்துறை யினரை விட்டு கடுமையாகத் தாக்கி இழுத்துச் சென்று சிறை வைத்தச் செயலில் தமிழ்நாட்டை முதல் இடத் திற்குக் கொண்டு வந்தார்.

கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற பல நல்ல திட்டங்களுக்கெல்லாம் மூடு விழா செய்ததில் தமிழ்நாட்டை முதல் இடத்திற்குக் கொண்டு வந்தார்.

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும் இலவச மின்சாரம் கொண்டுவந்து 13 ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்த இலவச மின்சாரத் திட்டத்தை ஒழித்தவர் என்பதில் அவருக்கு முதல் இடம் உண்டு.

அரசு அலுவலர்கள் இலட்சத்திற்கு மேற்பட்டவர்களை டிஸ்மிஸ் செய்த பெருமைக்குரிய முதல் இடத்தைப் பெற்றவரும் அவர்தான்.

அந்த வரிசையிலே தான் இப்போது பத்திரிகையாளர் ஆறு பேருக்கு சிறை தண்டனை வழங்கியிருக்கிறார்.

அந்தப் பத்திரிகையாளர் செய்த குற்றம் என்ன? இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 12, 13, 23 ஆகிய நாட்களில் இந்து நாளிதழ்களில் வெளிவந்த கட்டுரைகளில் அவையின் நடவடிக்கைகள் குறித்து உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டதாக குற்றச்சாட்டு. இந்து இதழ் எழுதிய கட்டுரைக்காக அந்த இதழைச் சேர்ந்த 5 பேருக்கு 15 நாட்கள் சிறை தண்டனை. ஒரு இதழில் வெளிவருகின்ற செய்தி களையோ, கட்டுரைகளையோ வேறு சில இதழ்கள் எடுத்து வெளியிடுவது என்பது எத்தனையோ ஆண்டுகாலமாக இருந்து வரும் ஒரு முறை. அதுவும் இந்து இதழில் இந்தச் செய்தி வந்தது என்று குறிப்பிட்டுத்தான் அந்த செய்தி முரசொலியில் வெளியிடப்பட்டது. அந்தச் செய்தியை வெளியிட்ட முரசொலியின் ஆசிரியர் செல்வத்திற்கும் அதே 15 நாட்கள் சிறை தண்டனை.

உரிமைக்குழுவின் முன்னால் ஒரு பிரச்சினை வந்தால், அதிலே தீர்ப்பு எழுதுவதற்கு முன்பு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நேரில் அழைத்து அவர்களுடைய நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்பு தரப்பட்டு, அவர்கள் செயலுக்காக வருத்தம் தெரிவிக்கிறார்களா என்று கேட்டு, அதற்கும் முன் வரவில்லையென்றால்தான் உரிமைக்குழு தனது பரிந்துரையை அவைக்கு அளிக்கும். 92ஆம் ஆண்டு இதே ஜெயலலிதா ஆட்சியில் முரசொலி ஆசிரியர் செல்வம் மீது ஒரு உரிமைப் பிரச்சினை வந்தபோது, உரிமைக் குழுவிற்கு அவரை அழைத்து நேரடியாக விசாரித்தார்கள். ஆனால் இப்போது முரசொலி ஆசிரியரை அழைக்கவும் இல்லை, விசாரிக்கவும் இல்லை.

‘இந்து நிறுவனத்தின் சார்பில் உரிமைக் குழுவிற்கு அனுப்பிய நீண்ட விளக்கத்தில் இறுதியாக அந்த விளக்கம் திருப்தி அளிக்கவில்லை யென்றால் நேரடியாக உரிமைக் குழுவின் முன் ஆஜராகி விளக்கம் தரவும் தயாராக இருப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அந்த வாய்ப்பு அவர்களுக்கும் வழங்கப்படவில்லை.

சட்டப் பேரவையிலே உரிமைக் குழுவின் பரிந்துரைகள் வைக்கப்படுகிறது என்றால், முதல்நாள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் நிகழ்ச்சி நிரலில் (அஜெண்டாவில்) உரிமைக் குழு அறிக்கை தாக்கல் என்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்தப் பிரச்சினையில் முதல்நாள் இரவு

அனுப்பப்பட்ட அஜெண்டாவில் உரிமைக் குழுவின் அறிக்கை தாக்கல் சேர்க்கப்படவில்லை.

சட்டப் பேரவையில் எந்தெந்த பிரச்சினைகள் எடுத்துக் கொள்வது என்பதை முடிவெடுப்பது அலுவல் ஆய்வுக் குழுதான். அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே உறுப்பினர்கள் ஊர் திரும்ப வேண்டிய நிலை இருப்பதால் 7ந்தேதியன்று காலையில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப் படுவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அந்த முடிவை மீறி 7ந்தேதியன்று காலையில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் அன்று மாலையிலும் பேரவையை நீடித்துக் கொண்டு போக வேண்டும் என்பதுதான்.

யாரிடமும் கூறாமல் கேள்வி நேரத்தை எடுத்துக் கொண்டது ஏன் என்று பேரவைத் தலைவரிடம் கழக உறுப்பினர் தம்பி துரைமுருகன் அவரது அறைக்கே சென்று கேட்டபோது, அலுவலகத்தில் ஏதோ தெரியாமல் செய்துவிட்டார்கள், எனினும் காலை யிலே அவையை முடித்து விடலாம், மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார். ஆனால் அந்த உறுதிமொழியின்படி காலையில் பேரவையை முடிக்காமல் மாலையிலும் நீடித்தார்கள்.

ஒருநாள் காலையிலேயே அவையை முடிக்காமல், மாலை நேரத்திற்கும் நீடிக்கப்பட்டால் அதற்காக புதிய அஜெண்டா தரப்படுவதில்லை. ஆனால் நவம்பர் 7ந்தேதி மாலையில் பேரவையை நடத்துவதற்காக ஒரு அஜெண்டா வைக்கப்பட்டது. அந்த அஜெண்டாவில்தான் உரிமைக் குழுவின் அறிக்கை தாக்கல் சேர்க்கப்பட்டிருந்தது.

பேரவைத் தலைவர் அவசரம் கருதி நிகழ்ச்சி நிரலை மாற்றும் அதிகாரம் தனக்கு உண்டு என்று கூறியிருக்கிறார். அப்படியென்ன அவசரம்? தண்டனை தர வேண்டும் என்பது தான் அவசரமா? அவசரம் - பரபரப்பு - பதைப்பு - படபடப்பு - இத்தனையும் கலந்த ஜெட் வேகத்தில் அல்லவா; சபாநாயகர் காளிமுத்து அந்த மாலை நேரத்து நிகழ்ச்சியை நடத்தினார்!

பேரவையிலே ஏதோவொரு பொருள் குறித்து விவாதம் நடந்து, அதிலே யாராவது ஒரு உறுப்பினர் அந்தப் பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கோரிக்கை எழுப்பினால்,

முதலில் குரல் மூலம் வாக்கெடுப்பு நடத்துவார்கள். அவ்வாறு எடுக்கப்பட்ட பின் அதிலே திருப்தியில்லை, டிவிஷன் வேண்டுமென்று கேட்டால், உடனே ஒரு மணி அடிக்கும். அந்த மணி தொடர்ந்து இரண்டு நிமிடம் அடிக்கப்படும். அந்த மணி சத்தத்தைக் கேட்ட உறுப்பினர்கள், அருகில் எங்கேயாவது சென்றி ருந்தால் உடனடியாக அவைக்குத் திரும்பி விடுவார்கள். அமைச்சர்கள் அறையில் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தால் வேகமாக அவைக்கு வந்துவிடுவார்கள். அதற்குப் பிறகுதான் அவையின் அனைத்துக் கதவுகளும் மூடப்படும். இதுதான் பேரவையின் மரபு, பல ஆண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவது. ஆனால் நவம்பர் 7ந்தேதியன்று யாரும் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று கோரவே இல்லை. டிவிஷன் விட வேண்டுமென்று கேட்கவும் இல்லை.

அதுமாத்திரமல்ல, அவையிலே வைக்கப் பட்டிருந்த ஏழெட்டு மசோதாக்கள் மீதான விவாதம் தான் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு மசோதாவாக எடுத்துக் கொண்டு அதன் மீதான விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று பேரவைத் தலைவர் அவையிலே அரசியல் சட்டம் குறித்து ஒரு அறிவிப்பினைத் தெரிவிக்கப் போவதாகவும், அதனால் உறுப்பினர்கள் வெளியே போகக் கூடாது என்றும், வெளியே சென்றவர்கள் உள்ளே வரக் கூடாது என்றும் கூறி காவலர்களைக் கொண்டு கதவுகளை மூடச் சொல்லிவிட்டார். மசோதாக்கள் மீதான விவாதங்கள் எல்லாம் முடிந்த பிறகுதான் உரிமைக் குழுவின் பரிந்துரையை தாக்கல் செய்திருக்க வேண்டும். அதற்கு மாறாக யாரோ ஒரு பெரிய தலைவர் மறைந்துவிட்ட செய்தியைச் சொல்வதற்காக அவையின் நிகழ்ச்சியை தடைப்படுத்திக் குறுக்கிடுவது போல, மசோதாக்கள் மீதான விவாதத்திற்கு இடையிலே புகுந்து உரிமைக் குழு பரிந்துரையை எடுத்துக் கொண்டதும், அதற்காக அவையின் கதவுகளை மூடச் சொன்னதுமான செயல் எந்த மாநிலச் சட்டப் பேரவையிலும் நடந்திராத ஜனநாயகப் படுகொலை. நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை.

திடீரென்று கதவை மூடிக் கொண்ட காரணத்தால் தனது அறையிலே இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களே அவைக்குள் செல்ல முடியவில்லை. கழக உறுப்பினர் பொன்முடி, மற்றும் வேறு சில கட்சிகளைச் சேர்ந்த சட்டப்பேரவை

உறுப்பினர்கள் கதவிற்கு வெளியே நின்று கொண்டு கதவைத் திறக்கச் சொல்லி கேட்டும், வாக்கெடுப்பு நடக்காத நேரத்தில் எதற்காக கதவை மூடி வைத்திருக்கிறீர்கள், என்று வினவியபோதும் காவலர்கள் பேரவைத் தலைவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் கதவைத் திறக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார் என்று பதில் சொல்லி, கதவைத் திறக்க மறுத்திருக்கிறார்கள். இதைவிட வெட்கக்கேடான சம்பவம் வேறென்ன இருக்க முடியும்?

உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றொரு உறுப்பினரைத் தாக்க முனைந்தார் என்று அவர் மீது ஒரு உரிமைப் பிரச்சினை. அவரையும் நேரடியாக அழைத்து விசாரிக்கவில்லை. தமிழகச் சட்டப் பேரவையிலே அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றக் கட்சி உறுப்பினர்களைத் தாக்கிய பல நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் எந்தவொரு நிகழ்ச்சிக்கும் இது போன்று 30 நாட்கள் சிறை தண்டனை வழங்கியதே கிடையாது. மேலும் உறுப்பினர் இளம்வழுதியின் நடவடிக்கைக்காக இதே பேரவைத் தலைவர் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது அவை நடவடிக்கையிலிருந்து அந்தத் தொடர் முழுவதுக்கும் அவரைத் தள்ளி வைத்து தண்டனை அளித்து விட்டார். அதற்குப் பிறகு அவருக்கு சிறை தண்டனையும் வழங்கப் பட்டது. அவர் மீது கிரிமினல் வழக்கு ஒன்றும் தொடுக்கப்பட்டுள்ளது. ஒரே குற்றத்திற்கு இந்த மூன்று தண்டனை களும் போதாதென்று நான்காவது தண்டனையாக தற்போது 30 நாட்கள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற வளாகத்திற்குள் காவல் துறையினர் சென்று யாரையும் கைது செய்யக் கூடாது. யாராவது ஒரு சட்டமன்ற உறுப்பினரை கைது செய்ய வேண்டுமென்றால், அவர் வெளியே வரும்வரை காத்திருந்து, அதற்குப் பிறகுதான் கைது செய்ய வேண்டும். ஆனால் தமிழகச் சட்ட மன்றத்தில் வளாகத்தின் தாழ்வாரத்திற்குள்ளேயே வந்து பலாத்காரமாக தம்பி பரிதி இளம்வழுதியை கைது செய்வதாகக் கூறி இழுத்துச் சென்றிருக்கிறார்கள். குறிப்பாக அவர் மீது இந்த ஆட்சியினர் இப்படிப்பட்ட கொடுமைகளைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவரைக் கைது செய்த போது, காவல் துறையினரிடம் அவர் தனக்கு சர்க்கரை வியாதி என்றும், அந்த நிலையில் இரண்டு மணி நேரமாக பேரவையின்

கதவுகள் மூடி வைக்கப்பட்டு திறக்கப்படாததால் சிறு நீர் கழிக்கக் கூட போகமுடியவில்லை என்றும், அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கெஞ்சியபோதும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த அடக்குமுறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நன்மையே தவிர; பின்னடைவு எதுவுமில்லை! ஜனநாயகம்தான் ஊனப்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் தர்ம யுத்தம் பரிதி இளம்வழுதிக்கு மற்றொரு தியாக முத்திரையை வழங்கியிருக்கிறது.

இந்து பத்திரிகையின் செல்வாக்குக் கிரீடத்தில் மேலும் ஒரு புகழ்முத்து பதித்துள்ளார் ஜெயலலிதா.

முரசொலியால் வளர்ந்து இப்போது அதன் பெயரைச் சொல்வது கூடப் பாவம் என அதனை மூடி வைக்கும் பண்பாளர்கள் போடும் திரையைக் கிழித்துக் கொண்டு தமிழர் வாழும் இடங்களில் மூலை முடுக்கெல்லாம் அதன் ஒலி முழக்கம் கேட்குமாறு செய்துள்ளார் ஜெயலலிதா.

உரிமைக் குழு சார்பில் முரசொலிக்கு விளக்கம் கேட்டபோது இந்து தலையங்கத்தை மொழி பெயர்த்துத்தான் வெளியிட்டதாகவும், எந்த உரிமை மீறல் செயலிலும் ஈடுபடவில்லை என்றும் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இது பற்றி உரிமைக் குழு முரசொலி ஆசிரியரின் விளக்கத்திலிருந்து, ஆசிரியர் அவரது தவறை உணரவில்லை யென்றும், பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளையும் உரிமைக் குழுவினையும் துச்சமாக மதித்து வேண்டுமென்றே மாண்புமிகு பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளுக்கும், உரிமைக் குழுவினது நடவடிக்கைக்கும், அவையின் ஒட்டுமொத்த உரிமைக்கும் பெருங்களங்கமும், உள்நோக்கமும் கற்பிக்கும் செயலைச் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது என்று கருத்து தெரிவித்திருக்கிறது. முரசொலியின் விளக்கத்தை யும், உரிமைக் குழுவின் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே எப்படிப்பட்ட முடிவை உரிமைக் குழு எடுத்திருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சட்டப்பேரவை விதிப்படி உரிமைக் குழு சார்பில் அறிக்கை அளிக்கப்பட்டவுடன் அதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானம், கொண்டு வரப்பட வேண்டும். அதன்படியே தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் எந்தவொரு

தீர்மானத்தை அவையிலே கொண்டு வந்தாலும், அதன் மீது பேசுவதற்கு அவை உறுப்பினர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. அந்த உரிமை 7ஆம் தேதி வழங்கப்படவில்லை. அந்தத் தீர்மானத்தின் மீது திருத்தத்தை எந்தவொரு உறுப்பினரும் தரலாம். அதற்கான வாய்ப்பும் தரப்படவில்லை.

எள்முனையளவு கூடப் பெருந்தன்மையில்லாமல்; ஏடாகூடமாகவும் எரிச்சலைக் கக்கும் விதத்திலும் எடுக்கப்பட்டுள்ள இந்த ஆட்சியாளரின் அக்னி யாஸ்திர நடவடிக்கைகளையும், தி.மு.க. ஆட்சியின் போது சட்டசபையே செத்துவிட்டது என்று அறிக்கை கொடுத்தவர்களின் கூற்றினை அப்போது உரிமைக் குழுவுக்கும் அனுப்பாமல்; தண்டனையைப் பற்றியும் கருதிப் பார்க்காமல் பெருந்தன்மை கடைப் பிடிக்கப்பட்டதையும்; அவர்கள் அறிக்கையும் அவதூறுப் பேச்சும்; பெரிதுபடுத்தப்படாததையும் எண்ணிப் பார்த்திடுமாறு நல்லோரை - நடுநிலை யாளரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாடு முழுதும் கற்றறிந்தோர் - மக்களாட்சி மாண்புணர்ந்தோர் - பத்திரிகை சுதந்திரத்தின் வரலாறு தெரிந்தோர் - ஆர்த்தெழுவதற்கு தானும் தன் ஆணவமுமே காரணமாகிற நிலையை உருவாக்கி இப்போது ஆப்பசைத்த கதையாக அவதிப் பட்டு நிற்கிறார் ஜெயலலிதா!

பரிதாபமாகத்தானிருக்கிறது; அதற்காக ஜனநாயகம் பறிபோவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

முடியாது என்பதின் அடையாளமாகத்தான் நவம்பர் 12ந்தேதி - மனிதச் சங்கிலி!

மனிதச் சங்கிலி!

கழகத்தின் வேண்டுகோளையேற்று

அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆதரவு

வழங்கியுள்ளனர்; தமது கட்சிகளின் சார்பில் ஜனநாயகக் கடமை ஆற்றிடத்

தயார் என முழங்கியுள்ளனர்.

அக்கட்சிகளின் செயல்வீரர்களையும் அணி வகுத்திட அன்புடன் அழைக்கிறேன்.

அவரவர் கட்சிக் கொடிகளும், பதாகைகளும்,
கறுப்புச் சின்னமும் மனிதச் சங்கிலியில்
மகாசமுத்திரம் போல் காட்சியாகட்டும் -
மக்கள் விரோத ஆட்சிக்குப் பாடம் புகட்ட;
எழுவீர்! எழுவீர்!

அன்புள்ள,
மு.க.
10-11-2003

2993. பாவம் ஓரிடம்; பழி ஓரிடமா?

அன்புள்ள திரு.காளிமுத்து அவர்களே,

7-11-2003 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் இந்து, முரசொலி பரிதி இளம்வழுதி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு முதல் அமைச்சர் ஜெயலலிதா காரணமல்ல, அனைத்து நடவடிக்கை களுக்கும் தாங்களேதான் காரணம் என்று அறிக்கை விடுத்துள்ள தங்களுக்கு சில கேள்விகள் :-

திரு காளிமுத்து அவர்களே; பரிதி இளம்வழுதிக்கு ஒரே குற்றத்திற்காக அவர் மீது வழக்கு - அதில் தீர்ப்பு வருவதற்கு முன்பே அவர் அந்தக் கூட்டத் தொடர் முழுதும் அவைக்குள் நுழையக் கூடாது என்று உத்திரவு - அத்துடன் அவருக்கு ஒரு வாரம் சிறைச்சாலை - இவைகளுக்கெல்லாம் பிறகு இப்போது முப்பது நாட்கள் சிறைத் தண்டனை - இவை ஒன்றுமே முதல் அமைச்சரின் ஆணைப்படி நடைபெற்றதல்ல; அனைத்துக்கும் தாங்களும், சட்டமன்றமும்தான் காரணம்; பாவம் ஜெயலலிதா வுக்கு சம்மந்தமேயில்லையென்று சொல்கிறீர்களே; அதுதான் உண்மையென்றால் திருக்கடையூர் சென்று அபிஷேக ஆராதனையுடன் ஆலயத்தில் அறுபதாம் ஆண்டு சஷ்டியப்த பூர்த்தி விழா நடத்திக் கொண்டீர்களே; அந்த ஆண்டவன் மீது சத்தியம் செய்வீர்களா?

சட்டமன்றத்தின் புனிதம், அதிகாரம் பற்றிப் பேசுகிற காளிமுத்து அவர்களே; 7-11-2003 காலை யுடன் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை முடித்துக் கொள்வது என்று சட்டமன்ற அலுவல் ஆய்வுக் குழு தானே முடிவு செய்திருந்தது; கேள்வி நேரம் கூட அன்றையதினம் ரத்து செய்யப்படுமென்று தீர்மானிக் கப்பட்டிருந்ததே; ஆனால் சட்டமன்ற அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுகளுக்கு மாறாக 7-11-2003 அன்று கேள்வி நேரத்தை வைத்துக் கொண்டதும்; அன்று மாலையிலும் சட்டமன்றத்தை நீடித்ததும் - முதலமைச்சருக்கு சம்பந்தமில்லாமல்; தாங்களே முடிவு செய்ததுதானா? ஆம் என்றால்; எம்.ஜி.ஆர். மீது ஆணையிட்டு இதைக் கூறத் தாங்கள் தயாரா?

அவையின் நேரத்தில் வாக்கெடுப்பு நடக்கும்போது மாத்திரமே மூடப்படவேண்டிய கதவுகளை, தேவையே இல்லாமல் உரிமைப் பிரச்சினை குறித்த தீர்மானம் படிக்கும்போது மூடச் சொன்ன செயல் கூட முதல் அமைச்சரின் கவனத்திற்குச் செல்லாமல் தாங்களே எடுத்த முடிவா? அப்படித்தான் என்றால் அதனை தேவர் பெருமகன் சமாதியிலே கற்பூரத்தை அணைத்து சத்தியம் செய்து சொல்வீர்களா?

ஒவ்வொரு சட்ட முன்வடிவையும் எடுத்துக் கொண்டு வரிசையாக விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில் இடையிலே உரிமைக் குழுவின் அறிக்கையை தாக்கல் செய்த செயல்கூட முதலமைச்சர் ஆணையில்லாமல் தாங்களே தன்னிச்சையாக எடுத்த முடிவுதானா? மதுரை மீனாட்சி அம்மன் மீது சத்தியம் செய்யத் தயாரா?

சட்டப் பேரவையின் முன்னாள் துணைத் தலைவரும், உரிமைக் குழுவிற்கு தலைவராகவே ஒரு காலத்தில் இருந்தவரும், தற்போதைய சட்டப் பேரவை உறுப்பினருமான பரிதிஇளம்வழுதியை கைது செய்வதற்காக காவல் துறையினர் பேரவை வளாகத்திற்குள் நுழைந்ததுகூட, காவல் துறை அமைச்சரான ஜெயலலிதாவிற்குத் தெரியாமல் நடந்ததா? அல்லது அவரையும் மீறி தாங்கள் இட்ட ஆணையா?

தன்னைப் பற்றிய அவதூறுகளுக்காக தண்டனை தேவையில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதை, முதல்வரின் ஆணை என்று ஏற்றுக் கொண்டுதானே அந்த முடிவைக் கைவிட்டீர்கள். இதிலிருந்து நீங்கள் முதல்வரின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர் என்பது தெளிவாகிறது அல்லவா? அப்படிக் கட்டுப்படுபவனல்ல என்று தாங்கள் விரும்புகிற எந்தத் துஷ்ட தேவதைகளின் கோவிலிலாவது துணியைப் போட்டுத் தாண்ட தயாராக இருக்கிறீர்களா?

ஒரு மன்னன், ஒருவனை அடித்து, கொலை செய்ய வேண்டும் என்று தண்டனை கொடுத்து விட்டு; பிறகு பெருந்தன்மையோடு அடித்து என்ற வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகக் கூறி, கொலையை மட்டும் நிறைவேற்றினால் போதும் என்று கூறுவதற்கும், முதலமைச்சர் ஜெயலலிதா காட்டிய பெருந்தன்மைக்கும் என்ன வேறுபாடு?

முதலமைச்சர் ஜெயலலிதா பரிதியின் மீதும், பத்திரிகைகள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தேவையில்லை என்று நினைத்திருப்பாரேயானால் தனக்காக அவர் காட்டிய பெருந்தன்மையை மற்ற விஷயங்களில் ஏன் காட்டவில்லை? முதல்வரை விட அவையில் அதிகாரம் அதிகம் படைத்தவர் என்ற முறையில்; தாங்களே அந்த அம்மையாரைப் பார்த்து, அப்படியானால் உரிமைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்கத் தேவையில்லை என்று கூறி; அப்படி ஒரு தீர்மானத்தை அவையில் நிறை வேற்றியிருக்கலாம் அல்லவா? அந்த நெஞ்சத் துணிவு தங்களுக்கு இல்லையென்பது தங்கள் மனச்சாட்சிக்கே தெரியுமல்லவா?

தங்கள் அறிக்கையில், சட்டமன்றப் பேரவை சுதந்திரமாக செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறீர்கள். சுதந்திரமாக செயல்பட வேண்டிய சட்டமன்றக் கதவுகளை மூடியது யார்? மூடச் சொல்லும்படி ஆணையிட தங்களுக்கு ஆணையிட்டது முதலமைச்சர்தான் என்பதைத் தாங்கள் மூடி மறைக்கிறீர்கள்; இதை மறுத்து மதுரை வீரன் சிலைக்கு முன்னால் மண்டியிட்டுச் சொல்வீர்களா?

சட்டப் பேரவை உறுப்பினர்கள், பிரச்சினைகள் பற்றிய தங்களது கருத்துக்களை முழுமையான சுதந்திரத்தோடு வெளிப்படுத்துவதை உறுதிப் படுத்த வேண்டும் என்று தங்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். தாங்கள் பொறுப்பேற்ற பிறகு என்றைக்காவது ஒரு நாள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை முழுமையான சுதந்திரத்தோடு வெளியிட அனுமதித்தது உண்டா?

உரிமைக் குழு எவ்வெப்போது கூடியது என்பது பற்றியும் தங்கள் அறிக்கை கூறுகிறது. அக்டோபர் திங்களில் மட்டும் 1ந்தேதி, 14ந்தேதி, 27ந்தேதி ஆகிய மூன்று நாட்கள் உரிமைக் குழு நடைபெற்றிருக்கிறது. அவசர அவசரமாக ஒரே மாதத்தில் மூன்று தடவை குழு கூட்டத்தை நடத்தியிருப்பதிலிருந்தே தண்டனை கொடுக்க வேண்டுமென்ற துடிப்பு நன்றாக தெரிகிறதல்லவா? அந்தத் துடிப்பு தங்கள் இயல்புப்படி தங்களுக்கு வந்ததல்ல; அந்த அம்மையாருக்கு வந்ததுதான் என்பதை தங்களால் ஆட்சேபிக்க முடியுமா? அய்யப்பன் கோயிலில் ஆணையிட்டுச் சொல்வீர்களா?

உரிமைக் குழுவின் பரிந்துரைகள் கவனமான பரிசீலனைக்குப் பின்னரே வழங்கப்பட்டுள்ளன என்று தங்களின் அறிக்கை கூறுகிறது. ஆனால், இந்து இதழிலே வெளிவந்த தலையங்கத்தை அப்படியே மொழியாக்கம்தான்செய்து முரசொலி வெளியிட்டது. வேறு எந்தத் தவறும் செய்ய வில்லை. விளக்கம் கேட்டபோது விளக்கத்தையும் உடனடியாக முரசொலி அனுப்பியது. ஆனால் உரிமைக் குழு தனது பரிந்துரையில் பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளையும், உரிமைக் குழுவினையும் துச்சமாக மதித்து வேண்டு மென்றே மாண்புமிகு பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளுக்கும், உரிமைக் குழுவினது நடவடிக்கைக்கும் அவையின் ஒட்டுமொத்த உரிமைக்கும் பெருங்களங்கமும், உள்நோக்கமும் கற்பிக்கும் செயலை முரசொலி ஆசிரியர் செய்ததாக எழுதியிருக்கிறதே, இந்தத் தவறுகளில் எதையாவது முரசொலி செய்திருக்கிறதா?

இந்து இதழ் அளித்த 16 பக்க விளக்கங்களை உரிமைக் குழு ஆராய்ந்த பிறகே முடிவு மேற் கொண்டதாக தங்கள் அறிக்கை தெரிவிக்கின்றது. அந்த 16 பக்க அறிக்கையின் இறுதியிலே இந்த விளக்கங்கள் மதிப்புக்குரிய உரிமைக் குழுவிற்கு திருப்தி அளிக்கவில்லையென்றால் நேரிலே வந்து விளக்கம் அளிப்பதற்கு தயாராக இருப்பதாக இந்து நிர்வாகம் எழுதியிருந்ததே, அந்த வேண்டுகோள் ஏன் ஏற்கப்படவில்லை?

நாகப்பட்டினம் அரசு விழாவில் மணி சங்கர அய்யர், எம்.பி., ஜெயலலிதாவைத் திட்டிப் பேசினார் என்றும், அதற்கு ஒரே சாட்சி தாங்கள்தான் என்றும் ஜெயலலிதா பேட்டி அளித்து, அதற்கு அடுத்தநாள்; தாங்கள், ஆமாம், ஆமாம் மிகவும் தரக் குறைவாகத் திட்டினார், ஆனால் அந்த வார்த்தைகளைத் திரும்பச் சொல்ல முடியாது என்று சொன்னீர்களே அதைப் போலத்தான் தங்களுடைய இந்த அறிக்கையும் ஜெயலலிதாவைப் பாதுகாப்பதற்காகத் தரப்பட்ட அறிக்கை என்பதை மறுக்கிறீர்களா?

பாவமோரிடம், பழியோரிடம் என்பார்கள்; அது போல முதலமைச்சரின் நடவடிக்கையால் - ஆத்திரச் செயலால் - ஆங்காரத்தால் ஏற்பட்ட விளைவுக்குத் தாங்கள் பழியை சுமக்கிறீர்கள்! என் செய்வது? இந்தப் பாழும் பதவியை சுமந்திட, இத்தகைய பழிகளை சுமந்திடத் தானே வேண்டும்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். ஆனால் அதைவிட அம்மா ஜெயலலிதாவை தரிசித் தால் கோடி புண்ணியம் என்று அண்மையில் தான் சொந்த மாவட்டத்தில் சொக்குப் பொடி போட்டுப் பேசிய தாங்கள்; இன்று திடீரென அந்த அம்மையாரைக் காப்பாற்றும் ஆபத் பாந்தவனாக நின்று அறிக்கை விட்டு; மறைமுகமாக அவரது மதிப்பைக் குறைத்திருப்பது உண்மையா அல்லவா?

ஓ! இந்த அறிக்கையும் அம்மையார் அவர்கள்; தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் ஆணையிட்டு தங்கள் பெயரால் வெளியிடப்பட்டது தானே - அய்யோ; பாவம், போனால் போகிறது; தாங்கள் யார் மீது ஆணையிடவும் வேண்டாம் - சத்தியம் செய்யவும் வேண்டாம் - கற்பூரம் அணைக்க வும் வேண்டாம். அவற்றையெல்லாம் குறிப்பிட்ட தற்குக் காரணம்; தாங்கள் அண்மைக்காலமாக சாமிகள், பூஜைகள், பிராணிகளின் திருமணங்களில் கலந்து கொண்டு தங்களின் பக்தி சிரேஷ்டத்தை வெளியிட்டதால் தானே தவிர வேறல்ல; எனினும் தங்களின் தியாக மனப்பான்மைக்குப் பாராட்டு!

அன்புள்ள,

மு.க.

11-11-2003

2994. காட்டாட்சி வீழ்ந்திட கரம் கோத்து நிற்போம்

உடன்பிறப்பே,

RAJASTHAN SCRIBES CELEBRATES

Jaipur, Nov. 10 Scribes here celebrated the Supreme Court's interim verdict staying the execution of the Tamil Nadu Assembly sentence against Editors and Journalists of The Hindu and Murasoli by distributing sweets.

ராஜஸ்தான் பத்திரிகையாளர் கொண்டாட்டம்

ஜெய்ப்பூர், நவ.10. இங்கேயுள்ள பத்திரிகையாளர் தமிழ்நாடு சட்டப் பேரவை, இந்து, முரசொலி பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த தண்டனையை உச்சநீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்து நிறுத்திவைத்ததற்காக இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள்.

.....

DHARNA IN ORISSA.

About 50 journalists boycotted the proceedings of the Orissa State Assembly and staged a dharna near the statue of Mahatma Gandhi on the Assembly Ipremises today protesting the Tamil Nadu Assembly's orders against six journalists of the Hindu and the Tamil daily Murasoli. Wearing black badges, the journalists from different newspapers and television channels sat on a dharna for an hour.

ஒரிசாவில் தர்ணா

புவனேஸ்வர், நவ. 10. தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்து, முரசொலியைச் சேர்ந்த ஆறு பத்திரிகையாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் கண்டிக்கும் வகையில், ஒரிசா சட்டப் பேரவையைச் சேர்ந்த சுமார் 50 பத்திரிகையாளர்கள்

பேரவை நடவடிக்கைகளிலே கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்ததோடு, சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு அருகில் தர்ணா செய்தார்கள். சுமார் ஒரு மணி நேர அளவிற்கு அவர்கள் கறுப்பு பேட்ஜ் அணிந்து தர்ணா செய்தார்கள்.

.....

MUMBAI JOURNALISTS FOR CODIFICATION OF PRIVILEGES.

Mumbai, Nov. 10. Journalists in the City joined their counterparts in the rest of the country today in condemning the Tamil Nadu Assembly's action ordering the arrest of six journalists from The Hindu and Murasoli for breach of privilege.

மும்பை பத்திரிகையாளர்கள் உரிமைக்காகப் போராட்டம்.

மும்பை, நவ. 10. இந்த மாநகரிலே உள்ள பத்திரிகையாளர்கள், நாடு முழுவதும் மற்ற பத்திரிகையாளர்களோடு சேர்ந்து தமிழ் நாடு சட்டப் பேரவை இந்து, முரசொலி பத்திரிகையாளர் ஆறு பேர் மீது எடுத்த நடவடிக்கைகளுக்கு தங்களுடைய கண்டனத்தைத் தெரி வித்துக் கொண்டார்கள்.

.....

RAJASTHAN JOURNALISTS DEMAND DISMISSAL OF JAYALALITHAA GOVERNMENT,

The act of Vindictiveness carried out by the Tamil Nadu Assembly issuing arrest warrants against six journalists, Including the Editor, the Managing Editor and other senior journalists of The Hindu and Murasoli was at the behest of the Chief Minister, Jayalalithaa, the delegation led by the President of the Pink City Press Club, Satya Pareek charged.

ராஜஸ்தான் பத்திரிகையாளர்கள் ஜெயலலிதா அரசைக் கலைக்க கோரிக்கை.

தமிழ்நாடு சட்டப் பேரவை இந்து, முரசொலியின் மூத்த பத்திரிகையாளர்கள் மீது கைது செய்வதற்கான ஆணை பழிவாங்கும் நோக்கத்துடன் முதலமைச்சர் ஜெயலலிதா வின்

தூண்டுதல் காரணமாக பிறப்பிக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் குழுவினர் ஆளுநரைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டனர்.

.....

A GROSS ABUSE OF LEGISLATIVE AUTHORITY,

New Delhi, Nov. 8 The Journalists here today stood as one to protest the Tamil Nadu Assembly Speaker, K. Kalimuthu's order of arrest against six Journalists of The Hindu and Murasoli.

புதுடெல்லி, நவ. 8. இங்கேயுள்ள அனைத்து பத்திரிகையாளர்களும் ஒரே மனிதரைப் போல தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் கே. காளிமுத்து இந்து, முரசொலி இதழ்களின் ஆறு பத்திரிகையாளர்களை கைது செய்யப் பிறப்பித்த ஆணைக்கெதிராக எழுந்து நின்று குரல் கொடுத்தனர்.

.....

WIDESPREAD PROTESTS IN ANDHRA PRADESH

Hydrabad, Nov.8 The attack on the freedom of the press in the form of the sentencing of three Editors and two senior journalists of The Hindu and the Editor of Murasoli, and raids on the premises of the newspapers in Tamil Nadu have evoked strong condemnation in Andhra Pradesh.

ஹைதராபாத் நவ. 8. இந்து பத்திரிகையைச் சேர்ந்த 5 பத்திரிகையாளர்களையும், முரசொலி ஆசிரியரையும் தண்டனை அளித்ததின் மூலமும் பத்திரிகை அலுவலகத்தின் மீது சோதனை நடத்தியதின் மூலமும், பத்திரிகை சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஆந்திராவில் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

.....

A CONDEMNABLE INFRINGEMENT ON THE RIGHT TO INFORMATION

Thiruvananthapuram, Nov. 8. The Tamil Nadu Assembly's decision to imprison editors and senior journalists of The Hindu and the Editor of Murasoli on Friday is a condemnable and undemocratic infringement

on the right to information, the Leader of the Opposition in the Kerala Assembly, V.S. Achuthanandan, has said.

திருவனந்தபுரம், நவ. 8. தமிழ்நாடு சட்டப் பேரவையின் முடிவான இந்து, மற்றும் முரசொலி இதழ்களைச் சேர்ந்த பத்திரிகை யாளர்களை கைது செய்ய வேண்டுமென்ற தண்டனை ஜனநாய கத்திற்கு விரோதமானதும், கண்டிக்கத்தக்கதுமான செயலாகும் என்று கேரள சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் வி.எஸ். அச்சுதானந்தன் கூறினார்.

.....

உடன்பிறப்பே,

இங்குற்ற சர்வாதிகாரக் கொடுமைக்கு எதிராக இந்தியத் திருநாடே பொங்குற்று எழுந்தது பார் எனும் விதத்தில் மும்பையில், டெல்லியில், ராஜஸ்தானில், ஒரிசாவில், ஹைதராபாத்தில், திருவனந்தபுரத்தில் இன்னும் பல மாநிலங்களின் தலைநகரங்களில் பத்திரிகையாளர்கள், தங்களின் எழுத்துரிமை பறிக்கப்படுவதைக் கண்டித்துப் பேரணிகள், கூட்டங்கள், தர்ணாக்கள் நடத்தியிருக்கிறார்கள்.

அதிகார ஆணவத்தால் எதுவும் செய்யலாம், எவரும் கண்டு கொள்ள மாட்டார்கள்; கவலை யில்லையென்று கம்பீரமாக எழுந்து நின்று கர்ச்சித்தவர்கள் எங்கே? எங்கே?

பூனை கண்ணை மூடிக் கொண்டு பூலோகமே இருண்டு விட்டது என எண்ணிக் கொள்ளுமாம். இங்குள்ள பூனைகளும் அப்படித்தான் முடிவு செய்து கொண்டு முடுக்கி விட்டன அடக்குமுறையை எண்ணியது இருள் கவ்வும் என்று!

மாறாக மக்கள் ஒளி பெற்றுக் கிளம்பினர் - எங்கணும் உரிமை முழக்கம் சுதந்திரச் சங்கநாதம்

* இந்து

* முரசொலி

இரண்டையும் இணைத்தா அடக்குமுறை? - அரசியலில் அடக்குமுறை என்பதற்கு மறுபெயர்,

தியாக முத்திரை அல்லவா? அந்த முத்திரை 'முரசொலி'க்கும் கிடைப்பதா எனப் பொறாமையில் மனம் பொசுங்கிப் போன மனிதப்

பிறவிகள் சில; முரசொலியை மறைக்கப் பார்த்தனர். செய்திகளில் ஒளிக்கப் பார்த்தனர். ஆனால் முரசொலி காரிருள் கிழித்து வெளிக் கிளம்பும் கதிரவன் போல நாடு முழுதும் பேசப்படும் பெயராயிற்று - அது என்ன நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளானா? சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து எழுத்துப் போர் நடத்தி 125 ஆண்டு காலத்தைக் கடந்த 'இந்து' ஏட்டுக்குள்ள வரலாறு போல திராவிட இயக்கப் போர்க்களத்திலே பூத்த குருதிப்பூ என்ற 60 ஆண்டுக் கால சரித்திரம் 'முரசொலி'க்கு உண்டு.

முரசொலி ஆறேழு தடவை அடக்குமுறையைச் சந்தித்த ஏடு - நெருக்கடி கால நெருப்பாற்றில் மெழுகுவத்திகளால் கட்டுமரம் கட்டிக் கொண்டு அதில் ஏறி நீந்திய ஏடு - முரசொலி; சட்டமன்றக் கூண்டிலே நிறுத்தப்பட்ட ஏடு - இந்த விபரங்கள் தமிழ்நாட்டில் சில விவஸ்தை கெட்டதுகளுக்குத் தெரியாவிட்டாலும் - வெகு தொலைவில் உள்ள மும்பைக்கும், ராஜஸ்தானுக்கும், டெல்லிக்கும், ஒரிசாவுக்கும், ஹைதராபாத்துக்கும், திருவளந்த புரத்துக்கும் இன்ன பிற இடங்களுக்கும் தெரிந்தே இருக்கிறது.

தெரியாமல் இருந்த இடங்களுக்கும் தெரியச் செய்துவிட்ட ஜெயலலிதாவுக்கு முரசொலி நன்றி செலுத்துகிறது.

"ஜனநாயக விரோதமாக எல்லாக் கோணங்களிலும் எங்களால் நடக்க முடியும் என்பதை ஜெயலலிதா குழுவினர் நிரூபித்துக் காட்டிய நாள்தான் நவம்பர் ஏழாம் நாள் - அந்தக் கறுப்பு நாளைக் கண்டித்துத்தான்

நவம்பர் 12 மனிதச் சங்கிலி
மகாசமுத்திரம் போல் பெருகிட வேண்டுமென்று
அழைப்பு விடுத்திருக்கிறேன்.
அன்பு உடன்பிறப்புகளும் அனைத்துக் கட்சிகளின்
அருமைச் செயல்வீரர்களும்
அணி வகுத்திடுவீர்; அராஜகத்தை வீழ்த்திட !
கரம் கோத்து நின்றிடுவீர்;
காட்டாட்சி தர்பாரை விரட்டிட!
பத்திரிகை சுதந்திரம் நிலை நாட்டப்பட!
பரிதியின் மீது அடக்குமுறை கண்டித்திட!

நவம்பர் 12 மாலை 3 மணி முதல் அணி அணியாக - வரிசை வரிசையாக - எங்கிருந்து எதுவரை யென்று முன் கூட்டியே அறிவித்து விட்டு,

அமைதியாக -
அறவழியில் -
அணிவகுப்போம் -
கரம் கோத்திடுவோம்.

வாரீர்! வாரீர்

அன்புள்ள,

மு.க.

12-11-2003

2995. மகா சமுத்திரமல்ல; மகாமகா சமுத்திரம்!

உடன்பிறப்பே,

ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்துப் போர்க்குரல் கொடுக்க - பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க - தம்பி பரிதிக்குத் தண்டனை தகாது என உரைக்க - இந்து, முரசொலி ஏடுகள் மீது முதல் அமைச்சருக்குத் தெரியாமல் சபாநாயகர் காளி முத்துவே தன்னிச்சையாக முடிவெடுத்து (?) தண்டனை வழங்கியதாக வெளியிடப்பட்ட அறிக்கையை மூளையுள்ளவர்கள் நம்பத் தயாராக இல்லை என்பதை எடுத்துக்காட்ட - காளிமுத்து அவர்களின் வாதப்படியே அவர் அளித்தத் தீர்ப்பாக இருக்குமானால்; அந்தத் தீர்ப்பிற்கு விதிக்கப்பட்ட உச்ச நீதிமன்ற இடைக் காலத் தடையை ஏற்றுக் கொள்வோம் என்று முதலமைச்சர் சொல்ல வேண்டிய அவசியமென்ன என்ற கேள்விக்கு விளக்கமென்ன? எனும் வினாக் குறி விசுவரூபம் எடுத்தது போலவும் - மனிதச் சங்கிலிக்கு மகா சமுத்திரமாக வருக என்று அழைத்தேன்; ஆனால் அன்பு உடன்பிறப்புகளாம் நீங்களும் அனைத்துக் கட்சிகளின் அருமைச் செயல்வீரர்களும்

பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ
படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ

எனும் கலிங்கத்துப்பரணி வரிகளை நினைவூட்டும் வண்ணம் மகாமகா சமுத்திரமாய்ப் பெருகிவிட்டீர்கள் நவம்பர் 12 அன்று! நகரங்கள் எல்லாவற்றிலும்!

நவம்பர் 7, தமிழக ஜனநாயக வரலாற்றில் ஒரு கறுப்பு நாள் என்றால்;

நவம்பர் 12 அந்தக் களங்கம் துடைக்கும் நாளாயிற்று என்பேன்.

சென்னையில் மட்டும் நான் நேரில் கண்ட காரணத்தால் எழுச்சியின் வடிவை எளிதில் அளவிட முடியாமல் - அதனால் அதனை விவரிக்க முடியாமல் திணறுகிறேன். ஆம்; திணறித்தான் போய் விட்டேன் மக்கள் நெரிசலில் - அலைகள், அதுவும் சூறாவளி காலத்தில் சுழன்றடிக்கும் அலைகளைப் போல மக்கள் தலைகள் என்னையும் மற்ற கட்சிகளின் தலைவர்களையும் மூச்சு முட்ட வைத்து விட்டது என்பதுதான் ஒரு நாளிதழ் குறிப்பிட்டிருப்பதுபோல உண்மை. அதே நாளிதழ்; போலீசார் தொலைவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று பாதுகாப்பின் சிறப்பு பற்றி வர்ணித்திருப்பதையும் படித்திருப்பீர்கள். ஆனால் அந்த நாளிதழுக்கே வயிற்றெரிச்சல் தாங்க முடியவில்லை; "அண்ணா சிலையருகே வந்த கருணாநிதி; அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஏதோ ஒப்புக்கு நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு, ஐந்து நிமிடத்தில் போய் விட்டார்" என்று தனது இயல்புக் குணத்தையும் "நிஜப்படம்" எடுத்துக் காட்டியிருக்கிறதல்லவா; ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும்; என் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்னையின் இரு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தம்பிகள் பலராமனும், அன்புவும் முன் சென்று வழி வகுத்திட சரியாக 3.45 மணிக்கு, சென்னை தீவுத் திடல், முத்துசாமி அய்யர் பாலத்திலிருந்து, மனிதச் சங்கிலியைப் பார்வை யிட்டவாறு வரத் தொடங்கினோம். எங்களின் கார் நகரக் கடுகளவு இடமும் இல்லாமல் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக அலை மோதும் மக்கள் கடலில் எங்களின் "வேன்" மூழ்கியும் எழுந்தும் கட்டுமரம் போல அண்ணா சிலையருகில் அனைத்துக் கட்சித் தலைவர்களிடம் வந்து சேர்ந்தது.

காரிலிருந்து கீழிறங்கித் தலைவர்களுடன் கை குலுக்க முடியவில்லை - கை கூப்பி வணங்க முடியவில்லை - மமதை காரணமல்ல அதற்கு மக்கள் கூட்டத்தின் அடர்த்தியால் - மாவரைக்கும் குடைகல்லில் சிக்கிக் கொண்ட பொருள் போலானேன் - புயலில் சிக்கிய படகை, அந்தப் புயலே கரையில் ஒதுக்குவது போல் அந்தப் பெருங் கூட்டமே என்னை அங்கிருந்து விடுவித்து வெளியே சென்றிட அனுமதித்தது. என்னைப் போலவே வயதில் மூத்த தோழர் சங்கரய்யா, தோழர் நல்லகண்ணு, பேராசிரியர் போன்றவர்கள் நசுக்கப்பட்ட போது சற்று இளைஞர்களான நண்பர்

இந்து ராம், தம்பிகள் இளங்கோவன், மு. கண்ணப்பன், தோழர் டி.கே. ரெங்கராஜன், ரவிராஜ், எம்.எல்.ஏ, புரசை ரெங்க நாதன், எம்.எல்.ஏ., நண்பர்கள் டாக்டர் சேதுராமன், எஸ்.கண்ணப்பன், டாக்டர் கிருஷ்ணசாமி, விடுதலை செழியன் போன்றவர்கள் சற்று சமாளித்து நின்றார்கள்.

அப்படியும் மனிதச் சங்கிலி அத்துடன் முடிந்ததா என்றால்; தீவுத் திடல் விட்டு, மன்றோ சிலை கடந்து, பெருந்தலைவர் காமராஜர் சிலை, பெரியார் சிலை, பேரறிஞர் அண்ணா சிலைகளைக் கடந்து - கடற்கரைச் சாலைக்கருகில் உள்ள அரசினர் விருந்து மாளிகை வரையில் உரிமை முழக்கம் உச்சத்திற்குச் சென்றிட; ஊர்வலம் போல் நகர்ந்தோம், நகர்ந்து கொண்டேயிருந்தோம்.

தீவுத் திடல் முத்துசாமி அய்யர் பாலத்திலிருந்து மனிதச் சங்கிலி - ஒவ்வொருவராக அல்ல; அடர்த்தியாக ஒருவருக்கு அடுத்து ஒருவர் என்றில்லாமல் - ஒருவர் பின் ஒருவராக குறைந்தது பத்து இருபது பேர் - அடைத்தாற்போல் நின்றிருந்ததை மாற்றி; வேலி போல ஒவ்வொருவராக நிற்குமாறு செய்திட காவல்துறை அனுமதித்திருந்தால், அந்த வேலி செங்கற்பட்டு நகரத்தையே தொட்டிருக்கக் கூடும்!

இந்தக் காவல் துறையின் பேரதிகார வர்க்கம்; அப்படியொரு பெருமையை எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க முன் வருமா? அல்லது அளித்தால்தான் அம்மையார் சும்மா விடுவாரா?

இந்த மனிதச் சங்கிலி அறப்போருக்கே எத்தனை கெடுபிடி செய்தனர் காவல்துறை பெரிய அதிகாரிகள் -

- மாலை மூன்று மணியிலிருந்து 6 மணி வரையில் எனக் கேட்ட அனுமதி மறுக்கப்பட்டு; மொத்தமே ஒரு மணி நேரம்தான் என்று கண்டிப்பாகக் கூறப்பட்டது.
- கட்டுப்பாடு, அமைதி, வன்முறையின்மை - இவற்றுக்கு நற்சான்றளிக்கும் அக்கறையும், அறநெறியும் என்னவோ இந்த அதிகாரிகளுக்குத்தான் இருப்பது போல; ஏற்கனவே நமது பேரணிகளில் வன்முறைகள் நடந்ததாகக் கற்பனை செய்து கொண்டு இட்டுக் கட்டிய செய்திகளடங்கிய அனுமதியை தட்டச்சு செய்து வழங்கி யிருக்கிறார்கள்.

அவற்றில் சில பகுதிகள் வருமாறு:

"மனுதாரர் 12-8-2001 அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் சென்னை சைதாப்பேட்டை சின்னமலை அருகிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, அண்ணா சாலை - சேமியர்ஸ் சாலை - டி.டி.கே. சாலை - டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - காமராஜர் சாலை வழியாக சென்னை மெரினா சீரணி அரங்கம் வரை, போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறும் நிகழாமல் கீழ்க்கண்ட வரையறைகளின்படி ஊர்வலம் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அன்றையதினம் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் காவல் துறை அனுமதி ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்த வரையறைகளை பொருட்படுத்தாமல் பெரும்பாலானவைகளை மீறியதன் விளைவாக, போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறும், பொதுச் சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்து பொது அமைதிக்கு குந்தகம் ஏற்பட்டது என்று மனுதாரருக்குச் சுட்டிக்காட்டப்படுகிறது"

என்று காவல்துறை அதிகாரிகள் தற்போது கொடுத்த அனுமதியிலே கூறப்பட்டுள்ளது. உண்மையிலே 12-8-2001 அன்று கழகம் நடத்திய பேரணி பற்றி தமிழகமே நன்றாக அறியும், பேரணி கடற்கரை சாலையில் புகுந்ததும், காவல்துறையினரின் பக்கத்திலேயே நின்று கொண்டு ஆளுங்கட்சி குண்டர்கள், அரிவாளைக் கொண்டும் தடிகளைக் கொண்டும்; பேரணியில் வந்தவர்களை சரமாரியாகத் தாக்கினார்கள். அந்தப் புகைப்படங்கள் எல்லாம் அப்போதே ஏடுகளில் வெளிவந்தன. புகைப்படம் எடுத்த பத்திரிகையாளர்கள் காவல்துறையினரால் டி.ஜி.பி. அலுவலகத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள். அந்தப் பேரணியில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் சீர்காழி நகர முன்னாள் பொருளாளர் செல்வ ரமேஷ், திண்டுக்கல் நகர 42வது வார்டு பிரதிநிதி அந்தோணி, சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்த சோலை முருகேசன், கோவை மதுக்கரையைச் சேர்ந்த ரெங்கசாமி ஆகிய நான்கு பேர் கொல்லப்பட்டார்கள். ஆளுங்கட்சி குண்டர்களுக்கு

அனுசரணையாக அந்தப் பகுதியில் அப்போது உயிரோடு இருந்த தாதா வீரமணி தன்னுடைய ஆட்களையெல்லாம் அனுப்பி கழகத் தோழர்களைத் தாக்குவதற்கு காவல்துறைக்கு உதவியாக இருந்ததும், காவல் துறைக்கு அப்போது உதவி புரிந்த அந்த தாதா வீரமணி அண்மையில் அதே காவல் துறையினரால் 'என்கவுண்ட்டர்' என்ற பெயரால் சுட்டுக் கொல்லப்பட்டதும், தற்போது மனிதச் சங்கிலிக்கு நிபந்தனையுடன் அனுமதி கொடுத்த அதிகாரிக்கு நம்மால் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றல்லவா?

காவல் துறையினர் கொடுத்த அனுமதியில் குறிப்பிட்ட நிபந்தனைகளும், அறிவுரைகளும் பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை எனினும்; இவற்றை அறிவுறுத்துகிறவர்கள் தங்களின் மனச்சாட்சிக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்பதை மறந்து விடலாமா?

நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்யலாம் என்று காவல்துறைக்கு எந்த நீதிமன்றம் அனுமதி அளிக்கிறது?

என்னைக் கைது செய்த போது, என்னைச் சித்ரவதை செய்தது மட்டுமல்லாமல் - அன்று அநியாயமாகத் தம்பி மாறனைத் தாக்கி அறுவை சிகிச்சை செய்யப்பட்ட அந்த உடலைப் பந்தாடியதால் அல்லவா, ஒன்றரை ஆண்டுக் காலமாக அவர் அமெரிக்கா விலும் இங்குமாக மருத்துவமனையிலே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

அந்த மிருக வெறிச் செயல்களைக் கண்டித்து நடைபெற்ற கழகத்தின் கண்டனப் பேரணியில், தாதாக்களைத் தூண்டிவிட்டு; அவர்களுக்குத் துணை நின்று கடற்கரை காமராஜர் சாலையில் அராஜ கத்தைக் கட்டவிழ்த்து விட்டு கழகத் தொண்டர்கள் உயிர்களைப் பறித்தது காவல் துறையைச் சேர்ந்த சில காட்டு மிராண்டிகள் அல்லவா?

'என்கவுண்ட்டர்' என்ற பெயரால் எத்தனை உயிர்களைப் பலி கொண்டு பழி வாங்கப்பட்டிருக்கிறது?

காவல் துறைக்குக் கழகமோ; கழக அரசோட விளைவித்த தீமை என்ன?

இரண்டு கமிஷன்களை முறையே கோபாலசாமி, ஐ.சி.எஸ்., தலைமையிலும், சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., தலைமையிலும் அமைத்து

- நூற்றுக்கணக்கான ரூபாய் சம்பளம் வாங்கியவர்களுக்கு; ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம் வழங்கியதும், சலுகைகள் பல வழங்கியதும் முதன்முதலாக தி.மு.க. ஆட்சிதான் என்பது தான் குற்றமா? அதற்காக; நியாயத்துக்கு விரோதமாக நேர்மை தவறி நடந்திட வாரீர் என அழைக்கவில்லை. மாறாக; இந்தக் காட்டாட்சி தர்பாரில் காவல் துறையினரும் கூட்டாளியாக இருந்து கொண்டு கொடுமை புரியலாமா? என்று தான் கேட்க நேரிடுகிறது.

ஆட்சிகள் வரும், போகும்; அதிகாரிகள், அரசு அலுவலர்கள் ஆட்சியின் சகடங்கள் அல்லவா? அந்தச் "சகடங்கள்;" ஆளப்படும் மக்களுக்கு - அந்த மக்களின் பிரதிநிதிகளுக்கு - 'சங்கடங்கள்' என ஆகலாமா?

ஜனநாயகத்தில் உயிரானதல்லவா, பேச்சுரிமை - எழுத்துரிமை - அவற்றை அறவழியில், அமைதிவழியில் பயன்படுத்தி ஓர் அரசின் அநீதியை எதிர்க்கும் உரிமையைக் கூட உரிய வகையில் தர மாட்டோம் என உறுமுவதும் - உதாசீனப்படுத்துவதும்; முறை யல்ல - அந்த உத்திரவுகள் முடிவானவையல்ல என்பதை வரலாறு, பாடமாகக் கற்பித்துக் கொண்டிருக்கிறது.

நவம்பர் 12 அனைத்துக் கட்சியினர் நடத்திய 'மனிதச் சங்கிலி' அந்தப் பாடத்தைத்தான் மமதையாளர்களுக்கும், சரித்திரத்தை மறந்து விட்டவர்களுக்கும் நினைவூட்டுகிறது.

அன்புள்ள,

மு.க.

14-11-2003

2996. உண்மையில் கடவுள் உண்டெனில்.....!

உடன்பிறப்பே,

“டான்சி” வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி நான் விரிவாகவோ அல்லது சட்டப் பிரச்சினைகளில் தலையிட்டோ அதன் விபரங்களுக்குள் சென்றோ எதுவும் கூறவிரும்பவில்லை. இந்த வழக்கில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்டிருந்தாலும் நான் மகிழ்ச்சி கொண்டாடியிருக்கமாட்டேன். இதனை நான் இந்தத் தீர்ப்பு வருவதற்கு முதல் நாளே ‘முரசொலி’, ‘தினகரன்‘ ஏடுகளில் ‘பண்பாடு போற்றுவோம்’ என்ற தலைப்பில் 24-11-2003 அன்று எழுதியுள்ள கவிதையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். மாற்றாரின் துன்பத்தில் மகிழ்ச்சி கொள்ளக் கூடாது என்பதை உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு வேண்டுகோளாணையாகவே அந்தக் கவிதை மூலம் வெளியிட்டிருக்கிறேன். -

என் அன்புக் கண்மணி மாறன் என்னையும் உன்னையும் விட்டுப் போய்விட்டார். அவரைப் பற்றிய என் மன உணர்வுகளை வெளியிடக்கூடிய சக்தி இப்போது எனக்கில்லை. ஆனால் ஒன்று; அவரது உயிரற்ற உடலைச் சுற்றி நீயும் நானும் ஏன்; பல்லாயிரக்கணக்கான நல்லுள்ளம் கொண்ட தமிழ்க்குல மக்களும் சோகமே உருவாகக் குழுமியிருந்த நேரத்தில் பக்கத்து தெரு போயஸ் தோட்டத்தில் இடை விடாமல் பட்டாசு வெடித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தார்களே; அந்தப் பண்பாட்டினை என்னாலும் மறக்க முடியாது; எனது இளவல் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி அவர்களாலும் ஏற்க முடியாது என்பதை; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றிய இந்தக் கருத்து விளக்கத்தின்போது குறிப்பிடாமல் இருக்க முடியாது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றிய கருத்து விளக்கம் என்று கூறிய போதிலும்; விளக்கமாக எதுவுமின்றி, சட்டம் படித்தவர்களுக்கு மட்டுமல்ல; சாதாரண அறிவு படைத்தவர்கள் கூடச் சிந்தித்துப் பார்த்திட, ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்திகளை மட்டும் தொகுத்துத் தருகிறேன் இந்தக் கடிதத்தில்!

தி.க. தலைவர், இளவல் வீரமணி விடுத்துள்ள அறிக்கையில்,

"பிரச்சினைக்குரிய டான்சி நிலத்தைத் திருப்பி ஒப்படைக்குமாறு நீதிபதிகள் தீர்ப்புக் கூறியுள்ளனர். ஆனால் ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதா இதை நீதிமன்றத்திலேயே கூறிவிட்டு அதற்கான ஏற்பாடுகளை யும் சட்டப் பூர்வமாக செய்தார் என்பது நாடறிந்த ஒன்றாகும்"

என்று குறிப்பிட்டிருக்கிறார். திருப்பிக் கொடுக்கிற பிரச்சினை எப்போது வரும்? ஒரு பொருளையோ உடைமையையோ வாங்கி யிருந்தால்தானே திருப்பிக் கொடுக்கிற பிரச்சினை வரும்!

இப்போது வீரமணி அவர்களின் கருத்துப்படி ஜெயலலிதா டான்சி நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதாக நீதிமன்றத்திலேயே கூறி விட்டார் என்றால்; இது எப்படி இருக்கிறது?

"எடுத்ததைக் கொடுத்து விடுகிறேன், என்னை விட்டு விடு" என்று சொல்வது போலத்தானே இருக்கிறது.

அடுத்த அறிக்கையாக அதே பத்திரிகையில் இந்து முன்னணி அமைப்பாளரின் அறிக்கையும் வந்துள்ளது, "இந்தத் தீர்ப்பின் மூலம் தர்மத்திற்கு என்றும் அழிவில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது"

என்பதாக இந்து முன்னணி அமைப்பாளர் தனது அறிக்கையில் ஜெயலலிதாவின் தர்ம குணத்தையும் நேர்மையையும் சிலாகித்துக் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவை விடுதலை செய்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அவர்கள் வழங்கிய தீர்ப்பில் என்ன கூறியுள்ளார்கள் என்பதையும்; இந்த அறிக்கைகளை வெளியிட்டுள்ள அதே பத்திரிகைதான் அதே பக்கத்தில் தொடர்ந்து வெளியிட்டுள்ளது.

அது வருமாறு :

"இந்தியத் தண்டனை சட்டத்தை வழிகாட்டும் நெறிமுறையாக கருத முடியாது. அதேநேரத்தில் டான்சி நில பேர விவகாரத்தில் முதல் அமைச்சரும் சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்று நன்கு அறிந்து இருந்தபோதிலும் அரசு சொத்தை விற்க அனுமதி

வழங்குவதில் மாநில அதிகாரிகள் அளவுக்கு அதிகமான உற்சாகம் காட்டியிருப்பது உண்மை.

சட்டப்படி அவர் (ஜெயலலிதா) குற்றம் செய்யவில்லை என்றாலும், அவர் நடந்து கொண்ட விதம், நடத்தை விதிமுறைகளுக்கு எதிராக உள்ளது. ஆவணத்தில் இருந்த அவரது கையெழுத்தையே மறுக்கும் அளவுக்கு அவர் சென்று இருக்கிறார். பொது வாழ்வில் இருப்பவர்கள் நல்லொழுக்கத்தை பேணிக் காப்பது அவசியம். அதுவே நல்ல நிர்வாகத்துக்கான தர முத்திரை ஆகும்.

நல்ல நிர்வாகத்தை வழங்குவதற்கு பொது வாழ்க்கையில் உயர்ந்தபட்ச நேர்மை - நாணயம் அவசியம். இந்தச் சர்ச்சைக்கு அவர் (ஜெயலலிதா) தனது மனச்சாட்சிப்படி பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும்.

எனவே, அவர் டான்சி நிலத்தை அரசுக்குத் திரும்ப ஒப்படைக்க வேண்டும்"

உடன்பிறப்பே,

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் இந்தக் கருத்தைப் போன்றே; இவ்வளவு கடுமையாகக் கூட அல்ல; 1964 ஆம் ஆண்டில் ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்த நீலம் சஞ்சீவ ரெட்டியின் மீது நீதிமன்றம்; பஸ்கள் பற்றிய ஒரு வழக்கில் கண்டனம் தெரிவித் திருந்தது.

அதற்காக அவர் தனது முதலமைச்சர் பதவியை துறந்தார் என்பது வரலாறு.

இப்போது ஜெயலலிதா பற்றிய சொத்துக் குவிப்பு வழக்கிலும், உச்ச நீதிமன்றம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து வழக்கை வேறு மாநிலத்துக்கே மாற்றியுள்ளது.

டான்சி வழக்கிலும் அவர் ஆவணத்தில் உள்ள கையெழுத்தையே மறுக்கிற அளவுக்குப் போயிருக்கிறார் என்று உச்ச நீதிமன்றம் கண்டித்திருக்கிறது.

இதற்கு அவர் தார்மீகப் பொறுப்பேற்று அதற்கேற்ப செயல்பட்டால்; வீரமணி அவர்கள் கூறியுள்ளது போல "அவர்

நெருப்பாற்றில் நீந்தி வெளிவந்த வீராங்கனை" என்பது பொருந்தும்!

இல்லையேல்; ஜெயலலிதா கூறியுள்ளபடி; "எல்லாம் கடவுளின் விருப்பம் ; கடவுளுக்கு நன்றி" என்றாகிவிடும்!

இது இந்து முன்னணி அமைப்பாளருக்குக் கூட பிடிக்குமோ, என்னவோ! ஏனெனில் "கையெழுத்தை மறுப்பது" கடவுளின் செயலாகிவிட முடியாது என்று இந்து முன்னணி அமைப்பாளர் அவர்கள் வாதிடக் கூடும்,

யார் எப்படி வாதிட்டாலும் உண்மையில் கடவுள் இருந்தால் அவரை ஏமாற்ற முடியாது என்ற பொன்மொழியுடன் இந்தக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-11-2003

2997. உன்னால் முடியுமா ?
முடியவே முடியாது !

“தம்பி,

புள்ளியாய்த் தோன்றி
பூமியாய் வளர்ந்தவரே!
நீங்கள் மரித்துப் போனதாய்
மனம் நம்பவில்லை”

என்று கவிப்பேரரசு இரங்கல் கவிதை எழுதியுள்ளார் உனக்கு!

நீ மரித்துப் போகவில்லைதான் - பூமியாய் வளர்ந்து வானமாக விரிந்து விட்டவனே! வானத்துக்கு மரணமேது?

இன்னொரு கவிஞர் வி. இளங்கோ என்பார், இன்று எழுதியுள்ள கவிதையில்,

“தாய் மாமன் பலருக்கு உண்டு
மாமனே தாயானது உனக்கு மட்டுந்தான்”

என்று குறிப்பிட்டிருப்பதை முழுவதும் படிக்க முடியவில்லை ; அதற்குள் அருவித் திரைகள் என் பார்வையை மறைத்து விட்டன.

இந்தத் தாயை விட்டுப் பிரியக் கூடாது என்பதற்காக, இந்தத் தாய் தாங்க மாட்டாள் என்பதற்காக நானூறு நாட்களுக்கு மேலாகக் கடும்போர் நடத்திக் கடைசியாக இயற்கையின் பக்கமே வெற்றியை வழங்கி விட்டுப் போய் விட்டாய்.

அன்று காவல்துறை அதிகாரிகளால்; உன் நெஞ்சுக்குள் ஏற்பட்ட அந்த விழுப்புண் - அதுவே நீ விழுவதற்கும் எம் விழிகளில் நீர் விழுதுகள் இறங்குவதற்கும் காரணமாகி விட்டது என்பதை எண்ணிப் பார்க்கும் போது போர்க் குணம் படைத்த என் தங்கமே; அநீதியை, அராஜகத்தை எதிர்க்கக் கேடயமாகவும் ஈட்டியாகவும் எங்களுடன் இணைந்து இருந்தவனே! எப்போதும்

அப்படியேதானிருப்பாய் எமது உணர்வாக என்ற உறுதியையும் நம்பிக்கையையும் எம்மிடம் விட்டுவிட்டுத்தான் சென்றிருக் கிறாய்

குவளை மலரில் ஓர் இதழாய்த் தோன்றினாய்; என்னைப் போலவே அந்தத் திருக்குவளைத் தெருவில்தான் என் மடியில் விளையாடினாய். அந்தக் கிராமத்தில் படித்த என்னை இரண்டாம் படிவத்தில் சேர்ப்பதாகத் திருவாரூர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் அழைத்து வந்தார். தேர்வுகள் எழுதினேன், எழுதினேன்; இறுதியில் வெறும் ஐந்தாம் வகுப்பில்தான் சேர்க்கப்பட்டேன்; அதுவும் தெப்பக் குளத்தில் விழுந்து விடுவேன் என்று அந்தக் குளம் நோக்கி ஓடிய பிறகுதான் அந்த வகுப்பும் கிடைத்தது.

ஆனால் நீ என்னிடம் பாடம் கற்றாய். மூன்றாம் வகுப்பு படித்து முடித்த உன்னை ஐந்தாம் வகுப்புக்கே தகுதியென்று தேர்வு செய்தார்களே;

அதை நீ மனத்தில் வைத்துக் கொண்டுதானே - இங்கிலாந்து பிரதமரைச் சந்திக்க மத்திய அமைச்சராக இலண்டன் மாநகர் சென்ற போது அங்கிருந்து எனக்கு எழுதிய மடலில் "நான் உங்கள் தயாரிப்பல்லவா?" என்று நன்றியுணர்வைப் பெருமிதத்துடன் வெளிப்படுத்தியிருந்தாய்!

தொடர்ந்து அந்தக் கடிதத்தில், "என் சிந்தை - அணு ஒவ்வொன்றிலும் குடியிருந்து என் இதயத் துடிப்புகளாக இருந்து என்னை ஆட்டுவிக்கும் உங்கள் காலடிகளில் அனைத்தையும் சமர்ப்பிக்கிறேன்! - இப்படி நீங்களும் நானும்தான் கண்ணீர்ப் பெருக்கோடு உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள முடியும் - ஏனெனில் இது இரத்த பாசம் நமது திருக்குவளைப் பின்னணி நமது மாநிலக் கட்சி சூழ்நிலை!" என்று எழுதியிருந்தாய்.

அண்ணா எனக்கு எழுதிய கடிதங்களைக் கண்களில் ஒத்திக் கொள்வது போலத்தான் நீ இலண்டனிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தையும் முத்தங்களால் நனைத்துக் கொண்டிருக்கிறேன். தாயின் முத்தத்தினையொத்த இந்தத் தாய் மாமனின் முத்தம் உனக்கும் இனிக்கும், எனக்கும் இனித்துக் கொண்டேயிருக்கும்.

என் மருமகன் என்ற தகுதியால் மட்டுமே பெருமை பெறுவதும், புகழ் பெறுவதும் நிறைவானதல்ல என்பதால்தான்,

ஓராண்டு மிசா சிறைவாசமெனும் தியாகக் கிரீடத்தை அணிந்து கொண்டாய்!

அடக்குமுறை வெறிகளை - அராஜகத் தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டாய்.

அண்ணாவின் அளப்பரிய அன்புக்கும் பாசத்துக்கும் ஆளானாய்! வாஜ்பய், வி.பி.சிங், குஜ்ரால் ஆகிய பிரதமர்கள் உள்ளிட்ட வடபுலத்துத் தலைவர்களின் வாஞ்சைமிகு வாழ்த்துக்களுக்கு உரியவன் ஆனாய்!

உலகின் கவனம் கவர்ந்த "தோகா" மாநாட்டில் நீ விரித்த புகழ்த் தோகையும் - கிளிண்டனுடன் விவாதித்த பெருமிதமும் - இங்கிலாந்தின் டோனி பிளேருடன் சந்திப்பும் - உன் கழுத்தில் ஊஞ்சலாடும் முத்தாரங்கள்!

கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத்தும், மூதறிஞர் இராஜாஜியும், பேரறிஞர் அண்ணாவும் கையெழுத்திட்ட வேட்பு மனுவல்லவா உன்னை தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் - வெளிநாட்டுப் புகழாரங்களைத் தோளில் சுமக்கும் வெற்றி வீரனாகவும் - விளங்கிடச் செய்தது!

மாநில சுயாட்சிக்கு 'வேதமே' எழுதி முரசொலித்தாய் ஆனாலும் மத்திய அரசுதான் உனக்கு இறுதி இராணுவ மரியாதை செலுத்தியது.

குவளையில் பிறந்து குவலயம் போற்றிடப் பணி புரிந்தாய்!

அந்தப் புகழ்ப் பூவின் மணம் சிறிதும் குறையாமல் புயல் அடிக்கும் என் நெஞ்சில் இப்போதும் தென்றலாய் வீசிக் கொண்டிருக்கிறாய்.

நீ போகலாம்; உன் நினைவுகளை என்னை விட்டு எடுத்துச் செல்ல உன்னால் முடியுமா? முடியவே முடியாது!

இவண்,

மு.க.

27-11-2003

2998. நீதிமன்றம் சென்று வந்தேன்!

உடன்பிறப்பே,

இன்று நீதி மன்றம் சென்று வந்தேன். தம்பி மாறன் நினைவுடன் இன்னமும் கலங்கிக் கொண்டிருக்கும் எனக்கு மேலும் ஒரு இடியாக பெங்களூர் கழக மாமணி சிவசங்கர் மறைவுச் செய்தி கிடைத்தது. சென்ற வாரம்தான் அவர் குடும்பத்தினருடன் அண்ணா அறிவாலயத்துக்கு வந்து என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு சென்றார். கழகத்தின் உழைப்பாளி கொத்தளம் கோவிந்தராஜ் மறைவு - இப்படி துன்பம் துணையோடு வரும் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் மாறன் மறைவைச் சுற்றி நிழலாடிக் கொண்டிருக்கும்போதுதான்; இன்றைய நீதி மன்றப் பயணம் ஒரு வித்தியாச நிகழ்ச்சியாக அமைந்தது.

போர்க்களமே சுற்றுச் சூழலாக அமைந்த என் பொது வாழ்வில் நான் தொடர்ந்து சந்தித்து வரும் நீதிமன்ற நிகழ்வுகளில் சற்று இடைவெளி ஏற்பட்டு; இப்போது மீண்டும் தொடர்ந்திடத் தொடங்கியுள்ளதே இன்றைய எனது நீதிமன்றப் பயணம். உன்போன்ற உடன்பிறப்புகள் சூழ இருப்பது என் இமாலயக் கவலைக்கே கூட மருந்தாகுமென்று உனக்கே தெரியுமல்லவா?

அரசு ஊழியர்களைப் போராட்டத்துக்குத் தூண்டி விட்டேன் என்று என் மீதும் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த தம்பி இளங்கோவன் மீதும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோழர்கள் நல்லகண்ணு, வரதராசன் மீதும் வழக்கு - அதற்கான முதலழைப்புத் தனித் தனியே வந்து; நாங்களும் அவ்வாறே சென்று வந்துள்ளோம்.

என்ன குற்றமாம்? ஆம்; அரசு அலுவலர், ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தூண்டி விட்ட குற்றமாம். நீதிமன்றத்தில் நின்று இப்போது நான் சட்ட ரீதியாக வாதாடவில்லை. நேரம் வாய்க்கும்போது எங்களுக்காக வழக்கறிஞர்கள் வாதாடுவார்கள்.

இப்போது சில குறிப்புகளை மட்டுமே, உனக்கும் நடுநிலையோடு சிந்திக்கும் நல்லவர்களுக்கும் நினைவூட்டுகிறேன். தூண்டிவிட்டேன் என்ற குற்றச்சாட்டுக்கு சில துளிகளை இதோ சான்றாக எடுத்துக் கூறி; உன் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

"அரசாங்கம் தொடர்ந்து நிதி நிலை பற்றாக்குறை என்றே சொல்லிக் கொண்டிராமல், சரண் விடுப்புக்கான ஊதியம், போனஸ், வேலை இல்லாமல் இருக்கும் சாலைப் பணியாளர், மக்கள் நலப்பணியாளர் போன்றவர்களுக்கு மீண்டும் வேலை, அரசு அலுவலர்களின் ஓய்வூதியப் பயன்களைப் பறிக்கும் வகையில் பிறப்பித்த ஆணைகளைத் திரும்பப் பெறுதல் போன்ற முக்கியமான கோரிக்கைகளைப் பற்றி சில நல்ல முடிவுகளை எடுத்து அறிவிப்பதுதான் நலமாக இருக்கும். அரசு அலுவலர்களின் மிக முக்கியமான கோரிக்கை மீண்டும் அழைத்துப் பேசுங்கள் என்பதுதான். அது நிறைவேறினாலே போராட்டம் வெற்றிதான்."

(மு.க. முரசொலியில், 1-7-2003)

அரசு ஊழியர்களை அழைத்துப் பேசுக என்று அரசுக்கு வலியுறுத்துவதே தூண்டுதல் எனும் குற்றத்தின் கீழ் வருவதாகக் கூறப்படுகிறது.

பின்னர் மறுநாள் 2-7-2003 அன்று நான் வெளியிட்டுள்ள கருத்து பின்வருமாறு :

"வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துகிற வாய்ப்பு உருவாகுமேயானால், அதுகுறித்துப் பேசி முடிவு மேற்கொள்ளக்கூட முக்கிய தலைவர்கள் இல்லாமல் அவர்களையெல்லாம் முன் கூட்டியே கைது செய்திருப்பது ராஜ தந்திரமாகாது. எனவே அரசு அடக்குமுறையால் பணியவைக்கும் முறையை விடுத்து அன்பான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதே பிரச்சினை சுமுகமாகத் தீர்வதற்கு வழிவகுக்கும். பிரச்சினை சுமுகமாகத் தீர விருப்பம் தெரிவிப்பதே தூண்டுதல் குற்றம் எனும் பட்டியலில் இடம்

பெறுமானால் பிறகு எப்படித்தான் இது போன்ற அரசு ஊழியர் கோரிக்கை - தொழிலாளர் கோரிக்கை போன்ற பிரச்சினைகளில் எதிர்க்கட்சிகள் செயல்படுவது?

ஒருவேளை இதுபோன்ற விவகாரங்களில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வையே முன்மாதிரியாகக் கொண்டு; அதன்படி நடந்தால் அது தூண்டுதல் எனும் குற்றப் பட்டியலில் சேராதோ?"

இதோ அதற்கு எடுத்துக்காட்டாக; தி.மு.க. ஆட்சி நடந்தபோது அ.தி.மு.க.வின் 'நமது எம்.ஜி.ஆர்.' என்ற பத்திரிகையில் ஜெயலலிதா அறிவித்த செய்தி வருமாறு :

"தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்களுக்கும் அரசு ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி அண்ணா ஸ்டாப் யூனியன் 18-1-2001 முதல் 20-1-2001 வரை பல்வேறு தொடர்போராட்டங்கள் நடத்தும். போராட்டங்களுக்கு கருணாநிதி அரசு செவிசாய்க்காவிட்டால் 20-2-2001 அன்று கோட்டையை நோக்கி மாபெரும் பேரணி"

எனவே, "எதிர்க்கட்சியினரே எந்தப் போராட்டமாயினும் கோட்டையை நோக்கிப் பேரணி நடத்துங்கள், பல்வேறு தொடர் போராட்டங்கள் நடத்துங்கள், அது யாரையும் தூண்டிவிடுவது ஆகாது" என்றல்லவா அ.தி.மு.க. கூறி, அதன்படி நடந்தும் காட்டியுள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்க்கு 20 சதவிகிதம் போனஸ் தி.மு.க. ஆட்சியில் கொடுத்தபோது, "போதாது; 25 சதவிகித போனஸ் கொடு" என்று போராடியவர்கள் அல்லவா, அ.தி.மு.க.வினர்!

இன்று பத்து சதவிகித போனசுக்கே "பற்றாக்குறை" என்று பம்மாத்து செய்கிறார்கள்.

உடன்பிறப்பே, நமக்குத் தூண்டி விடவும் தெரியாது; தூண்டில் போடவும் தெரியாது. அதை முற்றாகக் கற்றவர்கள்தான், இந்த ஆட்சியாளர்கள்!

அவர்கள்தான் வழக்கு தொடுத்திருக்கிறார்கள்; அதிகாரமெனும் அக்கினியாஸ்திரம் அவர்களிடம்!

நம்மிடமோ அக்கினியாஸ்திரமில்லை; அதைப் பயன்படுத்தும் பழக்கமுமில்லை - வர்ணாஸ்திரம் ஒன்றே நம்மிடமுள்ள பாதுகாப்புக் கணை!

அன்புள்ள,

மு.க.

28-11-2003

2999. பா.ஜ. க. அறிக்கையும் தி.மு.க. கருத்தும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதாவின் 60 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கை தமிழ்நாட்டு நீதி மன்றத்திலிருந்து வேறு மாநில நீதி மன்றத்துக்கு மாற்ற வேண்டுமென்ற முறையீட்டுடன் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் உச்ச நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில்; உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், திரு. எஸ்.என். வரியவா மற்றும் திரு. எச்.கே. சேமா ஆகியோர், அந்த முறையீட்டை ஏற்று வழக்கினை வேறு மாநிலத்துக்கு (கர்நாடக மாநிலம்) மாற்றுவதாக 18-11-2003 அன்று தீர்ப்பளித்தபோது குறிப்பிட்ட கருத்துரைகள்; அவை கருத்துரைகள் என்றல்ல; கண்டனங்களாகவே கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

அதைத் தொடர்ந்து டான்சி வழக்கில்; வழக்கு விசாரணை 2002 ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிந்து; உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு ஓராண்டுக் கால தாமதத்திற்குப் பிறகு 24-11-2003 அன்று வெளிவந்த போதிலும் - அந்தத் தீர்ப்பு ஜெயலலிதா கோஷ்டி யினரை விடுதலை செய்வதாக அறிவித்தபோதிலும் - அவர்களின் தலையிலே ஓங்கிக் குட்டுவதற்குத் தவறவில்லை.

இந்த இரண்டு தீர்ப்புகளையும் ஒட்டி ஜெயலலிதாவுக்கு விழுந்துள்ள குட்டுக்களை வரிசைப்படுத்திப் பார்த்துத்தான் - ஆழமாகக்கூட ஆராய்ந்து பார்த்து முடிவுகட்டத் தேவையில்லை என்ற நிலையில் - காக்கை கறுப்பு நிறம்தான் - கொக்கு வெள்ளை நிறம்தான் என்று எளிதாகச் சொல்வதுபோல; சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும் அதேபோல டான்சி வழக்கில் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும் ஜெயலலிதாவின் செயலை நியாயப்படுத்தா தவை மட்டுமல்ல; அவர் மீது வீசப்பட்டுள்ள கண்டனக்

கணைகளேயாகும். அவர் முகத்தில் பூசப்பட்டுள்ள களங்கச் சேறு - காலத்தால் அழிக்க முடியாத கறை என்றே திட்டவட்டமாகவும், தெளிவாகவும் புரிகின்ற உண்மையாகும்.

● <u>சொத்துக் குவிப்பு வழக்கினை வேறு மாநிலத்துக்கு மாற்றி தீர்ப்பு வழங்கிய போது உச்ச நீதிமன்றம் தெரிவித்தவை வருமாறு:</u>

1"ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற பிறகு பல சாட்சிகள், தாங்கள் ஏற்கனவே கொடுத்திருந்த வாக்குமூலத்திலிருந்து 'பல்டி' அடித்துள்ளனர்"

**

2. "சுதந்திரமான நியாயமான முறையில் வழக்கு விசாரணை நடைபெறா விட்டால் நீதி வழங்கும் முறையில் மக்களின் நம்பிக்கை சீர்குலைந்து விடும்"

**

3. "இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற விதத்தைப் பார்க்கும்போது, நீதி தோல்வி அடைந்துவிடுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது"

**

4. வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஜெயலலிதா விசாரணை கோர்ட்டில், நீதிமன்றம் கேள்வி கேட்கும்போது சென்னையில் இருந்துகொண்டே ஆஜராகவில்லை"

**

5. "குற்றஞ்சாட்டப்பட்டவர் வெகு தூரத்தில் இருந்தால் மட்டுமே கேள்விப் பட்டியலைப் பயன்படுத்தலாம் என்று உச்ச நீதிமன்றம் ஒரேயொரு வழக்கில் விதிவிலக்காகக் கொண்டுவந்த முறையை - இந்த விவகாரத்தில் கடைப் பிடித்ததை ஏற்க இயலாது"

**

6. "ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இந்த வழக்கில் திரும்ப அழைக்கப்பட்ட 76 அரசு தரப்பு சாட்சிகளில்

64 பேர் 'பல்டி' அடித்துள்ளனர். அவர்கள் மீது அரசு வக்கீல் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார் என்பதும் கண்டனத்திற்குரியது"

**

7. "நீதி பரிபாலன முறையின் புனிதத்தையும் அதன் மீது சாதாரண மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நிலை நாட்ட இந்த வழக்கு விசாரணை கர்நாடக மாநில நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது"

**

உடன்பிறப்பே;

இதற்கடுத்து தீர்ப்பு கூறப்பட்ட டான்சி நில வழக்கில் விடுதலை என்ற வார்த்தைக்குப் பின்னால்; அந்தத் திரையில் பளிச்செனக் காணப்படும் வாசகங்கள் யாவை?

ஜெயலலிதாவுக்கும், ஜெயலலிதாவைப் பாராட்டி வெற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அறிக்கைகள் விட்டும் ஆனந்தம் பொங்குவதாகக் காட்டிக் கொள்பவர்களுக்கும்தான் தீர்ப்பின் முடிவு பயன்படுமே தவிர; உச்ச நீதிமன்றத்துக் கண்டனக் கணைகளின் கூர்மையை மழுங்கச் செய்ய முடியுமா? முடியாது!

இதோ அந்தத் தீர்ப்பையொட்டி உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் திரு. எஸ். ராஜேந்திரபாபு, திரு. பி.வி. ரெட்டி ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் :

1. டான்சி விதிமுறைகளின்படி அதை விற்பனை செய்வதற்கு முன்பு அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டும். இந்த விவகாரத்தில் அரசு அதிகாரிகள் அந்த அனுமதியை முன்னேற்பாடாக வழங்கியுள்ளனர். ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் எந்த வகையிலும் சம்பந்தப்படாமல் ஜெயலலிதா ஜாக்கிர தையாக ஒதுங்கி இருந்துள்ளார். இது போன்ற சம்பவம், நீதிபதிகளாகிய எங்களை மிகவும் கவலையடையச் செய்கிறது''

**

2. "இந்த வழக்கிலிருந்து தப்பிக்க 'டான்சி' நிலப் பத்திரத்தில் உள்ளது தன்னுடைய கையெழுத்தே இல்லை என்று கூறும் அளவுக்கு ஜெயலலிதா சென்றுள்ளார்"

**

3. "இது ஜெயலலிதாவின் கையெழுத்துத்தான் என்று அரசு அதிகாரிகளும் அவருடைய ஆடிட்டரும் அடையாளம் காட்டிய பிறகும்கூட அவர் இதைச் செய்துள்ளார்."

**

4. "பொதுவாழ்வில் உள்ளவர்கள் "ஜெண்ட்டில்மேன்கள்". கிரிமினல் வழக்குகளில் சாக்கு "போக்குச் சொல்லி தப்பிக்க முயற்சிப்பதைப் போல இல்லா மல் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்"

**

5. "டான்சி" பிரச்சினையில் வழி காட்டி நெறிமுறைகளை மீறியது சரி தானா? பொதுச் சொத்தை சொந்த நலனுக்கு வாங்கிட விதிமுறைகளை வளைத்தது சரிதானா? என்று ஜெய லலிதா மனச்சாட்சிப்படி நினைத்துப் பார்த்து அதற்குப் பரிகாரம் தேட வேண்டும்"

**

6. "ஜெயலலிதாவை குற்றவாளியல்ல என்று இந்த நீதிமன்றம் விடுவித்தாலும், தன்னுடைய மனச்சாட்சிக்கு அவர் பதில் சொல்ல வேண்டும். டான்சி நிலத்தைத் திரும்ப அரசிடம் ஒப்படைக்க வேண்டும்."

உடன்பிறப்பே,

உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இரண்டு தீர்ப்பு களையொட்டி அந்த மன்றத்து நீதிபதிகள் வெளியிட்ட கடுமையான கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்துத்தான் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து முதல், முதலாகத் தொடங்கி எல்லாக் கட்சிகளுமே ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தின் இந்தக்

கண்டனக் கருத்துக்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்றுப் பதவி விலக வேண்டுமெனக் கூறியுள்ளன.

பாரதீய ஜனதா கட்சி மட்டுமே ஜெயலலிதா பதவி விலகத் தேவையில்லையென்று பறைசாற்றப் புறப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியையும் அதனுடன் இணைத்து பாரதிய ஜனதாக் கட்சியையும் குறிப்பாக பிரதமர் அடல் பிகாரி வாஜ்பய் அவர்களையும் மத்திய ஆட்சிப் பொறுப்புக்கு வரவே விடமாட்டேன் என்று தமிழக சட்டமன்றப் பேரவையிலேயே கோபாவேசமாக முழக்கமிட்ட ஜெயலலிதாவை விட்டுக் கொடுக்க இரு கட்சிகளிலுமே சிலருக்கு; காங்கிரசில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கும், பாரதிய ஜனதா கட்சியில் தமிழகத் தலைவர்கள் அனைவருக்கும் - அக்கட்சியின் மேலிடத்தில் ஓரிருவருக்கு மட்டும் மனமில்லை என்பது ஊரறிந்த இரகசியமே ஆகும்.

இதில் தமிழக பா.ஜ.க. ஒரு படி மேலேயே சென்று - தான் ஏதோ உச்சாணிக் கொப்பில் உட்கார்ந்திருப்பது போல் எண்ணிக் கொண்டு;

> அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்ற நிலையை பா.ஜ.க. எடுக்கவில்லை என்றும்; அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளையுமே சம தூரத்தில் வைத்துள்ளதாகவும்,

தமிழக பா.ஜ.க. சார்பில் ஓர் அறிக்கை இன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொதுவாக நான் தமிழக பா.ஜ.க.வுக்கு பதில் அளிப்பதில்லை என்றாலும்; இந்த அறிக்கை மேலிடத்து ஆணை பெற்று வந்திருப்பது என்ற தகவலின் பேரில் ஓரிரு கருத்துக்கள் கூற வேண்டியவனாயிருக்கிறேன்.

மறைந்த அன்புக் கண்மணி மாறன் எந்தக் கட்சியும் தீண்டத்தகாத கட்சியல்ல என்று அகில இந்தியக் கட்சிகள் அனைத்தின் கடந்த காலக் கூட்டணிகள், நடைமுறைகள், செயல்பாடுகள் குறித்துக் குறிப்பிட்டதையும்;

இப்போது பா.ஜ.க. சார்பில் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் சம தூரத்தில் வைத்துப் பார்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் "ஜம்பப்" போக்கினையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது.

வாஜ்பய் எனக்கு ஏறத்தாழ முப்பதாண்டு கால நண்பர். எங்கள் நட்பை மேலும் நெருக்கமாக்கியது நெருக்கடி கால நிகழ்வுகள். 1975-76க்குப் பிறகு தான் 1977ல் ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்தது. அந்தக் கட்சி அமைந்திட டெல்லியில் நண்பர் செழியன் வீட்டில் என் தலைமையில்தான் பூர்வாங்கக் கூட்டம். நண்பர் ராஜாராமும் என்னுடன் வந்திருந்தார். ஈழத் தமிழர் பாதுகாப்புக்கான மதுரை டெசோ மாநாட்டிலும் வாஜ்பய் பங்கேற்றார். இப்படிப் பல நிகழ்ச்சிகள் எங்கள் தொடர்பை நினைவூட்டக் கூடியவை. அந்தப் பழக்கத்தில்தான் அவரது பண்பாட்டை உணர்ந்து "சரியான மனிதர், அதற்கு முரணான கட்சியில் இருக்கிறார்" என்று அப்போது ஒரு முறை சொன்னேன். (Right Man In tho wrong Party). அன்று நான் சொன்ன கருத்தை; இன்று அந்தக் கட்சியிலே உள்ள சிலர் மெய்யாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான் மத்தியில் பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சி என்றில்லாமல்; தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி (என்.டி.ஏ.) என்று அமைத்தோம். வல்லவராகவும், நல்லவராகவும் விளங்கும் வாஜ்பய் அவர்களுக்கு தெரிந்தோ, தெரியாமலோ இந்தக் கூட்டணி ஆட்சியில் குழப்பம் விளைவித்திட "தி.மு.க. வை, அ.தி.மு.க.வுடன் சமதூரத்தில் நிறுத்தியிருக்கிறோம்" என்று துடுக்கு மிகக் கொண்டு வெளியிடப்பட்ட அறிக்கையையும், உச்ச நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகளையொட்டி அறிவிக்கப்பட்ட கண்டனங்களுக்காக ஜெயலலிதா பதவி விலகத் தேவையில்லை என்று பா.ஜ.க. வெளியிட்டுள்ள கருத்தினையும் தி.மு.கழகம் விளையாட்டாகக் கருதவில்லை.

அன்புள்ள,

மு.க.

29-11-2003

3000. அனைத்துப் பிரிவு மக்களுக்காக ஓர் அறப்போர்!

உடன்பிறப்பே,

வைகறைத் துயிலெழுந்த பிறகும், கன்னத்தில் கைவைத்தவாறு கட்டிலில் உட்கார்ந்திருந்தேன். முதுகில் யாரோ தட்டியது போன்ற உணர்வு. திடுக்கிட்டுக் கண் விழித்துத் திரும்பிப் பார்த்தேன். சுவரில் மாட்டப்பட்டிருந்த படம், அதில் சுந்தரப் புன்னகையுடன் அண்ணா - என்னை நோக்கிக் கேட்டார், என்ன? இன்னும் கவலை நீங்க வில்லையா? எத்தனை நாளைக்கு இந்தச் சோர்வு? சற்று ஓங்கி ஒலித்தது அவர் குரல்.

இல்லையண்ணா! மாறன் நினைவில்....

என்ன நினைவு? எனக்கில்லாத நினைவா? இந்நேரம் மாறன் இருந்தால் என்ன செய்வானோ, அதை நீ செய்யத் தொடங்கியிருந்தால்தானே அவன் நினைவு என்பதற்கு அர்த்தம் இருக்க முடியும்?

என்ன அண்ணா சொல்கிறீர்கள்?

அறப்போர் மறியல் மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் இம்மாதம் 15ந்தேதி என்று அறிவித்திருக்கிறாய்!

ஆம், அண்ணா - விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்களை வலியுறுத்திக் கழகம் நடத்திடும் அறப் போராட்டம்

அறப்போராயினும் - அல்லது ஜனநாயகம் காத்திடும் தேர்தல் களமாயினும், முரசொலியில் ஒரு நீண்ட பெட்டிச் செய்தி - உன்னைத்தான் தம்பி என்று நான் விரல் நீட்டிக் காட்டுவது போல, அண்ணா ஆணையிடுகிறார் என்ற விதத்தில் உடன்பிறப்பு களையெல்லாம் எழுச்சி பெறச் செய்திடும் வண்ணம் மாறனே எழுதுவானே! அதை மறந்து விட்டாயா? மாறன் எழுதிப் பாதியில் விட்டுப் போன திராவிட இயக்க வரலாறு புத்தகத்தைத் தொடர்ந்து எழுதுகிறேன் என்று வாக்களித்துள்ள உனக்கு, அந்த இயக்கத்தின் தி.மு.க. அறப் போராட்டம் பற்றி எழுதவும் - ஆக்கப் பணி மேற்

கொள்ளவும் - அதனை ஒரு கடமையெனக் கருதிடவும் இன்னமும் நினைப்பு வரவில்லையா?

மன்னித்து விடுங்களண்ணா! மாறன் இது போன்ற களம் காணும் நேரங்களில் எப்படிச் செயல்பட்டாரோ, அப்படியே நானும், நமது கழக உடன் பிறப்புகளும் செயல்பட்டால்தான் அவர் நினைவை நம் மனத்தில் பதித்து அவரைப் போற்றுபவர்களா வோம் என்பது நானறியாததல்ல, நீங்களும் எப்போதும்போல் இப்போதும், என் இதயத் துடிப்பாக இருந்து என்னை இயங்கிடத் தூண்டிவிட்டு விட்டீர்கள் - இனி இக்கணம் முதல் எனக்கும், ஏனைய உடன்பிறப்புகளுக்கும் இந்தப் பணிதான்!

உடன்பிறப்பே, இடையே இன்னமும் 12 நாட்கள் தானிருக்கின்றன. தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான மொழிப் பிரச்சினையில், தமிழையும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிடவும், தமிழ் மொழிக்கு செம்மொழி எனும் தகுதியைப் பெற்றிடவும் நாம் நடத்த இருக்கும் தொடர் போராட்டத்தின் தொடக்கப் போராட்டம் இது என்பதை நெஞ்சில் நிறுத்தி, அறப்போர்க்களம் நுழைகிறோம். தமிழக விவசாயிகளின் வாழ்வில் விடியலைக் காண, காவேரி ஆணையத்தின் செயல்பாடுகள் செம்மைப்பட வேண்டுமென்று மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி, அறப்போர் மறியலில் ஈடுபடுகிறோம். பழி வாங்கும் போக்கினர்க்கு ஆயுதமாகப் பயன்படும் பொல்லாத சட்டமாம் பொடாவைத் திரும்பப் பெற வலியுறுத்திப் போராடப் போகிறோம். அறவழியில் அண்ணா வழியில்! இவற்றோடு இன்னும் பல ஆக்கபூர்வமான கோரிக்கைகள் நமது மறியல் போரின் அடிப்படைக் குறிக்கோள்களாகும். முதலில் இருந்த அரசு நடை முறைப்படுத்திய மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அடுத்து வரும் அரசு கடைப்பிடிப்பதற்கு மாறாக, அவற்றைக் கெடுத்து வரும் அரசாக இந்த மாநில அரசு இருப்பதைக் கண்டித்துக் குரல் கொடுப்பதும் மறியல் அறப்போர்க்களங் காணும் நமது குறிக்கோள் ஆகும்.

வேதனையில் வெந்திடும் விவசாயிகள், வரித் தொல்லையால் வாடும் வணிகர்கள், கவலையில் ஆழ்ந்துள்ள கைத்தறி நெசவாளர்கள், கட்டண உயர்வால் கலங்கித் தவிக்கும் மாணவர்கள், பழி வாங்கும் போக்கிற்குப் பலியாகும் அரசு ஊழியர்கள், இப்படி எல்லாப் பிரிவு மக்களையும் கொடுமைப் படுத்துவது போதாதென்று - மத மாற்றத் தடைச் சட்டம் போன்ற

மடாதிபதிகள் பரிந்துரைத்திடும் சட்டங்களையும் - அயோத்திப் பிரச்சினையில் பாபர் மசூதிக்கு எதிரான நடவடிக்கைகளை ஊக்கப் படுத்துகிற காரியங்களையும் திட்டவட்டமாகக் கண்டிப்பதும் தி.மு.க. அறப்போரின் ஓர் அம்சமாகும்.

இந்த நேரத்தில் இந்து சமூகம் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன், 2.6.1935ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் இதழில் கல்கி எழுதியதில் சில பகுதிகளை நினைவூட்ட விரும்புகிறேன்.

(1) இந்து சமூகத்திலே பிறந்த மனிதர்களில் மகா மேதாவிகள் உண்டு. ஆனால் சமூகம் என்று மொத்தமாய் எடுத்துக் கொண்டால் மூடத் தனத்துக்கு முதல் பாக்கு வெற்றிலை இந்த சமூகத்துக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

(2) இந்து சமூகத்தை வேருடன் பிடுங்கி வெட்டிப் புதைக்கும் திவ்ய கைங்கர்யத்தைத்தான் ஏற்கனவே மகானுபாவர்கள் அநேகர், சனாதன தர்மத்தின் பெயரால் நடத்தி வருகிறார்கள்.

(3) இந்து சமூகம், தன்னைச் சேர்ந்தவர்களை போ! போ! என்று பிடித்துத் தள்ளிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் அத் தகையவர்களை வா! வா! என்று அழைத்துத் தழுவிக் கொள்கிறார்கள்.

இவ்வாறு அன்று ஆனந்தவிகடனில் கல்கி எழுதியதை உணர்ந்து திருந்தாமல், எத்தனை மத மாற்றத் தடைச் சட்டங்கள் வந்தாலும் பயனில்லை என்பதை, சிறுபான்மை மக்களுக்கு விரோதமாகச் சேட்டைகள் புரியும் இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து, மதச் சார்பற்ற நிலையை வலியுறுத்திடவும் - மத நல்லிணக்கம் கண்டிடவும் - அதற்கு மாறாகச் செயல்படும் இந்த அரசைக் கண்டித்திடவும் இந்த அறப்போர் மறியல் நடைபெறுகிறது.

மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் என்றால் - மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் என்றால் - அந்த அலுவலகங்களின் முன்னால் மட்டுமே என்பதை மறந்து விடக்கூடாது. ரயில்கள், பேருந்துகள் மறியல் என்று எவரும்

ஈடுபடலாகாது. துளியும் வன்முறை தலை காட்டவோ - அசம் பாவிதங்கள் விளைந்திடவோ - இடம் தரலாகாது!

காவல்துறையினர் அல்லது அவர்களின் துணையுடன் ஆளும் தரப்பினர் அமைதியைக் குலைத்து, அவப்பெயர் நமக்கு ஏற்படுத்திட முனைவார்களாயினும், அப்போதும் பொறுமையுடன் கடமையாற்றிட வேண்டுமெனக் கழகக் கண்மணிகளாம் உன் போன்ற உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொள்கிறேன். அறப்போராட்டங்களில் ஈடுபடுவது - நமக்குப் புதிதல்ல, அண்ணா காலத்திலும் சரி, அதற்கு முன்பே பெரியார் கட்டளையேற்றுக் களங்கள் கண்ட போதும் சரி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றுபவர்கள் நாம்!

நாம் துன்பங்களை ஏற்றிடத் துணிந்து செயல்படுவதே அறப்போரின் இலக்கணம் - பிறர்க்குத் துன்பம் விளைவிப்பது அறவழியல்ல - அவ்வழி அண்ணா ஏற்றுக் கொண்ட வழியுமல்ல!

ஆயினும் அடக்குமுறையாளர்கள், நம்மீது அவதூறு பொழிந்திடத் தவறுவதில்லை - எனவே நம் மனச் சான்றுக்கு ஏற்ப அறவழியில் நின்று, எதையும் தாங்கும் இதயத்துடன் களங் காண்போம். அமைதி வழியில் களம் புகத் தயாராகும் கழகக் கண்மணிகளை, என் உயிரினு மேலான உன் போன்ற அந்த உடன்பிறப்புகளை இருகரம் நீட்டி வரவேற்கிறேன் - வாழ்த்துகிறேன் - பாராட்டுகிறேன். போராட்ட நாள் நெருங்கி வருகிறது - கிளைக் கழகங்களின் செயல்வீரர்கள், ஒன்றிய, நகர, மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள் - கழக அணிகளின் அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவருமே ஆயிரமாயிரம் பேர் - பல்லாயிரம் பேர் - லட்சம் பேர் -

கீழ் நிலை மாற்றி - தாழ்நிலை போக்கி - தமிழகத்தை உயர் நிலையில் வைத்திட, இதனை மத்திய மாநில அரசுகளுக்கு உணர்த்திட,

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டமென அணி வகுத்திடுவீர்!

அன்புள்ள,

மு.க.

3-12-2003

3001. திருமயத்துத் தீரர்கள்- திருவிடத்து வீரர்கள்!

உடன்பிறப்பே,

வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரன்! என்று அண்ணா அவர்கள் ஆயிரம் முறையாவது, அவரது தம்பிமார்களாகிய நம்மைப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்.

அது அந்தக் காலம் என்றில்லாமல், எந்தக் காலத்திலும் அந்தப் பாராட்டை அண்ணாவின் இதயம் என் வாயிலாக என் தம்பிமார்களுக்கு வழங்கிக் கொண்டு தானிருக்கும்.

அதற்கேற்ப என் உடன்பிறப்புகளும், எட்டடி பாயும் தாய்க்குப் போட்டியாக பதினாறு அடி பாயும் குட்டிகளாகத்தான் இருப்பார்கள் - இருக்கிறார்கள்!

எங்கேயிருக்கிறார்கள்? என்று கேட்கிறாயா? எங்கும் இருக்கிறார்கள்.

ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இதோ புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியத்தில் அந்த வீரர்களையும், வீராங்கனைகளையும் உள்ளடக்கிய பட்டியல் ஒன்று - மொத்தம் 140 பேர் - அவர்களில் ஆண்கள் 103 பேர் - மகளிர் 37 பேர் - புகைப்படங்களுடன் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருமயம் ஒன்றியச் செயலாளர் ஆர்.எம்.கே. என்றழைக்கப்படும் கருப்பையா அவர்கள் தொடங்கி, அத்தனை பேரும்,

உறுதிமொழிப் பத்திரம் ஒன்றினை அச்சியற்றி அதில் தனித்தனியாகக் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளனர். நான் எழுதும் கடிதத்தில் இடப் பற்றாக்குறை காரணமாக ஒன்றியக் கழக நிர்வாகிகள் படங்களை மட்டும் இணைத்துள்ளேன்.

மற்றவர்களின் படங்களும், பெயர்களும் என் மனத்தில் பதிவாகியிருக்கின்றன.

ஒவ்வொருவரின் கையொப்பத்துடன் உறுதி மொழிப் பத்திரங்கள், ஒருசேர பைண்டு செய்யப்பட்டு அட்டையிட்டு பொலிவு சேர்த்து அனுப்பியுள்ள அழகும் - அந்த ஒன்றியத்தின் ஆர்வமும், ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டுள்ளதைக் காணும்பொழுது களிப்பிலாடுகிறது நெஞ்சம்.

தலைவர் அவர்களே! விழுப்புரம் மாநாட்டில் தங்களுடைய ஆணையை ஏற்றுச் சிறை செல்லும் மறியல் அறப் போரில், டிசம்பர் 15 அன்று எதையும் ஏற்று நடக்கும் உறுதி மொழிப் பத்திரம்.

அன்று அறப் போரில் கலந்து கொள்ள இதன் மூலம் உறுதி அளிக்கிறேன். தலைவர் கலைஞரின் ஆணையேற்றுத் தொடர்ந்து செயல்படவும், ஓய்வில்லை உறக்கமில்லை என்று உழைத்திடவும் தயாராயிருக்கிறேன்

தங்கள் உண்மையுள்ள,

இவற்றை நான் படிவங்களாக எண்ணவில்லை. என் மார்பில் அணிவிக்கப்பட்ட பதக்கங்களாக எண்ணி மகிழ்கிறேன்.

இது ஓர் ஒன்றியத்தின் பட்டியல் மட்டுமே! இதற்குச் சிறிதும் குறையாத அளவில் கழக அமைப்புகள் அனைத்திலும் அறப் போர்க்களம் கண்டிட ஆயத்தங்கள் நடைபெறுவதை மாவட்டக் கழகத் தளகர்த்தர்களின் வாயிலாக அறிந்து கொள்கிறேன்.

தொடர்ந்து நான் எழுதி வரும் அறப்போர் பற்றிய கடிதங்களில், மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் அமைதியான முறையில் அணிவகுத்து, எந்தப் பகுதியில் - எந்த ஊரில் - எந்த அலுவலகத்தில் - எத்தனை எத்தனை மணிக்கு மறியல் நடை பெறும் என்பதை முன்கூட்டியே அறிவித்து விட்டு - சர்க்கார் தரப்பிலிருந்தோ, சமூக விரோதிகளிடமிருந்தோ யாரேனும் அசம்பாவிதத்தைத் தூண்டும் விதமாக செயல்பட்டாலும்கூட, அதனைப் பொருட்படுத்தாமல் கடமையுணர்வுடன் அறப்போரை நடத்திட வேண்டுமென்று திரும்பத் திரும்ப வேண்டுகிறேன்.

வேதனையின் விளிம்பில் துடிக்கும் தமிழ்ப் பெருமக்களின் சார்பாகப் போராடப் புறப்படுகிறோம் என்பதை நாமும் மறந்து விடலாகாது - நம்மை அடக்குமுறை கொண்டு வீழ்த்திடலாமென அரசு நடத்துவோரும் எண்ணிடலாகாது!

நமது கோரிக்கைக்காக குரல் கொடுத்திட - காட்டாட்சி தர்பாரைக் கண்டித்திட - நாம் நடத்த இருக்கும் இந்தப் போராட்டம் அறப்போராட்ட அளவில் அமோக வெற்றி பெறத் திருமயத்து தீரர்களைப் போலத் திட்டவட்டமாகச் செயல்படுக! என இந்தத் திருவிடமெங்கும் பரவியுள்ள உடன்பிறப்புகளுக்கு வேண்டுகோளாணை விடுக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

5-12-2003

3002. இமயமளவு எழுதிக் குவிக்க வேண்டும்!

கலைஞருக்குள் ஒரு கவிஞர் இருக்கிறார், அலைகடல் ஆழத்தில் அழகு முத்து இருப்பது போல். இந்த உண்மையினை நான் இரு முப்பது ஆண்டின் முன் இயல்பாக உணர்ந்திருந்தேன், இந்தி ஆதிக்கமெதிர்த்து எழுச்சிப் பாக்களை நீவிர் எழுதியபோது என்று, இனிய நண்பர் சின்னக்குத்தூசி புகழ்ந்துரைத்துத் தொடர்ந்து சொன்னார், கவிதையல்ல நூலில்,

இமயவரம்பினிலே வீரம் சிரிக்கும். இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும். அதுவும் மானம் மானமென்றே முழக்கும் . இப்படித் தீட்டியது இலக்கண வரம்புக்குரியதாக ஏற்றிட இயலாக் கால மெனினும், இன எழுச்சி முரசமெனப் போற்றிய காலமாகும்! இன்றோ நீவிர், இதயத்தை உலுக்குகின்ற இரங்கற் பாக்களையும், கவிதாஞ்சலிகளையும், இடி முழக்கத் தமிழ் வீர வரிகளையும் படித்தேனாய் இனிக்கின்ற பகுத்தறிவுக் கவிதையுடன், சித்தர்கள் போல் தத்துவக் கருத்தினையும், சேர்த்தளித்து எம் சிந்தை கவருகின்றீர்.

இப்படி எத்தனையோ பாராட்டு;
என்னை நித்தமும் மொய்த்திட
இன்பம் காணுகின்றேன் எனினும்,
இமயமளவு எழுதிக் குவிக்க வேண்டுமென்ற
ஏக்கமின்னும் எனக்குத் தீர்ந்த பாடில்லை.
எப்படி நான் கவிதைக் கடலோரம் சென்றேன்
என்பதைக் கடுகளவாவது விளக்கத் தான் வேண்டும்.

கருவிலே திரு என்பர். அதை நான் கதையென்பேன். ஆனால், கனவிலே தேவி வந்தெனக்குக் கவிதை கற்றுத் தரவில்லை.

வெள்ளாவி பத்து நாள், வெளுக்க இருபது நாள், முள்ளாடிக் கஞ்சி போட முப்பது நாள் - ஆயினும் காக நிறமாய், கருங்குருவி வால் நிறமாய், மேக நிறமாய் வெளுத்தானே! என் தோழன்

வைத்தி மகன். இந்தப் பாடலனைய பலவற்றை என் தந்தை முத்துவேலர் இயற்றியுள்ளார் என்பதாலே - அவர் வழித்தோன்றல் எனுமுறையில் வளமான தமிழ் எனக்கும் வழித்துணையாய் எப்போதும் இருப்பதால் தான்,

கருவிலே திரு என்றால் தப்பில்லையென்று ஒப்புதல் தவறில்லை!

தளையறுத்த வீரர் கதை பாடுவதால்
தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் - அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்! என் கவிதை,
யாப்பின்றிப் போனாலும் போகட்டும்
நாடு, மொழி, மானம், உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை
யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்குக் கவிதை
சொல்வேன்.

தீட்டிய கூர்வாளாம் இக்கவிதை நான்
திருச்சி வானொலியில் பாடியது.
மரபு வழியில் தான் எழுதுவேன் என்று, அதுவரை
மறைத்து வைக்க மனம் வராத காரணத்தால் தான்,
வரிகளையே இரண்டு முன்றாக்கித் தாம்
வார்த்தெடுத்த கவிதை யென்று
வாய் ஜாலம் செய்வோர் போலன்றி,
வாய்மையுடன் என் நிலை உரைத்து

வரைந்து வழங்குகின்றேன் கவி வசனம்! குற்றால அருவி கொட்டுதற்கு மாறாக, வகைப்படுத்தி வாய்க்காலாய் மட்டுமே ஓடும் என்றால் குளிப்பதற்கு யார் தான் வருவார்?

அருவியாக விழுவதை முறைப்படுத்த முடியாததாலே
அதைத் தொடக்கத்திலேயே முடக்கிப் போடல்
முறையாகுமா?
கவிதையில் மரபுக்கு மட்டுமே இடமுண்டு என்றுரைத்து
கற்பனை வளத்தை, கருத்தின் ஆழத்தைப் புறக்கணித்து
கனியாகவில்லை இன்னும் என்று கத்தரிக்காய், பாகற்
காயைப் பறித்தெறிந்து விடுவார் உண்டோ?
கறி சமைக்க உதவும் காய்களைப் போல் என்
கவிதைகளும் உதவுவதைக் காண்பீர்! உண்பீர்!
பனி முட்டை அடை காக்கும் பசும் புல்வின் தரை மீது
- மணித் தேர் அசைவது போல் மாதொருத்தி நடந்து
வந்தாள் என்றும், காதறுந்த ஊசியும் ஒரு காரியத்துக்கு
ஆகும்; பயனற்றவை என எதுவுமில்லை என்ற புதிய
தத்துவமும் கவிதை நடையில் என் எழுதுகோல்
பெற்றெடுத்த கருவூலங்கள் தான்!
வசனம் மட்டுமே கவியென்று எழுதுவோரின்

வட்டத்தை விட்டு வந்த என் கவி வசனம் வானின் கதிர்த் துகள் என்பேன்.

தோளில் துண்டணியக் கூடாது என்று
வாளின் முனையில் ஆணையிட்ட கொடுமையினை
எதிர்த்து
குடுமித் தலையைக் கிராப்புத் தலையாக்கிக் கொண்டு
குக்கிராமம் திருக்குவளையைத் திராவிடக்
கோட்டையாக்க
கையில் பிடித்த பேனா தான் அய்யா அண்ணா
அடியொற்றிக்
கவிப் பாவேந்தர் கனித் தமிழை போற்றும்
கலைஞனாக்கியது.
அகல் விளக்காய் ஒளி கொடுத்த நிலை வளர்ந்து
ஆகாயத்து விண்மீன்களில் ஒன்றாக விளங்குகின்றேன்.
அகழ்ந்து மண்ணில் புதைத்த முட்டை

அண்ணாந்து பார்த்தால் ஆயிரம் முட்டை எனும் விடுகதையாய்த்

திகழ்ந்திடும் தென்னையாய் ஆனதற்கு - உலகம்
புகழ்ந்திடும் அந்தத் தலைவர்களன்றோ காரணம்!
காரணத்தை மெய்ப்பிக்க என் தந்தை வழி நின்று
கருவில் திருவானதும் வலிவானதோர்
அடித்தளமன்றோ!

(கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் சென்னையில் கடந்த அக்டோபரில் நடைபெற்ற ஒரு விழாவில் எல்லோரும் புதுக் கவிதையும், வசன கவிதையும் எழுதிக் கொண்டிருக்கிற காலத்தில், கலைஞர் தனித்து நின்று கவி வசனம் (poetic prose) என்ற வடிவத்தில் எழுது வதாகக் குறிப்பிட்டது நினைவிற் கொள்ளத்தக்கது)

அன்புள்ள,

மு.க.

06-12-2003

3003. அறிவாயுதம் ஏந்தி அகிலத்தை வென்றிடுக!

உடன்பிறப்பே,

இமயமளவு எழுதிக் குவிக்க வேண்டுமென்ற என் இதயத் துடிப்பினை நேற்றைய கவிதையில் கோடிட்டுக் காட்டியிருந்தேன்.

ஏன்? எதற்காக? அப்படி எழுதித்தான் நான் ஓர் எழுத்தாளன் என்பதை இனிமேல் உறுதிப்படுத்தப் போகிறேனா? எழுதும் ஆசை, எழுத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு இளைஞர் சமுதாயத்தில் எழுச்சியை உருவாக்கிட வேண்டுமென்ற அக்கறையும், ஆர்வமும்தான் எனக்கென வாய்த்த எழுத்துத் திறனை அதற்கெனத் திருப்பிவிடும் தூண்டுகோல்களாயின.

பாலப் பருவத்தில், திருவாரூர் பள்ளியில், கையெழுத்து ஏடு நடத்தும்போதே அரும்பியது அந்த ஊக்கம். அவற்றைப் படித்துவிட்டுப் பள்ளித் தோழர்கள் அளித்த பாராட்டுரைகளும், அவர்கள் பக்க பலமாக நின்றதும்தான் மாணவ நேசன் என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகையாக இருந்தது, முரசொலி என்ற துண்டு அறிக்கையாக ஆயிரக்கணக்கில் அச்சியற்றப்பட்டு, இயக்கத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது.

அந்தத் துண்டு அறிக்கை வெளிவரும் நாளை துடிதுடிப்புடன் எதிர்பார்த்து, அது வெளிவந்ததும் முதல் வேலையாக அதைப் படித்து முடித்துவிட்டு, தொடர் ஓட்டம் போல மற்ற மற்றத் தோழர்களுக்கும் பல பிரிவு மக்களுக்கும் வழங்கிடுவார்கள்.

அப்போதெல்லாம் நம்மவர்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர் பதவியில்கூட இருப்பதென்பது, இயலாத காலமாகவல்லவா இருந்தது!

அதனால் அவர்களுக்குப் படிப்பதற்கு நேரமும், நினைப்பும் போதுமான அளவுக்கு இருந்தது. நாளுக்கு நாள் அந்தத் துண்டு அறிக்கைகளை எண்ணிக்கையில் அதிகமாக அச்சிட வேண்டிய

அவசியம் ஏற்படும்போது, நான் அடையும் ஆனந்தம் அளவிட முடியாததாகும்.

ஏன்? முரசொலி துண்டு அறிக்கை அச்சிட்டு வழங்கியது ஆதாயம் பெற்று வாழ்க்கையை நகர்த்துவதற்காகவா? வீட்டிலிருந்த நகை நட்டுகளை அடமானம் வைத்தோ, விற்றோதான் அந்த முரசு அப்போது ஒலித்துக் கொண்டிருந்தது.

அண்ணாவின் திராவிட நாடு - பெரியாரின் குடியரசு, விடுதலை ஏடுகள் இவற்றின் மத்தியில் முரசொலியின் இயக்கத் தொண்டு என்பது அணில் ஆற்றிய தொண்டின் அளவேதான்!

ஆனால், அதற்கென ஏற்ற சிரமம் - திருவாரூர் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே, எப்போது உடைந்து சிதறுமோ எனும் எதிர்பார்ப்பில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த மூங்கில் மரப் பாலத்தில் முரசொலி அடுக்கிய மூட்டையை கருணை ஜமால் அச்சகத்திலிருந்து தலையில் தூக்கிக் கொண்டு - தென்னனும் - மேலாளர் கனகசுந்தரமும் - நானும் நடந்து வருவது சர்க்கஸ் கொட்டகையில் கம்பி மேல் நடக்கும் காட்சியாகத்தானிருக்கும்.

இன்றைக்கு முரசொலி அலுவலகக் குளிர்ப்பதன அறையில் அமர்ந்து, நான் எழுதியவை அச்சாகிப் பிழை திருத்தும் வேளையில் அந்தப் பழைய நினைவுகள் நெஞ்சில் இழையோடாமல் இருக்குமா!

அதே வளர்ச்சியை - அதைவிடப் பன்மடங்கு வளர்ச்சியை - அன்றொரு நாள் 1949-50களில் சென்னை தங்கசாலைத் தெருவில் வாடகை வீட்டில் வளர்ந்திட்ட தி.மு. கழகம், அண்ணா காலத்தில் அறிவகம் பெற்று, அன்பகம் பெற்று, இன்று அண்ணா அறிவாலயமென்றும், அண்ணா பூங்கா என்றும் - கலைஞர் அரங்கமென்றும் - பேராசிரியர் ஆய்வு நூலகமென்றும் - வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனையென்றும் - திராவிட இயக்க வரலாற்றுக் கருவூலமென்றும் - முரசொலி மாறன் வளாகக் கூட்ட அரங்கு என்றும் விரிவடைந்திருக் கிறதென்றால் எப்போதும் அதே நினைப்பு, அயரா உழைப்பு - அன்பு உடன்பிறப்புகளின் பங்களிப்பு என்பதுதானே காரணம்!

முரசொலியின் வளர்ச்சியோடு ஒப்பிட வந்து, கழகம் எவ்வளவு உயரத்தில் உயர்ந்திருக்கிறது என்பதையும் குறிப்பிட்டேன்.

வெறும் கட்டிடங்களை - அரங்குகளை - கழகத்தின் வலிவும் வளர்ச்சியும் என்று சொல்லி, நான் என்னை ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை!

75 லட்சம் பேர் உறுப்பினர்கள் - கிளைகளாக - ஒன்றியங்களாக - மாவட்டக் கழகங்களாக - அணிகளாக - அமைப்பு முறையும் கல்தூண் போலத்தான் திடமாகத் திகழ்கிறது என்பதில் அணுவளவும் அய்யமில்லை.

நிறைகளை மட்டுமே சொல்லிச் சொல்லி, கிள்ளி எறிய வேண்டிய குறைகளைக் கூறாமலோ - கூர்ந்து கவனிக்காமலோ விட்டுவிட்டால், நோயின் அடையாளம் தெரியும்போதே அலட்சியப்படுத்திவிட்ட குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை மறந்திடலாகாது!

என்ன குறை? அதற்கு என்ன விளக்கம்? நமது உடன்பிறப்புகள் பலருக்கு இன்னும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் மங்கிக் கொண்டே வருவதும், அலட்சியப் போக்கு ஓங்கிக் கொண்டே வருவதும்தான் அந்தக் குறை!

ஒரே ஒரு சான்று எடுத்துக் காட்டுகிறேனே! காலையில் அதுவும் வைகறைப் பொழுதிலேயே நான் விழித்துக் கொள்கிறேன். கடமைகளை முடித்து விட்டுக் கை ஒடிய, கழுத்து வலிக்க எழுதுகிறேன். காதல் கடிதங்களா எழுதுகிறேன்? அதுவும் இந்த வயதில்?

பகுத்தறிவு எண்ணங்களும்? கழகக் கருத்துகளும் பரவிட வேண்டுமென்றுதான் எழுதுகிறேன் - இளமைக் காலத்தில் - மாணவப் பருவத்தில் - வாலிப வயதில் - ஏன்? வயதான காலத்தில்கூட எத்தனையோ சொந்தப் பணிகள் இருப்பினும் அவற்றையும் கவனித்துக் கொண்டு, இயக்கப் பணிகளை மேற்கொண்டிடவும் - அப்படி மேற்கொள்வதற்கான தலைமைக் கழகத்தின் அறிவிப்புகளைத் தெரிந்து கொள்ளவும் - அவை பற்றிய கருத்து விளக்கங்களைக் கற்றுத் தெளிந்திடவும் - எங்கே கழக நிகழ்ச்சி என்ன நடந்தது? எங்கே எப்போது இனியும் நடக்கப் போகிறது - அறப்போர் அறிவிக்கப்பட்டால் அதில் கழகத்தின் அணுகுமுறை என்ன - இதுபோன்ற செய்திகளைத் தெரிந்துகொள்ள நாள்தோறும் முரசொலியோ, தினகரனோ நம் கண்ணில் பட வேண்டாமா?

ஆனால் நிலைமை என்ன? கட்சியின் சாதாரணத் தொண்டரைக் கையில் கழக ஏட்டுடன் காண முடிகிறது. அவருக்கு மேலே கழக நிர்வாகப் பொறுப்பிலோ - அல்லது குறைந்தபட்சம் ஓர் ஊராட்சி மன்றம் - நகராட்சி மன்றம் - மாநகராட்சி - சட்டமன்றம் - நாடாளுமன்றங்களின் பொறுப்பிலோ அல்லது அந்தப் பொறுப்புக்கு மேலாகவோ இருப்பவர்கள், எல்லோருமல்ல - எனினும் பெரும்பாலோர் - அத்தகைய செய்தி அறிவு பெற்றிடவோ - கருத்துச் செறிவு அடைந்திடவோ இருக்கின்ற வாய்ப்புகளை, அது ஏடாக வரினும் - நூலாகத் தரினும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லையே என்பதுதான் எனக்கு ஏக்கப் பெருமூச்சாகிறது.

சென்னை மாநகருக்கு அருகில் உள்ள ஒரு நகரம் - அந்த நகராட்சியில் பொறுப்பில் உள்ள ஒருவர் - அவரைக் கேட்கிறேன், முரசொலி படிக்கவில்லையா, படித்திருந்தால் அந்தச் செய்தி தெரிந்திருக்குமே என்று கேட்கிறேன்.

அவர் சொல்கிறார், முரசொலி எங்கள் நகருக்கு சென்னைக்கு வந்த அடுத்த நாள்தான் வருகிற தென்று!

அவர் சொன்னது உண்மையோ, அல்லவோ - உண்மையாகவே இருக்கட்டும் - அப்படியானால் அந்த நகருக்கு முரசொலி ஒழுங்காக உரிய நேரத்தில் வருவதற்கு - அவரே முயற்சி மேற்கொண்டு முரசொலியின் நிர்வாகிகளையாவது - தொடர்பு கொண்டு பேசினாரா? பேசவில்லை!

இதில் என்ன சங்கடம் என்றால், நமக்குத் தெரியாத கருத்துகளா, செய்திகளா முரசொலியில் வந்துவிடப் போகிறது என்ற அலட்சியப் போக்கு தலைதூக்கி விடுகிறது!

சென்னைக்கு அருகில் உள்ள நகருக்கே இந்த நிலையென்றால், மிகத் தொலைவில் டெல்லியில் இருப்போர் (நம்மவர்களைத்தான் சொல்கிறேன்) நிலையைச் சொல்லவும் வேண்டுமோ?

அதனால் அவர்கள் முரசொலி மட்டுமல்ல. அரசியல், சமுதாய, பொருளாதாரக் கருத்துக் களடங்கிய வார, நாளேடுகளையோ, நூல்களையோ கூடப் படிக்கின்ற பழக்கம் குறைந்து வருவதைக் காண முடிகிறது.

இது எனக்கு முதன்மையான கவலையென்று கூடக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

நான் ஒருவன் மட்டும் ஏடு அல்லது நூல் எழுதிப் பயனில்லை - எழுதத் தெரிந்தவர்கள் எல்லோரும் எழுதலாம் - படிக்கத் தெரிந்தவர்கள் படித்துப் பயன் பெற்று, மற்றவர்களையும் பயனடையச் செய்யலாம்.

நாற்பதுக்கு மேற்பட்ட இதழ்கள் நமது கழகத்தினரால் நடத்தப்பட்டதை ஒருமுறை அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிப் பட்டியலிட்டு, பரவசமுற்றுப் பத்திரிகையிலே எழுதினார்கள்.

அப்படிப் படிப்போர் எண்ணிக்கை பெருகியிருந்தது கழகத்தில்! திராவிட இயக்கத்தில்! அதனால் இன உணர்வும், எழுச்சியும், அரசியல், சமுதாய விழிப்புணர்வுகளும் வானளாவ உயர்ந்து நின்றன!

இன்று கவலையுடன்தான் சொல்லுகிறேன் - பெரியார் ஒரு முறை சொன்னார், நான் நடத்துகிற குடியரசு பத்திரிகையை எவரும் படிக்காவிட்டால், வாங்காவிட்டால் நானே குடியரசு ஒரு இதழை அச்சிட்டு, நானே என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து படித்துக் கொள்வேன் என்பதாக! அதை நினைத்துக் கொள்கிறேன் - ஆறுதலுக்காக!

உடன்பிறப்பே, எந்த நிலையிலும் நான் எழுதிக் கொண்டேயிருப்பேன் - என் பணியை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருப்பேன் - பம்பரம் போல் சுழன்று தொண்டாற்றும் தூயவர்களாம் உன் போன்ற உழைக்கும் உடன்பிறப்புகளை சோர்வடையச் செய்திட அல்ல. இன்னும் உற்சாகத்தோடு உழைத்திடத்தான் இந்தக் கடிதம் எழுதினேன். இனி இதுபோல் எழுதும் நிலையை எனக்கு நீ ஏற்படுத்த மாட்டாய் என்ற நம்பிக்கையுடன்!

டிசம்பர் 15 அறப்போருக்கு நீ ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது இக்கடிதம் உனக்கு ஓர் ஆயுதமாக அமையட்டும்.

அறிவாயுதம்! அறிவாயுதம்! அதனை ஏந்திச் சென்றிடுக! அகிலத்தை வென்றிடுக! என்று முழங்கினாரே சாக்ரடீஸ்! அந்த கிரேக்கத்துக் கிழச் சிங்கம், இளைஞர்களின் எழுச்சிக்காகத்தானே அப்படி முழங்கியது!

அன்புள்ள,

மு.க.

07-12-2003

3004. உச்ச மன்றம் உரைத்தது! உறைத்திட வேண்டாமா?

உடன்பிறப்பே,

மாநில சுயாட்சி என்று கேட்பதே நாட்டுப் பிரிவினைக் கொள்கையாகும் என்று ஜெயலலிதாவின் அ.தி.மு.க. பேசியதற்கும், வாதாடியதற்கும் எத்தனையோ ஆதாரபூர்வமான சான்றுகள் உண்டு. எப்போதுமே அத்தகையச் சான்றுகளை நாம் அம்பலத்திற்குக் கொண்டு வந்தால் அப்போது வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருந்து விடுவது - அல்லது வேறு பிரச்சினைக்குத் திசை திருப்புவது என்பது ஜெயலலிதாவின் வழக்கமாக இருந்து வருகிறது. அவற்றை ஒரு வரித் தலைப்புகளில் நினைவூட்ட வேண்டுமானால், அவை பின்வருவனவாகும்.

1. எம்.ஜி.ஆர். தனது செல்வாக்கைக் கண்டு தன் மீது பொறாமைப்படுகிறார் என்று தனது கைப்படவே ஜெயலலிதா பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதம்.
2. மோரிலோ, பாலிலோ விஷம் கலந்து கொடுத்து ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களைக் கொன்று விட்டார் என்று பகிரங்கமாகப் பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கை.
3. காவேரி ஆணையம் பல் இல்லாத ஆணையம் என்று கண்டனம் செய்த நிகழ்ச்சி.
4. பின்னர், அந்தப் பல் இல்லாத (அது கிழமோ அல்லது குழந்தையோ) ஆணையத்தை உடனே கூட்டச் சொல்லி பிரதமருக்குக் கடிதம் எழுதியது.
5. கர்நாடக அரசைக் கலைக்க வேண்டுமென்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று தமிழகச் சட்டப்பேரவையிலேயே முழங்கியது.

6. கிருஷ்ணா தண்ணீர் என்பது ஒரு மோசடி, அந்த மோசடிக்கு ஆந்திர முதல்வரும் உடந்தை என்று சட்டப் பேரவையில் சங்கநாதம் செய்தது.
7. கிருஷ்ணா நீர் கேட்க ஐதராபாத் சென்று அதே முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவிடம் வேண்டுகோள் விடுத்தது.
8. பகுத்தறிவின் பரிணாம வளர்ச்சியே நான்தான் என்று பேரவையில் பிரகடனப்படுத்தியது.
9. குருவாயூருக்கு யானை காணிக்கை - குடந்தை மகாமகக் குளியல் - கோயில்கள் தோறும் யாகங் கள் என பெரியார் கொள்கையைக் குழி தோண்டிப் புதைப்பது.
10. சிறுபான்மை மக்களுக்காக வேடங் கள் அணிவது.
11. தானே அழைப்பாளராக இருந்து நடத்துவதாக அறிவித்த இப்தார் விருந்துக்கு, சங்கரர் ஆணைப்படி போகாமல் இருந்தது.
12. அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டாமல், வேறு எங்கே கட்டுவது? என்று கேட்டது.
13. மத மாற்றத் தடைச் சட்டம் நிறைவேற்றியது.
14. பொது சிவில் சட்டத்தை ஆதரித்து அறிவித்தது.
15. மாசு கட்டுப்பாடு விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசிடம் அனுமதி பெற்று உரிய இடத்தில் தலைமைச் செயலகம் அமைத்திடலாம் என்றால், மாநில சுயாட்சி பறி போயிற்றே என்று மற்ற முதலமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவது.
16. அந்த முதலமைச்சர்கள் ஒரு மரியாதைக்காக கடிதம் கிடைக்கப் பெற்றேன் என்று பதில் எழுதினாலே அதைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆகா! ஆதரவு! ஆதரவு! என்று ஆட்டம் போடுவது.
17. இதற்கெல்லாம் உச்சகட்டமாக உச்ச நீதிமன்றமே கடுமையான கண்டனங்களை முறையே, சொத்துக் குவிப்பு வழக்கிலும், டான்சி வழக்கிலும் அளித் திருப்பதை குடியரசுத் தலைவர் கவனத்திற்கும்,

பிரதமர், உள்துறை அமைச்சர், மத்திய சட்ட அமைச்சர் முதலியோர் கவனத்திற்கும் கொண்டு போனால் அய்யோ! மாநில சுயாட்சி பறி போகிறதே என்ற கொள்கை முழக்கம் திடீரென மூளையில் உதயமாகி அதனை அமைச்சர்கள் சிலரை விட்டு அலறிடச் செய்வது.

உடன்பிறப்பே, இந்தப் பட்டியல் வரிசையில் 17வது பகுதியை மட்டுமே பார்த்தால் போதும். டான்சி வழக்கில் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார் எனினும், அவர் பத்திரத்தில் போட்ட கையெழுத்தைப் போட வில்லை என்று அவர் புளுகியதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருப்பதும் - அந்த நிலத்தை வாங்கிட அரசு அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்கள் என்பதும் - அரசு வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டவருடன் மறைவாக கை கோத்துக் கொண்டு செயல்பட்டார் என்பதும், ஜெயலலிதா மனச்சாட்சிக்கு மதிப்பளித்து நடந்து கொள்ளவேண்டும் என்பதும், டான்சி நிலத்தைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்பதும் உச்ச நீதிமன்றம், தண்டனை கொடுக்காவிடினும் அந்தத் தண்டனையை மிஞ்சக் கூடிய கண்டனங்கள் அல்லவா?

அதைப் போலவே ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநில நீதிமன்றத்துக்கு மாற்றிட வேண்டுமென்று நமது பேராசிரியர் வைத்த வேண்டுகோள் மனுவை ஏற்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் தெரிவித்துள்ள கருத்துகள் யாவை?

1. செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசு; 1997ன் சி.சி. எண். 7 வழக்கில் தீய நோக்கத்தோடு, வேண்டு மென்றே அரசு வழக்கறிஞரின் உதவி யோடு நேர்மையான சுதந்திரமான விசாரணையை குலைப்பதற்காக தலையிட்டுள்ளது.

2. தங்கள் முந்திய வாக்குமூலங்களை மாற்றிக் கூறிய சாட்சிகளை, குறுக்கு விசாரணை செய்யவோ, மறு விசாரணை செய்யவோ முயற்சிக்காமல், அரசு வழக்கறிஞர் கடமையிலிருந்து தவறியிருப்பது, அரசு வழக்கறிஞர் துறை, ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்கு வழியமைத்துக் கொடுக்க ரகசியமாக முடிவு செய்து செயல்பட்டுள்ளது.

இதன்மூலம் நீதி நிர்வாகத்தில் தலையிட்டுள்ளது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகிறது.

3. முதல் அமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா சென்னையிலேயே இருக்கும் பொழுது இந்திய குற்றவியல் சட்டம் 313வது பிரிவின்கீழ் அவர் நேரில் ஆஜராகாமல் இருப்பதற்கு அரசு வழக்கறிஞர் ஒப்புதல் அளித்திருப்பது, அரசு வழக் கறிஞர் சுதந்திரமாக செயல்படவில்லை, முதல் குற்றவாளியான செல்வி ஜெயலலிதாவின் விருப்பப்படியே செயல்படுகிறார் என்பதைத் தெரிவிக்கிறது.

4. 1997ன் சி.சி. எண். 7 வழக்கில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் சட்ட விரோதத் தலையீடும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசு வழக்கறிஞர் சட்ட விரோத உதவியளித்ததும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவையும், இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 313வது பிரிவையும் மீறிய செயலாகும். எல்லாவற்றையும் விட, இது குற்றவியல் நீதி முறையைக் குலைக்க மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியாகும்.

உடன்பிறப்பே,

மாநில சுயாட்சி கேட்பது, ஒரு மாநில அரசு, இப்படியெல்லாம் சட்டத்தைக் குலைத்திட, நீதியை வளைத்திட மாநிலத்துக்கு அதிகார உரிமை கேட்பது என்று அர்த்தமல்ல!

மத்தியில் நிறைவேற்றிய பொடா சட்டத்தை எங்கள் மனம் போன போக்கில் தவறாகப் பயன்படுத்தி, வைகோவை வதைத்து வஞ்சம் தீர்ப்போம் - பழ. நெடுமாறனைப் பழிவாங்குவோம் - நக்கீரன் கோபாலை நசுக்கி நாசமாக்குவோம் - பொதுவில், அரசியல் பகை தீர்த்துக் கொள்ளப் பொடாவைப் பயன்படுத்துவோம் - அதைத் தடுக்க முனைவதோ - அல்லது அதைத் திரும்பப் பெற மத்திய அரசிடம் முறையிட்டுப் போராடுவதோ - மாநில சுயாட்சிக் கொள்கைக்கு விரோதமென்று கூறினாலும் கூறுவர்!

நள்ளிரவில் வீடு புகுந்து படுக்கையறையில் நுழைந்து, வீட்டுப் பெண்களையும் இழிவாக நடத்திடத் துணிந்து, ஏன் என்று கேட்க வந்த மத்திய அமைச்சர்கள் மாறனையும், பாலுவையும்

நையப் புடைத்து, என்னையும் சித்ரவதைக்காளாக்கி சிறையிலடைத்தபோதுகூட, அதன்பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில், இந்த ஆட்சியைக் கலைத்திட 356ஐ பயன்படுத்துக என்று கூறுவீர்களா எனக் கேட்டபோது, அப்படிக் கூறமாட்டேன் என்று சொன்னவன் நான்! இப்போது இந்த ஆட்சியில் சட்டம் நொறுக்கப்பட்டு, நீதி வளைக்கப்பட்டு, அநீதியும் அரசு அதிகாரமும் அட்டகாசம் புரிவதை நீதி மன்றம் சுட்டிக் காட்டுவதை எடுத்துக்காட்டி, எச்சரிக்கை செய்யுமாறு குடியரசுத் தலைவரையும், பிரதமரையும் கேட்டுக் கொண்டால், அது மாநில அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதாகி விடுமா?

தி.மு.க. ஆட்சி மீது எம்.ஜி.ஆர். புகார் கொண்டு போய் பிரதமர் இந்திரா காந்தியிடம் கொடுத்தபோது என்ன ஆயிற்று மாநில சுயாட்சி? இதே ஜெயலலிதா தி.மு.க. ஆட்சியைக் கலைக்கச் சொல்லிப் பலமுறை வற்புறுத்தி வேண்டுகோள் விடுத்து, அதற்காகவே சட்டப் பேரவையில் கலகம் கூடச் செய்தாரே, அப்போது என்ன ஆயிற்று மாநில சுயாட்சி? ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் இல்லாத போதெல்லாம் இன்னும் சொல்லப் போனால், 2001ஆம் ஆண்டு ஆட்சிக்கு அவர் மீண்டும் வரும் வரையில் தி.மு.க. ஆட்சியைக் கலைக்கச் சொல்லி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்தவர்தானே? அப்போதெல்லாம் வாய் திறக்காமல் உதடுகளை பெவிக்கால் போட்டு ஒட்டிக் கொண்டிருந்த வாய்மையாளர்கள், கலைப்புகூட அல்ல - ஓர் எச்சரிக்கை செய்க! நீதி நிலைத்திட செயல்படுக! என்று நாம் சொன்னால் பாய்கிறார்களே, ஏன்? பாவம்! பரிதாபமாகத்தானிருக்கிறது!

எனவே மனச்சாட்சிக்கு மாறான செயல்களை, நீதிக்குப் புறம்பான காரியங்களை மறுத்துரைப்பது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு மாறானது அல்ல!

மனச்சாட்சிப்படி நடந்து கொள்க என்றும், தவறுக்கு தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்றும், உச்ச நீதிமன்றம் உரைத்திருப்பது, ஜெயலலிதாவுக்கு உறைத்திடவில்லையே என்பதால் தான் - மத்திய அரசிடம் எச்சரிக்கும் அதிகாரம் இருக்கும் வரையில் - அதனை ஊறுகாய்ப் பானையில் போட்டு ஊசிப் போகவிடாமல், உபயோகப்படுத்தலாமே என நினைவூட்டுகிறோம்.

அன்புள்ள,

மு.க.

08-12-2003

3005. விண்முட்ட முழங்குக! வீரமாக, தீரமாக, திடமாக!

உடன்பிறப்பே,

இன்று ஏடுகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர், தோழர் ஆர். நல்லகண்ணு அவர்கள் அளித்துள்ள பேட்டியைக் கண்டேன்.

தமிழக அரசு, எல்லா வகையிலும் தவறாகவே நடந்து வருகிறது. அரசு பஸ்களை தனியார் மயமாக்குவதில் உறுதியாக இருப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், மக்கள் சேவைத் துறையான போக்குவரத்துத் துறையைப் பாதுகாத்து வளர்க்கக் கூடிய கடமை, அரசுக்கு இருப்பதைப் புறக்கணித்து விட்டு, மக்களைக் கெடுக்கக் கூடிய மதுவின் விற்பனையை மட்டும் அரசுடைமையாக்கி, கிராமங்களிலும் ஏராளமாகவும், தாராளமாகவும் மது பரவிட, தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது

இவ்வாறு அவர் மனவேதனையைத் தெரிவித்திருக்கிறார்.

குக்கிராமங்களுக்குக் கூட போக்குவரத்து வசதி இருந்திடல் வேண்டுமெனவும் - அதனால் ஏற்படும் இழப்பைப் பற்றியும் கவலைப்படாமல், மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் முதற்கொண்டு பல்வேறு சலுகைகளை வழங்கியது தி.மு. கழக அரசு. ஆனால் அந்தச் சலுகைகளைக் குறைத்தது மட்டுமல்லாமல், அரசு போக்குவரத்துப் பேருந்துகளை தனியாருக்குத் தாரை வார்த்திடவும் ஜெயலலிதா அரசு முன்வந்திருக்கிறது என்றால், தேர்தல் நேரத்து வாக்குறுதிகளை எந்த அளவுக்கு அ.தி.மு.க. மீறியுள்ளது என்பதை எளிதில் உணர முடிகிறது.

அரசு பஸ்களைத் தனியாருக்குக் கொடுப்பார்களாம், மதுபான சில்லறை வியாபாரத்தை அரசுடைமையாக்குவார்களாம் - அதாவது குழந்தை கையிலே இருக்கிற வாழைப் பழத்தைப் பிடுங்கி, குரங்கு வாயிலே கொடுப்பார்களாம்!

போக்குவரத்துத் துறையில் அரசுடைமை தகர்க்கப்படுகிறது - போதைத் துறையில் அரசுடைமைக்கு அமோக ஆர்வம் காட்டப்படுகிறது.

தனியார் துறைக்குப் பேருந்துகளை வழங்குவதின் வாயிலாக யாருக்கு ஆதாயம்? எவ்வளவு ஆதாயம் - எனும் ஆதாரபூர்வமான விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், பஸ்களின் எண்ணிக்கை அடிப்படையில் கப்பம் கட்டுகிற நிலைமைக்கு ஆளாகியுள்ளவர்களை அணுகி விசாரித்தால் அனைத்தும் புரியும்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் குமரி மாவட்டத்திலும் - மற்றும் நூறு கிலோ மீட்டர் தூரத்துக்கு மேற்பட்ட தடங்களில் மட்டும் அரசுடைமையாக்கப்பட்ட நிலையிலிருந்து, தமிழக முழுவதும் பேருந்துத் தடங்களை அரசுடைமையாக்க, தி.மு.க. ஆட்சியில் ஆணையிடப்பட்டு, அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரையில் தனியார் தொடுத்த வழக்குகளைச் சந்தித்து, வரவேற்கத்தக்க திட்டம் இத்தேசியமயத் திட்டமென உச்ச நீதிமன்றப் பாராட்டுதலையும் பெற்று, அந்த அரசுடைமைத் திட்டத்தைக் கழக அரசு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.

அதன் அடிப்படையில் பெரிய பேருந்து நிறுவனங்களான சென்னை, மதுரை டி.வி.எஸ்., குடந்தை இராமன் அண்ட் இராமன், பொள்ளாச்சி சக்தி விலாஸ் போக்குவரத்து நிறுவனம், பொறையாறு எஸ்.ஆர். வி. எஸ்., நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் பேருந்துகளையும், வழித்தடங்களையும் சுமுகமாகவே அரசுடைமையாக்கிய நிகழ்வு, தி.மு.க. ஆட்சியின் சாதனைகளில் ஒன்றாகும்.

மாவட்ட மண்டல ரீதியாக போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது மாத்திரமல்லாமல் - பல்லாயிரக்கணக்கான போக்குவரத்துத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றியதுடன் - அவர்கள் வைத்த போனஸ் கோரிக்கையை ஏற்று ஆண்டுதோறும் உயர்த்தி 20 சதவிகித போனஸ் அளித்ததும் - தி.மு.க. ஆட்சியின் சாதனையாகும். அது மட்டுமல்ல! கழக ஆட்சிக் காலத்தில் 9,477 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டன. 1,468 புதிய வழித் தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிட மினி பஸ் திட்டம் தொடங்கப்பட்டு, 2,334 மினி பஸ்கள் இயக்கப்பட்டன.

மேலும், 2,112 மினி பஸ்களுக்கு, அனுமதி வழங்கப்பட்டன. தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல் பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டு தோறும் வழங்கும் 10 விருதுகளில், 1997இல் 7 விருதுகளையும், 1998-99இல் 3 விருதுகளையும் கழக அரசு பெற்றது. தி.மு.கழக அரசு பொறுப்பிலே இருந்த போது சென்னையிலிருந்து திருச்சி செல்ல பேருந்துக் கட்டணம் 81 ரூபாய்தான். அது தற்போது 104 ரூபாயாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து மதுரை செல்ல கழக ஆட்சியில் பேருந்துக் கட்டணம் 113 ரூபாய். தற்போது ஜெயலலிதா ஆட்சியில் மதுரை செல்ல பேருந்துக் கட்டணம் 144 ரூபாயாகும். அதைப் போலவே திருநெல்வேலி நகருக்குச் சென்னையிலிருந்து செல்ல கழக ஆட்சியில் கட்டணம் 152 ரூபாய். தற்போது திருநெல்வேலி செல்ல இந்த அ.தி.மு.க. ஆட்சியில் பேருந்துக் கட்டணம் 195 ரூபாய். சென்னையிலிருந்து கோவைக்குச் செல்ல கழக ஆட்சியில் பேருந்துக் கட்டணம் 128 ரூபாய். இப்போது ஜெயலலிதா ஆட்சியில் சென்னையிலிருந்து கோவைக்குச் செல்ல பேருந்துக் கட்டணம் 164 ரூபாய். இந்தக் கட்டணங்கள் ரெயில்வே கட்டணங்களைவிட அதிகமாகும். இந்த அளவிற்குப் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்ட காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிக வருவாய் வந்து கொண்டிருக்கும் நிலையில், தேவையில்லாமல் பேருந்துகளையெல்லாம் தனியார்வசம் ஒப்படைக்க தவியாய்த் தவிக்கின்றது ஜெயலலிதா அரசு.

கழக ஆட்சியில் போக்குவரத்துக் கழகம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, 20 சதவிகிதம் போனஸ் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வந்த அந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஜெயலலிதாவும் - அவரது தலைமையிலான போக்குவரத்து தொழிலாளர் அமைப்பும் 20 சதவிகிதம் போனஸ் போதாது, 25 சத விகிதம் போனஸ் வேண்டும் என்று போராடினார்கள். அப்போது ஜெயலலிதா போக்குவரத்துத் தொழிலாளர்களைத் தூண்டி விட்டார் என்று அவர் மீது நான் வழக்குத் தொடரவில்லை.

இப்போது பறிக்கப்பட்ட சம்பளத்தையும், சலுகைகளையும், உரிமைகளையும் திரும்பக் கொடுத்திடுக என்று கேட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை லட்சக்கணக்கானவர்களைப் பழிவாங்க

முன் வந்த இந்த அரசைக் கண்டித்தமைக்காக என் மீதும் மற்றும் தோழர் நல்லகண்ணு, தோழர் வரதராசன், தம்பி இளங்கோவன் ஆகியோர் மீதும் தூண்டிவிட்டதாகக் குற்றம் சுமத்தி வழக்கு தொடுத்திருக்கிறார்களே! அது போல எந்த வழக்கும் ஜெயலலிதா மீது தி.மு.க. ஆட்சியில் தொடுத்திடவில்லை.

அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குக் கருணாநிதி ஆட்சி தந்துள்ள சலுகைகள், உரிமைகள் போதாது. நான் ஆட்சிக்கு வந்து அவற்றையும் தருவேன் என்று தேர்தல் வாக்குறுதியில் அறிவித்து விட்டு, ஆட்சிக்கு வந்ததும் அதற்கு மாறாக, அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பழி வாங்கிய கொடுமையெனும் தொடர் வரலாற்றின் அடுத்த அத்தியாயம்தானே போக்குவரத்துத் தொழிலாளர்களின் தலையிலும் கை வைக்க, இப்போது அந்தத் துறையையும் தனியார் மயமாக்கியே தீருவேன் என்று தலைகீழாக நிற்பதாகும்!

எனவே டிசம்பர் 15 தி.மு.க. நடத்தும் அமைதி முறையிலான மறியல் அறப்போரின்போது, மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் பொடா சட்டத்தைத் திரும்பப் பெறுக என்று எழுப்பும் முழக்கத்திற்கும் ஈடாக - போக்குவரத்துத் துறையை தனியாருக்குத் தாரை வார்க்காதே என்ற முழக்கம் மாநில அரசு அலுவலகங்களின் முன்னாலும் ஒலித்திட வேண்டும்.

திடமாக

தீரமாக

வீரமாக

விண் முட்ட ஒலிக்கட்டும் விழுப்புரம் மாநாட்டுத் தீர்மான வாசகங்கள்!

அன்புள்ள,

மு.க.

10-12-2003

3006. எங்கு சுற்றினாலும் அங்குதான் வருவோம்!

உடன்பிறப்பே,

வளர்பிறைக் கவிஞர் என நான் வாழ்த்திய தம்பி நெல்லை ஜெயந்தாவை, நேரில் கண்டதில்லை நான். என் பார்வைக்கென அவர் அனுப்பி வைத்த, தென்றலோடு சில தினங்கள், என்ற கவிதைத் தொகுப்பினைப் படித்துச் சுவைத்துப் பாராட்டு மடல் ஒன்று அவருக்கு எழுதினேன். அந்த மடலில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

மனிதர்கள் தம்மை
தொலைத்து விட்டு
இறைவனைத்
தேடுகிற இடம்; கோயில்!

என்று அற்புதமாகக் கற்பனை செய்துள்ள நெல்லை ஜெயந்தா வளரும் கவிஞர்களில் ஒருவர்.

வளர்ந்தவர்களுக்கு வாழ்த்தும்,

வளருகிறவர்களுக்கு ஊக்கமும்

வழங்குவதே நியாயமும் முறையுமாகும்.

தென்றலோடு சில தினங்கள் எனும்

இத்தொகுப்பு தெள்ளமுதாக இனிக்கிறது. வாழ்க! வளர்க!

இந்த என் மடல் கண்டவுடன் எனக்கு இமைக்கும் நேரத்தில், நன்றிக் கடிதம் எழுதுவார் என நான் எதிர்பார்க்கவில்லை.

வர வர சமுதாயத்தில் சாம்பலாகிப் போனது நன்றியுணர்வு என்பதும் - அல்லது சோம்பலாகித் தூங்கிவிட்டது என்பதும் - என் அனுபவத்தில் கண்ட உண்மை. இனியும் காணப்போகிற உண்மையாகக் கூட இருந்திடுமோ என நான் எண்ணிப் பெருமூச்சு விடுவதுண்டு.

ஆனால், நான் எண்ணியதற்கு மாறாக, ஜெயந்தாவின் நன்றிக் கடிதம், தாயின் மீது தாவும் குழந்தையாக வந்து சேர்ந்தது.

அந்தக் கடிதத்தில் இரண்டு தலைப்புகளில் குறள் கவிதைகள் - வடிவத்தில், வண்ணத்தில், எண்ணத்தில்!

கலைஞர்

எனறு ஒரு தலைபபு -

அதன்கீழ்;

தமிழில் எழுதலாம்

இவரோ

தமிழரில் எழுதினார்

எழுதினார் என எழுதியுள்ளதால், எனக்குப் பிறகும் இக்கவிதை ஒலிக்கப்பெறும் என்பதிலே பெருமிதம் எனக்கு - தன்னலம்தான் - தமிழர் நலனே தன்னலமெனக் கொண்டவனாயிற்றே நான்.

தமிழரில் எழுதினார் என்பதை ஒரு குறும்புக்காரர் குதர்க்கக் கேள்வியினால் தகர்த்திட முனையலாம். அது எப்படி தமிழரில் எழுதுவது? தமிழன் மீது தமிழ் எழுத்தைப் பச்சை குத்துவதா? என்றும் கேட்கலாம்.

தமிழரில் எழுதினார் என்றால், தமிழர் மொழியுணர்வு பெற - இன உணர்வு பெற - வீரம் பெற்றிட - விஞ்ஞான மேன்மை பெற்றிட - எழுதினார் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இது என்னைப் பற்றியது என்பதால் இதற்கு மேல் விளக்குவது, சுய விளம்பரம் ஆகிவிடுமோ என்ற அச்சம், உச்சியைக் குலுக்குகிறது.

இந்தக் கவிதை வரியில் என்னை மறந்துவிட்டு தமிழரில் எழுதினார் என்ற சொற்றொடரை மட்டுமே சிந்திக்க வேண்டுகிறேன்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே

காதில் தேன் பாய்ந்தால், சுவை அறியுமா, காது? எனப் பாரதியைப் பார்த்துக் கேட்டவர்களும் உண்டு. கொடுந்துன்பச்

செய்தி கேட்டால் முதலில் காதுகளைத்தானே பொத்திக் கொள்கிறோம்.

செவிகைப்ப என்று குறளில் கூறப்படுகிறதே! கைப்பு என்பதற்குக் கசப்பு என்றுதானே பொருள் - கடுஞ்சொல் காதுக்குக் கசப்பையூட்டுமெனில், செந்தமிழ் நாடு எனும் இன்சொல், இனிப்பைத் தராதோ?

வஞ்சியின் விரல் நகம்;

அவள் குழந்தைக்கு,

முகம் பார்க்கும் கண்ணாடி

என எழுதினேன் - அப்போது அருகிலிருந்த என் பழைய நண்பர் கவிஞர் ஒருவர், அப்படியானால் அவள் நகம், அவ்வளவு பெரியதா? அல்லது குழந்தை முகம் அவ்வளவு சிறியதா? என்று கேலி செய்தார்.

இவருக்கே இந்தக் கற்பனை புரியவில்லையே! பின் எவருக்குப் புரியுமென்று அத்துடன் அந்தக் கற்பனைக்குக் கடிவாளம் போட்டு இழுத்து நிறுத்திவிட்டேன். சிந்தனை, தாளிட்டுக் கொண்டது.

தமிழர் பற்றிக் கூறியுள்ள ஜெயந்தா, அந்த மடலிலேயே தீட்டியுள்ள மற்றொரு கவிதை; தஞ்சை எனும் தலைப்பில்!

‘தஞ்சை

அன்று

நஞ்சை உண்டு

சாகுபடி ஆனது!

இன்று

நஞ்சை உண்டு

சாகும்படி ஆனது!

தமிழக உழவர்களின் நிலையை எப்படிப் படம் பிடித்துக்காட்டி உருகியிருக்கிறார்! நம்மையும் உருகிடச் செய்திருக்கிறார்! தமிழகத்திலிருந்து காவிரிப் பாசன உழவர்களின் பிரதிநிதிகள் கர்நாடகம் சென்று, அங்குள்ள உழவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருக்கின்றனர். நம்பிக்கை பட்டுப்

போகவில்லையென்று கூறியுள்ளனர். இங்கு ஆள்வோரோ, வறுமையில் மாள்வோர் பற்றிக் கவலையுறாமல் கர்நாடகம் சென்று சாமுண்டீஸ்வரியை மைசூரில் தரிசிக்க நேரமிருக்கிறது. காவேரி நீருக்காக கிருஷ்ணாவைச் சந்திக்க நினைப்பு இல்லை.

இத்தனை விரிவான வேதனையான செய்தியைத்தான் தம்பி ஜெயந்தா, தனது கவிதையில் சாகுபடி என்றும், சாகும்படி என்றும் - ம் எனும் ஓர் எழுத்தை வைத்து நிலை விளக்கம் தந்துள்ளார். கவிதையில் எழுத்து மாறி, தமிழக விவசாயிகளின் தலை எழுத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அந்தத் தலையெழுத்தை மாற்றத்தானே, தமிழை மட்டும் எழுதாமல் நான், தமிழரில் எழுதவும் நேர்ந்துள்ளது.

ஜெயந்தாவின் கடிதம் முடிக்கப்படும் விதம் என் நெஞ்சைத் தொட்டு வருடுகிறது.

என் வாழ்க்கையே உங்களை வணங்குகிறது.

என் கவிதைத் தொகுப்பு

தங்கள் கரங்களால் புரட்டப்பட்டதை

அறிந்தபோது

வானவில்லே தடவிக் கொடுத்த

வண்ணத்துப் பூச்சியாய் திக்குமுக்காடிப் போனேன்.

நன்றி. மிக்க நன்றி

வாழ்த்து மடல் - நன்றி மடல் இரண்டுமே தமிழின் வளங்காட்டுவதற்கும் - தமிழன் நிலை உணர்த்துவதற்குமான கண்ணாடிகள் என்பதை இம்மடல், உடன்பிறப்பே! உனக்கு விளக்கிடும்.

தமிழரில் எழுதினார்

நஞ்சை உண்டு சாகும்படி ஆனது

நகம்; முகம் பார்க்கும் கண்ணாடி

எனும் சொற்றொடர்களைக் கவனித்தால், செம்மொழியாகவும், மத்திய ஆட்சி மொழியாகவும் தமிழ் அமைந்திட - காவிரிப் பிரச்சினை தீர்ந்து கழனிகள் கதிர் குலுங்கிட - மத்திய

மாநில அரசுகளுக்கு நாம் வலியுறுத்தி வைக்கும் கோரிக்கைக் காகத்தானே டிசம்பர் 15 மறியல் அறப்போர் என்பதும் மனதில் நிழலாடுமல்லவா?

எங்கு சுற்றினும் அங்கு வருவார் என்பது போல், டிசம்பர் 15 கழகம் நடத்தும் மறியல் அறப்போர்க்களம் நோக்கித்தானே வரவேண்டியிருக்கிறது - அப்படித் தானே வருவேன் - இப்போதும் வந்துள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

11-12-2003

3007. உனக்கு என் வாழ்த்துகள்!

உடன்பிறப்பே,

மூன்று நாட்கள்தான் இடையே இருக்கின்றன - நீ முழங்கிட வேண்டிய அறப்போர் முழக்கங்களும் - நடத்திட வேண்டிய அமைதிவழி மறியலும், எந்த வகையிலும் எள் முனையளவு கட்டுப்பாடும் குலையாமல் நடைபெற வேண்டுமென்றும், அவ்வண்ணமே நடத்தி என் எண்ணத்தை நிறைவேற்றிடுவாய் என்றும் நம்புகிறேன்.

டிசம்பர் 15 அன்று, முதலிலேயே வட்டத்திலோ - மாவட்டத்திலோ நீ கலந்து கொள்ளும் இடத்தை அறிவித்துவிட்டு, அணி அணியாகச் சென்று மறியலிலே ஈடுபட்டு முழக்கமிட வேண்டுகிறேன்.

அந்த முழக்கங்களும் ஒரே மாதிரியான ஒழுங்கு முறையுடன் ஒலித்திடல் வேண்டும்.

மத்திய அரசு அலுவலகங்களின் முன்பும் - மாநில அரசு அலுவலகங்களின் முன்பும் மட்டுமே அறப்போர் மறியல் - ரயில்களையோ, பேருந்துகளையோ மறித்தல் கூடாது என ஏற்கனவே அறிவித்துள்ளேன். ஒருவர் உரத்த குரலில், முழக்கத்தைத் தொடங்க வேண்டும் - மற்றவர்கள் ஒருமித்த குரலில் அந்த முழக்கத்தைத் தொடர்ந்து ஒலித்திட வேண்டும். எடுத்துக் காட்டுகள் இதோ :-

ஒரு குரலில்	**பலர் குரலில்**
செயல்படுத்துக,	
செயல்படுத்துக!	செம்மையாகக் காவேரி ஆணையத்தை செயல்படுத்துக!
தமிழ் மொழியை	செம்மொழி ஆக்கிடுக!
மத்திய ஆட்சிமொழியாக	

தமிழையும் ஆக்கிடவேண்டும்!
சேது சமுத்திரத்
திட்டத்தை விரைவுபடுத்துக!
பொடா சட்டத்தை திரும்பப் பெறுக!
எஸ்மா, டெஸ்மா
சட்டங்களை திரும்பப் பெறுக!
விற்காதீர்! அரசுத்தொழில்களை
விற்காதீர்! தனியாருக்கு விற்காதீர்!
ரத்து செய்யாதீர்! இலவச மின்சாரத்தை
ரத்து செய்யாதீர்! ரத்து செய்யாதீர்!
நடத்தாதீர்! கழக அரசின்
நடத்தாதீர்! திட்டங்களுக்கு
மூடுவிழா
நடத்தாதீர்!
ரத்து செய்க! எச். முத்திரை ஆணையை ரத்து செய்க!
ரத்து செய்க!
கொண்டு வருக! ஒரு முனை வரியை கொண்டு வருக!
கொண்டு வருக!
வேலை தருக! சாலைப் பணியாளருக்கு
வேலை தருக! வேலை தருக!
பழிவாங்காதீர்! அரசு ஊழியர்களை,
பழிவாங்காதீர்! ஆசிரியர்களை பழி வாங்காதீர்!
வேலை தருக! மக்கள் நலப்
வேலை தருக! பணியாளருக்கு வேலை தருக!
வாபஸ் வாங்குக! மத மாற்றத் தடைச் சட்டத்தை வாபஸ் வாங்குக! வாபஸ் வாங்குக!
உயர்த்தாதீர்! கல்விக் கட்டணத்தை

உயர்த்தாதீர்! உயர்த்தாதீர்!

பறிக்காதீர்! பத்திரிகை

பறிக்காதீர்! சுதந்திரத்தைப் பறிக்காதீர்!

பறிக்காதீர்! எழுத்துரிமையைப்

பறிக்காதீர்! பறிக்காதீர்!

இந்த முழக்கங்களுடன் முன்னேறிச் சென்று மறியலில் ஈடுபடும்போது, காவல் துறையினர் தடுத்து நிறுத்திக் கைது செய்தால் அண்ணா வாழ்க! எனும் பேரொலி முழக்கி,

காவல் துறையினருடன் எவ்விதப் பிரச்சினையுமின்றி கைதாகிச் சிறை சென்றிடுக.

என் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் நிறைந்துள்ள சிங்கம் நிகர் உடன்பிறப்பாம் உனக்கு என் வாழ்த்துகள்.

அன்புள்ள,

மு.க.

12-12-2003

3008. மாசு துளியும் வராமல், மாவட்டங்களில், வட்டங்களில் மறியல் அறப்போர்!

உடன்பிறப்பே,

நீதிமன்றத்தின் தீர்ப்புகளையொட்டி சில நேரங்களில் மேல் முறையீடு செய்திருக்கிறோம் என்றாலும் - அதற்காக முதலில் தீர்ப்பளித்த நீதிமன்றத்தை என்றைக்குமே மதிக்கத் தவறியவர்களல்ல நாம். அந்தத் தீர்ப்பு நமது முறையீட்டை நிறைவு செய்ய வில்லை என்பதற்காக விளக்கங்கள் அளிப்பதுதான் நேர்மையும் நியாயமும் ஆகுமே தவிர, வெறுப்பைக் கக்குவது உரிய வழியல்ல என்பதை உணர்ந்து செயல்படுகிறவர்கள் நாம். குறையைப் போக்கிக் கொள்ளத்தான் அடுக்கடுக்காக - படிப்படியாக - உச்ச நீதிமன்றம் வரையில் பல வழிகளில் நீதி மன்றங்களின் கதவுகள் திறந்திருக்கின்றன.

இந்த நிலையில் இப்போது சொல்லவந்த விஷயத்திற்கு வருகிறேன்.

தமிழக ஆட்சியாளர்களிடம் பல்வேறு பிரிவு மக்களின் அதிருப்தியைத் தெரிவிக்கவும் -

அராஜக ஆட்சியையும், சர்வாதிகாரக் கொடுங்கோலையும் - சுட்டிக்காட்டி, அவை தொடர்பான கோரிக்கைகளை முன் வைத்தும்,

அதேபோல மத்திய ஆட்சியிடம், தமிழைச் செம்மொழியாக அறிவிப்பதற்கும்,

மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குவதற்கும்,

பொல்லாங்கு நிறைந்த பொடா சட்டத்தைத் திரும்பப் பெறுவதற்கும், காவிரி ஆணையம் செம்மையாகச் செயல்படு வதற்கும், நாம் நீண்ட நாட்களாக எழுப்புகிற குரல், அவர்தம்

செவி எட்டாமல் இருப்பதால் அவற்றைக் கோரிக்கையாக வைத்து வலியுறுத்துவதற்கும்,

மத்திய மாநில அரசு அலுவலகங்களுக்கு முன்னால் டிசம்பர் 15 அன்று மறியல் அறப் போராட்டம் நடத்துவதென்று தி.மு.கழகம் தீர்மானித்து, அதற்கான வழிமுறைகள் வன்முறைக்குத் துளியும் இடமின்றி அமைதியாக அமைய வேண்டுமென்று, நமது கழக அமைப்புகள் அனைத்துக்கும் அறிவுரை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே காவல் துறையினர், கழகத்தினரை முன் கூட்டியே - அவர்கள் மறியல் செய்யும் இடத்துக்கு வருவதற்கு முன்னரே - முதல் நாளோ அல்லது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரோ - கைது செய்யும் ஏற்பாட்டுடன் இருக்கின்றனர் என்பதை அறிந்து, கழகத்தின் சார்பில் நமது பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், உயர் நீதிமன்றத்தில் ஒரு முறையீட்டு மனுவை அளித்தார்.

அந்த மனுவின் மீது நடைபெற்ற விவாதத்தில், வழக்கறிஞர்கள் டி.ஆர். ராஜகோபாலன், ஆர்.எஸ். பாரதி, பட்டி ஜெகநாதன், பி.வி. கல்யாண சுந்தரம், பி.வில்சன், கார்த்திகேயன், பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு வாதாடினர்.

நேற்று 12-12-2003 மாலையில், உயர்நீதி மன்றத்தில் நமது முறையீட்டு மனுவின் மீது தலைமை நீதியரசர் சுபாஷன் ரெட்டி அவர்களாலும், நீதியரசர் ஞானப் பிரகாசம் அவர்களாலும் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. போலீசார் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக யாரையும் வீட்டில் சென்று கைது செய்யக் கூடாது.

பொது இடத்தில் குற்றம் புரிய முயற்சி செய்தால் அவர்களை, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 151வது பிரிவின் கீழ் கைது செய்யலாம்.

எனும் இரண்டு ஆணைகளை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ளது. இந்த இரு ஆணைகளையும், முதல் பக்கத்தில் பெருந்தலைப்பில் வெளியிடாத பிரபலத் தமிழ்ப் பத்திரிகை தினத்தந்தி, மறியல் நடத்த அனுமதி இல்லை என்பதை மட்டும் எட்டு கலம் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு விட்டு, மேற்சொன்ன இரு ஆணைகளையும் 2ம் பக்க இறுதி வரிகளில் (tail end) வெளியிட்டிருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் தினமணி இதழில் மறியலுக்கு அனுமதி இல்லை என்று பெரிய எழுத்துச் செய்தி வெளியிடப்பட்டு, அதன் மேலேயே பார்வையான இடத்தில் முன் எச்சரிக்கை கைதுக்குத் தடை என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகளே குடியரசுத் தலைவராக இருந்தாலும், எந்தவொரு நீதி மன்றத்திடமும் மறியல் செய்வதற்கான அனுமதி நிச்சயம் கிடைக்காது. இந்த நீதிமன்றத்தில் இப்போது சொல்லப்பட்டிருப்பதும் அதே போல இயற்கையானதுதான்! மறியல் செய்து, சிறைக்குப் போவோம் என்பதற்காகத்தான் மறியல் அறப்போர் போராட்டமே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மறியல் போராட்டத்தை மகாத்மா காந்தி காலத்திலிருந்தே, ஆட்சியாளர்களோ - நீதிமன்றங்களோ ஏற்றுக் கொண்டதில்லை. சட்டத்தை மீறியாவது - அதன் விளைவைப் பற்றித் தெரிந்து இருந்தும், காங்கிரஸ் தியாகிகள் மறியல் அறப் போராட்டத்தில் ஈடுபட்டே வந்துள்ளனர். ஆனால், மறியலை நீதிமன்றங்கள் என்றைக்கும் ஏற்றுக் கொண்டது கிடையாது.

தி.மு. கழகத்தின் நிறுவனரும், திராவிட இனத்தின் பெருந்தலைவர்களில் ஒருவருமான பெரியாரின் தளபதி பேரறிஞர் அண்ணா அவர்கள், மறியலைச் சட்டம் அனுமதிக்காது என்பது தெரிந்தே பல மறியல் போராட்டங்களில் தலைமை வகித்து சிறைப்பட்டிருக்கிறார். குறிப்பாக வேலூரில் கலெக்டர் அலுவலகத்துக்கு முன்னால் மறியல் செய்து கைதாகி சிறைப்பட்ட அண்ணா அவர்கள், அவரே தனது வழக்கிற்காக வாதாடினார் என்பது வரலாறு!

தினத்தந்தியின் நிறுவனரும் - தி.மு.க. ஆட்சியில் அவைத் தலைவராகவும், அமைச்சராகவும் பதவி வகித்தவருமான தமிழர் தந்தை எனப்படும் சி.பா. ஆதித்தனார் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியில் பனை மரத் தொழிலாளர்களுக்காக மறியல் போராட்டம் நடத்தி, அதற்காக கைது செய்யப்பட்டு கை விலங்கு கூட பூட்டப்பட்டார் என்பது தமிழகத்துக் கண்ணீர் சரித்திரத்தின் ஓர் அத்தியாயமாகும்.

எனவே, சட்டத்தின் நுணுக்கங்களைத் தெளிவாக உணர்ந்திருந்த அண்ணா அவர்களோ - ஆதித்தனார் அவர்களோ - மறியல் என்பதை சட்டமும் நீதி மன்றமும் அனுமதிக்கும்

என்று தவறாக நினைத்து அந்த மறியல் அறப்போர்களில் தலைமையேற்றுள்ளார்கள் என்று யாரும் கருதிட முடியாது.

சட்டம் மக்களுக்காகத்தான் என்ற கருத்தின் படியும், அந்த மக்கள் சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து மாறாமலும், அதே நேரத்தில் மக்களின் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர, வேறு வழியில்லாத காரணத்தால், அறப்போர், சத்தியாக்கிரகம், மறியல் என்று காந்தியடிகள் காலம் முதல் காஞ்சித் தலைவர் அண்ணா காலம் வரையில், கடைப்பிடிக்கப்பட்டு வரும் களம் புகும் அறவழி முறையை தி.மு. கழகத்தில் உள்ள நானும், பேராசிரியரும் மற்றும் பல லட்சம் உறுப்பினர்களும் கடைப்பிடித்து பலமுறை சிறை சென்றுள்ளோம்.

இப்போது தமிழை செம்மொழியாக்குவது - மத்திய ஆட்சி மொழி ஆக்குவது - பொடா சட்டத்தையும் எஸ்மா, டெஸ்மா சட்டத்தையும் திரும்பப் பெறுவது போன்ற கோரிக்கைகளுக்காக, மற்றும் பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்காக - இந்த மறியல் அறப்போரிலே கழகத்தினர் ஈடுபடுகிறார்கள்.

இதில் எந்த மாற்றமும் இல்லை. நான் தொடர்ந்து கழகச் சார்பில் வலியுறுத்தி வருகிற

கடமை,

கண்ணியம்,

கட்டுப்பாடு

ஆகியவற்றைக் காத்து, அமைதி வழியில் மறியல் அறப்போர் நடத்திட, அணி வகுப்பீர் என்றும் - இந்த அமைதி முறையில் எந்த மாற்றமும் இல்லாமல், நமது கழக வழிமுறைகளுக்கு மாசு வராமல் மாவட்டந்தோறும் - வட்டந்தோறும் - ஏற்கனவே அறிவித்துள்ளபடி கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்வீர் என வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-12-2003

3009. மீண்டும் உடன்பிறப்பே, உன்னை வாழ்த்துகிறேன்!

உடன்பிறப்பே,

இன்று மறியல் அறப் போர்க்களம் புகுந்திடும் உன்னையும், மற்றுமுள்ள உடன்பிறப்புகளையும் மகிழ்ச்சி பொங்கிட மலர் தூவி வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறேன்.

"வெட்டி வா என்றால் கட்டி வரும் வீரர்கள் என் தம்பிமார்கள்" என்று அண்ணா சொல்வதை சென்ற கடிதத்தில் நினைவூட்டியிருந்தேனல்லவா! இதோ அன்று நான் எழுதிய திருமயம் தீரர்கள் பற்றிய கடிதத்தையும், வீரர்கள் பட்டியலையும் பார்த்திட்ட நீலகிரி மாவட்டச் செயலாளர் தம்பி ராமச்சந்திரன் அவர்கள், 2,500 பேர் அறப்போர் மறியலில் ஈடுபடுகிறார்கள் என்ற விபரத்தை அவர்களுடைய முகவரிகளையும், அவர்களுடைய புகைப்படங்களையும் 11 பெட்டிகளில் அடுக்கி தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

நமக்கு வருகிற பெட்டிகள் இப்படிப்பட்டவை - இதற்கு ஈடான பெட்டிகள் ஏது? இலட்சிய தாகமுள்ள இனிய தம்பிமார்கள் பெயர்கள் அடங்கிய பெட்டிகள் அல்லவா?

இவர்களையும் வாழ்த்தி,
ஏனைய தம்பிமார்களையும் வாழ்த்தி,
எந்த நிலையிலும் அமைதியைக் கடைப்பிடிப்பதிலிருந்து
தவறிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு,
மீண்டும் உடன்பிறப்பே, உன்னை வாழ்த்துகிறேன்.

இதனை உனக்கு எழுதிடும்போது, சேலத்திலிருந்து தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் அறப்போரில் ஈடுபடுவோர் பத்தாயிரம் பேர் தனித்தனி படிவங்களில் கையெழுத்திட்டதை அனுப்பியுள்ளார்.

அன்புள்ள,

மு.க.

15-12-2003

3010. உண்மையான தம்பிகள் அனைவருக்கும் பொருந்தும்!

உடன்பிறப்பே,

பார்த்தாயா? பாலுவையும் ராஜாவையும்! பட்டாளத்து வீரர்களைப் போல நடைபோட்டுச் செல்கிறார்கள், டெல்லிப் பட்டினத்தில் பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பய் அவர்களைச் சந்திக்க!

பதவி அளிக்கிறேன், பெற்றுக் கொள்ள வாருங்கள் என்று அந்தப் பெரியவர் அழைத்து, பதவி பெறப் போகிறோம் என்ற பரவசத்தில் அவர் இல்லம் நோக்கிச் செல்லுகிற களிப்பு நிறைந்த கம்பீரமா அது?

அல்லது அமைச்சர் அந்தஸ்தில் அயல்நாடுகளில் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவிட்டு, சொந்த நாடு திரும்பி, கண்டவை, கேட்டவை, உணர்ந்தவைகளைப் பிரதமரிடம் தெரிவிக்கச் செல்லும்போது ஏற்படும் உற்சாகத்தின் உந்துதலா அந்த நடைக்கு இத்துணைப் பெருமிதத்தை ஏற்படுத்தியிருக்கிறது!

இல்லை உடன்பிறப்பே இல்லை - இவர்கள் இருவரும் இருந்த பதவியைத் துறந்துவிட்டு - அதனை அதிகாரபூர்வமாக உரியவரிடம் அறிவித்திடவும், அதற்கானக் கடிதத்தை அவர் கரங்களிலேயே அளித்திடவும்தான் இப்படி அரிமா நடைபோட்டுச் செல்கிறார்கள். இந்த நடையைப் பார்த்தாயா, வழங்கப் போகிறேன் வருக என்று வாஜ்பய் அழைத்திருந்தால் எத்துணை வசீகரமும் வனப்பும் மிகுந்து, வதனமே சந்திர பிம்பம் என ஆகியிருக்குமோ - அப்படியல்லவா என் தம்பிகளின் முகங்கள் களை கட்டியிருக்கின்றன.

இப்படி மூன்று முகங்களை, இதே புன்முறுவலுடன் தம்பி முரசொலி மாறனின் முகத்தையும் சேர்த்துக் கண்டிருக்கும் வாய்ப்பு இல்லாமற் போயிற்றே தவிர, நமது தன்மானத்திற்கே அறைகூவல் எனுமளவுக்கு தமிழ்நாட்டு பி.ஜே.பி. தலைவர்கள் பேசியும்

செயல்பட்டும், மாநிலத்தில் நடைபெறும் அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகங்களையும், பழிவாங்கும் செயல்களையும், உதாரணமாக தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக என்று கொண்டுவரப்பட்டு, அரசியல் பகை தீர்த்துக் கொள்ள எந்தவொரு மாநில அரசும் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்ற உறுதிமொழியுடன் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட பொடா சட்டம், மாநில அரசினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதைக் கண்டித்து பொடாவையே மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியும் - காவேரி ஆணையத்தைச் செம்மையாக இயங்கச் செய்ய வலியுறுத்தியும் - தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் - மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும் என்பதை வலியுறுத்தியும் - சேதுசமுத்திரம் போன்ற தமிழகத் திட்டங்களை விரைவுபடுத்தக் கேட்டுக் கொண்டும் - முழக்கமிட்டு அறப்போர் நடத்தக்கூட உரிமையில்லை என்று பி.ஜே.பி. மேலிடத் தலைமையே கருத்தறிவித்த நிலையில், நாம் எடுத்த முடிவுகூட சற்றுத் தாமதமானதற்கு மாறனின் உடல்நலிவு தானே காரணமாக இருந்தது - அவரும் இருந்திருந்தால் சற்று முன் கூட்டியே இந்த முடிவை எடுத்திருப்போம்.

தன்மான உணர்வின் மீது யார் உரசினாலும் - ஏற்றுக் கொண்ட கொள்கை முடிவுகளுக்கு மாறாக எவர் நடந்தாலும் - தவறு கண்ட இடத்து எதற்கும் அஞ்சிடாமல், தயங்காமல் தன் மறுப்பை வெளியிட்டு, உறங்கிடுபவரை ஓங்கித் தட்டியெழுப்பிக் கூச்சலிட்டுச் சொல்லாமல், அண்ணா காட்டிய பண்பாட்டு வழியில் மாற்று முகாமினரை மயிலிறகு கொண்டு தடவியெழுப்பி விடைபெற்றுக் கொள்வதில் முரசொலி மாறன் முன்னிருந்திருப்பார் என்பதில் எனக்கும் ஐயமில்லை - கழகப் பொதுக் குழு, செயற்குழுக்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என அவர் எடுத்து வைக்கும் வாதங்களையும், காட்டும் கண்டிப்பையும் உணர்ந்துள்ள உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் ஒரு துளியும் ஐயமில்லை.

அதனால்தான் சொல்லுகிறேன். அண்ணா இருந்தால் என்ன செய்திருப்பாரோ - எவ்வழியில் அவர் அணுகுமுறை இருந்திருக்குமோ - அதைப் போலவே 35 ஆண்டு காலப் பாராளுமன்றப் பயிற்சி பெற்ற தம்பி முரசொலி மாறனின்

அணுகுமுறையும், திராவிட இயக்கத்தின் வேர்கள் பட்டுப் போகாமல் பாதுகாக்கவே பயன்பட்டிருக்கும்.

தி.மு. கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு விவாதித்துத் தீர்மானித்து, தலைமையிலே நிறைவேற்றப்பட்டுள்ள இந்த முடிவு குறித்து - கருத்துகள் வழங்கும் கண்ணியவான்கள் சிலர், கழகம் கட்டிக்காத்து வரும் அரசியல், சமுதாய, பொருளாதாரக் கொள்கைகளுக்கு - மத நல்லிணக்கம் காத்திடும் மனித நேய நடவடிக்கைகளுக்கு - வலிவும், பொலிவும், வெற்றியும் கிடைத்திட வேண்டு மென்பதுதான் நமது குறிக்கோள் என்பதை விட்டு விட்டு, எதிர்வரும் தேர்தல்களை மட்டுமே கணக்கிட்டுக் கொண்டு இந்த இயக்கம் அழிந்து விடுமென ஆரூடம் கூறிக்கொண்டு அலைகிறார்கள். எத்தனை கட்சி - எந்த எந்தக் கட்சி ஆதரிக்கும் - எத்தனை இடம் கிடைக்கும் - என்றெல்லாம் திராவிட இயக்கத்தின் தொப்புள் கொடியையே, நச்சுப் பாம்பு என வர்ணித்து, நம்புகிறவர்கள் நம்பட்டும் - நம்பாவிட்டால் போகட்டும் - நம்புகிற வரையில் நமக்கு லாபம் - என்று நாக்கைத் தட்டிக் கொண்டு நப்பாசையில் பேட்டிகள் அளிக்கும் சிலர் அந்த ரகத்தினர்.

நமது கவலை அதுவல்ல! பதவிகள் வரும் போகும். ஆட்சிகள் அமையும். அமையாமலே கூடப் போகும். அமைந்தும் கலையும். 55 ஆண்டுக் காலத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்ட பயணத்தில் நிழல் தரும் மரங்களும் கண்டோம் - நீரோடைகளையும் பார்த்தோம் - நெருப்பாறுகளையும் கடந்தோம் - இன்று நீட்டோலை வாசித்து நமக்கு ஜாதகம் கணிக்கும் பிறவிகள், கொடிய எதிர்ப்புகளைத் தாண்டி நாம் நடத்திவரும் கொள்கைப் பயணத்தின் குறிக்கோளை மெய்யாகவே உணர்ந்திருப்பதால் தான், வீழ்வோம் என வீண் கனவு காண்கிறார்கள் - அதற்கு ஏற்றவிதமாகப் பேசுகிறார்கள். குப்பை மேட்டுக்குப் போவோரின் கூக்குரல் அதுவெனக் கருதி நம் வழி நடப்போம்.

பெரியார் இல்லை இன்று - பெரியாரின் கொள்கை இருக்கிறது.

அண்ணா இல்லை இன்று - அண்ணாவின் இலட்சியம் இருக்கிறது.

நாளை நம்மில் சிலர் இல்லாமற் போகலாம் - நமது இயக்கம் இருக்கும். என்றும் இருக்கும். இருக்க வேண்டும்.

பதவிகளில் இருந்தே அந்த நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்றில்லை. இதே -பதவியைத் துறந்த இரு உடன்பிறப்புகள் - என் தம்பிமார்கள் - அய்யகோ! பதவி போய் விட்டதே எனும் அங்கலாய்ப்பு அணுவளவுமின்றி பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்து சிறுத்தைகள் வெளியே வருவது போல் வருகின்றனரே! அதுதான் உடன்பிறப்பே, இந்த இயக்கம்!

தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும், அமைச்சர் பதவி ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் ஒன்று போல் சமமாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி!

என்று அண்ணா சொன்னது எனக்கு மட்டும் பொருந்தக் கூடியதல்ல.

அண்ணாவின் உண்மையான தம்பிகள்
பாலு, ராஜா போன்றவர்களுக்கும்
அப்படியே பொருந்தக் கூடியதேயாகும்.

அன்புள்ள,

மு.க.

23-12-2003

3011. உடன்பிறப்புகளின் மடல்கள் உணர்த்துவதென்ன?

உடன்பிறப்பே,

என்றும் என் கடிதங்களையே படிக்கும் உன் போன்ற உடன்பிறப்புகள் இன்று, உடன்பிறப்புகள் சிலரின் கடிதங்களைப் படிக்கட்டுமே எனக் கருதினேன். விரும்பினேன். என் விருப்பம் நிறைவேற என் கோப்பில் சில கடிதங்கள் சிக்கின.

தம்பிமார்களிடம் வளர்ந்து வரும் உறுதி, ஊக்கம், அவற்றைப் போலவே அவர்களிடம் வளரும் வளமான தமிழ் எல்லாமே என்னை நம்பிக்கை கொள்ளச் செய்வதுடன், என் நாடி நரம்புகளை முறுக்கேற்றக் கூடியவைகளாகவும் விளங்குகின்றன என்பதையும் - அவர்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும்தான் எதிர்காலச் சமுதாயத்தின் வெற்றிக்கான அடித்தளம் என்பதையும் - நேற்றைக்குக் கூட நிறைய நேரம் எடுத்துக் கொண்டு தம்பி துரைமுருகனுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவரும் என் ஆசையின் ஆழத்தையும், அதன் அடியும் முடியும் காணக் கூடிய வாலிபப் பட்டாளம் ஒன்று வலிவுடன் கிளர்ந்தெழுவதையும் என்னுடன் உடன்பட்டு ஒப்புக் கொண்டார்.

தம்பிமார்கள் பலருக்கு இப்போது என்ன ஒரு ஆதங்கம்? நமது தலைவருக்கும் வயது எண்பது ஆகி விட்டதே - உடல் நலத்தை நன்கு பேணிட வேண்டுமே என்ற கவலை, கடிதங்களாகக் குவிந்து கொண்டிருக்கின்றன.

இருநாட்களுக்கு முன்னர், தம்பி திருச்சி சிவா எழுதிய கடிதத்தில், சென்னை வந்தால் எங்கள் மனம் உங்களையும், அறிவாலயத்தையும் விட்டுக் கிளம்ப மறுக்கிறது என்று குறிப்பிட்டு, அதற்கான காரணத்தையும் நடந்த நிகழ்ச்சியொன்றின் வாயிலாக சுட்டிக்காட்டியிருந்தார். அது இது!

உங்களையும், தளபதியையும் சந்திக்க புத்துணர்ச்சியோடு நேற்று இரயிலேறினேன். வழக்கம்போல் என் கையில் புத்தகங்கள்.

அறிவை தெளிவாக்க மட்டுமல்ல. அவசியமில்லா பேச்சுக்களில் அநாவசியமாக அடுத்தவர்களோடு ஈடுபடுவதைத் தவிர்க்கவும் பெரிதும் பயன்படுபவை, எல்லோரும் அந்த வகையினரல்ல. சிலரோடு பேசுவது அனுபவம். சிலரோடு பேசுவது அவசியம். சிலரோடு பேசுவது பாக்கியம். எனக்கு எதிரே பிராமண இனத்தைச் சார்ந்த ஒரு தம்பதி. என்னை அடையாளங்கண்டு அவர் பேச ஆரம்பித்தார். வைதீகத்தில் ஊறிய குடும்பம் என்பது பேச்சில் தெரிந்தது. வேதங்கள் சொல்லும் வேதாந்தங்களை விளக்கிக் கொண்டு வந்தார். சில கருத்துப் பரிமாற்றங்கள். கசப்பு உணர்வு தலை தூக்கி விடாமல் நம்முடைய உணர்வுகளை நான் வெளிப்படுத்தினேன். இன்றைய அரசியலின் பக்கம் பேச்சு திரும்பியது. நல்ல வசதியான நிலையிலும், கௌரவமான உத்தியோகத்திலும் இருக்கக் கூடியவர் அவர். அரசியலில் உலக அளவில், தேசிய அளவில் உள்ள பிரச்சினைகளைப் பேசவே அவர் பெரிதும் விரும்பினார்.

இவற்றுக்கிடையில் அந்த அம்மையார் மெல்லப் பேசத் தலைப்பட்டார். இசையில் அதிகம் நாட்டமுடையவராக அதைப் பற்றிப் பேசிய அவர் திடீரென்று, 'எது எப்படியோ, எங்கள் ஓட்டு மட்டும் தி.மு.க. வுக்குத்தான்' என்றார். எதிர்பாராத இந்த வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஒருசேர ஏற்படுத்தியது. காரணம் தெரிந்து கொள்ள விரும்புவதைப் போல நிமிர்ந்து பார்த்தேன். அந்த அம்மையார் சொன்னார். "நிகழ் கால அரசியல் நிகழ்வுகள், என் கணவர் பேசியதெல்லாம் ஒருபுறம். எங்களுடைய வீடுகளில் மாட்டுப் பொங்கலின் போது, பெண்களாகிய நாங்களெல்லாம் ஊரில் இல்லாத, வெளியூரில் இருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு அவர்களுக்குப் பரிமாறுவதைப் போல ஒரு கவளம் தனியாக எடுத்து வைப்போம். என்னுடைய தாயார் அதுபோல எடுத்து வைக்கும்போது ஒரு கவளத்தை இது என் உடன்பிறந்தான் கருணாநிதிக்கு என்று வைப்பார்கள். காரணம், என்னுடைய தந்தை கணக்குப் பிள்ளையாக அந்த நாட்களில் வேலை பார்த்தவர். திடீரென்று ஒருநாள் இரவில் அவருடைய, அவரைப் போன்றவர்களின் வேலையையெல்லாம் அன்றைய அ.தி.மு.க. ஆட்சி பறித்துவிட்டது. எதிர்பாராத இந்த அதிர்ச்சியாலும், அவமானத்தாலும் நிலைகுலைந்து போயிருந்தபோது உங்கள் தலைவர்தான் அதுபோன்ற குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக தர

ஆரம்பித்தார். என் தாய் என் தந்தையிடம் சொல்வார்கள், "நீங்கள் சம்பளமாக வாங்கித் தந்தது 75 ரூபாய்தான். ஆனால் என் உடன்பிறந்தவனைப் போல கருணாநிதி தருவது 1000 ரூபாய் என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். இந்த நன்றி உணர்வு எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும், ஜாதி பார்க்காமல், நிகழ்கால திடீர் மாற்றங்கள், வளர்ச்சியினால் பாதிக்கப்படாமல் தொடர்கிறது. எங்கள் குடும்பத்தால் மறக்கப்பட முடியாதவர் கலைஞர்! என்று சொல்லிவிட்டு உறங்கச் சென்று விட்டார். இதைப் படித்த போது, தம்பி திருச்சி செல்வேந்திரன் முன்பொருநாள் எழுதிய கடித வரிகள் சில நினைவில் மிதந்தன.

உங்களால் நல்லது நடக்கும்போது இந்த நாடே அனுபவிக்கிறது. செல்வத்திலும், செழிப்பிலும், மகிழ்ச்சியிலும், புகழ்ச்சியிலும் எல்லோரும் மிதக்கிறார்கள். ஆனால் துன்பமும், சோதனையும் வரும்போது கஷ்டத்திலும், நஷ்டத்திலும், கண்ணீரிலும் தங்கள் குடும்பம் மட்டுமே மிதக்கிறது. எனக்குத் தெரிந்து முப்பது ஆண்டுகளாய் இதுதான் நடக்கிறது திருச்சி செல்வேந்திரன் இப்படி எழுதியிருந்தார். கழகமே என் குடும்பம் என்கிற போது, எதற்காக இவர் இப்படிப் பிரித்துப் பார்த்து வருந்திட வேண்டும் என எண்ணிக்கொண்டேன். என்னைப் பற்றிச் செல்வேந்திரனைப் போன்ற என் உடன்பிறப்புகள் கவலைப்படுகிறார்கள் என்றால், அதுதானே என் கவலை போக்கும் மருந்து!

தம்பி முரசொலி மாறனைப் பற்றி, குமுதத்தில் மறக்க முடியுமா என்ற தலைப்பில் எழுதுகிறேன். அதன் தொடக்கத்திற்கு, கோவை சுப்பு என்ற ஒரு தம்பியின் கடிதத்தைப் பயன்படுத்தியிருந்தேன். அதை குமுதம் இதழில் படித்து விட்டு, அந்தத் தம்பி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் எப்படி உணர்ச்சி பொங்குகிறது பார்!

அக்கடிதம் இதோ:- குமுதம் இதழில் தங்களின் மறக்க முடியுமா? தொடர் கண்டேன். முதல் அத்தியாயத்திலேயே முத்தாய்ப்பாய் எனது கடிதத்தை அப்படியே அச்சேற்றியிருப்பது கண்டு என்னையறியாமல் கண்ணீர் விட்டு அழுது விட்டேன். ஐயா! நீங்கள் எவ்வளவு பெரிய அறிஞர்! எவ்வளவு பெரிய அனுபவஸ்தர்! உங்களுக்கு வராத கடிதங்களா? உடன் பிறப்புகளுக்கு நீங்கள் சொற்சொட்டு சிந்தி எழுதியிராத கடிதங்களா? அதில் இடம் பெறாத வார்த்தை - வாக்கிய மணிகளா? சொல்லாரங்களா? தாங்கள் கண்டிராத அரசியல் தலைவர்களா? நண்பர்களா?

எழுத்தாளர்களா? புகைப் படக்காரர்களா? பொதுமக்களா? இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். உலகமே போற்றும் அரசியல் மேதையான தங்களுக்கு, ஊர்க்குருவியான நான் தமிழகத்தை உலக அளவில் இட்டுச் செல்லத் துடித்த ஒரு மாமனிதருடனேயான எனது மூன்று நாள் தொடர்பை தங்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் ஓர் உணர்வுப் பூர்வ கடிதமாக வடிவமைத்து அனுப்பியிருந்தேன். அதை உயரே, உயரே, உயரே எடுத்துச் சென்று சிகரத்தில் வைத்து விட்டீர்களே ஐயா! இதற்கு நான் எப்படி நன்றி சொல்வேன் ஐயா?

ஒரு நாள் முழுக்க எத்தனை தொலைபேசி அழைப்புகள்... பாராட்டுகள்...கைகுலுக்கல்கள்....'தலைவரே, பாராட்டிபுட்டாரே! ஐயா! உனக்கு இதுக்கு மேலே என்ன வேணும்?' என்று உணர்ச்சிக் கொப்பளிக்கக் கட்டித் தழுவும் உடன்பிறப்புகள். கடந்த வியாழன் இரவு குமுதம் இதழ் வந்ததிலிருந்து, இந்தக் கடிதம் எழுதும் இக்கணம் வரை இரவு பகல் தூங்க விடாது ஓயாத அழைப்புகள். அந்தத் தூங்கவிடாத சந்தோஷக்கணங்களையெல்லாம் தங்கள் காலடிக்கே சமர்ப்பணமாக்குகிறேன். ஐயா! உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நான் தங்களுக்குக் கடிதம் எழுதின பின்பு அது தங்கள் கைக்குக் கிடைக்குமோ? கிடைக்காதோ? கிடைத்தாலும் படிப்பாரோ? மாட்டாரோ? படித்தாலும் பதில் தருவாரோ? பரணில் போடுவாரோ? இல்லை பத்தோடு பதினொன்று என்று கோப்புகளில் வைத்து விடுவாரோ? என்றெல்லாம் இடக்கு, மடக்காகத்தான் பரிதவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் பாருங்கள். கடந்த வாரம் கோவையில் சிறை நிரப்பும் போராட்டத்திற்கு தலைமையேற்க வந்தார் முன்னாள் அமைச்சர் துரைமுருகன். அவர் தொண்டர்களைச் சிறைக்குச் செல்ல வேனில் ஏற்றிக் கொண்டே பத்திரிகையாளர்கள் மத்தியில் சுப்பு.....சுப்பு.... என்று தேடியிருக்கிறார். என்னைத் தேடிப்பிடித்து, போட்டோ கடிதம் அனுப்பியிருந்தியே! தலைவர் படிச்சாரய்யா! அவர் மனசைத் தொட்டுட்டய்யா! ன்னு என்னவெல்லாமோ சொல்லிப் புளகாங்கிதப்பட்டார். அப்போதே நான் பெறற்கரிய பேறு பெற்று விட்டதாக உணர்ந்தேன். ஆனால் இப்போதோ.... அதையும் மீறி...அதையும் தாண்டி.... எங்கேயோ கொண்டு போய் நிறுத்தி விட்டீர்கள். ஊருக்கே தெரியாமல் கேமராவுடன் சுற்றித் திரிந்த ஒருவனை ஒரே நொடியில் உலகுக்கே காட்டிவிட்டீர்கள்!

ஐயா! உங்களுக்கு நினைவிருக்குமோ இருக்காதோ! கோவையில் தொல்காப்பியப் பூங்கா வெளியீட்டு விழாவின் போது, இரண்டு நாட்களும் தங்களைப் புகைப்படங்களாக எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தேன். (முதல் நாள் தாங்கள் உடல் நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் அட்மிட் செய்து எல்லோரும் பதறித் துடித்ததை எழுத ஏராள பக்கங்கள் வேண்டும்) இரண்டாம் நாள் என்னைப் பார்த்து, நீதான்யா மேன் ஆப் தி மேட்ச் மாதிரி மேன் ஆப் தி போட்டோகிராபி என்று சொன்னீர்கள். அந்த நினைவுகளே மறக்க முடியாத நினைவுகள். இப்போது சொற்களால் மட்டுமல்லாது, அச்சு மூலமாகவும் தங்களுடன் சேர்த்து, தங்கள் மனசாட்சியுடனும் சேர்த்து என் பெயரையும் ஓரிடத்தில் பதிவு செய்து விட்டீர்களே ஐயா! எனக்கு செயற்கரிய செய்வார் பெரியோர் என்கிற குறள்தான் நினைவுக்கு வருகிறது.

அன்புடன், எஸ்.டி.எஸ். சுப்பு.

அன்பு உணர்வின் வெளிப்பாட்டுக்கு இக்கடிதம் வெளியிட்டுள்ளேன். அன்பு உணர்வுடன், அமுதத் தமிழும் இணைந்துள்ளதற்கு நான் முரசொலியில் எழுதியதற்கு நன்றி கூறி இதோ இளங்கவிஞர் ஜெயந்தா எழுதிய கடிதம் :-

பாதங்களைப் பணிகிறேன்.

எங்கள் பாட்டுடைத் தலைவரே!

நைல் நதி மொத்தமும் நனைத்து விட்டுப் போன நாற்றாகிப் போனேன் நான்..!

சங்கத் தமிழ் மணக்கும் சந்தன மரமே! விழுதுகளை வளர்த்தென்னை விசாரித்திருக்கிறதே இதென்ன விசித்திரம்..?

அரசனைப் பற்றி கவிஞர்கள் பாடிய கல்வெட்டுகள் தெரியும். முந்தைய வியாழன் முரசொலியோ, சாமானியக் கவிஞனொருவனை சக்கரவர்த்தியே பாடிய கல்வெட்டானதே!

இந்த அன்னை உள்ளத்தால்தானே, கோடிக்கணக்கான தமிழர்களின் நாடிக் கணக்கானீர்கள்!

கலைஞர் தமிழ் கேட்டால் காளைகளுக்கும் தந்தம் முளைக்கும். இதோ... இந்தப் பட்டாம்பூச்சிக்கும் உங்கள் தொல் காப்பியப் பேனா தொட்டதில், தோகையே முளைத்து விட்டதே...!

அன்றே வழிந்து விட்டது! நான் ஆயுள் முழுக்க சிந்த வேண்டிய ஆனந்தக் கண்ணீர்!

நிறைந்த நெஞ்சுடன் நெல்லை ஜெயந்தா

எப்படித் தாயன்பு கொட்டி, அத்துடன் தமிழையும் குழைத்து என் தம்பிமார்கள் எனக்காகத் தவித்துப் போகிறார்கள் என்பதற்கு இதோ கவிவேந்தர் வேழவேந்தன் எழுதியுள்ள கடிதத்தின் கடைசிப் பகுதி:-

இத்தனை கனத்த உள்ளத்துடன் உலவும் தாங்கள், இடையிடையே பரிமாறும் கரும்புக் கவிதைகள் நெஞ்சுக்கு இதம் தருகின்றன. தங்கள் எழுதுகோல் காட்டும் கற்பனையாழமும், கவின்தவழும் வித்தகமும் மலைக்க வைக்கின்றன. எந்தச் சொற்களால் போற்றுவேன்?

இயக்கத்திற்கும், இலக்கியத்திற்கும் தாங்கள் ஒரு நாளின் 24 மணி நேரத்தில் பெரும் பகுதி ஒதுக்கி விட்டு, எங்கே உடல் நலனைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்துகிறீர்களோ என்ற பயத்துடன் தான் தயக்கமுடன் குறிப்பிடுகிறேன். குறிப்பிட்ட சில மணி நேரம் ஆழ்ந்த உறக்கம் இல்லா விட்டால், இரத்தத்தின் வெள்ளையணுக்கள் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற இயலாமற் போகும் என்று மருத்துவர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள் என்பதையும் எங்கள் அன்பு அண்ணன் அவர்களுக்கு பணிவுடன் நினைவூட்டுகிறேன்.

தங்கள்,

வேழவேந்தன்

உடன்பிறப்பே, இந்தக் கடிதங்கள் உணர்த்தும் உயிர்ப்புள்ள உண்மை என்ன? ஒரு தாய் வயிற்றில் பிறந்திட, நம் அத்தனை பேருக்கும் அத்தாயின் வயிற்றில் இடமில்லாத காரணத்தால், தனித்தனி தாய்களின் வயிற்றில் உதித்த உடன்பிறப்புகள் நாம்! என்று அண்ணா சொன்னதை நிரூபிப்பதுதானே அந்த உண்மை.

அன்புள்ள,

மு.க.

24-12-2003

3012. விருதுநகர் -
நமது அணியின் வெற்றித் திருநகர்!

உடன்பிறப்பே,

அண்மையில் நடைபெற்ற நான்கு மாநில இடைத் தேர்தல்களில், மூன்று மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அந்தச் சூட்டோடு நாடாளுமன்றத் தேர்தல் 2004 செப்டம்பருக்கு முன்னரே ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறக் கூடும் என்று ஒரு கருத்து பரவியதையொட்டி, செய்தியாளர்கள், பிரதமர் வாஜ்பய் அவர்களைக் கேட்டபோது, அதற்கு அவர், ஐந்தாண்டு முழுமையான தனது ஆட்சிக் காலம் நிறைவுற்ற பிறகுதான் தேர்தல் வருமென்றும், முன் கூட்டி தேர்தல் நடத்துவதற்கு உத்தேசமில்லை யென்றும் கருத்துப்பட விரைவில் வராது என்று விடை யளித்தார். ஒருமுறைக்கு இருமுறை!

பா.ஜ.க. வில் ஒருசாரார் நாடாளுமன்றத் தேர்தலை கூடிய விரைவில் நடத்திவிட வேண்டுமென்று எண்ணினாலுங்கூட, அதற்கு மாறாக பிரதமர் அவர்கள், ஏற்கனவே அறுதியிடப்பட்ட காலத்தில்தான் நடைபெறும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இன்று அவரது பிறந்த நாளையொட்டி, அவர் அளித்த பேட்டியில்,

அதற்குரிய நாளில்தான் தேர்தல் நடைபெறும் என்று முன்பு அறிவித்திருந்த அழுத்தம் குறைந்து, நாடாளுமன்றத்துக்கு விரைவிலும் தேர்தல் வரலாம், பின்னரும் வரலாம் என்றும், இப்போது தேர்தலுக்குச் சாதகமான சூழ்நிலை நிலவுவதாகப் பலர் சொல்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

ஏப்ரல், மே மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வந்தாலும் -

அல்லது அதற்கடுத்து நாலைந்து மாதம் கழித்து செப்டம்பரில் வந்தாலும் -

எதிர்பார்த்து அமைத்தது போல, தேர்தல் களத்தில் இறங்குவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடும் பாசறையாக, மார்ச் 5, 6, 7 ஆகிய நாட்களில் விருதுநகர் தென் மண்டல தி.மு.க. மாநாட்டில் நாம் கூடிட இருக்கிறோம்.

ஒருவேளை நமது அணியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் பட்டியலை அந்த மாநாட்டில் வெளியிட வேண்டிய வாய்ப்புக் கூட ஏற்படலாம்.

விழுப்புரம் மாநாடு நம்மை அறப்போர்க் களத்தில் அணிவகுத்திடச் செய்தது. விருதுநகர் மாநாடு சர்வாதிகாரத்தைப் புறங்கண்டிட, ஜனநாயகக் களத்திற்கு நம்மை அனுப்பிவைக்கும் மாநாடாக அமையுமானால், அது 75 ஆண்டுகளுக்குப் பிறகும் நமதியக்கம் கரத்திலேந்தித் தூக்கிப் பிடித்த சுயமரியாதைச் சுடரொளியை அணையாமல் பாதுகாத்து, அந்த ஒளியில் சூது, சூழ்ச்சி, மாயை, மயக்கம், அனைத்தையும் மக்களுக்கு அடையாளம் காட்டுகிற ஆற்றலுடன் விளங்குகிறது என்பதற்குத்தான் எடுத்துக்காட்டு!

அஃதென்ன? 75 ஆண்டு என்ற கணக்கு எனக் கேட்கத் தோன்றும்!

ஆம், 75 ஆண்டுகளுக்கு முன்புதான் 31-3-1928 அன்று இதே விருதுநகரில் சுயமரியாதை வீரர்களும், தளகர்த்தர்களும் பங்குகொண்ட மாநாடு நடைபெற்று, அதைத் தொடர்ந்து மாகாண சுயமரியாதை மாநாட்டை அடுத்த ஆண்டு 1929ல் பிப்ரவரி 17 அன்று செங்கற்பட்டு நகரில் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டு, அந்த மாநாட்டில் பெரியாரும், பி.டி. ராஜன், டாக்டர் சுப்பராயன், டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன், பனகல் அரசர், டாக்டர் ஏ.ஆர். முதலியார், ஜே.எஸ். கண்ணப்பர், சுரேந்திரநாத் ஆர்யா - ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது வரலாறு. அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக அந்த மாநாட்டுத் தீர்மானங்களில் முக்கியமான சிலவற்றை - பெண்களுக்கு சொத்துரிமை போன்றவற்றை 60 ஆண்டுகளுக்குப் பிறகு, 1989ல் நான் முதல்வராக இருந்தபோது, சட்டமாக்கி நிறைவேற்றினேன் என்பதை நீ அறிவாய்!

செங்கற்பட்டு சுயமரியாதை மாநில மாநாட்டுக்கு, கால்கோள் விழா நடத்தியது விருதுநகர் மாநாடு!

முக்கால் நூற்றாண்டுக்கு முன்பு!

1928 மார்ச் திங்களில்!

இப்போதும் சுயமரியாதை உணர்வின் சூடு தணியாமல் - அந்தக் கனல் அணையாமல் காத்திடும் நமது கழகத்தின் மாநாடு, அதே மார்ச் திங்களில் தான்!

மார்ச் என்பது மாதத்தை மட்டுமல்ல! MARCH - ஆங்கிலத்தில் ஒரு கட்டளைச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுவது! ஆம்! அணி வகுத்திடு என்று ஆணையிடும் சொல் - அன்புடன் அழைத்திடும் சொல்!

விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்கள், நாடு தழுவிய பல பிரச்சினைகளை - பல கோரிக்கைகளை உள்ளடக்கியவை!

மாநில மத்திய அரசுகளால், அவை நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றிட முனையவுமில்லை. குறைந்தபட்சம் நினைத்திடவும் இல்லை.

அவற்றை பா.ம.க.வின் செயற்குழுவும் பட்டியலிட்டிருப்பதை பார்த்திருப்பாய்!

அவற்றை நமது அணி நிறைவேற்ற முனையும் என்பதே, நாடாளுமன்றத் தேர்தலுக்காக நாம் விருதுநகர் மாநாட்டில் வெளியிட இருக்கும் தேர்தல் பிரகடனமாக இருக்கும். விழுப்புரத்தில் வெளியிடப்பட்டது தீர்மானம்!

விருதுநகரில் வெளியிடயிருப்பது தேர்தல் அறிக்கை!

தமிழைச் செம்மொழியாக்கி மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக்குவோம்!

தீவிரவாதம் வீழ்த்துவோம்!

அதனினும் தீதான பொடா, எஸ்மா, டெஸ்மாவிற்கு விடை கொடுப்போம்!

காவேரி ஆணையம் - செம்மையாகச் செயல்படுத்துவோம்!

கண்ணீர் சிந்தும் விவசாயிகள், நெசவாளர்களின் துயர் துடைப்போம்!

சாதிமத சனியனை மாய்ப்போம்!

சிறுபான்மையோர் உரிமை காத்து, சகல பிரிவு மக்களுக்கும் சரிநிகர் சமவாழ்வு வழங்குவோம்!

அந்த அறிக்கையில் இப்படி இன்னும் பல இடம் பெறவும் கூடும்.

இவ்வாறு, எதிர்பாராத வாய்ப்பாக அமைய இருக்கும் விருதுநகர் மாநாட்டை, வரவேற்புக் குழுத் தலைவர் பொறுப்பேற்று தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்,

தம்பிகள் பரமக்குடி தங்கவேலன், நெல்லை ஆவுடையப்பன், தூத்துக்குடி பெரியசாமி, சிவகங்கை பெரியகருப்பன், கன்னியாகுமரி சுரேஷ்ராஜன்

ஆகியோர் அருந்துணையுடன் நடத்திக்காட்ட, நடைபோடத் தொடங்கி விட்டார்.

தென் மண்டல மாவட்டக் கழகங்களின் திறன்மிகு தீர்கள் திரண்டிடுவீர் –

தேர்தலுக்கு நிதி வழங்கிட அழைத்தபோது திண்தோள் மறவர்களாம் –

மானமிகு மாவீரர்களாம் –
உன்போன்ற உடன்பிறப்புகளை வெள்ளமாக –

பெருங்கடலாக –
வந்த இடமெல்லாம் சந்தித்தேன்.
மீண்டும் வாய்ப்பு வருகிறது சந்திப்பதற்கு –
அந்தச் சந்திப்பை வழங்கப் போவது,
விருதுநகர்!
நமது அணியின் வெற்றித் திருநகர்!

அன்புள்ள,

மு.க.

27-12-2003

3013. பத்திரிகை சுதந்திரமும் பத்திரிகா தர்மமும்!

உடன்பிறப்பே,

முற்போக்குக் கொள்கை கொண்ட கட்சிகளின் தலைவர்கள், அவர்களது மேடைப் பேச்சுகளிலும் - நிருபர்களுக்கு அளித்த பேட்டிகளிலும் - திராவிட முன்னேற்றக் கழகம், மத்திய அமைச்சரவையிலிருந்தும், பா.ஜ.க. தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்தும் வெளிவர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்ததைப் பெருந்தலைப்புச் செய்திகளாக வெளியிட்டு, அந்தப் பரபரப்புச் செய்திகளால் பத்திரிகை வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டவர்கள், இப்போது தி.மு. கழகம் மத்திய அமைச்சரவையை விட்டும் - தேசிய ஜனநாயகக் கூட்டணியை விட்டும் அமைதியாகவும் அரசியல் பண்பாடு காத்தும் விலகிக் கொண்டுள்ள நிலையில், இதையும் தங்கள் இதழ் வணிகத்துக்காகவே பயன்படுத்திட திட்டமிட்டு அவர்கள் விருப்பத்துக்குச் செய்திகளை வெளியிடத் தொடங்கி விட்டார்கள்.

பத்திரிகை சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டு மென்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அதேநேரத்தில் பத்திரிகா தர்மம் என்பதையும், பத்திரிகைகள் பாதுகாத்திடுவதைக் கடமையாகக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று என் போன்றோர் எதிர்பார்ப்பது தவறில்லை அல்லவா?

ஆனால் அப்படிச் சொல்லப்படும் பத்திரிகா தர்மத்துக்கு மாறாக, ஏடுகள் பலவற்றில் அடித்தளமே ஆட்டம் காணும் வண்ணம் அமைத்துவிட்டு, அதன் மீது அடுக்கு மாளிகைகளை எழுப்பி, அத்தனையும் பொய்யாகி இடிந்து விழும் செய்திகளால் இவர்கள் ஒன்றும் வெட்கப்படாமல், வேதனைப்படாமல், அது வேறு யார் மீதோ விழுந்தது என்று சமாளித்துக் கொள்கிறார்கள்.

இதோ ஒரு செய்தித் துணுக்கு, சிரிப்புத்தான் வந்தது படித்துப் பார்த்தபோது எனக்கு!

அதிர்ச்சியில் தி.மு.க. என்று தலைப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட அந்தச் செய்தி வருமாறு :-

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் இருந்து, தி.மு.க. வெளியேறிய சூட்டோடு சூடாக, பா.ம.க.வும் வெளியே வந்துவிடும் என்று தி.மு.க. வினர் கனவு கண்டனர். ஆனால், மத்திய ஆட்சியில் பா.ம.க. தொடர்ந்து நீடிக்கும் என்று ராமதாஸ் அறிவித்ததில் தி.மு.க. தலைமை அதிர்ச்சி அடைந்துள்ளது. இதுவரை தி.மு.க.வோடு எல்லா விஷயங்களிலும் தோளோடு தோளாக இருந்த பா.ம.க., கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் செல்லவே இந்த முடிவை எடுத்துள்ளது என்று அறிவாலயத்தில் இரு தி.மு.க. தொண்டர்கள் குமுறிக் கொண்டிருந்தனர்

உடன்பிறப்பே, தி.மு.க. வில் அதிர்ச்சி - தி.மு.க. தொண்டர்கள் குமுறல் - தி.மு.க.வை விட்டு பா.ம.க. விலகிச் செல்ல முடிவெடுத்துள்ளது -

இப்படியொரு துணுக்கு தினமலர் ஏட்டில் வந்திருந்தால், இன உணர்வு கொடிகட்டிப் பறக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருப்பேன். அது துணுக்கு அல்ல, துடுக்கு என்ற முடிவுக்கு வந்திருப்பேன். உண்மையும் அதுவாகத்தானிருக்கும். ஆனால் அந்தப் பத்திரிகையில் வந்ததல்ல இது, இத்துணுக்கு வந்தது தினத்தந்தி இதழில்!

ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத்தான் அந்த ஏட்டில் பக்கம் பக்கமாகச் செய்திகள் வருமே தவிர, எப்போதுமே எதிர்க்கட்சிகளைப் பற்றிய விமர்சனங்கள் வெளிவருவதில்லை. ஒருவேளை அந்த ஏட்டில் எதிர்க்கட்சி செய்திகள் சிறிதாக வரலாம் - அல்லது வராமலே இருக்கலாம்.

ஆனால் அதற்கு மாறாக, விஷமத்தனமான விமர்சனங்களோ - செய்திகளோ வருவதில்லை.

இப்போது வந்துவிட்டதே என்பதுதான் எனக்கு வியப்பளிக்கக் கூடியதாக இருக்கிறது. விரும்பத்தகாத செய்தியொன்று வெளிவந்துள்ள நிலையில், அது பற்றி விளக்கமளிக்க வேண்டியது என் கடமையல்லவா!

தி.மு.க.வைத் தொடர்ந்து பா.ம.க.வும், மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியே வந்துவிடும் என்று நான்

கனவு கண்டதாக தினத்தந்தி சொல்வதில் எள்முனையளவு உண்மையுமில்லை. தி.மு.க. உயர்நிலைச் செயல் திட்டக் குழுவில் தீர்மானித்து தம்பிகள் பாலு, ராஜா இருவரும் மத்திய அமைச்சரவையிலிருந்து விலகிய அன்றைய தினமே செய்தியாளர்கள் கூட்டத்தில் கேட்கப்பட்ட சில கேள்விகளும் நான் அளித்த பதில்களும் ஏடுகளில் வெளிவந்துள்ளதை நினைவூட்ட விரும்புகிறேன்.

நிருபர் கேள்வி :- உங்களோடு சேர்ந்து ம.தி.மு.க.வும், மத்திய அமைச்சரவையிலிருந்து விலகி வர வாய்ப்பு இருக்கிறதா?

மு.க. :- தெரியாது.

தெரியாது என்று பதில் அளித்திருக்கிறேனே தவிர, ஆமாம். எங்களுடன் அவர்களும் சேர்ந்து விலகுவார்கள் எனக் கனவு காண்கிறேன் என்று நான் சொல்லவில்லை.

ம.தி.மு.க. மற்றும் பா.ம.க.வுடன் இதுபற்றிப் பேசப்பட்டதா? என்று நிருபர்கள் கேட்டதற்குக் கூட, நான் அளித்த பதில், அவர்களோடு கலந்து பேசக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. நாங்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். காரணம் நாங்கள் தமிழக பா.ஜ.க.வின் பேச்சுகளாலும், அவர்கள் பேட்டிகளாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதாகும். இந்தப் பேட்டி 21-12-2003 ஏடுகளில் வெளிவந்துள்ளது.

அடுத்து 27-12-2003 ஏடுகளில் வெளிவந்த என் பேட்டி **விபரமாவது :-**

நிருபர் :- மத்திய அமைச்சரவையில் நீடிப்பதென்று பா.ம.க. எடுத்துள்ள முடிவு நீங்கள் எதிர்பார்த்ததுதானா?

மு.க. :- எந்த முடிவையும் நான் எதிர்பார்க்கவில்லையே! தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. பாதிக்கப்பட்ட கட்சி. தமிழக பா.ஜ.க.வினரின் பேச்சுகளால், நடவடிக்கைகளால், இடைத் தேர்தல் நேரத்தில் அவர்கள் கையாண்ட முறைகளினால் கொள்கைகளுக்கு முரணாக அவர்கள் நடந்து கொண்டதால், தேசிய அளவில் கூட்டணி உருவாகும்போது எழுதப்பட்ட செயல்திட்ட ஒப்பந்தத்தை மீறியதால் தமிழ்நாடு பா.ஜ.க.வுடன் எங்களுக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஆனால், பா.ம.க. பாதிக்கப்படாதது. பாதிக்கப்பட்டது நாங்கள்தான் என்ற முறையில் நாங்கள் எங்கள் கட்சி சார்பில் முடிவெடுத்தோம். அதே மாதிரி

பா.ம.க.வும் முடிவினை எடுக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கவும் இல்லை. அப்படி வற்புறுத்தவுமில்லை.

உடன்பிறப்பே,

இந்த எனது இரண்டு பேட்டிகளிலும் பா.ம.க.வும் அமைச்சரவையிலிருந்து விலகி வந்துவிடும் என்று நான் கனவு காண்பதாக ஏதாவது ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறேனா? - பிறகு ஏன்? தினத்தந்தி நான் கனவு கண்டதாகவும் - பா.ம.க. முடிவு கண்டு அதிர்ச்சி அடைந்ததாகவும், அறிவாலயத்தில் தொண்டர்கள் குமுறிக் கொண்டிருப்பதாகவும், காதில் கேட்டவை என்ற பெயரால் கயிறு திரிக்க வேண்டும்!

தினத்தந்தி பெரிய பத்திரிகை ஆயிற்றே - சிறிய, சில்லறை, சில்லுண்டி பத்திரிகைகள் செய்யக் கூடிய காரியத்தை தினத்தந்தி செய்யலாமா?

உடன்பிறப்பே,

தி.மு.க. எடுத்துள்ள முடிவையொட்டி வலுவான அணியொன்று அமையப் போகிறது என்பதும் - அந்த அணி நாடாளுமன்றத் தேர்தலிலும், அடுத்து வரும் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலிலும் ஜனநாயகப் பதாகையை உயர்த்திப் பிடித்து,

சர்வாதிகாரத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கும் என்பதும் -

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தெரிவதால், அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இன்றைய ஆளுங்கட்சியினர் இப்படியெல்லாம் பொய்ப் பிரச்சாரங்களைத் தூண்டி விட்டுக் கலகம் செய்திடத் தூண்டில் போடுகின்றனர். ஏடுகளுக்கு!

ஏடுகளும் வீணே ஏமாற வேண்டாம் -

அந்த ஏடுகளின் பிரச்சாரத்தினால், மக்களும் ஏமாந்து விட வேண்டாம்.

எனவே உன்போன்ற உடன்பிறப்புகள், இதில் உரிய கவனம் செலுத்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

29-12-2003

3014. தோள் உயர்த்தி, சூள் உரைப்போம்!

உடன்பிறப்பே,

புத்தாண்டு வாழ்த்துக்களுடன் உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் நன்றிப் பெருக்குடன் நான் தீட்டும் மடல் இது!

வாழ்த்து சரி; வழங்கிடும் நன்றி எதற்காக; என்று கேட்பாய்!

மகிழ்ச்சியில் பங்கு கொள்ள மக்கள் கடலே பெருகிடும்; மனத் துயரில் ஒருங்கிணைந்து ஆறுதல் தந்திட மனித நேய உணர்வு மட்டும்தானே முன் வரும்!

அந்த உணர்வினை நிரம்பப் பெற்று என்னை இன்னமும் தேற்றிக் கொண்டேயிருக்கும், உன் போன்றோர்க்கு நன்றி கூறுதல் என் கடமையல்லவா?

உன் போன்றோர்க்கும் எனக்குமுள்ள உறவு பூர்வமான கடமைகளுடன், நாம் எல்லாம் ஓரணியில் நின்று ஆற்றிட வேண்டிய கடமைகளும் நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன.

நாம் ஈடுபட்டுள்ள பொது வாழ்வில் நாமாக ஏற்றுக் கொள்ளும் பணிகளும் உண்டு, நம்மீது திணிக்கப்படும் பொறுப்புக்களும் உண்டு.

நாமும் சேர்ந்து கட்டிய வீட்டில் நாமிருத்தலாகாது என வீடு கட்டி முடித்த நாள் முதலே சில விஷ ஜந்துக்கள் நம்மைத் தீண்டிக் கொண்டேயிருந்தன.

வீட்டுக்குரிய பங்குதார்கள், பெரும்பான்மையினர் அதிலும் சிறுபான்மையோராக நாம் இருந்த காரணத்தால்; நம்மைப் பாதுகாக்கவோ - நமக்காக வாதாடவோ - உண்மையை உரக்கச் சொல்லவோ அவர்கள் தயங்கியது கண்டோம் - ஏன்; அவர்கள்

தர்ம சங்கடத்தில் நெளிய வேண்டுமெனக் கருதி; நாம் அந்த வீட்டில் அவர்களே இருக்கட்டுமென்று; விஷ ஜந்துக்களிடமிருந்து விடுபட்டால் போதுமென வெளியேறி விட்டோம்.

அதனால் அங்கு நல்லோர் சிலருக்கு வருத்தம்தான் - நம்முடன் நமது தம்பியும் சேர்ந்து அதே முடிவு எடுத்துவிட்டதால் கோபங்கூட இருக்கும்! என் செய்வது? கோபத்தையும் வருத்தத்தையும் பார்த்தால் கொள்கை கோட்பாடுகள் பறிபோவதை வேடிக்கை பார்த்தவர்களாகி விடுவோமே! அடுத்தடுத்து வருகின்ற தலைமுறைகளின் சாபத்திற்கு ஆளாக நேரிடுமே!

ஆயிரங்காலத்துப் பயிர் இதுவென்று இந்த இயக்கத்தை நமது முன்னோர்கள் வாழ்த்தியல்லவா வளர்த்து நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்தப் பயிருக்குப் பாதிப்பு ஏற்படுவதைப் பார்த்துக் களிக்க முடியுமா?

அதற்காகத்தான் அரசியல் வேலியை ஒழுங்குபடுத்தி, உறுதிப்படுத்தி -

அந்த வேலிக்குள் அமைந்துள்ள பகுத்தறிவு - சமதர்ம - சமத்துவ - மனிதநேய - மதச் சார்பற்ற - மலர்கள் குலுங்கிடும் தோட்டத்தைப் பாதுகாத்திட தொடர்ந்து முனைகிறோம்.

அந்த முயற்சியில் தொய்வு ஏற்படாமல் எப்போதும் எச்சரிக்கையாகவே இருக்கிறோம்! இருப்போம்! இருக்கவேண்டும் என்பதற்காகவே;

விளைவுகளைப் பற்றிய வீண் கவலையின்றி விழிப்புணர்வு கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் செயல் ஒன்றே வெற்றி முகடு என எண்ணித் தொண்டாற்றுகிறோம்.

நம் எண்ணம் ஈடேறக் கூடாது என்பது ஒன்றிலேயே நாட்டம் கொண்டோர்;

நாடு எப்படி நலிந்து குலைந்து போனாலும் அக்கறையில்லை என நினைப்போர்;

ஆணவமே அரசு நடத்தட்டும் -

அநீதியே ஆதிக்கம் செலுத்தட்டும்;

அராஜகமே ஆட்டம் போடட்டும் என விரும்புவோர் -

இந்த இயக்கம் தலை எடுத்துவிடாமல் தடுத்தால் போதுமென்றே தவம் கிடக்கின்றனர்.

அதற்குத் தக்க செய்திகளை "தவறு" என்று தெரிந்தும் தண்டோரா போடுகின்றனர்.

நமது இயக்கம் - நமதியக்கத்துடன் நட்புறவு கொள்ளும் நல்லியக்கங்கள் அனைத்தையும் நச்சுப் பல் கொண்டு தீண்டுகின்றனர்.

நயவஞ்சகத்தால் சீண்டுகின்றனர்.

நாம்; இந்தப் புத்தாண்டு புதுநாளில் அவர்களை அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தெரியும் அடையாளத்தை மற்றவர்கள் தெளிவடையும் வண்ணம் விளக்க வேண்டும்.

திரைமறைவு சூழ்ச்சிகளைப் பொசுக்க வேண்டும்.

தினவெடுக்கும் தோள் உயர்த்தி -

"வெற்றி! வெற்றி!"

எனச் சூள் உரைக்க வேண்டும்.

சன் தொலைக்காட்சியில் இரண்டு மெகா தொடர்கள் நடைபெறுகின்றன.

ஒன்று அண்ணாமலை!

மற்றொன்று குங்குமம்!

அண்ணாமலை தொடரில், அண்ணாமலையைச் சுற்றியிருப்போர் அவளிடம் பற்று, பாசம் கொண்டவர்கள் - அதைக் கெடுப்பதற்கென்றே கோமதி நாயகம் என்ற ஒரு வில்லன் - அண்ணாமலையைப் பற்றி ஏதாவது குற்றம் குறை சொல்லாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது - அவனது அந்த அபாண்டங்களை அந்த வீட்டார் நம்பி அண்ணாமலை மீது வெறுப்புக் கொள்கின்றனர்.

அதேபோல 'குங்குமம்' தொடரில் 'சாரு' என்ற ஒரு பெண்மணி - நற்குணவதி - குடும்பம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமெனப் பாடுபடுகிறவள். வந்து நுழைகிறாள் ஒரு வசீகர மங்கை - அந்தப்

பாத்திரத்தின் பெயர் சுகந்தி - பலே பம்மாத்துக்காரி - பாசமுள்ளோர் நிறைந்த குடும்பத்தைப் பகைக் கோட்டமாக்குகிறாள்.

ஆனால் இரு தொடர்களின் முடிவு என்னவாக இருக்கும்? வில்லன் வேடமும் வில்லி வேடமும் கலையும் - நல்லவர்கள் நலம் பெறுவர்.

இதுதான் நம்மை வீழ்த்த நினைப்போர்க்கும் முடிவாக இருக்கும்.

அன்புள்ள,

மு.க.

2-1-2004

3015. வளர்பிறை எழுத்தழகர்கள் வளர்க வாழ்க!

உடன்பிறப்பே,

வளர்பிறைக் கவிஞர்களுக்கு வாழ்த்து எழுதிப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டுகிறேன் என்றதும்; இளம் எழுத்தாளர் வரிசையொன்றே எறும்பு வரிசையென என்னை நோக்கி வரத் தொடங்கி விட்டது.

பாராட்டுவதற்கு அவர்களும் பணம் கொடுக்கப் போவதில்லை; நானும் கேட்கப் போவதில்லை. கேட்டதும் இல்லை. அவர்கள் தமிழில் காட்டும் அற்புதங்கள் - தமிழால் நெய்திடும் கற்பனைகள் - அவற்றைச் சுவைத்திடும் இன்பம் நான் பெறுவதும்; அந்த இன்ப உணர்வில் எழும் பாராட்டினை ஊக்கம் தரும் பழரசமாக அவர்கள் பருகிடுவதும்; சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு சக்தியூட்டி நம்பிக்கை அளிக்கும் என்பதாலேயே அவர்களைக் கனிவுடன் தட்டிக் கொடுக்கிறேன்.

இதோ என் உள்ளங்கை அகலம் கூட இல்லாத ஓர் ஏடு - 16 பக்கங்களுக்கும் குறைவு - கடுகை விடச் சிறிய எழுத்துக்களால் ஒவ்வொரு பக்கமும் நிரம்பி யிருக்கிறது. ஏற்றாற்போல ஏட்டின் பெயரே "தமிழ் அணு" என்று வைக்கப்பட்டுள்ளது. புத்தகமா அல்லது திங்கள் இதழா என்பதற்குக் குறிப்பு எதுவுமில்லை. இதனை நண்பர் சின்னக்குத்தூசி அவர்கள்தான் என்னிடம் வழங்கினார். முதல் பக்கமே "ஜன நாயகம்" என்ற தலைப்பில் சுமார் 10 அல்லது 12 வரிகள் -

> "54 வயதாகும் இந்த இந்திய நோயாளியை ஆட்சி, அதிகாரம், மதம், ஜாதி, பணம் என பல நோய்க் கிருமிகள் தாக்கியுள்ளன. கடந்த 13 ஆண்டுகளாக பன்னாட்டு பக்கவாதம் நீடிக்கிறது. தற்போது மிகக் கொடூரமான 'பொடா' கிருமி தாக்கியுள்ளது.

போலி மருத்துவர்களின் சிகிச்சை யால் நிலைமை கவலைக்கிடம்.

தேர்தல் எனும் செயற்கை சுவாசத்தால் உயிரோட்டம் நீடிக்கிறது.”

புத்தாண்டில் நம்பிக்கை’ சிகிச்சையைத் தொடங்குவோம்.”

அடுத்து ஒரு பக்கத்தில்; முரசொலி மாறனைப் பற்றிய குறிப்பு:

“தோஹா நகரில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் (2001) ஆற்றிய உரை யினால் கனத்த சிந்தனைக்குரியவராக கருதப்படும் மாறன் தேடிய அறிவையும், கிடைத்த வாய்ப்புகளையும் திறமையாகப் பயன்படுத்திய வாழ்க்கைக்குரியவர்”

என்பதைப் படித்துவிட்டு; மறுபக்கம் பார்த்தால்,

“அரசு சொத்து” என்ற தலைப்பில் பின்வரும் செய்தியும், கேள்வியும்.

“டான்சி நில பேரம் தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்துள்ள உச்ச நீதி மன்ற நீதிபதிகள், டான்சி நிலம், அரசு நிலமல்ல எனத் தெரிவித்து ஜெய லலிதாவை விடுவித்துள்ளனர். தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தின்கீழ் வரும் டான்சியின் நிலம் அரசு சொத்து அல்ல என்றால், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப் பாட்டில் உள்ள பேருந்துகளும் அரசு சொத்து ஆகாதே! அப்புறம் ஏன் பேருந்தின்மீது கல்லெறிபவர்கள் மேல், அரசு சொத்துக்கு சேதம் விளைவித் தார்கள் என்று வழக்கு போடு கிறார்கள்?”

உடன்பிறப்பே,

இந்த அழகிய சிறு ஏட்டில் “லெ” எனும் பெயரில் எழுதிய ஒரு சிறுகதை “பெத்த மனசு” என்ற தலைப்பில் சுமார் 20 வரிகளில் அமைந்துள்ளதுதான் என் உள்ளத்தைக் கவர்ந்தது மிகவும்!

இதோ அந்தக் கதை :

“போய்த் தொலையேண்டி கெழவி” விலாவில் உதைத்து வெளியே தள்ளினாள் மருமகள். மூத்த மகன்

பார்த்துக் கொண்டே நின்றான். செல்லாத்தா கிழவி புலம்பிக் கொண்டே தெருவில் நடந்தாள். மூணு தெரு தள்ளியிருக்கிறது இரண்டாவது மகன் வீடு.

தெருமுனையில் செல்லாத்தா வருவதைப் பார்த்ததுமே, கதவை தாழ் போட்டுக் கொண்டான் அவன். மூன்றா வது மகனை சாராயக் கடையில்தான்

அவள் தேட வேண்டும். அனாதையாக தெருவில் நின்றாள் கிழவி.

"ஏம்மா இந்த வயசிலே சீரழிஞ்சி சின்னப்படுறே. வூட்டுக்கு வந்து, ஒரு வாய் சாப்பிட்டு போம்மா" - தாங்கிப் பிடித்து கூப்பிட்டுச் சென்றாள் கிழவி யின் ஒரே மகள். "இந்த சிறுக்கி மவள, கள்ளிப்பால் கொடுத்து கொழந்தையிலேயே சாவடிக்கப் பார்த்தேனே.... ஊரே கேட்க, அரற்றியபடி நடந்தாள் செல்லாத்தா." -

"துளித் தீ போதும் இருள் எரிக்க" என்ற நெருப்புப் பொன்மொழியை நெற்றியில் தீட்டிக் கொண்டு என் கரங்களில் தவழ்ந்து, கருத்தில் ஒன்றிய, இந்த ஏட்டின் ஆசிரியர் கோவி. லெனின் என அறிகிறேன். நேரில் கண்டதில்லை. தமிழர் இல்லம் - 2282 பாரதி நகர், மங்கலம் - 606752 - திருவண்ணாமலை மாவட்டம் என்பது முகவரி என்று குறிப்பிட்டிருப்பதால் - இந்தத் "தமிழ் அணுவைத் தாராளமாக அணுகலாம்.

உடன்பிறப்பே,

கண்ணகி எனும் பெண்மணி, எம்.ஏ. பட்டதாரி; "அரவாணி' பற்றி ஒரு கதை எழுதி; "திரிசங்கு பூக்கள்" எனத் தலைப்பிட்டு; அணிந்துரைக்காக கையெழுத்துப் பிரதியை எனக்கு அனுப்பியுள்ளார்.

அத்துடன் இணைத்துள்ள கடிதத்தில், இந்தக் கண்ணகி, குழந்தையாக இருந்தபோது நான் பெயர் சூட்டிய செல்வி - தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் விதம் காண்க.

"தள்ளாடும் எண்பதிலும் துள்ளாட்டம் போடும் உம் எழுத்து திறன் நா பிறழா உச்சரிப்பு கண்டு வியந்து..... நீர் இட்ட பெயர் கொண்டு..... சிரம் தாழ்த்தி....கை கூப்பி வணங்கும்

கண்ணகி”

என எழுதிவிட்டு, மேலும் தொடர்ந்து எழுதும்போது,

“அரவாணிகள் என்றொரு சமூகம் போராட்டத்தின் அடிமட்டத்திலேயே கேலி பேசப்பட்டு கிடக்கிறது. அவர்களைப் பற்றிய புத்தகம் என்று அவர்களின் உடல் மாற்றம், செயல் மாற்றம் பற்றி எழுதி வரும் எழுத்தாளர்கள் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை கையில் எடுக்க விரும்புவதில்லை.

இந்தச் சமூகத்திற்கு என் போன்ற முகம் தெரியாத ஒரு எழுத்தாளர் முகாந்திரம் கொடுப்பதைவிட தமிழ்ச் சமுதாயத்தின் முகவரியான தாங்கள் அணிந்துரை கொடுத்து அணி செய்தால் அது நிச்சயம் ஒரு தீர்வுக்கு வழிவகுக்கும் என்பதாலேயே தங்களின் பார்வைக்கு இந்தக் கதையை வைக்கிறேன்.

வளர்ந்த கவிப் பேரரசிற்கு மாத்திரம் கருணாநிதியின் ‘மை’ விழிகள் நீர் சிந்தாமல், என் போன்ற புரட்சிக் கருத்து கொண்டவர்களின் குரலுக்கும் செவி கொடுக்கும் என்பதை தாங்கள் நிருபிக்க வேண்டும் என்பதே என் வேண்டு கோள்.”

கண்ணகியின் விருப்பத்தை விரைவில் நிறை வேற்றுவேன்; வேலைப் பளு சற்று குறைந்தவுடன்!

இதற்கடுத்து “கண்களில் நகலெடுத்து” என ஒரு எழில்மிகு நூல் - எழுதியவர் சி. பொன்னுசாமி எனும் என்னருந்தம்பிகளில் ஒருவர்.

தொடக்கத்திலேயே மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தலைப்புகளில் - ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு கவிதை - அவரது தாயைப் பற்றி ஒரு கவிதை - தந்தை தன்மான இயக்கச் செம்மல் என ஒரு கவிதை - குரு என்ற தலைப்பில் என்னைப் பற்றி ஒரு கவிதை - மூன்று பக்கங்களும் முடிந்த பிறகு “தெய்வம்” பற்றிய கவிதை எழுதியிருப்பார் என்று பக்கத்தைப் புரட்டினால் - வெறும் வெள்ளைக் காகிதம் - அதில் ‘தெய்வம்’ என்ற தலைப்பு மட்டுமே! - எத்தனை அர்த்தங்கள் அதற்கு - அடடா, என்னே

கற்பனை - இந்த நூலில் இவர் தீட்டியுள்ள "இரு கை கொடு" என்ற தலைப்புள்ள கவிதையில்;

"நீ
பூமியை
புரட்ட வேண்டாம்
பூகம்பத்தை
விரட்ட வேண்டாம்.
மரிக்கும் வரையிலாவது
மனிதனாய்
இருக்கலாம் வா."

உடன்பிறப்பே,

ஊக்கப்படுத்த -
உற்சாகப்படுத்த -
இந்த எழுச்சிமிகு எண்ணங்கள் -
உண்மையிலே புரட்சிகரமான கருத்துகள் -
பரவுதற்குப் பயன்படட்டும் என்றே -

பகுத்தறிவுவாதியாகிய நான் இந்தப் பொது நலம் கொள்கைகள் எங்கும் சென்று வென்றிட வேண்டுமென்ற சுயநலத்துடன் இவர்களையெல்லாம் போற்றிப் புகழ்ந்துள்ளேன்; இனியும் புகழ்வேன், இளம்பிறைகள், நிலவுகளாக ஒளி விடட்டுமென விழைந்து!

அன்புள்ள,

மு.க.

09-01-2004

3016. உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

உடன்பிறப்பே,

சென்னையில் அண்ணா அறிவாலயத்தில், “கலைஞர் கருவூலம்” என்ற பெயரில் திராவிட இயக்க வரலாற்று நிகழ்ச்சிகளையும், விளக்கங்களையும் - புகைப்படங்கள் வாயிலாகவும் - திரையில் காணக் கூடிய குறும் படங்கள் வாயிலாகவும் - கண்டு மகிழ்ந்து திராவிட இன உணர்வு பெறுகிற வாய்ப்பினை உன் போன்ற உடன்பிறப்புகளும், மாணவ மணிகளும், ஆன்றோர் சான்றோர்களும் தொடர்ந்து நூறு நாட்களாகப் பெற்று வருகின்றனர். இந்த நிரந்தரமான வரலாற்றுக் கருவூலத்தைக் காண தொலை தூரத்திலிருந்தும் ஆர்வலர்கள் வந்தவண்ண மிருக்கிறார்கள்.

கருவூலம் எப்படி எழிலுற அமைந்துள்ளதோ அதைப்போலவே, அண்ணா அறிவாலயத்தில் இயங்கி வரும் பேராசிரியர் ஆய்வு நூலகமும் - இன்னும் பேரழகுடன், சென்னையில் உள்ள நூலகங்களுடன் போட்டி போடும் அளவுக்கு அதுவும்கூட தம்பி மு.க. ஸ்டாலின் முயற்சியினால் அமைந்து வருகிறது.

உனக்கோர் மகிழ்ச்சியான செய்தி சொல்ல வேண்டும்.

கடந்த 100 நாட்களில் 11,227 பார்வையாளர்கள்! ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக இந்தக் கருவூலம் கண்டுள்ளனர் என்று புள்ளி விபரம் தந்துள்ளார் தம்பி உமாபதி - எனக்கு மெத்தவும் பூரிப்பை வழங்குகிறது இந்த விபரம்!

கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள இயக்க நூல்கள் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல், சரியாகச் சொன்னால் ரூபாய் 1,09,585க்கு விற்பனையாகியுள்ளது என்பது, புத்தகம் படிப்பதில் அதுவும், நமது கருத்தமைந்த நூல்களைப் படிப்பதில் இயக்கத்தின்

இளைஞர்களுக்கு எத்துணை ஆர்வமும், எழுச்சியும் ஏற்பட்டுள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டு என்றே கொள்ள வேண்டும்.

கருவூலம் கண்ட சான்றோர், திரும்பத் திரும்ப சிலர் வருகின்றனர் என்பது மட்டுமல்ல; பார்வையாளர்கள் வருகை ஏட்டில் அவர்கள் எழுதியுள்ள பாராட்டு மொழிகளும் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்போரைப் பெரிதும் ஊக்கப்படுத்தி உற்சாகமூட்டுகின்ற வகையில் அமைகின்றன.

கருவூலத்தை மட்டுமல்ல; இப்போது அண்ணா அறிவாலயத்தை நீ வந்து பார்த்தால் ஆச்சரியத்தில் மூழ்கிப் போவாய்!

ஏற்கனவே "கலைஞர் அரங்கம்" தம்பி முரசொலி மாறனின் முழுக் கவனமும் செலுத்தப்பட்டு சித்திரக் கூடமாக - சிங்கார மண்டபமாக - விழா நடத்துவோர் விரும்பிக் கேட்கும் இடமாக சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது நீ வந்து பார்த்தால் - கருவூலம், உன் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நம் இலட்சிய வரலாற்றினை விளக்குகிறது.

பேராசிரியர் பெயரால் அமைந்துள்ள ஆய்வு நூலகம், புத்தெழில் பெற்று அறிவுச் சுரங்கமாக ஆர்த்தெழுந்து நிற்கிறது.

வெற்றிச்செல்வி அன்பழகன் இலவசக் கண் மருத்துவமனையில், விழியொளி பெறவும் - பெற்றிருக்கும் ஒளி செம்மையுறவும் - திறமை பெற்ற மருத்துவர்களால் தினந்தோறும் சேவை நடைபெறுகிறது.

அறிவாலயத்தில் கழகப் பணி ஆற்றிடும் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர் முதலிய செயலாற்றுவோர் அனைவருக்கும், தனித் தனி அலுவல் அறைகள் - அத்தனையும் புதுமைப் பொலிவுடன்!

உயர்நிலைக் குழுவினர், மாவட்டச் செயலாளர்கள் எனக் குழு கூட்டங்கள் நடத்திட முரசொலி மாறன் வளாகத்தில் வாய்ப்பான ஒரு பெருங்கூடம் பெருமிதமான அமைப்புடன்!

அழகிய நீரூற்றுகள் சுற்றிலும் சுழன்றிட, நம்மை ஆளாக்கிய அறிஞர் அண்ணாவின் சிலை - அவர் நினைவாக பொலிவு மிகு பூங்கா - அவர் பெயரால் உடற்பயிற்சிப் பாசறை -

இத்தனையும் அகலக் கண் விழித்து, ஆனந்தம் உள்ளத்தில் பதித்து, நீ வந்து காணும் போது உன்னை நான் கண்டு, வீட்டுக்கு வந்த விருந்தாகவா எண்ணிடுவேன் - அப்படி எண்ணிடும் இதயம் படைத்தவனல்ல நான்! அண்ணா அறிவாலயத்தில் இருக்கும் ஒவ்வொரு கல்லும் உனக்குச் சொந்தம் என்கிற போது - அதனை ஒன்று சேர்த்த பெருமைதானே என்போன்றோருக்கு என்ற உண்மை கூடவா எனக்குத் தெரியாமல் போய்விடும்.

நூறு நாள் திரைப்படங்களுக்கு விழா எடுப்பார்கள் - இது அப்படியல்ல! நூறாண்டு! நூறாண்டுகளுக்கு அடுத்தடுத்த நூற்றாண்டுகளுக்கும் நிலைத்து நிற்கப்போகும் திராவிட இயக்க வரலாற்றுக் கருவூலத்திற்கு நூறாவது நாள்!

என் மகிழ்ச்சியில் உனக்கும் பங்கு உண்டு என்ற நினைவுடன், உனக்கும், உன் குடும்பத்தினர் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-1-2004

3017. தமிழ் இயக்கம் வளர்த்த தன்மானச் சுடர்!

உடன்பிறப்பே,

இதோ இந்தப் புகைப்படம் யாருடையது என்று தெரிகிறதா? உனக்கும் இந்தத் தலைமுறைத் தமிழ் இளைஞர்களுக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. இவர்தான், தமிழர் வரலாறு - பண்பாடு - வீரம் - கொடைத்திறன் - புலமை - இவற்றை விளக்கிடும் தமிழ்ப் பெயர்களை நமது வீட்டுப் பிள்ளைகளுக்குச் சூட்டுவதற்குக் காரணமான, திராவிட இயக்கத்தின் முன்னோடிப் பிள்ளையான தமிழ் இயக்கத்தின் முன்னணித் தளபதியாக விளங்கியவர் - சாமிநாதன் என்றிருந்த தனது பெயரை "அண்ணல் தங்கோ" என மாற்றிக் கொண்டு தமிழ் இயக்கம் வளர்த்த தன்மான இயக்க வீரர். இவர் படம் அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றுக் கருவூலத்திலே இடம் பெற்றிருக்கிறது.

"பராசக்தி" படத்தில் இறுதியாக முழங்கிடும்

"எல்லோரும் வாழ வேண்டும் - உயிர்கள்
இன்புற்றிருக்கவேண்டும்!
நல்லோர்கள் எண்ணமிது - முத்தம்மா
நல்லற வாழ்வுமிதே!
கல்லாதார் என்றொருவர் - நம்மிடையே
இல்லாமல் ஆகவேண்டும்!
கொல்லாமை போற்றவேண்டும்.
மனிதர்கள் கூட்டுறவாக வேண்டும்!
இல்லாதாரைப் படைத்தான் என்றொருவன்
இருந்தால் அழியட்டுமே!

இல்லார்கள் உள்ளாரென்று - முத்தம்மா
ஏனிந்த வேற்றுமைகள்”

என்ற பாடல் இவர் எழுதியதுதான். அண்ணல் தங்கோ அவர்களைப் பற்றி அவர் பெயரன் திரு. அருட் செல்வன் எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நூலான “தூய தமிழ்க்காவலர்” எனும் தமிழ்க் கருவூலத்திற்கு 1998ஆம் ஆண்டு நான் எழுதியுள்ள அணிந்துரை வருமாறு:-

மு.கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை- 600 029.
நாள் :21.10.98

அணிந்துரை

தூய தமிழ்க் காவலர் கு.மு.அண்ணல் தங்கோ அவர்களின் வாழ்க்கை வரலாறு நூலாக வெளிவருவது அறிந்து மகிழ்கிறேன்.

அண்ணல் தங்கோ அவர்கள், கொடுங்கோலன் நீல்சிலை அகற்றும் போராட்டம், சைமன் குழு எதிர்ப்புப் போராட்டம், உப்பு சத்தியாகிரகப் போராட்டம் - முதலிய சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டு, சிறை சென்றும், கொடுமைகளுக்கு ஆளாகியும் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர். கருத்து வேறுபாடு காரணமாகக் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறி - “உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவை” எனும் அமைப்பினை உருவாக்கி - பின், “தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில்” தம்மை இணைத்துக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். 1938ல் இந்தி எதிர்ப்புப்போரில் பங்குகொண்டு, பெற்ற எழுச்சியின் மூலம், “தமிழ்நிலம்” என்னும் திங்களிதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தித் தமிழ்ப் பற்றினை மக்களிடையே ஊட்டி வளர்ப்பதில் தனிச்சிறப்புடன் விளங்கியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மறைமலை அடிகள், திரு.வி.க., தேவநேயப் பாவாணர் முதலியோருடன் இணைந்து தமிழர் நலம் காக்கும் வகையில் தமிழ்த் தொண்டாற்றியவர். 1924ஆம் ஆண்டில், ‘தந்தை பெரியார் அவர்களின் “குடியரசு” ஏட்டின் துணையாசிரிய ராகவும் விளங்கிப் பணிபுரிந்த பண்பாளர். “சுவாமிநாதன்” எனும்

தம் இயற்பெயரை "அண்ணல் தங்கோ" எனத் தூயதமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டதுடன், அனைவரையும் தமிழ்ப் பெயர் தாங்கிட அறிவுறுத்திய ஆசானாகவும் விளங்கினார்.

இத்தகு சிறப்புகளுக்கெல்லாம் உறைவிடமாக திகழ்ந்து - வேலூர் - திருவண்ணாமலை வட்டார மக்களிடையே நல்ல தனித்தமிழ்ப் பற்றினைப் புகட்டி வளர்த்த பெருமைக்குரியவராகவும் திகழ்ந்த, அண்ணல் தங்கோவின் வரலாற்றினை விரித்துரைக்கும் இந்நூல், இன்றைய இளைஞர் தம் இதயங்களில் தமிழ்ப் பற்றினை வளர்த்திட - தமிழ்ப்பெயர்களைச் சூட்டி மகிழ்ந்திட பெருந்துணை புரியும் என்று நம்புகிறேன். இந்த அரிய முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நூலாசிரியர் திரு. அருள் செல்வன் அவர்களுக்கு என் பாராட்டுகள் உரித்தாகுக.

அன்புள்ள

மு.கருணாநிதி

17-1-2004

உடன்பிறப்பே,

தமிழ்ப்பற்றும், இனப்பற்றும், கொள்கை உறுதியும், தன்மான உணர்வும்தான் உரமாக இருந்து திராவிட இயக்கக்கொடி செழித்துப் படரக் காரணமாயிருக்கிறது என்பதை மறந்திடலாகாது.

"முத்தமிழ் கற்பீர்! என்றால்; - முத்தம்மா!
முலையிற்போய்ப் படுப்பார்!
மற்றவர் பாஷை என்றால்! - முத்தம்மா!
மார்தட்டி முன்னே நிற்பார்!"
"கோழைக ளானாரே! - தமிழர்
கோவேந்தர் குடியில் வந்தும்!
ஏழைக ளானாரே! - ஆட்சியை
ஏதிலார் கையில் விட்டே!"

எத்துணை ஏக்கம் அன்றைக்கே அண்ணல் தங்கோவின் இதயத்தைத் தாக்கியிருக்கிறது என்பதற்கு இக்கவிதையே சான்று!

அந்த ஏக்கத்தை நிரந்தரமாக நீக்கிட - அவர் போன்றோர் நெஞ்சில் பதிந்திருந்த நோ்மையான இலட்சியம் ஈடேற -

மதநல்லிணக்கச் சரித்திரம் படைக்கவும், மதச் சார்பற்ற அரசு அமைக்கவும்- தமிழைச் செம்மொழியாக்கவும், அம்மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவும் ஜனநாயக வழியில் அணி வகுத்திடுவதுதானே, அண்ணல் தங்கோ போன்ற நமது முன்னோடிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வழியாகும்.

அன்புள்ள.

மு.க.

17.1.2004

குறிப்பு :
புத்தகம் கிடைக்குமிடம்
மணிவாசகர் பதிப்பகம்
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை - 600 108.

3018. அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்த கலைப்புரட்சி!

உடன்பிறப்பே,

தமிழ்த் திரையுலகில் தலைசிறந்த நகைச்சுவை நடிகராகவும், காந்தியடிகள், பெரியார் ஆகிய இருவரிடமும் பற்றுமிக்கவராகவும் விளங்கிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், அக்காலத்து நம்பிக்கையின் வெளிப்பாடாக "கிந்தன் சரித்திரம்" என்ற கதாகாலட்சேப நிகழ்ச்சி நடத்தி வந்தார். நந்தன் பிறந்த ஊரிலேயே பிறந்த கிந்தன், சிவனை நாடிச் சிதம்பரம் போகாமல், கல்வியை நாடிச் சென்னை செல்கிறான் என்றும், அங்கு கல்வி கற்று, உயர்பதவி பெற்று, மீண்டும் ஊர் திரும்பியதும், அவனை மேற்சாதி ஆசிரியரே கட்டித் தழுவிக் கொண்டார் என்றும் நந்தன் கதையை மாற்றி அமைத்துள்ளார். கல்வி மூலம் சமத்துவம் அடைய முடியும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

– என்ற முகப்புரையுடன், தமிழ் விரிவுரையாளர் திருவாரூர் மா. உத்திராபதி அவர்கள், தனது நூலில் இணைத்துள்ள 'கிந்தன் சரித்திரம்' என்ற ஒலிப்பதிவு நாடக அமைப்பு இது.

கிந்தனார் எனும் சமூகப் புரட்சி கதாகாலட்சேபம் ஒன்றை திராவிட இயக்கத்தின் ஆர்வலரும், தந்தை பெரியாரிடமும், பேரறிஞர் அண்ணாவிடமும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவருமான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு நாடு முழுவதும் நடத்தி வந்தார்.

கதை அமைப்பும், பாடல்களும் உடுமலை நாராயணகவி அவர்களால் வரையப்பட்டதாகும். இந்தக் கிந்தனார் கதாகாலட்சேப நிகழ்ச்சி, 13.9.1944-ம் ஆண்டு, என்னுடைய திருமணத்தில் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களால் நடத்தப்பட்டது. அந்தக் கதாகாலட்சேபத்தின் எழுத்து வடிவத்தை திரு.உத்திராபதி

அவர்கள் தனது புத்தகத்தில் இணைத்திருப்பது கண்டு வியந்து போனேன்.

அந்தப் புத்தகம் திரு. ச.சீ. கண்ணன் அவர்களால் எனக்கு வழங்கப்பட்டதாகும். அவருக்கு நன்றி கூறி,

உடன்பிறப்பே,

உனக்கு எழுதியுள்ள இந்தக் கடிதத்தில் அந்த கிந்தனார் சரித்திரத்தை இணைத்திடுகிறேன்.

"(ஆதனூரிலே, ஆதி திராவிட வகுப்பிலே நம்ம கிந்தன் பிறந்தான். அங்கு ஒரு பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக்கூடத்திலே படித்து வருகின்றான். கிந்தனுக்குப் பட்டணத்திலே போய் படிக்க வேண்டும்; உத்தியோகம் பெற வேண்டும் என்கிற ஆசை; தன்னுடைய சிநேகிதர்களையெல்லாம் அழைத்து அழைத்து அலுத்துப் போய்விட்டான்)

கிந்தன் : அடேயப்பா! பட்டணத்திற்கு வேண்டாம்; பக்கத்திலே இருக்கிற திருப்புங்கூர் வரைக்கும் என்னோட வாங்கோ! அங்கு போய் "தரிசித்திடுவோம் வாரீர்".

சிநேகிதர்கள் : திருப்புங்கூரிலே போய் என்னப்பா தரிசிக்கிறது? போயும் போயும் அங்கொரு பிள்ளையார் கோயில் இருக்கு. அந்தப் பிள்ளையாருக்கும் தும்பிக்கை உடைஞ்சு போச்சு. இந்தத் தும்பிக்கை இல்லாத பிள்ளையாரைக் கும்பிடறதுக்கு இங்கே யிருந்து பத்து மைல் தூரம் போகணுமா! இங்கேயே கும்பிட்டுக்கிறலாமே!

(சிரிப்பு)

அப்படின்னு சொன்னார்கள்.

கிந்தன் : நான் பிள்ளையாரைப் பார்க்கறதுக்கு கூப் பிடலை. நம்மையெல்லாம் பட்டணத்துக்குக் கொண்டு போய் சேர்க்கிறதே இரயிலு, அதைப் பார்க்கிறதுக்கு கூப்பிட்டேம்பா...

அப்படின்னு சொன்னான் கிந்தன். (உடனே எல்லாப் பையன்களும் ஒத்துக் கொண்டு கிந்தனோடவே நடந்தார்கள். நடந்து திருப்புங்கூரிலே இரயில்வே ஸ்டேஷனை அடைந்தார்கள். இன்னும் இரயில் வரவில்லை; சரி உள்ளேயே போய் விடலாமே அப்படின்னு சொல்லி, எல்லாக் குழந்தைகளுமாக அங்கே பக்கத்திலே போனா, அங்கே வாசலிலே 'டிக்கட் கலெக்டர்' நிக்கிறார்)

டிக்கட் கலெக்டர் : யாரடா நீங்க?

பசங்க : சாமி! நாங்கள் இரயிலைப் பார்க்க வந்திருக்கோம்.

டிக்கட் கலெக்டர் : சரி, வெளியிலேயே நின்னு பாருங்களேன்.

பசங்க : இல்ல சாமி, உள்ள போறோம்.

டிக்கட் கலெக்டர் : ம். ஹூம். முடியாது.

(அப்படி என்று சொன்ன உடனே, கிந்தனுக்கு வருத்தம் வந்து)

கிந்தன் : அடாடா, இரயிலைப் பார்க்க விடமாட்டான் போலிருக்கே! "வழிமறைத்திருக்கிறான் மலைபோலவே டிக்கட் கலெக்டர் தடுத்து நிற்கிறான். புதுசூட்டும், ஹாட்டும், கோட்டும் போட்டு வழிமறைத்திருக்கிறான். மலை போலவே தடுத்து நிற்கிறான்."

(இப்படியாக நம்ம கிந்தன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே வந்து விடுகிறது இரயில். பார்த்தான் இரயிலை, ஆனந்தம் தாங்க முடியவில்லை, என்ன செய்தான்!)

"கரகரவென சக்கரம் சுழல
கரும்புகையோடு வருகிற இரயிலே
கனதனவான்களும் ஏறிடும் இரயிலே
கன வேகத்தில் போகிற இரயிலே
மறையவரோடு பள்ளுப் பறையரை ஏற்றி
மத பேதத்தை ஒழித்திட்ட இரயிலே"

(ஏ இரயிலே! எத்தனையோ பெரிய பெரிய தலைவர்கள், எங்கள் தேசத்திலே தீண்டாமையை ஒழிக்க எவ்வளவோ பாடுபட்டார்கள். இன்னும் தீண்டாமை அறவே ஒழிந்தபாடில்லை. இப்பேர்ப்பட்ட பெரும் அருமையான காரியத்தை கஷ்டமான காரியத்தை, மனிதர்களாலே செய்ய முடியாத காரியத்தை, மரக்கட்டையாகிய நீ வந்த அன்றே செய்து விட்டாய்! சகல ஜாதியாரையும் - ஒரே பெஞ்சில் ஒன்றாக உட்கார வைத்த பெருமை உன்னுடையதல்லவா!)

"தேசம் தேசம் சுற்றிக் காட்டிடும் இரயிலே!
டிரீவேன்ரம் விட்டுப் புறப்படும் இரயிலே!"

(ஏ இரயிலே! காசி எங்கே? கன்னியாகுமரி எங்கே? சென்னை எங்கே? டெல்லி எங்கே? நினைத்த மாத்திரத்தில் சொற்ப செலவில் ஊர் ஊராகக் கொண்டு சேர்க்கிறாய். வியாபாரத்தை விருத்தி செய்தாய்; எங்கள் தேசத்திலே, எங்கள் முன்னோர்கள் நீ வருவதற்கு முன்பே காசிக்குப் போக எண்ணி, கட்டை வண்டியிலே, கட்டுச் சோறு கட்டிக் கொண்டு எட்டுப் பேராய்ப் புறப்பட்டு போவார்கள். திரும்பி வருவது இரண்டு! அதுவும் அநேகமாய் மாடு)

"தண்டவாளத்தில் மேலேயேறி
தாண்டவமாடும் ஆண்டவன் நீயே!"

(ஏ இரயிலே! உன்னை ஆண்டவனுக்கு சமானமாகக் கூட சொல்லலாம். எப்படி! ஆண்டவனுக்கு உள்ளவனிடத்திலும், இல்லாதவனிடத்திலும் ஒரே அன்புதான். அதைப்போல நீ டிக்கட் உள்ளவனையும், இல்லாதவனையும் ஏத்திட்டுப் போறே... இப்படி இரயிலைப் பார்த்து இவன் ஆனந்தப் பட்டுக்கிட்டு இருந்ததும்)

சிநேகிதர்கள் : அப்பா!இரயிலைப் பார்த்தாச்சு வா போகலாம்! என்று கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். (நம்ம நந்தனார் சரித்திரத்திலே ஒரு வேதியர்

இருந்தாரே, அதைப் போல கிந்தனார் சரித்திரத்திலே ஒரு வாத்தியார் இருக்கிறார். அந்த வாத்தியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தான் கிந்தன்)

கிந்தன் : சார்...

வாத்தியார் : யாரடா நீ?

கிந்தன் : நான்தானுங்க கிந்தன்! உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்ல வந்திருக்கேன்!

வாத்தியார் : என்னடா விஷயம்? சொல்லு கேட்கிறேன்.

கிந்தன் : "சென்னை என்றொரு தலம் இருக்குதாம்; அங்கே சென்ற பேருக்கு செலவும், வரவும் அதிகமாகுதாம்; போய்வரக் கொஞ்சம் பொருளைத் தாருமே உங்கள் பூட்ஸ் காலைப் போற்றினேன்.

இரு கண்ணால் பாருமே - ஐயே சென்னை என்றொரு தலம் இருக்குதாம்."

வாத்தியார் : 'பயமில்லாத கழுதே! என் எதிரே நில்லாதே, அதைச் சொல்லாதே மடப்பயலே நீ, பட்டணம் என்று சொல்லப்படுமோடா - நீ பட்டணம் என்று சொல்லப்படுமோடா சுகப்படுமோடா! சுகப்படுமோடா! சுகப்படு மோடா.

"பட்டணமென்பதை விடு
பழைய சோற்றைச் சாப்பிடு - இந்தப்
பட்டிக்காட்டில் படித்திடு - நல்ல
பையன் என்ற பேரெடுத்திடு
பட்டணம் என்று சொல்லப்படுமோடா
பட்டணம் என்று சொல்லப்படுமோடா"

பட்டணமாமில்ல பட்டணம், போயி சேரியிலே வேலை ஏதாவது இருந்தா பாருன்னு சொன்னார்.

(கிந்தன் வருத்தத்தோடு வீட்டுக்கு வந்தான் -தகப்பனார் மகனைப் பார்த்து)

தகப்பனார் : அட மகனே! நீ பட்டணத்திலே போய் படிக்கணும்னு சொல்றியாமே! "நியாயம் தானா நீ சொல்லு! நல்ல நாகரிகம் நம்ம ஜாதிக்கு அடுக்குமோ!

நியாயம் தானா நீ சொல்லு
காடுகரை உழுவது நம்ம பொழைப்பு - அது
கடவுள் நமக்கு அளித்த அமைப்பு
கையில் ஏடு எழுத்தாணியுடன் படிப்பு
மெத்த ஏற்றமான ஜாதிக்காம் அந்தப் பொறுப்பு
நியாயம்தானா நீ சொல்லு"

கிந்தன் : அப்பா! அப்படிச் சொல்ல வேண்டாம். படிச்சவங்களை தீண்டாதவங்கன்னு இந்த உலகம் சொல்றது கிடையாது. ஆகையினாலதான் பெரியவா சொல்லியிருக்கா.

"கல்வியைப் போலொரு செல்வம் உளதோ
காண வேண்டும் ஜகத்தீரே".

தகப்பனார் : அட மகனே! அவ்வளவு தைரியம் இருந்தா போயிட்டு வாடான்னு சொன்னார்.

(இப்படி தகப்பனார் விடை கொடுத்த உடனே, பட்டணத்திற்கு ஓடிப் போகிறான் கிந்தன். பட்டணத்தை அடைந்த கிந்தன், பல இடங்களைச் சுற்றி கடைசியில் சைனா பஜாருக்கு வந்து சேர்ந்தான். அங்கே ஒரு வண்டி. அதிலே கொஞ்சம் விளையாட்டு சாமான். இதையெல்லாம் வைத்துக் கொண்டு)

"ஒரணா ஒன்றையணா,
ஒரணா ஒன்றையணா
ஒன்றையணா ஒன்றையணா ஒரணா
சீப்புக் கண்ணாடி சிம்னி ரேசர்
சிகரெட்டுக் கேஸ் டப்பி ஒரணா
சோப்பு ஸ்னோ பவுடர்
காப்பிக் கோப்பைத் தட்டு

சேஃப்டி-பின் டஜன் எட்டு ஒன்றையணா
இதெல்லாம் ஒரணா

அதெல்லாம் ஒன்றையணா
ஒன்றையணா ஒன்றையணா ஒரணா”

(அங்கே அவங்கிட்டே போய் கேட்டான் கிந்தன்)

கிந்தன் : ஐயா! ஹைஸ்கூல் எங்கே இருக்கு?

(அவனுக்கு எங்கே தெரியும் ஹைஸ் கூலைப்பத்தி)

ஐயா! ஹைஸ்கூல் எங்கே இருக்கு?

ஐயா! ஹைஸ்கூல் எங்கே இருக்கு?

ஏ ஐயா! ஹைஸ்கூல் எங்கே இருக்கு?

(அப்படின்னு கத்தினான் கிந்தன். இது ரிக்ஷாக்காரன் காதிலே உழுந்துடுச்சு - விடுவானா?)

ரிக்ஷாக்காரன் : என்னா நைனா? ஹைஸ்கூலா? தெரியும் நைனா.

(அப்படின்னு வண்டியை இஸ்த்துக்கினே ஓடி வந்துட்டான்)

மற்றொரு
ரிக்ஷாக்காரன் : ஐயா வயக்கமாக என் வண்டியிலதான் ஏறுவாரு.

(அப்படின்னு இன்னொருத்தன்; போடான்னு இன்னொருத்தன்; இப்படி பத்து பேர் வந்துட்டான். பத்து பேரும் வண்டியை இழுத்துக் கொண்டு வந்து நிற்கிறான். நடுவில கிந்தன் நிற்கிறான். கிந்தனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.)

கிந்தன் : அடாடா! பட்டணத்திலே எவ்வளவு பெரிய தர்மம் நடக்குது. ஹைஸ்கூலுக்கு போகணும்னவுடனே என் வண்டியிலே ஏறு! உன் வண்டியிலே ஏறுன்னு..

(அப்படின்னு சொல்லி அங்க வந்திருந்ததிலே புதுவண்டியாப் பாத்து ஏறி உக்காந்துக்கிட்டான். அவனும் இஸ்துக்கினே போனான். “இஸ்து!” என்ன பாஷையோ தெரியலை. ‘இழுத்து’ - ன்னு சொன்னா அங்கபுரியாது. அவாளுக்கின்னே தனி பாஷை இருக்கு)

ஒரு ரிக்ஷாக்காரன் : ஏய் என்னடா நேத்து உன்னை காணோம்!

ரிக்ஷாக்காரன் : அது நைனா! பஸ் தண்ணிய எடுத்து மூஸ் கழுவிக்கினேன். அது ஜல்ப்பு புடிச்சிப் போச்சு நைனான்னு சொன்னான்.

(யாருக்குத் தெரியும் அர்த்தம்? பச்சத் தண்ணியை எடுத்து முகத்தை அலம்பிக் கிட்டானாம்; ஜலதோஷம் புடிச்சிடிச்சாம். ஜலதோஷம்கிறதை அப்படி அமுக்கி 'ஜல்ப்பு'ன்னு வைச்சிட்டான். இப்படியே இஸ்த்துக்கினே எங்கெகொண்டு வந்தான்? காலேஜிலே கொண்டு வந்து வுட்டுட்டான்; சரின்னு கிந்தன் கீழே இறங்கி...)

கிந்தன் : அப்பா! நீயல்லவா தியாகி! என்னா உபகாரம் பண்றே நீ உலகத்துக்கு? உனக்குப் பெரிய நமஸ்காரம் - அப்படின்னான்.

ரிக்ஷாக்காரன் : சரி நைனா! துட்டு?

கிந்தன் : துட்டா? ஐயையோ! அதை நான் பார்த்ததேயில்லை - இன்னு சொன்னான்.

ரிக்ஷாக்காரன் : என்னய்யா? பெரிய மனுசன் மாதிரி வண்டியிலே ஏறிக்கினு வந்த. சட்டையை யாவது கயட்டு!

(கிந்தன் சரி என்று சொல்லி சட்டையைக் கழட்டிக் கொடுத்தான். ரிக்ஷாக்காரன் போயிட்டான். இரண்டு நாட்களாக சுத்தத் தண்ணியையும், காற்றையும் அருந்திக் கொண்டு வாசலிலேயே இருக்கிறான் கிந்தன். மூன்றாம் நாள் அங்கே பிரின்ஸ் பால் வந்தார். இன்னாரென்று தெரிந்து கொண்ட கிந்தன் என்ன செய்தான்?)

"காலைப் பிடித்துக்கொண்டான் - தன்னைக்
காப்பாற்றவேணுமென்றான் - முலம் என்ற
மதயானைக்கு முன் வந்த
மாலுக்குநிகர் பிரின்ஸ்பாலை
தரையில் விழுந்து காலைப் பிடித்துக்
கொண்டான்"

(அந்த பிரின்ஸ்பால் ரொம்ப இரக்கம் உள்ளவர். ஆகையினாலே, கிந்தனை தன் செலவிலேயே படிக்க வைத்தார். கிந்தனும்)

"படித்தானே! பலபல கலைகளை!
கிந்தன் நல்ல
பள்ளி பிள்ளைகளோடு கள்ளம் கபடம்
இல்லாமல் படித்தானே!
பலபல கலைகளை கிந்தன்
கொடுத்த கொஸ்சீன்களுக்கெல்லாம்
பாஸ்மார்க்காக எடுத்து ஸ்காலர்ஷிப்பிலே
மிக நேக்காய் படித்தானே பலப்பல கலைகளை
கிந்தன்வேகமாக உத்து வேகத்தில் மனது
விரும்பி

படிப்பதினாலே பெற்றான் பரிசு. ஜாக்ரபி,
ஹிஸ்டரி, தமிழும், இங்கிலீஸும் தக்கபடி
மேத்தமாடிக்ஸ், ஸயன்சும் படித்தானே
பலப்பல கலைகளை கிந்தன்-
நல்ல பள்ளிப்பிள்ளைகளோடு கள்ளம் கபடம்
இல்லாமல் படித்தானே."

(நம்ம கிந்தன் பரீட்சைகளிலெல்லாம் தேறி பிரின்ஸ்பாலினுடைய உதவியினாலே ஸ்கூல் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தையும் பெற்றான். தன் ஊருக்குப் புறப்பட்டான். அங்கே இரயில்வே ஸ்டேஷனிலே வந்து காத்துக்கொண்டிருந்தார், அந்தப் பழைய வாத்தியார். கிந்தன் இரயிலிலிருந்து கீழே இறங்கிய உடனே வாத்தியார் அப்படியே அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். கட்டித் தழுவி)

"கிந்தா! நீஇன்ட்டலிஜென்ட் - உன்னை
கிண்டல்செய்தேன் அன்றோ! நான் ஒரு பித்தன்
கிந்தா! நீ இன்ட்டலிஜென்ட்"

(விலகிப்போடா! பக்கத்திலே வராதே என்று சொன்ன அதே வாத்தியார் படித்து உத்தியோகம் பெற்று வந்த கிந்தனை மார்போடு அணைத்து வரவேற்பு அளிக்கிறார். இதற்கு கல்வி அல்லவா காரணம்)

"கிந்தன் சரித்திரமே!
கிண்டல் அல்லவே அல்ல."

உடன்பிறப்பே,

திராவிட இயக்கத்தின் சமுதாயப்புரட்சித் தூதுவராக இவ்வாறு கலைத்துறையிலும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் புரட்சி செய்த காரணத்தால்தான், அவர் மீது பொய்யான கொலை வழக்கும் - அதைத் தொடர்ந்து அவர் பல கொடுமைகளையும் சந்திக்க நேர்ந்தது.

இந்த இயக்கம் அடித்தளத்து மக்கள் - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாய ரீதியாகப் பாடுபடுகிற - பணியாற்றுகிற - நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருகிற இயக்கம் -தனிப்பட்ட ஒருவர் இருவர் ஏதோ இடமும், பதவியும் பெறுவதாலேயே மொத்த சமுதாயமும் பலன் பெற்றதாகக் கருதுகிற இயக்கமல்ல -

"கிந்தனார்" கதாகாலட்சேபத்தின் வாயிலாக கலைவாணர், தாழ்த்தப்பட்டுள்ள சமுதாயம் கல்வி வாய்ப்பில் கை தூக்கிவிடப்படவேண்டுமென்ற கருத்தை 60 ஆண்டுகளுக்கு முன்பே எல்லா மக்களுக்கும் புரியும்படியாக - உயர் சாதி மக்கள் உணரும்படியாக - உரிமைகள் பொது எனும் உயர்நிலையை சமுதாயம் பெறும்படியாக பிரச்சாரம் செய்துள்ளார் என்பதற்கே, இதை உனக்கு நினைவூட்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

18-01-2004

3019. சமுதாய விழிப்புணர்வும், சமத்துவ சமதர்மமும்!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கம் அரசியல் துறையில் மாத்திர மல்லாமல், சமுதாயத் துறையிலும் எத்தகைய மாற்றங்களை உருவாக்குவதற்கானப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது என்பதற்குச் சான்றாக, நேற்றையதினம் கலைவாணரின் 'கிந்தனார்' கதா காலட்சேபத்தை நினைவூட்டினேன். இன்றைக்கு 1980 ஆம் ஆண்டு நான் எழுதி வெளிவந்த "ஒரே இரத்தம்" கதையின் தொடக்கப் பகுதியை மீண்டும் ஒரு முறை உன் நினைவுக்கு கொண்டுவருகிறேன்.

அண்ணல் அம்பேத்கரின் இளமைப் பருவத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை வைத்து எழுதப்பட்ட இந்தக் காட்சிகள், காலம் காலமாக சமுதாயத்தில் மலிந்து வரும் கொடுமைகளைக் களைய நமது இயக்கம் எடுத்து வரும் முயற்சியும், முனைப்பும் இந்தக் கதையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நூல் வெளிவந்தபொழுது முகப்புரையாக நான் எழுதிய வாசகத்தையும் இணைத்து "ஒரே இரத்தம்" கதையின் முதல் பகுதியைக் கடிதமாக்கித் தருகிறேன்.

முகப்புரை :- "சாதிப் புயலால் தாக்குண்டு சாய்ந்த உடன்பிறப்புகளின் கல்லறைகளுக்கு நான் வைக்கும் மலர் வளையம் இந்த ஒரே இரத்தம்!"

கதையின் முதல் பகுதி :-

"சென்னையிலிருந்து இரவு ஒன்பதரை மணிக்குப் புறப்பட்ட புகைவண்டி மறுநாள் காலை ஆறு மணி அளவில் மாயூரம் (மயிலாடுதுறை) நிலையத்தை அடைந்தது.

தொடர்ந்து அதே வண்டியில் பயணம் செய்தவர்கள் கீழே இறங்கி சூடாகத் தேநீர் அல்லது காப்பியை வாங்கி அவசர

அவசரமாகக் குடித்துவிட்டு, வண்டிப் பெட்டிகளில் இருந்த தங்கள் வீட்டாருக்கும் எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

மாயூரத்திலேயே இறங்க வேண்டியவர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களின் உதவியோடு தங்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு, உயரமான மரப்பாலத்தில் ஏறிக் கடந்து மாட்டு வண்டிகளையோ, குதிரை வண்டிகளையோ தேடுகிற முயற்சியில் ஈடுபட்டனர்.

பொடியைத் தூவினாற்போலத் தலையிலும், உடையிலும் ஒட்டிக் கொண்டிருந்த இரயில் கரியினால் - அழுக்கேறி விளங்கிய அவர்கள், வீட்டுக்குப் போய்த்தான் புது மனிதர்களாக ஆக வேண்டும். புகைவண்டி நின்றுகொண்டிருந்த இடத்தில் பத்திரிகை விற்கும் இளைஞர்களின் முழக்கமும் - பழத்தட்டு, இட்லி, வடை ஆகியவற்றைத் தட்டில் வைத்து ஓடிக்கொண்டே வியாபாரம் செய்யும் அன்றாடங் காய்ச்சிகளின் கூச்சலும் - அந்த நிலையத்தைப் பரபரப்புக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன.

மாயூரத்தில் வண்டி மாறி திருவாரூர் வழியாகச் செல்லும் பயணிகளும் அல்லது அதற்கு முன்னுள்ள நிலையங்களில் இறங்கும் பயணிகளும் தாங்கள் ஏறிச் செல்ல வேண்டிய புகைவண்டி தங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்று, நல்ல வேளையாக அந்த வண்டியைத் தவற விட்டுவிடவில்லை என்ற ஆறுதல் முகத்தில் மின்னிட, அந்த வண்டியின் பெட்டிகளில் தங்கள் மூட்டை முடிச்சுக்களுடன் ஏறி அமர்ந்தனர். ஒரு இலட்சியத்தில் வெற்றி பெற்றுவிட்ட மகிழ்ச்சி அந்தப் பயணிகளின் உள்ளத்தில் பரவியிருந்தது.

திருவாரூர் செல்லும் அந்த வண்டியில் ஏறுவதற்காக ஒரு இளைஞன் ஒரு கையில் பெரிய கூடை ஒன்றுடனும், மற்றொரு கையில் சிறிய பெட்டி யொன்றுடனும் சென்னையிலிருந்து வந்த இரயிலில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான். அந்தப் பெட்டியின் உறை மீது சிகப்பு நூலால் “நந்தகுமார்” என்ற பெயர் அமைக்கப்பட்டிருந்தது.

யாருடைய உதவியுமின்றி அவனே தனது பெட்டியுடனும் கூடையுடனும் இரயிலில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

வயது பதினான்கு அல்லது பதினைந்துதான் இருக்கும்.

அகன்ற நெற்றி, பெரிய விழிகள், எடுப்பான தோற்றம்.

பலகாரத் தட்டு வியாபாரி நந்தகுமாரின் அருகே வந்து "சூடான வடை!" என்றான். அந்த இளைஞன், "கொடு" என்று கையையும் காசையும் நீட்டினான். ஒரு தாளில் இரண்டு வடைகளை மடித்துக் கொடுத்துவிட்டுக் காசை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு பலகார வியாபாரி, பக்கத்துப் பெட்டியருகே ஓடினான்.

நந்தகுமார், தாளில் சுருட்டப்பட்டிருந்த வடையை எடுத்துக் கடித்தான்.

குளிர்காற்று அடித்துக் கொண்டிருந்த அந்தக் காலை நேரத்துக்கு வடையின் சூடு, அவனுக்கு உற்சாகத்தை அளித்தது. இரவு முழுதும் சரியாகத் தூக்கமின்றி இரயில் பயணம் செய்ததால் பசி சற்றுக் கடுமையாகவே இருந்தது. இரண்டு வடைகளையும் விழுங்கிவிட்டு, அந்தத் தாளிலேயே கையைத் துடைத்துக் கொண்டான். அதற்குள் அவன் ஏறியிருந்த இரயிலும் புறப்பட்டுவிட்டது. கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் பரவாயில்லை. அருகில் இருந்தவர்களைப் பார்த்தான். யாரிடத்திலும் பிளாஸ்க்கோ அல்லது கூஜாவோ - குறைந்தபட்சம் கண்ணாடிப் புட்டியோ கூட இல்லை என்பதைப் புரிந்து கொண்டான். சரி! சமாளித்துக் கொள்ளலாம் என்ற நினைவுடன் வடை மடிக்கப்பட்டுக் கசங்கிப் போயிருந்த தாளைச் சரிசெய்து பார்த்தான்.

அது ஒரு பழைய செய்திப் பத்திரிகை.

சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு கொடிய நிகழ்ச்சி அந்தக் கசங்கிய தாளில் கொட்டை எழுத்துகளில் அச்சாகியிருந்தது. அந்தச் செய்தியை நந்தகுமார் சென்னையில் அப்போதே படித்திருக்கிறான். உணர்ச்சிவயப்பட்டிருக்கிறான்.

இருந்தாலும், நாள் கடந்துவிட்ட அந்தச் செய்தியை இப்போது மீண்டும் ஒருமுறை படித்தான்.

"விழுப்புரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் படு கொலை. கடைத்தெருவும், வீடுகளும் எரிந்து சாம்பலாயின."

இந்தச் செய்தியைத்தான் அந்த ஏடு விரிவாகவும், விளக்கமாகவும் வெளியிட்டிருந்தது. கசங்கிவிட்ட அந்தப் பழைய தாளில் தலைநீட்டிக் கொண்டிருந்த ஒவ்வொரு எழுத்தின் மீதும் நந்தகுமாரின் கூரிய பார்வை ஆழமாகப் பதிந்தது.

ஏற்கனவே தாகத்தால் வரண்டுவிட்டிருந்த அவன் நாக்கும் தொண்டையும் மேலும் வரண்டு காய்ந்து போயின. காந்தியடிகள் பிறந்து, தாழ்த்தப்பட்டோர் "கடவுளின் மக்கள்" என்று கூறிப் பிரச்சாரம் செய்த பிறகும் - அந்த மக்களின் உரிமைக்காக அம்பேத்கர் போர்க்கொடி உயர்த்திப் பாடுபட்ட பிறகும் - இந்தியாவில் எந்த மாநிலத்தில் தீண்டாமைக் கொடுமையும் அதன் விளைவாக அமளிகளும் இருந்தாலும்கூட அந்த வேதனைக்குத் தமிழகத்தில் இடமிருக்கக்கூடாது என்று பெரியாரும், அண்ணாவும் வாழ்நாள் முழுதும் பணியாற்றிய பிறகும் - விழுப்புரங்கள் நடைபெறுகின்றனவே!

இந்த ஏக்கம் அவனது அடிவயிற்றிலிருந்து பெருமூச்சாக வெளிப்பட்டது.

மாயூரத்தை வந்து சேருவதற்கு முன்பு சிதம்பரம் இரயிலடியில் வண்டி சிறிது நேரம் நின்றது. அப்போது தூங்காமல் விழித்துக் கொண்டிருந்த நந்தகுமாரின் மனக்கண்ணின் முன்னால் நந்தனார் கதை, படம் போல ஓடிக் கொண்டிருந்தது.

வேதியரிடம் விடைபெற்று நந்தனார், நடராசனைத் தரிசிக்கத் தில்லை நகர் ஓடி வருகிறார். "சிதம்பரம் போகாமல் இருப்பேனோ - என் ஜென்மத்தை வீணாய்க் கெடுப்பேனோ" - எனக் கூறி ஓடோடி வருகிறார். கோயிலுக்கு வெளியே நின்று ஆண்ட வனை வழிபடத் துடிக்கிறார். ஆனால் அவருக்கும் விக்கிரகத்துக்கும் நடுவிலே நந்தியின் சிலை யொன்று தடையாக அமைந்திருக்கிறது. "சற்றே விலகியிரும் பிள்ளாய் - சந்நிதானம் மறைக்குது" என்ற பாடல் இசையுடன் ஒலிக்கிறது. நந்தனாரின் பக்திக்கு மெச்சிய இறைவன் நந்தியை விலகிக் கொள்ளச் சொல்லி தன் முழு உருவைக் காணுமாறு செய்கிறார்.

நந்தகுமாரின் இளம் உள்ளத்தில் பகவானே பதில் அளிக்க முடியாத கேள்வியொன்று! நந்தியை எதற்காக விலகச் சொல்ல வேண்டும்? "நந்தா! உள்ளே வா!" என்று ஆண்டவன் அவரை அழைத்திருக்கத்தானே வேண்டும். அதுதானே முறை. நந்தி விலகட்டும்; நந்தனார் தெருவில் நின்றவாறே தன்னை வணங்கட்டும் என்றால், கடவுளேகூட சாதியெனும் கொடுமைக்குக் கட்டுப்பட்டுத்தானே இருந்திருக்கிறார்! இல்லாவிட்டால் உலகில் எல்லோரும் தண்ணீரில் குளித்துவிட்டுத் தன்னை அருகில் வந்து

வழிபடலாம் என்று இணங்கிய எம்பெருமான், நந்தனார் மட்டும் நெருப்பில் இறங்கிக் குளித்து விட்டு நீசத் தன்மையை அகற்றிய பிறகே தன்னை நெருங்கலாம் என்று உத்தரவு பிறப்பிப்பாரா?

சிதம்பரத்திலிருந்து மாயூரம் வருகிற வரையில், நந்தகுமாரின் நெஞ்சம் இப்படி விவாதம் நடத்திக் கொண்டிருந்தது. இப்போது கசங்கிய பழைய பத்திரிகையில் விழுப்புரம் நிகழ்ச்சி! மறக்க முடியாத கொடுமை! அவன் மனத்தில் நூற்றுக்கணக்கான சுடுசரங்கள் பாய்ந்து கொண்டிருந்தன.

குறிப்பிட்ட நேரத்திற்குச் சில விநாடிகள்கூடத் தாமதமாகாமல் அவன் வந்த புகைவண்டி பூந்தோட்டம் நிலையத்தை வந்தடைந்தது. வழியில் பேரளம் நிலையத்திலேயே ஒரு குவளை தண்ணீர் வாங்கிக் குடித்துத் தாகத்தைப் போக்கிக் கொண்டிருந்த நந்தகுமார், பூந்தோட்டம் நிலையத்தில் கூடையுடனும் பெட்டியுடனும் இறங்கினான்.

கணுக்கால் வரையில் இறங்கியிருந்த வெள்ளை நிறக் கால் சட்டை, மடித்து விடப்பட்டிருந்த கையுடன் கூடிய சற்று பழுப்பு நிறமான சட்டையில் இடையிடையே பசுமையும் நீலமும் கலந்த கட்டங்கள். அந்த அழகான கறுப்பு நிற இளைஞனைத்தவிர, நான்கு அல்லது ஐந்து பயணிகள்தான் அந்த நிலையத்தில் இறங்கினர்.

ஆண்களும் பெண்களுமாக ஏழெட்டுப் பேர் அந்த ரயிலில் ஏறிக் கொண்டார்கள். அவர்கள்கூட அரைகுறையாக ரயிலில் தொத்திக் கொண்டவுடனே ரயில் அங்கிருந்து புறப்பட்டு விட்டது.

நந்தகுமார் பிளாட்பாரத்தில் நின்றவாறு சுற்றுமுற்றும் பார்த்தான். தன்னை வரவேற்க வீட்டிலிருந்து யாரும் வந்திருப்பார்கள் என்பது அவனுடைய எண்ணம். அவன் எதிர்பார்த்தவாறு யாரும் வரவில்லை. அம்மா தனக்காக வீட்டில் சமைத்துக் கொண்டிருப்பாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஊருக்கு வருகிற மகனுக்கு நல்ல சாப்பாடு போட வேண்டும் என்று தாய்க்கு ஆசை இருக்காதா என்ன? தந்தை பண்ணைக்குப் போயிருப்பார். அவரால் ஒருநாள் கூட பண்ணைக்குப் போகாமல் இருக்க முடியாது. அக்காள் பருவமடைந்து வீட்டிலே இருக்கிறவள். ஊருக்குள்ளே அவள்

நடமாடுவதற்கே காலையில் கருக்கல் நேரத்திலும் - அந்தி சாய்ந்த நேரத்திலும்தான் அம்மாவிடம் அனுமதி கிடைக்கும்.

இந்த அண்ணன் இருக்கிறாரே! அவர் வந்திருக்கக் கூடாதா?

அவருக்குக் காடு கழனிதான் தேவாலயம் - திருக்குளம் - எல்லாமே! அக்காள் அம்மாவைக் கூப்பிட்டிருப்பாள்; "வாங்கம்மா - பூந்தோட்டம் நிலையத்துக்கு இரண்டு பேரும் போயி தம்பியை அழைச்சுக்கிட்டு வரலாம்" அப்படின்னு! ஏ, அப்பா! அம்மாவா சம்மதிப்பாள்? மாட்டவே மாட்டாள்! அம்மாவுக்கு, போன உலக யுத்தத்திலே நடந்த ஒரு பயங்கர சம்பவத்தை யாரோ சொல்லியிருக்கிறார்கள்! அதை அடிக்கடி சொல்லிக் காட்டி அம்மா, அக்காளை வீட்டிலேயே பூட்டி வைத்திருக்கிறாள்.

இந்தியாவை வெள்ளைக்காரன் ஆண்டபோது தானே அந்த யுத்தம் நடந்தது. தமிழ்நாட்டுக் கிராமங்களில் எல்லாம் கூட இராணுவ லாரிகள் அடிக்கடி போய்க் கொண்டிருக்குமாம். எங்கள் கிராமத்துக்குப் பக்கத்துக் கிராமத்திலே பருவமடைந்த ஒரு பெண், பொழுது விடிவதற்கு முன்னாலே வீட்டு வாசலில் வந்து கோலம் போட்டுக் கொண்டிருந்தாளாம். பருவமடைந்த பெண்கள் பகலில் வெளியே வரக் கூடாது என்று அப்படி ஒரு கட்டுப்பாடு. அவள் கோலம் போடும்போது அந்த வழியாக வந்த இராணுவ லாரி, திடீரென்று நின்றதாம். அய்யோ! அம்மா! என்ற ஓலம். அவளை அப்படியே அந்த முரட்டுச் சிப்பாய்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்களாம்.

மறுநாள் அதே நேரத்துக்கு அதே வீட்டு வாசலில் அந்தப் பருவ மங்கையின் பாழ்பட்ட உடலை மூச்சற்ற நிலையில் தூக்கி எறிந்து விட்டு அந்த இராணுவ லாரி போய்விட்டதாம். நாற்பதாண்டு காலத்திற்கு முன்பு நடைபெற்ற இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்ததைப் போல அம்மாவே சொல்லி, தானும் நடுங்கி - அக்காளையும் நடுங்க வைப்பதை நானே கண்டிருக்கிறேனே!

சரி சரி! யாரும் வரவில்லை. நாமே ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு கிராமத்துக்குப் போய்ச் சேருவோம் என்று நந்தகுமார் ரயில் நிலையத்துக்கு வெளியே வந்தான். இரட்டை மாட்டுக் கூண்டு வண்டியொன்று தயாராக நின்று கொண்டிருந்தது. திருமாகாளம் கிராமத்தைத் தாண்டி அம்பல் கிராமத்துக்குச் செல்ல வண்டி வாடகை பேசிக் கொண்டு, கூடையையும், பெட்டியையும்

வண்டியில் தூக்கி வைத்து விட்டு, நந்தகுமார் முன்பகுதியில் ஏறி உட்கார்ந்து கொண்டான். வண்டிக்காரர் வயதான மனிதர். தலையில் முண்டாசு, இடுப்பில் வேட்டியை வரிந்து கட்டியிருந்தார்.

பூந்தோட்டம் நிலையத்திலிருந்து அம்பல் கிராமத்தை நோக்கி வண்டி மாடுகள் அசைந்தாடி நடக்கத் தொடங்கின.

வண்டிக்காரர் நந்தகுமாருடன் பேச்சுக் கொடுத்தார். அவனுக்கும் அந்தப் பெரியவருடன் பேச வேண்டும் என்று ஆசைதான். சென்னையில் நீண்ட நாட்கள் இருந்து விட்டவனுக்கு தன் சொந்தக் கிராமப் பகுதிகளைப் பார்ப்பதிலே ஒரு உற்சாகம். ஒரு புத்துணர்ச்சி.

"ஏன் தம்பீ, எங்கேயிருந்து வர்ரீங்க?"

கிராமத்துக்குரிய மரியாதைப் பண்புடன் வண்டிக்காரர் நந்தகுமாரிடம் கேட்டார்.

"சென்னையிலேயிருந்து!"

"ஓ! பட்டணத்திலேயிருந்தா? படிக்கிறீங்களா?"

"ஆமாம் - அங்கேதான் படிக்கிறேன்"

"பட்டணத்திலே, இந்த சினிமா நடிகர் நடிகைகளை யெல்லாம் பாப்பீங்களா? எப்படியிருப்பாங்க!.....சுலபமா பாக்க முடியுமா?"

வண்டிக்காரப் பெரியவரின் வாய் பிளந்தபடியே இருந்ததையும், ஆவல் கரைபுரண்டதையும் நந்தகுமார் ரசித்தான்.

"ஏன் தாத்தா! உங்களுக்குக்கூட அந்த ஆசை விடலியா? பட்டணத்திலே மெரினா கடற்கரை எப்படியிருக்கும்? துறைமுகம் பார்த்திருக்கிறியா? அண்ணா சதுக்கம் - பெரியார் நினைவிடம் - காமராஜர் நினைவகம் - ராஜாஜி நினைவாலயம் - காந்தி மண்டபம் - வள்ளுவர் கோட்டம் - இதையெல்லாம் பார்த்திருக்கிறியா? அப்படின்னு கேக்காம இந்தக் கேள்வியைக் கேக்கிறீங்களே!"

"அதையெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன் தம்பி! சினிமான்னா நம்ப ஊர்க் கொட்டகையிலே ஆடுது! அழகழகா மன்மதனாட்டமும், ரதியாட்டமும் படத்திலே வர்ராங்களே - அதெல்லாம் உண்மையா? இல்லை, வேஷமான்னு தெரிஞ்சுக்கத்தான்! ஒரு ஆவல்! அதனால கேட்டேன்"

"நீங்க கூட சினிமாவிலே நடிக்கிறீங்களா? உங்களைக் கூட இருபது வயசு வாலிபனா காட்டுறதுக்கு சினிமாவிலே மேக்கப் எல்லாம் இருக்கு!"

"நமக்கு ஏன் தம்பி அந்த வம்பு தும்பு எல்லாம்!"

இருவரும் சிரித்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் பேசுவதை ரசித்துக் கொண்டே நடப்பது போல வண்டி மாடுகள் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.

"ஏன் தம்பி, உங்களுக்கு அம்பல் கிராமத்திலே யார் வீடு?"

"வீட்டைச் சொன்னா தெரியிற அளவுக்கு அவ்வளவு விளம்பரமான வீடல்ல!"

"எனக்கு இந்தப் பிர்க்காவிலே தெரியாத ஆளுங்களா? சொல்லுங்க தம்பீ!"

"அம்பல் கிராமத்திலே மாரியைத் தெரியுமா? அவர்தான் எங்க அப்பா!"

"எந்த மாரி?"

"பரமேஸ்வரன் பண்ணையிலே காரியஸ்தரா வேலை பாக்கிறாரே; அந்த மாரிதான்!"

"என்னாது? பரமேஸ்வர அய்யா பண்ணையிலே வேலை பாக்கிற மாரியோட மகனா?"

வண்டிக்காரரின் மீசைகள் படபடத்தன. அங்கங்கள் பதறின.

"டேய்! நீ, அந்த மாரிப் பயலோட மகனா? நீயா என் வண்டியிலே வந்து பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளை மாதிரி உக்காந்துகிட்டே! அடக் கடவுளே! என் பக்கத்திலே வேற நெருங்கி உட்கார்ந்து என்னையும் தீட்டாக்கித் தொலைச்சுட்டியே! இறங்குடா கீழே! இறங்கு! படிச்ச திமிராடா உனக்கு? பஞ்சமன் வீட்டிலே பிறந்துட்டு - கொஞ்சம்கூடப் பயமில்லாமல் வண்டிச் சவாரியா கேக்குது! ராஸ்கல்! இறங்குடா!"

ஆவேசத்தால் வண்டிக்காரர் குதித்தார். நந்த குமார் வண்டியிலிருந்து இறங்கவில்லை. அவன் நரம்புகளில் நெருப்பு ஆறு ஓடிக் கொண்டிருந்தது! இதயத் துடிப்புகள், சம்மட்டி அடிகள் போல் நெஞ்சில் விழுந்து கொண்டிருந்தன.

"இப்ப கீழே இறங்குறியா இல்லையா?"

"முடியாதய்யா முடியாது!"

"முடியாதா?"

வண்டிக்காரர், மாடுகளை அவிழ்த்து விட்டார்.

அடுத்த விநாடி, வண்டியின் முனையைப் பிடித்து அப்படியே தலைகீழாகத் தூக்கிவிட்டார். கூடை, பெட்டிகளுடன் நந்தகுமார், வண்டியோடு கீழே விழுந்து உருண்டான். தீட்டுப்பட்டு விட்ட பாபத்தைக் கழுவிக் கொண்டு தூய்மையாவதற்காக சாலையோரத்தில் இருந்த குட்டையில் இறங்கி வண்டிக்காரர் அவசர அவசரமாகக் குளித்தார். அந்தக் குட்டையில் ஒரு எருமை மாடும் விழுந்து புரண்டு குளித்துக் கொண்டிருந்தது. வண்டியிலிருந்து உருண்ட நந்தகுமார், தன்னுடைய கையிலும் முகத்திலும் பட்டுவிட்ட சகதியினைக் கழுவிக் கொள்ள குட்டையில் இறங்கப் போனான்.

"டேய்! சண்டாளப் பயலே! இது புண்ய தீர்த்தம்டா! பழைய காலத்து ஐதீகக் குளம் - இந்தத் தண்ணியைத் தொடாதே! ஏறுடா கரையிலே!" என்று வண்டிக்காரர் அதட்டிக் கொண்டே விரைந்தோடி வந்தார்."

★

உடன்பிறப்பே, திராவிட இயக்கம் அரசியல் துறையிலும், கலைத் துறையிலும், எழுத்துத் துறையிலும் சமுதாய விழிப்புணர்வுக்காகவும், சமத்துவம் சமதர்மம் மலர்வதற்காகவும் ஆற்றிய பணிகளையும், ஆற்றிடும் பணிகளையும், ஆற்றவேண்டிய பணிகளையும் அவ்வப்பொழுது இதைப் போலவே நான் உனக்கு நினைவூட்டுவேன்.

அன்புள்ள,

மு.க.

19-1-2004



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022